6063
KVC0012

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்திரண்டாந்தொகுதி.

ருதிரோற்காரி—ரக்தாக்ஷி.

KVC0012

Vol. XXII.

1923-1924.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

கப

ச

செந்தமிழ்

இருபத்திரண்டாந் தொகுதியின்

உள்ளுறை.

இத்தொகுதியில் வெளிவந்த நூல்.

---

12. 3. 24

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோற்காரி௵ கார்த்திகைமீ [பகுதி க.

Vol. XXII. November-December-1923. No. 1.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்.

பங்களூரிற் பிரசுரமாகும் "மிதிக்-ஸொஸைட்டி" பத்திரிகை (The Quarterly Journal of Mythic Society) யில், திருமங்கையாழ்வார் காலவிஷயமாகத் திருவனந்தபுரம் ஹை கோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ K. G. சேஷ ஐயர் அவர்களும், Dr. ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களும் எழுதிய விவாதவுரைகளை சமீபத்திற் படித்தவனானேன். இற்றைக்குப் பத்தொன்பது வருஷங்கட்கு முன் அவ்வாழ்வார் காலத்தைப்பற்றி முதன்முதல் நான் 'செந்தமிழ்'ப்பத்திரிகையில் எழுதியபோது, அவ் அபிப்பிராயங்கள் டாக்டர் ஐயங்கார் அவர்களால் முழுதும் ஆதரிக்கப்பட்ட விஷயம் பலரும் அறிந்தவை. அப்போது எழுதப்பட்ட காரணங்கள் பொருந்தாதவையென்று ஸ்ரீமாந். சேஷ ஐயரவர்கள் கருதி, டாக்டர் ஐயங்கார் அவர்கள் எழுதிய சமாதானங்களையும் பலமாக ஆக்ஷேபித்து ஷை பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஆக்ஷேபங்களைப் பரிசீலனைசெய்து விடையளிக்க வேண்டியகடமை இவ்விவாதத்துக்கு மூலகாரணமான எனக்கும் உண்டாதலால், அறிஞர் என் கருத்துக்களையும் அறிந்துகொள்ள விரும்பி இஃது எழுதலாயினேன்.

திருமங்கைமன்னன், அட்டபுயகரப்பதிகத்து இறுதியிற்பாடிய—

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீண் முடிமாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி"

என்ற தொடர்க்கு—தொண்டையர்கோனால் வணங்கப்படும் வயிரமேகனுடைய வலிபுகழ் சூழ்ந்த கச்சி என்பது, நான் அன்வயித்துக் கொண்ட பொருள்—என்பதும், இப்பொருள் சாஸன ஆதாரவு பெறுவதென்பதும் தெரிந்தவை. இங்ஙனம் ஒருதொடராகக்கொண்டு, தொண்டையர்கோனையும் வயிரமேகனையும் இருவராகப் பொருள் கூறுதல் பொருந்தாதென்பதே, ஐயரவர்கள் ஆக்ஷேபங்களுள் தலைமையாயுள்ளது. அவர்கள் கருத்தின்படி ஒருவனைப்பற்றியதாகப் பொருள்கொள்ளும்போது, 'தொண்டையர்கோனை வயிரமேகன் வணங்கும் மாலை ; (அவன்) வலிபுகழ்கள் சூழ்ந்த கச்சியட்டபுயகரத்தாதியை' என்று இருதொடராக்கி,—வயிரமேகன் என்பதைத் தொண்டையர்கோனுடன் கொண்டு கூட்டியும், 'அவன்' என ஒருசொல் வலிபுகழ்கட்கு முன் வருவித்தும் பொருள்கொள்ளவேண்டும்.

ஐயரவர்களது கருத்துப்படி, 'நீண்முடிமாலை' என்ற தொடரை வயிரமேகனுக்கு விசேடணமாக்காமல், 'தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடி (த்திரு) மாலை' எனத் தனித்தொடராகப் பிரித்துப் பொருளுரைக்குமிடத்து, அப்பிரிப்பு, தொண்டையர்கோனும் வயிரமேகனும் இருவேறானவர் என்று பொருள்படுதற்குப் பெரிதும் அனுகூலமாகுமளவு, ஒருவர் என்று கொள்வதற்கு ஆகாது. "ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் வந்தான்" என்று, ஆசிரியன்முதலிய பெயர்களை ஒருவினைகொண்டு முடித்தால், அவை யாவும் ஒருவனையே குறிக்கும் என்றும், அப்பெயர்களையே ஆசிரியன்வந்தான், பேரூர்கிழான்வந்தான் எனத் தனித்தனி அவ்வினையையேகொண்டு முடித்தால் பலரென்றே காட்டுமென்றும் இலக்கணநூல்கள் விதிக்கின்றன. (தொல். சொல். கிளவி. 42). ஒருவினை கொண்டு முடியும் பெயரடுக்குகளுடன் அவ்வினையையே தனித்தனிகூட்டுமிடத்துப் பொருள்வேறுபாடு உண்டாகுமாயின், 'ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் சென்றான்' என வேறுபட்ட வினைகளைத் தனித்தனிகொண்டுமுடியும்பெயர்கள் வேறுவேறானவை என்றே காட்டத் தடையுண்டோ? ஒருவினைகொண்டு முடியும் பெயர்களைப்பற்றிக் கூறிய விதி, அதுபோன்று வரும் வாக்கியக்கூறுகளிடத்தும் ஒத்துச்செல்லக் கூடியதேயாதலின், 'தொண்டையர்கோன் வணங்கும்; வயிரமேகன் ....வலிபுகழ்சூழ்ந்த'— என்றதொடர்களும் இருவரைக்குறிப்பதென்பதற்கே பெரிதும் அனுகூலமாதல் காணலாம்.

திருமங்கைமன்னன்வாக்கை நோக்குவோரெவர்க்கும், அஃது, ஆற்றொழுக்காகப் பொருளைக் கொண்டுசெல்லும் போக்குவாய்ந்ததென்பது எளிதிற் புலப்படத் தடையில்லை. கொண்டுகூட்டு முதலிய பொருள்கோண்முறையால் நலிந்து பொருள்காணவேண்டுவது, அவர் பாசுரங்கட்கு ஆவசியகமன்று. அம்முறையே மேற்குறித்த தொடர்க்கு நான் கூறிய பொருள், சரித்திரப்பொருத்தம் பெறுவதுமட்டுமன்றி, ஆற்றொழுக்காக நேரே செல்வதையும் நன்கறியலாம். பூர்வாசாரியரான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, ஐயரவர்கள் கருத்துக்கேற்ப வியாக்யானஞ் செய்திருப்பது உண்மையே. அவ்வாறு, அப்பெரியார் எழுதநேர்ந்ததற்குத் தக்ககாரணம் உண்டு. தொண்டைமான்சக்கரவர்த்தி என்ற அரசனொருவன் ராஜர்ஷிபாகவும் பரமபாகவதனாகவும் மிகப்பழங்காலத்தில் விளங்கினவன் என்றும், அவன்பொருட்டுத் திருமால் பல அநுக்ரகங்களைப் புரிந்தருளினர் என்றும் புராணப்பிரசித்தமான கதைகள் வழங்குகின்றன.* மேற்குறித்த "மன்னன் தொண்டையர்கோன்" என்ற தொடரினும்,

"துளங்கு நீண்முடி யரசர்தங் குரிசில் தொண்டை மன்னவன்"
"தென்னன் தொண்டையர்கோன் செய்தநன் மயிலைத் திருவல்லிக்கேணி"

என்ற தொடர்களினும், ஆழ்வாராற் குறிக்கப்பட்டவன் அத்தொண்டைமான்சக்கரவர்த்தியே என்பதும், அவன் பல்லவர்க்குமுன் தொண்டைநாடாண்ட அரசருள் ஒருவனென்பதுமே அவ்வியாக்யாதாவின் கருத்து. இத்தொண்டைமானுக்கும் பல்லவர்க்கும் சம்பந்தமுண்டென்று இக்காலத்தார் செப்புஞ் சரித்திரவுநப்படி கருதி அவர் எழுதினவரல்லர். அடுத்த பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தின் அவதாரிகையிலும், பல்லவ

*இச்சக்கரவர்த்திக்குத் திருவேங்கடமுடையான் ஓர் ஆபத்துசமயத்தில் தம் சங்க சக்கரங்களை அளித்தருள, அவற்றைக்கொண்டு அவ்வரசன் பகைவேந்தரை வென்றான் என்றும், அதுமுதல் திருவேங்கடமுடையானுக்கு அவ்வாயுதங்கள் இல்லாமற்போக, ஸ்ரீ இராமாநுஜர்காலத்தே, அவை அப்பெருமான் கரங்களிற் சாத்தப்பட்டன என்றும் சரித்திரமுள்ளன. "முனித்தொண்டைமான்கையிற் சங்காழி நல்கியென் மூரற்செவ்வாய்க், கனித்தொண்டை மான் கையிற் சங்காழி கோடல் கருமமன்றே" என்றார் திவ்வியகவி-ஐயங்காரும். இதுபோலும் புராணசரித்திரங்கள் இன்னும் பல.

ரின் வேறுபட்டவன் இத் தொண்டைமான்சக்கரவர்த்தி என்றே அவர் கருதியெழுதுதலுங் காணலாம்.* ஆகவே, பல்லவர்க்கு வயிரமேகன் என்ற பெயர்வழக்குண்டென்று அவ்வியாக்யாதா குறிப்பிடுவதாக ஐயரவர்கள் நெடுக எழுதிச்செல்வதற்கு ஆதாரமேயில்லை. இக்காலத்துப் போலச் சரித்திரச் செய்திகள் தெரியவருதற்கு வேண்டிய சாதனங்கள் இல்லாமையால், கர்ணபரம்பரையிற் பிரசித்தனாக அறியப்பட்ட தொண்டைமான்சக்கரவர்த்தியையே திருமங்கைமன்னன் நெடுகக் கூறினவராகக்கொண்டு அவனுக்கேற்பப் பூர்விகர் பொருளை இணக்கி எழுதநேர்ந்தது சிறிதும் வியப்பன்று. அவ்வழியைப் பின்பற்றிச் செல்வதுதான், இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சிசெய்வார்க்கும் உரியது என்பது முடிபாயின், நான் எழுதிய பொருள் கொள்ளத்தகாததாகலாம். அங்ஙனம் சரித்திரவறிஞர் கருதக்கூடும் என்று நான் நம்பவில்லை.

இனி, பெரியவாச்சான்பிள்ளைவியாக்யானத்துள்—"ராஜா-தொண்டைமான்சக்கரவர்த்தி; ....வயிரமேகன் என்று அவற்கு(க்குடி)ப்பெயர்" என்ற வாக்யங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் (குடிப்)பெயர் என்பதிலுள்ள 'குடி' என்பது பிற்காலத்தாரால் இடையிற் சேர்க்கப்பட்ட சொல்; இவ்விஷயம் ஷை வாக்யத்தை விளக்கும் பழைய அரும்பதவுரையுள் 'அவற்குப்பெயர்—சக்கரவர்த்திக்குப்பெயர்' என்று குடியை விலக்கிப் பொருளெழுதியிருப்பதாலும், 'குண்டலிதாக்ஷரம் க்வாசித்கம்; அரும்பதத்துக்குப் பாடமில்லை' எனப் பதிப்பாளர்காட்டிய கீழ்க்குறிப்பாலும் விசதமாகும்.† ஆகவே, வயிரமேகன் என்பது பல்லவர் குடிப்

---

*"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை" என்று, தொண்டைமான்சக்கரவர்த்தி திருவட்டபுயகரத்திலே அநுகூலித்தபடியை அநுசந்தித்தார்; அந்தப்ரஸங்கத்தாலே பல்லவன் என்பானொருத்தன் பரமேச்வரவிண்ணகரத்திலே அதிமாத்ரமான ஆநுகூல்யங்களை...பண்ணினானாயிற்று; அத்தாலே அவன்படிகளெல்லாம் தமக்கினிதாயிருக்கையாலே, அவற்றை அனுபவித்துப் பேசுகிறார்" எனக் காண்க.

†"அவன் பக்நாபிமானியாய் வணங்கியபின்பாயிற்று ஈசுவரன் முடிநற்றரித்ததும்...முன்பெல்லாம் ஈராசுபட்டிறே போந்தது" எனவரும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானபங்தி, பல்லவமல்லனது சரித்திரங்குறிப்பதாகச் சிலர் மனோபாவம் பண்ணி எழுதியது, அவ்வியாக்யாதாவின் கருத்தன்றென்பதை ஆராய்ந்து தெளிக.

பெயராகப் பெரியவாச்சான்பிள்ளை எழுதிவிட்டார் என்று ஒருதலையா கத் துணிவதற்கில்லையென்பதும் அறியத்தக்கது. இவற்றால் பல்லவ ருடன் தொண்டைமானையாவது வயிரமேகனையாவது தொடர்புபடுத்துவ தற்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையை ஆதாரமாகக்கொள்வது சிறிதும் இயையாமை கண்டுகொள்க.

இனி, 'வயிரமேகன் பல்லவனால் வணங்கப்பட்டவன்' என்று திரு மங்கைமன்னன் பாடினவராயின், தாம் பலபடியாகச் சிறப்பித்துப் போந்த பல்லவனை இழித்துக்கூறியதாகு மாதலால், அவ்வாறு ஒரு காலும் அவர் பாடியிரார்—என்று ஐயரவர்கள் கருதுகிறார்கள். அட்ட புயகரத்தைத் திருமங்கையார் பாடநேர்ந்தபோது—பரமேச்சுரவிண்ணக ரப்பதிகத்தைப்போல-பல்லவனைச் சிறப்பிக்கச் சங்கற்பித்துக்கொண்டு பாடினவரல்லர். அவ்வட்டபுயகரம் கச்சிப்பேருரைச் சார்ந்தது என்பதைக் குறிக்கவந்தவர், அப்போதிருந்த கச்சியினிலைமை ஒன்றை யும் "வயிரமேகன் தன்வலிதன்புகழ் சூழ்ந்தகச்சி"என்று பதிகமுடிவில் வெளியிட்டருளினர். திருத்தேவனார்தொகைத்திருமாலைப் பாடநேர்ந்த போது, இவ்வாழ்வாரே—

"மாவருந்திண் படைமன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கைத்
தேவருஞ்சென் றிறைஞ்சுபொழிற் றிருத்தேவ னார்தொகையே".
(பெ. தி. 4 4. 2.)

என்று தாம் பாடப்புக்க தலத்துக்கன்றி, அத்தலத்தைத் தன்னுட் கொண்ட திருநாங்கூர்க்கு, தாம் நேரிற்கண்ட * வீரர்செயலொன்றை விசேடணமாக்கிக் கூறியதும், ஈண்டு ஒப்பிட்டறியத்தக்கது. பழைய அடியாரெல்லாம் ஒவ்வொருகாலத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், தல யாத்திரைசெய்து பதிகங்கள் பாடிவந்தவரென்பதும், அவ்வப்போது கண்ட விசேடச்செய்திகளும் அவர்கள் வாக்கில் தன்னடைவே அமைவ துண்டென்பதும் நாம் நன்கறிந்தவை. அம்முறையே, கச்சிப்பதி சென்று அட்டபுயகரத்தப் பெருமானைப் பாடநேர்ந்தபோது 'மருவலர்

---

*இவ்வீரர் பாண்டியனையும் வடவேந்தரையும் வெற்றிகொண்டவர் என் பது—"ஒண்டிறற் றென்னனோட வடவரசோட்டங் கண்ட—திண்டிற லாளர் நாங்கூர்" (பெ. தி. 4, 5, 6) என்று பாடுதலால் விளங்குகின்றது.

தம் முடல்துணிய வாள்வீசும்' பரகாலராகிய தம்மையும் வியப்புறச் செய்த வீரச்செய்தியொன்று நிகழ்ந்ததைக் கச்சிக்கு விசேடணமாக்கி அவர் கூறினர் எனின், அது கவியின் இயற்கைச்சிறப்பைக் காட்டுமே யன்றிப் பிறிது குறிக்குமோ? தம்காலத்தே பெருவேந்தனும் வீரனுமிருந்தபல்லவனையும் வெற்றிகொண்ட அரசனொருவனது அரியபெரிய செயலை வீரசிகாமணியாகிய ஆழ்வார் நேரில் அறிந்திருந்தும், அதனை மறைத்துச் செல்வதற்கு, வீரத்தால் அப்பல்லவனுக்கு ஆழ்வார் பட்டிருந்த கடமையென்னோ? வென்ற வேந்தன் எத்தகையவனாயினும், வீரத்தால் அவனடைந்த புகழை, சூரரும் பண்டிதருமாயுள்ள இவ்வாழ்வார் புகழாமல் வேறு யார் புகழ்தற்கு உரியவர்? திருநறையூர்த் திருமாலைவழிபட்டுத் திருப்பணிசெய்த செங்கணானைப் பரமபாகவதனாகப் புகழ்ந்துவருந் திருமங்கைமன்னன், அவன் சிவபிரானுக்கு 70-மாடக்கோயில் கட்டிப் பெருமைபெற்றதை—

> "இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
> கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
> திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
> திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

என்று சிறப்பித்துப்போந்தனர். இங்ஙனஞ் சிறப்பித்தது, திருமாலடியவனாக அவ்வரசனைப் பெரிதும் புகழ்ந்துவருஞ் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாததுபோற் றோன்றினும்*, அவன் நிகழ்த்திய பெருஞ்செயலொன்றை மறையாது எடுத்துக்கூறுவதில் அவ்வாழ்வார்க்குள்ள விருப்பமிகுதியை இவ்வடிகள் குறிப்பிடுவனவன்றோ? பல்லவமல்லனது வீரச்சிறப்பையும் திருமாலடிமைத்திறத்தையும் ஆழ்வார் புகழநேர்ந்த காலமும் சந்தர்ப்பமும் முற்றும் வேறாகவேண்டுமென்பதும், இரட்டவரசனான வயிரமேகனை அவர் தற்செயலாய்ப் புகழநேர்ந்தது, அவனது வீரம்பற்றியேயன்றி அடிமைத்திறம்பற்றியன்றென்பதும் நன்றாக அறிந்துகொள்ளத்தக்கன.

---

* இங்ஙனஞ் சிறப்பித்துப்போந்ததற்கு, ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை, வேறு கருத்து நயம்பெறக்கூறியருளுவர்.

இனி, பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திற் குறிக்கப்பட்ட பல்லவன் ஒருவனன்றிப் பலராகவேண்டுமென்றும், ஒருவனையே பற்றியதாயினும் அப்பல்லவனும் வயிரமேகனும் திருமங்கைமன்னன் காலத்தவர் என்று கருத இடமில்லையென்றும் ஐயரவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். அவர்கள் கருத்துப்படி பலராயின், அப்பதிகத்திற் 'பல்லவர் பணிந்த' என்று ஓரிடத்தேனும் பன்மையால் ஆழ்வார் குறித்திருப்பாரென்பது திண்ணம். பாடல்தோறுமேயன்றி இறுதிச்சாற்றுக்கவியினும், 'பல்லவர்கோன்பணிந்த' என்று ஒருமையாற்கூறி அவர் முடித்திருப்பதே அப்பதிகத்துச்கண்ட செயல்கள் ஒருவனைப்பற்றியதென்பதற்குத் தக்க சான்றாம். ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையும் "பல்லவன் என்பான் ஒருத்தன்" செயல்களைக் கூறுவதாகவேகருதி யெழுதியிருத்தலுங் காணலாம். ஆகவே, திருநறையூர்ப்பதிகத்தில் சோழன்செங்கணொருவனைப் பாடியவாறுபோலவே, இப்பதிகமும் பாடப்பெற்றதென்று கருதுதலே நேரானதென்க.

இனிப் 'பல்லவமல்லன் ஆழ்வார் சமகாலத்தவன் ஆகான்' என்பதற்கு ஐயரவர்கள் முக்கியமாகக்கொண்ட காரணங்கள் மூன்று:-

(1) உதயேந்திர சாஸனத்துக்கண்ட போர்த்தலைவன் வேறு; ஆழ்வார்கூறும் போர்த்தலைவன் வேறு.

(2) ஷை சாஸனத்துக்கண்ட போர்க்களங்களுடன் ஆழ்வார் கூறும் போர்க்களங்கள் ஒற்றுமைபெறவில்லை.

(3) பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று என்று ஆழ்வார் சொற்பிரயோகித்துப் பாடுவதால், அவராற்குறிக்கப்பட்ட பல்லவன் அவர்தலைமுறைக்கு முற்பட்டவனேயாவன்—என்பன.

I. உதயேந்திரசாஸனத்துக்கண்ட போர்கள், உதயசந்திரன் என்பான் நேரில்நடத்தியன என்று அச்சாஸனங் கூறுவது உண்மையே. அத்தலைவனோ, பல்லவமல்லனுடைய சேனாபதி என்பதும், தன் பொருட்டன்றித் தன்னரசன்பொருட்டே ஷை போர்களை நடத்தியவன் என்பதும் தெரிந்தவைகளாம். ஆயின், அச்சேனாபதியடைந்த வெற்றிப்புகழெல்லாம் அவனரசனாகிய பல்லவனுக்கன்றி வேறியார்க்கு

உரியதாகும்? அரசர் நேரிருந்து நடத்தினும் நடத்தாதுபோயினும், போர்த்தலைவரடைந்த செயங்களை அரசருடையனவாகக் கூறுவது உலக வழக்கும் நூல்வழக்குமன்றோ? 'வாதாபித் தொன்னகரந் துகளாக்கி' வந்து அரசனைப் பணிந்து நின்ற சிறுத்தொண்டர் வெற்றியைப்* பல்லவனுக்கும், கருணாகரத்தொண்டைமான் அடைந்த† கலிங்கவெற்றியைச் சோழனுக்கும் உரியவாக்கி உலகம் வழங்குதலை யார்தாம் அறியார்? பல்லவமல்லன், தன்போர்த்தலைவன் நடத்திய போர்முகங்களொன்றையேனும் எட்டிப்பாராதவன் என்று ஒருதலையாகச் சொல்வதற்கும் இடமில்லை.

II. ஷை சாஸனங்கூறும் மண்ணைக்குடி நெல்வேலி காளிதூர்க்கம் என்ற போர்க்களங்கள், பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திலும் வருதல்கொண்டு, அவ்விரண்டிடத்துங் கூறப்பட்ட செயல்கள் பல்லவமல்லன் சம்பந்தமானவையே என்று கருதினேன். சாஸனத்துக்கண்ட மண்ணைக்குடி நெல்வேலி என்ற இரண்டு பாசறைகளும், ஆழ்வார்வாக்கில், மண்ணை நெல்மெலி என்று காணப்படுகின்றமையால் அவ்விரண்டும் வேறுபட்டவை என்று ஐயரவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். வெண்ணெய்நல்லூரை வெண்ணை என்பதுபோல, மண்ணைக்குடியை மண்ணை என்று வழங்குவது நூல்வழக்கென்பது பலரும் அறிவர். அரிசைக்குடி, கருந்தட்டான்குடி என்பவற்றை, அரிசை கரந்தை என்று இக்காலத்தார்கூடத் திரித்துவழங்குதலைக் காணலாம். மண்ணை யென்பது ஐயரவர்கள் கருத்துப்படி யாறன்றிப் படைவீடாகவே உரைகாரர் கருதுதலும் நோக்குக. இனி, நெல்மலி, நெல்மெலி, நெல்வெலி, நெல்வேலி என்ற பெயருள்ள ஊர்கள் தமிழ்நாட்டில் மிகப்பலவாக உள்ளன; மேற்காட்டிய உருவங்கள் சிலவிடங்களில் வேறுபாடின்றியும் மக்களால் வழங்கப்படுவதைக் காணலாம். ஆயின், வடமொழியில் அமைந்த ஷை சாஸனத்தில் ஒருவகையாகவும், ஆழ்வாரால் வேறொருவகையாகவும்—ஒரூரே இருவேறுபட வழங்கப்பட்டிருத்தலுங் கூடியதேயன்றோ? மேலும், உதயேந்திரசாஸனமாக இப்போது காணப்படுவது மூலப்பிரதியைப் பார்த்துப் பிற்காலத்து எழுதப்பட்ட பிரதியே என்பதும் அதன்

---

*பெரியபுராணத்திற் பல்லவசேனாபதியாகிய சிறுத்தொண்டர்வெற்றியாகவே கூறப்படுதல் காண்க. †கலிங்கத்துப்பரணி-11,160.

உள்ளீடான விஷயங்களைப்பற்றி ஐயப்பாடுகள் உண்டென்பதும் சரித்திரவறிஞர்தெரிந்தவை. அதனால், அதனிற்கண்ட எழுத்துவேறுபாடுகளைக் கொண்டு ஒருதலை துணிவது அவ்வளவு பொருத்தமுடையதுமன்று.

ஷை சாஸனத்துக்கண்ட நெல்வேலிப்போர் சபரர் (வேடர்) தலைவனாகிய உதயணனுடனும், ஆழ்வார்கூறும் நெல்மெலிப்போர் சேரனுடனும் நடந்தனவாகக் காணப்படுதலால், அவ்விரண்டனையும் ஒன்றாகக் கொள்வது பொருந்தாது என்பது ஐயரவர்கள் கருத்து.

"விடைத்திறல் வில்லவனெல்மெலியில் வெருவச்செருவேல் வலக்கைப்பிடித்த படைத்திறற் பல்லவர்கோன்"

என்பது ஆழ்வார் அருளிச்செய்த தொடர். வில்லவன் என்பது, வில்லாளனான வீரனையும், வில்லைக்கொடியாகவுடைய சேரனையும், வில்லால் ஆறலைத்தும் விலங்குகளைக் கொன்றும் வாழும் வேடனையும்* குறிக்கும் ஆற்றலுடையதாம். ஈண்டுச் சாஸனத்துடன் இணங்க நோக்குமிடத்து, 'வேடர்தலைவன்' என்று பொருள் கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதன்றோ? "பல்லவன் வில்லவனென்றுலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்—பல்லவன் மல்லையர் கோன்" எனச்சேரவரசன் பல்லவனை முற்பட வணங்கிவிட்டசெய்தியை ஆழ்வார் முதற்பாசுரத்தே கூறிவிட்டனராதலால், எட்டாம்பாட்டிற் கண்ட 'விடைத்திறல் வில்லவன்' எவ்பவன், பாண்டியன்போல, பல்லவனுக்கு அடங்காதெதிர்த்த வேறொரு தலைவனாதல் வேண்டும் என்று கருதுவதே பெரிதும் ஏற்புடையதென்க.

இனி, 'பகவதியாற் காக்கப்படும் காளிதுர்க்கத்தை யழித்துப் பாண்டியசேனையை மண்ணைக்குடியில் தோற்கச் செய்தவன் எவனோ' என்ற வாக்கியம், உதயசந்திரனது கடைசிச்செயலாக ஷை சாஸனத்துள் வருகின்றது. இதற்குமுன் னமைந்த வாக்கியங்களின்கதியை உற்றுநோக்குவோர்க்கு இத்தொடரிற் கண்ட இருசெயல்களும், ஒருவனை உதயசந்திரன் தாக்கியவகைகளே என்பது விளங்கத் தடையில்லை. 'காளிதுர்க்கத்தையழித்து' என்பது வேறொருவனைத்தாக்கிய செயலா

---

* வடமொழியிலும் 'ஹில்ல' என்பது வேடர்க்கு வழங்கும்பெயர்.

யின் 'அத்துர்க்கம் யாரது?' என்று எழக்கூடிய கேள்விக்கு விடையில்லையாம். ஆகவே, பின்வருந்தொடர்கொண்டு, அது பாண்டியனுடையதென்று எளிதிற் றெரிந்துகொள்ளலாம். பாண்டியனுக்கு ஏழுபோரண்கள் இருந்தன என்று புறநானூறு (33) கூறுவதால் அவற்றுள் இக்காளிதுர்க்கமும் ஒன்றாதல்வேண்டும். இவ்வாணைப் பல்லவசேனாபதி அழித்துவிட்டு மண்ணைக்குடியில் திரண்டெதிர்த்த பாண்டிய சேனையை உதயசந்திரன் முறிபடித்தான் என்பதே சாஸனப்பொருளாதல் காணலாம்.

இங்ஙனம் பலமான துர்க்கமொன்றைப் பற்றியிருந்த பாண்டியன் மேற் பல்லவன் படையெடுத்த செய்தியையே—"தேம்பொழிற் *குன்றெயிற்றென்னவனைத் திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற....பல்லவர்கோன்" என்று திருமங்கைமன்னனுங் குறிப்பிட்டனராதல்வேண்டும், என்று நான் கருதியது தவறான ஊகமாகுமோ? சாஸனத்துக்குப் பொருந்த அமைந்த இப்பொருளை நான் இழுத்துக்கொண்டதாகக் கருதியதே வியப்பாகும்.

இனி, மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக்கிராமம் என்ற போர்க்களங்களை உதயேந்திரசாஸனங் கூறியதாயினும், இன்னாருடன் அவ்விடங்களிற் போர்நடந்தன என்பதை அது குறிக்கவில்லை. ஆயினும் இவ்வூர்களைப்பற்றிய ஆராய்ச்சியால், பாண்டிநாட்டின் எல்லைப் புறத்தில் அப்போர்கள் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று தோற்றுகின்றன. மண்ணைக்குடி என்பது, இப்போது தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கித் தாலூகாவைச் சார்ந்துள்ள மண்ணகுடி என்ற கிராமமாகும். சூதவனம், நிம்பவனம், சங்கரக்கிராமம் என்பவை, ஷை ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகாவைச் சேர்ந்தவை. இவற்றுள், சூதவனம் என்பது திருவுசாத்தானம் எனத் தேவாரத்தும் கோவிலூர் என வழக்கிலும் உள்ள தலமாகும். †நிம்பவனம் என்பது வேப்பங்காடு என்ற ஊராம். ‡சங்காக்

---

*குன்றெயில்—(வியாக்யானத்தின்படி) குன்றுபோலும் எயில் என்றேனும், குன்றின்மேலுள்ள எயில் என்றேனும் கொள்ளலாம்.

† முத்துப்பேட்டைக்கு வடக்கே 2 மைலில் உள்ளது.

‡ புதுக்கோட்டைச்சீமையைச்சார்ந்த திருவரங்குளச்சாஸனத்தில், இந் நிம்பவனப் பிரஸ்தாபம் வந்துளது (Ep. Rep. 280 of 1914.).

கிராமம் என்பது அப்பக்கத்துள்ள சங்கரனார்குடிக்காடு என்ற சிற்றூராகவேண்டும். நெல்மெலி, நெல்வேலி என்ற ஊர்களும் இப்பிரதேசத்தில் உள்ளன. சாஸனத்துக்கண்ட நெல்வேலி என்பது, இவ்வூர்களில் ஒன்றாயின், உதயசந்திரனால் எதிர்க்கப்பட்ட சபர்தலைவனுடைய நாடும், பாண்டிமண்டலத்தை ஒட்டியதாதல்வேண்டும்.§ டாக்டர் ஹுல்ஷ் துரையும், இப்போரைத் தென்னாட்டு நிகழ்ச்சியாகவே கருதுதல் காணலாம். இவற்றால், பாண்டிநாட்டின் எல்லைப்புறத்துப் போர்க்களங்களையே ஷை சாஸனம் மிகுதியாகக் கூறுவதிலிருந்து, பல்லவசேனைக்கும் பாண்டியனுக்கும் பலபோர்கள் தென்னாட்டில் நடந்தன என்று தெரியலாம். இவ்வாறே, திருமங்கையாழ்வாரும் பாண்டியனுடன் பல்லவன் நடத்திய போர்களையே பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்துள் மிகுதியாகக் கூறியிருத்தல் ஈண்டு ஒப்பிட்டறியத்தக்கது.

ஆழ்வார் நந்திபல்லவனது போர்களையே கூறினாராயின், அவன் நிஷாதராஜனாகிய பிருதுவீவியாக்ரனுடன் வடநாட்டில் நிகழ்த்திய பெரும்போரையும் அவர் கூறியிருக்கவேண்டும் என்று ஐயரவர்கள் கூறுகின்றார்கள். தாம் அவதரித்த தென்னாட்டில், தங்காலத்தே நிகழ்ந்த செய்திகளை, அறிந்தவாறு கூறியவராகத் திருமங்கைமன்னனை நாம் கொள்வது முறையேயன்றி, அவரைச் சரித்திரவாசிரியராகவே கருதிவிடுதலுங் கூடுமோ?

"விண்டவரிண்டைக்குழாமுடனே விரைந்தாரிரிய (4)
"கறையுடைவாண்மறமன்னர்கெட" (9)

என்று பொதுவாக ஆழ்வார்கூறிய பகைவர்செய்திகளில் அஃது அடங்குமென்றே கொள்ளற்குரியது. கருவூரிற் பாண்டியனை அஞ்சும்படிசெய்த செய்தி சாஸனத்தில்லையேனும், வேறொருபடையினுதவியால் வேறொருகாலத்தில் அது நிகழ்ந்திருக்கக்கூடாதென்று சொல்வதற்கில்லை. மேற்கூறியகாரணங்களால், பல்லவமல்லன்செயல்களாகக்கண்டவற்றுடன் ஆழ்வார்கூறியவை பெரும்பான்மை ஒற்றுமைபெறுவதும், அதனால், அவன்செய்திகளையே ஆழ்வார் பாடினவராதல்வேண்டுமென்பதும் பொருந்தியவையாதல் கண்டுகொள்க.

---

§புதுக்கோட்டை அறந்தாங்கிப் பிரதேசங்களிலுள்ளஜமீன்கள் பல, கள்வர்தலைவரதாட்சியின்கீழ் இன்றும் உள்ளன.

இனி, பல்லவனை வெற்றிகொண்டவனைச் சாஸனவழியாலும் ஆழ்வார்வாக்காலும் அறியப்பட்ட வயிரமேகனைப்பற்றி ஆராய்வோம். "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்பது ஆழ்வார் அருளிய தொடர். இதற்கு, "வயிரமேகன் வலியும் அவன் புகழுஞ் சூழ்ந்துள்ள காஞ்சீபுரம்" என்பது பொருளாம். வயிரமேகன் பல்லவனை வென்ற செய்தி நிகழ்ந்து ஒருநூற்றாண்டுக்குப் பின்பு, ஆழ்வார் வாழ்ந்தவர் என்று ஐயரவர்கள் கருதுவது உண்மையாயின், அவ்வயிரமேகன் கீர்த்தியோடு அவன் பலமுங் காஞ்சியைச் சூழ்ந்திருந்தன என்று பெரிதும் பிற்பட்டவரொருவர் பாடும்படியும் நேருமோ? தங்காலத்து விளங்கியுள்ள பல்லவனைவிட்டொழித்து எத்தனையோ மாறுபாடடைதற்குரிய ஒரு நூற்றாண்டுக்குமுன், வேற்றரசனொருவனுடைய வலிமை சூழ்ந்திருந்ததாகக் கச்சிப்பதியை அவர் சிறப்பிக்கவேண்டிய ஆவசியகந்தான் என்னையோ? இத்தொடரின் இயற்கையமைப்பைச் சிந்திப்போரெவர்க்கும், அவ்வயிரமேகன் ஆழ்வார்காலத்துக்குச் சிறிதேனும் முற்பட்டவனென்று கருதஇடமிராதென்றே சொல்லலாம். அன்றியும் 'வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்று வேறொருவர் வலியும்புகழும் கச்சிக்குரியவையல்ல—என்பதுபட வற்புறுத்திக்கூறுவதாலும், அவ்வயிரமேகனது கீர்த்திப்ரதாபங்களை ஆழ்வார் நேரில் அறிந்தவரென்பது கரதலாமலகமாகும். ஐயரவர்களது மற்றொருகருத்தின்படி, வயிரமேகன் பல்லவனேயாயின், பல்லவனுடைய புகழும் வலிமையுமே அவன் உள்ளூரைச் சூழ்ந்திருந்தன என்று ஒருகவி விசேடிப்பதால் வியக்கத்தக்க தென்னோ? அதனால் 'தன்புகழ் தன்வலி சூழ்ந்த' என்று தெளியுபட ஆழ்வார்கூறும் கீர்த்திப் பிரதாபங்கள் வெளியிருந்து படையெடுத்துவந்த வெற்றிவேந்தனொருவனைப்பற்றியன வென்பதே பெரிதும் பொருத்தமாதலுங் காணலாம்.

III. பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்துப் புகழப்படும் பல்லவனுக்கு நெடுங்காலத்துக்குப் பின்பே ஆழ்வார் வாழ்ந்தவராதல்வேண்டும் என்று ஐயரவர்கள் முடிவாக நம்புவதற்கு—பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று என்ற சொற்களை அவ்வரசன் போர்ச்செயல்களுடன் இணைத்து ஆழ்வார் பாடுதலே முக்கிய ஆதாரங்களாயுள்ளன. இதன் பொருட்டு அவர்கள் தம் கருத்துக்கிசைந்த மேற்கோள் பலவற்றை

எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஆனால், இச்சொற்கள் யாவும், அவர்கள் கருத்தின்படி, நூற்றாண்டுகளுக்குமுன் னிகழ்ந்த செய்திகளைத்தான் குறிக்கவேண்டுமென்னும் நியதியில்லை; அவையெல்லாம், 'சென்றகாலம்' என்னும் பொருள்கொண்டு, ஒருவன் வாழ்நாளுட் சென்ற காலத்தையும் தலைமுறைசென்ற காலத்தையும் பொதுவாகவே காட்டவல்லன. "பண்டு மின்று மேலுமாய்" என்ற திருமழிசையாழ்வார்வாக்கினும் அச்சொல் (திருச்சந். 22) இறந்தகாலமென்னும் பொருளில் வழங்குதல் காண்க. ஒருவன் வாழ்நாளுள்ளே, சிலபல ஆண்டுகள் கழிந்ததை மட்டுமன்றி, சிலமாதங்கள் நாள்கட்கு முன் நிகழ்ந்தவற்றைக் குறிப்பதற்கும் அச்சொற்கள் முன்னோரால், வழங்கப்பட்டிருத்தலை அடியில் வரும் மேற்கோள்களிற் பரக்கக்காணலாம்:-

[சிலபல ஆண்டுகட்கு முன்னிகழ்ச்சி]

"பண்டும் பண்டும் பாடுந ருவப்ப....
பெண்டிருந் தப்பதங் கொடுக்கும்" (புறம். 151)

"பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்தம் முறுபொரு ளீங்கிவை" (மணிமே. 8-18)

"பண்டறி கிளையொடு பதியுங் காணாள்" (ஷை 8-15)

"பண்டுகாம ரானவாறும் பாவையர் வாயமுதம்
உண்டவாறும் வாழ்ந்தவாறு மொக்க வுரைத்திருமி"
(திருமங்கைமன்னன். பெ. தி. 1, 3, 5.)

"பண்டிவ ளுயனங்காய்" (ஷை. 3, 7, 2)

"வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்"
(ஆண்டாள். திருப்பாவை. 15)

"பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்"
(கம்ப. நகர்நீங்கு. 48)

"(விருந்தினர்) இருவகையர்; பண்டு அறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறியாதுவந்தாருமென". (குறள். 43. பரிமேலழகருரை).

[சிலபலமாதங்கள் நாள்கட்கு முன்னிகழ்ச்சி]

"பண்டும் பலபல வீங்கிருள் காண்டும்" (திருவிருத்தம். 49)

"பண்டறிசுட்டு" (சீவக. 1445 நச்.)

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு" (குறள். 1083)

"நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்" (ஷை. 1133).

"பண்டிப் புனத்துப் பகலிடத் தேனனாட்
கண்டிக் களிற்றை யறிவன்மன்" (யாப். வி. பக்.—102.)

"பண்டையில் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி
அச்சஞ்செய்தலுடைமை" (குறள். 1152 பரிமே).

"பண்டு கூரிபதோர் வாண்மன் (நன். மயிலைநாதருரை. பக். 237, 295)

"பண்டை யளவன்றி" (ஐங்குறு, 93 உரை).

"முன்னுந் தொழுத்தோன்றி....
இன்னுந் தொழுத்தோன்றிற் றீதேநாண்" (பிறை) (யாப். வி. பக். 402.)

"வந்தணங்கா மன்னர்தேய முன்னாள்
(இறைய. அகப். 156. உதாரணப்பாட்டு)

"முன்னாள் முறைமையின்....அல்லிடைப் பெயர்ந்தனர்"(சிலப்)

"முன்னொருகா லென்மகனைக் கண்டேனென் கண்குளிர"

(சீவக. 1807)

"அணிநிற மாப்பக டுந்திவந் தார்....அன்றவிய....

வேல்கொண்ட கோன்" (இறைய. அகப். 158).

"அன்றுநீ செல்லக் கிடவென்று யாருயிர்விட்

டின்றுநீ வானுலக மெய்தினாய்"

(பொய்யாமொழியார்: தமிழ்நாவலர்சரிதை).

இவ்வாறே வேண்டிய மேற்கோள்கள் ஐயரவர்கள் கருத்துக்கு மாறாக அமைந்துள்ளவற்றை உதகரிக்கலாகும். ஆதலால் பண்டு முதலிய சொற்களைக்கொண்டு ஒரு முடிவுகட்டுதல் பொருந்தாதென்க. பல்லவமல்லன் அறுபது வருஷங்கட்கு மேல் ஆட்சிபுரிந்தவனென்பது, சரித்திரப் பிரஸித்தமாயுள்ளது. அவனது ஆட்சியின் தொடக்கத்தில் நடந்த போர்களையே உதயேந்திரசாஸனமும் பரமேச்சுரவிண்ணகரப்பதிகமுங் கூறுவன. இவனாட்சிமுடிவுக்குப் பத்துப்பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்புதான் வயிரமேகனாகிய தந்திதுர்க்கன் இவனை வென்றவனென்று அறியப்படுகின்றது. இதனால், திருமங்கைமன்னன், பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தைப் பல்லவமல்லனது ஆட்சியிடையிலும், அட்டபுயகரப்பதிகத்தை வயிரமேகன் வெற்றிகொண்ட காலமாகிய கி.பி. 754லும் பாடினவராதல்வேண்டுமென்று கருதுவது, ஒருபோதுந் தவறான ஊகமாகாதென்க.

வயிரமேகன் என்ற பெயர்க்காரணத்தைப்பற்றி எழுதும்போது, அது, தோற்றவனான பல்லவர்குலப்பெயரைத் தந்திதுர்க்கன் தன் வெற்றிக்குறியாகத் தரித்ததாகலாம் என்று ஐயரவர்கள் கருதுகிறார்கள். வென்றவன்பெயரைத் தோற்றவன் தானடங்கியதற் கறிகுறியாகத் தரித்

தல் பொருந்துமேயன்றித் தோற்றவன்பெயரை வென்றவன் தரிப்பதென்பது அருமையேயாகும். சோளாந்தகன், கேரளாந்தகன் என்பதுபோல, வேண்டுமாயின் வயிரமேகாந்தகன் என்று வெற்றிப்பெயர் புனைவதே பழையவழக்குக்கு ஏற்றது. பல்லவனை வெற்றிகொண்ட வயிரமேகன் ஆகிய தந்திதுர்க்கன், பின் பகைமைநீங்கித் தன்மகள் ரேவாவை அப்பல்லவனுக்கே யளித்தானென்றும், அவளிடம் பல்லவமல்லனுக்குப் பிறந்த மகனே தந்திவர்மனென்றும் சிலரால் ஊகிக்கப்படுவதால், தாய்வழிப்பாட்டனான அவ் வயிரமேகன்பெயரைப் பின்வந்த பல்லவர்சிலர் தரிக்கலாயினர்* என்று ஒருகாற் கொள்ளலாமேயன்றி, மாறிக்கூறுவது சிறிதும் பொருந்ாதென்க.

பல்லவமல்லன்வழியிற் சிலரும் வயிரமேகன் என்று பெயர்தரித்திருப்பதாகத் தெரியவருவதால், அதனைப் பற்றிக்கொண்டு அவர்களில் ஒருவனை ஆழ்வார் கூறினவராகவேண்டும் என்று ஆதாரமில்லாமல் பொதுப்படையாக நலிந்துகூறும் பொருள்களினும், பல்லவனை வெற்றி கொண்டவனாகச் சாஸனத்தாலும் ஆழ்வார்வாக்காலும் தெளிவாக அறியப்படுபவனும் முன்னவனுமாகிய வயிரமேகனையே கொள்வது எத்துணை நேர்மையும் சிறப்புமுடைத்து என்பதை அறிஞர் சிந்திப்பார்களாக.

மு. இராகவையங்கார்,
திருவல்லிக்கேணி.

---

*பின்வந்த பல்லவர்க்குத் தந்திதுர்க்கனுகிய வயிரமேகனென்றபெயர் வழங்கலாயிற்று என்பது, வயிரமேகபுரம், வயிரமேகச்சதுர்வேதிமங்கலம் போன்ற பேர்கள் வழங்கலால் அறியலாம்,

ஸ்ரீ

சிலப்பதிகாரவாராய்ச்சி.

(௨௧-ஆம் தொகுதியின் ௫௭௰-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(பதிகம்)

இனி, இந்நூலின் பதிகம் ஆராய்வானெடுத்துக்கொள்ளற்பாலது. பதிகமென்பது பாயிரத்தின் பரியாயப்பெயர்களுளொன்று. பாயிரமென்பது வரலாறு. அதுதான் பொதுவுஞ் சிறப்புமென இருவகைத்து. "பதிகக்கிளவி பல்வகைப்பொருளைத்-தொகுதியாகச் சொல்லுதல்தானே" என்றாராகலின், ஐந்தொகையும் பதினொரு சிறப்புமாகிய இலக்கணங்கள் பலவும் உள்ளுறுத்துக்கூறப்படும் பாயிரத்திற்குப் பதிகமென்னும் பெயர் காரணக்குறியாய் எய்திற்றென்பர். ஒருசார் வடநூல்வல்லார் இதனைப் ப்ரதீகம் என்னும் வடசொற்சிதைவென்றுங் கூறுப.

அஃதாயின், இருவகைப் பாயிரத் திலக்கணங்களையும் இப்பதிகச் செய்யுளுள் வகுத்துக்காணுமாறில்லையே எனின்; இஃ திந்நூற்கேயுரிய பொருள்களை யுணர்த்துகின்றமையிற் சிறப்புப்பாயிரத்திலக்கணங்களையே பெரும்பான்மையாக அமையப்பெற்றுள்ளதென்க. அற்றேல், இதனையும் பெயர்கூறுமுகத்தச் சிறப்புப்பதிகமெனல்வேண்டாவோ எனின் அஃதன்னதாதல் அதனுட்பொருளைநோக்கவே எளிதினறியக் கிடத்தலின் வேண்டாவென்பது.

நிற்க: இந்நூனுதல்பொருளும், இது கேட்டலாற் பயனும், ஆக்கியோன்பெருமையும், நூலின்பெருமையும் இன்னோரன்ன பலகுறிப்புகளும் நூலுணர்ச்சிபெறுதற்கு வேண்டுவனவற்றைத் தன்னகத்துடைமையின் இத்தொடர்நிலைச்செய்யுட்கு இப்பதிகம் இன்றியமையாச் சிறப்பினதாகின்றது. அவற்றுள் இக் காப்பியஞ்செய்தாரிவரென்பதூஉம் அவர் பெருமை இத்துணையதென்பதூஉம் முன்னருணர்த்தற்குரியன. "குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு" எனவும், "உரைசாலடிகளருள" எனவுஞ் சொன்னாராகலின் இந்நூல்செய்தாரிளங்கோவடிகளென்பது விளங்கிற்று. அவர் துறவியாதலின் அடிகளெனப்பட்டார்; இராச

போகத்தையுந் துறந்தவராதலிற் கோ (ஆகிய) அடிகள் என்று சிறப்பிக்கப்பெற்றார்; அங்ஙனந் துறவுபூண்டதும் மிகவும் இளையபருவத்தேயாகலின் இளங்கோவடிகளெனப் பெயர்சிறந்து விளங்கினாரென்க.

இக்கருத்தே "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" என்பதனாலும் விரித்துரைக்கப்படுகிறது. உலகின்கட் பெருமிடியுற்றானொருவன் துறவடைதல் எளியகாரியமே; ஆயினும், அரசச்செல்வந் துய்த்துநின்றார் பற்றறுதல் மிகவும் அரியதொன்றாம். அயல்வேந்தரடிக்கீழொதுங்குஞ் சிற்றரசுரிமையாயின் அதன்கட் பற்றுவிடுதல் ஒருவர்க்கமையும்; ஆயினும், வஞ்சிமூதூர் மணிமண்டபத்துத் தென்னர் செம்பியர் தன்னடிபோற்றச் சிங்கஞ்சுமந்த பொங்கணைமிசை வீற்றிருந்த செங்கோலோச்சுங் குடதிசைக் கோவாதற்குற்ற பேரரசுரிமையாயின் அதனை வெறுத்துவிடுதல் யார்க்கு மமையாது. இராசபோகநுகர்ந்தாரும் நெடுங்காலங்கழிந்தவாறே மூப்படைந்து உலகியலறிவுநிரம்பித் துறவுமேற்கொள்ளுதல் ஒருதலையானியலும்; ஆயினும் சிறுகாலையே துறத்தல் எளிதினியலாதாம். எல்லாவாற்றலுந் தப்பாறப்பெற்று ஒருகாலாக உலகத்தைத் துறந்துவிடுதல் ஒருவர்க் கெளிதி னெய்துவதே; ஆயினுந் தவவுருத் தாங்கி உற்றநோய்நோன்றல் உண்டிசுருக்கல் முதலிய ஒழுக்கநெறிக்கண் வழுவாதுநிற்றல் எத்திறத்தானும் எய்தலாவதின்று. துறவுபூண்டொழுகுவார் எஞ்ஞான்றும் தாம் புலப்பகையை வென்றிருத்தல் காட்டின்கண்ணையின் ஒருவாற்றாற்கூடும்; ஆயினுந் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழையபயிற்சிவயத்தான் நினைவுசெல்லுதற்குப் பொருந்திய, முன்னரின்பந்துய்த்தவிடத்திலேயே மீட்டும் நிலைபெற்றிருத்தல் எல்லார்க்குங் கைகூடாது. அல்லாமலும், இவற்றுளொரோவொன்று ஒரொருவர்க்கு வாய்த்தலுங்கூடும்; ஆயினும் அவையனைத்தும் ஒருவர்க்கொருங்கே கைவரப்பெறுதல் அரிதினுமரிதாம். ஆதலின் இந்நூலாசிரியருடைய அரும்பெருந்தவத்தை என்னென்றுரைப்பது?

இன்னும், "உரைசாலடிகளருள மதுரைக்கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பதில், உரைசாலடிகளென்று கூறியுள்ளதைநோக்க அவர் துறவின்பெருமையேயன்றிப் புலமையானும் புகழ்படைத்தவரென்பது தெளிவாகின்றது. அவர் தமது இயல்பானகருணையினால் இதனை

இயற்றினரென்பது தோன்ற அருளவென்றும், சங்கப்புலவராகிய சாத்தனாரினும் அவர் மேம்பட்டவரென்பதுதோன்றச் "சாத்தன்கேட்டனன்" என ஒருமைமுடிபுகொடுத்தும் கூறப்பட்டது. இதனால் இவ்வரிய பெரிய தமிழ்நூலை இயற்றுதற்கு, வெறுப்புவிழைவற்ற முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவிதையும் ஒருங்குவாய்ந்துயர்ந்த, அடிகள் ஆற்றல்சான்றவரேயென்பது நன்கு துணியலாயிற்று.

இனி, இச் சிலப்பதிகாரத்தைச் செவியேற்றிருந்த சங்கப்புலவராகிய சாத்தனார்பெருமைகூறவே, நூலின்பெருமையும் உடன்கூறியதாகும். "தண்டமிழாசான் சாத்தன்" எனவும், "நன்னூற்புலவன்" எனவும் இவ்வாசிரியரே அவரை நன்குமதித்துள்ளார். அன்றியும், அவர் அக்காலத்துச் சேரவரசன் செங்குட்டுவனுடைய அபிமானத்தாற் சிறப்புற்றிருந்தா ரென்பதும் அறியப்படுகிறது. அவையேயன்றி அவர் பிறர்நூலுட் பிழைகாணுந்தோறும் மனநொந்து தமது தலையிற் குத்திக்கொள்வரென்றும், அதனலவர்தலை எப்பொழுதுஞ் சீயொழுக் கருமையின் அவர்க்குச் சீத்தலைச்சாத்தனரென்று பெயராயிற்றென்றுங் கூறுப.* அவ்வாறு பிறர்நூலுட் குற்றங்காணுமாற்றலில் அவர் பெரிதுஞ் சிறந்தவரென்பது சங்கப்புலவர்களாலும் பாராட்டப்பெற்றதொன்றும். ஆகலான் அத்தகைய நல்லிசைப்புலவரும் இந்நூலினை விரும்பிக் கேட்டாரெனவே அது குற்றத்தி னீங்கியதென்பது சொல்லாமையே அமைந்தது. இதன்கண் வழுவின்மைகண்டவாறே சாத்தனர் தலை சீயொழுகுதலைத் தவிர்ந்ததென்பது தோன்றுதற்பொருட்டே, ஆசிரியர் இப்பதிகத்துள், சீத்தலைச் சாத்தன் கேட்டனன் என்னாது, "கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பாராயினரெனக. இதனானன்றே அது "முழு(த்)தும் பழுதற்ற முத்தமிழின் பாடல்" என்று போற்றப்பட்டு இன்றுகாறும் நின்று நிலவுவதாயிற்று?

*இவ்வாறன்றி, சீத்தலையென்னுமூரிலுள்ள ஐயனர்பெயராகிய சீத்தலைச் சாத்தன் என்பதே அவரது இயற்பெயராயிற்றென்று கூறுவாருமுளர். அது பொருந்தாது. "இயற்பெயர் சினைப்பெயர்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையின்கண் உரையாசிரியரும், சேனவரையரும், நச்சினர்க்கினியரும் "தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்ற ஆன்றோர் கருத்துக்கியைய, சீத்தலைச் சாத்தன் என்பதனைச் சினைமுதற்பெயராகக்கொண்டனராகலிற் சீயோடுகூடின தலையையுடைமையா னவ ரப்பெயர்பெற்றனரென்பதே தொல்லாசிரியர் துணிவா மென்க.

அற்றேல் அஃதாக: "தோன்றுதோற்றித் துறைபலமுடிப்பினுந் — தான்றற்புகழ்தல்தகுதியன்றே" என்றாராகலின், இவ்வாசிரியர் இப்பதிகத்துக்கண் தாமே தமது நூலையுந் தம்மையும் புகழ்ந்துகோடல் சால்புடைத்தன்றாம் பிறவெனின்; அறியாது கூறினாய். "தான்றற்புகழ்தல் தகுதியன்றே" என்ற ஆசிரியர் பனம்பாரனார் தாமே அதனையடுத்து, —

> "மன்னுடைமன்றத்தோலைத்தூக்கினுந்
> தன்னுடையாற்றலுணராரிடையினும்
> மன்னிய அவையிடைவெல்லுறுபொழுதினுந்
> தன்னைமறுதலைபழித்தகாலையுந்
> தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே"

என ஒரோவழி அது குற்றமாகாமை யுணர்த்தினா ராகலானும், பிறரு மவ்வாறு தாமே பாயிரமிட்டுக்கொண்டார் பலராமாகலானும், அவையெல்லாந் தற்சிறப்புப்பாயிரமென வழங்கப்பெறுதலானும், வடநூலுள்ளுந் தன்னைப் பிறன்போலப் புகழ்ந்து நாந்திகூறுதல் வழக்காறென்பவாகலானும், முற்றத்துறந்தமுனிவராகிய அடிகள் தம்மைப் படர்க்கையிடமாகவைத்துக் கூறிக்கொண்டமையால் அக்குற்றம் தம்மைச் சாராவண்ணம் ஒழிக்கவல்லுநராகலானும் ஈண்டு நூலாசிரியரே பதிகமுங்கூறியது தகுதியுடையதே என்க.

இனி, நுவல்பொருள்களுள் முதன்மைவாய்ந்த கோவலன் கண்ணகிகளின்கதை ஆசிரியரறிவுக்கெட்டிய வரலாற்றையும் இப்பதிகத்துள்ளே காணலாம். "பொலம்பூவேங்கை நலங்கிளர் கொழுநிழல்" என்பதுமுதல் "இறும்பூது போலுமஃ தறிந்தருணீ" என்பதுகாறும் குன்றக்குறவர் கூறியதும், பின்னர் அதன் விரிவெல்லாம், "யானறிகுவனதுபட்டது" என்று தொடங்கிக் "கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" என்பதிறுவாயாகச் சாத்தனாருணர்த்தியதுமாகிய வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. இதனால், குன்றக்குறவர்கூற்றின்வாயிலாகவும் சாத்தனார் வாய்மொழியின்வழியாகவும் வந்த பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதோன்றிய திந்நூலென்பது தெளிவாகின்றது.

அஃதாக, யார்வாயிலாக வந்ததாயினுமென்? அவ்வரலாறு ஈண்டைக்கு வேண்டுவதில்லையாமாலோ வெனின்; — அவ்வரலாறு கேட்கவே இப்பநுவலுட் பயிலுங் கதையினுடைய சிறந்த தன்மைகளை ஒருதலை

யாக மாணுக்கன் உணருமென்க. அஃதெங்ஙனமெனிற் கூறுவன். இக்கதைநிகழ்ச்சியினிடையே மானுடர்முன்னிலையிற் றெய்வந் தோற்றஞ் செய்தலும், ஏவல்கேட்டலும், பழம்பிறப்புணர்த்தலும், விண்ணுலகேற வெடுத்துச்சேறலும் பிறவுமாய உலகியல்கடந்த அற்புதச்செயல்கள் பற் பல காணப்பெறுதல் கற்றார்பலருநன்கறிந்தது. ஆகவே, அவை உண் மையி னிகழ்ந்தனவோ அன்றோவென ஐயுறவெய்தியமாணுக்கன் குன்று முட்டிய குரீஇப்போலப் பெரியதோ ரிடருற்று நிற்கும். ஆகலா னவ் வையந்தினை நீக்குவான் முற்பட்ட ஆசிரியர் இவ்வாலாறுரைத்தமையாற் பிறவாயில்களானும், அவையாவும் வாய்மையேயாதல் வற்புறுத்தின ரென்க.

அற்றேல், ஆசிரியர் துறவியாதலிற் பொய்கூறா ரென்பதுகருதி, மாணுக்கன் அவ்வையநிகழ்ந் தழி அதனைத் தானே அகற்றிக்கொள்ளு மாகலானும், அடிகள்வாக்கினுஞ் சிறந்தது பிறிதொன்றின்மையின் வேறுசான்று வேண்டாவாகலானும், ஈண்டுக் குறவர்கூற்றுஞ் சாத்த னார்கூற்றுமாவனவற்றைக் கரிபோக்குதல் மிகையேயாம்பிறவெனின்:— அற்றன்று. யாதொன்றன் உண்மையுணர்தற்கண்ணும் ஒருவர்மாற்ற மே தேறப்படாது. இருவராயின் ஒருவர்க்கொருவர் தம்முளியைந்து ஒருபொருளை மாறுபடக்கூறலுங் கூடுமாகலின் அவர்கூற்றுந் தெருளற் பாற்றன்று. இருவர்க்குமேற்பட்ட பலராயின், அனைவரு நெஞ்சொற் றுமைப்பட்டு உண்மையிற்றிறம்பியுரைத்தலும், உரைத்தா லது நீடுநிற் றலுங் கூடாமையின் அங்ஙனம் தெளியப்பட்ட உண்மை ஒருபொழு தும் புரைபடுவதின்றாம். ஆகலின், ஈண்டு இவ்வாசிரியர் தாம் கதை யுட் கூறப்புகுவனவற்றிற்குச் சாத்தனாரையுங் குன்றக்குறவரையுங் கரி போக்கினாரென்பது குற்றமாகாமை யுணர்க.

அன்றியும், பின்வருமாற்றானு மவர்க் கதுவே கருத்தாத லறியப் படும்.

"குன்றக்குறவரொருங்குடன்கூடிப்
பொலம்பூவேங்கைநலங்கிளர்கொழுநிழ
லொருமுலையிழந்ததிருமாபத்தினிக்
கமரர்க்கரசன்றமர்வந் தீண்டியவள்
காதற்கொழுநனைக்காட்டியவளொடெங்

கட்புலங்காணவிட்புலம்போய
திரும்பூதுபோலுமஃதறிந்தருணீயென''—

என்னு மிவ்வடிகளின் பொருட்குறிப்பு ஈண்டாராயத்தக்கது. பல்லினத்தோரும் பழகுதலாற் சூதும் வாதும் பிறவுமாய சூழ்ச்சியில்வல்ல ஏனை நகரமாந்தர்போலாது மலைவாழ்நராகிய மாக்கள் என்ஞான்றும், வஞ்சனையற்று உள்ளதை உள்ளவாறுணரும் ஒரேதன்மையுடையவராவர். அவரும், ஒருவரிருவராயின் ஓரோவழி உண்மைபிறழ உரைத்தலுங்கூடும்; அவ்வாறன்றி அரசனும் அடிகளுங் கூடியமுன்னிலையிற் பலரும் ஒரேபடியாகப் பகர்ந்தனராயின், அதன் உண்மையில் ஐயப்படுதல் என்னை? இனி, அப்பலர்தாமும் ஒருவர்பின் னொருவராய்ப் பலகாலாக வந்துரையாடாது அனைவரும் ஏககாலத்திலே ஒன்றுகூடினர். அவ்வாறு அவர் ஒரேகாலத்தி லுரைத்ததும், பிறர் கண்டுகூறக் கேட்டுவந்ததன்றிக்கே தாமே கட்புலமாகக் கண்டதாயிற்றெனின் அதனுண்மை உறுதிபெறுதல் உரைக்கவும்வேண்டுமோ?

இன்னும், சாத்தனார்கூறியதாக உரைத்தவாலாற்றினும் இதற்கேற்ற குறிப்புகள் காணப்படுத லறியலாம் "அவனுழையிருந்த தண்டமிழ்ச் சாத்தன்" என்புழி, உரையிற்கோடலால், சாத்தனார் பரிசில் காரணமாகவந்து செங்குட்டுவனிடத் திருந்தாரென்பது பெறப்பட்டது.

"வரிசைக்குவருந்தமிப்பரிசில்வாழ்க்கை
பிறர்க்குத்தீதறிந்தன்றோவின்றே''—

என்பவாகலின் அத்தகைய பரிசில்வாழ்க்கையை மேற்கொண்ட அவரும் தீமையிலாதனவே சொல்லும் வாய்மையுடையவராகலிற் சிறந்தசான்றுதற் குரியவராயினர். 'குன்றக்குறவர்கூறிய இந்நிகழ்ச்சி இறும்பூதுபயப்பதாயினும் அஃதுண்மையேயாதல் யானறிவேன்' என்னுங் கருத்தால் "யானறிகுவனது பட்டது" என்றெடுத்துப் பின் நிகழ்ந்தன யாவும் அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. அன்றியும் "வெள்ளியம்பலத்து நள்ளிருட்கிடந்தேன்" "கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" எனவருவனவும் இதனையே வலியுறுத்துகின்றன. ஆதலின் இவ்வாலாறுகளால் ஆசிரியர் தாம் நூலுட் கூறலுற்ற தொழினிகழ்ச்சி

களின் உண்மையறிவித்தற்குரிய சான்றின்வலிமை கூறினாராகவே கொள்ளத்தக்கது. இனி, இக்காப்பியத்தின் கதைச்சுருக்கமுணர்த்துவா னெண்ணிய ஆசிரிர்கருத்தும் இவ்வரலாறுகளுரைப்பவே நிறை வேறியதாயிற்று. குன்றக்குறவர் கதையின் ஒருபாகத்தைத் தாமறிந்த வாறு கூற எஞ்சியபகுதியைச் சாத்தனர் சாற்றிமுடித்தார். ஆகவே இரண்டனையுங் கூட்டியுணர்வார்க்குக் கதைச்சுருக்கமுழுமையும் உரைக் கப்பட்டதாகுமென்பது வெளிப்படை.

இது நிற்க: நூற்கும் நூல்செய்தோனுக்குங் கிழமைகூறுதலும் பாயிரத்தின் ஒருறுப்பாகுமென்பர். அவ்வியையும் இவ்வரலாற்றி னுள்ளே அறியக்கிடக்கின்றது. குன்றக்குறவரெல்லாருந் திரண்டு சென்று, 'எமதூர் மலைப்பக்கத்துப் பொன்போலும் பூவினையுடைய வேங்கைமரத்தின் நிழற்கண்ணே ஒருமுலையிழந்துவந்தாள் ஒரு மாபத் தினி; அவள்பொருட்டு இந்திரன்றமர் ஈண்டிவந்து அவள் கொழுநனைக் காட்டி அவளோடும் அவர் எம் கட்புலங்காண விட்புலம்போயவது ஓரதி சயமாயிருந்தது; அதனை நீ யறிந்தருளுவாயாக; என்று இளங்கோவடி கட்குக் கூறின வரலாறுரைக்கவே, அதுகேட்டு வியந்த அடிகள் அப் பத்தினிக்கடவுள்பொருட்டால் இச்செய்யுளையியற்றிச் சிறப்புச்செய் தற் குரிமையுடையராயினரென்பது தெளிவாயிற்று. கண்ணகிதேவி தன் கடவுட்டன்மையைக் குன்றக்குறவரறியத் தமது மலைநாட்டகத்தே நிலையிட்டுச்சென்றாளாகலிற் சேரன் செங்குட்டுவனும் அவ்வியைபுபற்றி யே அத்தெய்வத்திற்குக் கோயிலெடுப்பித்தனனென்ப தறியப்படுகிறது. அவ்வாறு தம் முன்னோன் அவட்குக் கோயிலியற்றினாற்போலவே, அச் சேரற்கிளவலாகிய அடிகளும் "சந்திபொருத்திக் கதஞ்சிர் கெடா தடுக் கிப்—புந்திமகிழப்புதவணித்தாய்"ப் பத்தினிதேவியின்சாந்நித்தியம் பெற இச்செய்யுளைச்செய்து தமது கடமையையும் நிறைவேற்றுவா ராயினர்.

இங்ஙனம் அவர் இதனை இயற்றுதற் கியைபுடையராதல் பிறிதோ ராற்றானும் இத் தொடர்நிலைச்செய்யு ளிறுதிக்கட் கூறப்பெற்றுள்ளது.

"வேள்விச்சாலையில்வேந்தன்போந்தபின்
யானுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
தேவந்திகைமேற்றிகழ்ந்துதோன்றி

வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை
நுந்தைதாணிழலிருந்தோய்நின்னை
யரசுவீற்றிருக்குந்திருப்பொறியுண்டென்
றுரைசெய்தவன்மேலுருத்துநோக்கிக்
கொங்கவிழ்நறுந்தார்க்கொடித்தேர்த்தானைச்
செங்குட்டுவன்றன்செல்லல்நீங்கப்
பகல்செல்வாயிற்படியோர்தம்முன்
னகலிடப்பாரமகலநீங்கிச்
சிந்தைசெல்லாச்சேணெடுந்தூரத்
தந்தமிலின்பத்தரசாள்வேந்தென்
றென்றிறமுரைத்தவிமையோரிளங்கொடி
தன்றிறமுரைத்ததகைசால்நன்மொழி"

எனவருமடிகளின்பொருளீண்டு நோக்கற்பாலது. இதன்கண் "என்றிறமுரைத்த இமையோரிளங்கொடி—தன்றிறமுரைத்த தகைசால்நன்மொழி" என்றது இச்சிலப்பதிகாரத்தைச் சுட்டிக்கூறியதாகும். ஆகவே, இதனால், பத்தினிக்கடவுட்கு நடுகற்செய்துழி ஆசிரியர்தாமும் உடனிருந்தாரென்பதும், அஞ்ஞான்று தெய்வந்தோன்றி அடிகளின் றிறத்தை யறியக் கூறிற்றாகலின் அவரு மதற்கீடாக இக்காப்பியத்தை இயற்றியருளினாரென்பதும் இனிது பெறப்பட்டன. படவே இவ்வாசிரியர்க்கிப்பனுவலின்கண்ணுள்ள கிழமை இத்தன்மைத்தென்பதும் நன்று தெளியலாகும்.

அஃதாயிற் பதிகத்துக்கண்ணே அக்கிழமையை முழுதுமுணர்த்தாது பிறிதோரிடத்துக் கூற லென்னையெனின், பாயிரத்து ளுரைக்கற்பாலனவாய பகுதிகளை நூன்முகத்தேயன்றி நூலினிறுதிக்கட் கூறுதலுங் குற்றமாகமாட்டாது; அன்றியும், பதிகத்தின் தோற்றுவாயிலே சுருங்கவுரைத்ததனையே ஆசிரியர் ஆண்டுவிளக்கினாராகலானும் அஃதேற்புடையதேயாகுமென்பது.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,
இராமேசுவரம் தேவஸ்தான வித்தியாசாலை; மதுரை.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உக-ஆம் தொகுதியின் ௫அ௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

153. "பெண் இவண் உற்ற(து) என்னும் பெருமையால், அருமை யான
வண்ணமும் இலைக ளாலே காட்டாலால், வாட்டம் தீர்ந்தேன்;
தண் நறும் கமலங் காள்! என் தளிர் நிறம் உண்ட கண்ணின்
உள் நிறம் காட்டி, நீர் என் உயிர் தர உலோவி னீரே!".

இ-ள். தாமரைகளே! 'இங்கு வந்தது பெண்' என்றெண்ணுகின்ற (எனவே, இரக்கங்கொள்கின்ற) பெருந்தன்மையினால், (எனது காதலரது) அருமையான (பச்சை) நிறத்தை (உங்களுடைய) இலைகளினாலே (காட்டுகின்றீர்கள்; அவ்வாறு) காட்டுதலால் (யான் அவரைக் காணாத) சோர்வு நீங்கினேன்: (எனது செம்மாந்) தளிர் (போலும்) நிறத்தைக் கவர்ந்துகொண்ட (அவருடைய) கண்களில் உள்ள (சிவப்பு) நிறத்தை (உங்களுடைய பூக்களால்) நீங்கள் காட்டி (ச் சிறிது அருள் செய்தீர்கள்; முழுதும் அருள் செய்து) என் உயி(ராவா)ரைத் தருதற்கு உலோபஞ் செய்தீர்கள் (யாது காரணமோ?).

இவண் - இவ்விடம். என்னும் - என்றெண்ணும். "அன்றறிவாமென்னாதறஞ்செய்க" என்ற குறளில் 'என்னாது' என்பது 'என்று கருதாது' எனப் பொருள்படல் காண்க. பெருமை - பெரியாரது தன்மை (குறள் ௬௮-ம் அதி. பெருமை). வண்ணமும் என்பதில் உம்மை இசைநிறை. தண் நறும் கமலங்காள் - குளிர்ச்சியாகிய வாசனையுள்ள தாமரைகளே! உண்ட, கவர்ந்துகொண்ட என்றபொருளைக் குறிப்பால் உணர்த்தியது. கண்ணினுண்ணிறம்-கண்ணின் உள் நிறம்—கண்ணில் உள்ள நிறம்; கண்ணுக்குள்ளே உள்ள நிறமெனலுமாம். உலோவுதல் - உலோபஞ்செய்தல்.

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்ற சமயத்திலே தம்மை நோக்கிய இராமபிரானது கண்ணழகிலே ஈடுபட்டுக் காதல்கொண்ட சீதாபிராட்டி, அக் காதலால் தமது தேகம் தன்னிற

மான செம்பொன்னிறம் மாறிப் பைம்பொன்னிறமான பசலை போர்த்ததனால், 'தளிர் நிறம் உண்ட கண்' என்றார். இராமர் தேகநிறத்துக்கு உவமானமான இலைகளைக்கூறிக் கண்ணிறத்துக்கு உவமானமான பூக்களைக் கூறாது உய்த்துணரவைத்தார்.

காணாமற்போன ஒருபொருளின் சில பாகங்களைக் காட்டியவர்பால் அப் பொருள் முழுதும் இருக்குமென்று கருதி, அதனை இழந்தவர், காட்டியவரை நோக்கி, "அதன் சில பாகங்களைக் காட்டினீர்; ஆதலால் அது உம்மிடம் இருக்கின்றது கொடுப்பீராக" என்று வேண்டுதலும், கொடாவிடில், "கொடாமல் உலோபஞ்செய்தீரே" என்று குறைகூறலும் இயல்பன்றோ? அவ்வாறே, சீதாபிராட்டி "தாமரைகளே! என் உயி(ராவா)ரின் மெய்ந்நிறமும் கண்ணிறமும் காட்டினீர். ஆதலால், அவ் உயிர் உம்மிடத்துள்ளது. அதனைக் கொடுத்தல்வேண்டுமென் றிரக்கின்றேன். கொடுக்கின்றிலீர். இவ்வாறு உலோபம் செய்யலாமோ?" என்று நொந்து குறைகூறிப் புலம்பினாரென்ற விரிந்த கருத்தை எவ்வளவு சுருங்கிய சொற்களால் எவ்வளவு ஆழம்பட அழகாகக் கவி கூறியிருக்கிறாரென்பதை நோக்குக. மேற்கூறியவாறு பொருள்கூறுதலால், 'கண்ணின் உண்ணிறம் காட்டி னீரென் உயிர்தர உலோவினீரே' என்பதில், கண்ணிறங் காட்டல் வல்லார் உயிர்தரல்வல்லராதல் எங்ஙனம்? இரண்டுக்கும் பொருத்தம் என்னை? என்று இயல்பாக எழும் சந்தேகம் நிவிர்த்தியாதலும் காண்க.

154. "நாண் உலாவு மேருவோடு நாண் உலாவு பாணியும்,
தூண் உலாவு தோளும் வாளி ஊ(டு)உலாவு தூணியும்,
வாள் நிலாவின் நூல் உலாவு மாலை மார்பும், மீளவும்
காணலாகு மாகின், ஆவி காணலாகு மே கொல் ஆம்!"

இ-ள். (வில்) நாண்பூண்ட மேரு (ஒன்றுண்டாயின் அதனை ஒத்த பெரிய வலிய தநு) வையும் (வில்) நாணையும் (முறையே பிடித்தல் தெறித்தல் செய்து) பொருந்திய (இட வலக்) கைகளையும், தூண்கள் போன்ற (திரண்ட) தோள்களையும், அம்புகள் உள்ளேநிறைந்த அம்பறாத்தூணியையும், ஒளியுடைய நிலா (க்கதிர்ப்புரி) ஒப்ப(முப்புரி)நூல் அசைகின்ற மாலை (அணிந்த) மார்பையும், (நேற்றுக்கண்டதுபோல) திரும்பவும் காணக்கூடுமோனால், (என்) உயிரைக் காணக்கூடும்!

முதலாம் உலாவு பூண்டவென்றும் இரண்டாம்உலாவு பொருந்திய வென்றும் மூன்றும் உலாவு போன்றவென்றும் நான்காம் உலாவு நிறைந்தவென்றும் ஐந்தாம் உலாவு அசைநின்றவென்றும் தாம் நிற்கும் இடங்களுக்கியையப் பொருள்படல் கவனிக்கத்தக்கது. பாணி-கை. தூணி-அம்புக்கூடு. வாள்-ஒளி. ஏ, கொல், ஆம் மூன்றும் அசைகள்.

'நாண் (-வில்நாண்) உலாவுமேரு' என்றதனால் மேரு உருவகமாய் வில்லைக் குறித்தது.

155\. "விண் தலம் கலந்(து) இலங்கு திங்களோடும், மீது சூழ்
வண்(டு) அலம்(பு) அலங்கல் தங்கு பங்கியோடும், வார் சிலைச்;
கொண்டல் ஒன்(று) இரண்டு கண்ணின் மொண்டு கொண்(டு) என் ஆவியை
உண்ட(து) உண்(டு!) என் நெஞ்சின் இன்றும் உண்(டு) அ(து!) என்றும்
[உண்(டு) அரோ!"

இ - ள். ஆகாயத்திலே பிரகாசிக்கின்ற சந்திரனோடும் (தேன் உண்ண) மேலே சுற்றும் வண்டுகள் இரைகின்ற மாலைதரித்த குடுமியோடும் நீண்டவில்லையுடைய மேகம் ஒன்று (வந்து) இரண்டு கண்களால் என் உயிரை மொண்டுகொண்டு உண்டதுண்டு: அது, என் நெஞ்சினுள்ளே இப்போதும் இருக்கின்றது; இனி எக்காலமும் (நிலைபாய்) இருக்கும்.

விண் தலம் கலந்து - ஆகாயமாகிய இடத்தைச் சேர்ந்து. மீதுசூழ்- (தேன் உண்ண) மேலே சுற்றுகின்ற. அலம்புதல் - ஒலித்தல். அலங்கல் - பூமாலை. பங்கி - குடுமி. வார்சிலை - நீண்டவில். கொண்டல் - மேகம். கொண்டல் ஒன்று - ஒருமேகம். ஆவி - உயிர். உண்டது உண்டு - உண்டது மெய். 'நீ சொன்னதுண்டா?' என்ற உலகவழக்கில், 'உண்டா?' என்பது 'உண்மையா?' என்று பொருள்படல் காண்க. இன்று - இப்போது. (சங்க அகராதி).

திங்கள் முகத்தையும் கொண்டல் இராமரையும் குறித்தன. குடுமி, முகத்துக்குமேலிருத்தலால், 'மீது' என்பதை, அலங்கல்மீது என்று சேர்க்காமல், திங்கள்மீது என்று சேர்த்தும் பொருள்கூறலாம். மேலே குடுமியும் அதன்கீழ்த் திங்களாகியமுகமும் அதன்கீழ் வில்லும் (கன்னிமாடத்தின்மேல்மாளிகையிலிருந்து இராமரைப்பார்த்த சீதாதேவிக்குத்)

தோன்றிய முறை கூறப்பட்டதாகக் கொள்ளலாம். 'ஆவி', 'ஏராவி' யென்பவை தடாகத்தைக் குறிக்கும்: ஆதலால், கடலைமொண்டுகொண்டு உண்டு களிக்கும் மேகம் (கடலென்றெண்ணிக் கடல்போன்ற) தடாகத்தை மொண்டு கொண்டு உண்டது என்ற ஒரு தொனிப்பொருள் தோன்றுதல் காண்க.

156. "பஞ்(சு) அரங்கு தீயின் ஆவி பற்ற, நீடு கொற்ற வில்
வெஞ் சரங்கள் நெஞ்(சு) அரங்க, வெய்ய காமன் எய்யவே,
சஞ்சலம் கலந்த போது, தையலாரை, உய்ப வந்(து),
'அஞ்சல் அஞ்சல்' என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே?"

இ-ள். கொடிய மன்மதன், (தனது) நீண்ட வெற்றி பொருந்திய வில்லினால், உட்டினமான அம்புகளை, பஞ்சை (எரித்து) அழிக்கும் தீப்போல, உயிரைப்பற்றும்படி, (அவ் உயிர் தங்கிய) நெஞ்சுள் அழுந்த எய்ய, (அதனால்) மாதர்கள் துன்பம் உற்றசமயத்தில், (அவர்கள்) தப்பிப் பிழைக்கும்படி, (அவர்களுக்கு உதவியாகவந்து அம் மன்மதனை ஓட்டிப்) 'பயப்படாதீர்கள்! பயப்படாதீர்கள்!' என்று (அபயவார்த்தை) கூறாத ஆண்மை என்ன ஆண்மை' (பயனற்ற ஆண்மையே யென்றபடி.)

அரங்குதல் - அழிதல்; அழித்தல் என்னும் பொருளுடைய அரக்குதல் என்ற பிறவினைப் பொருள் பயக்கும்படி பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. நட்புக்கோட்படலம் எறு-ம் பாட்டில் 'விலங்கும்' என்பது 'விலக்கும்' என்ற பொருள்படவருதல் காண்க. தீயின் - தீயைப்போல. அரக்கல், அமுக்கல் (சிந்தாமணி) அழுத்தல் என்ற பொருளுடையதாதலால், அதன் தன்வினையாகிய அரங்கல் அழுந்தல் எனப் பொருள்படுவதாகக் கொண்டு 'நெஞ்சு அரங்க' என்பதற்கு நெஞ்சுள் அழுந்த என்று உரை செய்யப்பட்டது.

இப்பாட்டில் ஒவ்வோரடியும் சிறந்த இன்னோசையுடைமை கவனிக்கத் தக்கது. சீதாதேவி தையலார் என்ற ஜாதிப்பன்மையால் தம்மைக்குறித்தாரென்பது தெளிவாம். தம்மைப் பாதுகாவலராகக் கொண்ட மாதர்கள், பகைவனாகிய மன்மதனால் தாக்கப்பட்டபோது, அவருக்கு உதவியாகவந்து காவாத ஆடவர் ஆண்மை ஆண்மையாமோ?

என்று கூறி, இராமர்வீரத்துக்குக் குறைகூறுவோர்போன்று, அவர், தம்பால், உடனே வாராமையாகிய ஆராமையைச் சீதாதேவி வெளியிட்டார். ஆராமை - (குறை) நிரப்பாமை.

157. "எங்கு நின்(று) எழுந்த(து)இந்த இந்து?வந்(து)என் நெஞ்(சு)உலா
அங்(கு) இயன்(று) அனங்கன் எய்த அம்பின் வந்த சிந்தை நோய்
பொங்குகின்ற கொங்கை மேல் விடம் பொழிந்த(து) என்னினும்,
கங்குல் வந்த திங்கள் அன்(று,) அகம் களங்கம் இல்லையே."

இ - ள். (இதுவரையில்லாத அதிசயமாக, இன்று பகலில் தோன்றும்) இந்தச் சந்திரன் எங்கே (இதுவரையும் இருந்து (இப்போது இங்கே, உதித்தது! மன்மதன், என் நெஞ்சிலே பவனி வந்து, அங்கே உலாவி, எய்த அம்பினால் உண்டாகிய மனவேதனை (வெப்பம்) கொதித்துக் கிளர்தலையுற்ற கொங்கைகளின்மேல் (அக் கொதிப்புப் போதாதென்று இந்தச் சந்திரன் தன் சூடான நிலவாகிய) விடத்தைச் சொரிந்தது ; ஆயினும், (இந்தச் சந்திரன்) களங்கமில்லாதிருத்தலால், (நேற்று, இரவில் வந்த சந்திர னன்று.

இந்து—சந்திரன்; விரகநோயால் மனம் பேதுற்றிருந்த சீதாதேவி சந்திரனென்று மயங்கிய சூரியனைக் குறித்தது. 'அனங்கன் என் நெஞ்சு உலாவந்து அங்கு இயன்று' எனக் கூட்டி மன்மதன் என் மனத்தில் ஊர்கோலமாக வந்து அங்கே உலாவி யெனப் பொருள் கொள்க. இயலல்—உலாவல் (பத்துப்பாட்டு). பொங்குதல்—கொதித்துக் கிளர்தல். விடம், சீதாதேவி நிலவென்று மயங்கிய வெயிலைக் குறித்தது. கங்குல்-இரவு. திங்கள்-சந்திரன். அகம்—இடம்—(தன்)இடத்தில். இல்லை யென்பதன்பின் ஆல் உருபு தொக்கது.

"தாமரைப் பொய்கையிற் பளிங்குமாடத்துச் சந்திரகாந்த மூழ்ந்த சீதநீர்தெளித்த புஷ்பசயநத்திற் றுன் கிடத்தலானும், சேடியர் செய்யும் சைத்யோபசாரத்தானும் வெங்கதிர் தண்கதிராய்த் தோன்றலா லிவ்வாறு கூறினர்." ஸ்ரீ இராமசாமி நாயுடு. விரகிகளுக்குச் சைத்தியோபசாரங்களும் திங்கள் தென்றல் முதலிய தண்ணிய இனிய பொருள்களும் வெப்பத்தை அதிகப்படுத்துவனவன்றிக் குறைப்பன வல்லவாம். ஆதலால் இப்பொருள் பொருத்தமாகத் தோன்றவில்லை.

பகல்வர, சூரியனும் வெயிலும் இயல்பாக வெப்பத்தைச் செய்ய, ஸீதாதேவி விரகவேதனையினால் மனக்கலக்கமுற்றுப் பகுத்தறிவு குன்றியிருந்ததனால், அவருக்கு அவைகள் அவரை முந்திய இரவில் இயல்புக்கு மாறாக வெதுப்பிய சந்திரனும் நிலவும்போலத் தோன்ற, சூரியனை "எங்கு நின்று எழுந்தது இந்த இந்து?" என்றும், அவர் கொங்கைகளின்மேற் சூரியன் வெயிலெறித்ததை அப் புதியசந்திரன் (நிலவாகிய வெள்ளை) "விடம் பொழிந்தது" என்றும் கூறிப் பின்பு அதனிடத்துக் களங்கமில்லாமையைக்கண்டு, அது " கங்குல் வந்த திங்களன்று " என்றாரென்பது கருத்தென்று கொள்ளலாம்போலும்.

158. "அடர்ந்து வந்(து) அனங்கன் நெஞ்(சு) அழன்று சிந்தும் அம்(பு)எனும்
விடம் குடைந்த மெய்யினின்று வெந்திடா(து) எழுந்து, வெம்
கடம் துதைந்த காரியானை அன்ன காளை கால் அடைந்(து)
உடன் தொடர்ந்து போன ஆவி வந்தவா என் உள்ளமே."

இ-ள். மன்மதன் மனம் கொதித்து (க் கோபித்து என்னை) நெருங்கிவந்து (என் மேற்) சொரிந்த அம்பாகிய விஷ(நெருப்பு வெள்ள)த்தில் முழுகிய (என்) தேகத்தினின்றும் (அதன் உள்ளே தங்கியிருந்தால் அதனோடு தானும் வெந்துவிடவேண்டிவருமென்று பயந்து) வெந்துவிடாமல் (தப்பிக்கொள்ளும்படி) எழுந்து, அவருடைய காலில் (வீழ்ந்து) சரணடைந்து (அவரைத்) தொடர்ந்து (அவருடன்) போன உயிர் (திரும்பி) வந்த காரணம் யாது? நெஞ்சே! (கூறுவாயாக)

அடர்ந்து-நெருங்கி. அழன்று-கொதித்து-கோபித்து. சிந்தல்-சொரிதல். குடைதல்—நீராடுதல்—முழுகல். வெம்மை—விருப்பு. வெம் கடம்—(வண்டுகளுக்கு) விருப்பமான (யானை)மதம். துதைதல்—செறிதல்—மிகுதல். கார் யானை, காரியானை யெனப் புணர்ச்சியிலக்கணப்படி புணர்ந்தது. காளை—1. காளைப் பருவமுடையவன்—இளைஞன்; 2. காளைபோலும் (பெருமித) நடையுடையவன். அடைதல் (சரண்) அடைதல். வந்தவா—வந்தவாறு · வந்த ஆறு—வந்தவிதம்—வந்ததற்குக்காரணம்.

விரகதாபமிகுதியால் சகிக்கமுடியாத துன்பமடைந்து, இனிப் பிழையேம் செத்தேவிடுவேமென் றெண்ணி, அறிவிழந்து, அதனால் துன்பத்தை உணராதிருந்த சீதாதேவி, திரும்ப அறிவுதோன்ற, அத

ஞோடு துன்பமும் தோன்றியபோது, உயிரின்றேல் உணர்வின்றென்றும் துன்ப உணர்ச்சி தோன்றியதனால் உடல்விட்டு நீங்கி யொழிந்ததாக எண்ணிய உயிர் திரும்பிவந்ததென்றும் கருதி, அது திரும்பியதற்குக் காரணம் யாது? இன்னும் துன்பம் உழக்கவோ? என்று தம் நெஞ்சை நோக்கிக் கூறியதனால், அவர் செத்தோமென் றெண்ணியபடி செத்தொழியாமல் உயிருடனிருப்பதை வெறுத்தாரென்பது கருத்து.

159. "விண்ணுளே எழுந்த மேகம், மார்பின் நூலின் மின்னொ(டு)இம்
மண்ணுளே இழிந்த(து) என்ன, வந்து போன மைந்தனார்
எண்ணுளே இருந்த போதும் யாவர் என்று தேர்கிலேன்:
கண்ணுளே இருந்த போதும் என் கொல் காண்கி லாதவே!"

இ - ள். விண்ணிலே தோன்றும் மேகம் (மானுடவடிவம் கொண்டு) மின்னற்பூணூலோடு மண்ணிலே இறங்கியதென்று சொல்லும்படி (கன்னிமாடத்தின்முன்னே யான் கண்டு களிக்கும்படி) வந்துபோன (மகா) புருடர் என் மனத்தினுள்ளே இருந்தாலும் (அவரை) யாரென்றறியேன்: (அவர்) என் கண்ணுள்ளேயிருந்தாலும் (அவரை யான் காண்கின்றிலேன். அவ்வாறு) காணாமைக்குக் காரணம் யாதோ?

எழுதல்—தோன்றுதல். 'நூலின மின்னொடு' என்பதை மின்னின் நூலொடு என மாற்றுக. இன்சாரியை. மின்னின் நூல்—மின்னாகிய நூல். மிதிலைக்காட்சிப்படலம் ௭0·ம் பாட்டில் 'பாம்பின் மணித்தாம்பு' என்பது பாம்பாகிய மணித்தாம்பு எனப் பொருள்பட வந்தது காண்க. இழிந்தது—இறங்கியது. மைந்தன், புத்திரன் என்ற பொருளைக்குறியாது புருடன் என்ற பொருளைப் புலப்படுத்தியது, உரிச்சொல்நிகண்டு சுக-ம் பாட்டில் 'மைந்தர்க்கு மாதர்க்கு' எனவரும் சொற்றொடரில் மைந்தர் ஆண்மக்களை யுணர்த்துதல் காண்க. எண்—மனம். இருந்த போதும்—இருந்தாலும்: குறள் ௪கூ௬-ல். 'ஒலித்தக்கால்' என்பது

ஒலித்தபோது, ஒலித்தால் எனப் பொருள்படல் காண்க. உலகவழக்கில் 'வந்தாலும்' என்பது 'வந்தபோதிலும்' என வரல் காண்க. தேர்தல்—அறிதல் (சங்க அகராதி). காண்கிலாதது, 'காண்கிலாத' எனத் துவ்விகுதி கெட்டுநின்றது. குலமுறைகிளத்துபடலம் ௧௬-ம் பாட்டில் "பூதகணைத் தரசேந்தி அனல்நின்றும் புறப்பட்ட." என்ற ஈற்றடியில் புறப்பட்டது எனற்பாலது 'புறப்பட்ட' என வந்தது காண்க. காண்கிலாதது—காண்கிலாததன்மை—காணாமைக்குக் காரணம்.

எட்டாத தூரத்துள்ள காணற்கரியபொருள், கிட்ட வந்து காட்சியளித்தது என்ற கருத்து விளங்க 'விண்ணுளே எழுந்தமேகம் மண்ணுளே இழிந்தது' என்றார்.

கருமேகத்தைக் கரிய இராமருக்கு ஒப்பாகக்கூறியதற்குப் பொருத்தமாக, அதன் வெள்ளிய ஒள்ளிய (கொடி) மின்னலை வெள்ளொளிப் பூணூலுக்கு உவமித்த நயம் உள்ளி உவத்தற் குரியது. (உள்ளி—நினைந்து). இவ் இனியகருத்தைச் "சூனிறக் கொண்மூக் கிழித்திடை துடிக்கும் மின்னென மார்பினூல் துளங்க" (நிந்தனைப் படலம் ரு) என்று பின்பும் இனிது கூறுவர். தூரமான இடத்துள்ள பொருள்களையும் காணும் கண் தன்னுள்ளேயே உள்ளவரைக் காணாமையும், இடத்தாலன்றிக் காலத்தாலும் தூரமான பொருள்களை விவரத்துடன் அறியவல்ல மனம் தன்னிடத்திலேயே தங்கியவரை இன்னாரென்று விவரம் தெரிந்துகொள்ளாமையும் ஆச்சரியம் என்பது பின்னிரண்டடிக் கருத்து.

(தொடரும்.)

வெ. ப சுப்பிரமணியமுதலியார்.

௨

மணிமேகலை.

சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது மணிமேகலை தகுந்த பருவமடைந்தது கண்ட நற்றாய் யாதுசெய்வதென மாதவியிடம் கேட்க, அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடுகளைந்து அறவுபூணச்செய்தாள் என்பதே. கண்ணகி பிரதிஷ்டைக்காலத்து அது காணவந்த தேவந்தி இச்செய்தியைச் சேரனிடம் சொல்லினளாகையால் அதன் முன்னாலேயே மணிமேகலை துறவெய்தியவளாவள். இதனால் மணிமேகலை முண்டிதக்கோலத்தோடிருந்தாளெனவறியலாம். பருவமடையுமுன் சித்திராபதியுடனிருந்த மணிமேகலை அதன்பின் மாதவியுடனிருந்தாள். இதற்கு முழுதும் மாறுபட்டசெய்தியே மணிமேகலையிற் காணப்படுவது. அதில் மாதவியுடனேயே மணிமேகலையிருந்ததாகத் தெரியவருகிறது. அவளைத் தன் வீட்டிற்குக்கொண்டுவந்து பொருள்தேடச் சித்திராபதி பலமுறை முயல்கிறாள். இவ்வாறு முயலும் சித்திராபதியுடன் மணிமேகலையிருந்து பருவமடைந்திருந்தால் அவளை மாதவியிடம் அவள் அனுப்பியிருக்கவேமாட்டாள். சிலப்பதிகாரமோ இத்தகைய குணமுடைய சித்திராபதியைப்பற்றிக் கூறவில்லை. அதில் மணிமேகலையைக் 'கணிகையர் கோலங் காணாதொழிக'வென்று மாதவி கூறியபடி அவள் பருவமடைந்தவுடன் அவளை யாதுசெய்வதெனச் சித்திராபதி மாதவியிடம் வினவுகிறாள். உடனே மணிமேகலையின் கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம்புரிந் தறம்படுத்துகிறாள் மாதவி. இதனால் சித்திராபதி மாதவியின் தாய்போல் நடந்தமை புலனாகிறது.

மணிமேகலையிலோ சித்திராபதிகுணமும் மாதவிகுணமும் முழுதும் மாறுபடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றது. அவ்விழாக்காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆடுதற்பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம்புழுங்கிய சித்திராபதி வயந்தமாலையை யழைத்து நீ மாதவிபாற்சென்று விழா

விற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார்கூறும் பழிமொழியை அவளுக்குச் சொல்லிவா என்றனுப்பினள். ஊரார் பழிமொழியை யாதெனக் கவனிப்போம்.

வயந்தமாலை மாதவியிடம்சென்று,

"உன்னொடிவ்வூருற்றதொன்றுண்டுகொல்
வேத்தியல்பொதுவியலென்றிருதிறத்துக்
கூத்தும்பாட்டுந்தூக்குந்துணிவும்"
"நாடகமகளிர்க்குநன்கனம்வகுத்த
ஓவியச்செந்நூலுரைநூற்கிடக்கையுங்
கற்றுத்துறைபோகியபொற்றொடிநங்கை
நற்றவம்புரிந்ததுநாணுடைத்தென்றே
அலகின்மூதூரான்றவரல்லது
பலர்தொகுபுரைக்கும்பண்பில்வாய்மொழி
நயப்பாடில்லைநாணுடைத்தெ"ன்றாள்.

(மணி II 17-19. 30-36.)

இதனால் நாடகக்கணிகையர்க்குரிய நடனமெல்லாம் கற்றுத்துறைபோகிய மாதவி அரங்கேறி நடித்து நம்மை மகிழ்வியாமல் இவ்வாறு தன் குலத்திற் கிழுக்காம் தவம்பூண்டாளென் றறியவிருப்பதால் மாதவி நடனத்திற்கு வாராமைபற்றியதே பயங்கெழுமாநக ரலரென வறியலாம். உன்னொடு இவ்வூருற்றதொன்றுண்டுகொல் என்றதனாலே மாதவிமட்டுமே தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப்படுகின்றாள். மணிமேகலை தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப்படவில்லை. ஏனெனில் ஏச்சுரை அவளைப்பற்றியில்லை. ஆனால் தவவொழுக்கம்பூணுவதற்காக அவள் தவவொழுக்கம்பூண்ட தன் தாயுடனேயே வசிக்கிறாள்.

மணிமேகலை அப்பொழுதுதான் பருவமடைந்ததாகத் தெரியவருகிறது. ஏனென்றால், சித்திராபதி அவளைத் தன்வசப்படுத்திப் பொருள் தேட வெண்ணுகிறாள். அதனுடன் துறவுபூண்ட தன்மகள் மாதவியையும் கூடத் தன்வழிப்படுத்த முயல்கிறாள். பதினெட்டாவது பாட்டில் மணிமேகலை அம்பலமடைந்தமைகேட்ட சித்திராபதி,

"மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூ
ரிகுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது", (8-10)

என்றதனால் மாதவிமட்டுமே தவவேடம்பூண்டிருந்தமை வலியுறுகிறது. மேலும், சித்திராபதி,

"மாதவி யீன்ற மணிமேகலை வல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதைய குமரனு முலகாள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக்—கைக்கொண்டு"
(25—29).

என்றதனாலே அவள் எவ்வாறாவது பொருள்தேட வாசையுடையவளாயிருந்தாளென்பது தெளிவாகும். அவள் மணிமேகலையை யெப்படியாவது உதயகுமரன், தேரிலேற்றிவருவேனென்று சபதம்செய்து அவனிடஞ்சென்று,

"நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டுணீஇய
—விரைவொடு வந்தேன்" (58—61).

என்று கூறியதால் மணிமேகலை அப்பொழுதுதான் பக்குவமடைந்தவளென்றும், அதனால் அவளின்பநுகர உதயகுமரனைத் தூண்டினளென்றும் அறியலாம். சித்திராபதி மணிமேகலையை நடிக்கச்செய்து ஆடவர்களை இழுத்து அவளின்பநுகர்வித்துப் பொருள்தேடவே அவளை அவள் தாயுடன் அழைத்தாளென்பது, அவளே உதயகுமரனிடம்,

"ஆடவர் காண நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்
பண்டேர் மொழியில் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை"—103-109).

என உரைத்தலால் விளங்கும். இதனால் மணிமேகலையும் மாதவியும் ஆடவாததனாலேயே வருந்தி வயந்தமாலையைத் தூதுபோக்கினவளாவளென்றும், மாதவி ஆடவாமைகருதியே ஊரார் ஏசினரென்றும் நன்கு தெளியலாம். ஆகையால் இவ்வேச்சுரை கோவலனிறந்த மறு சித்திரையிலாக இருக்கவேண்டும்.

சித்திராபதியோ உதயகுமாரனிடம் மணிமேகலையைச் சேர்க்க மிக முயன்றாள். உதயகுமாரன் தன்னிடம் ஆசைகொண்டிருந்தமை மணிமேகலையு மறிவாள். இது சுதமதியுடன் பூஞ்சோலைசென்றவிடத்து உதயகுமாரன் வருகிறானென்றறிந்த அவள்,

"சித்திரா பதியோ டுதய குமரனுற்
றென்மேல் வைத்த உள்ளத் தானென
வயங்க மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலின்" (மணி. IV. 79-82.)

எனக் கூறுவதா லறியப்படும். அப்பொழுது அவளைப் பெறமுடியாது அவன் சித்திராபதியால் அவளை யடைவேனென்று போகிறான். இவ்வாறு முன்னும் முயன்ற உதயகுமாரனையே சித்திராபதி பின்னரும் தூண்டி அவளைத் தன்தேரி லேற்றிவரச் சொல்லுகிறாள். அவன் அவள் சூழ்ச்சியாற் சென்று மடிகிறான். சித்திராபதி தன்சூழ்ச்சியிற்போயவன் மடிந்தமையும் அதனால் மணிமேகலை சிறைப்பட்டுப் பின் இராசமாதேவியிட முள்ளாளென்பதையு முணர்ந்து பொருளாசையால் அவளை மீட்டும் தன்வீட்டிற் கிட்டுவரவெண்ணி இராசமாதேவியிடம் செல்கிறாள். சென்றவள் "நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை என்மனைத் தருக" என வேண்டுகிறாள். அரசன்மனைவியோ தவவொழுக்கத்திற் கருத்துடைய மணிமேகலை உன் எண்ணப்படி உன் வீடு வாரா ளென்கிறாள்.

இங்ஙனமாய மாராய்ந்தவற்றால், சித்திராபதி பணப்பேய் பிடித்தவளென்றும், அதனால் துறவுபூண்ட மாதவியையும் அவளுடன் வசித்திருந்து அப்பொழுதுதான் பருவமடைந்திருந்த மணிமேகலையையும் தன்வழிப்படுத்திப் பொருள்தேட முயன்றாளென்று மறியலாம். இத்தன்மையள் மணிமேகலைகூறும் சித்திராபதி. ஆனால், சிலப்பதிகாரங் கூறும் சித்திராபதியோ இத்தன்மையளல்லள். அவள் தன்னுடன் வசித்திருந்த மணிமேகலை பருவமடைந்தமைகண்டு மாதவர்பள்ளியடைந்து அங்கிருந்த முண்டிதக்கோலத்தளான மாதவியிடம் "உன் மகள் பருவமடைந்தாள்" "தலைக்கோ லாசான் பின்னுளனாகக், குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார், யாது நின்கருத் தென்செய் கோவென" (சிலப். XXX 20-22) உரைக்கிறாள். இதனால் மணிமேகலை

கூறும் சித்திராபதியும் சிலப்பதிகாரங்கூறும் சித்திராபதியும் குணத்தாலும் செயலாலும் மாறுபடுகின்றமை காண்க.

இனி மணிமேகலைசெய்தியை யாராய்வோம். மேற்கூறியவாறு சித்திராபதி சொல்லக்கேட்ட மாதவி, தன் மகளை, .

"வருகவென் மடமகள் மணிமே கலையென்
றுருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"

(சிலப். XXX 24—28)

கண்ணகி பிரதிஷ்டைக்குமுன் இவ்வாறு மணிமேகலை கூறவில்லை.

"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை, அருந்தவப் படுத்த லல்லதி யாவதும், திருந்தாச்செய்கைத் தீத்தொழிற் படாள்" (மணி. II-55-57) என்றும், "அணியமைதோற்றத் தருந்தவப் படுத்திய—தாயோ கொடியள்" (III. 149-150) என்றும், "ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி" V 16) என்றும், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த" VII—13) என்றும் காணப்படுமடிகளால் அவள் சாதாரணமாக அவளம்மையுடனிருந்து பரத்தைமைத் தொழில்விடுத்துத் தவவழிப் பழகினவளாவள் என்பது அறிய இருக்கின்றது. ஏனென்றால் அவள் கச்சிக்குப் போனபிறகே "தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப், பவத்திற மறுகெனப்........நோற்றனள்" (XXX. 263–264)

மேலும் மணிமேகலாதெய்வம் "சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி.... மணிமே கலபா, ஞறிசான் முனிவ னறவழிப்படூஉ, மேதமுதிர்ந்த திளங்கொடிக் காதலின்" என்றும், "ஏதமில் நெறிமக ளெய்திய வண்ணமு, முரையாய் நீயவள் என்றிவ் வூரும்" என்று முரைத்ததை நோக்கின், மணிபல்லவம் போனபொழுதுதான் மணிமேகலை ஆதிசான்முனிவ னறவழிப்படும் ஏதமுதிர்ந்து அவ்வேதமில்நெறியெய்தியவளாவளென் றறியலாம். ஆனால் அவள் சிலப்பதிகாரம் கூறும்வண்ணம் கூந்தல் களைந்து தவவழிப்பட்டிலள். ஏனெனில், பலவிடத்தும் 'மதுமலர்க்குழலியொடு' (III 16) என்றும், 'மதுமலர்க் குழலாள் மணிமே கலைதான்' (V 92) என்றும், 'மைம்மலர்க்குழலி'

யென்றும், (XII 5), "நறுமலர்க் கோதாய்" (XII 56) என்றும், 'தோட் டலர்க் குழலியை' (XX 13) என்றும், 'மதுமலர்க் குழலி' (XXI 4) 'தோட்டலர்க் குழலி' (XXI 10) யென்றும், 'நறைமலர்க் கூந்தல் நங்கை நீயும்' (XXVI. 62) என்றும் மணிமேகலை கூறப் படுதலினாலே வஞ்சிபோய்க் கண்ணகியைத் தரிசித்துக் கச்சிபுகும்வரை குழலுடனேயே இருந்தவளாவள் ஏதோ இவள் சிறப்பித்தழைக்கப் படுகிறாள், உண்மையில் இவளுக்குக் கூந்தல் இல்லையென்றால் அது பிழை. என்னை? மணிமேகலாதெய்வம் அவளை மணிபல்லவத்து விட்டபொழுது விழித்தெழுந்த அவள் தந்தையைநினைத்துக் "குரற் றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ, அரற்றினள் கூவி யழுதன ளேங்கி" (VIII. 36—37) என்றதனால் அவள் மதுமலர்க் குழலியாகவே யிருந் தனள். கச்சியில் அறங்கேட்டிருந்தபொழுதுகூட அவள் கூந்தல்களைந் தமை கேட்கப்படவில்லை. இதனாற் சிலப்பதிகாரங்கூறும் மணிமேகலை வேறு, மணிமேகலைநூல்கூறும் மணிமேகலைவேறு என்றறியலாம். சிலப் பதிகாரம் கண்ணகிபிரதிஷ்டைக்குமுன்னரே மணிமேகலை குழல்களைந்து புகாரிற் றவவழிப்பட்டாளென்கின்றது. மணிமேகலைநூலோ கச்சிபுக் குக் கண்ணகிபிரதிஷ்டைக்கு வெகுநாள் கழித்துத் தவவழிப்பட்டா ளென்னும்.

மணிமேகலையை நடனத்துக்கழைத்தது போலவே மாதவியையும் சித்திராபதி நடனத்துக்கழைந்தாளாகையாலும் ஊரார் மாதவி ஆடவாராமைபற்றி ஏசினராகையாலும், மணிமேகலை துறவுபூண்டும் கூந்தல் களையாதிருந்தமைகாணப்படுதலினாலும் மாதவியும் கூந்தல் களை யாமலே இருந்தவளாவள். மேலும் அவள் கூந்தலிலாதிருந்தமை மணிமேகலையிற் கேட்கப்படவில்லை. இதனால், சிலப்பதிகாரமும் மணி மேகலையும் கொள்கையானும் மாறுபடுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியால் மணிமேகலைநூலிற் காணப்படும் செய்திகள் சிலப்பதிகாரத்திற்கு முற்றும் மாறுபடுகின்றமை தெளிவா கிறது.

மணிமேகலைகூறும் காவிரிப்பூம்பட்டினவிழா முதலிய செய்திகள் கண்ணகிபிரதிஷ்டைக்குச் சிலவாண்டுகளுக்குமுன் அதாவது கோவலன் மாண்ட மறுசித்திரையிலேயே நடந்தனபோலக் காணப்படினும்

அதற்கு மறுசித்திரையிற் புகாரழிந்தபின் கண்ணகியை மணிமேகலை வணங்குகிறாளாகையால் அதற்குள் கண்ணகிபிரதிஷ்டை நடந்து சில வருடங்களாயினபோலவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு சிலப்பதிகாரத்துக்கு முழுதும் மாறுபட்டுள்ளமையால் இளங்கோவடிகளுக்குக் கோவலன் சரிதமுரைத்த சாத்தனாரால் மணிமேகலை யெழுதப்படவில்லை. அவர் மணிமேகலையை இளங்கோவடிகள் கேட்டார் என்பது பிழை. அவர் தமக்குப் பெருமைகருதி அவ்வாறெழுதியவராவர். இளங்கோவடிகள் சாத்தனார் முன்னிலையிற் சிலப்பதிகாரத்தை யரங்கேற்றினாரென்பதையறிந்த மணிமேகலையாசிரியர் இளங்கோவடிகள் முன்னிலையில் மணிமேகலை அரங்கேற்றப்பட்டதெனப் பிழைகூறினார். இளங்கோவடிகள் மணிமேகலைதுறவைப் பாடவெண்ணிச் சாத்தனாரிடம் சொல்ல அவர் முன்னரே அதைப் பாடிமுடித்துவிட்டதாகக் கூறுகிறாரென்று அடியார்க்கு நல்லார் கூறுதற்கு இரண்டு நூலிலும் ஆதாரமில்லை. ஆகையால் ஆசிரியர் திருவள்ளுவர்பெயரா னெழுந்த ஞானவெட்டிபோன்றது சாத்தனார்பெயரானெழுந்த மணிமேகலை. ஞானவெட்டியைத் திருவள்ளுவர்பாடினாரென வழங்குவதுபோலவே மணிமேகலையையும் சாத்தனார்பாடினாரென்றுகூறி அதனுடன் அவர் பாடியமைபற்றி ஒருகதையும் கட்டிவழங்குவாராயினர், அதைக்கேட்டறிந்த அடியார்க்கு நல்லார் அதையெழுதியவராவர்.

சிலப்பதிகாரத்துக்குமுந்தியநூல் மணிமேகலையாயிருப்பின் அதிற்காணப்படும் உதயகுமரன்சாவும் புகாரழிவும் சிலப்பதிகாரத்திற் காணப்படாமை வியப்பே. சோழபாண்டியவிலங்காவரசர் செயல்களையெல்லாம்கூறும் சிலப்பதிகாரம் இவை உண்மையில் அதன்முன் நடந்திருக்குமேல் இவற்றைக் கூறுதிராது. மேலும் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குமுந்தியநூலென்றால் அதில், கண்ணகியை மணிமேகலை வணங்கினாளென்ற செய்தி காணப்படுவதால் அச்செய்தி கண்ணகியை

வணங்கினவரையெல்லாம்கூறும் சிலப்பதிகாரத்திலும் காணப்படல் வேண்டும். அவ்வாறு சிலப்பதிகாரம் கூறவுமில்லை. ஆகையால் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குச் சிலநூற்றாண்டுகளுக்குப் பிந்தியநூலென்பது அங்கையின் நெல்லிக்கனியாகிறது.

சிலப்பதிகாரத்தைப்போலல்லாமல் மணிமேகலையில், பல வடசொற்கள் விரவியுள்ளன, அதன் நடையும் மிக மாறுபட்டுள்ளது. சிலப்பதிகாரக்காலத்து வடமொழி தமிழோடு விரவவில்லை. மணிமேகலையின்காலத்தோ வடமொழி தமிழோடு மிகுதியும் விரவிவிட்டது. சிலப்பதிகார காலத்து மதப்போர் இல்லை, மணிமேகலையின் காலத்தோ மதப்போர் காணப்படுகிறது, அதன் ஆசிரியராகிய சாத்தனாரென்பவரோ மதப்போரில் ஈடுபட்ட பௌத்தராகக் காணப்படுகிறார். அவர் தம் காலத்துப் பௌத்தமதம் குன்றுவதுகண்டு இந்நூன்முகத்தால் அதைத் தாங்கலாமென எண்ணி இதை யெழுதியவராவர்.

இதுகாறு மாராய்ந்தவற்றால், சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனாரால் மணிமேகலை யெழுதப்பெறவில்லையென்பதும் சிலப்பதிகாரத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டநூலே மணிமேகலை யென்பதும் இனிது புலனாகின்றது.

இ மு. சுப்பிரமணியபிள்ளை.

சிவபிரான் அணிந்த கோன்றை வண்டு.

60. சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—[1]வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

சிவபிரான் முடிப்பிறை.

61. இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றோ
அன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
உளராவா றேறு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி.

சிவபிரானணியு மரவு.

62. காமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும்—அரவரைமேல்
நாணு மாற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம்.

சிவபிரான் கூத்து.

63. பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

64. வரிகொ ளரவு மதியுஞ் சுழலக்
கரிகா லேந்தி யாடுமே
கரிகா லேந்தி யாடு மிறைவன்
புரிபுன் சடைமேற் புனலும் பிறழவே.

சிவபிரான் செயல்கள்; (நிரனிறை)

65. கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிறவெறிப்ப விமயப்பெண் வெருவ வேவக்
காற்றொழிலா னயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் காதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய வுதைத்தெரித்து நெரித்துச் சூடி
யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே.

---

(60) தண்டி. 28 உரை; [1]வீழ்ந்தெழுந்த. (61) ஷை. 21. உரை. (62) ஷை. 39 உரை. (63) தொல். செய். 149 பேரா. நச்; யாப். வி. 87; வீரசோ. யாப். 17 உரை. (64) யாப். வி. 76. (65) காளமேகப்புலவர்வாக்கென்பர்.

66. கண்ணவனை யல்லது காணா செவியவன
தெண்ணருஞ்சீ ரல்ல திசைகேளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதால்
அழலங்கை கொண்டான்மாட் டன்பு.

திரிபுரதகனம்.

67. பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

தில்லைச் சிவபிரான்.

68. காலைபு மாலையுங் கைகூப்பிக் கைதொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

69. தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்சகைக்
கோங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்.

70. வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
[1]யார்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து.

71. உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ளவிழி நீரரும்பத் தான்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.

கச்சித் திருவேகம்பம்.

72. பூமகன்யார் போவானை யேவுவா னென்னுரைக்கும்
நாமம் பொருசாந்திற் கென்னென்பார்—தாமழகின்
பேரென் பிறைசூடும் பெம்மா னுவந்துறையும்
சேர்வென் திருவேகம் பம்.

---

(66) பி. வி. 11 உரை; இது, சேரமான்பெருமாணயனர் இயற்றியருளிய திருக்கைலாயஞானவுலாவிற் பயின்றுள்ளமை காண்க. (67) தண்டி. 54 உரை. (68) வீரசோ. அலங். 31 உரை; தண்டி. 80 உரை. (69) தண்டி. 93 உரை. (70) ஷை. 44 உரை; [1]ஆர்த்த. (71) ஷை. 28 உரை. (72) ஷை. 95 உரை;

73. நலத்தகை பெறவிரு சரண மோதுநங்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமேற்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே.

(காளமேகப்புலவர் பாட்டு.)

74. முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

கச்சாலைச் சிவபிரான்.

75. நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
யெம்மா னிமையோர்க் கிறை.

76. சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்
கச்சிக்கச் சாலைக் கனி.

திருநெறிக்காரைக்காட்டுச் சிவபிரான்.

77. வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரக்கும்
விறல்விசய னுகத்தும் வெள்ளம் பரக்கும்
கறைவிரவு நஞ்சுண்டு கண்டங் கறுக்கும்
கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்
பொறிவிரவு பூண்முலையாள் போகத்த னாகும்
பொதுநீக்கித் தனையடைந்தார் போகத்த னாகும்
நெறிவிரவு காஞ்சி நெறிக்காரைக் காட்டான்
நிழலடைந்தார் தம்மை நெறிக்காரைக் காட்டான்.

திருச்சிராப்பள்ளிச் சிவபிரான்.

78. பணிமின்கள் பாதம் பகர்மின்க ளுமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றந் தவிர்மின்கள் பொய்ம்மை தவம்புகுநாள்
கணிமின்க ளேன்ற கிளிகடி மாதர்தங் கையிசைத்த
மணிமின்கள் போலொளிர் வான்றோய் சிராப்பள்ளி வள்ளலுக்கே.

---

(73) தண்டி. 94 உரை. (75) தண்டி. 28 உரை. (76) ஷை 95 உரை. (77) யாப். வி. 77. (78) திருச்சிராப்பள்ளிக் குன்றின் குடைவரையிற் பொறிக்கப்பட்ட சாஸனப்பாடல்களுள் ஒன்று (செந். 4. 400).

இறையனார் பொய்யாமொழிப்புலவர்முன்பு சீராமலையைப் பாடிய வெண்பா.

79. கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பணைக்கை [1]புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

(பொய்யாமொழியார் பாட்டு.)

80. அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

திருநெய்த்தானத்துச் சிவபிரானை ஒட்டக்கூத்தர் பாடியது.

81. விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டா னட்டார் சுட்டேர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சு
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போம்
நெய்த்தா னத்தானைச்சே வித்தே.

ஷை புகழேந்திப்புலவர் பாடியது.

82. தற்கோ விப்பூ சற்பா சத்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ விக்கோ [2]விப்பூ சித்தே
முட்டா [3]மற்சே வித்தே நிற்பீர்
வற்றா நெட்டோ [4]டைப்பா ரச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்றா ளூற்றா லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தானைச்சே வித்தே.

---

(79) தமிழ்நா—4: [1]புகமடுக்கும். (80) ஷை 71. தொண்டை. சத. (81, 82) தொண்டை. சத [2]விப்பா வித்தே. [3]மற்பூ சித்தே [4]டைப்பா ரைச்சேன்.

திருவெண்காட்டுச் சிவபிரான். (முதற்சவலை.)

83. சங்குமுள பறையுமுள தாநல்ல கவரியுள
எங்குமுள தூரவுகிண றெறியுமறி கொடியுமுள?
பொங்குபுனல் வந்தலைப்பப் புள்ளினங்க ளார்ப்பப்
பொருகயலோ டினவாளை புறக்கணித்து நோக்கத்
தெங்குபழம் வீழ்ந்தொழுகுங் காவிரியின்றென்பாற்
றிருவெண்காட்டையவெனிற் றீவினைகள் போமே.

தேவூர்ச்சிவபிரான்.

84. அரிசி விளைத்தன் றமுதளிக்குந் தேவைப்
புரிசிறக்கு மீசரிரு பொற்றாள்—தரிசித்தோர்
வேண்டும் வரமனைத்தும் மேவுவார் பார்மீதில்
மீண்டுபிற வார்பெறுவார் வீடு.

திருவாமாத்தூர்ச் சிவபிரான்.
(இரட்டையர் ஆறுவிலகப் பாடியது.)

85. ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகிநின் றூர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.

சிவதலத்தொகை.

86. ஈணாட் டிரண்டு மலைநாட்டி லொன்றுகொங் கேழுவையை
வாணாட்டீ ரேழ்நடு நாட்டெழு மூன்றொன்றைந் தாம்வடக்கிற்
சோணாட் டொருநூற்றுத் தொண்ணூறென் றோர்வர் துளுவத்தொன்று
நாணாட் டியதொண்டை நன்னாட்டி லாறைந் திருநகரே.

பாண்டிநாட்டுச் சிவதலத்தொகை.

87. கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேச—மாடானை
தென்பரங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

அட்டவீரட்டம்.

88. பூமன் றிருக்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சயந்தரன் விற்குடி மாவழுவூர்

---

(83) வீரசோ. யாப். 24. (84) சோழமண். சத. 53. (85) தமிழ் நா. 111. (86) தொண்டைமண். சத. 2. (87) காளமேகம்வாக்கென்பர்.

காமன் வெறுக்கை நமன்கட வூரிந்தக் காசினிக்குள்
தேமன்னு கொன்றைச் சடையான் பொருதிட்ட சேவகமே.

சத்தவிடங்கத்தலம்.

89. சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயல்—பேரான
ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

விநாயகர்.

90. தன்றே ணன்கி னென்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

91. எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே.

92. மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தெ னுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி.

93. மானமருங் கண்ணாண் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான்—ஆனைமுகன்
ஒட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினா னம்மேல் வினை.

94. தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத்—தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு.

---

(90) தொல். செய். 52 இளம்பூ: (இது முத்தொள்ளாயிரக்காப்பென்று புறத்திரட்டால் அறியப்படுகின்றது). (91, 92.) தொல்காப்பியம், தமிழ்நாவலர் சரிதை, உரிச்சொனிகண்டு முதலிய நூல்களின் தொடக்கத்துக் காணப்படுகின்றன. (93) தண்டி. 39 உரை. (94) வீரசோ. அலங். 19 உரை. தண்டி. 35 உரை.

(விநாயகர்க்கும் மலைக்குஞ் சிலேடை.)

95. அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க—உம்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.

96. திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

97. கடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு [1]மிளிர
[2]வென்றாடு திருத்தாதை வியந்துகைத் துடிகொட்ட
நின்றாடு மழகளிற்றை [3]நினைவாரோ வினையிலரே.

முருகக்கடவுள்.

98. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழலூறிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—[4]கோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் மரண்.

99. முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான்—சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு.

(அம்போதரங்கவோருபோத).

100. செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மணியெருத்திற் றோன்றுங்கால்
சேயொளி கடற்பிறந்த செந்தீயிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் [5]கலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
அறுவருந்த [6]மூலைசுரந் தகடருந்தா றமுதூட்ட

(95) தண்டி. 75 உரை. (96) மியூ. காட். 2. பக். 545, (1916). (97) தொல்; செய். 149 பேரா; நச்: [1]தழீஇ. [2]வென்றுதி நந்தாதை. [3]நினைவாரே. (98) இரும் பல்காஞ்சி (புறத்திரட்டு மேற்கோள்); [4]சோலை. (99) தண்டி. 38 உரை. (100) தொல். செய். 152. பேரா; நச். [5]தழைச்சியான். [6]மூலைசுரந்தாங்ககல்விசும்பு சிலதுவற்ற.

ஊருருவத் தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
ஈருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்!

[1]ஆங்க,

வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தனைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு கொற்றத்து முன்னோன் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;

தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலும்
மூவிரு தோன்றன் முகம்;

மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல்
இடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடம்பன் றோள்;

அவ்வழி,

அடியிணை [2]சேரா வவுணரை நுங்கிப்
பொடிபொடி யாகிப் பொருப்பொடு மாய
இடியுமிழ் வானத் திடைநின்று கூஉங்
கொடியணி கோழிக் குரல்;

விழுச்சி ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் றார்த்தார் பலர்;

உருசெழு முருகிய முருமென வதிர்தொறும்
[3]அருகெழு சிறகொடு மணவரு மணிமயில்;
[4]பெருகள வருமறை பெறநெடு மொழியொடு
பொருகள வழியிசை புகல்வன [5]சிறுகுறள்;

சிவந்தன திசை சிலம்பின மலை
நிவந்தன தலை நிரம்பின குறை;

ஆர்த்தன மறை ஆடினர் பலர்
போர்த்தன துகள், [6]பொழிந்தனர் மலர்;

ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் [7]தேத்துகம்
[8]நின்னீ தக்க தாயினு நின்னெதிர்
நாணில மாகல் வேண்டும் யாணர்க்

---

[1] ஆங்கு. [2] சேராதவுணர் நுடங்கிப். [3] எரிசிற கொடுமிணை தபவரு மணிமயில், [4] பெருகிய. [5] சிலகுறள். [6] பொழிந்தன. [7] தேத்துதல். [8] நனிதக்க.

கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரொடு [1]நின்வயி னமர்ந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே.

101. பூவார் பொய்கைப் பொற்போதிற்
றேவார் செங்கட் சேயாநீ
யாவா வென்னு தென்னேசூர்
மாவா னைக் கொன்றாயே.

கதிர்காமம்.

102. மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
மடவர லார்கொய்ய மலர்வனவு நாகம்
பிணியவிழ்ந்து நன்னுளாற் பூப்பனவும் வேங்கை
பிறங்கன்மாத் தொலைத்தவற்றான் றுய்ப்பனவும் வேங்கை
[2]இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை
யெமக்கினிதா யாமவனைச் சூட்டுவது மாலை
நிறைகாய்த்தி நெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
நிலங்காக்குஞ் சேஎய்த னெடுநகருங் காமம்.

(கதிர்காமத்துவேலர்முன் பாம்பை மயில் விடப் பாடியது.)

103. தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா னே.

திருமால், முருகன், ஐயனூர்.

104. பொற்றாணில் வந்தசுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார்கொ லென்னின் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றூர் பரவுங் கநகாரி நகாரி காரி

சிவபிரான், திருமால், துர்க்கை.

105. கண்ணுதலோன் காப்பக் கடிநேமி யோன்காப்ப
எண்ணிருதோ ளேந்திழையா டான்காப்ப—பண்ணியனூற்
சென்னியர்க் களிக்குந் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே.

---

[1]நின்வயின் மாந்த, நின்வயின் மாந்தர். (101) யாப். வி. 94; (102) ஷ. 87. [2]இறைக்காச்சா. (103) தமிழ் நா. 145; (104) தண்டி. 95. (105) செந். தொ. 6. பக். 583.

திருமகள்.

106. நெய்யொடு [1]திரியொக்கச்
[2]செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத வுள்ளமே
மெய்யாதல் வேண்டுமே.

கச்சி உமாதேவி.

107. தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
எங்கொலிநீர்க் [3]காஞ்சி யிடை.

பகவதி.

108. மலையு மலைபு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங் கலையுங் கடவுந்—தொலைவில்
அமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு.

109. அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
யிளவேய் நிறத்தாலு மேய்க்குந்—துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள்.

(நிலைவெளிவிருத்தம்.)

110. சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ—அம்மானாய்
ஆய்மலருந் தொண்டையு மாழியுந் திண்டேரும்—அம்மானாய்
மாயிருந் தானை மயிடன் றலையின்மேல்—அம்மானாய்
பாயின சிறடிப் பாவை பகவதிக்கே—அம்மானாய்.

(கலிப்பாவகை.)

111. மழைநுழைந்து புறப்பட்ட மதியமு ஞாயிறும் போல்
[4]உழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்பப்

---

(106) தொல். செய். 149 பேரா. நச். [1]தீ யொக்க. [2]செய்யானைச். (107) வீரசோ. அலங். 31; தண்டி. 77 உரை. [3]கச்சிபிடம். (108) தண்டி. 93 உரை. (109) ஷை. 80 (110) யாப். வி. 68. (111) தொல். செய். 149 பேரா; நச். [4]உழைவழங்கு.

[1]பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்
கச்சென்னக் கனல்கின்ற கவின்முலைமேற் கவின்செய்ய
அம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கதிர [2]வரியேறு வால்புடைப்ப
விண்டோயு மணிநீல [3]வெற்பினிடை வேய்மிடைந்தாங்
கெண்டோளு மிடைநீழ விளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்த கோட்டெருமைத் தலையின்மிசை
மிதியாத சீறடி மிதித்தன போற்றோன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே.

(வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.)

112. கல்லின்மே லூறிய கனபவளக் கொடியேய்ப்பக்
கொல்சின மதவெருமைத் தலையொதுங்கி மற்றதன்
சில்குருதி சீறடிமேற் சிலம்போடு கழனனைப்ப
விளங்குபொன் னெடுவரைமேல் வெய்துறுமி யெழுந்தாங்குத்
துளங்காச்சீர்ப் படையோடுந் தொழிலோடும் பொலிந்தோடக்
களங்கொண்டு முடியுகைத்த கலைமானேற் றூர்தியோய்! (தரவு)

பெருந்தகைமை பிறிதொழியப் பிடிக்கோடுங் களிறேபோல்
அருஞ்சமத்து நினக்குடைந்த வவுணரை நினைக்குங்காற்
கரும்புருவ நுதல்வியர்ப்பக் கச்சினால் விசித்தநின்
மருங்குல தளவெண்ணின் மாயமும் போலுமே;

பேழ்வாய விறற்கூளி பின்னார்ப்ப முன்சென்று
வீழ்வாயா னீயெறிந்த வீரரை நினைக்குங்காற்
கேழ்கிள ரவிர்முன்கைக் கிளியிருப்ப வெடுக்கில்லா
மஃழைமை காணுங்கால் மம்மரும் போலுமே;

வானூற மூயர்விசும்பின் வாய்மடித்து விறற்சுட்டித்
தாள்சோர நினக்குடைந்த தானவரை நினைக்குங்காற்

---

[1]வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய் பச்சென்னக்-கானின்று கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய. [2]நகத்தரியே. [3]வெற்பிடை (112) யாப். வி. 84.

பூளையார்ந் தெழிலெய்தப் பொறியணை புரையுநின்
தோளின தளவெண்ணிற் றேற்றூரும் [1]போலுமே (தாழிசை)

எனவாங்கு ; (தனிச்சொல்)

கடிகமழ் பூங்குலைக் கலங்கிருந் துடுப்பிற்
காராராக் காந்தண்முகை வென்றன விரல் ;
விரலுற விரித்தமைத்து விசும்புதை வந்து
முலையொடு முத்தொடு மாறின பந்து;
பந்தவிழ் பணிச்சென்னி கையற் றெரீஇய?
அசோகி னந்தளி ரணிபியற்ற வணிகொண்டது நுதல் ;
நுதலிவர் கதுப்புக் குதவியபொன் சுளுலின மணி ;
மணிமகர முருவாக நிகரொத்தன முத்து;[2] (அராகம்)

அரியொண்க ணம்பிற் பிறழும் வரியல்குல்
வண்டிருப் பன்ன தகைத்து;
கூழை புறமுறத் தாழ்ந்தன வாழை
வருமுகி-ழேய்க்கு முலை; (பேரெண்)

பெருமட மான்பிணை வென்றது நோக்கு ;
சிறுமருங்குற் கொல்கின முல்லைக் கொடி; (சிற்றெண்)

படுமணி படுமொருகை; பைங்கிளி யதுவொருகை;
வடிநுதி வேலொருகை; வாள்கொண்ட தகைத்தொருகை;
சேடகத்தாற் சேடொருகை; சிலைசேர்ந்த தொழிற்றொருகை;
(இடையெண்)

கோடொருகை ; இயமொருகை ; (அளவெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)

இருபாற் பட்டநின் னிணையடி பரவுதும்
ஒருபாற் பட்டெமக் கருளுவோ யெனவே. (சுரிதகம்)

113. மூவிலை நெடுவே லாதி வானவன்
இடமருங் கொளிக்கு மிமயக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி

---

[1]போலாரே. [2]'முத்துநகைக் கதிர்மின்னுக. வயிர்துகிலிடைப்பூங்கண்ணி னுக்கு'? என்பது:இதன் அடுத்த அடி. (113) ஆசிரியமாலை (புறத்திரட்டு).

மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கவிம் மலர்தலை யுலகே.

கண்ணுடையம்மையருளால் அவித்தநெல்முளைப்பதைப்பற்றிய
வெண்பா.

114. கண்ணுடைய தாய்மகிமை காசினியோ ரிவ்வளவென்
றெண்ணுடைய தாய்மதிக்க வேலாது—மண்ணுடைய
புன்முளைக்க வெத்தனைநாட் போதுமுட னேயவித்த
நென்முளைத்தல் சால நிசம்.

நாமகள்.

115. தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

116. என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கு மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

117. இமயவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சிமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

118. பொத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூண்முலையாள் வந்தென் மனத்தே
இடங்கொண்டா ணீங்கிற் றிடர்.

(கம்பர்வாக்கு.)

119. ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

120. படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

---

(114) செந்தமிழ்த்தொகுதி கரு. பக். சுக. (116) தண்டி. காப்பு. (117) தண்டி. 19 உரை. (118) பாரதம் (மியூ. காட். II, 502).

(காளமேகப்புலவர் பாட்டு.)

121. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

சூரியபகவான்.

122. முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோன்
மன்னுந் திலகம்போல் வாளிரவி—பொன்னகலந்
தங்குங் கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல்
அங்க ணுலகளந்தார்க் காம்.

123. மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியான்
நாகத்தா னிமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணாதார் நின்னை [1]நிலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு.

(கொச்சகவொருபோது.)

124. தடங்கடற் பூத்த தாமரை மலராகி
அடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
ஆயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
[2]சேயித ழெனத்தோன்றுஞ் [3]செழும்பகலி னிரவகற்றிப்
[4]படுபனிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
நெடுநிலங் குளிர்கூர நீர்மைசா னிழலூறி
அண்டங்கள் பலபயந்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலின்
ஓங்குயர் [5]பருதியஞ் செல்வநின்
நீங்கா வுள்ள நீங்கன்மா ரெமர்க்கே.

(பெருந்தேவபாணிவகை.)

125. ஆயிரங் கதிராழி யொருபுறந்தோன் றகலத்தான்
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரினையு மலர்த்துவான் றோன்றுதல்

---

(122) தண்டி. 40 உரை. (123) தொல். புறத். 33. [1]யிலையாமை (124) தொல். செய். 150 பேரா; நச். [2]சேயிழை. [3]செம்பகலி. [4]படுவகைப் பனிப் பகை நீங்கப் பருவத்து-விடுமழை மறுத்திடினு மென்மலரின் மதுமழையால். [5]பருதிச். (125) தொல். செய். 146 பேரா; நச்.

இனக்கமல முணர்த்துவபோன் றெவ்வாயும் வாய்திறப்பக்
[1]குடதிசையின் மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்
[2]கடவுளர்த முறங்காத கண்மலரே கரிபோக
ஆரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
[3]பாரகலத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்! (தரவு)

மண்டலத்தி னிடைநின்று வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவார்
ஒங்குலக [4]முழுதுபோர்த் திருவுருவி னென்றாகி
ஆங்கவரை வேறுவே றளித்தியென் றறியாரால்;

மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
நின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பிற் காணுதார்
எம்மினுங் காலைவா யிடைக்கரந்து மாலைவாய்
அம்மீனை வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால்;

தவாமதியந் [5]தொறுநிறைந்த தண்கலைக டலைத்தேய்ந்
துவாமதிய நின்னொடுவந் தொன்றாகு [6]மென்றுணரார்
தண்மதியி [7]னின்னொளிபுக் கிருளகற்றுத் தவற்றாற்கொல்
அம்மதியம் படைத்தாயு நீயேயென் றறியாரால்; (தாழிசை)

நீராகி நிலம்படைத்தனை; நெருப்பாகி நீர்பயந்தனை;
[8]ஊழியிற் காற்றெழுவினை; ஒளிகாட்டி வெளிகாட்டினை;
(இருசீர்நான்கு)

கருவாயினை, விடாயினை, கதியாயினை, விதியாயினை,
உருவாயினை, அருவாயினை, ஒன்றாயினை, பலவாயினை; (ஒருசீரெட்டு)

எனவாங்கு ; (தனிச்சொல்)

விரிதிரைப் பெருங்கட லமிழ்தத் தன்ன
ஒருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத்தலை பனிக்கு மாற்றல் சான்று
சுழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே.

---

[1]குடதிசைக்கண். [2]கடவுளரே தம்முறங்காக். [3]பாருலகத். [4]முழுது போரத் திருவுருவி. [5]தொறுநிறையத் தண்கலை யக்கலைதேய்ந். [6]மென்றுணர் வார். [7]னொளிபுக்கு. [8]ஊரொழியிற்.

சந்திரபகவான்.

(வள்ளிவாழ்த்து.)

126. பிறைகாணுங் காலத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றாய்ந்தது நன்மாயை யாம்.

(தேவபாணி.)

127. குரைகடன் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மாணினை
யிரவிரு ளகற்று நிலவினை யிறையவன் முடித்த வணியினை
கரியவன் மனத்தி னுதித்தனை கயிரவ மலர்த்து மவுணனை
பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே.

நாற்றிசையதிபர்.

128. தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினர்
ஈரெண் கலையோன் வருண னிரவியமன்
யாரும் புகழியல்பி னர்.

129. குடபால் வடபால் குணபாறென் பாலென்
றடைவே திசைநான் கவற்றுள்—இடையிரண்டு
நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய
வன்மை புரிவோர்க்கே யாம்.

அருகக்கடவுள்.

130. மண்டித் தடுமாறும் வாழ்விழந்தேன் மாதுயரப்
பண்டைப் பழவினைநோய் பற்றறுத்தேன்—பிண்டித்
திருமாலை முக்குடைக்கீழ்த் தேவாதி தேவர்
பெருமானை யானடைந்த பின்.

---

(126) தொல். புறத். 33. (127) சிலப். 6. 37. (128) தண்டி. 106 உரை. (129) ஷை. 107 உரை. (130) யாப். காரி.

27-3-24

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௨.] ருதிரோத்காரி ஹூ மார்கழி மீ [பகுதி ௨.

Vol. XXII. *December-January-1923-24.* **No. 2.**

தமிழ்வளர்ச்சி.*

சில வருடங்களாகத் தமிழ்நாட்டிற் பலவிடங்களில், தமிழ்ச்சங்கங்கள் நிறுவப்பெற்று விளங்கிவருகின்றன. இந்நிகழ்ச்சி தமிழர்க்கும் தமிழ்நண்பர்க்கும் கலப்பிலா மனக்களிப்பை உண்டுபண்ணும். தொன்றுதொட்டுச் சொற்சுவை, பொருட்சுவை, கவித்திறன், கற்பனை நயம், பத்திரசம் முதலிய பல்வேறுவகையான வனப்புடையதாய், நந்நாட்டாரை மழலைப்பருவமுதல் மனக்களிப்பூட்டி வளர்த்துவந்த தாய்மொழியாகிய தமிழ், சில ஆண்டுகட்குமுன் தமிழ்மக்களிடையில் ஆதரவிழந்து, சீர்குன்றித் தளர்ச்சியுற்று, உயிர்ப்பிச்சை இரப்பதுபோல் தயங்கிநின்ற பரிதாபநிலைமை நாமறிவோமன்றோ? ஆனால், சமீபகாலத்தில் இந்தியாவெங்கும் கிளம்பின தேசியவபிமானவெழுச்சியின் பயனாய்த் தேசியபாஷாபிமானமும் நந்தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அதனால், தமிழின் சீர்சிதைய நம்மவர் இனிப் பொறுக்காரென்று துணிவுறக் கூறலாம். தமிழின் துர்த்தசை நீங்கிற்றென்போமாயினும், அப்பாஷைக்குரிய உயர்நிலைமையையும் இயற்றிறமையையும் அது பெற்று நாட்டுக்கு நலம்விளைக்கத் தமிழ்மக்கள் இன்னு மெத்துணையோ பாடுபட வேண்டும். எல்லா நற்காரியங்களையும் கைகூடுவிப்பது இடைவிடாத முயற்சியேயாம்.

*இது, சாத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் ஒன்பதாவது வருடக்கொண்டாட்டத்தில் வாசிப்பதற்காக எழுதப்பட்ட அக்கிராசனருபந்யாசம்.

"இசையா தெனினு மியற்றியோ ராற்று
லிசையாது நிற்பதா மாண்மை"

என்றது நாலடியார். அதனால், தமிழ்மொழிவளர்ச்சிக்கு வேண்டிய வழிகளையாய்ந்து, அம்மொழியின் உதவியாற் சமூதாயம் அடையக்கூடிய நலங்களைப் பெருகச்செய்து, தமிழ்நாட்டுமேன்மை ஓங்குமாறு தமிழ்ச்சங்கங்கள் ஊக்கத்தோடு உழைக்கும் கடப்பாடுடையன. தமிழ்வளர்ச்சியால் சமூதாயம்பெறும் நலம் என்னையென்று வினவுவார் இக்காலத்தில் மிகச்சிலரேயாவர் என்று நினைக்கிறேன். எந்த மக்கட்டொகுதியாரும் அவர்க்குரிய செந்நெறியையும், தனிநடையையும் இயற்றேர்ச்சியையும் முற்றமிழக்க அவரது சொந்தபாஷையைக் கைவிட்டுப் பிறபாஷாதிக்கத்திற்குட்படலே இணையில்லா மார்க்கமாம். செம்பொருள்களனைத்தையும் எல்லாமொழிகளும் ஒன்றுபோலவே நன்கு விளக்கும் ஆற்றலுடையனவல்ல. லத்தீன் (Latin)பாஷையில் ஆத்மதத்வவிசாரநூல்கள் இயற்றல் இலகுவன்றாம். தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் விளக்கப்பெறும் தத்துவசாத்திரநுட்பங்களை ஆங்கிலமொழியில் தெள்ளிதின்விளம்பலரிதாகும். தமிழ்மொழிக்குரிய பொருளிலக்கணமும் திணையிலக்கணமும் வேறெங்கணுங்காணேம். ஒரு தேசத்தார் பௌதிக, மானசிக, ஆமுஷ்மிக காரியங்கள் சீர்பெறச்செய்தற்கும், உரியதோர் நாகரிகப் பேறுபெற்றுத் தாமும் ஞானப்பெருக்கடைந்து, அதன்வழியாக உலகத்தின் பொதுநல அபிவிருத்திக்கு உதவிபுரியும் ஆற்றலடைதற்கும், அத்தேசபாஷையே சிறந்தகருவியாகும். ஒரு தேசத்தாரின்பாஷை அவர் ஜீவநாடியென்று கூறலாம். அந்த ஜீவநாடி முற்றுமடங்கி நாட்டின் தனிநலமழிதற்கு அன்னியபாஷையைக் கைப்பற்றி ஒழுகுதல்போன்ற மற்றுபாயமொன்றுமிலது. பிறிதோர்நாட்டாராட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நாடுகளில், ஆட்சிபுரிவோர் தங்கள்நாட்டுப் பாஷையை முழுதும் பரவச்செய்ய முயன்றுவருதல் உலகெங்குங் காணக்கிடக்கின்றது. அவராட்சி ஆணிவேரூன்றி அசைவற நிற்கவெண்ணி நாட்டுப்பாஷையைத் தம் பாஷையால் அமர்த்தமுயறல் இயற்கையே. என்னை? தம்பாஷையைவிட்டுப் பிறபாஷை பேசுவோர் அப்பாஷையில் நினைக்கவும் அப்பாஷையோரது நடையுடைபாவனை நோக்கங்களைத் தமதெனவேற்றொழுகவும் செய்வார்கள். அதனால் அவர் தம் தனிவாழ்க்கையை இழந்து,

தங்களை யடக்கியாளும் நாட்டாரோடு ஒன்றித்துவிடுவார்கள். போலண்டில் (Poland) ஜர்மானியர் ஜர்மன்பாஷைப் பயிற்சியைக் கட்டாயப் படுத்திவந்ததும், ஆங்கிலவரசாட்சியார் தென்ஆபிரிகாவில் டச் (Dutch) பாஷையையும், கானடா (Canada) வில் பிரஞ்சு (French) பாஷையையும் தவிர்த்ததும் இவ்வுத்தேசத்தோடுதான் இருக்கவேண்டும். இந்தியாவில் ஆங்கிலந்தான் வழங்கவேண்டுமென்ற கட்டாயம் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்படவில்லை. ஆயினும், அது ராஜபாஷையாயிருத்தலானும், உயர்ந்த ஊதியமளிக்கும் பெரியதொழில்கட்கு அப்பாஷாஜ்ஞானம் இன்றியமையாததாயிருத்தலானும், வேறு காரணங்களாலும் ஆங்கிலப் பயிற்சி ஆவசியகமாயிற்று. ராஜாங்கத்துறைகளின் பல்வகைத்தொழில்கள் சரியாய் நடத்தற்கேற்றவிதத்திற் பள்ளிக்கூடங்களிலும் உயர்தரக் கல்லூரிகளிலும் படிப்புமுறை ஏற்பட்டது. இது முறைமையே. ஆங்கிலநாகரிகத்திற்கிணையாக வேறொன்றுமில்லையென்று மனதாரநம்பும் ஆங்கிலேயர், அதைப் பரப்புதலாலேயே ஆங்கில ஸாம்ராஜ்யமுழுதும் தக்க மேம்பாடுறுமென்று நினைத்தல் இயல்பன்றோ? அவ்வெண்ணத்திற்கிணங்க நம்புராதன கலையையும், நந்நாட்டுப் பாஷையிலமைந்த நூல்களையும், அவை விளக்கும் அரும்பெரும் போதனைகளையும், அவற்றால் வளர்க்கப்பெற்ற தமிழ்நாகரிகத்தையும் வாளாகூளமெனத் தவிர்த்து, ஆங்கிலபாஷையையும், ஆங்கிலநூல்களையும், ஆங்கிலக்கலையையும் இந்நாட்டில் நிறுவச்செய்து ஆங்கிலநாகரிகம் நாடெங்கும் வியாபிக்க ஆங்கிலேயர் முயலுதல் சுவாபாவிகந்தான். தமிழ்ப்பாஷையும் தமிழரின் பண்டை ஒழுக்கவழக்கங்களும் செவ்வனே போற்றப்படுந் தன்மையனவென்று தமிழர் நினைத்தால், அவை விதேசபாஷாகலைகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு மாண்டுபோகாமல் தழைத்தோங்கிவாழத் தமிழ்மக்களே தக்க முயற்சி செய்யவேண்டும். அவர் அவ்வாறு முயற்சிசெய்யாதவரை ஆங்கிலத்துரைத்தனத்தார் தமிழ்மொழியும் அதிலடங்கிய பல்வேறு கலைகளும் நாகரிகவளர்ச்சிக்குப் பயன்படாவென்று நினைப்பதில் தவறென்னை? "தாமே தமக்குச் சுற்றமும் தாமேதமக்கு விதிவகையும்" என்றார் வாதவூரடிகள்.

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானு—நிலையினு

"மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்றது நாலடியார். இவ்வுண்மையைமறந்து நந்நாட்டார் ஆங்கிலத்தை பேரார்வத்தோடு மார்புறவணைத்து, மெக்காலே(macaulay) என்ற ஆங்கிலப்பிரபு கூறியதுபோல நிறமொன்று நீங்கலாக மற்றெல்லாவிதத்திலும் ஆங்கிலேயராயிட முயன்றார்கள். இந்நாட்டில் உயர்தரக் கல்வி பயின்று சர்வகலாசாலைப் பட்டதாரிகளாயுள்ளவரிற் பெரும்பான்மையரும் சொற்பகாலத்துக்குமுன்வரை இவ்வாறுபோலி ஆங்கிலேயராகத் திரிபவராயிருந்தனர். ஆங்கிலங்கற்று உயர்பதவியடைந்த சிலர் தாய்ப்பாஷைபேச அவர்கட்கு வாராதென்று வெளிப்படையாயுரைப்பது நான் கேட்டிருக்கிறேன். அவர் ஆங்கிலம் பேசும்பொழுது அப்பாஷை பிழைபடப்பேசவில்லையென்று யாரேனுங் கூறத்துணிந்தால், உடன் அவர் மனத்துயர் அடைவதும் நான் கண்டிருக்கிறேன். நம்முடைய செந்தமிழ்மொழியை நாமே மதியாது கீழ்மைப்படுத்தினால், அன்னிய தேசத்தவரான துரைத்தனத்தாரோ அதை மேம்படுத்துவார்கள்! இப்பொழுதுதான நந்நாட்டில் தேசியபாஷாபிமானம் கிளம்பி ஆங்காங்குத் தாய்மொழிவளர்ச்சிக்காக ஜனங்கள் எத்தனஞ்செய்துவருகிறார்கள். தமிழ்நாட்டார் முற்பட்டியாரத் தமிழ்மொழியிற் கல்விபுகட்டவேண்டுமென்ற நினைப்பு இப்பொழுது பாவிவருகின்றது ஆங்கிலப்பயிற்சி ஆங்கில ஸாம்ராஜ்யத்திலுள்ளோர்க்கு வேண்டியதுதான். ஆனால் நந்நாட்டிலுள்ளோரெல்லோர்கரும் ஆங்கிலங்கற்றல் இயலாது. ஒவ்வொரு நாட்டு மக்கட்கும் பரம்பரையின்பயனாய்ப் பிறநாட்டுமக்கட்கில்லாத சில சிறப்புக்குணங்கள் அமைந்துள்ளனவென்று கலைஞர் கூறுகின்றனர் அவ்வாறாயின், அவ்வம்மக்கட்குரிய சிறந்த பாவங்களும் உண்மைக் கொள்கைகளும் உத்தமபோதனைகளும் அவரது சொந்த பாஷையிலமைந்த இலக்கியத்தில் முன்னர் ஆன்றோராற் புனையப்பெற்றதற்கிணங்க மேலும் முறைவழுவாது அமைக்கப்பெற்றால், அவரவர்க்குரித்தான வழியில் நாகரிகக்கிளர்ச்சியும் நலவளர்ச்சியும் அவர் அடைவதோடு வையப்பொதுநலத்திற்கும் மேம்பாட்டிற்கும் உதவிபுரியுந் தகைமையுடையவராவர். தாய்மொழி வாயிலாகப் பெறுங்கல்வியே நாட்டாரெல்லோர்க்கும் பயனளித்து நாட்டிற்கும் நிலைபெற்ற நிதியமாய் விளங்கும். சமுதாயத்தின அங்கத்தினரான ஒவ்வொருவரும் அதன் பொதுக்கிளர்ச்

சிக்குத் தம்மாலியன்ற உதவி புரியவேண்டும். அவ்வாறாயின், வறியோனும் கல்விகற்றுத் தெள்ளறிவு பெற்றாலன்றிச் சமுதாயத்துக்கு அவன் உரிய கடப்பாட்டைச் செலுத்துவ தெங்ஙனம்? ஓரியந்திரம் அதன் சோலி செவ்வனே செய்யவேண்டுமானால், அதன் அம்சங்களாகிய சிற்றாணிகளும் துருப்பிடிக்காமல் தக்க ஸ்திதியிலிருக்கவேண்டுமன்றோ? சமுதாயத்தின் அம்சங்களாகிய ஜனங்கள் படிப்பின்றியிருப்பின், துருப்பிடித்த ஆணி யந்திரத்தின் இயக்கத்திற்கும் உபயோகத்திற்கும் இடையூறுவருத்துதல்போல, அவர் ஸமுதாயவளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்துவாராவர்.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்றும்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்றும் திருவள்ளுவநாயனாரும்,

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து."

என்று நாலடியாரும்,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்று குமரகுருபரரும் புகழ்ந்துகூறிய கல்விச்செல்வத்தின் நிலைபெற்ற பேருதவி நந்நாட்டிலுள்ள பெரும்பான்மையர்க்குத் தாய்மொழிவாயிலாகவன்றி வேறெவ்விதம் கிடைக்கும்? 'களரனையர் கல்லாதவர்' என்பதற்கையமில்லை. விளைவில்லாக் களர்நிலம் பூமியின்பயனைக் குறைத்துக்

கெடுப்பதுபோல, கல்லாதார் மனப்பக்குவமில்லாதவராய் இருத்தல்பற்றி விலங்கொடு ஒப்பாராகையாற் சமுதாயத்தின் வளர்ச்சியைக் கெடுத்து நலத்தைக் குறைபடச் செய்வார். அதுபற்றியன்றோ "பிச்சைபுகினும் கற்கைநன்றே" என்றார் முன்னோரும்? அதனால் யாவரும், கல்விப் பொருள் எளிதிற்பெற வழிதேடுதலே நமது முதற்பெருங்கடமை

தமிழ்மொழிவாயிலாக இக்காலத்திற்கேற்ற கல்விபயிற்ற முடியா தென்று நினைத்தல் பொருத்தமுடையதன்று. தமிழ்மொழி இலக்கண மும் இலக்கியமும் பெரிதிற்பெற்ற செம்மொழியாதலாலும், பேச்சுவழக் கில் நடமாடிவருதலாலும், அதற்குவேண்டும் அகற்சியும் வன்மையும் வருத்தல் சிரமமன்று. 'சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரை முன் திட்டேது தட்டேது காண்' என்ற புலவர்க்குத் தமிழின் இயக்கவன்மை யையும் இயற்கைவலிமையையும்பற்றிச் சந்தேகம் சற்றும் எழவில்லை. அதுபோல, தமிழ் வளர்ச்சிக்குத் தலையிட்டுழைப்பார்க்கு, அதன் ஆற்றலைப்பற்றிய திடமான நம்பிக்கையிருக்கவேண்டும். சிலர் பசித்த வன் பழங்கணக்குப் பார்ப்பதுபோலத் தமிழின் பண்டைப்பெருமை யைப் பேசுவதிலும், அதற்கில்லாத பெருமைகளை உள்ளனபோலக் கற்பித்துப் பேசுவதிலும் காலத்தைப் பழுதுபோக்கி அவர்க்குத் தமிழின்மேலுள்ள அபிமானத்தைக் காட்டுகின்றார்கள். இவ்வாறு செய்த லால் தமிழ்மொழியும் தமிழ்நாடும் பெறும பயன் யாதோ தெரிய வில்லை. உள்ள குறைகளை உணர்தலே வளர்ச்சிக்கு முதற்கருவி. அவற்றையுணர்ந்து நீக்கமுயல்வோர்க்கே முன்னேற்றமுண்டாகும். தமிழ்மொழியிற் குறைகளிலவெனச் சிலர் போலி அபிமானத்தின் தூண்டுதலாற் கூறுவர். தமிழிலுள்ள குறைகளை ஒப்புக்கொண்டு, தற்கால ரீதிக்குத்தக்கவிதத்தில் அக்குறைகளை நீக்க முயலவேண்டும். 'பெயர் பொறிக்கும் பேராண்மை இல்லாக்கடை', பெருமை சிந்திப்ப தெங்ஙனம்?

நாட்டுப்பாஷைமூலமாகக் கல்விகற்பித்தலால் விளையும் நன்மைகள் பலவுள. மாணவர்கள் சொந்தபாஷையிற் கற்றலால், வேற்றுப்பாஷை யிற் கற்றுக்கொள்வதிலும் எவ்வளவோ விரைவாகவும் விளக்கமாகவும் விஷயங்களை உணர்வார்கள். ஒவ்வொரு பொருளையும் நாம் நாமத்தா லும் ரூபத்தாலும் அறிந்துகொள்கிறோம். ஒரு தமிழ்க்குழந்தைக்கு

அதன் வீட்டில் ஒரு புஷ்பத்தைக் காண்பித்து, அப்பொருளின் பெயர் "பூ" என்றுசொல்லி விளக்க, அக்குழந்தையின் மனதில், கண்ணிற்குத்தோன்றிய உருவத்திற்கிணையாக, ஓர் படிமையும், செவி மடுத்த ஒலிக்கிணையாக ஓர் படிமையும் பதிகின்றன. இவ்விரண்டு படிமைகட்கும் தொந்திப்பு மனத்திலேற்படுவதால், உருவத்தைக் காணும் வேளைகளில் அதற்குரிய ஒலிப்பிரதிமையும், ஒலியைக்கேட்கும் வேளைகளில் உருவப்பிரதிமையும் குழந்தையின்மனதிற் றோன்றும். பள்ளிக்கூடத்தில் அதே பூதியப்பொருளை flower என்றழைக்கக் கற்பித்தால், குழந்தையின் மனத்தில் அப்பொருளோடு முன் தொந்தித்திருந்த ஒலிப்படிமைக்கு மாறுபாடாக முற்றும் வேற்றுமையுள்ள ஒரு ஒலிப்படிமை ஏற்படும். இவ் விபரீதத்தால் இரண்டு ஒலிப்பிரதிமைகளும் தெளிவுகுன்றி மயங்கும். அல்லது யாதேனுமொன்றை அக்குழந்தை மறக்க இடையாகும். எவ்வாற்றானும் குழந்தையின்மூளைக்குக் களைப்பு ஏற்படும்; தெளிவின்மையும் உண்டாகும். இந்த ஸ்திதியில் தமிழ் வாலிபரின் மனோபாவங்களையும் ஆங்கிலம்போன்ற வேற்று மொழிகளில் வெளியிட நேர்ந்தால், தமிழ்ப் பேச்சுவழக்கும் தமிழ் இலக்கணநடையும் ஆங்கிலம்போன்ற பாஷைகளின் பேச்சுவழக்கிற்கும் இலக்கணநடைக்கும் முற்றும் வேறுபட்டிருத்தல்பற்றிக் குழந்தைகட்குண்டாகும் கலக்கமும் மயக்கமும் எவ்வளவினவென்பதை எளிதில் ஊகித்தறியலாம். ஓருதாரணம் கூறுகிறேன். "சுவர்களிற் பல படங்களிருக்கின்றன" என்ற தமிழ்வாசகத்தை ஆங்கிலத்தில் "There are many pictures on the walls," என்றும், பிரஞ்சில் 'Il y a beaucoup de tableaux sur les murs' என்றும் மொழிபெயர்த்தல் வேண்டும். ஆங்கிலவாசகத்தின் அமைப்பையொட்டித் தமிழ்ப்படுத்தினால், "அங்கே இருக்கின்றன பல படங்கள் மேலே அந்தச் சுவர்கள்" என்றெழுதவேண்டும். பிரஞ்சுவாசகத்தின்வழிக்கிணங்க, ஆங்கிலத்தில் '1t there has much of pictures upon those walls' என்றும், தமிழில் 'அது அங்கே உடைத்தாயிருக்கிறது அதிகம் உடைய படங்படங்கள் மேலே அந்தச் சுவர்கள்' என்றும் உரைநடை அமையும். வாசக அமைப்பில் இவ்வளவு மாறுபாடுள்ள வேற்றுமொழிகளில் நம் மக்கள் கல்விபயின்றால் எவ்வளவு காலமும் உழைப்பும் வாளா போகும்! அவ்வாறு வீண்போக்கும் காலத்தையும் உழைப்பையும் தாய்மொழியில்

கல்விகற்பித்தால் கற்போர்க்கும் ஏனையோர்க்கும் பயன்படத்தக்கவிதத்திற் செலவுசெய்யக்கூடுமென்றோ? காலஞ்சென்ற சுப்பிரமணியபாரதி கடாவியதுபோல, 'களிப்புமிஞ்சி ஒளியினைப் பண்டொருகாலம் நீர் சென்று தேடியதில்லையோ?' அன்று 'ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி யிசைகொண்டு' விளங்கிய தமிழ்மொழியன்றோ இருள் நீக்கி ஒளி பரப்புவது? வேற்றுமொழிவழியாகக்கிடைக்கும் அறிவு தெள்ளறிவென்பதற் கிடமில்லை. ஆங்கிலநாட்டைச்சார்ந்த வேல்ஸ் (Wales) நாட்டில் ஜனங்கள் பேசும் தேசபாஷை வெலஷ் (Welsh) எனப்படும். வீட்டில் வெல்ஷ் பேசவும் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்கவும் செய்து வரும்பிள்ளைகள்விஷயமாய் அவ்வூர் வித்யா இலாகாக்காரர் சமீபத்திற் சில பரீக்ஷைகள் நடத்தினார்கள். அப் பரீக்ஷைகளால் விளங்கியவற்றுள் ஒன்று, வெல்ஷ்பிள்ளைகட்கு அவர் தாய்ப்பாஷையிற் படிப்பேற்பட்டால், ஆங்கிலபாஷையிற் கற்றுக்கொள்வதைவிடச் சீக்கிரமாகவும் தெளிவாகவும் அவர் அறிவுந் தேர்ச்சியும் பெறுவரென்பதாம். இம் முடிவு நம் நாட்டிற் கல்வியபிவிருத்தி நிச்சயிப்பதிற் கருத்துவைத்துச் சிந்திக்கத்தக்கது. நம் மொழியில் இக்காலத்திற்கேற்ற அறிவு முதிர்ச்சிக்கும் செல்வப்பொலிவிற்கும் வேண்டுவனவாகிய வனஸ்பதிசாஸ்திரம் (Botany), பசுசாஸ்திரம் (Zoology), சரீரசாஸ்திரம் (Anatomy), அங்கதந்திரம் (Physiology), பூவர்ணனம் (Geology), வாணிஜ்ய வித்யா (commerce, வித்தசாஸ்திரம் (Economics), உலோகவித்யா (Mineralogy), ரசாயனசாஸ்திரம் (Chemistry), பூதசாஸ்திரம் (Physics) போன்ற பலஞானக்கலைகளிலும் தக்க நூல்களில்லாதகால், இக்காலமுறையிற் பயன்படுமாறு தமிழிற் கல்விபயிற்றுதல் இயலாதென்று சிலர் நினைக்கலாம். தமிழில் மேனாட்டுக் கலைகளை விளக்க நூல்களில்லாதது பெருங்குறையே. ஆனால் இதற்குக்காரணம் நாம் தமிழ்வளர்ச்சியைச் சற்றுங் கவனியாது விட்டதுதான். இப்பொழுதாவது தற்காலக் கல்விமுறைக்கிசைந்த பாடங்களடங்கிய சாத்திரப் புத்தகங்கள் தமிழிலும் சாத்திரவறிவிலும் தேர்ச்சியுடையாரால் எழுதப் பெறவேண்டும். தமிழிற் புத்தகங்கள் வந்தபின்னரே அப்பாஷையிற் கல்விபயிற்றலாமென்போர் நீந்தத்தெரிந்தபின்னரே நீரில் இறங்க வேண்டுமென்பாரை ஒப்பர். தமிழே கல்விகற்பிக்கும் வழியாக ஏற்பட்டால், தமிழில் வேண்டிய புத்தகங்களும் புனையப்படுமென்பதிற்

சந்தேகமில்லை. மனத்திட்பத்தோடு வினைக்கண்புகுந்தால் விதியையும் விலக்கலாம்.

> "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்".

என்றார் திருவள்ளுவநாயனார்.

பச்சிமநாட்டுச் சாத்திரங்களைத் தமிழில் எழுதுவோர் சோலி இலகுவன்று. அவர்கள் எழுதப்புகும் கலைகளில் உயர்ந்த தேர்ச்சி யுடையாராய் இருக்கவேண்டும். அதனுடன் ஏனையோர் அறியும் வண்ணம் எளியநடையில் அவர்கள் எழுதவேண்டும். அவ்வாறு செய்தாலன்றித் தமிழ்நாட்டுப் பொதுஜனங்களின் அறிவு வளராது. தாமே ஆய்ந்து புதிதா யெழுதவேண்டுமென்ற நிபந்தனையில்லை. வேறுபாஷைகளிலுள்ள நல்லபுத்தகங்களைத் தெளிவுறத் தமிழில்மொழிபெயர்த்தலும் ஒருவழி. இவ்விஷயமாய் என்நண்பர் ஸ்ரீமத் K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் தாம் எழுதிய 'தமிழ் வரலாறு' என்ற அரியநூலிற் பின்வருமாறு கூறுகிறார்கள். "சாத்திரங்களைத் தமிழில் எழுதுவதனால் அந்தந்தச் சாத்திரங்களுக்குரியபதங்களை (technical terms), தமிழ்ப் படுத்துவது எப்படியென்று யோசிக்கவேண்டும். பிரதிபதம் தமிழில் கிடைப்பதரிது. இப்படித் தங்கள் பாஷைப்பிரதிச்சொற்கள் கிடைப்பது அரிதாயிருந்ததால், ஜப்பானியர் மேல்நாட்டுப்பாஷைப்பதங்களை அப்படியே எடுத்துத் தங்கள் பாஷைச்சொற்களாக வழங்கினர். மேல் நாட்டாரோடு நாம் பழக இப்பதங்கள் ஒன்றாயிருப்பது மிகவும் பயன் படுகிறது. பிரதிபதம் கிடைப்பது அரிதாயிருந்தால் நாமும் ஜப்பானியரைப்போலச் செய்யவேண்டும்." சாத்திரங்களுக்குரிய சங்கேத பதங்கள் ஓர்நாட்டாருக்குத் தனிமையாய் உரிமைப்பட்ட குழூஉக்குறி யல்ல. அச்சாத்திரங்கள் கற்கும் எல்லாநாடுகளிலுமுள்ள வித்தியார்த்திகளுக்கும் வித்வான்களுக்கும் பொதுப்பட வுரித்தாம் பரிபாஷை என்று கருதவேண்டும். தமிழில் நூதன சாத்திரங்களை விளக்கும் புத்தகங்கள்மாத்திரமன்று, நன்னாட்டுச்சரித்திரமும், புலவர்சரித்திரமும், பெரியோர்சரித்திரமும், இலக்கியவிளக்கநூல்களும் இவைபோன்ற பல் வேறு புத்தகங்களும் அமையப்பெறவேண்டும். வெகுகாலமாகத் தமிழ்ச் செய்யுள்நடையில் சந்தியிலக்கணம் சற்றும் தவறாது எங்கும் பிர

யோகித்து, சொற்களை ஒரே சங்கிலிப்பின்னல்போலக் கோத்து எழுதி வருவது நாம் அறிவோம். வீணான சந்திப்புணர்ச்சியே நம்பாஷையில் சொற்றொடரின் பொருள்விளங்குவதற்குப் பெருந்தடையாக ஏற்பட்டு நிற்கிறது. இக்காலத்தில் வசனநடையில் எழுதுவோரும் சந்தியிலக்கணத்திற் பதங்களைப் புணர்த்தி எழுதிவருகிறார்கள். மனக்கருத்தை வெளிப்பட விளக்குதற்குரிய கருவியாதலே பாஷையின் இலக்கணமாகையால், பொருள்விளங்கத் தடையாயிருக்கும் சந்தியிலக்கணத்தைக் கைவிட்டு, உரைநடையிற் பதங்களைத் தனித்தனியே எழுதமுயன்றால் நாட்டுக்குப் பெரிய நன்மை விளையும். இக்காலத்திற சிலர், செய்யுட்களிலும் சொற்களைச் சந்திபிரித்துத் தனித்தனியே எழுதிவரத் தொடங்கியிருக்கிறார்களாகையால், வசனநடை எழுதுங்காற் சந்தியிலக்கணத்திற் பதங்களைப் புணர்த்தாமல் ஏன் எழுதக்கூடாது. ஆங்கிலத்திற் சந்தியில்லாதிருப்பது யாவருமறிவர். அது அம்மொழிக்கு ஓர் குறையென்று யாரேனும் நினைப்பாரா? ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களும் இக்கருத்தேகொண்டனராவர். இச்சந்தர்ப்பத்தில் அவர்கூறும் வேறுசிலமொழிகளும் நன்கு கவனிக்கற்பாலன: "உரைநடையில் திரிசொற்பிரயோகத்தைத் தவிர்க்கவேண்டும். இயற்சொற்களையே பெரும்பான்மை உபயோகித்தல்வேண்டும். இலக்கணவழுப்புகாமற் காக்கவேண்டும். தமிழ்ச்சொற்கள் இருக்கப் பிறபாஷைச்சொற்களைச்சேர்ப்பது தவறேயாம். தாசில்தார், தாலூகா, ஜில்லா, சப்கோர்ட்டு, முனிசீப்கோர்ட்டு, வக்கீல் முதலிய பல சொற்கள் மகமதியர் ஆட்சிக்காலத்திலும் ஆங்லேயராட்சிக்காலத்திலும் தமிழியற்சொற்கள்போல நடைபெற்றுவருகின்றன. தமிழ்மக்கள்யாவரும் அவற்றின்பொருளை அறிவார்கள். அவற்றின்பொருளையுணர்த்தக்கூடிய வேறுபதங்களை அவற்றுக்குப்பிரதியாகச்சொன்னாலறிபார். உதாரணம்: ஹைக்கோர்ட்டு என்றால் யாவரும் அறிவர். அதை உயர்தரமன்றம் என்று சிலர் எழுதுகின்றனர். அதைப்படிப்போர் அதன்பொருளையறியாது மயங்குகின்றதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் முதலிற் பிறபாஷைமொழிகளாயிருந்தாலும், தமிழியற்சொற்கள்போல வழங்கிவிட்டன. 'கடிசொலில்லை காலத்துப்படினே' எனத் தொல்காப்பியர் சொல்லியபடி இவை தமிழியற்சொல்லேயாம். பிறபாஷைகளிலிருந்து ஒவ்வொரு காலத்தும் பலகாரணங்களால் ஒருபாஷைச் சொற்களைக்கொள்ளுதல்

இயற்கை யென்பர் மொழிநூல்வல்லுநர். தமிழும் பலசொற்களை வேறு மொழிகளிலிருந்து முற்காலத்திற்பெற்று வளர்ந்திருக்கிறது. இது மொழிவளர்ச்சிக்கு ஏற்பட்டவழிகளி லொன்று.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற தேவர்கூற்று மெய்யேயாயினும், முயற்சியால் நாடிய காரியம் கைகூடப் பொருளுதவி வேண்டும். இது ஏழைநாடாயிற்றே. தமிழ்க்கல்வியைப் பல்லாற்றானும் வளர்க்கப் போதிய பணம் சேர்ப்பதெங்ஙனம்? என்ற கேள்வி உண்டாகலாம். தமிழரின் தொகை இரண்டுகோடியை எட்டுவதால், தமிழின் அபிவிர்த்திக்கென்று அவர்கள் தங்களாலியன்ற தொகையை அவர்கள் ஜன்மத்தில் ஒருதடவையிற்கொடுத்தால், சராசரி ஒருவர்க்கு ஒருரூபாவீதம் கிடைக்காதா வென்று ஸ்ரீமத் ஸ்ரீ நிவாஸபிள்ளை கேட்கிறார். 200 லக்ஷரூபா சேகரிப்பது பெரிதல்லவெனபது அவர் நம்பிக்கை. அவ்வளவுதொகை கிடைக்குமானால், அதன் வட்டியைக்கொண்டு தமிழைப் பலவிதங்களில் வளர்க்கலாம்; ஐயத்திற்குச் சிறிதுமிடமில்லை. இச்சூழ்ச்சி நயப்படுமா வென்பதைத் தமிழபிவிர்த்திக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் உண்மையன்போடு உழைப்போர் யாவரும் சிந்திக்கக்கடவர். எவ்விதத்திலாவது பொருளுதவிபெறவேண்டும். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிப்படி, உள்ள மார்க்கங்களையெல்லாம் நாடிப் பொருளைச் சேர்க்கவேண்டும். பொருளிருந்தால், எடுத்த காரியத்தை அச்சமும் வருத்தமும் இல்லாமல் நன்கு நடத்தலாம்.

> "குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
> றுண்டாகச் செய்வான் வினை."

ஆங்காங்கு, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் தமிழ்ச்சங்கங்களின் அங்கத்தினர்களும் தமிழபிமானிகளும் தமிழும் தமிழ்நாடும் வளர்ந்து பொலிவும் நலனும்பெற்றோங்க ஒத்தமனத்துடன் உழைப்பாராக அவர்களது நன்னோக்கங்கள் ஈடேறுமாறு திருவருள் சுரக்க,

> "ஞானக் கரும்பின் றெளிவைப் பாகை நாடற் கரிய நலத்தை நந்தாத்
> தேனைப் பழச்சுவை யாயினானைச் சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
> கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்டகூத்தனைநாத்தழும்பேறவாழ்த்தி"

நித்தம் வணங்குவாம்.

கே. ஜி. சேஷையர்.

ஓர் ஐயுறவு.

இப்பொழுது சிலவருடங்களாக எனதுநண்பர் ஸ்ரீமத் விருதைச் சிவஞானயோகிகள்போன்ற சில நற்றமிழறிஞர்கள் திராவிடர் என்ற பதத்தைத் திருவிடர் என வமைத்துப் பேசியு மெழுதியும் வருகிறார்கள். அவ்வாறுசெய்துவருவோர் தமிழ்மொழிவல்லுநராகையால்,

"எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே"

என்ற விதிப்படி, இம்மாற்றம் தமிழ்மரபுமாற்றமாகத் தமிழரேற்றுக் காலக்கிரமத்தில் அதைச செம்மொழியாக வழங்கப்புகுவர். திருவிடர் என்ற பதம் தமிழரைக்குறிக்கும் பொதுப்பெயராக வழக்கில் ஒப்புக் கொள்ளத்தக்கதா? திராவிடர் என்றால் தமிழ்நாட்டார், தமிழர் எனப் பொருள்படும். சொற்பொருள்நோக்கின், திருவிடர் என்னாகும்? திருவிடர் என்றபதத்தைத் திரு+இடர் அல்லது திரு+விடர் என்று பிரித்து, இருவேறுபொருள் துணிபலாம். திரு என்ற மங்கலச்சொல் மேன்மையையுணர்த்தும். இடர் என்றால் துன்பம். ஓரினத்தார்க்கு உரியபெயர் திரு இடர் என்றால் அவர் பெரும் துன்பம் உருக்கொண்டாற் போலுள்ளவர், அல்லது பெருந்துன்பம் விளைப்பவர் எனறு கருதப் படுவர் இடரனறு; விடர் என்போமாயின், 'விடர் முனியிருப்புத் தூர்த்தர் கமர் வெற்பின் முழை காடைம்பேர்' என்றது சூடாமணி நிகண்டு. விடரினபொருள் அவையாயின் அவற்றுள் மானிடத்திரளுக்குப் பொருந்துவது 'தூர்த்தர்' மாத்திரந்தான். ஆகவே திருவிடர் என்றபதம் சிறந்த தூர்த்தர் எனப் பொருள்படும். எவ்வாறு பிரித்துப்பொருள்கொள்ளினும், அமையும் பொருள் விபரீதமேயாம். அதனால், திராவிடரை, இப்பொழுது புதிதாய்ப்புனைந்த திருவிடரென்ற பெயரா லழைத்தல் சிறப்பாமோ வென வையுறுகிறேன். 'திராவிடர்' என்றபதம் பிறபாஷைமொழியாயிருந்தாலும், தனித்தமிழ்ச்சொற்கள் போலவே தமிழ்நாட்டில் வெகுகாலமாக நடைபெற்றுவருகின்றது. அதன்பொருளைத் தமிழ்மக்கள்யாவரும் அறிவர். 'கடிசொ லில்லை காலத்துப் படினே' எனத் தொல்காப்பியர்கூறியபடி 'திராவிடர்' தமிழியற்சொல்லே எனக் கருதலால் விளையுந் தீங்கென்னை? 'திருவிடர்' என மாற்றுதலால் தமிழ்மொழி அடையும் பயன் யாது.

கே. ஜி. சேஷையர்.

டாலகவித்திரட்டு.

(உக-ஆம் தொகுதியின் ருருசூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள்.

(ஔவையார் பாடல்).

மூவர் தமிழ் மூன்று முன்சோழனைஞ்ஞூறு
நாவலர்மாணிக்கர்தலநாற்பத்தெட்—டோவறுசீர்
நூதனமில்லாலயங்கணூற்றறுபதுங்கூட
வோதவருமாயிரத்தெட்டோர்.

யாப்பிலக்கணங்கற்போர் சிந்திக்கவேண்டுவது.

(தாவு முதலியவற்றிற்குப் பரியாயநாமம்).

எருத்தமெருத்தியலிவைதாவினுக்கு
மிடைநிலைப்பாட்டிடைநிலைதாழிசைக்கும்
விட்டிசைதனிநிலைகூன்றனிச்சொற்கும்
பிரிந்திசைக்குறளேசொற்சீரடியெண்
ணசையடியம்போதரங்கத்துக்கும்
வண்ணமுடுகியல்வண்ணகமின்னு
மடுக்கியலெனுமிவையராகத்துக்கு
மடக்கியல்வைப்புவாரம்போக்கியல்
சுரிதகத்துக்குஞ்சொல்லுவர்நாமம்.

எழுவகைததளை.

மருவுவிளமுன்னர்நிரைநிரையொன்றாசிரிய
மாமுன்னேர்வரினேரொன்றாசிரியத்தளையாம்
விரவுங்காய்முன்னர்நேர்வெண்சீர்வெண்டளையா
மீட்டுங்காய்முனைநிரைகலித்தளையாமின்னே
கருதுகனிமுனைநேரொன்றுதவஞ்சி
கனிமுனிரையொன்றியவஞ்சித்தளையாமாமுன்
னிரையும்விளமுன்னேருமியற்சீர்வெண்டளையா
கிழல்கனியாம்பூக்காயாநிகழ்பொதுச்சீர்த்தளைக்கே.

தனிசிதையவருமிடத்து வல்லினமல்லாதவொற்றுக்கள் அலகுபெறுவென்பது.

சொல்லாறுவல்லினமல்லாதவொற்றிடைதோய்ந்துவரி
னில்லாதுநேர்நிரைநேரென்றுரைப்பர்நிறைந்தகல்வி
கல்லாதமாந்தர்கட்டமாங்கனியென்பர்கற்றறிந்த
நல்லார்வளம்படுகூவிளங்காயெனநாட்டுவரே.

தேவாரப் பண்வகை பதினெட்டு.

புறநீர்மைகாந்தாரங்கௌசிகமிந்தளமே
புகழ்பெறுதக்கேசிநட்டராகநட்டபாடை
நறியபழம்பஞ்சுரங்காந்தாரபஞ்சமஞ்சீர்
நன்மைபெறும்பஞ்சமத்தோடீரைந்தும்பகற்பண்
ணாதக்கராகமொடுபழந்தக்கராக
மணிசீகாமரங்கொல்லியியாழ்குறிஞ்சியுநற்
சிறியவந்தாளியுமேகக்குறிஞ்சிகுறிஞ்சியும்ராச்
செந்துருத்திசெவ்வழிதாண்டகம்பொதுப்பண்செப்பே.

பகற்பண் மூன்றுநாழிகைக் கொவ்வொருபண் ணோதலாம்; இராப்பண் மூன்றேமுக்கால்நாழிகைக் கொவ்வொருபண ணோதலாம்; பொதுப் பண்மூன்று மிரவும் பகலு மோதலாமெனபர்.

பகற்பண்ணுக்கிராகம்.

கருதுபுறநீர்மைக்குச்சீகண்டராகங்
காந்தாரநவரோசுகௌசிகம்பைரவியே
யுரிமையிந்தளம்லளிதபஞ்சமந்தக்கேசி
போதுகாம்போதிநட்டராகம்பந்துராளி
பெருநட்டபாடையிராகநாட்டைக்குறிஞ்சி
பெருகுபழம்பஞ்சுரந்தான்சங்காபரண
மருள்காந்தாரபஞ்சமந்தான்கேதாரகௌளவுள
மானபஞ்சமந்தானுகரிபகற்பண்பத்தே.

இராப்பண்ணுக் கிராகம்.

தக்கராகத்துக்கேயதுகுலகாம்போதி
சாற்றுபழந்தக்கராகத்துக்கிராகமில்லை

மிக்கசீகாமரந்தானுதநாமக்கிரியை
மிகுகொல்லிக்கிராகமில்லையாழுகுறிஞ்சிக்கே
வைக்குஞ்சௌராட்டகமேகாரகக்குறிஞ்சிக்கு
வருவது நீலாம்பரியந்தாளிகுறிஞ்சிக்குப்
பக்கமுறுகாம்போதிகுறிஞ்சிமலகிரியாம்
பகருமிராப்பண்ணெட்டாம்பாடுவிர்நாவலரே.

பொதுப்பண்ணுக்கிராகம்.

மன்னுசெந்துருத்திக்குவாழ்த்து மத்தியமாபதியா
மன்ன நிருத்தாண்டகம்பியாகடையே—முன்னமுரை
செவ்வழிப்பண்ணுக்குத்தெரிந்துரைக்கும்ராகமில்லை
யிவ்விதமூன்றும்பொதுப்பண்ணே.

சங்கமத்தைவழிபடுதல்.

கோதனத்தமுலையிலிங்கங்குருவாமேனி
கூறியசங்கமமுசமாங்சறிக்சங்காலை
போதமுலைபொழிந்திடுமென்றதாகன்பாகப்
புல்லளிக்கிலருந்தியிடாதுடலங்கொள்ளா
நீதியினலருந்துமுகத்தளித்தாலெங்கு
நிறைவாகுமுத்திசிவலிங்கத்தேனு
மேதமில்சங்கமத்தைவழிபடுவார்க்கறி
யெய்தரியசிவாநுபவமெய்தொணுதே.

விபூதிகொடுத்தல்.

அழித்திடுமங்குட்டமத்திமையுங்கூட்டி
லௌகிகசெல்வம்விலக்குமநாமிகையுஞ்சேர்த்தால்
வழுத்தியவாயுசும்பசுவுங்சொக்கும்பெற்ற
மைந்தரைப்போற்றுங்கநிட்டைவிரலைத்தாங்கிற்
பழிப்பிலையுத்தமமங்கையளித்தாற்றீமை
பற்றுமாசாரியன்பாலுலகந்தனின்
மொழிப்படியேயடியார்கள்வெண்ணீறெற்கின்
முன்புவிசாரித்தொழுகினலனுண்டாமே.

ஐம்பத்தாறுதேயங்கள்.

கொங்கணம்பல்லவங்குருதம்விலம்வங்கங்குலிங்கங்கடாரமீழங்
கோசலமவந்திமலையாளங்கௌளந்திதிரிகூடதுளுவங்குடகநா
டங்கமுச்சீனம்விராடம்வத்தமமொட்டியஞ்சாவகங்கலிங்க
மாரியம்விதர்ப்பமேகங்நோசிகொங்குபஞ்சாலங்தெலுங்குசீனங்
கங்கமத்திரமாளவஞ்சாளவஞ்சோனகங்கூவிளங்கல்யாணங்
கௌடகாகதமெய்காம்போசகாலிங்கமுறைகருநடமராடமச்சஞ்
சிங்களங்கோளநற்கன்னடம்பப்பரஞ்சிஞ்சமயகொச்சிருச்சஞ்
சேர்கேகயம்பௌளவம்விதேகங்கொலஞ்சிந்துகாந்தாரமாமே.

[அகராதியில் இப்பெயர்கட்கு வேறுபெயர்கூறுவது காண்க.]

அண்டத்தளவு.

வீட்டிற்சாளரவாயிலில்வெய்யோன்
கிரணத்தாற்காணப்படுந்துகள்கள்
அணுவாமவைபதினாறுகொண்டது
சிறுபிள்ளைமயிர்நுனியாகியசாக்கிர
மக்கசாக்கிரமெட்டாகுமிலீக்கை
யவ்விலீக்கையெட்டாகும்யூகை
யூகையெட்டுக்கொண்டதுயவையாம்
யவைநுறுக்காகவெட்டுக்கொண்டது
அங்குலமங்குலமிருபத்துநான்கு
முழமாமம்முழநான்குகொண்டது
வில்லாமவ்வில்லிரண்டுகொண்டது
தண்டந்தண்டமிராயிரங்கொண்டது
குரோசங்குரோசமிரண்டுகொண்டது
கெவியூதிகெவியூதியிரண்டுகொண்டது
யோசனையோசனைநூறுகோடி
கிழக்குமேற்குமேல்கீழாகப்
பிருதுவிதத்துவந்தன்னிலுண்டாகிய
வோரண்டத்தளவின்விரிவாமே.

[இலீகை—ஈர். யூகை—பேன். யவை—நெல்.]

[கந்தபுராணம், அண்டகோசப்படலத்திற் சில வேறுபடக்கூறுவர். தணிகைப்புராணம் அகத்தியப்படலத்திற் குரோச மிரண்டுகொண்டது கெவியூதியென்றார். யோசனைநாற்காதமென்றார் சிந்தாமணி விமலையாரிலம்பகத்தில்.]

ஒவ்வொன்றிலேசிறந்தவர்.

வில்லுக்குவிசயன்மல்லுக்குவீமன்
பரிக்குநகுலன்கொடைக்குக்கன்னன்
றைரியத்துக்குவிக்கிரமாதித்த
னிதிக்குக்குபேரனறிவிற்குச்சேடன்
பாக்கியத்துக்குப்புரந்தர
னீதிக்குச்சோழனட்புக்கிராம
னிட்டகாமியத்துக்கிருங்காமதேநு
புத்திக்குயூகிபுகல்சிவபத்தி
தனக்குமார்க்கண்டன்றகுமுபாயத்துக்
காயுங்கண்ணன்பிரகாசத்துக்
கரியசூரியனரிபத்திக்குப்
பிரகலாதன்பெருங்குளிர்ச்சிக்குச்
சந்திரன்கம்பீரத்துக்குவருணன்
ஞாயத்துக்குரவிலுந்தருமன்
பொறைக்குப்பூமிபுகல்சத்தியத்துக்
கரிச்சந்திரனழகதற்குமதனன்
றமிழுக்ககத்தியன்றகுமுழவுக்குச்
சடையன்வழக்குச்சாறறுவதற்கு
மரியாதைராமனுவாழ்த்துவர்கவிஞரே.

வரதுங்கபாண்டியன் தன்றம்பி அதிவீரராமபாண்டியன் நைடதஞ்செப்தமைதெரிந்து நாஸ்துதிபண்ணினனென்று இகழ்ந்துரைப்ப, அதுகேட்டுத் தம்பி கோபித்துவரத் தமையன் பின்வரும் வெண்பாவை யெழுதிவிடுக்க அத்தம்பி கோபந்தணிந்து வணங்கினனென்பர்.

செங்கதிரோன்பைந்நாகனைபுந்தென்னிலங்கைவேந்தனையும்
பஞ்சவரிற்பார்த்தனையும்பாராதே—மிஞ்ச

விரதநெறிபூண்டுமேதினியையாண்ட
பரதனையுமிராமனையும்பார்.

திருவாவடுதுறையிலெழுந்தருளியிருக்கிற திருமாளிகைத்தேவரைக் குறித்துக்கூறியகவி.

குடங்கர்விசும்பிடையெறிந்துகுணபநடந்திடவிபக்கக்
கொடிஞ்சித்திண்டேர்
வடங்கழற்றியோட்டிமதினந்திகளைவரவழைத்து
வாகுநர்காட்டி
யுடம்பிலெழுபுகைமாற்றிக்கொங்கணர்பாத்திரஞ்சுவற்றி
யுணவுதாய்வெந்
திடும்பயறுமுளைத்திடச்செய்தருடிருமாளிகைத்தேவ
னிணைத்தாள்போற்றி.

திருமாளிகைத்தேவர் காவிரிநீராடித் திருமஞ்சனத்திற்காகக் குடத்தி னீரெடுத்துக்கொண்டுவருபோது எதிரே பிணம்வரக்கண்டு கையிலிருந்த திருமஞ்சனக்குடத்தை மேலெறிந்து பின்னர்க் கையில் வந்திருக்கச்செய்ததும், அப்பிணத்தையெழுந்து நடந்துபோம்படி செய்ததும், சிதம்பரத்திலோடாமனின்ற தேரை வடத்தைக் கழற்றி யோடும்படிசெய்ததும், யுத்தஞ்செய்யவந்த வேசாசனசேனைகளை வெல்லும்படி திருமதிலிலுள்ள இடபங்களை வாவழைத்து விடுத்ததும், காவிரித்துறைபருகிருக்கின்ற சுடுகாட்டிற்பிணப்புகையெழுந்துபாவாமற் செய்ததும், கர்வங்கொண்ட கொங்கணசித்தருடைய அக்ஷயபாத்திரத்திலொன்றுமில்லாமல் வற்றும்படி செய்ததும், தன்குருவானவர் பூசையிலே நிவேதித்த பயற்றுச்சுண்டலைப் பிடியென்றுசொல்லிக் கொடுத்தபோது அதைவாங்கி, பிடியென்றதானே சொன்னாரென்பதைநினைத்துத் தான் பிடித்துக்கொண்டேயிருக்கப் பிறர்கண்டு நகைசெய்யநோக்கி அப்பயறு முளைத்துவளரும்படிசெய்ததுமாகிய அற்புதசரிதத்தைச் சுருக்கி யிக்கவியிற் கூறியதறிக.

எட்டுப்பேருக்குத்தரித்திரமுண்டென்றல்.

கவிகற்றபேர்க்குங்கணிதங்கற்றோர்க்குங்கம்மாளருக்குங்
குவிகட்டுமொட்டர்க்குங்கூத்தாடிகட்குங்குருக்களுக்கு

மவியுற்றயோகிக்கும்வாத்திமையோர்க்கும்வண்ணார்களுக்கு
மிவரெட்டுப்பேருக்கும்வெய்யதரித்திரமெய்திடுமே.

[குவி—சுவர். அவி—அடங்குதல்.]

தேவாரப்பதிகத்தொகை.

செப்பற்கரியதிருஞானசம்பந்தர்செய்ததமி
ழப்பத்தநுபதினாறயிரமப்பரோதியபாட்
டொப்பற்றநாற்பத்தொன்பானுதுமாயிரமூரனுரை
முப்பத்தேழாயிரமென்றேபெரியர்மொழிகுவரே.

தழைவிருப்புரைத்தல்.

மேதிக்குலஞ்சொரிபால்கயன்மாந்தும்விரைப்பழன
மதைக்கடவுள்சடாடவியோமணிப்போணியோ
வாதிததிருநகையோவிழிபோசெகையம்பினமபோ
போதுறறசேவடியோவையமேதந்தபூந்தழையே.

[மாதை—ஆமாத்தூர். இப்பழங்கவி ஆமாத்தூர்க்கோவையிலுள்ள
தோ அல்லது தனிக்கவியோ தெரியவில்லை.

நாழியளவு.

நூறுயிரத்தொருபத்தைபாயிரத்திருநூ
றேறுதொருநாழியெள்ளென்ப—வீறும்
பருநெல்லுத்தான்பதினாலாயிரத்துநானூ
றரிசிபதினெண்ணாயிரம்.

மநுக்கள்பதினால்வர்பெயர்.

ஆனசுவாயம்புசுவரோசிடனுத்தமன்றுபமநுவென்றுங்கு
மானரைவதன்சாட்சுசன்வைவைச்சுதன்சூரியசாபர்ன்னி
தானசாபர்ன்னிருத்ரசாபருன்னியச்சுவசாபான்னிகல்வித்
தானபிர்மசாபர்ன்னிதட்சசாபன்னிதர்மசாபர்ன்னியீரேழே.

என்பது—சுவாயம்புமநு, சுவரோசிடமநு, உத்தமமநு, தாபமநு, ரைவதமநு, சாட்சுசமநு, ஆக மநுக்கள் அறுவர் முன்னுள்ளவர். இப்போதுள்ளமநு வைவச்சுதமநுவாம். இனிமேலுள்ள மநுசூரியசாபான்னிமநு, சாபர்ன்னிமநு, ருத்திரசாபர்ன்னிமநு, அச்சுவசாபான்னிமநு,

பிர்மசாபர்ன்னிமநு, தட்சசாபர்ன்னிமநு, தர்மசாபர்ன்னிமநு ஆக எழுவர். ஆக மநுக்கள் பதினல்வரென்றவாறு.

பெண்கள் ருதுவானபோது கட்டியிருந்த புடவை கொம்பிறேற் கிழிந்தது, தீப்பட்டது எலிகடித்தது ஆகவிருந்தாற் பலனறிக.

திட்டமாந்திரட்சிகொம்புதியெலிபட்டகூறை
வட்டமேற்பொருளாசீனிலைமரணமாமூலையானற்
பட்டவானுதலேனோவாம்பகருமக்கூறைதனனிற்
சட்டமாய்ச்சதுரமாகிற்சத்துருநாசந்தானே.

இராசபாளையஞ் சங்கரமூர்த்திக் கவிராயர் சேற்றூர்ச் சமஸ்தானத்திற்கு வந்தபோது எழுதிவிடுத்த வெண்பா.

செந்தமிழிற்கும்பன்பாச்செய்வதனிற்கம்பனுடன்
வந்தெதிர்ந்தோர்தமக்குமாரபாணி—சந்ததமு
நவகருணைமீனாட்சிநாதவேளின்றெடுதத
சங்காமூர்ததிக்கவிராசன்.

இவர் மூன்றுந்திருநாளிற் கூறியகவி.

பாகசாதனர்போற்றுஞ்சேறைவிழாமூன்றிற்றம்பத்தாவென்னு
மேனாதனைவீற்றன்னிலையொருபூதமெடுத்துக்கொண்டு
சேபாமகயிலைமனஞ்சக்கிடாளபெறறநாயகிசூலப்போர்வேலேந்தி
வங்கைசூடியவீரசங்கயானைமறிவருகின்றாளே.

இச்சேறைச சிவப்பிரகாசத்துரை போசனஞ்செய்து கரசுத்திக்து வருமபோது வந்த இச் சங்கரமூர்த்திக் கவிராயரை யுபசார வழைப்புக்கூற அப்போது அவர் கூறிய வெண்பா.

ஒருகையிலேயன்னமொருகையிலேசொன்னம்
வருகையிலேசமானவார்த்தை—பெருகுப்கழ்ச்
சீமானமேகள்சிவபபிரகாசத்திருவக்
கோமானுக்குள்ளகுணம்.

[போசனம்பண்ணும்போது வலக்கைமோதிரத்தை யிடக்கையிலிட்டிருந்தமையால் 'ஒருகையிலே சொன்ன' மென்றாரெனக.]

இங்ஙனம்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்,

திருவாவடுதுறையாதீன வித்துவானுமான,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

இராமகுட நாடு.

லண்டன்மாநகரத்தினின்றும் பிரசுரிக்கப்படும் ராயல் ஏஷியாடிக் சங்கத்தின் 1922-ம் ஆண்டின் ஏப்ரல்மாத சஞ்சிகையில், இப்பொழுது திருவனந்தபுரராஜ்யத்திற் கல்வெட்டுப் பரிசோதகராயிருக்கும் திருவாளர் K. V. சுப்பிரமணிய ஐயரவர்கள் (B A , M R A S)தென்னிந்தியாவில் தெரிந்துகொள்ளப்படாத நாடு (An un-identified territory of South India) என்று மகுடமிட்டுப் பதினைந்து பக்கங்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதியவற்றின் சாரம் வருமாறு:—

மேலைத்தொடர்ச்சிமலைக்கு மேற்கிலுள்ள நாடுகள் மலையரணாற் சூழப்பட்டிருப்பதால், ஒருவராலும் அடையமுடியாததாயும், ஆங்குக் குடியேறியிருப்பவர்களது வாழ்வு இப்படிப்பட்டதென்று கூறமுடியாததாயும் இருந்துவந்திருக்கிறது. அப்படியிருந்தநாட்டில், தென்னிந்தியாவிற் கீர்த்திவாய்ந்திருந்த அந்தத் தைரியசாலியாகிய முதலாம் ராஜராஜனென்னும் சோழசக்கரவர்த்தி படையெடுத்துச்சென்று கொல்லத்தையும் கொல்லதேசத்தையும் வென்றான். அவனோடு அவனமகனான ராஜேந்திரசோழன் சென்றுவந்தான. இவன் மெய்க்கீர்த்திகளை ஊன்றிப் பார்ப்போமானால் இவன் சோழர்களிற் பெரியோனெனச் சொல்லத் தடையில்லை இவனுடைய போர்களெல்லாம் இவனுடைய மகனான ராஜாதிராஜனால் நடத்தப்பட்டன. இவ்விராஜாதிராஜன் 1018 லேயே இளவரசனாக நியமிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லவிடில் இவன் சிம்மாசனம் ஏறிய 1045 லிருந்து 1050-க்குள் மெய்க்கீர்த்தியிற்கண்ட காரியங்களைச் செய்திருக்கமுடியாது. மெய்க்கீர்த்தியிற்கண்டவற்றுள், நேரவாசாட்சி சம்பந்தப்பட்டவைகளைப்பற்றிக் கூறுவதற்கும், அந்நாட்டின் உட்பிரிவுகளைத் தெரிந்துகொள்ளுவதற்கும் கூடவில்லை. இவ்விதமபிடிபடாததும் தெரிந்துகொள்ளாததுமான நாடு ராஜாதிராஜனுடைய கல்வெட்டுக்களில் இருக்கின்றது.

பாண்டியர்களைச்சயித்தபிறகு அந்த ராஜேந்திரசோழன் சேரநாட்டிற்குச் சென்றனன். அவன் நடத்தியபோர் பின்வருமாறுவருணிக்கப்படுகிறது.

"ஒல்கலில்,வேணாட்டரசைச்சேணாட்டொதுக்கி
மேவுபுகழ்இராமகுடமூவர்கெடமுனிந்து
மிடல்கெழுவில்லவன் குடர்மடிக்கொண்டுதன்
னாடுவிட்டோடிக்காடுபுகவொளிப்ப
வஞ்சியம்புதுமலர்மலைந்தாங்கெஞ்சலில்
வேலைகெழுகாந்தளூர்ச்சாலைகலமறுத்தருளி"

என்று காணப்படுமிவ்வடிகள் தனிப்பட்ட ஒரு போரைக் குறிக்கின்றன. இவற்றின் பொருளாவது:—"ஜயிக்கமுடியாத வேணாட்டரசனை வானுலகிற்சேர்த்து, இராமகுடத்தின மூன்று அரசர்களைப பழிக்கும் படியாகக் கடும்போர் புரிந்து, வயிறுமடித்துக்கொண்டு வில்லவனை சேரன் ஓடும்படியும் செய்து, அழகான வஞ்சிமலர்மாலைசூடிக் காந்தளூர்ச் சாலையிலிருந்த கப்பல்களை யழித்து" என்பதாம்.

மேற்குறித்த கல்வெட்டிற் காணப்படும் பெயர்ச்சொற்களான வேணாடு, இராமகுடம், வில்லவன், காந்தளூர்ச்சாலை என்பவற்றுள் வேணாடு என்பதைப் பிரித்து எவ்விதம் கொண்டாலும அது ஒரு நாடு என்பதும், வில்லவன் என்பது சேரனைக்குறிக்கும் என்பதும், காந்தளூர்ச்சாலை என்பது சேரநாட்டிலுள்ள ஒரு கடற்கரைப்பட்டின மென்பதும் யாவரும் அறிந்தவிஷபம். இப்பொழுது தெரியாதிருப்பது இராமகுடமே.

இனி, இராமகுடத்தைப்பற்றி யாராய்வோம். இதனை இரா+மகுடம் என்றும், இராம+குடம் என்றும் பிரிக்கலாம். ஆனல் இரா+மகுடம் என்பதிற் பொருள்விளங்குமாறில்லை; ஆகையால் இராம+குடம் என்பதை ஸம்ஸ்க்ருதப்ரயோகம்கொண்டு பார்ப்போமானல் ராம+கட என்பதற்குப் பொருந்தும். ஆகவே, அது ராமகடமாகவே யிருக்கலாம். சென்னைக் கல்வெட்டுச்சாலையிலுள்ள ராஜாதிராஜனது கல்வெட்டுக்களைப் பார்ப்போமானல் இராமகடம் என்ற எழுத்துக்களை யுடைய கல்வெட்டுப்பிரதிகளையும் காணலாம்? ஆகையால் இது ராமகட மென்பதே நிச்சயம்.

ராமகுடம் ராமகடமாகவே, அது இருந்த ராச்சியந்தான் எது வெனில் அதனை மூஷகராச்சியம் என்று கூறுவோம். அதன் எல்லையும் கன்னடப்பிரதேசமாகும். இந்த மூஷகவமிசவரலாறு வருமாறு:—

முன்னொருகாலத்திற் பரசுராமர் ஒரு க்ஷத்திரியனைக்கொன்ற போது கருப்பவதியாயிருந்த அவன் மனைவி உடன்கட்டையேறத் துணிந்தனள். அந்நாட்டு மந்திரி அவளைத்தடுத்துத் தூரத்திலிருந்த ஒரு குகையில்வைத்துக் காப்பாற்றிவந்தான். அங்கே யானையவ்வளவு பருமனுள்ள ஒரு எலி அவளை விழுங்கவந்தது. அவள் தனது கோபாக் கினியினால் அதனைச் சாம்பராக்கினாள். பின்னர் அவட்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. வளர்ந்துவந்த அப்பிள்ளையிடத்தில் அன்புடைய ராய்ப் பரசுராமர் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தனர். அவனுக்கு மூஷகராமகடன் என்று பெயராயிற்று. அந்தராஜ்யம் மூஷக ராஜ்யம் எனப்பட்டது. இந்தராஜ்யமே கோலாத்ரி அரசர்கள் வசிக் கின்ற பிரதான ஆற்றின்கரையிலுள்ள கோலம் என்னும் ஊரைத் தலை நகராகவுடைய எலிமலைராஜ்யம். இந்நகரிலிருந்து வப்ரா, கிள்ளா என்ற ஆறுகளைக் கடந்து எலிமலை செல்லவேண்டும். இந்நாட்டில் அநேக மூஷகவமிச அரசர் ஆண்டிருக்கின்றனர். ஆகவே, இக்கல்வெட் டிற்கண்ட இராமகுடமூவர் என்பது மூஷகராஜ்யத்தையாண்ட மூவர் என்பதை விளக்கும் என்பதுதான் ஐயரவர்கள் எழுதியதன்சாராம்சம்,

இவர்கள் இவ்வாறெழுதுவதற்குச் சாதகமாகவிருந்தகல்வெட்டின் முதற்பாகம் வருமாறு:—

" திங்களேர் தருதன் றொங்கல்வெண்குடைக்கீழ்
நிலமகணிலவமலர்மகட்புணர்ந்து
செங்கோலைச்சிக்கருங்கலிகடிந்துதன்
சிறியதாதைபுந்திருத்தமையனுங் குறிக்கொள்தன்
னிளங்கோக்களைநெறிபுணர்தன்றிருப்
புதல்வர்தம்மையுங் கன்றிபதெறுசில்
வானவன்மல்லர்மீனவன்கங்க
னிலங்கைபர்க்கிறைவன்பொலங்கழற்பல்லவன்
கன்னகுச்சியர்கவலனென்னப்
பொன்னணிசுடர்மணிமகுடஞ்சூட்டிப்

படர்புகழாங்சவர்க்கவர்நாடளிப்ப
ஆங்குறுதென்னர்மூவருள்
மானாபரணன்பொன்முடி-ஆனாப்
பருமணிப்பசுந்தலைபொருகளத்தரிந்து
வாரளவியவீரகேரளனை
முனைவயிற்பிடித்துத்தனதுவாரணக்
கதக்களிற்றாலுதைப்பித்தருளி
அந்தமில்பெரும்புகழ்ச்சுந்தரபாண்டியன்
கொற்றவெண்குடையுங்கற்றைவெண்கவரியும்
சிங்காதனமும்வெங்களத்திழந்துதன்
முடிவிழத்தலைவிரித்தடிதளர்ந்தோடத்
தொல்லைமுல்லையூர்த்துறத்திபொல்கலில்
வேணாட்டரசைச்சேனாட்டொதுக்கி
மேவுபுகழிராமகுடமூவர்கேடமுனிந்து
மிடல்கெழுவில்லவன்குடர்மடிக்கொண்டுதன்
னாடுவிட்டோடிக்காடுபுக்கொளிப்ப
வஞ்சிபம்புதுமலர்மலைந்தாங்கெஞ்சலில்
வேலைகெழுகாந்தளூர்ச்சாலைகலமறுத்து
ஆகவமல்லனுமஞ்சக்கேவுதன்"

என்று காணப்படுகிறது.

இதனில் 12–வது வரிவரையிலுள்ளவை தனது சிறப்பினையும், தமையனையும், தம் மகளுட்சிலரையும், பிள்ளைகளிற்சிலரையும், தான் கைக்கொண்ட ஒவ்வொரு தேசத்துக்கும் ராஜப்பிரதிநிதிகளாக வைத்திருந்தான் என்பதை விளக்குவன. இச்செய்தி பின்னும் சில கல்வெட்டுக்களால் வலியுறுகிறது. இவர்களைக் கொண்டநாடுகாவலர் Wardens of the Marches என்பர் டாக்டர் S. கிருஷ்ணஸாமி ஐயங்கார்.

மேலேகாட்டியவற்றுள் 13 முதல் 27வரையுள்ள அடிகட்கு யாம் கூறும் பொருள் வருமாறு:-மேல் 13-ம்வரியில் தென்னர் என்று காணப்படுவது சோழநாட்டிற்குத் தெற்கிலுள்ளவர்களைக் குறிக்கும். அவர் மூவராவர். அம்மூவருள் இலங்கையர் அதிபனை மானாபரணனது பொன்முடிபொருந்திய தலையை அரிந்து (13–14), பெருமையுடைய

வீரகேரளன் என்னுஞ்சேரனை யுத்தகளத்தின்முனையிலேபிடித்துத் தன்னுடைய பட்டத்துயானையைவிட்டிடறும்படிசெய்து (15–17), ஒருநாளும் கெடாத பெரிய புகழையுடைய சுந்தரபாண்டியன், ஜயம் பொருந்திய வெண்கொற்றக் குடையையும் கற்றையாகிய வெண்கவரியை யும் சிங்காதனத்தையும் பொருகளத்திலே இழந்துவிட்டுத் தன் தலையி லிருந்த கிரீடம் விழும்படி காலடி தளர்ந்து ஓட முல்லையூர்வரையிற் றுரத்தி (18–21) குறையாத வேணாட்டிலுள்ள அரசரைக்கொன்று (22), இப்படியாகவந்த புகழில்லா மூவர்மகுடமும் கெடும்படி கோபித்து, பலம்பொருந்திய வில்லவன் குடர்மடியும்படி தன்னாடுவிட்டுக் காட்டில் ஓடி ஒளிந்துகொள்ளும்படி வஞ்சிமலர்மாலைசூடி, காந்தளூர்ச்சாலையி லுள்ள மரக்கலங்களையழித்து (27) என்பதாம்.

ஐயரவர்கள் கூறியதற்கும் இதற்குமுள்ள வித்தியாசம் வருமாறு:—

1. இரா+மகுடமன்று; இராம+குடமென்பது.

2. அது மூஷகநாட்டைக் குறிக்குமென்பது.

ஆயினும், அவர்களே மேற்கூறிய உரைநடையில் முனிந்து என்பது இறந்தகாலத்தைக் காட்டும் வினையெச்சம் என்று கூறியிருப்ப தால் அதனைப் பற்றிய சங்கை யொன்றுமில்லை. இம்முனிந்து என்ற வினையெச்சம் இனிவரும் அரசாண்டனன் அல்லது வீற்றிருந்தருளிய என்ற சொல்லைக்கொண்டுமுடிவது. முனிந்து என்ற செயப்படுபொருள் குன்றுவினையின் செயப்படுபொருள் மூவர் என்பது. இப்பன்மைப் பெயர்ச்சொல்லின்பின்னிற்பது மகுடமென்பது. ஆகவே, மகுடமூவ ரென்பது. இம்மூவர் யார் என்ற வினா வெழும்போது மேல் 13-ம்வரியி லுள்ள தென்னர் மூவர் என்பது விடையாகும். அத்தென்னர் மூவராவார் இலங்கையர்கோனான மானாபரணன் சேரன் வீரகேரளன், பாண்டியன்—சுந்தரன் என்பவராவர். இவர்கள் புகழ்மேவிஇராத மகுட மூவராவர். இவர்கள் முடிகெடும்படி சோழன் கோபித்தானென்பதாம். மேலும் 13-வது வரியிலுள்ள மூவருள் என்பதிலுள்ள உள் என்ற ஏழாம்வேற்றுமைப்பொருள்பயக்கும் சொல்லையும் ஆராயவேண்டும். இந்த உள் என்ற சொல்லாற் சோழராச்சியத்திற்குத் தெற்கிலுள்ள

ராச்சியாதிபதிகளான மூவரிலே ஒருவனை என்பதைப் பிரித்துகாட்டுந் தன்மை விளங்கும் இப்படியே ஒருவனை அரிந்தும் ஒருவனை உதைப்பித்தும் ஒருவனைத் தாத்தியும் ஆக மூவரையும் கெடமுனிந்தும் என்று பொருள்கொள்ளவேண்டும். இவ்வாறு பொருள்கொள்வதற்கு 'வேணாட்டரசைச் சேணாட் டோதுக்கி' என்று நடுவிற்காணுமொரு அடி தடையாகாதோவெனின் ஆகாது; இவ்வரசு நடுவிலுள்ள ஒரு வேளையன்றி மகுடமணிபக்கூடிய பேரரசன்று; அன்றியும், இரண்டு பேரரசுகளுக்கு நடுவண்உள்ள இடைநாட்டரசனு மாகலாம். இக்காலத்து, ஐரோப்பியவல்லரசுகட்கிடையிலுள்ள பெல்ஜியத்தை இடைநாடு (Buffer State) என்பதை ஆராய்ந்தால் இதனுண்மை புலனும். ஆகவே இடைப்பட்ட வேணாட்டரசைக்கொன்று என்றூர். இதனுற் பொருள் குன்றுது. இவைகளால் மேவு+புகழ்+இரா+மகுடமூவர் என்று கொள்வதே தகுதியும் செம்பொருள் பயப்பதுமாம்.

இனி, ராமகுடமூவர் என்று கொண்டாற் குற்றந்தானென்னை யெனின்,

(1) இதற்கு முன்னுவது பின்னுவது இதுமாதிரியான நாடொன்று இருந்ததென்று ஒரு கல்வெட்டிலும் படித்தோமில்லை.

(2) கல்வெட்டுக்களில் ராமகுட என்று காணப்படுவதனை ராமகடமென்றுகொண்டு பொருள்கொள்வது தகுதிவழக்கன்று இராமகுட என்பதில் மகர உயிர்மெய்யை அடுத்து நிற்கும் எழுத்து க வைப்போற் காணப்படுகிறதென்றால் அவ்வாறு அதனைக்கொள்ளாது கு என்று தான் இதுவரை படித்து வருகின்றனர். இப்பொழுது மாத்திரம் திரித்துப் பொருள்கொள்வானேன்,

(3) இதுவரை மெய்க்கீர்த்திகளிலெல்லாம் ஒருவன் வென்ற நாட்டினரையெல்லாம் கூறுமிடத்து அந்நாட்டின்பெயரையோ

அரசன்பெயரையோகூறுவது வழக்கமாகலின், ஈண்டும் மூஷக வாசர்களை என்று நாட்டின்பெயரையாவது, மானபரணன், சுந்தரபாண்டியன் வீரசோளன் என்பதுபோல அரசன் பெயரையாவது கூறல்வேண்டும். அப்படியொன்றுமில்லை.

(4) இடுகுறிப்பெயராக ஏற்பட்ட மரம், புல், தலை, கண் போன்ற சொற்களைத்தவிர மற்றச்சொற்களெல்லாம் முதலிற் காரண காரியப்பொருட்டாகிநின்று பொருளையுணர்த்திப் பின்னரே இடுகுறியாக வழங்கக்காண்கிறோம். உதாரணமாக 'இராமன் என்னும்பெயர் இரமிக்கப்படுவதென்னும் பொருளைப் பயப்ப தாய் அதனை உடையானை முதலிற் குறிப்பித்தபிறகன்றோ இப்பொழுது கட்டு முறுப்புங் காரணமுங் கொண்டதொரு மெய்யுடையானுக்கு இடுகுறியாக வழங்கப்படுவது. அது போலன்றோ ராமகுடமும் ஏற்படவேண்டும். அன்றியும், ராமரால் கடம் கொண்டு ஆட்டுவிக்கப்பட்டான் ஒருவன் இருப்பானாயின், அவ்வரலாற்றைக் குறிக்குஞ் சொல் 'ஆன்' அல்லது 'ஆர்' விகுதிபெற்றிருக்கவேண்டும். இராம+கட+ மூவர் என்றபோது இவர்கள் கூறுவதுபோலக் கொண்டா லும் கடத்தால் ஆட்டுவிக்கப்பட்ட மூன்று வெவ்வேறு அர சர் என்று பொருள்பயப்பதல்லது ஒரேவமிசத்தினர் என்று பொருள் தராது. அவர்களும் ஒரேகாலத் திருந்திருக்க விய லாது. இவைகளன்றி, இராமன் என்பது, மூன்று இராமர் களைக்குறிக்குமென்பது ஐயரவர்கள் அறிந்ததொன்றும், அம் மூவர்களுள் இங்குக்கூறிய இராமர் இன்னாரென்று நிச்சயித் தற்குரியசொல் ஒன்றையும் காண்கிலேம். மலையாளநாடே பரசுராமக்ஷேத்திரமென்போமாயின் அது ஒரு புனைந்துரை என்றும், இயற்கையின்றெழிலாற் கடல்வற்றி நாடாயிற் றென்றும் பிரபல நியாயங்கள் காட்டி. கிருஷ்ணபோதுவல்

என்ற மலையாளவாசி ஒருவர் முன்னமே நிரூபித்திருக்கின்றனர். இவர்களோடு நில்லாது காலஞ்சென்ற கனகசபைப் பிள்ளையவர்களும் சில ஆதாரங்களைக்காட்டி அங்ஙனமே நிகழ்ந்திருக்கவேண்டுமென்று எழுதியுள்ளார்கள். ஆகவே இது பொருந்துமாறில்லையென்பது தெளிவாகின்றது.

(5) தமிழ்ச்சொற்களைப் பிரித்துப் பொருள்கொள்ளும்பொழுது முன்பின்னுள்ள அடைமொழிகளைக் கவனித்துப் பொருள் கொள்ளுவது மரபு. ஈண்டு இராமகுடமூவருக்குப் பின்னுள்ள சொற்கள் மேவுபுகழ் என்பன. இவற்றின்பொருள்—அடைந்த கீர்த்தி என்பதாம். அது இன்னதெனத் தெரிந்தார் இதுவரை ஒருவருமில்லை. அன்றியும் அவர்கள் கூறும் கேரளோற்பத்தியாவது கேரளமாஹாத்மியமாவது கூறவும் கேட்டோமில்லை. இவர்களும் கூறினார்களில்லை. இவ் அடைமொழிகள் ஒருவரைப் பற்றாது மூவரைப் பற்றுகின்றன என்பதும் கவனிக்கவேண்டும். அவர்களுள் யாராவது ஒருவருடைய புகழாவது தெரிந்திருக்கலாம். இல்லாவிடினும் வேறு பல்வகைப்பட்ட கல்வெட்டுக்கள் பட்டையங்களிலாவது இருந்து கல்வெட்டுப் பரிசோதகர்கள் பொருளுரைகளி (Reports) லாவது காணப்படலாம். அப்படியொன்றையும் கேட்டோமில்லை. ஆகவே இது பொருந்துமாறில்லை.

ஆகவே இதுவரையிற் கூறியதுகொண்டு "மேவு புகழ் இராமகுட மூவர்" என்று பொருள்கொள்வதே தகுதியுடையதாம்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

பூஞ்சோலைகாவலன்.

[செந்தமிழ் ௨௰-ஆம் தோகுதியின் ௩௦௭-ஆம் பக்கத்தொடர்ச்சி]

வங்கமொழிக்கவிவாணர் தென்றமிழ்நாட்டுக்கு வந்திருந்தகாலையிற் சங்கநூற்செல்வத்தைத் தமிழுலகிற்குதவிய பெருந்தகையாரது திருமனைக்குச்சென்று கலந்துறவாடினாராதலினால், இருபெரும்புலவருக்குமிடையே யொருபெருங்கேண்மையுளதாயிற்று. சின்னாட்களின்முன்னர், யான் நம்புலவர்பெருமானுழைச் சென்றிருந்தபொழுது, அவர் தாம் வங்கமகாகவியினது கவிவனப்பையுணர்வதற்கு எனது மொழிபெயர்ப்பு ஒருவாயிலாயிற்று என உரைத்ததுமன்றிச் "செந்தமிழி"ல் வெளிவந்த "பூஞ்சோலைகாவல"னைத் தொடர்ந்தெழுதி வெளியிடல்வேண்டுமெனவும் பணித்தருளினார். செந்தமிழபிமானிகள் வேறுசிலரும் அங்ஙனமுரைத்தாராதலினால் என்னாலியன்றசெய்தற்கு முன்வந்தேன். மொழிபெயர்ப்பு இனிது நிறைவேறும்வண்ணம் நல்லிசைப்புலவர்நாவினடம்புரிகின்ற சொல்லின்கிழத்தியாகிய மெல்லியலருள்புரிவாளாக. "பணியாளன்றனக்கிரங்கி" என்னும் முதனிலையுடைய முதற்செய்யுளும் "புலவ!, மாலைப்பொழுதுஞ்சாலவந்திறுத்தது" என்னும் முதனிலைபெற்ற இரண்டாஞ்செய்யுளும் முன்னமே வெளிவந்தன.

மூன்றாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

உலகுதொழுமிளம்பரிதி
மலர்கிரணவகைபரப்பி
வேலைமுகட்டிலிருள்கழிந்தெழுந்த
காலைப்பொழுதிற்கடற்புறஞ்சார்ந்தங்
கலைநீர்த்தண்ணகன்பரப்பில்
வலைவீசிவலிந்திழுத்தேன்,
ஆங்கு,
புன்முறுவல்பூத்ததெனக்
கண்ணீர்த்துளிகான்றதெனப்

பெண்ணீர்மைப்பெருவனப்பின்
வண்ணமணமகள்முகத்தின்
உண்ணின்றெழுதருமுவகையீங்கிதுவென
வேறுவேறுருவின்வேறுவேறுபல்பொருள்
காராழியிருணீத்துச்
சீராருங்கரைசேர்ந்தன ;
அவற்றை,
வாரியெடுத்துத்தோண்மேலிட்டு
மனையகநோக்கிவந்தென்காதற்
கணிகலமாகியவஞ்சொன்மடமொழி
போதிதழ்கிள்ளும்பொழுதுபோக்கில்
ஏதமற்றிருந்தவினியாண்முன்னர்
ஒருகணமறுகித்துணிவுற்றணிபிழை
மெல்லடிப்பாங்கரப்பல்பொருள்வைத்துச்
சொல்லாடாதவள்சொற்பெறநின்றனன் ;
நல்லாள்,
கடைக்கணோக்காலென்கையுறைநோக்கிப்
பல்வகைக்கோலச்சில்பொருளிவைதாம்
தருபயனெதுவெனச்சாற்றியமாற்றம்
என்செவிப்பட யான்,
நாணத்தாற்றலைவணங்கி
மாலுற்றவருஞ்சமரிற்
பகைதயுந்துவிறல்காட்டிப்
பெறுபொருளிங்கிவைபல்ல
பொன்விலைகொடுத்தபொருளுமலவால்
இன்னுயிரனையாட்கிவைதகாவெனத்
தனிநிசியிற்றுனியுடனே
எடுத்தெறிந்துத்தெருப்புறத்தில்
வீசினன்மறுநாள்விடியலில்வழிச்செல்
வோர்பலர்குழுமியொவ்வொன்றையெடுத்
தகனிலமருங்கிற்பலவயிற்கிடந்த
சேயதம்மூர்க்குக்கொண்டுசென்றனரே.

இச்செய்யுளின்கண்ணே "புன்முறுவல்பூத்ததெனக்—கண்ணீர்த் துளிகான்றதெனப்—பெண்ணீர்மைப்பெருவனப்பின்—வண்ணமணமகள் முகத்தின்—உண்ணின்றெழுதருமுவகையீங்கிதுவென —வேறுவேறுரு வின்வேறுவேறுபல்பொருள்" எனக் கவிஞர் எடுத்துரைத்தன பல்வேறு பொருளவாகத் தாமியற்றிய கவிகளையெல்க; புன்முறுவல், கண்ணீர், உவகை யென்னுமிவை கவிச்சுவைகளாகலான். "காராழி" யென்றது அறிவுக்கடலை. "காலைப்பொழுது"என்றது கவிஞரது இளம்பருவத்தை. 'சாதற்கணிகலமாகிய அஞ்சொன் மடமொழி"யென்றது தமது சொந்தத் தேயத்தை. வழிச்செல்வோர் சேயவூர்க்குக் கொண்டுசென்றாரென்றது தமது கவிநயத்தைத் தமது நாட்டினர் புறக்கணிக்க வேற்றுத்தேயத்தார் மகிழ்ந்தேற்றுக் கொண்டுசென்றாரென்பதைக் குறிப்பது.

நான்காஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

(நான்கடிமேல் ஈரடிவைப்பு)

திருவார்மனையைக்கடைக்கேறுந்தெருவிலமைத்தாரெமரையோ
வருவார்போவார்தத்தமது மனத்தின்வண்ணம்வழிச்சென்றார்
தருவிற்பாரத்தோணியினைத்தளைந்தார்யானும்பேசாது
மருவியிருந்தேனென்வாணாள்வறிதுகழிந்துபோயதையோ
வறிதுகழிந்துபோயதென்றன்வாணாளையோவருவோரைத்
திறலீர்வாதீரிவணென்னச்செப்பவென்னான்முடியாதே.

இரவும்பகலுங்காலரவமிடுவார்கடைவாயிற்புறத்தில்
விரைவில்வருவார்தமைநோக்கிவீணேயும்மையானறியேன்
உரவீரென்றேன்புதியரலருதிரமுயிர்ப்பாற்கனவினால்
விரவின்பரிசத்தாலறிந்தேன்மேவாதீரென்றுரையேனால்
மேவாதீரென்றுரையாதுவிரும்பியெவருமித்திசையே
ஓவாதென்றன்மனைநோக்கியுவந்துவருவீரெனவழைத்தேன்,

காலைப்பொழுதிலாலயத்திற்கண்டநாதமெழுஞ்சமயம்
ஓலைக்கூடைகரத்தேந்தியுவந்துவந்தாரடிசிவப்பக்
கோலமுகத்திற்செய்யவொளிகூடவருவார்தமைநோக்கிச்
சீலத்தீர்நீர்வாலொழிமின்தேர்ந்தேனலனென்றுரையேனால்
தேர்ந்தேனலனென்றுரையாதுசெல்வோர்தம்மைவிளித்தெனது
பூந்தோட்டத்தினுட்புகுந்துபூக்கள்கொய்யவம்மினென்றேன்,

மாதேயுச்சிப்பொழுதிலாமனையில்மணியிளைசையெழ
யாதோகருதித்தொழில்வெறுத்திவ்வெல்லைவந்து நிற்கின்றார்
போதார்குழலிற்பூவாடப்புல்லுந்தழலினொளிவாட
மீதேவந்தார்தமைநோக்கிமேவாதீரென் றுரைத்திலனால்
மேவாதீரென் றுரைபாதுவிளித்தன்றுரையென்னரிய
ஆவியனையீர்மாநீழலணைவோம்வம்மினெனவழைத்தேன்.

சீராார்மாலைவந்தெய்தச்சில்வண்டொலிசோலையினெழவே
யாரோகதவந்தனைமெல்லவசைத்துமருந்நவநின்றார்
தேரேன்முகத்தைச்சிறிதுகண்டேன்செப்பமொழிபுந்திசைவானில்
ஆராவமைதிநிலைபுமுறவயல்வந்துற்றார்விருந்தினரே
அயல்வந்துற்றவிருந்தினரையடையீரென்னத்தடுக்கறியேன்
இயல்சேர்முகத்தையிருட்கண்டேனிரவுங்கனவும்விரைந்தனவே.

"யாதுமூரேயாவருங்கேளிர்" என்ற முதுதமிழ்ப்புலவருரையை நோக்கும்போது கவிஞாயிறுக்கு உலகத்தாரனைவரும் கேளிரேயாவர். ஆதலால் உலகத்தார் அவரில்லத்தைத் தமரில்லமாகப்பாவித்து வருவதும் போவதுஞ்செய்வர். அங்ஙனம் வருவதையும் போவதையும் கவிஞர் தடுத்தற்குச் சிறிது முயன்றாரெனினும் மனமெழாமையால் வாளாவிருந்தார்; வாளாவிருந்ததுமன்றி அனைவரையுந் தம்பூஞ்சோலையினுள்ளும் இல்லத்தினுள்ளும் அழைத்து அவரோடு உறவுபூண்டார் என்னும் இப்பொருட்டுறைகளை யுரைப்பது இச்செய்யுள்.

"மட்டுக்கடங்காச்சலிப்புற்றேன்" என்னும் முதனிலையதாகிய ஐந்தாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு முன்னமே வெளிவந்தது. காட்டுக்கிளிக்குங் கூட்டுக்கிளிக்கும் இடையில்நடந்த கூற்றும் மாற்றமுமாக வமைந்த ஆறுஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு.

விதிவசமோமுன்னைவினையின்பயனோ
கதிகவரக்கானகத்தைநீத்துப்—புதியகனி
கொத்தித்தின் றுங்கிள்ளைகூட்டினுறைமென்மழலைத்
தத்தைபினைநாடிபதுதான்.

அன்போடவைதாமறைந்தகுதலைமொழி
யின்போடெடுத்துரைப்பாம்பாம்.

காட்டுக்கிளி (கூற்று)

வாராயென்னன்பேநம்மணம்விரிபூஞ்சோலைசெல்வோம்.

கூட்டுக்கிளி(மாற்றம்)

சீராயிக்கூட்டினுள்ளேசேர்ந்திருந்தாலாகாதோ?

காட்டுக்கிளி(கூற்று)

சிறைபனையகூட்டினுள்ளேசிறைவிரிக்கவிடமுமின்றே.

கூட்டுக்கிளி(மாற்றம்)

வெறுவெளியிலினிதுறையவேற்றிடமுமுண்டோசொல்வாய்?

காட்டுக்கிளி(கூற்று)

கொண்டல்செறிமலர்ச்சோலைக்கோலக்கவிகூறென்னன்பே.

கூட்டுக்கிளி(மாற்றம்)

பண்டிதர்களுரைமொழிவேன்பக்கல்வந்துகேட்டிருப்பாய்.

காட்டுக்கிளி(கூற்று)

தீஞ்சுவைசேர்கவிநயத்தைச்செப்புவதுமெளிதாமோ?

கூட்டுக்கிளி(மாற்றம்)

மாஞ்சோலைக்கவினப்பின்வளத்தினைநானறியேனே.

எனவாங்கு,

அன்புரைகள்பலகூறியருகணைந்தும்சிறையணவும்
இன்பினைத்தாம்பெறுமையினலிதயமெலிந்திருந்தனவே;
சிறைசெய்புங்கோல்கடந்துசிந்தைசெல்லநொந்தனவாய்
முறைநின்றும்நோக்கிமைபைந்தும்முறையறியாதிரங்கினவே;
அருகணைவாயென்னன்பேயெனவுரைத்துமார்வத்தால்
வருசிறைபைநனியடித்தும்மற்றுமொருபயனில்லையே;
யாதுசெய்வேன்சிறைகடந்துவரவறியேனெனவுரைத்து
மாதுயரமெய்தியதால்வனத்திலுறைபசுங்கிள்ளை;
மனக்கினியாய்வலிபிழந்துமடிந்தவிருசிறையுமையோ
எனக்கதறிவருந்தியதாலில்லுறையும்பசுங்கிள்ளை.

ஈண்டுக் கூட்டுக்கிளியெனக் கவிஞர் கூறியது நகரவாழ்க்கைமேவிய ஒரு நங்கையையெனவும் அவளத்தைமகனுப் நாட்டுப்புறத்திலிருந்து வந்தானொருவனை காட்டுக்கிளியாவானெனவும் ஊகித்தறியக்கிடக்கின்றது.

ஏழாஞ்செய்புண்மொழிபெயர்ப்புவருமாறு :—

(தலைமகனுலாப்போமுன் மடமகளுரைத்தகூற்று)

திருநிறைபுமிளங்குமாரிவ்வழியேசிறுபொழுதிற்சேர்வாரென்ன
முரசெறியுமொலிகேட்டேனெவ்வண்ணம்பிறதொழிலின் முயல்வேனம்மா
விரைசெறியுமலர்க்கூந்தற்பின்னலிடுமாபின்னாடீவிளம்பாய்பொன்னங்
கரைசெறியும்பூந்துகிலோபிறதுகிலோவணிவதெனக்கருதிச்சொல்வாய்.

என்னகருத்தெண்ணியோமருண்டென்னைநோக்குகின்றாயிபம்பாயன்னாய்
மன்னர்மகன்யானிற்குஞ்சாளரத்தைப்பாராதிவ்வழியேசெல்வார்
மின்னலெனவிமைப்பொழுதிற்பரிவாரத்துடனகலவியன்செய்மைக்கட்
கன்னலெனக்குழலோசைகனிந்துருகிப்படிந்துவந்தென்காதிற்சேரும்.

ஆனாலுமிளமன்னரெங்கண்முன்றிற்கடைவாயிற்கணிமையாக
வானோர்தம்மிறைமைந்தனெனச்செல்வாரன்னாபவ்வனப்புக்காண்பேன்
கோனாசைமகன்செலவுகணப்பொழுதேயாயினுமோர்குறையில்லாமல்
யானுடையணிசேர்த்தியலங்கரித்துப்புறநிற்பேனறிவாயன்னாய்.

(தலைமகனுலாப்போந்தபின் மடமகளுரைத்தகூற்று.)

திருநிறையுமிளங்குமாரிவ்வழியேயுலாப்போந்துசென்றார்செம்மை
விரிகதிரங்கிரணமவர்மணித்தேரின்மிசைப்படிந்துவீசிற்றம்மா
மருவியென்றன்முகமறைக்கும்பூந்துகிலைநீக்கினேன்மாணிக்கத்தால்
அரிதிழைத்தமாலையினையகற்றியவர்வரும்வழியையடையச்செய்தேன்.

என்னகருத்தெண்ணியோமருண்டென்னைநோக்குகின்றாயம்பாயன்னாய்
மன்னர்மகன்யானெறிந்தமாலையினையெடுத்திலரால்வண்ணமான்றோர்
சென்னெறியினுருளின்கீழ்ச்சிதைந்தாரஞ்செந்தூளிசேர்ந்ததன்றிப்
பின்னைவருமபானவர்க்குக்கொடுத்தகொடையிதுவென்னும்பெற்றிதேரார்.

ஆனாலுமிளமன்னரெங்கண்முன்றிற்கடைவாயிற்கணிமையாக
வானோர்தம்மிறைமைந்தனெனச்சென்றாரன்னாயவ்வனப்புக்கண்டேன்
கோனாசைமகன்செலவுகணப்பொழுதேயாயினுமோர்குறையில்லாமல்
யானுமணிமணியையவர்வழியிலெறிந்துநின்றேனறிவாயன்னாய்.

எட்டாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

புள்ளினங்களார்க்கும்புலரிப்பொழுதினிலே
பள்ளியறைத்தீபம்பதிந்தணைய—மெள்ள
அமளிதுறந்தெழுந்தேனன்றலர்ந்து வாசங்
கமழுமலர்மாலையொன்றுகைக்கொண்—டமிழ்தனையாய்
சோர்குழல்மேற்சூட்டினேன்சோர்விலாவான்வளிசேர்
சாளரத்தினண்டைதனித்திருந்தேன்—கோளில்
இளங்கதிர்ச்செம்மைபியைந்தவிடியல்
வளங்கெழுநீள்வழியேவந்தா—னுளங்கவரும்
நீர்மையான்றோள்சிரத்தினித்திலத்தின்கோவைவெயில்
சாரவொளிவீசுந்தனிமகுடஞ்—சேரவே
பொங்குகின்றவார்வத்தான்போந்தெங்கண் முன்றினின்றான்
எங்கேயவளென்றியம்பினான்—அங்கவன்றான்
சொன்னமொழிகேட்டேன்சுடரிழாய்நாணத்தால்
இன்னாமைபுற்றங்கிருந்தேனால்—அன்னாள்
இவளேவழிச்செல்லிளையோய்நீதேடும்
அவளிவளேயென்றேனலேன்.

மாலைப்பொழுதின்மணிவிளக்கமேற்றுகின்ற
காலம்வருமுன்கவலைபற்றுக்—கோலக்
குழலைக்கையாற்கோதிக்கொண்டிருந்தேன்பொன்னங்
கழலோன்வரவினையான்கண்டேன்—அழகுசெறி
செம்பரிதியின்கிரணஞ்சேருமணித்தேர்பூட்டும்
வெம்பரியின்வாயினுரைமேவவே—அம்பரத்திற்
செங்களபமென்னத்தெருப்பூழிசேரவந்தான்
எங்கேயவளென்றியம்பினான்—அங்கவன்றான்
சொன்னமொழிகேட்டுச்சுடரிழாய்நாணத்தால்
இன்னாமையுற்றங்கிருந்தேனால்—அன்னாள்
இவளேவழிசென்றிளைத்தோய்நீதேடும்
அவளிவளேயென்றேனலேன்.

வேனிலிரவின்விளக்குமனைவிளக்க
வானின்மலயமந்தமாருதமே—தேனிமிர்ப்பக்

கீச்சுக்கீச் சென்னுங்கிளிப்பிள்ளைகூண்டினிலே
பேச்சற்றுத் தூங்கும்பெரும்பொழுதில்—வீச்சரவிற்
கென்றும்பகையாமிளமயிலின்வார்கழுத்தே
யொன்றுநிறக்கச்சொன்றுவந்தணிந்து—மன்றல்
விரிபசும்புல்போன்றதொருமேலாடைபோர்த்தி
வருவளிசேர்சாளரத்தைமன்னித்—தெருமுகமாய்ப்
போவார்வருவார்பொருந்தாநடுநிசியில்
ஆவியனையானையெண்ணியவ்பகத்தில்—மேவுதலால்
தேடிநொந்தோயிங்கிவளேசிந்தைவைத்து நீவிரும்பி
நாடுமவளென்றுரைத்தேனன்.

"மாலைப்பொழுதினிலே மணமனைக்குப்போம்போது" என்னும் முதனிலையுடையஓப்பதாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு முன்னமே வெளிவந்தது.

பத்தாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

திருவனையாய் செயலொழித்துச் செவிசாயம்மா
செல்வரவர்வந்து நின்றசெய்திசொல்வேன்
உரிமையுடன்கதவச்சங்கிலியைமெல்லென்
ஓசையெழவசைத்தனரவ்வுண்மைதேராய்
பரிபுரஞ்செம்பாதத்திற்பதறுவண்ணம்
பாவையேவெளிவருவாயவரைக்காண்போம்
திருவனையாய்செயலொழித்துச்செவிசாயம்மா
செல்வரவர்வந்து நின்றசெய்திசொல்வேன்.

மணமகளேகுலமணியேமாலைக்கால
வளியோவென்றெண்ணிநீமயங்கவேண்டாம்
அணிமதியம்மணிமுன்றிலிருளைநீக்கி
யணைகின்றவிளவேனிலழகிதம்மா
இணைவிழியைப்பூந்துகிலான்மறைத்துக்கொள்வாய்
எழிற்கரத்திற்சிறுவிளக்கொன்றெடுத்துக்கொள்வாய்
மணமகளேகுலமணியேமாலைக்கால
வளியோவென்றெண்ணிநீமயங்கவேண்டாம்.

நாணுற்றுலவரோடுநீமொழியாடாதே
　　நாடியொருபுறமாகநண்ணுநங்காய்
பேணித்தாவைருரைக்கும்வார்த்தைகேட்டுப்
　　பேசாதுநிலநோக்கிச்சார்வாயம்மா
ஆணிப்பொன்பதித்தவளையாற்றுவண்ணம்
　　அணிவிளக்கங்காத்தேந்திபழைத்துள்வாராய்
நாணுற்றுலவரோடுநீமொழியாடாதே
　　நாடியொருபுறமாகநண்ணுநங்காய்.

வேலையின்னுமொழிந்ததின்றேமின்னேபொன்னே
　　விருந்தினரெம்முயிரனையார்மேவிநின்றார்
சாலைவிளக்கேற்றிவைப்பாய்மாலைக்காலச்
　　சடங்கிற்குவேண்டுவனதருவாயம்மா
சீலமிகுபூங்குழலைவகிர்ந்துவாசச்
　　சிந்தூரத்தால்வரிதீட்டிச்செவ்விசேர்ப்பாய்
வேலையின்னுமொழிந்ததின்றேமின்னேபொன்னே
　　விருந்தினரெம்முயிரனையார்மேவிநின்றார்.

இரவுக்குறியறிந்த தோழி தலைமகளைக் குறியிடத் துய்த்தற்கு விரையும் பொருண்மையது மேலைச்செய்புள். வரையும் நாள் அணுகினமையாலே தலைமகளை மணமகளென்றது பொருத்தமாயிற்று.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

1923-ம் ஆு டிசம்பர்மீ 25உ (ருதிரோற்காரிஆு மார்கழிமீ 10உ) காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———(●)———

1. மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள் B.A., B.L., M. L. A. அக்கிராசனம் வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,
3. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
4. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. 1923-ஆு ஏப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

2. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(i) மகா-ா-ா-ஸ்ரீ A. M. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், இந்துகாலேஜ், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(ii) ,, R. திருமலைஜக்கையா அவர்கள், மானேஜர் & உபாத்தியாயர், ஜக்கதேவி கருணா விலாஸவித்யாசாலை, கோம்பை.

3. 1922–23-ம் ஆுத்திய சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

4. சங்கவருஷோத்ஸவத்தை நடத்த மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் சமீபமாயும் சௌகரியமாயுமுள்ள தேதி குறிப்பிடவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

5. கோயம்புத்தூர் வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ. ப. வெங்கடாசல முதலியாரவர்கள், தர்மகைங்கர்யங்களின்பொருட்டு 28-5-1923உ எழுதி வைத்த டிரஸ்ட்பத்திரத்தில், இம்மதுரைத்தமிழ்ச்சங்கப்பரீக்ஷைகளிற் பரிசுபெறும் மாணவர்க்குப் பரிசளிப்பதற்காக வருடந்தோறும் ரூ 25 சங்கத்துக்கு உதவிவரவேண்டியதாகக்கண்டு, அவ்விதம் சங்கத்துக்கு உதவிவருவதற்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள். இதனை ஷையாருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

6. மகா-ள-ள-ஸ்ரீ வித்வான் மு. இராகவையங்காரவர்கள்தொகுத்த 'பெருந்தொகை' என்னும் நூலைச் சங்கத்திற் செந்தமிழ்ப்பிரசுரமாக அச்சிடுவது சம்பந்தமாகக் காரியதரிசியவர்கள் எழுதிய ரிப்போர்ட்டு அங்கீகரிக்கலாயிற்று.

7. பாரதம் முதலிய சங்கப்பிரசுரங்கள் மறுபதிப்பு ஆகிற விஷயம் அங்கீகரிக்கலாயிற்று. பாரதத்துக்குக் காகிதம் வாங்க ரூ 550 அனுமதி செய்யலாயிற்று.

8. சங்கக்கட்டடரிப்பேர்சம்பந்தமான ஒழுங்குகளைப்பற்றிய விஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

9. சங்கத்தின் அங்கத்தினர்களுக்குச் சங்கப்பிரசுரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருபிரதிமட்டும் முக்கால்விலைக்குக் கொடுக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

10. சங்கம் அச்சாபீஸ், பைண்டிங் ஆபீஸ்களுக்கு அதிகாரி (Superintendent) ஒருவரை நியமுகம் செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியவிஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

மதுரை,
25-12-1923.

K. ராமையங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

இந்துதேச சரித்ர காலக்குறிப்புகள்.

(Chronological Notes of Indian History.)

(செந்தமிழ் கஎ-ஆம் தொகுதியின் உருகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

1803 ஒரிஸா மாகாணம் ஆங்கிலர் ஆட்சிக்குட்பட்டது.

1803 (கலி 4905 —சகம் 1726 ருதிரோத்காரி௵ தைமீ) தேப்பெருமாள் குமாரரான கருணாகரர் வேதபுரித் தல புராணமியற்றி அரங்கேற்றினார். (ஷை புராண கடைசிப் பாட்டைப் பார்க்க). வேதபுரி, திருவோத்தூர், திருவோற்றியூர் என்பன ஒரு தலத்தைக் குறிக்கும். இது, வட ஆற்காடுஜில்லாவி லுள்ளது. [Vide Govt. Catalogue of Tamil Manuscripts Vol. II. 640-ம் பக்கம்].

1824—26 முதல் பர்மாயுத்தம்.

1824 தயானந்த ஸரஸ்வதி (மூலசங்கார்) ஜனனம். கத்தியவார் மகாணம், மோர்விராஜ்யத்தில், அந்தணர்குலத்துதித்தவர். ஷை ராஜ்ய டங்காரா நகர் ஜமேதார். ஷையார் பிதா—அம்பாசங்கார். 1875-ல் ஆரிய ஸமாஜத்தை ஸ்தாபனஞ் செய்தார். 1883 அக்டோபர் 30-ல் இறந்தார்.

1825 செப்டம்பர் 4. தாதாபாய் நௌரோஜி ஜனனம். இவர் ராஜநீதியிலும், தேசபக்தியிலும் சிறந்தவர். காங்கிரஸ் மஹாஸபை ஸ்தாபகரில் முக்கியஸ்தர். காங்கிரஸ் சபாநாயகராய் விளங்கியவர். இவர் இயற்றிய நூல் Poverty and Un-British Rule in India (இந்தியாவின் எளிமையும்—ஆங்கில—ஆட்சிக்குறைகளும்) என்பது.

1828 ப்ராம்மஸமாஜ ஸ்தாபனம்.

1828 ஆகஸ்ட் 20—ராமமோஹன்ராய் கல்கத்தாவில் ப்ராம்ம ஸமாஜம் என்ற ஓர் ஆஸ்திகமதஸ்தாபனம் செய்தார். அவருடைய நண்பர் த்வாரகாநாத டாகூர் என்ற இளவரசர் (Prince) அவருக்கு வேண்டிய பொருளுதவி செய்தார். ஷெ யார் குமாரர் தேவேந்த்ரநாத் டாகூரும் ப்ராம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தார். 1857-ம் வருஷச் சிப்பாய்க்கலகத்துக்குப்பிறகு கேசவசந்த்ரஸேனரும் இம்மதத்தைத் தழுவினர்.

1829 ஸதி (=ஸஹகமனம்=உடன்கட்டையேறல்) என்ற அநுஷ்டானம் ராஜாங்கத்தாரால் தடைப்பட்டது.

1831 ஆகஸ்ட் 12. ப்ளாவட்ஸ்கி அம்மாள் ஜனனம். இவள் ப்ரம்மச்ஞான (தியாஸாபிகல்) ஸமாஜத்தை ஸ்தாபித்தவள். 8–5–1891-ல் இறந்தாள்.

1833 ராம் மோஹன் ராய் சீமைக்குப்போனபோது, ப்ரிஸ்டல் நகரில் இறந்தார்.

1834 பிப்ரவரி 20. ராமக்ருஷ்ண பரம ஹம்ஸர் ஜனனம். பிறப்பிடம்:-ஹூக்ளி ஜில்லாவில் கமர்புகூர்க்ராமம். இவர் பூர்வாச்ரமப்பெயர்— கங்காதர சத்ரஜி. அந்தணர். 1886-ல் மரணம்.

1838 முதலாவது ஆப்கன் யுத்தம். ஆங்கிலர் வெற்றி.

1842–10–1 ஸர். எஸ். சுப்ரமண்ய ஐயர் ஜனனம். இவர், சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ். ராஜநீதியிலும், தேச பக்தியிலும் சிறந்தவர். மதுரை—பிறப்பிடம். அந்தணர்.

1843 அடிமை வியாபாரம் சட்டவிரோதமாக்கப்பட்டது.

1850 ஸர். டி. மாதவ ராவ் (தஞ்சையில்) ஜனனம்.

1852 இரண்டாம் பர்மாயுத்தம்.

1853 இந்தியாவில் முதல்முதல் ரெயில்வே போடப்பட்டது.

1855 அக்டோபர் 29-ல் தஞ்சையையாண்டகடைசிமன்னனான ஸரபோஜிமஹாராஜா மரணமானார். இதனுடன் மஹாராஷ்ட்ர ராஜவம்சம் அற்றுப்போயிற்று. இது முதல் இவ்வரசு ஆங்கிலர் ஆட்சிக்குள்ளாயிற்று.

1856 ஈச்வர சந்த்ர வித்யாஸாகரர் செய்தபெருமுயற்சியால் ஹிந்து விதவாவிவாஹச்சட்டம் நிரூபணமாயிற்று.

1857 சிப்பாய்க் கலகம் நடந்தது.

1857 தஞ்சை ராஜ்யம் ஆங்கிலர் ஆட்சியில் சேர்க்கப்பட்டது.

1858-ல் விக்டோரியா மஹாராணியார் ராஜசாஸனம் அளித்தார்.

1862 ஜனவரி 9௳ ஸ்வாமி விவேகாநந்தர் (நரேந்த்ர நாத தத்தர்) ஜனனம். இவர் கல்கத்தா நகரில், பங்காளி காயஸ்தர் குலத்துதித்தவர். 4–7–1902-ல் மரணமானார்.

1865-ல் ப்ருஹ்மஸமாஜம் { (1) ஆதிஸமாஜம். (2) வேதஸமாஜம். } என இருபிரிவாயிற்று.

(1) ஆதிஸமாஜஸ்தாபகர்—தேவேந்த்ரநாத டாகூர்

(2) வேதஸமாஜஸ்தாபகர்—கேசவசந்த்ரஸேனர்.

1866-ல் கோபாலகிருஷ்ணகோகலே ஜனனமானார். இவர் கோல்ஹாபூரில் மஹாராஷ்ட்ர அந்தணர்குலத்துதித்தவர். ராஜநீதியிலும் தேசபக்தியிலும் சிறந்தவர். காங்கிரஸ் மஹாசபையைத் தலைவராயிருந்து நடத்தினவர். ௸ சபாநாயகராகவும் விளங்கினவர். பல ஆண்டுகள், இந்தியசட்ட மஹாசபை அங்கத்தினராயிருந்து, நமது தேசக்ஷேமத்துக்கு, இங்கும், சீமையிலும் தென்னாப்ரிகாவிலும் உழைத்தவர். 1915-ல் மரணமானார்.

1875-ல் ப்ரும்மக்ஞான ஸமாஜ (தியாஸாபிகல் ஸொஸைடி) ஸ்தாபனம். நியூ யார்க் நகரில், ப்ளாவட்ஸ்கி என்ற ருஷியாதேச ஸ்த்ரீயால் ஸ்தாபிக்கப்பட்டது.

1876—78 தாதுவர்ஷப்பஞ்சம். தென் இந்தியாவில் 74000 சதுரமைல் பரப்பில் 160 லக்ஷம் ஜனங்கள் வருந்தினார்கள். தினந்தோறும் ஏழுரை லட்சம் ஜனங்கள் ஸர்க்கார் ஆதரவுபெற்றார்கள். 22 மாதத்தில் ஸர்க்கார் செலவு 12 கோடி. இக்கொடும்பஞ்சத்தில் மாண்டவர் 10 லட்சம் பேர்.

1877-ல் மத்வஸித்தாந்த ஒந்நோஹினி ஸபா (கஞ்சி சுப்பராவால்) ஸ்தாபனம்.

1878-ல் 2-ம் ஆப்கன் யுத்தம்.

1879—80-ல் 3-ம் ஆப்கன் யுத்தம்.

1879-ல் ப்ரும்மஞானசபையின் மூக்யஸ்தாபனம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது.

1885-ல் காங்க்ரஸ்மஹாசபைஸ்தாபனம்[முதல்வருஷகாங்க்ரஸ்.]

1886-ல் 3-ம் பர்மா யுத்தம்.

1886 ஆகஸ்ட் 16. ராமகிருஷ்ணபரமஹம்ஸர் மரணம்.

1887-ல் திபெத் தேசத்தில் லடாக் என்ற தலைநகரில் உள்ள பௌத்த ஆஸ்ரமத்தில், நிகோலஸ் நாட்ஸ்விட்ச் என்ற ருஷியர் ஒருவர், சுவடி ஒன்று கண்டுபிடித்தார். ஏசுகிரிஸ்து, தனக்கு ஞானஸ்நாநம் (பாப்டிஸம்) ஆகு முன் 12 வருஷகாலம், இந்தியாவில் ஸஞ்சாரம் செய்ததாகவும், ஜைநமுனிவர், பௌத்தர், ஹிந்துக்களிடம் உபதேசங்கள் பெற்றதாகவும் அச்சுவடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

1889-ல் க்ரிஸ்தவ வாலிபர் சங்கம (யங்மென்ஸ் க்ரிஸ்தியன் அஸோஸியேஷன்) முதல் முதல் இந்தியாவில் ஸ்தாபனம்.

1892 ஆர்ய ஸமாஜம் இருகட்சியானது.

1893-ல் சிகாகோ நகரில், ஸர்வமதஸமாஜம் கூடியது. அதில் விவேகாநந்த ஸ்வாமிகள், ஹிந்துமதப் பெருமையைப் புகழ்ந்து ப்ரஸங்கித்தார்.

1895-ல் கும்பகோணம் அத்வைதஸபா ஸ்தாபனம். 1902 ஜூலை 4-ல் விவேகானந்த ஸ்வாமிகளின் மரணம்.

1902-ல் பாரத தர்ம மஹாமண்டலம் தர்பங்கா மஹாராஜா வால் ஸ்தாபனமாயிற்று.

1905-ல் ஸ்ரீமான் கோகலே அவர்களால் 'Servants of India Society' (தேச ஸேவ ஸபா) ஸ்தாபனமாயிற்று.

1907-ல் கலனல் ஆல்காட் மரணம்.

1907-ல் அமெரிக்காவில், லாஸ் ஏஞ்ஜலிஸ் நகரில், பிரேமானந்த (பாபு) பாரதி யவர்களால், கிருஷ்ணலய நிர்மாணம்.

1908 ஜூலை. B. M. மலபாரி அவர்களால், ஸேவாஸாதன ஸ்தாபனம்.

1911 மே (1) ஸ்ரீவைஷ்ணவர்கள், (2) வல்லபர்கள் (3) மாத்வர்கள், (4) நிம்பார்க்கர் என்ற நான்கு வைஷ்ணவ உபமதத்தவர்கள் அலஹாபாத்தில் பொதுச் சபை கூட்டினார்கள்.

1911 அக்டோபரில் விவேகானந்த சிஷ்யையான, ஸிஸ்டர் நிவேதிதை என்ற ஆங்கிலமாதின் மரணம்.

1914 ஆகஸ்ட் 4 ஜர்மன் மஹாயுத்தாரம்பம். 1561 நாள் நடந்தது.

ஆர். எஸ், நாராயணஸ்வாமி ஐயர், B. A. B. L.,

மதுரை.

ஸ்ரீ:

மதிப்புரை.

க. ப்ரும்மவித்யாசதுஸ்ஸூத்ரீ:—(தமிழுரையுடன்)—இது, மதுரா நகரவாசியான தேதியூர்சாஸ்த்ரரத்னம் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளால் எழுதப்பட்டது. வேதாந்தசூத்திரங்களுக்கு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரால் எழுதப்பட்டபாஷ்யார்த்தங்களைத் தழுவி ஸ்ரீசதாசிவப்பிரும்மேந்திரரால் எழுதப்பட்ட ப்ரும்மசூத்திரவிருத்தியை மனனம் பண்ணுமவர்க்கு மிகவும் உபகாரமாக பூர்வபக்ஷசித்தாந்தங்களெல்லாம் தெளிவாகவிளங்கும்படி நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறே மற்றுமுள்ள சூத்திரங்களுக்கும் உரையெழுதிவெளியிட்டால் வேதாந்த விசாரம்செய்பவர்கட்கு மிகவும் பயன்படத்தக்கதாயிருக்கும். அவ்வாறு சாஸ்திரியாரவர்கள் முயர்சித்து முடிக்கும்படி இப்புத்தகத்தைப் பலரும் வாங்கிப் படித்து அவர்களுக்கு ஊக்கத்தையுண்டாக்கினால் அவர்களது அருமைபான கல்வித்திறமையை உலகிற்கும் பயன்படச்செய்வதாகும். இதன் விலை ரூபா 2 வேண்டுவோர் ப்ரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், கோபாலக்கொத்தன்தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

உ. தஞ்சைப் பெரியகோயிற் சரிதக்குறிப்புக்கள்:—இது, சிலா சாசனங்களை ஆதாரமாகக்கொண்டு தஞ்சைக் கல்யாணசுந்தரம்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் எல். உலகநாதபிள்ளையவர்களால் எட்டுப் பக்கங்களுக்குள் எழுதப்பட்டதொரு சிறுபுத்தகமாயினும், இதனால் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பலவுள்ளன. இவ்வாறு சிலா சாசனங்களினின்று வெளிபாகத்தக்கவிஷயங்களைக் கவனித்தறிந்து சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்ட புத்தகங்கள் ஒன்றுங் காணப்படவில்லை. இதனால் ராஜராஜேசுவரன்காலத்து நிகழ்ந்த ஒழுக்க வழக்கங்கள் பல தெளிவாய் விளங்குகின்றன.

ந. பெருந்தேவனார்பாரதம்:—இது, 1925-ம் வருஷ பரிசைக்ஷக்குப் பயிலும் போதனாமுறைக்கழகம் பிரைமெரிவகுப்புமாணவர்களுக்குப் பாடமாக ஏற்படுத்திய கவிமணிமாலையிலுள்ள பெருந்தேவனார் பாரதப் பாக்களுக்குச் சேலம் காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பண்டித எஸ். ஆர். திம்மப்பையரவர்களால் நன்றாயெழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, கதைகள், அணியமைதி முதலியவை அடங்கியது. இதன்விலை அணா ஆறு. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப்பெறலாம்.

ச. திருவாசகம்போற்றித்திருவகவலிற்காணப்படும் 'மூவாநான் மறை' என்னும் சொற்றொடரின் பொருளாராய்ச்சி:—இது, திருசிரபுர வாசியான ஸ்ரீமான் திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்களெழுதிய

ஆராய்ச்சிகளுள் ஆறுவதாக எழுதப்பட்டது. இதில், திருவாசகவிரி வுரையாசிரியர், திருவாசகத்தில் 'மூவாநான்மறை முதல்வாபோற்றி' என்பதில் 'மூவாநான்மறை'யென்பதற்கு இருக்கு, எசுர், சாமம், அதர் வம் எனப் பொருள்கொள்வது பொருந்தாதென்றதை, அவர் அம்மறை களாகக்கொண்ட தொல்காப்பியம், இறையனாகப்பொருள், திருக்குறள், தேவாரத்திருமுறைகள் என்னும் இவற்றினுள்ளும் பிறவற்றினுள்ளு முள்ள பலபல பிரபலப்பிரமாணங்களால் நன்குமறுத்து, அவை ருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணமென்று நிரூபித்திருக்கிறார்கள். இவ்வாறான ஆராய்ச்சியே இக்காலத்திற் சைவத்தமிழ்மக்களை மயக்கவிடாமல் உண்மையறிவூட்டி வாழ்விக்கவல்லது. இதற்கு ஒரு மதிப்புரையும் ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதாவர்களால் நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா நான்கு.

ரு. மருத்துவசாஸ்திரம்:—இது, கல்லிடைக்குறிச்சி ஸ்ரீமான். எம். ராதாகிருஷ்ணன் (எல் எம்.பி., எம்.ஆர்.ஏ.எஸ்.,) அவர்களால் ஆங் கில மருத்துவநூன்முறைகளை 'மருத்துவச்சிகளும் தமிழ்மக்களும் தமிழிற்படித்தறிந்துகொள்ளும்படி எழுதப்பட்ட ஒரு அருமையான புதியபுத்தகம். இதில், கருப்போற்பத்திக்குரிய உறுப்புக்களிலிருக்க வேண்டிய இலக்கணமுதலாக ஆரோக்கியமுள்ள குழந்தையைப் பெறு மளவாக இடையில் நிகழும் பலவித நிகழ்ச்சிகளும் பரீக்ஷைகளும் தெரியுமாறு 17 அத்தியாயமாகப் பகுத்து எழுதப்பட்டுள்ளன. ஆங் காங்கு வேண்டுமிடங்களில் விளக்குதற்குரிய படங்கள் சேர்க்கப்பட்டுள் ளன. பெரும்பாலும் சங்கேதப்பெயர்கள் தமிழ்மொழியாயும் வட மொழியாயும் வைத்தெழுதப்பட்டன. ஆயினும், அவற்றைத் தெளி வாய்த் தெரிந்துகொள்ளும்படி இடையிடையே ஆங்கில எழுத்தாலும் அவை காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு இவர்கள் ஆங்கில வைத்திய நூல்களில் அவசியமானவற்றைத் தனித்தனி தமிழிலெழுதிவருவார்க ளாயின், மிகவும் பயன்படத்தக்கனவாம். இதன் விலை ரூபா 2–8–0. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

சு. ராஜபுத்திர விஜயம்:—இது, ஆங்கிலத்திற் பேர்பெற்ற பண் டிதர்களால் எழுதப்பெற்ற பல சரித்திரப் புத்தகங்களைத் துணையாகக் கொண்டு ஸ்ரீமான். எம். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதப் பட்டது. இதில், கனகசேனன், சிலாதித்தன், குகாதித்தன், நாகாதித் தன், பூபசிம்மன், கோமனன், ராணி கூர்மதேவி, இரகூபவ, ராணாலக்ஷ் மனன், ராணா அமரசிம்மன், ராணா செபிதசிம்மன், ராணாலக்ஷசிம்மன் ராணா மோகலன், மகாராணா குப்பன், உதசிம்மன், ராணா ரவிமல்லன், ராணா சங்காசிம்மன், ராணா ரத்தினசிம்மன், ராணா விக்கிரமஜித்தன், ராணா உதயசிம்மன், சமாசிம்மன் எனபவர்களுடைய சரித்திரங்கள், அழிந்தமட்டில் 220 பக்கங்களில், படிப்பதற்கினிமையான தெளிவான

தமிழ்நடையில் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. இதைப்படிக்கும் மாணவர்களுக்கு அவரறியவேண்டிய பல உலகநீதிகளும் ஒழுக்கவழக்கங்களும் நன்கு புலப்படுத்துவதோடு முன்னுணர்வு, தற்காப்பு, முயற்சி, நல்லறிவு, தேசபக்தி முதலிய பலகுணங்களையும் உண்டாக்கத் தக்கது. தமிழ்நடையில் இனிமையாயும் தெளிவாயும் எழுதுதற்கும் பேசுதற்கும் போதிய ஆற்றலுண்டாக்கவல்லது. இதன் விலை ரூபா 1—4—0. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் மயில்வாகனன் கம்பெனி, 32, ஐயப்பசெட்டிவீதி, மண்ணடி, மதராஸ் என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

எ. உபந்யாச மஞ்ஜரீ:—இது, மதுரைக் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமத். கோ. வை. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் எழுதப்பட்டது. இதில், 1. மதுரை, 2. திருஞானசம்பந்தர், 3. நீலகண்ட தீக்ஷிதர், 4. சங்கரபகவத்பாதாள், 5. பக்தி என்னும் இவற்றைப்பற்றி, ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மதுரையில் எழுந்தருளியிருந்தபோது அவர்களால் ஒவ்வொருதினமும் உபந்யசிக்கப்பட்ட விஷயங்கள் அடங்கியுள்ளன. இதனால் அறியத்தகும் அருமையான விஷயங்கள் பல உள்ளன. ஸ்வாமிகளின் உபந்யாஸங்களையெல்லாம் இன்னும் தொடர்ந்து வெளியிடும்படி இப்புஸ்தகத்தை ஆஸ்திகபுத்தியுள்ளோரெல்லோரும் வாங்கிப்படித்து, சாஸ்திரிகளுக்கு ஊக்கத்தை உண்டாக்குவாராக. இதன்விலை அணா நான்கு. வேண்டுவோர் மதுரைக் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமத். கோ. வை. சுப்பிரமணியசாஸ்திரிகளுக்கு எழுதிப்பெறலாம்.

அ. செந்தமிழ்ச்செல்வி:—இதன் இரண்டாவது சிலம்பின் முதலாவது பரல் வெளிவந்திருக்கிறது. இதில், சைவசித்தாந்த வரலாறு, தமிழ்ப்புலவர் வரலாறு, அகத்தியர், மொழிகள்வெளியிடுமுண்மை, வான்மீகரும் கம்பரும், காழித்தேவாரச்சிறப்பு, தமிழர்தம்உயிர்க்குறுதி, ஞானப்பூங்காவனம், மணிவாசகரு நம் ஆழ்வார்களிற்சிலரும் என்பவை முதலிய ஆராய்ச்சிகள் செவ்வியதமிழ்நடையில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பத்திரிகையின் ஆட்டைக்கையொப்பம் ரூபா மூன்று. வேண்டுவோர் சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், 306, லிங்கசெட்டிதெரு, சென்னை, என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

கூ. நவரஸமஞ்ஜரி:—இது, ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதலாவது புத்தகத்தின் முதலாவது இலக்கம் வெளிவந்திருக்கிறது. இதில் தெய்வபக்தி, ஞானம், கல்வி, பொதுவிஷயங்கள் முதலியன வெளிவருமெனக் கண்டிருக்கிறது. இம்முதற்பகுதியில் இப்பத்திரிகையின் சிறப்புப்பாயிரமும், பத்திராதிபர் முகவுரையும், வில்லிபுத்தூரர் பாரதம் முதல் 33 பாட்டுக்களுக்குப் பதவுரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்புக்களும், பிறவும் வெளிவந்துள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா 5 — 8 — 0. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் இதன் ஆசிரியரான வ. எம். பேருரான்செட்டியாரவர்களிடம் (511. தங்கசாலைவீதி, பார்க்குடவுன் போஸ்டு, சென்னை) பெறலாம்.

கo திருக்குறள்விளக்கம் :—இது, கிருஷ்ணாம்பேட்டைத் திருவாளர் குப்புசாமிமுதலியாரவர்களால், திருக்குறளுக்குப் பரிமேலழகருரையையடுத்து விரிவுரையொன்றெழுதப்பட்டு ஸ்ரீமான் கா. ரா. காளத்தீசுரமுதலியாரவர்களாற் பதித்து மாதச்சஞ்சிகையாகவெளியிடப்பட்டுவருகிறது. திருக்குறள் படிப்பவர்களுக்கும் பிரசங்கம்செய்பவர்களுக்கும் பயன்படத்தக்கது. இதன் தனிப்பிரதி அணா நான்கு. தபாற்கூலி வேறு. ஆறுமாதச்சந்தா ரூ. 2. வருடசந்தா ரூ. 4. வேண்டுவோர் கா. ரா. காளத்தீசுரமுதலியாரவர்கள், 13. கிருஷ்ணப்பமேஸ்திரிவீதி, பார்க்குடவுன் போஸ்டு, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

கக. ஆரோக்கியதீபிகை :—இது, ஆரோக்கியமார்க்கங்களைப் போதிக்கும் விஷயங்களடங்கியதாக சென்னை மெடிகல் கௌன்ஸில் மெம்பர் டாக்டர் ஸ்ரீமான் யூ. ராமராவ் எம். எல். ஸி. அவர்களால் தமிழ்நடையில் எழுதி வெளியிடப்படும் மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன் முதலாவது பகுதி நமக்குக் கிடைத்தது. அதில் "நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்" என்பது முதலான சுகவாழ்வுக்குரிய இருபது விஷயங்கள் நன்குஎழுதப்பட்டிருக்கின்றன. இதன்வருடச்சந்தா ரூபா 1—8—0 தனிப்பிரதியிலை அணா இரண்டு. வேண்டுவோர், ஆரோக்கியதீபிகை ஆபீஸ், 323 தம்புசெட்டிதெரு, ஜி. டி. சென்னை, என்ற விலாசத்திற் பெறலாம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோற்காரி௵ தைமீ [பகுதி ௩.
Vol. XXII. January-February-1924. No. 3.

போலி எழுத்து.

பன்னருஞ்சிறப்பிற் பவணந்தியார் செய்த நன்னூற் குரையுரைத்த உரையாளருட் சிலர்,

" அம்மு னிகரம்யகரமென் றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும்வவ்வு மௌவோரன்ன."

என்னுஞ் சூத்திரத்தாற் பவணந்தியார் போலி எழுத் துணர்த்தினாரல்லர். எனவும், சந்தியக்கரமே யுணர்த்தினாரெனவும் உரைத்தனர். அவருரை பொருந்துமா? என்பதே ஈண்டு யாம் ஆராய்வது.

அவருரைத்தவாறு பவணந்தியார் சந்தியக்கரமே யுணர்த்தினாராயின், 'அம்முன் யகர மிகர'மென்றும், 'அவ்வொடு வவ்வுட் உவ்வும்' என்றும், 'ஒத்து எய்தின்' என்றும், 'ஐயிசைக்கும்' என்றுந் தாங்குறித்த பொருள் இனிது விளங்கச் சூத்திரித்திருப்பார்மன்; அவ்வாறு சூத்திரியாமையின் அவர்க் கது கருத்தன்றென்பது பெறப்படும்.

அங்ஙனமன்று; 'இவை' என்னுந் தொகைச்சொல்லானே இரண்டுங் கூடிவருமென்பது பெறப்படுதலின், ஏற்றவாறு மாற்றிப் பொருள் கோடலாமாகலானும் 'ஒத்து' என்பதை 'எய்தின்' என்பதனோடு கூட்டிப் பொருளுரைக்கலாமாகலானும், சந்தியக்கரமென்பதே யாசிரியர் கருத்தெனின், என்முன் சாத்தன் கொற்ற னிருவரும் வந்தாரென்றால், இருவரும் வந்தாரென்பதல்லது கூடியேவந்தாரென்பது பெறப்படாமை போல், இவை என்னுந் தொகைச்சொல்லானும் இரண்டும் வருமென்பது பெறப்படுமன்றிக் கூடியேவருமென்பது பெறப்படாமையின் மாற்றிப்

பொருள்கோட்டலுமென்பது பொருந்தாமையானும், எய்தின் என்பத னோடு ஒத்து என்பதைக்கூட்டிப் பொருள்கோடல் வலிந்துகோடலா மாகலானும், அஃது அவர்கருத்தாகாது. ஆகுமெனின், ஆசிரியர் சூத்தி ரம்யாத்தற்கறியாரென்பதுபடும்; ஆதலின் ஆகாதென்பதே துணி பாம் ஆகையால், ஆரியமொழியிற்கூறிய சந்தியக்கரத்தைத் தமிழ் மொழிக்கண்ணும் புகுத்தவேண்டி நன்னூலார் போலியுணர்த்திய சூத் திரத்தைச் சந்தியக்கர முணர்த்தியதெனக்கொண்டு வலிந்து பொருள் கோடல் உண்மைப்பொருளும் பொருத்தமுமன்றாம்.

பின் இதன் உண்மைப்பொருள் யாதெனிற் கூறுதும்:—

அகரத்தின்முன் இகரமும் யகரமுமென்று சொல்லப்பட்ட இவை கள் தனித்தனிவந்தால் (அஃதாவது அ இ; எனவும், அ ய்; எனவும் வந்தால் ஐ போன்று ஒலிக்கும் என்பதும், அகரத்தின் முன் உகரமும் வகரமும் வந்தால் (அஃதாவது அ உ; எனவும், அ வ் எனவும் வந்தால்) ஔகாரம் போன்று ஒலிக்கும் என்பதுமே ஆசிரியர் கூறிய சூத்திர முறைக்கேற்ற உண்மைப்பொருளாம். எனவே போலி எழுத்தே கூறினு ராயிற்று; இதுவே நன்னூற் பழையவுரையாசிரியர் மயிலைநாதர்க்குங் கருத்தாதல் அவருரைநோக்கி யுணர்க.

அன்றியும், சந்தியக்கரமே கூறினாராயின் எகர ஒகரங்களையு முடன் கூறியிருப்பார். அங்ஙனங் கூறாமையானும் போலியுணர்த்தினா ரென்பதே துணிபாம்.

அங்ஙனேல், இங்ஙனங்கூறிய போலியெழுத்தால்வரும்பயன் யாதோ வெனின், செய்யுளில்வரும் எதுகைக்கண் இவ்வாறு கொள்ளநிற்றலே.

அதனை, "ஐயெனெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும்" என்பதன் கண்ணும், "கைபகத்ததுவது பொய்யாகாதே" என்பதன்கண்ணும் "கையதுவேலை காலனபுனைகழன் — மெய்யதுவியரே மிடற்றதுபசும் புண்" என்பதன்கண்ணும், "ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வி யான் —கேடு நினைக்கப் படும்" என்பதன்கண்ணும் வரு மெதுகைத் தொடைகளில், 'மெய்பெற' என்பதற்கியைய, 'ஐயென்' என்பதை 'அய் யென்' எனவும் 'பொய்' என்பதற்கியையக் 'கை' என்பதைக் 'கய்' என வும், 'மெய்' என்பதற்கியையக் 'கை'யென்பதைக் 'கய்' எனவும், 'செவ்வி யான்' என்பதற்கியைய 'ஔவியம்' என்பதை 'அவ்வியம்' எனவும் கொள்ளநிற்றல் காண்க.

இவ்வாறு எதுகைக்கட் போலியாகக் கொள்ளநிற்றல்பற்றியே, "ஆயிருதொடைக்குங்கிளையெழுத் தரிய" என்னுஞ் சூத்திரவுரையின்கண் நச்சினார்க்கினியரும் "ஐகார ஔகாரங்கள் போலியவையாற் கிளையெழுத்தெனப்படு"மென்றார்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியரும் "அகரவிகரமைகார மாகு"மென்றும், "அகரவுகரமௌகாரமாகும்" என்றும், இகர உகரங்களை முன்னர்க்கூறிப், பின்னர் "அகரத்திம்பர்யகரப்புள்ளியு-மையெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்" என யகரத்தை வேறுவைத்துக் கூறியதும் போலியெழுத்தாமாற்றை நன்கு புலப்படுத்தற்கேயாம். அன்றி, நன்னூலுரையாளர் சிலர் கூறியவாறு அகரவிகரங்களுக்கிடை யகரங்கலந்து ஐகாரமாகும் என்பதே தொல்காப்பியர்கருத்தாயின் 'அகர விகரநிவண் யகரம் கலந்து ஐகாரந்தோன்றும்' என்பதமைபச் சூத்திரித்திருப்பர்; அங்ஙனஞ் சூத்திரியாமையின் அவர்க் கூற கருத்தன்றுதல் தெள்ளிதிற் பெறப்படும். அன்றியும், யகரப்புள்ளியும் என இறந்ததுதழீஇய எச்சவும்மை கொடுத்துக் கூறினமையானு மது தெளிவாம்.

இன்னும், 'ஐயெனெடுஞ்சினை' என்றதனானும் சந்தியக்கரமென்பார்கருத்துமுழுதும் தூரம்போய்த் துச்சமாமாறுணரலாம். எங்ஙனமெனின், அஃது அதன்பொருளை ஆராயவே பெறப்படும்.

'ஐயெனெடுஞ்சினை' என்பதற்கு உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறியபொருள் ஐ யென்னு நெட்டெழுத்தென்பது. சினை என்பது எழுத்துக்குப் பரியாயப்பெயராகாது. ஆதலால், சினையென்பது உறுப்பென்னும் பொருளையுணர்த்தி, ஆகுபெயராய் எழுத்தையுணர்த்தும். எனவே சினை என்பதற்கு உறுப்பெழுத்தென்பது பொருளாம். அது:—

தொல்காப்பியர்,

"குற்றியலுகர நிற்றல்வேண்டும்
யாவென்சினைமிசையுரையசைக்கிளவிக்
காவயின்வரூஉமகரமூர்ந்தே" (௩௪) என்றும்,
"சுட்டுச்சினைநீடியவைவயெனிறுதியும்" (௧௫௯) என்றும்,
"குறியதனிறுதிச்சினைகெடவுகர
மறியவருதல்செய்யுளுளுரித்தே" (௨௩௪) என்றும்,
"நூறென்கிளவியொன்றுமுதலொன்பாற்
கீறுசினையொழியவினவொற்றுமிகுமே" (௪௭௨) என்றும்

கூறிய சூத்திரங்களில் வரும் 'சினை' என்னுஞ் சொற்களின்பொருளை ஆராயவே நன்குவிளங்கும். சுட்டுச்சினை என்பதற்குச் சுட்டாகிய சினையெழுத்தென்று நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையானு மஃதுணரலாம். அங்கே சினைஎழுத்தென்றுரைத்தவர், இங்கே எழுத்தெனப் பொருளுரைத்ததென்னையெனின், சந்தியக்கரமுணர்த்தியதிதுவெனப் பிறர்கூறுவார் என்பதுணர்த்தியதெனப் பிறருரைப்பாரென்பதுணர்ந்திராமையின் அவ்வாறு சுருக்கிக்கூறினார். உணர்ந்திருப்பாராயின் சினைபெழுத்தென்றே விரித்துரைத்திருப்பார். உரையாசிரியரு மவ்வாறே கூறியிருப்பார். சினை எழுத்தென்பதே அவர்கள்கருத்தாதல் அவர்கள் காட்டிய உதாரணங்களானுணரலாம். ஆகையால் 'ஐயெனெடுஞ்சினை' என்பதற்கு, ஐயென்னும் நெடிய உறுப்பெழுத்தென்பதே பொருளாகி, ஐயன் கைபன் என்பனபோன்ற சொற்களின் முதற்கண், அவற்றிற் குறுப்பாகநிற்கும் ஐ யென்னும் நெட்டெழுத்தென்பது போதருமன்றித் தனி ஐ என்பது போதராது. போதராமையின் அகரமும் யகரமுஞ்சேர்ந்து சந்தியக்கரமாமாறுணர்த்தினாரல்லர் என்பது நன்கு உணரக்கிடத்தல் காண்க.

அற்றேல், ஐ என்பது பலவெழுத்துக்கூடியதாதலின், சினை என்பதற்கு ஐயின் சினை என்றாலென்னையெனின், அவ்வாறுரைத்தற்கு 'ஐயெனெடிலின்சினை' என்றிருத்தல்வேண்டும். அவ்வாறின்மையின் அதன்சினையென உரைக்கலாகாதென்பது.

அற்றேல், மொழிக்குறுப்பாதல்பற்றிச் சினையென எழுத்தைக் கூறினாரென்றா லென்னையெனின், "ஐ ஔவென்னுமாயீரெழுத்திற்" கெனவும், "நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே" எனவும், "வல்லெழுத்தென்பகசடதபற"எனவும், இவ்வாறே யாண்டும் எழுத்தென்றே ஆசிரியராளுவராதலின் அதுவும் பொருந்தாதென்பது.

இன்னும், ஆசிரியர் தொல்காப்பியர் "இகரயகரமிறுதிவிரவும்" என இறுதிப்போலிகூறியதனானே, இது முதற்கண்வரும் போலியெழுத்தென்பது கொள்ளவைத்தமையானும், இது சந்தியக்கரமுணர்த்திய தன்மை தெளியலாம். "இகரயகரமிறுதிவிரவு"மென்ற சூத்திரம் இறுதிப்போலி என்றல் பொருந்தாது. அஃது; 'அகரத்திம்பர்யகரப்புள்ளியு' மென்புழி இம்பர் என்பது பின் எனப் பொருள்படுமேனும், காலம்பற்றிவந்த பின்னே இடம்பற்றிவந்தபின்னே என்பது தெளியப்படாமையின்

அதனை விளக்கியவந்ததென்று லென்னையெனின்,—

"நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றும்" (நஉசு) என்றும்,

"நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே" (சக என்றும்,

"நெட்டெழுத்திம்பர்" (கசுசு) என்றும், "குற்றெழுத்திம்பரும்" (உசுஎ) என்றும், ஆசிரியர்கூறிய விடங்களிலெல்லாம் அவ்வாறு விளக்கல்வேண்டுமெஃ்பது பட்டு ஆசிரியர் மேற் குற்றம் பற்றுமாதலானும், ஆசிரியர் இம்பர் என்றுகூறிப இடங்களிலெல்லாம் அச்சொல் காலம் பற்றிய பின்னுகவே பொருள்படுதலானும் அது பொருந்தாதென்பது.

இனி, 'அகரத்திம்பர்.........தோன்றும்' என்னுஞ்சூத்திரத்து வரும் 'மெய்பெறத்தோன்று'மென்பதனல், அகா யகரம்போல, அகர இகரம் ஐயின்வடிவு நன்குபுலப்படவாராதென்பது பெறப்படுதலினுலும், செய்யுட்கட்பயின்றுவாராமையானும், நச்சினார்க்கினியர் 'அகர விகர மைகாரமாகும்' 'அகர வுகர மௌகாரமாகும்' என்னும் இரண்டு சூத்திர வுரையின்கண்ணும் அது கொள்ளற்க என விலக்கி, செய்யுட்கட்பயின்று வருதலானே, 'அகரத்திம்பர்......தோன்றும்,' என்பதனுரையின்கண் 'அது கொள்ளற்க' என விலக்காது, பின் இறுதிப்போலிகூறும் 'இகர யகரமிறுதிவிரவும்' என்னுஞ்சூத்திரவுரையின்கண், செய்யுள்வழக்கன்மையின், அது கொள்ளற்க என விலக்கினுரெனினும், ஆசிரியர்கூறியதனுல் அவை அக்காலத்துப் போலியெழுத்தாகப் பயின்றுவந்தன வென்பதே துணிபாம். இனி, அகர இகரம் அகர உகரம் இகரம் என்னும் மூன்றும், முறையே ஐ ஔ ய் என்னும் மூன்றற்குப்போலியாக, இக்காலத்துப் பயின்றுவாராமையின் அவற்றை நச்சினார்க்கினியர் விலக்கினுரெனினு மமையும்; பிரயோகவிவேகநூலார்க்கு மிதுவே கருத்தாதல், "அ இ, அ உ என்பனவும், இக்காலத்துப் பயன்படாமலே நின்றன வெனினு மமையும்." எனவுரைத்தமையா னறிக.

இனி உரையாசிரியர், 'அகர விகர மைகாரமாகும்' என்பதனுரையின் கண்மாத்திரம் விலக்கி ஏனையவற்றினுரையிற்கூறாது ஒன்றற்குக்கூறியதே ஏனையவற்றிற்கும் அமையுமென விடுத்தாராதலின், அவ்வாறே நச்சினார்க்கினியரும் விடுத்தாரெனல் அமையுமெனின், அங்ஙனமன்று; 'உரையாசிரியர் அது கொள்ளற்க என விலக்காமை அவருரையிற்காண்க' எனப் பிரயோகவிவேகநூலார் கூறினமையானே உரையாசிரியர் அது கொள்ளற்கெனக் கூறினுரல்லர் என்பது பெறப்படுதலினுலும், நச்சினார்க்

கினியர் முன்னும்பின்னும் விலக்கினமையானும், அவர் அகர யகரத்தையும் அகர வகரத்தையும் செய்யுட்கண்வழங்கல்பற்றி விலக்காதொழிந்தனர் என்பதே துணிபாம். அங்ஙனேல் உரையாசிரியருரையில் ஓரிடத்திற்காணப்படுதலென்னையெனின், அது எழுதுவோரால்நேர்ந்த வழூஉப்போலும்; அன்றி, 'அகர உகர மௌகாரமாகும்' என்னுஞ்சூத்திரஉரைக்கண் விடப்பட்டதெனினுமமையும்.

மேலும், முதியோர்சிலர், ஐயன் என்பதற்கு அய்யன் என்றும், ஔவை என்பதற்கு அவ்வைஎன்றும் எழுதலை யாம் இக்காலத்தும் கண்கூடாகக் கண்டிருக்கின்றேம். ஆதலின் அக்காலத்தும் அவ்வாறு எழுதி வழங்கினமைகண்டு ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரஞ்செய்தாரென்பதே துணிபாம். அவர்வழியாத்தமையின் நன்னூலாரும் அவ்வாறே செய்தார். நன்னூலார் வடமொழிமதத்தை மேற்கொண்டவராதலின், இச்சூத்திரத்தையு மவ்வாறேகொண்டு கூறினாரென்றாலென்னையெனின், அவ்வாறுகொண்டிலரென்பது யாங்கூறியசூத்திரப்பொருளானும் இது சந்தியக்கரமுணர்த்தியதெனப் பிறர்கூறுங்கூற்றை யாம் மறுத்துரைத்தமையானு மினிதுணரலா மாதலின் அது பொருந்தாதென்பது.

இனி, வடமொழியில் வரும் ஏ, ஓ, ஐ, ஔ என்னும் எழுத்துக்களையும் சந்தியக்கரமென்று கூறுவதினும், அவைபோல அகர விகர முதலிய எழுத்துக்கள் சேர்ந்து ஒலிக்குமென்பதே பொருத்தம் போலும். எங்ஙனமெனின்:— சந்தியிலே (புணர்ச்சியிலே) பதத்தினிறுதியில்வரும் அகரத்திற்கும், பதமுதலில்வரு மிகரத்திற்கும் அவ்விரண்டன் பிறப்பிடத்தையும் தனக்குப் பிறப்பிடமாகக்கொண்ட ஏ என்னுமெழுத்து ஆதேசமாகவருதலின், அவ்விரண்டனொலியும் அமைந்தமை பெறப்படுமாதலின். ஏனையவு மிவ்வாறே யமைந்தமை வடமொழிச் சந்திலக்கணம்நோக்கியுணர்க. அன்றி, இரண்டெழுத்துக்கூடியவெனில், அவற்றைத் தனி எழுத்தாகவைத்து மகேசுரர் சூத்திரஞ்செய்யார். அவ்வாறே தமிழிலக்கணநூலாசிரியர்களாகிய தொல்காப்பியர் முதலியோரும் ஐ ஔ என்பவைகள் சந்தி எழுத்தாயின் அவற்றைத் தனியெழுத்தாகவைத்துச் சூத்திரஞ்செய்யார். ஆதலின், ஐ ஔ என்பவைபோல, அ இ, அய்; அஉ, அவ் என்பவை ஒலிக்குமென்பதே அவ்வாசிரியர்கள் கருத்தென்பது துணிவாதல் காண்க.

———

சி. கணேசையர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௯௨—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

160. "பெய் கடற் பிறந்தயற் பெறற்கொணு மருந்து பெற்
றைய பொற் கலத்தொ டங்கை விட்டிருந்த ஆதர் போல்
மொய்கிடக்கும் அண்ணல்தோள் முயங்கிடாது முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ?"

இ-ள். "கடலிலே பிறந்ததாய் வேறிடத்துப் பெறமுடியாத தான அமிழ்தத்தை (அதிட்ட வசத்தால் கையுற)ப் பெற்று (அதனை உடனே நுகராமல், அது தங்கப்பெற்ற) அழகிய பொற்பாத்திரத்தோடு கையினின்று (நழுவிநீங்க) விட்டு (ஏமாறி) இருக்கும் அறிவீனர்போல, முன், எனது காதலரது தோள்கள் (தழுவிக்கொள்ளும்படி கிட்டவரப் பெற்ற சமயத்திலே) தழுவாமல், கைக்கெட்டாமற் போக, விட்டு விட்டு (தழுவிக்கொண்டு விடாதிருந்தால் நம்மைப்பிரியாமல் நம்வசமே யிருப்பாரே யென்று இப்போது) உறுதிக்கூற்றுக் கூறுதலால் யாது பயன்? ஒன்றுமில்லை."

பெய்கடல்—(தன்னிடத்துள்ள இரத்தினங்கள் முதலியவைகளை அலைகளால் கரையில்) சொரிகின்ற கடல்; மழை பெய்யும் முகிலெனற்பாலது பெய் முகில் எனவருதல்போல வந்தது. ஐ—அழகு; ஐய—அழகை உடைய. ஆதர்—அறிவில்லார். மொய்—வலி. அண்ணல்—1. தலைவன் (சங்க அக); 2. பெருமையிற் சிறந்தோன் (ஷை)

இராமபிரானது திருமேனி பொற்கலத்துக்கும் அத்திருமேனியினின்று நுகரும் இன்பம் பொற்கலத்திலிருந்து நுகரும் அமுதத்துக்கும் ஒப்பு. முற்பாட்டில் சீதாதேவி தம் காதலரது உருவத்தை அகலாமல் கண்ணிலும் கருத்திலும் இருத்தினேனென்றாரென்று கூறி இப்பாட்டில் அவர் அவ்வாறு தம்காதலருடைய உடலைப்பற்றி விடாதிருந்தேனில்லையே யென்று கழிவிரக்கங்கொண்டாரென்று கூறினர்.

[மேற்கூறியவாறு சீதாபிராட்டி கூறி வருந்தித் துன்பக்கடலுள் ஆழ்ந்துகொண்டிருந்த சமயத்திலே, வில் முறிந்ததைக்கண்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமலர்ச்சியோடு நீலமாலையென்னும் தாதி வந்தாள். வந்தவள் உவகை மிகுதியினால் தன்னை மறந்து வழக்கம் போல வணங்காளாய் ஆடல் பாடல் செய்யாநிற்க, அவளைப் பிராட்டி "உன் மகிழ்ச்சிக்குக் காரணம் யாது?" எனவினவத், தன்நினைவுவரப் பெற்றுத் தொழுது "முனிவர்பின்னே தம்பியாரோடு நம் நகருக்கு வந்தவர், இராமர் என்னும் பெயரினர், வில்லை முறித்தார்" என்று, 'கைகடக்க விட்டகாதலர் கைவசமானார், துன்பக்கடலில் ஆழாதீர், இன்பக்கரை யேறமின்' என்று கூறுவாள்போலக் கூறினாள். அவள் கூறிய அடையாளத்தால் வில் முறித்தவர் தாம் காதலித்தவரே யென்று சீதாதேவி தேறினார்.]

வேறு

161. இல்லையே நுசுப்பென்பார் உண்டுண் டென்னவும்,
மெல்லியல் முலைகளும் விம்ம, விம்முவாள்,
சொல்லிய குறியின் அத் தோன்ற லே அவன் ;
அல்லனேல், இறப்பனென் றகத்துள் உன்னினாள்.

இ - ள். (முன் சீதாதேவிக்கு) இடை (காணப்படாமையால்) இல்லையேயென்று கூறியவர்கள் (இப்போது காணப்படுகின்றதனால்) உண்டு! உண்டு! என்று (அதிசயித்துக்) கூற, (இடை காணுமாத்திரை பெருக்க, இன்னும் பெருத்தல் இயலாவென்னும்படி பெருத்திருந்த) தனங்களும் (முன்னினும் அதிகமாகப்) பெருக்க (உவகை மீக்கூர்தலால் சீதாபிராட்டி உடம்புமுழுதும்) பூரித்தார். (வில்லை முறித்தவரென்று சொல்லப்பட்டவர் எவரோ,) அவர், (தாதி) சொன்ன அடையாளத்தினால், (நான் காதலித்த) அந்தத் தலைவரே: (வில்லை முறித்தவர், அந்தத் தலைவர் அல்லராயின், இறந்துவிடுவேனென்று (சீதாதேவி தம் மனத்தினுள்ளே நினைந்தார்.

நுசுப்பு—இடை. குறி—அடையாளம். குறியின்—1. அடையாளத்தினால்; 2. அடையாளத்தினையுடைய. தோன்றல்—தலைவன் (புறநானூறு). அவன், வில்லைமுறித்தவனைச் சுட்டியது.

'சொல்லிய குறியினத் தோன்றலே அவன் அல்லனேல் இறப்பன்' என்பதற்கு (வில்லை முறித்தவன், தாதி) சொன்ன அடையாளத்தினல் (நான் காமுற்ற) அந்தத்தோன்றலே (ஆதல்வேண்டும்;) அவனல்லனுயின், இறப்பேன் என்று பொருள்கொள்ளலும் பொருந்தும்.

உடம்பெல்லாம் பூரித்தபோது தானும்பூரித்தலால் முன்தோன்றாதிருந்த இடை தோன்றுவதாயிற்றென்பது இப்பாட்டின்முதலடிக்கருத்து.

[சீதாதேவியின்நிலைமை மேற்கூறியவாறாக, சனகர், உலகமெங்கும் போய்முட்டிய, வில்லொடிந்த ஓசையினும் மிகுந்த உவகையுற்று, விசுவாமித்திரரை நோக்கி "இராமருக்குக் கல்யாணம் இன்றே முடித்தலோ, தசரதரைத் தருவித்து முடித்தலோ, எது உமதுவிருப்பு?" என, "அவரை விரைவில் வருவித்தல் நன்று" என, தூதரை அழைத்துத் "தசரதருக்கு நிகழ்ந்தவையனைத்தையும் தெரிவித்து இத் திருமுகத்தைக்கொடுங்கள்" என்று விடுத்தார்.]

எழுச்சிப்படலம்.

தசரதர் மிதிலைக்கு எழுந்துபோதலைக் கூறுவது.

எழுச்சி - எழுந்துபோதல். சங்க அகராதி.

[தூதர் அயோத்தியை அடைந்து, தசரதரைக்கண்டு தொழுது, அவரைப் பிரிந்தபின் இராமர்செய்த அரியசெயல்களை விவரித்துக்கூறித் திருமுகத்தைநீட்ட, அரசர் கற்பனைப்படி அதனை ஒரு புலவர் வாங்கி வாசித்தார். வில்லொடிந்த பேரொலியைப்பற்றிய விவரங் கேட்ட அளவில், தசரத ரணிந்திருந்த வாகுவலயங்கள் கழலும்படி அவர் தோள்கள் பூரிக்க, "அன்று நாம் செவியுற்ற பேரோசை இந்த ஓசையோ!" என்று வியப்பொடுகூறித் தூதருக்கு ஆடையாபரணங்கள் அளித்தார். பின்பு அரசரும் சேனையும் முன்னாக மிதிலைக்குச்செல்லும்படி கட்டளையிட்டார். அந்தச் சேனையின் மேல் கவிந்த வெண்குடைகள் செல்வன சிறைவிரித்துப் பறக்கும் அன்னப்பறவைகள் போன்றன; ஆகாயமளாவ உயர்த்துப்பிடிக்கப்பட்ட கொடிகளில் தொங்கும் சீலைகள் ஆகாயமெங்கும் [illegible] கொடிச்சீலைகள் [illegible] தாழுதல் வெண்மேகம் [illegible].]

162. இழையிடை இள வெயில் எறிக்கும்; அவ் வெயில்
தழையிடை நிழல் கெடத் தவழும்; அத் தழை
மழையிடை எழில் கெட மலரும்; அம் மழை
குழைவுற முழங்கிடும் குழாம் கொள் பேரியே.

இ - ள். (அந்தச் சேனையில் உள்ளார் அணிந்திருந்த) ஆபரணங்களில் (உள்ள பொன்னும் மணிகளும்) இளவெயில் வீசும்: அந்தவெயில் மயிற்றோகைக் குடைகளின் நிழல் ஒழியும்படி பரவும்: அந்தக்குடை மேகங்களின் அழகுகெட விரியும்: அந்த மேகம் தளர்வடையும்படி பேரிகைகள் முழங்கும்.

இழை - ஆபரணம். தழை - மயிற்றோகைக்குடை. இடை - இடம். தழை யிடை நிழல் - மயிற்றோகைக் குடையிடத்து (அதன் கீழ்)உள்ள நிழல். மழை - மேகம்.

குடையும் மேகமும் மேலே பரந்து மூடி நிழல் செய்யும்; மயிற்றோகைக் குடை இனிய பல வருணங்கள் இலங்கும் மயிற்றோகைகளாலாகியது; மேகமும் இனிய பலவருணமுள்ள வானவில்லையுடையது; ஆதலால் மேகமும் மயிற்றோகைக் குடையும் ஒன்றற்கொன்று ஒப்புமையுடையனவென உய்த்துணரும்படி 'அத்தழை மழையிடை எழில்கெட மலரும்' என்றார்.

[மாதர்கள் மீதிருந்து செலுத்தப்பெற்ற குதிரைக்கூட்டம் அன்னங்கள் மேலேயிருக்க அவற்றோடு செல்லும் ஆறுபோன்றது. பெண்கள் ஏறிச்செல்லும் யானைகள் மின்னல்களோடு கூடிய மேகங்களை ஒத்தன]

163. முத்தினால் முழு நில வெறிக்கும், மொய்ம் மணிப்
பத்தியால் இள வெயில் பரப்பும், பாகினும்
தித்தியா நின்ற சொற் சிவந்த வாய்ச்சியர்
உத்தரா சங்கம் இட் டொளிக்கும் கூற்றமே.

இ - ள். (இனிப்பான சர்க்கரைப்) பாகினும் அதிகமாக இனிக்கின்ற (குதலைச்) சொல்லையுடைய சிவந்த வாயினர் (ஆகிய மாதர்கள்) மேலாடையிட்டு மறைத்த யமன்(போலக் காதலரை வருத்திக்கொல்லும் கொங்கைகள், மேலணிந்திருக்கிற) முத்(தாரத்)தினால் (அதன் வெள்ளொளியாகிய) நிலவைப் பரப்பும்; மாணிக்கமாலையினால் (அதன் செவ்வொளியாகிய) இளவெயிலைப் பரப்பும்,

முழுநிலா - பூரணசந்திரிகை. மணி - மாணிக்கம் (சிந்தாமணி). உத்தாசங்கம் - உத்தரீயம் - மேலாடை.

வெயிலுள்ளபோது நிலவில்லை, நிலவுள்ளபோது வெயிலில்லையென் பதற்கு விரோதமாக, ஏக காலத்தில் வெயிலும் நிலவும் பரப்பப்பட்டன வென ஆச்சரியந்தோன்றக்கூறினர்.

164. உழுந்திட இடம் இலை உலகம் எங்கணும்!
அழுந்திய உயிர்க்கெலாம் அருட் கொம் பாயினன்
எழுந்திலன்: எழுந் திடைப் படரும் சேனையின்
கொழுந்து போய்க் கொடி மதில் மிதிலை கூடிற்றே.

இ - ள். (நால்வகைச் சேனையும் அதனோடு சென்ற மாதர் முதலி யோர் கூட்டமும் நெருங்கிப் பரந்ததனால்) உலகமெங்கும் ஓர் உழுந்தை யிடவும் இடமில்லை! (யென்னும்படி ஆனது). (துன்பச்சேற்றில்) அழுந் தும் உயிர்க்கெல்லாம் அருளாகிய(ஊன்று)கோலாயிருக்கும் தசரதர்(மிதி லைக்குச்செல்லத் தனது இருக்கைவிட்டு)எழவில்லை:(அதன்முன்பே, அவர் கட்டளையின்படி அயோத்திக்கும் மிதிலைக்கும்) இடையேசென்றுகொண் டிருந்த சேனையின் (முன்னணி) முனைசென்று மிதிலையைச் சேர்ந்தது.

படர்தல் - 1. நடத்தல்; 2. கொடிபடர்தல். 'படரும்' என்றது சேனை நடத்தலையும் கொடி படர்தலையும் உணர்த்தியது; 'கொழுந்து' என்றது சேனையின் முன்னணி முனைப்பகுதியையும் கொடியின் நுனி யையும் குறித்தது : வேறோரிடத்தில் காலின்முனையில் உள்ள விரலைச் 'சேவடிக் கொழுந்து' என்பர் (நிந்தனைப்படலம்—௬௫).

சேனையைக் கொடியாக உருவகித்து, அவ்வுருவகத்தை உய்த் துணரும்படி 'படரும்' 'கொழுந்து' என்றபதங்களைப் பொருத்தமாகப் பிரயோகித்தார். மிதிலையை வருணிக்க எத்தனையோ பலஅடைமொழிக ளிருக்கவும், அவற்றுள் வேறெதனையும் எடுத்தாளாமல், 'கொடி மதில் மிதிலை' என்று கூறியது, சேனையைக் கொடியாக உருவகித்ததை உய்த் துணராதாரும் உணரும்படி செய்பக்கருதிப் போலும்.

165. பாண்டிலின் வைத்த ஓர் பாவை தன்னொடும்
ஈண்டிய அன்பினன் ஏகு வான் இடைக்
காண்டலும் நோக்கிய கடைக்கண் அஞ்சனம்
ஆண்டகைக் கினியதோர் அமுதம் ஆயதே.

இ - ள். வண்டியில்(தான் ஏற்றி)வைத்த பாவைபோல்வாளோடு செல்பவ (ளாகிய அவள் காதல)னை (ப் பிரயாண) மத்தியில் (அவள் கடைக்கண்ணாற் பார்த்தாள்.) பார்த்தவுடனே பார்த்த கடைக்கண் அஞ்சனம், (அவள் மனத்துள் அதுவரை மறைத்துவைத்திருந்த காதலை வெளிப்படுத்தி) அவனுக்கு இனிய அமுதம் போன்றது.

பாண்டில் - வண்டி. ஈண்டுதல் - நிறைதல் (சங்க அகராதி). இடை - மத்தி. அஞ்சனம் - 1. கண்ணுக்கு இடும் மை; 2. மறைந்து கிடக்கும் பொருளைக்காட்டும் மை. ஆயது - போன்றது.

'கடைக்கண்' கடைக்கண்பார்வைக்கு ஆகுபெயராகவும், 'கடைக்கண் அஞ்சனம்' கடைக்கண்பார்வையாகிய அஞ்சனமென்று பொருள்படுவ தாகவுங் கொண்டு, அஞ்சனகாரனது அஞ்சனம் பூமியின் உள்ளே மறைந்துகிடக்கும் புதையற்பொருளைக் காட்டல்போல, பார்வையாகிய அஞ்சனம் மனத்தினுள்ளே மறைந்துகிடக்கும் காதலைக் காட்டிய தென்று கொள்ளலாம்: அன்றிக் 'கடைக்கண் அஞ்சனம்' என்பதற்குக் கடைக்கண்ணாகிய அஞ்சனமென்று பொருள்செய்து, காதலியின் வெள் விழி கண்ணாடி நேர, அதனிடையுள்ள கருவிழி அக்கண்ணாடியில்இடும் அஞ்சனத்தை நிகர, காதலன் அஞ்சனகாரனை ஒப்ப, காதலி கடைக் கணித்தபோது அவன் அவள் கருவிழியுள்ளே நோக்கிக் கண்டுபிடித்த உள்ளக்காதல் அஞ்சனகாரன் அஞ்சனத்துள்ளே நோக்கிக் கண்டுபிடிக் கும் புதையற்பொருள்போன்றதென்றும் கொள்ளலாம்.

அஞ்சனகாரனது அஞ்சனம் அவனுக்குப் புதையற்பொருளைக் காட்டிக்கொடுத்து வறுமைநோயை நீக்குதல்போல, காதலியின் கண் ணஞ்சனம் காதலனுக்கு அவளுடையஉள்ளக்காதலைக்காட்டிக்கொடுத்து விரகநோயை நீக்குதல்பற்றிப் "பாவை....கடைக்கண் அஞ்சனம் ஆண் டகைக் கினியதோர் அமுதம் ஆயதே" என்றார். (அமுதம் நோவையும் சாவையும் நீக்கும் தேவருணவு).

[ஒருவன், தன் காதலிதனங்களிற் பதிந்தகண்களைப் பறிக்கமாட் டாது சென்றதனால், "வழிநடப்பவர் பராமுகமாயிடின் மலர்ந்துகண் ணிருந்தாலும், குழியில் வீழ்குவர்" என்றவாறு குருடன்போல எதிர் வரும் யானையைக்கண்டு விலகாது முட்டினான். வேறொருவன், தன் காதலி ஏறிச்சென்ற குதிரை துள்ள, அவள் வழுவி, விழாநிற்க,

அவளுக்கு அபாயம் நேராமல் அவளைத் தாங்கித் தழுவியவன் தரை மேல் இறக்காமலும் இறங்கவிடாமலும் தழுவியபடியே பரவசனாய் நின்றான். மற்றொருவன் தன்காதலியை நோக்கி "உன் இடை காணப்படவில்லையே! புறப்படும் அவசரத்தில் அதை மறந்துவைத்துவிட்டு வந்தாயோ?" என்றான். ஒரு மாது புலந்து தன் கோபத்தைக் கண்ணாலன்றி வாயாற்கூறாது செல்ல, அவள் காதலன் "இப்போது என்னோடு பேசுகின்றாயில்லையே, வழியில் உள்ள ஆற்றிலிறங்கிச் செல்லும்போது, உன்னை யார் கைபால்தூக்கிக் கரைமேலேற்றுவார்?" என்றான். மற்றொரு மாது தன் அன்பன் புலந்து பிரிந்துபோனவனை நினைந்து கண்ணீர் ததும்பத் தேர்மேற் செல்பவள் அவனது உருவெளித்தோற்றங்கண்டு "புலந்துசென்ற நீ திரும்பிவந்தாயா! நல்லது, தேரிலேறு" என்றுகூறித் தூக்கி ஏற்றுதற்குக் கைகளைத் தாழ்த்தினாள்.

காணுதற்குமட்டுமன்றிக் கருதுதற்குமரிதான இடையையும் காதலர் கண்ணுங் கருத்தும் உருவிக் கடந்து உயிர்வரையுஞ்சென்று நுழையும் விழியையுமுடைய மாதர்கள் எண்ணிறந்தவர்கள் தங்கள் காதலருடன் இராமபிரானுடைய திருக்கலியாணங் காணும் அவாவினராய்ச் சேனையோடு சென்றார்கள்-]

வேறு.

166. குடையொடு களிறும் தொங்கற் குழாங்களும் கொடியின் காடும்
இடைஇடை மயங்கி, எங்கும் வெளி கரந் திருளைச் செய்யப்,
படைகளும் முடியும் பூணும் படர் வெயில் பரப்பிச் செல்ல
இடைஒரு கணத்தி னுள்ளே இரவுண்டு பகலும் உண்டே!

இ - ள். (அந்தச் சேனையின்) இடையே, குடைகளும் யானைகளும் பீலிக்குஞ்சத்தொகுதியும் கொடிக்கூட்டமும் அங்கங்கே கலந்து எங்கெங்கும் (ஆகாய) வெளியை மறைத்து இருளை உண்டாக்க, ஆயுதங்களும் கிரீடங்களும் ஆபரணங்களும் விரிந்த வெயிலைப்பரப்ப, ஏககாலத்தில் இரவும் உளதாயது, பகலும் உளதாயது.

தொங்கல் - மயிற்றோகைக் குஞ்சம். குழாம் - கூட்டம். காடு - கூட்டம். இடை இடை - ஊடே ஊடே. மயங்கி - கலந்து. கரந்து - மறைத்து. இடை - (சேனையின்) இடையே.

'இடை ஒரு கணத்தினுள்ளே' என்பதை 'ஒரு கணத்தின் இடை உள்ளே' எனக்கூட்டி 'ஒரு கணத்தின் துவக்கத்துக்கும் முடிவுக்கும் நடுவிலே' என்றும் கொள்ளலாம். ஒரேகாலத்தில் நிகழமுடியாத - ஒன்றற்கொன்று முற்றும் மாறுன இரண்டு நிகழ்ச்சிகள், யாதாயினும் ஒரு காரணம்பற்றி, ஒருமிக்க நிகழ்வனவாக, வியப்புத்தோன்றக் கவிமுறையிலே கூறுமிடங்களில் கம்பர் 'ஒரு கணத்து' என்ற சொற்றொடர்ப் பிரயோகஞ் செய்வர். 'ஒரு கணத்திரண்டு கண்டேன்' என்ற பாட்டைப் பார்க்க (திருவடி-எஎ).

167. ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டகன் திசைக ளெங்கும்
போர்த்ததங் கொருவர் தம்மை ஒருவர்கட் புலங்கொள் ளாமைத்
தீர்த்தது செறிந்த தோடித் திரை நெடுங் கடலை யெல்லாம்
தூர்த்தது சகர ரோடு பகைத்தெனத் தூளி வெள்ளம்.

இ - ள். (சேனை செல்வதனுலுண்டாகிய) புழுதித்திரள் (எங்கும் புழுதிகளை) நிறைத்தது; விண்ணைமுட்டித் திரும்பித் திசைகளெங்கும் (சென்று) மூடியது; (சென்ற இடங்களில்) ஒருவரை ஒருவர் பார்த்தல் கூடாமல் தீர்த்தொழித்தது; சகரரோடு பகைத்தாற்போல (அவர்கள் தோண்டி உண்டாக்கிய) கடலைத் தூர்த்தது.

ஆர்தல் - நிறைதல்: ஆர்த்தல் நிறைத்தல். அகன் திசை - விசாலமான திக்குக்கள். கண்புலம் கொள்ளாமை - கண்ணுல் அறியாமல்-காணுமல். தீர்த்தது - ஒழித்தது. செறிந்தது - நெருங்கியது - அடர்ந்தது. பகைத்தென - பகைத்தாலென - பகைத்தாற்போல. வெள்ளம் - மிகுதி.

[அப்புழுதித்திரள் பொன்மயமான விண்ணுலகமீது படிந்து (பொன்னிறம் மறைய மண்மயமாகச் செய்து) அவ் விண்ணுலகத்தை இம் மண்ணுலகமென்று மயங்கும்படி செய்தது. இவ்வளவு புழுதியுண்டாக்கிய தசரதாது பெருஞ்சேனைப்பாரத்தைத் தாங்கமாட்டாமல் பூமிதேவி முதுகை நெளித்தாளென்றுல், அவர் பூபாரம் தாங்கிப் பூமிக்குப்பாரத்தை நீக்கினுரென்று கூறுவது எவ்வாறே? அவர் சேனை பரிசனங்களுடன் இரண்டுயோசனைதூரம்சென்று சந்திரசைலச்சாரலைச் சேர்ந்தார்.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

மதுரை—இராமநாதபுரம் ஜில்லா

ஐக்கியமஹா சங்கத்தின் அக்கிராசனர் பிரசங்கம்.*

கனவான்களே! இன்று இங்கு தங்களைச் சந்திக்கநேர்ந்தது எனக்குப் பெரிய கௌரவமென்று மதிக்கிறேன். சென்றவருஷத்தில் உங்கள் ஆலோசனைகளை உடனிருந்து புரிந்த மகா-ா-ா-ஸ்ரீ வேதாசல ஐயர் போலில்லாமல் நான் இங்கே ஐக்கியவிஷயங்களைத் தெரிந்துகொள்ள வந்திருக்கிறேன். ஆலோசனைவிஷயங்கள் முக்கியமானவை. குடிகளின் கஷ்டங்களையும் விருப்பங்களையும் உடனிருந்துணர்ந்த உங்கள் அபிப்பிராயங்களைக் கேட்கும்படியான சமயம் கொடுத்ததற்கு வந்தனமளிக்கிறேன்.

மதுரை இராமநாதபுரம் ஜில்லாபாங்கு இவ்வருஷத்திலும் நன்றாய் உதவிசெய்திருக்கிறது. பாங்கின் நிர்வாகஸபையில் ஐக்கியசங்கப்பிரதிநிதிகள் முன்னிலும் அதிகப்பட்டிருப்பதால் ஐக்கியம் வலுத்து வருகிறது. நூற்றுக்கு 8½ யாயிருந்த வட்டியை 8 ஆகக் குறைத்திருப்பது சங்கங்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் லாபகரமாயிருக்கிறது. சங்கங்களும் மெம்பர்களும் பங்குப்பணங்களும் அதிகப்பட்டுவருவது ஐக்கியவளர்ச்சியைக்காட்டுகிறது. ஐக்கியசங்கங்கள் மெம்பர்களின் முன்கடன் தீர்க்கவும் வியவசாயம்நடத்தவும் 4 லக்ஷரூபாவுக்குமேல் இவ்வருஷம் கடன்கொடுத்து உதவிசெய்திருக்கின்றன. வியவசாய சம்பந்தமில்லாத நெசவுசங்கங்கள் ரூபா 57000 விலைமதிப்புள்ள துணிகள்நெய்தன. அதில் லாபம் 509 ரூபா கிடைத்திருக்கிறது. சென்ற ஜூன்மாதத்தில் விபவசாயக்கைத்தொழில் ஐக்கியசங்கம் ஒன்று மேலூரில் ஸ்தா

---

*இது, ராமேசுவரத்தில் நாளிது 1924-ம்௵ ஜனவரி௴ 19, 20உகளில் கூடிய மதுரை ராமநாதபுரம் ஜில்லா ஐக்கியசங்கத்தின் 6-வது மஹாஸபையின் அக்கிராஸனரான ராமநாதபுரம்ஜில்லா கலெக்டர் ராவ்பஹதூர் டி.வி, கிருஷ்ணமாசாரியர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.

பிக்கப்பட்டிருக்கிறது. அது விளைபொருள்களை வேறு பலபண்டமாக்கி விற்கவும், உழுதொழிலுக்குவேண்டிய எருக்களையுண்டாக்கி விற்கவும், உதவியாயுள்ளது. திண்டுக்கல்லிலும் மதுரையிலும் உள்ள கட்டட சங்கங்களுக்கு நீடித்ததவணைக்குப் பணம்கிடையாமையால் அவை விருத்தியடையவில்லை. கொடைக்கானல் உத்தியோகஸ்தர்சங்கம் தொடங்கிய ஒருவருஷத்துக்குள் அதன் பங்குப்பணத்தையும் தொகுப்பு (டிபாசிட்டு)த் தொகைகளையும் கொண்டு பராபேக்ஷையில்லாமல் நடந்துவருவது திருப்திகரமாயிருக்கிறது.

சென்றவருஷத்தில் சென்றல் பாங்கிலும், சில நகரபாங்குகளிலும் சமயோபகாரநிதி யொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் 4 வருஷம் முதல் 30 வருஷம்வரை வேண்டியவருஷங்களை முடிவாகக்கொண்டு மாதமாதம் செலுத்திவரும் தொகைக்கு நூற்றுக்கு 6¼ வீதம் வருஷந்தோறும் வட்டிகூட்டிக் குறிப்பிட்டகாலத்திற் பெற்றுக்கொள்ளலாம். இந்தவற்பாடு பொருள்தொகுப்பவர்களுக்கும் நெடுங்காலத்தவணைக்கடன் வாங்கவேண்டியவர்களுக்கும் அனுகூலமான பொதுநன்மையுடையது. இது மேன்மேல் வளரும்படி நீங்கள் எல்லோரும் முயற்சிக்கவேண்டும்.

இந்த ஜில்லாக்களிலுள்ள ஐக்கிய பண்டகசாலைகள் 17483 ரூபா பங்குமுதலைக்கொண்டு 2¾ லக்ஷம் ரூபாய்க்கு வியாபாரம் செய்து 10694 ரூபா லாபம் அடைந்திருப்பது பாராட்டத்தக்கது.

இவ்வாறாக ஐக்கியமுறை வளர்ந்திருப்பது உண்மையேயானாலும் இனிச் செய்யவேண்டிய காரியங்களைநோக்கும்போது இது அற்பமாகவே தோன்றுகிறது. இப்படிப்பட்ட மஹாநாட்டுக்கூட்டங்களில் சங்ககாரியங்களின் குணதோஷங்களையாராய்வதே ஐக்கிய முன்னேற்றத்தைத் தூண்டுவதாம். இங்கேநடக்கும் ஆலோசனையின்பலனைப் பிரதிநிதிகள் கிராமாந்தரங்களில் ஐக்கியஉணர்வை வளர்ப்பார்களென்பதில் ஐயமில்லை.

இந்த ஜில்லாக்களில் 100-க்கு 90 பேர் பயிரிடுபவராயிருந்தும் 100-க்கு 5 பேர்களே ஐக்கியமெம்பர்களாயிருக்கிறார்கள். ஜமீன் கிராமங்களில் இதிலும் குறைந்திருக்கிறார்கள். இதன் காரணங்களை ஆராயவேண்டிப் பூமி ஆளும் முறைகளைப்பற்றிப் பேசுவதில், பூமிக்குடையவர்களையாவது மேற்பார்ப்பவர்களையாவது இகழ்ந்ததாக நினைக்கக்கூடாது.

ஜமீன்கிராமக்குடிகள் முன்னுக்குவாராமலிருப்பதற்கு வாரப்பிரிவே முக்கியகாரணம். இதைப்பற்றி ஸர். சேஷையசாஸ்திரிகள் நன்கு எழுதியிருக்கிறார்கள். இயல்பாகவே கொழுப்பும் செழிப்புமுள்ள நிலங்களைத்தவிர மற்றநிலங்களைக் குடிகள் சொந்தமுயற்சியால் வளப்படுத்தி உயர்ந்தபயனை அடைவதற்கிடமின்றி வறுமைபடைந்து வருகிறார்கள். பூமிக்குடையவர் கிராமங்களை அன்னியருக்குக் குத்தகைக்கு விடுவதாலும் குடிகளுக்குக் கஷ்டநஷ்டங்களுண்டாகின்றன. இப்படிப் பட்டகுடிகளிடம் ஐக்கியமுறைவளர்வது அரிதாயிருக்கிறது. இப்பொழுது சிவகெங்கை எஸ்டேட்டில் வாரப்பிரிவைமாற்றி ரொக்கப்பணத் தீர்வை ஏற்படுத்திவருவது குடிகளுக்கு அநுகூலமாயிருக்கிறது. அதனால் அங்கு ஐக்கியமுறைவளர இடமுண்டாகிறது. குடிகள் சகாயவட்டிக்குக் கடன்வாங்கிப் பயிரிடுந்தொழில்களை நன்றாகச்செய்யவும் உரியகாலங்களில் கிஸ்தி செலுத்தவும் கூடும். இவ்விதஅனுபவங்களை நான் விஜயநகரம் எஸ்டேட்டில் டிரஸ்டியாயிருந்தபோது பார்த்திருக்கிறேன். தீர்வைப்படுத்தாக்குவதால் நிலங்களின் விலைமதிப்பும் அதிகப்படுகிறது. வாரப்பிரிவில் புள்ளியைப்பற்றிய தாவாவும், ஒழுங்கில்லாத உத்தியோகஸ்தர்களின் தொந்தரவும், தானியத்தைக் கண்டு முதல் செய்யுமுன் அப்புறப்படுத்துவதும் அதனால் வியாச்சியங்களும் உண்டாகின்றன. கிராமஐக்கியசங்கங்களை நாட்டி அவற்றின் மேற்பார்வையில்விட்டு இவற்றை நீக்கிவிடலாம். குளம் கால் மராமத்து முதலிய வேலைகளையும் அவர்கள் வசம்விட்டால் நியாயமாகவும் வீண்செலவில்லாமலும் செய்யக்கூடும். ஆகையால் இந்த ஐக்கியமுறையைப் பரவச்செய்வதற் குதவிசெய்யும்படி பூமிக்குடையவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிகள் கிணறுவெட்டிக்கொள்ளவும், கட்டிடங்கள் கட்டிக்கொள்ளவும், ஒத்திநிலங்களைத் திருப்பிக்கொள்ளவும் வேண்டியதொகைகளை நீடித்த தவணைக்கடனாக வாங்கிக்கொள்ளச் சௌகரியமாகும்படி டிரஸ்டு பணங்களைச் சென்றல்பாங்கில் போட்டுவைக்க இடங்கொடுக்கும்படி டிரஸ்டு ஆக்டை மாற்றுதல் நலமென்றெண்ணுகிறேன்.

பயிர்செய்பவர்கள் ஒவ்வொருவருஷத்திலும் 5, 6 மாதங்களிற் செய்யும்வேலையின் பயனைக்கொண்டு வருஷமுழுவதும் ஜீவிக்கப்போதாமல் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு உதவித்தொழில்களாக ஆடு மாடு

வளர்க்கவும், பால் நெய் விற்கவும், காய்கறி கிழங்குவகை பயிரிடவும், நூணி, பட்டு, கம்பளி, கோணியல்கள் நெய்யவும், எண்ணெய்வகைக ளெடுக்கவும் வேண்டியவசதிகளை அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி யமை யச்செய்யவேண்டும்.

தற்காலத்தில் தேசநன்மைக்கு வேண்டியவை: சங்கங்களின் மெம் பர்கள் வீண்செலவுகளைச்சுருக்கிப் பணம்சேர்த்துப் பாங்குகளில் போட வேண்டும். அப்படிப்பட்ட பாங்குகளைக் கிராமங்கள்தோறும் ஏற்படுத் திக்கொள்ளவேண்டும். கிராமவாசிகளைப் பாங்கில் பணம்போடும்படி பழக்குவதற்கு ஐக்கியசங்கங்கள் வழிகாட்டவேண்டும்.

ராவ்பஹதூர் ஏ. கே. ராஜாவையரால் ஊக்கத்தோடு நடத்தப்பட்டு வரும் கள்ளர்சங்கங்களின்நன்மை வளர்ந்துவருகிறது. இந்தக் கள்ளர் சங்கங்கள் கள்ளர்களுடைய பழையவழக்கங்களை மெள்ளமெள்ள விட்டு விடும்படிசெய்வதோடு அவர்களை நாகரிக ஜனங்களாகும்படி மாற்றிக் கொண்டும் வருகிறது.

இனி நாம் ஊக்கத்தோடு குடிகளை ஒத்துழைக்கும்விதிகளிலும் லாபகரமானதொழில்களிலும் தேடியபொருளைச் சிதறவிடாத செயல் களிலும் மிச்சம்பிடிக்கும்விதங்களிலும் டம்பச்செலவைத் தவிர்ப்பதி லும் நாணயம்தவறாமல் கடன்தீர்ப்பதிலும் பழக்கவேண்டியதோடு, மீந்த பணத்தைப் பாங்குகளில் வட்டிக்குப்போடாததால் உண்டாகும் நஷ்டங்களையும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

நாகரிகமுள்ள பல தேசசங்கங்களிலும் இப்படிப்பட்ட பலவிஷயங் களையும் ஐக்கியசங்கங்களே விருத்திசெய்திருக்கின்றன. நாமும் அவர் கள் காட்டியவழியைப் பின்பற்றிபொழுதினால் தேசத்தின் வறுமையைப் போக்கிச் செல்வப்பெருக்குடையவர்களாய்ப் பலவித நன்மைகளையும் அடையலாம்.

ஐக்கிய சங்க முறை.*

கனம்தங்கிய அக்கிராசனாதிபதியவர்களே! ஐக்கியநாணயச்சங்கங்களின் சகோதரப்பிரதிநிதிகளே! மற்றுமுள்ள என்னேசச்சகோதரர்களே!

பெருமைபொருந்தியதும் பொதுநலவூக்கத்தைக்கொண்டதுமான இம்மகாநாட்டின்கண் சிறியேனாகிய என்னாற்கூறப்படும்விஷயங்களிற் குற்றமிருப்பினும் பெரியோர் பிழைபொறுத்துமன்னிக்கும்படிவணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. நமது நாட்டின் தற்கால நிலைமை.

பொதுவாக நமதுநாட்டின் தற்காலநிலைமையை ஊன்றிக்கவனித்துப்பார்க்குமிடத்து வறுமைமிகுந்து வருவாய்குறைந்து கஷ்டங்கள் மேலிட்டிருக்கின்றன. உண்ணஉணவும் இருக்க இல்லமுமற்று எத்தனையோலக்ஷம் ஏழைஇந்தியர்கள் பரிதபித்துக்கொண்டிருக்கின்றனர். அளவிறந்த இந்தியமக்கள் வயிற்றுப்பிழைப்புக்காக அந்நியநாடுகளான கானடா, பீஜி, தென்னாபிரிக்கா, பர்மா, இலங்கை, ரெங்கோன் முதலியநாடுகளுக்குக் கூலிகளாகச்சென்று அவஸ்தைப்படுகின்றனர். நாமோ உண்ணும்உணவைத்தவிர மற்றெல்லாச்சாதனங்களுக்கும் அந்நியநாடுகளையே எதிர்பார்த்தவண்ணமாய் ஏமாந்துநிற்கின்றோம். நமது நாட்டில் நிலையூன்றியிருந்த சிறுகைத்தொழில்முறைகளெல்லாம் கவனிப்பாரின்றிப் பாழடைந்துகிடக்கின்றன. கொஞ்சம் உயிருடன் ஜீவித்திருக்கும் வியவசாயத்தொழிலும் பரஸ்பரம் ஒற்றுமையில்லாததாலும் பணவருவாய்குன்றிவிட்டபடியாலும் நாளடைவில் க்ஷீணதசையை அடைந்துகொண்டேபோகிறது. சுதந்தரவாழ்க்கையும்சுதந்தரத்தொழில் முறைகளும்மறைந்துவிட்டன. அடிமைவாழ்க்கையும்அடிமைத்தொழில் முறைகளும் அதிகப்பட்டு உலாவிவருகின்றன. நமதுநாடோ ஏராளமான கிராமப்பிரதேசங்களையுடையது. சுமார் 7½லக்ஷம் குக்கிராமங்கள்

---

* இது, ராமேசுவரத்தில் நாளிது 1924ஷ ஜனவரிமீ 19, 20உகளில் நடந்த மதுரை ராமநாதபுரம் ஜில்லா 6-வது கூட்டுறவுமஹாநாட்டில், பெரியகுளம் தாலூகா வீரபாண்டி ஐக்கியநாணயச்சங்கக் காரியதரிசி ஸ்ரீமத். V. M. மாரிச்சாமிபிள்ளையவர்களால் வாசிக்கப்பட்டது.

மட்டும் இருப்பதாகப் புலனாகிறது. இந்தக் கிராமப்பிரதேசங்களில்தான் நமதுதேசீயவாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்கள் மலிந்துகிடக்கின்றன. தொழில்செய்யவல்லவரும், ஏராளமானமுதிர்ந்த வியவசாயிகளும் நிரம்பியிருக்கின்றனர். ஆனால் இக் கிராமப்பிரதேசங்களில்தான் கிராமவாசிகள் நசுங்குண்டு, தொழில்வலிமைகுன்றி, கவனிப்பாரின்றி, போதியகல்வியுணர்வுமில்லாமல், பணப்புழக்கத்துக்குத் தகுந்தசாதனங்களுமில்லாமல், எளியநிலைமையோடு பரிதபித்துக்கொண்டிருக்கின்றனர்.

2. கிராமங்களின் அஸ்திவாரம்.

கிராமங்கள் விருத்தியடைந்துவிட்டால் இந்தியாவே வறுமை என்ற பிசாசின்வாயிலிருந்து விடுதலையடைந்துவிட்டதெனச் சொல்லலாம். நமதுநாட்டை நாம் விருத்திக்குக்கொண்டுவர எண்ணுவோமானால் அது பணமின்றி முடியாது. நமதுநாயனாரும் இதை உத்தேசித்தல்லவா,

> "பொருளல்லவரைப்பொருளாகச்செய்யும்
> பொருளல்லதில்லைபொருள்"

என்றார். ஆதலால், பணத்தை ஒன்றுசேர்க்கவேண்டும். அப்பணத்தை எம்மார்க்கத்தால் ஒன்றுசேர்க்கமுடியுமென்று நாம் ஆலோசித்துப்பார்ப்போமானால் 'எத்தால்வாழலாம்; ஒத்தால்வாழலாம்' என்றமுதுரைப்படி ஜனங்கள் ஒற்றுமையைக்கைக்கொண்டு நம்பிக்கையிருந்து ஒன்றுசேர்ந்தால்மட்டும் பணம் ஒன்றுசேர்க்கவேண்டியவேலை முற்றுப்பெறும். அப்பணத்தைக்கொண்டு சுருக்கமாய்ச் செலவுசெய்து உயிரையும் பொருளையும் காப்பாற்றவேண்டிய நிலைமையில் தற்காலம் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இவ்விதமாகச் சேர்க்கவேண்டிய பெரும்பொருளை ஏககாலத்தில் ஒன்றுசேர்ப்பதற்கு நாம் இப்பொழுதிருக்கிற நிலைமையில் தயாராகமுடியாதென்பது நிச்சயம். சிறுகச்சிறுகவே ஒன்றுசேர்க்கமுடியும். அப்படி ஒன்றுசேர்க்கவேண்டிய முதல்வேலை கிராமப்பிரதேசங்களில்தான் நடக்கவேண்டும். கிராமப்பிரதேசங்களில்தான் முன்னேற்ற அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளில் இவ்வாறே சிறுகச்சிறுக ஒன்றுசேர்ந்த பணம் இப்பொழுது மேலோங்கிப் பெருத்தநிதியாகத்

திரண்டிருப்பதால் அவர்கள் தாங்களடையவேண்டிய சுகங்களை எளிதாக அடைந்துகொள்ளத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். நாமோ 'இல்லாரை எல்லாருமெள்ளுவர்' என்ற பழமொழிப்படி மற்றெல்லாத்தேசத்தார்களின் கைகளையும் எதிர்பார்த்தவண்ணமாய் ஏமாந்து தவிக்கிறோம்.

3. ஐக்கியநாணயச்சங்கங்களே சிறந்தசாதனம்.

வழுக்கலுள்ள சேற்றுப்பூமியில்நடந்துசெல்வதற்கு ஊன்றுகோலானது எவ்வளவு அவசியமோ அதைப்போல வறுமை நிறைந்துகொண்டேபோகும் நமது தேசத்திற்கு ஐக்கியநாணயச்சங்கங்கள் மிகவும் அவசியமானவை. அதிலும் கிராமப்பிரதேசங்களுக்கு ஐக்கியசங்கங்களின் உதவி இன்றியமையாதசாதனம். இச் சாதனங்களைக் கைக்கொண்டு நம்மவர்களுக்குள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிற வேற்றுமையைத்தொலைத்து ஒற்றுமையை நிலைநிறுத்தி உலகவாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனமான பணத்தை ஒன்றுசேர்க்கவேண்டும். கிராமப்பிரதேசங்களில் தொழில்வலிமை வளர்ந்தேறுவதற்குரிய பணவிருத்திக்கும், நாணயமாற்றுதலுக்கும், மீந்தபணங்களை லாபத்துடன் சேர்த்துவைப்பதற்கும், தேவையானபோது சுலபமானவழியில் பணம்பெற்றுக்கொள்ளுவதற்கும் வேறு பொறுப்புள்ள தகுந்த சாதனங்கள் இல்லையென்பது வெளிப்படை. ஆகவே ஐக்கியநாணயச் சங்கங்களே மேற்கண்ட வழிகளில் கிராமப்பிரதேசத்தை விருத்திக்குக் கொண்டுவருவதற்குச் சிறந்தசாதனங்களாகும்.

4. இப்போதுள்ள சங்கங்களின் நிலைமை.

கிராமவாசிகள் ஐக்கியசங்கங்களின் உதவியை இன்னும் அதிகப் பழக்கத்துடன் பெரும்பாலும் கைக்கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது 100-க்கு ஒன்றிரண்டு கிராமத்தார்களே கைக்கொண்டிருக்கின்றனர். அவர்களிலும் 100-க்கு ஒன்றிரண்டுபேரே இயக்கத்திற் கலந்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கோ ஐக்கிய இயக்கத்தின்உணர்ச்சியே இன்னும் ஏற்படவில்லை. சந்தேகம் என்ற மாயப்பிசாசின்மயக்கில் அவர்கள் மூழ்கியிருக்கின்றனர். அம்மயக்கை நீக்கவே நாம் இங்கு ஒன்றுகூடி ஒற்றுமையென்ற ஆயுதத்தையும் அதற்கு உபபலங்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். நிற்க, நமது தற்காலக்கூட்டுறவையும் கொஞ்சம் கவனிப்போம். ஐக்கியஇயக்கத்திற் கலந்து அதில் மெம்பர்களாயிருப்ப

வர்களினும் பெரும்பாலார் தங்கள்பொறுப்பும், சுதந்தரமும், இயக்கத்தின் சுபாவமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற துணைச்சட்டங்களும் உத்தரவாதமும் அறியாதவர்களாகவே யிருக்கிறார்கள். சில கிராமவாசிகள் ஐக்கியசங்கங்களுக்குக் கிடைக்கும் கடன்கள் சர்க்காரிலிருந்தே கொடுபடுவதாய் நினைக்கிறார்கள். சில கிராமசங்கத்தார், சங்கம் தொடங்கியவுடனே சென்ட்ரல்பாங்குகளிலிருந்து ஏதேனும் ஒரு கடனைவாங்கி மெம்பர்களுக்குப் பட்டுவாடாசெய்துவிட்டுத் தவணைப்படி பணங்களை வசூலித்துச் சென்ட்ரல்பாங்காருக்கு அனுப்பாமல் தூங்கும் சுபாவத்தையுடையவர்களா யிருப்பதோடு தங்கள்சங்கம் தொடங்கியநோக்கமும் பயனும் அம்மட்டே என்று தவறாகக்கருதியும்விடுகின்றனர். நிர்வாகவிஷயமாய் அங்கத்தினர்களுக்குள் பொறாமையால் கட்சிப்பிரதிகட்சிகளுண்டாகிச் சில சங்கங்கள் உலைந்துவிடுகின்றன. சிலசங்கத்தார் சங்கத்தின்நோக்கமும் பயனும் சரியாய் அறிந்துகொள்ளமுடியாமல் தங்நலமேபெரிதெனநம்பி வாளாவிருந்துவிடுகின்றனர். ஐக்கியசங்கமானது மெம்பர்களின் முன்னேற்றத்தின்பொருட்டு மீதும் பணங்களைச்சேர்த்து வைக்கக்கூடிய ஒரு பொதுக்களஞ்சியம் என்ற உணர்ச்சி சங்கத்தார்களிற் பெரும்பாலாருக்கு இன்னும் ஏற்படவில்லை. கிராமப்பிரதேசங்களில் வேரூன்றியிருந்த தினசரி பணவருவாய்தரக்கூடிய கைத்தொழில் முறைகள் குன்றிவிட்டபடியாலும், கிராமவாசிகளில் 100-க்கு 98-பேர்வரை படியாதஇனத்தவராயிருப்பதாலும் அவர்கள் ஐக்கிய இயக்கத்திற் கலந்திருந்தும் அதன் உணர்ச்சிபற்றவர்களாகவே யிருக்கிறார்கள். அதனால், கூட்டுறவுத்தத்துவத்தின் கோட்பாடுகள் இன்னும் கிராமப்பிரதேசங்களில் முழுதும் பலன்தந்துவிட்டதாக எண்ண இடமில்லை.

5. அவைகளின் நடவடிக்கை.

ஐக்கியநாணயச்சங்கங்களுக்குப் பணவருவாய்தரக்கூடிய பிரதான வழிகள் மூன்று. அவற்றுள் முதலாவது பங்குமூலதிரவியம் சேர்த்தல். இரண்டாவது டிபாசிட்டாகப் பணம்சேர்த்தல். மூன்றாவது: இவைகள் சங்கத்தின்வேலைக்குப் போதாவிட்டால் சென்ட்ரல் பாங்காரிடமிருந்து கடனாகப் பணம் பெற்றுக்கொள்ளல். இப்பணங்களைக்கொண்டுதான் சங்கத்தின் முழுநோக்கத்தையும் நிறைவேற்றி நாமும் அதனால் இன்றியமையாத சாதனங்களை யடைந்துகொள்ளக்கூடியவர்களா யிருக்கிறோம். இம்மூன்றுமுறைகளில் முதலாவதுமுறை சங்கத்திற்கு மிகவும் அத்தி

யாவசியமான பொறுப்பு. இரண்டாவதுமுறை சங்கம் பிறரை எதிர்பாராது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள லாயக்குடைய ஒரு சாதனம். மூன்றுவதுமுறை நமக்கு அவசியமாய்த் தேவையாயிருக்கும் பொழுது கடனைச் சுலபமான மார்க்கத்திற் பெற்றுக்கொள்வதற்காக நாம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற ஒரு சிறந்த சாதனம்.

6. அவைகளின் குறைகள்.

இம்முறைகள் கிராமப்பிரதேசங்களில் பிரதம ஐக்கியசங்கங்களில் நடந்தேறுவதில் ஏற்படும் குறைகளைச் சற்று நிதானித்துப்பார்ப்போமானால் மெம்பர்களிற் பெரும்பாலார் பங்குத்தொகையின் பொறுப்பையும் உத்தரவாதத்தையும் அதன் சுதந்தரத்தையும் உணராதவர்களாகவேயிருக்கிறார்கள். அதைச் சிலர் கண்மூடித்தனமாய், சுலபமான வட்டிக்கும் சௌகரியமானதவணைக்கும் பலவித சில்லறைச்செலவுகளில்லாமல் தங்களுக்கு ஐக்கிய சங்கங்களிற் கிடைக்கும் கடன்களைப் பெறுவதற்காகக் கொடுக்கும் ஒரு தக்க கமிஷனென்றே நினைத்துவிடுகின்றனர் தங்களின் பங்குத்தொகையானது சங்கத்தின்மூலதிரவியம் என்பதையும், தாங்களும் அதில் ஒருபங்குடைய முதலாளிகள் என்பதையும் உணருகிறார்களில்லை. ஆகவே, பங்குமூலதிரவியத்தின் பொறுப்பு கிராம ஐக்கியசங்கங்களில் இன்னும் அறியப்படாதிருப்பதால் பிரைமெரி சங்கங்களில் மூலதனம் பெருகுவதற்கு அதிக காலதாமத மேற்படுகிறது.

கிராமப்பிரதேசங்களில் மாத வரும்படியாவது, தினசரி வரும்படியாவது இப்பொழுதுகிடையாது. வியவசாயிகளுக்கு மகசூல்காலங்களில் மட்டுமே வரும்படி எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வரும்படியுள்ள காலத்திலேதான் ஒவ்வொரு மெம்பரும் தம் தம் குடும்பத்தின் க்ஷேமாபிவிர்த்தியைக் கவனித்துப் பணம் மீத்துவைக்கவேண்டியவராயிருக்கிறார்கள். இதனால், பிரதம பிரைமெரி சங்கங்களில் மாத டிபாசிட்டாவது வீட்டு உண்டியல் டிபாசிட்டாவது பெறமுடியாதுபோகிறது. ஆறுமாதத்துக்கு ஒருதரம் மகசூல் காலங்களில் மட்டுமே டிபாசிட்டு வாங்கலாம். ஆனால் இப்போதிருக்கிறமுறையில், சங்கங்களில் கூட்டுறவின் கோட்பாடு மெம்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படாதிருப்பதால் ஆறுமாதத்துக்கு ஒருதரம்கூட டிபாசிட்டுப் பெறமுடிகிறதில்லை. கிராமவாசிகள் தங்களிடம் மீதும் பணங்களைத் தகுந்தபொறுப்புள்ளதும்

தர்மவட்டி சோர்வடையாமல் கிடைப்பதுமான ஐக்கியசங்கங்களில் டிபாசிட் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி அவர்களுக்கு இன்னும் உண்டாகவில்லை. ஆகவே, சங்கங்கள் டிபாசிட்டுத்தொகையின் மிகுதியைக்கொண்டு தங்களின் முழுநோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்ள ஐக்கிய உணர்ச்சி இன்னும் அதிகம் பரவாதிருப்பது ஒரு தடையாயிருக்கிறது.

வியவசாய மெம்பர்களுக்கோ அவசியம் கடன் வேண்டியிருக்கிறது. அதிகநிலமுள்ள வியவசாயிகளும் கடன்வாங்கியே தங்கள் தொழில்களை நடத்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆதலால், கிராமவாசமுள்ள, வியவசாயத்தொழிலை மேற்கொண்ட எல்லாருக்குமே கடன் தேவையாயிருக்கிறது. கிராமப்பிரதேசங்களில் சங்கங்கள் தங்களுக்கு வேண்டியிருக்கிறபணங்களைப் பங்குமூலமாகவும் டிபாசிட்டுமூலமாகவும் சேகரித்துக்கொள்ளும் காலம் இன்னும் வந்துவிடவில்லை. ஆதலால், பிரைமெரிச் சங்கங்கள் தங்களுக்கு வேண்டியிருக்கிற பணங்களுக்குச் செண்ட்ரல்பாங்காரையே எதிர்பார்க்கின்றன. செண்ட்ரல்பாங்காரோ கிராமசங்கங்களுக்குக் கடன்கொடுப்பதில் அதிக அதைரியமுடையவர்களாகவேயிருக்கிறார்கள். கடன்கொடுக்கும் முறையிலும் அதிககாலதாமதமேற்பட்டுவிடுகிறது. ஒரு மெம்பர் கடன் எதற்காகவேண்டுமென்று உத்தேசித்தாரோ அந்தநோக்கமும் கடனைப்பெறும் காலதாமதத்தால் வியர்த்தமாய்ப் போய்விடுகிறது. சங்கமானது மெம்பர்களுக்கு முதன்முதல் ஒருதடவை ஒரு கடன்வாங்கிக் கொடுத்துவிட்டால் அப்பால் சேரும் புதியமெம்பர்கள் சங்கத்தின் உதவியையடையச் சங்கமானது செண்ட்ரல்பாங்காருக்கு மறுகடன் ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கும்வரை காத்திருக்கவேண்டிவருகிறது. தனது அவசரமானகஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ளச் சங்கத்தின்உதவியை நாடிவந்த அந்த மெம்பர் அதுவரை காத்துக்கொண்டிருக்க முடியாததால் கடன் கொடுப்பதற்காகவே காத்துக்கொண்டிருக்கும் சாவ்கார்களின் தயவையே நாடுகிறார்கள்.

இப்போதிருக்கிறமுறையில் செண்ட்ரல்பாங்கில் கடன்வாங்க ஏற்படுத்தியிருக்கும் விதிகளாகிய சடங்குகளைச் செய்துமுடிப்பதற்குள் வீணான காலதாமதமும் சிரமமும் உண்டாகிறபடியால் மெம்பர்களுக்கு நல்லஉதவியு மில்லாமற்போய்விடுகிறது. சங்கவிஷயத்தில் ஊக்கங்காட்டும் பஞ்சாயத்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் அதனால் அசிரத்தையும் ஏற்பட்டுவிடுகிறது. கிராமப்பிரதேசங்களில் சங்கம்தொடங்கியவுடனே

அச்சங்கமானது மெம்பர்கள் பிறரிடமும் சாவ்கார்களிடமும் அநேக வட்டிக்கும் கொடுமையான ஒப்பந்தங்களுக்குமுட்பட்டு வாங்கியிருக்கிற பாரமான பழையகடன்களைத் தீர்க்கும்வேலையையே முதன்முதல் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. பழைய நிறைந்த முன்கடன்களைத் தீர்ப்பதென்றால் சங்கம் நீடித்தகாலக்கடனையே கொடுத்துதவவேண்டியிருக்கிறது. மெம்பர் தன் குடும்பபோஷணைக்கும் தன் தொழில்களைக் காலதாமதமின்றி முடித்துக்கொள்வதற்கும், சுப அசுபகாரியங்களுக்கும், கிஸ்திக்கும், பண்டிகைகளுக்கும் இன்னும் மற்றவீட்டு வியவகாரங்களுக்கும் ஏற்படும் செலவுக்காக அப்போதைக்கப்போது வாங்கும் சிறு சில்லறைக்கடன்களைத் தீர்ப்பதற்காக ஏற்படும் செலவைக் கழித்து மீதம்வரும்படியே நீடித்தகாலக் கடன்களையடைக்க உதவுகிறது. ஆதலால் முன்கடன் தீர்க்கும் கடன்களெல்லாம் நீடித்தகாலக் கடன்களாகவே கொடுக்கவேண்டியிருக்கிறது. இக்கடனை மெம்பர்கள் வாங்கி, முன்கடனை யடைத்துவிட்டால் இடையில் அப்போதைக்கப்போது அவசியமான குறுகியகாலக்கடன்களும் மெம்பர்களுக்குத் தேவையாயிருக்கிறது. இக்குறுகிய சில்லறைக்கடன்களுக்கு அதே மெம்பர் மறுபடியும் சங்கத்தின் தயவை நாடிவந்தால் அக்கடன்களைச் சங்கம் கொடுத்துதவமுடிகிறதில்லை. ஏனெனில், பிரைமெரிசங்கங்களில் பங்குமூலதிரவியம்சேர அதிக காலதாமதமாகிறது. டிபாசிட்டோ கிடைப்பதில்லை. சென்ட்ரல் பாங்காரோ ஒருதடவை கடன்கொடுத்துவிட்டால் அது தீரும்வரை சங்கங்களுக்கு மறுகடன் கொடுக்கச் சம்மதிக்கிறார்களில்லை. ஒரு அவசரமான காரியத்திற்காகவாவது சங்கம் வசூலிலிருந்து கடன்கொடுக்கலாம் என்று உத்தேசித்தால், கனம் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்த்ரார் அவர்கள் வசூல்பணத்தைக் கடனே கொடுக்கக்கூடாதென்று சர்க்குலர் பிறப்பித்துவிடுகிறார்கள். ஆகவே, இச்சிறுசில்லறைக்கடன்களைப் பெறும்பொருட்டுச் சங்கத்திற்சேர்ந்திருக்கும் மெம்பர்கள் பழையபடியும் அச் சாவ்கார்களின் தயவையே நாடுகிறார்கள். அவர்களோ ‘முன்னுக்குப்பின் முரண்’ என்றபடி முன்புகொடுத்த அதிகவட்டிக்குமேல் இன்னும் கொஞ்சம் கூடுதல்வட்டியும் கொடுமையான ஒப்பந்தங்களும் ஏற்படுத்திவிடுகிறார்கள். இக் கடன் கொடுமையால் மெம்பர்களுடைய பழையகடன்கள் தீர்ந்தபாடில்லை. மறுபடியும் நாள்வழியாய்க் கடன் பெருகிவிடுகிறது. சங்கமானது சென்ட்ரல்

பாங்காரிடம் ஒரு நீடித்தகாலக் கடன்வாங்கி மெம்பர்களுக்குக் கடனாகக்கொடுத்துவிட்டால் அவ்வாயிதா திரும்வரை மெம்பர்களிடமிருந்து தவணைப்பணங்களை வசூலித்துச் சென்ட்ரல்பாங்காருக்கு அனுப்பிக்கொண்டிருக்கும் ஒருவேலையைத்தவிர மெம்பர்களின் முன்னேற்றத்தின் பொருட்டு யாதொரு உதவியும் செய்யச் சக்தியற்றதாகவேயிருக்கிறது.

இவ்விஷயத்தில் நமக்குக் குறைகள் ஏன் உண்டாகின்றனவென்று சிறிது ஊன்றிப்பார்த்தால் நமது முயற்சியின்குறைவே இவ்விததொந்தரவுகளை உண்டாக்கிக்கொண்டிருக்கிறதென நன்குதெரியும். சென்ட்ரல் பாங்கு நமது சங்கங்களின் அபிவிருத்தியின்பொருட்டே ஏற்பட்டிருக்கிறது. நமது சங்கங்களெல்லாம் ஒன்றுகூடியே இந்தச்சென்ட்ரல்பாங்கை ஏற்படுத்துகின்றன. சென்ட்ரல்பாங்குவேறு நாம்வேறுஎன்று சொல்வதற்கு எந்தவழியுமில்லை. நாமே சென்ட்ரல்பாங்காராக இருக்கும்போது நாம் அதைப்பற்றிக் குறைகூறிக்கொண்டிருப்பதில் யாதும் பயனில்லையென்றேதெரிகிறது. ஆனால் நமது முன்னேற்றத்தில் அதிகக்கருத்துக்கொண்டு நமக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யவேண்டுமென்ற அவாவோடுகூடிய நமது சகோதரர்களான சிலதனிமெம்பர்கள் சென்ட்ரல் பாங்கின் நிதியைப்பெருக்க முன்வந்துள்ளார்கள். அவர்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கருதியே அதற்கும்நாம் அனுமதித்திருக்கிறோம். அவர்கள் நமக்கு அன்னியர்களல்லர். நம்முடைய முன்னேற்றத்திற்குத் தகுந்தபணவுதவியைச்செய்யமுன்வந்துள்ளநமது ஐக்கியசகோதரர்களென்பதை நாம் அழுத்தமாய் ஞாபகத்தில்வைத்துக் கொள்ளவேண்டும். ஐக்கியசங்கங்களுக்குத் தாயகமானஉயிர்நிலை நம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சென்ட்ரல்பாங்கே. அதைக் காப்பாற்றவேண்டிய முழுப்பொறுப்பும் நமது சங்கங்களையே சார்ந்திருக்கிறது. நமது சங்கங்களின் முழுஊக்கமும் நமது சகோதரர்களான தனிமெம்பர்களின் நம்பிக்கையும் இருந்தால்தான் சென்ட்ரல்பாங்கானது நீடித்துவளரமுடியும். நாம் சென்ட்ரல்பாங்கை நமது சொந்தபாங்கென்று தெளிவாய்த் தெரிந்துகொண்டு அதன் வளர்ச்சியில் கருத்துவைத்துவிட்டோமானால் நமது சங்கங்களும் சீக்கிரம் அபிவிருத்தியை அடையும். நாமோ சென்ட்ரல்பாங்கின் விடவகாரங்களைத் தீர்மானிக்கவும் அதன் நிர்வாகம் வரவு செலவுகளைத் தணிக்கைசெய்யவும் வருஷமொருமுறை சென்ட்ரல்பாங்கில் மகாசபைகூட்டுகிறோம். அதில் நமது பிரைமெரிச்சங்கங்களே அளவு

கடந்தவாயிதாத்தவறின பாக்கிகளை வைத்துக்கொண்டிருக்கின்றன. நாம் வாயிதாக்கடந்த பாக்கிகளை வைத்துக்கொண்டிருப்பதாலும் செண்ட்ரல் பாங்கு வேறு நாம் வேறு என்றுஎண்ணிச் சும்மாவிருந்துவிடுவதாலுமே செண்ட்ரல்பாங்கில் தகுந்தஉதவியையடையக் கொஞ்சம் தடைஏற்படுகிறது. விவசாயமெம்பர்களுக்கோ கடன் அடிக்கடி தேவையாயிருக்கிறது. உலகப்போக்கின்சுபாவத்தையொட்டித் திடீரென்று ஏற்படும் சம்பவங்களாலுண்டான கஷ்டத்தைநீக்கப் பணம்வேண்டும். மேலும், அவர்களுக்கு அவசியம்நேரிட்டபொழுதெல்லாம் தொழிலைமுடிக்கப் பணம் தேவையாயிருக்கிறது. "பருவத்தேபயிர்செய்" என்றும், 'எண்ணிச்செய் செட்டை' 'எண்ணாதேசெய் வேளாண்மையை' என்றுமுள்ள பழமொழிகளின்படி ஏற்றகாலம்வந்தபோதும் சமயம்ஒத்துக்கொண்டகாலத்தும் சீதோஷ்ணஸ்திதியை எதிர்பார்த்துச் சமயத்துக்குத்தக்கபடியெல்லாம் செலவழித்துத் தொழில்செய்யும் வன்மையுடையது விவசாயம். தவிரவும் விவசாயத்தொழிலுக்கு ஏற்ற தகுந்த சாதனங்களும் சாமக்கிரிகைகளும் தண்ணீர்ச் சௌகரியமும் இடவசதிகளும் செல்வாக்கும் ஒற்றுமையாக வேண்டும். இதை விளக்கக்கருதியே நமது ஔவையாரும்,

"ஏரு மிரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் —நேராகச்
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்று முழவே யினிது"

என்று சொல்லியிருக்கிறார். இவ்விதமாக எல்லாச் சௌகரியங்களும் ஒருங்கேயமையப்பெற்ற விவசாயிகளைக் காணுதல் அரிதாகும். 'ஒன்றிலார்க்கொன்றில்லை' என்ற முதுமொழியின்படி எவ்வளவு சௌகரியங்கள் அமையப்பெற்ற வியவசாயியாயிருந்தாலும் பணப்பழக்கமில்லாமல் தன் தொழில்களைச் செவ்வையுற நடத்த முடியாது என்பது பிரசித்தம்.

"குன்றேறியானைப்போர்கண்டற்றாற்றன்கைத்தொன்
றுண்டாகச்செய்வான்வினை"—(திருக்குறள்).

யாதொரு அச்சமும் வருத்தமுமில்லாதபடி உயர்ந்த குன்றின்பேரில் இருந்துகொண்டிருப்பவன் பூமியில் யானைகள் ஒன்றோடொன்று செய்கிற சண்டையை எப்படி இனிதிருந்து பார்ப்பானோ அதைப்போலத் தன்னிடம் பொருளைச் சேர்த்துவைத்துக்கொண்டிருப்பவன் தன் தொழிலை முடிக்கத்தகுந்த ஆட்களைக்கொண்டு இனிமையாகவே தனது

தொழில்களை முடிக்கவல்லவனாவான் என்பது கருத்து. ஆதலால் தொழில்முடிய உதவிசெய்வது பொருளே. அதிலும் நமது வியவசாயத் தொழிலுக்குப் பணப்பழக்கமானது இன்றியமையாத சாதனமாயிருந்து கொண்டிருக்கிறது. இப்பணங்களைத் தற்போது வியவசாயிகள் ஐக்கிய சங்கமல்லாத மற்றமார்க்கங்களில் அடைவதனால் உண்டாகும் கஷ்டமும் நஷ்டமும் எண்ணத்தரமன்று. அந்த நஷ்டத்தைக் குறைக்கத் தகுந்தஉதவிசெய்வன நமது ஐக்கியசங்கங்களே. அச்சங்கங்களில் இருக்கும் சிற்சில அசௌகரியங்களையும் சீக்கிரம் நிவர்த்தித்துவிடவேண்டியது மிகவும் அவசியமாகும்.

7. நிவர்த்திக்கவேண்டிய மார்க்கங்கள்.

(மெம்பர்களின்உணர்ச்சி அவசியமானது.)

பங்குமூலதிரவியம் சீக்கிரம் பெருகுவதற்கு மெம்பர்களின் உணர்ச்சி மிகவும் அவசியமானது. சங்கமானது நிலையூன்றி வளர்ந்து தகுந்த பலனைக்கொடுக்கவேண்டுமானால் சங்கத்தின்மெம்பர்களுக்கு நல் லுணர்ச்சியும், சகோதரத்வமும், சுதந்தரநன்மையும், பரஸ்பரஒற்றுமையும், பொதுவிஷயங்களில் ஊக்கமும், சமூகக்கட்டுப்பாடும், புதியவிஷயங்களை யறிந்துகொள்ளும் மனோவிசாலமும் இருக்கவேண்டும். மெம்பர்கள் தங்கள் தனித்தொழில்களைச் செவ்வையாகச்செய்து அதனால் தகுந்த பலனைக் கைக்கொண்டு சுபிட்சத்தை அடையவேண்டுமானால், கூட்டுறவுத்தொழிலின்வலிமையைக்கொண்டு நிலைநிறுத்தவேண்டும்.

"வினையால்வினையாக்கிக்கோடனனைகவுள்
யானையால்யானையாத்தற்று"

என்றார் வள்ளுவனார். ஒருதொழிலை மற்றொரு பலம்பொருந்திய தொழிலின் உதவியைக்கொண்டு முடித்துக்கொள்வது எதை ஒக்குமென்றால் ஒருயானையை வேறொரு பழக்கப்பட்ட யானையைக்கொண்டு பிணிந்ததொக்கும். சங்கத்தில் சேர முன்வருபவர்களெல்லாம் சங்கத்தின் மூலதனத்தையும் காப்புநிதியையும் நாளடைவில் பெருக்கிப் பிறருதவியை எதிர்பாராமல் தங்களுக்குத் தாங்களே முதலாளியாகும் தத்துவத்தை உணர்ந்திருக்கவேண்டும். சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருமெம்பரும் சங்கம் தமக்குச் சொந்தமான ஒரு பொதுக்கூட்டுறவுச்சாதனமென்பதை நன்குணர்ந்திருக்கவேண்டும். சங்கத்தின் முன்னேற்ற விஷயத்திலும் நிர்வாக அமைப்பிலும் கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டும்.

பொதுநல ஊக்கமும் தன்னலமறப்புமுள்ள தகுந்த பஞ்சாயத்தார்களைக் கொண்டு சங்கத்தின் நிர்வாகத்தை யமைக்கவேண்டும். பெரிய சந்ததி, பணக்காரர் பாம்பரையானவர் ஆகலால் அவரைத்தான் பஞ்சாயத்தாராக நியமிக்கவேண்டு மென்ற கண்மூடித்தனமான கொள்கை யவர்களை விட்டொழியவேண்டும். கிராமப்பிரதேசங்களில் இவ்வித கொள்கைகள் அளவுகடந்திருக்கின்றன. அதனால் சங்கத்தின் அமைப்புச் சரியான மார்க்கத்தில் நிலைநிறுத்தப்படவில்லை. சங்கத்தில் சேரமுன்வருபவர்கள் ஒரே ஒரு நோக்கத்தைமட்டும் கைக்கொள்ளுகிறார்கள். அதாவது குறைந்தவட்டிக்கும் கிரமமான நல்லதவணைக்கும் பல சில்லறைச்செலவில்லாமல் கடன்வாங்கிக்கொள்ளலாம் என்பதே. இது, முழுவதும் பலன்தரத்தக்கதில்லையென்பதை அவர்கள் உணரவேண்டும். நமக்கு அவசியம்நேரிட்டபொழுது உதவவும் நமது தொழில்முறைகளைச் சீர்பெற முடிக்கவும் நமதுபணங்களைக் கூட்டுறவுக் களஞ்சியங்களில் சேமித்துவைத்துக்கொண்டால் அதனால் நமது தொழில் முட்டுப்படாதென்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படவேண்டும். கட்சிபேதங்களும் ஜாதிமதவித்தியாசங்களும் சில்லறைச்சண்டைகளும் வீணானசெலவுகளும் அறவே யொழியும் கூட்டுறவுமார்க்கபோதனை அவர்களுக்கு ஏற்படவேண்டும். இப்போதிருக்கிற நிலைமையில் கிராமப்பிரதேசங்களில் ஐக்கியஉணர்ச்சியை அதிகம் பரவச்செய்யவேண்டுமானால் இம்மகாநாட்டுத்திருவிழாவைப்போல ஒவ்வொருதாலூகாக்களிலும் ஒருமகாநாட்டுத் திருவிழாக் கூட்டிவைப்பதே ஒரு சிறந்த சாதனமாகும்.

8. போக ஏலச்சீட்டுகள்.

கிராமப்பிரதேசங்களில் டிபாசிட்டுப்பெறுவதற்குத் தடையாக இருக்கிற ஒருவிதக் கூட்டுக்கொள்கையுடைய போகஏலச்சீட்டுகள் நடைபெறுகின்றன. ஷை போகஏலச்சீட்டுகளை யெதாவது ஒரு தனிமனிதன் முதல்பிடிதாராயிருந்து நடத்துகிறான். அதில் சேரும் சீட்டு மெம்பர்களுக்குப் பணம்சேரும் முறைமையில் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு முடிவில் ஒருவேளை பணத்துக்கும் நஷ்டப்வந்து கோர்ட்டு வாசலுக்குப் போகும்படியும் நேரிடுகிறது. அந்தப் போகஏலச்சீட்டுக்களைப் பிரதம பிரைமெரிச்சங்கங்கள் முதல்பிடிகாராயிருந்து லெகுவானமார்க்கத்தில் மெம்பர்களுக்கு லாபத்தைக்கொடுக்கக்கூடிய முறையில் நடத்தலாம். இம்முறைகளை நடத்தப் பிரதமசங்கங்களில் சட்டம்

ஏற்பட்டிருந்தபோதிலும் அநேக கிராமசங்கங்கள் இம்முறையையும் கைக்கொள்ளவில்லையென்றே சொல்லலாம். இம்முறைகளைச் சங்கங்கள் கைக்கொள்ளுமானல் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இதுவும் ஒரு தகுந்த சாதனமாயிருக்கும்.

9. இதர பொதுப்பணங்கள்.

இதைத்தவிர ஒவ்வொருகிராமத்திலும் கிராமத்துக்குச்சொந்தமான பொதுப்பணங்கள் அதாவது கோவில்உண்டியல்நிதி,தரகு, மகமை குத்தகை,போகப்பிடித்தம், சமுதாயவரும்படிகள், கிட்டங்கிக்குத்தகை முதலிய பல பொதுவரும்படிகள் பொதுச்செலவுக்காகக் குடிகளால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரும்படிகள் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்குமுன்புவரை நிலைத்திருந்த நமதுநாட்டு நகரச்சங்கங்களாலும், தொழிற்சங்கங்களாலும் ஏற்படுத்தப்பட்டவைகள் என்பது புலனாகின்றது. ஆனல் அச்சங்கங்கள் நாளடைவில் இருந்தஇடம் தெரியாமல் மறைந்துபோகவே அவ்வரும்படிகள்மட்டும் நிலைத்து அவ்வூரில் பெரியவாக்காளராக இருக்கும் ஒரு தனிமனிதருடைய பொறுப்பில் இருந்துவருகின்றன. இப்பணங்களை கிராமபாங்கு என்றுசொல்லப்படும் கிராமாந்தர ஐக்கியசங்கங்களில் ஒரு டிபாசிட்டாகப் போட்டுவைத்துக் கிராமப் பொதுக்காரியங்கள் நிறைவேறவேண்டிய காலங்களில் மட்டும் எடுத்துச்செலவுசெய்துகொள்ளலாம். அந்தப்பணத்துக்குஎவ்விதபயமுமில்லை. லாபமுமுண்டு. நமது ஐக்கியசங்கங்கள் இதுவிஷயங்களில் ஒரு கிராமபாங்கைப்போல உதவிசெய்யக்கூடியதாயிருக்கும். இவ்வரும்படிகளிலிருந்து ஒவ்வொரு சிறுகிராமத்திலுங்கூட வருஷாந்தரத்திற்குள் சேரக்கூடிய பொதுப்பணம் குறைந்தபக்ஷம் 1000 ரூபாய்க்குக் குறையாது. இப்பணங்களை நமது ஐக்கிய சங்கங்கள் டிபாசிட்டாகப்பெற்றுவிட்டால் நமது எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்கு இதுவும் ஒரு தகுந்தசாதனமாயிருக்கும்.

10. பஞ்சாயத்தார்களின் உற்சாகம்.

பஞ்சாயத்தார்களின் உற்சாகம் அதிக பலந் தரத்தக்கது. மெம்பர்களுக்கு ஐக்கியஇயக்கத்தில் அதிக உணர்ச்சியையும் திருப்தியையும் உண்டுபண்ணக்கூடியவர்கள் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்தார்களே. சரியான பஞ்சாயத்தார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் சங்கத்தின் அமைப்பும் உபயோகமும் பயன்படும். பஞ்சாயத்தார்

களுக்குச் சங்கமுன்னேற்ற விஷயத்தில் அதிகச் செல்வாக்கும் உற்சாகமும் வேண்டும். அவர்கள் சங்கத்தின் முழுவியவகாரத்திலும் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும். சங்கத்தைப் பலவழிகளிலும் முன்னேறச்செய்யவேண்டியவர்கள் பஞ்சாயத்தார்களே. அவர்கள் கூட்டுறவுத்தொழிலின் மூலதத்துவங்களில் நன்றாய் உணர்ச்சிபெற்றவர்களாகவே யிருக்கவேண்டும்.

"செய்வினைசெய்வான்செயன் முறையவ்வினை
யுள்ளறிவான்உள்ளங்கொளல்"

என்றார் நமது பெருநாவலர். அதாவது ஒரு தொழிலைச் செய்ய மேற்கொண்டவர் அத்தொழின்முறைகளைப் பூரணமாயறிந்தே செய்ய முன்வரவேண்டும். ஐக்கியத்தொழிலில் வல்லமையமைப்பெற்ற பஞ்சாயத்தார்கள் சங்கத்தின் நிர்வாகவேலையில் அமையப்பெற்றால் பொன்மலர் இயற்கையழகோடு வாசனையையும் அடைந்துவிட்டால் எவ்வாறு பெருமையுறுமோ அவ்வாறே அந்த ஐக்கியசங்கமும் அதிகப்புகழையும் மேம்பாட்டையும் அடையும். ஆதலால் இதுவிஷயங்களில் தேர்ந்த பஞ்சாயத்து மெம்பர்கள் மற்றவர்களுக்குப் பங்குமூலதிரவியத்தின் பொறுப்பையும் கடன்களின் உத்தரவாதத்தையும் எடுத்துச்சொல்லி நமது முதல்வேலை பணம் ஒன்றுசேர்ப்பதே என்பதைத் தெளிவாகக் காட்டவேண்டும். மெம்பர்களுக்குக் கடன்கொடுக்கும் விஷயங்களில், கடனின் சகாயத்தை விரும்புகிற மெம்பர் அதனால் தொழிலபிவிருத்தி செய்கிறாராவென்றும், அத்தொழிலினால் கிடைக்கும் ஊதியம் கிரமமானதுதானாவென்றும் சங்கத்தின் கடனை அத்தொழிலினாற் கிடைக்கும் ஊதியத்திலிருந்து அடைக்கமுடியுமாவென்றும் முதலில் தெரிந்துகொண்டு கொடுக்கும் கடனின் சகாயத்தால் தொழிலபிவிருத்திசெய்து அதனால் கிடைக்கும் லாபத்திலிருந்து இக்கடனை அடைக்கும்படியான இயல்புள்ள சாரியங்களுக்குமட்டுமே கடன்கொடுப்பதில் அதிகதாராள நோக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

11. கூட்டுறவுக்கல்வி.

"விலங்கொடுமக்களனையரிலங்குநூல்
கற்றாரோடேனையவர்"

என்ற தமிழ்மறையின்படி நமது ஐக்கியசங்கங்கள் தழைத்தோங்கக் கூட்டுறவுக்கல்வி மிகவும் அவசியமானது. இனிமேலாவது, குடும்பபாரங்களை நிர்வகிக்கத் தயாராகிக்கொண்டிருக்கும் பள்ளிமாணவர்

களுக்கு இக்கல்வியையும் ஐக்கியத்தின் உண்மையுணர்வையும் ஐக்கிய சங்கங்களின் துணைச்சட்டங்களையும் இளமையில் போதித்தால்தான் அவர்களாவது ஐக்கியர்கள் என்ற ரூபத்தோடும் தொனியோடும் வெளியேறி ஐக்கிய இயக்கத்தில் ஈடுபட முன்வரமுடியும். அதனால் ஐக்கிய இயக்கமும் அதிகமேம்பாட்டையடையும். ஆதலால் ஐக்கியம் என்ற அமிர்தத்தை இப்பொழுதே பள்ளிமாணவர்களுக்குக் கட்டாயமாகப் புகட்டிவிடவேண்டும். இதனால் ஐக்கிய இயக்கத்தின் உண்மையான சொரூபம் வெளிப்பட்டுத் தாண்டவமாடி வறுமையைநசுக்கி வருவாயை மிகுதியாக்கும். பிரதம பிரைமெரிசங்கங்களும் அதனால் மேன்மையடைந்து இன்னும் அநேக சகோதரசங்கங்களை உண்டுபண்ணும்

12. முடிவுரை.

நான் ஏதோ என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் கூட்டுறச்சங்கங்களின் சில விஷயங்களைப்பற்றி அதிகதூரம் உளறிக்கொட்டிவிட்டேன். முடிவுக்குவரவேண்டியது ஒன்றே பாக்கியிருக்கிறது. விரிவஞ்சி அதையும் கூறிவிடுகிறேன். பெரியோர் பிழைபொறுப்பாராக.

நாம் அகங்காரம் என்ற கொடிய அசுரன் நம்மை அணுகாதபடி ஊக்கம் என்ற வாளாயுதத்தைக் கைக்கொண்டு ஒற்றுமை, சுதந்தரம், பொதுநலம் என்ற தேவியை வணங்கித் துணைகொண்டு தளர்ச்சி, வேற்றுமை, துவேஷம், அழுக்காறு, காமம், பொய் இவைகளை அறவேவெட்டித்தள்ளவேண்டும். நாமனைவரும்ஒன்றுகூடிக் கூட்டுறவென்ற கோடாலியின் வலிமைகொண்டு ஒருவராலும் பிளக்கமுடியாதிருக்கும் தரித்திரம் என்னும் கட்டையைத் துண்டுதுண்டாகப் பிளந்தெறியவேண்டும். வாக்குநாணயம் சுயவுதவி சிக்கனம் என்ற திரிகளில் கூட்டுறக்கல்வி என்றநெய்யைச்சொரிந்து செல்வமாகிய தீபப்பிரகாசத்தைக் கொழுந்துவிட்டெரியும்படி செய்யவேண்டும் நாம் அனைவரும் அத்யந்த விசுவாசத்தோடும் அந்தரங்கமான நல்ல சுபாவத்தோடும் நம்மைப்படைத்த கடவுளுக்குமுன் வெட்கமின்றிக் கணக்கு ஒப்புவிக்கவேண்டுமே என்ற திகிலோடும் தாராள நோக்கத்தோடும் சமசுதந்தரத்தோடும் கூட்டுறவுச் சாதனங்களைக்கைக்கொண்டு லௌகிக ஆசாரவாழ்க்கைக்குத்தேவையான பொருளைச் சம்பாதிக்க முயற்சிசெய்யவேண்டும். எல்லாம்வல்ல கடவுள் இந்தியமக்களுக்கு அருள்பாலிப்பாராக. சுபம்.

(வெண்டாழிசைவகை.)

131. போதார் நறும்பிண்டிப் பொன்னார் [1]மணியணையான்
தாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்
தீதார் வினைகெடுப்பார் [2]சிறந்து.

(வெண்கலிப்பாவகை.)

132. நாகிளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனாய் வானிறைஞ்ச
மாகதஞ்சேர் வாய்மொழியான் [3]மாதவர்க்கு மல்லார்க்கும்
தீதகல வெடுத்துரைத்தான் சேவடிசென் றடைந்தார்க்கு
மாதுயரந் தீர்த லெளிது.

(கலிவெண்பாவகை.)

133. பண்கொண்ட வரிவண்டும் பொறிக்குயிலும் பயில்வானா
விண்கொண்ட வசோகின்கீழ் விழுமியோர் பெருமானைக்
கண்ணாலு மனத்தாலு மொழியாலும் பயில்வார்கள்
விண்ணாளும் வேந்தரா வார்.

134. அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

135. போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

136. சீயஞ் சுமந்த மாசறு மணியணை
மேய வரவோன் சேவடி
வாயின் வாழ்த்த வானுல கெளிதே.

137. நவைக்கணம் வீய நன்னூ லாய்ந்து
சேட்டலர் விராய மோட்டார் பிண்டி
நன்னிழன் மேயோன் சேவடி
துன்னினர் துன்னலர் துகட்டிரும் [4]பிறப்பே.

138. உலகுடன் விளக்கு மொளிகிளர் ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை

---

(131) யாப். வி. 66: [1]மணியணிப்புனல். [2]சென்று. (132, 133) ஷை 85. [3]வாசவர்க்கு. (134) ஷை.8. யாப்.கா. உறுப்.5; இலக். வி. 714. (135) ஷை 63; யாப். கா. உறுப். 5. இலக். வி. 714. (136) ஷை. 11. (137) ஷை. 95. [4]பிறப்பதே. (138) ஷை. 52; யாப். கா. இலக். வி.

முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.

(சித்திரக்கா).

139. ஒருதிரட் பிண்டிப் பொன்னெயின் மூன்றின்
ஈரறம் பயந்த நான்முக வண்ணல்
மூவகை யுலகிற்கு மொருபெருங் கடவுள்
நால்வகை யோனியு ளிருவினை கடிந்து
முந்நெறி பயந்த செந்நெறி யொருவன்
நால்வகை யளவையு மிருவகைப் பண்பும்
ஒன்ற வுரைத்த முக்குடைச் செல்வன்
ஈரடி பரவின ரென்ப
பேரா [1]நன்னெறி பெறுகிற் போரே.

(எழுகூற்றிருக்கை.)

140. ஒருபொருட் கிருதுணி புரைத்தனை யொருகால்
இருபிறப் பாளர்க்கு மூவமிழ் தாக்கி
ஈரறம் பயந்த வோரரு ளாழியை
இருமலர் நெடுங்க ணரிவையர் தம்மொடு
மூவகை யுலகி னால்வகைத் தேவரும்
மும்மையி னிறைஞ்சு மீரடி யொருவனை
இருவினை பிரித்து மூவெயின் முருக்கி
நாற்கதி தவிர்த்த வைங்கதித் தலைவ
நான்மறை யாள மும்மதிற் கிழவ
இருகுண மொருமையிற் றெரிவுறக் கிளந்த
இருசுடர் மருட்டு முக்குடைச் செல்வ
நால்வகை வருணமு மைவகைக் குலனும்
மாறறி மாந்தர்க் கறிவுற வகுத்தனை
ஐந்திற நறுமலர் மூன்றுற வேந்தி
நாற்பெரும் படையொடு மும்முறை வலங்கொண்
டிருகையுங் கூப்பி யொருமையின் வணங்கி
அரசர் நெருக்குறூஉ முரசுமுழங்கு முற்றத்

(139, 140) யாப், வி. 96. [1]நானெறி.

திருநிதிப் பிறங்கலொ டிமையவர் சொரிதலின்
முருகயர் வுயிர்க்கு மும்மலர் மாரியை
நால்வகை யனந்தமு நயந்தனை தேவரின்
ஐவகை விழவு மையற வெய்தினை
ஆறுபுரி நிலையுந் தேறினர்க் கியம்பினை
எழுநயம் விரித்த திருமறு மார்பினை
அறுபொரு ளறைந்தனை யைம்பத மருளினை
நான்குநின் முகமே மூன்றுநின் கண்ணே
இரண்டுநின் கவரி யொன்றுநின் னசோகே
ஒருதன்மையை யிருதிறத்தினை
முக்குணத்தினை நால்வகையினை
ஐம்பதத்தினை யறுபிறவியை
எழுகற்றிய மாதவத்தினை
அரிமருவிய மணியணையினை
வளர்கதிரொளி மண்டலத்தினை
அதனால்,
மாகெழு நீழற் கேவலந் தோற்றிய
ஆதியங் குரிசினிற் பரவுதும்
தீதறு சிவகதி சேர்கயா மெனவே.

(கூடசதுர்த்தம்.)

141. கருமால் வினைகள்கை யேறிச் செடிசெய்து காறடப்போ
யருமா நிரயத் தழுந்துதற் கஞ்சியஞ் சோதிவளர்
பெருமான் மதிதெறு முக்குடை நீழற் பிணியொழிக்குந்
திருமா திருந்தடிக் காளா யொழிந்ததென் சிந்தனையே.

142. செருவிளை வைவேற் றிகழொளி வேந்தர் திருமுடிமே
லுருவிளை யொண்போ தலங்கின பாதங் குறைவறியாக்
கருவிளை யாட்டுங் கவினுடை வாட்கட் கனிபுரைவாய்த்
திருவிளை யாடுங் கனவரை யாகச் சினவரனே.

143. மூரன்று சென்று வட்டின
நிரந்த பிண்டி நீழலுள்
பரந்த சோதி நாதனெம்
அரந்தை தீர்க்கு மண்ணலே.

---

(141) யாப். வி. 96. (142, 143) ஷை. 95.

144. கயற்கருங்க ணங்நலார்
முயக்கநீங்கி மொய்ம்மலர்
புயற்புரிந்த புண்ணியர்க்
கியற்றுமின்க ளீரமே.

145. பொங்கு சாமரை தாம்வீசச்
சிங்க பீட மமர்ந்தவெங்
கொங்கு சேர்குளிர் பூம்பிண்டிச்
செங்க ணனடி சேர்மினே.

146. போது விண்ட புண்ட ரீக
மாத ரோடு வைக வேண்டின்
ஆதி நாத ராய்ந்த நூலின்
நீதி யோதி நின்மி னீடு.

147. வினையைத் தான்மிடைந் தோட்டிநீர்
அனகத் தானருள் காண்குறிற்
கனகத் தாமரைப் பூமிசைச்
சினனைச் சிந்திமின் செவ்வனே.

148. உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னுற்றவும்
தொழுவ ரோல்வினை நீங்குக வென்றியான்.

149. ஆதி யானற வாழியி னானலர்ச்
சோதி யான்சொரி பூமழை யான்வினைக்
காதி வென்ற பிரானவன் பாதமே
நீதியா னினை வாழிய நெஞ்சமே.

150. போதுறு முக்குடைப் பொன்னெயி லொருவன்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தீதுறு தீவினை யிலரே.

151. துங்கக் கனகச் சோதி வளாகத்
தங்கப் பெருநூ லாதியை யாளும்
செங்கட் சினவேன் சேவடி சேர்வார்
தங்கட் கமருந் தண்கட னுடே.

(144–147) யாப். வி. 95. (148) ஷை. 37. (149) ஷை. 95. (150) ஷை. 76. (151) ஷை. 95.

152. முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினனா ரருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுறியா வெதிரியகா தியையெறியா
நிருமலரா யருவினராய் நிலவுவர்சோ தியினிடையே.

153. இந்திரர்க ளேத்துமடி யீண்டுயிர்க ளோம்புமடி
வெந்திறல் ஞாயிற்றெழில் வீவிலொளி வெல்லுமடி
மந்திரத்தி னோதுமடி மாதுயரந் தீர்க்குமடி
யந்தரத்தி னாயவிதழ்த் தாமரையி னங்கணடி.

154. கொடிகொடியொடு மிடைவனவுள குடைகுடையொடு குடைமிசை
கடிநறுமலர் சொரிவனவுள கடிமதிலுள கவரியுமுள [யுள
அடிவழிபடு மமரருமுள ரருளகழியொ டரியணையுள
இடிமுரசமு மதிர்வனவுள வினிதினிதவ ரதுதுறவுமே.

155. பிணியார் பிறவிக் கடலுட் பிறவா வகைநா மறியப்
பணியாய் மணியா ரணைமேற் படிவா யொரு மூவுலகுங்
கணியா துணருங் கவினார் கலைமா மடவாள் கணவா
அணியார் கமலத் தலரா சனனே யறவா ழியனே.

156. திருகிய புரிகுழ லரிவைய ரவரொடு
திகழொளி யிமையவரும்
பெருகிய கரிகுல மருவிய படையொடு
பிரிதலி லரசவையும்
முருகுடை மலரொடு வழிபட முனிகளை
நனியக லாவருகன
திருவடி முறைமுறை யடைபவ ரடைகுவ
ரமரொளி யமருலகே.

157. கரிமருவு கடிமதிலி னிடுகொடிக டிசைதடவு கடுமை யினதாய்த்
திருமருவு பெருவிழவொ டமரர்குழு வொழுகுதொழு செழுமை வழுவா
தருமரபி னரபதிக ளணிகிளரு மணிமகுட முற மறுவிலாக்
குருமருவு விரிகமல சரணநனி பணிவர்மலி குருசி னகரே.

158. அழலணங்கு தாமரை யருளாழி யுடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்று மாயிற்
றொழலணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்கரியுஞ் சொல்லா வன்
[றே.

---

(152) யாப். வி. 78; யாப். கா. (153) ஷை. 89. (154-5) ஷை. 94. (156-7) ஷை. 95. (158) சிலப். 7. பக். 205.

159. கங்கணக்கைப் பைந்தார்க் கனைகழற்காற்
கருவரைபோ னீண்டமார்பிற் காமர்கோலம்
பொங்கிய சாமரை பொற்ப வேந்திப்
புடைநின் றியக்கர்கள் போற்றி வீசச்
சிங்கஞ் சுமந்துயர்ந்த வாசனத்தின்மேற்
சிவகதிக்கு வேந்தாகித் தேவ ரேத்த
அங்கம் பயந்த வறிவனுகிய வறப்படைமூன்
ருய்ந்தானடி யடைவா மன்றே.

160. படையொன்று மில்லை யணியில்லை சுற்ற
மதுவில்லை பற்று மினியொன்
றடைகின்ற தில்லை யமிழ்துண்ட தில்லை
யறிவொன்று மெண்ணி யறியார்
புடைநின்று நான்ற மணிமாலை போக
நிலவீசு மாக முறுநீள்
குடையொன்ற தொன்று மதன்மேல தொன்று
முடையார்க்கி தென்ன குணனே.

161. சோதி மண்டலந் தோன்றுவ துளதேற்
சொரியு மாம்லர்த் தூமழை யுளதேற்
காதி வென்றதொர் காட்சியு முளதேற்
கவரி மாருதங் கால்வன வுளவேற்
பாத பங்கயஞ் சேர்நரு முளரேற்
பரம கீதமும் பாடுந ருளரேல்
ஆதி மாதவர் தாமரு குளரேல்
அவரை யேதெரிந் தாட்படு மனனே.

162. கடுநாக மதனடக்கி நெடுநீர்ப் பொய்கைக்
கடிமலர் வேய்ந் துலகளவும் பரந்துகந்த
நெடுமாலை நறுமுடிமேல் வைத்தி யேனு
நின்னையே போனயக்க நின்றா ரெல்லாம்
கொடுமாலை வினையரக்கர் குறும்பு சாயக்
குளிரிளம்பூம் பிண்டிக்கீ ழமர்ந்த கோமான்
தடமொற்றந் தலைப்பிரிக்குஞ் சரண மல்லாற்
றலைக்கணியா னென்றுரைத்த நகவோ வாழி.

163. கொங்கு தங்கு கோதை யோதி மாதரோடு கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத வென்று நின்று தாழ

---

(159) யாப்.வி. 95. (160) ஷை 77. (161) யாப். வி. 95. (162) ஷை.53.

அங்க பூர்வ மாதி யாய வாதி நூலி னீதி யோது மாதி யாய [னே.
செங்கண் மாலை மாலை[1] காலைசேர்நர் சேர்வர் சோதி சேர்ந்த சித்தி தா

164. அனவரத மமர ரரிவையரொ டணுகி யகனமரு முவகை
யதுவிதியி னவர வணிதிகழ வருவ ரொருபால்
கனவரையொ டிகலு மகலமொளி கலவு கரகமல நிலவு
கனகமுடி கவினு கழலரசர் தழனி யொருபால்
தனவரத நளின சரணநனி பரவு தகவுடைய முனிக
தரணிதொழ வழுவி றருமநெறி மொழிவ ரொருபால்
சினவரன பெருமை தெரியினிவை யவன திருவிரவு ளெவி
தெளிரு மொழியளவு சிவபுரம தடைத றிடனே.

(நேரிசையோத்தாழிசைக் கலிப்பா.)

165. முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனாய்
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு[2]காவதம் பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த[3]வொளிர்வரைபோற் செவ்வியோய்! (தரவு)

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயிலின்
உள்ளிருந்த வுன்னையே[4]யுறுதுணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ ;

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்றல் பெருமையோ;

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின் தகுதியோ. (தாழிசை)

எனவாங்கு (தனிச்சொல்)

[5]எனைத்துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று. (சுரிதகம்)

(அம்போதரங்கவோத்தாழிசைக்கலிப்பாவகை.)

166. அலைகடற் கதிர்முத்த மணிவயிர மவையணிந்து
மலையுறைமா சுமந்தேந்து மணியணைமேன் மகிழ்வெய்தி

---

(163) யாப். வி. 25; யாப். கா. உறுப். 13; இலக். வி. [1]காலை மாலை சென்று. (164) ஷை. 94. (165) ஷை. 82. இலக். வி. 738. [2]திசையனைத்தும். [3]ஒளிவரை செலவியோய். [4]உயிர்த்துணையென் [5]அனைத்துணை. (166) யாப். வி. 83.

யோசனைசூழ் திருநகரு ளுலகொருமூன் றுடனேத்த
ஈசனையா மினிதமர்ந்தங் கிருடிகட்கு மிறையவர்க்கும்
அருளறமே யறமாக வயலார்கண் மயலாக
இருளறநன் கெடுத்தியம்பி யிருவினைகள் கடிந்தினேப்! (தரவு)

துன்னாத வினைப்பகையைத் துணிசெய்யுந் துணிவினையாய்
இன்னாத பகைமுனைபோ லெரித்தடக்கு நினைப்பினால்
இருளில்லா வுணர்வென்னு மிலங்கொளியா லெரித்தனையாய்
அருளெல்லா மடைந்தெங்க ணருளுவதுன் னருளாமோ;

மதிபுரைமுக் குடைநீழன் மகிழ்வெய்தி யடைந்தோரைக்
கதிபொருதக் கதிர்வரைமேற் கதிர்பொருத முகம்வைத்துக்
கொன்முனைபோல் வினைநீக்கக் குளிர்நிழற்கண் மகிழ்ந்தனிர்போல்
நின்மினீ ரெனவுரைத்தல் நிருமலநின் பெருமையோ;

மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்க லுறுவீரேல்
வினையறுக்க லுறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென்றிங்
கலகில்லாப் பெருஞ்செல்வத் தமரர்சர் புடைசூழ
உலகெல்லா முடன்றுறவா வுடைமையுநின் னுயர்வாமோ; (தாழிசை)

அரசரு மமரரு மடிநிழ லமர்தர
முரசதி ரிமிழிசை முரணிய மொழியினை; (அராகம்)

அணிகிள ரவிர்மதி யழகெழி லவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி நின்னிறம்;
மழையது மலியொலி மலிகட லலையொலி
முழையுறை யரியது முழக்க நின்மொழி; (பேரெண்)

வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை;
சொலற்கரு மெய்ப்பொருண் முழுவதுஞ் சொல்லினை;
அருவினை வெல்பவர்க் கரும்புணை யாயினை;
ஒருவனை யாகி யுலகுட னுணர்ந்தனை; (இடையெண்)

உலகுட னுணர்ந்தனை; உயிர்முழு தோம்பினை;
நிலவுறழ் நிறத்தினை; நிழலிய லியாக்கையை;
மாதவர் தாதையை; மலர்மிசை மகிழ்ந்தனை;
போதிவர் பிண்டியை; புலவருட் புலவனை; (சிற்றெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)

அருளுடை யொருவநிற் பரவுது மெங்கோன்
இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட விருநிறங் கொடுத்த

நந்தி மால்வரைச் சிலம்ப னந்தி
ஒற்றைச் செங்கோ லோச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக வெனவே. (சுரிதகம்)

167. பிறப்பென்னும் பிணிநீங்கப் பிரிவரிய வினைக்கடலை
அறப்புணையே புணையாக மறுகரைபோய்க் கரையேறி
இறப்பிலநின் னருள்புரிந்தாங் கெமக்கெல்லா மருளினையாய்
மறவாழி யொளிமழுங்க மனையவர்க்கு முனையவர்க்கும்
அறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்! (தரவு)

அருளெல்லா மகத்தடக்கி யடிநிழலை யடைந்தோர்க்குப்
பொருளெல்லா நீவிளங்கப் புகரில்லா வகையினால்
இருளில்லா [1]வியன்ஞான மியம்புவதுன் னியலாமோ;
தீதில்லா நயமுதலாத் திருந்தியநல் லளவைகளாற்
கோதில்லா வரும்பொருளைக் குறைவின்றி யறைந்ததற்பின்
பேதில்லா [2]வியற்காட்சி யருளியதுன் பெருமையோ;
துணையில்லாப் பிறப்பிடைக்கட் டுயரெல்லா முடனகலப்
புணையில்லா வுயிர்கட்குப் பொருளில்லா வருளினால்
இணையில்லா [3]வியலொழுக்க மிசைத்ததுநின் னிறைமையோ.
(தாழிசை)

அருள்புரி திருமொழி யமரரு மரசரு
மருள்வரு மனிதரு மகிழ்வுற வியம்பினை; (அராகம்)

பூமலர் துதைந்த பொழிலணி கொழுநிழற் றேமல ரசோகினை;
தூமலர் விசும்பின் விஞ்சையர் பொழியு மாமலர் மாரியை; (பேரெண்)

காமரு கதிர்மதி முகத்தினை;
சாமரை யிடையிடை மகிழ்ந்தனை;
தாமரை மலர்புரை யடியினை;
தாமரை மலர்மிசை யொதுங்கினை; (இடையெண்)

அறிவனைநீ; அதிசயநீ, அருளினைநீ, பொருளினைநீ;
உறுவனைநீ; உயர்வினைநீ; உலகினைநீ; அலகினைநீ; (சிற்றெண்)
எனவாங்கு; (தனிச்சொல்)
இனையை யாதலின் முனைவருண் முனைவ
நினையுங் கால நின்னடி யடைதும்
ஞானமுங் காட்சியு மொழுக்கமு நிறைந்து
துன்னிய தீவினைத் துகடீர்
முன்னிய பொருளது முடிகவெமக் கெனவே. (சுரிதகம்)

---

(167) யாப். வி. 83. [1]நன்ஞானம். [2]நற்காட்சி. [3]நல்லொழுக்கம்.

168. நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தெறிய
விரிதாமந் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டாரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்கும்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே! (தாவு)

ஒல்லாத பிறப்புணர்த்து மொளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கு மெதிர்முகமா யின்பஞ்சேர் திருமுகத்துள்
ஏர்மலர மணிப்பொய்கை யெழிலாம்பற் பொதியவிழ
ஊர்களோ டடன்முளைத்த வொளிவட்டத் தமர்ந்தன்றே;

கனவயிரங் குறடாகக் கனல்பைம்பொன் சூட்டாக
இனமணி யாரமா வியன்றிரு ளிரிந்தோட
அந்தரத் துருளுநின் னலர்கதி ரறவாழி
இந்திரனும் பணிந்தேத்த விருவிசும்பிற் றிகழ்ந்தன்றே;

வாடாத மணமாலை வானவர்க ளுள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த நிறஞ்சேர்ந்த பெருங்கண்ணு
முகிழ்பரிதி முகநோக்கி முறுவலித் துண்ணெகிழ்ந்து
திகழ்தகைய குடைபுடைசூழ் திருந்துநிழ றிளைத்தன்றே. (தாழிசை)

மல்லல் வைய மடிதொழு தேத்த
அல்லல் நீத்தக் கறப்புணை யாயினை;
ஒருதனி வழிய வுயிர்க்கா ளாகி
இருதனி யொருபொருட் கியல்வகை கூறினை;
(நாற்சீர் ஈரடி யிரண்டம்போதரங்கம்)

ஏடலர் தாமரை யேந்து நின்னடி;
வீடொடு கட்டினை விளக்கு நின்மொழி;
விருப்புறு தமனியம் விளக்கு நின்னிறம்;
ஒருத்தல் கூடுற வுஞற்று நின்புகழ்;
(நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்)

இந்திரற்கு மிந்திர னீ; இணையில்லா விருக்கையை நீ;
மந்திர மொழியினை நீ; மாதவர்க்கு முதல்வனு நீ;
அருமைசா லறத்தினை நீ; ஆருயிரு மளித்தனை நீ,
பெருமைசால் குணத்தினை நீ; பிறக்கறியாத் திறத்தினை நீ,
(முச்சீர் ஓரடி எட்டம்போதரங்கம்)

---

(168) யாப், வி. 83,

பரம னீ; பகவ னீ; பண்ணவ னீ; புண்ணிய னீ;
உரவ னீ; குரவ னீ; ஊழி நீ; உலகு நீ;
அருளு நீ; அறமு நீ; அன்பு நீ; அணைவு நீ;
பொருளு நீ; பொருப்பு நீ; பூமியு நீ; புணையு நீ;
(இருசீரோரடிப் பதினாறம்போதரங்கம்)
எனவாங்கு; (தனிச்சொல்)
அருணெறி யொருவநிற் பரவுது மெங்கோன்
திருமிகு சிறப்பிற் பெருவகை யகலத்
தெண்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்
செருமுனை செருக்கறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை யோங்குக வெனவே. (சுரிதகம்)

169. கடையில்லா வறிவோடு ஞானமுங் காட்சியும்
உடைமையா யுலகேத்த வொண்பொருள தியல்புணர்ந்து
மறவாழி யிமையவரு மாதவரும் புடைசூழ
அறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்! (தரவு)

வினையென்னும் வியன்பகையை வேரோடு முடன்கீழ்ந்து
முனையவர்க டொழுதேத்த விருப்பதுநின் முறைமையோ;
பொருளாடல் புரியீரேற் புகர்தீரு மெனவருளி
மருளாறு மணியணைமேன் மகிழ்வதுநின் மாதவமோ;
வேந்தர்க்கு முனைவர்க்கும் விலங்கிற்கு மருடுறவாத்
தோந்திரத் துறந்தநின் றுறவரசுந் துறவாமோ; (தாழிசை)

முழுவது முணர்பவர் முனைவருண் முனைவர்க
டொழுதெழு துதியொலி துதைமல ரடியிணை; (அராகம்)

நிழன்மணி விளையொளி நிகர்க்கு நின்னிறம்;
எழின்மதி யிதுவென விகலு நின்முகம்; (பேரெண்)

கருவினை கடந்தோய்நீ; காலனை யடர்ந்தோய்நீ;
ஒருவினையு மில்லோய்நீ; உயர்கதிக்கு முனைவனீ; (இடையெண்)

அறவ னீ; அமல னீ; அருளு நீ; பொருளு நீ;
உறவு நீ; உயர்வு நீ; உலகு நீ; அலகு நீ; (சிற்றெண்)
எனவாங்கு; (தனிச்சொல்)
அருளுடை யொருவநின் னடியிணை பரவுதும்
இருளுடை நாற்கதி யிடர்முழு தகலப்
பாடுதற் குரிய பல்புகழ்
வீடுபே றுலகங் கூடுக வெனவே. (சுரிதகம்)

---

(169) யாப். வி. 83.

(வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.)

170. தெரிவில்லா வினைகெடுத்துத் தீவினையிற் றெரிந்தோங்கிச்
சரிவில்லா வின்பத்தாற் சங்கரனு முழுதுலகுந்
தெரிந்தொன்றி யுணர்ந்தநின் றிப்பியஞா னந்தன்னால்
விரிந்தெங்குஞ் சென்றமையால் விண்ணுவுமாய் மண்ணின்மிசைத்
தேர்வுற்ற வாரிட னான்மையினுந் திரிவில்லாச்
சார்வுற்ற நான்மையினுஞ் சதுமுகனு யுயர்ந்தனையே! (தரவு)

இருத்தியு ஞானெறிய தியல்வகை தன்னாலும்
வருத்தாத கொள்கையான் மன்னுயிரைத் தலையளிப்போய்
தொடர்த்தழுக்கும் பிணியாசன் றொடர்ந்தோட ஞானத்தால்
அடர்ந்தழுக்க வென்றதுநின் னறமாகிக் காட்டுமோ;

ஏதிலா வுயிர்களை யெவ்வகைக் கதியகத்தும்
காதலா லுழப்பிக்குங் காமனைக் கறுத்தவன்
வடிவுகெடச் சிந்தையா லெரித்ததூஉம் வல்வினையைப்
பொடிபட வென்றதுநின் பொறையுடைமை யாகுமோ ;

எவ்வுயிர்க்கு மோரியல்பே யென்பவை தமக்கெல்லாம்
செவ்விய நெறிபயந்து சிறந்தோங்கு குணத்தையாய்க்
கொலைத்திறத்தாற் கூட்டுண்ணுங் கூற்றப்பே ராசனுங்க
அலைத்தவனை வென்றதுநின் னருளாகிக் கிடக்குமோ ; (தாழிசை)

தாதுறு நனைசினை தழலெழில்-சுழல்சுழல்
சைவகை முகைநகு தடமல ரசோகினை ;
சீருறு கெழுதகு செழுமணி முழுதணி
செறியுளை விலங்கா சணிபொனி னணையினை ;
வாருறு கதிரெதிர் மாதக நிரைநிரை
வரிபுரி தெளிமதி வெருவரு குடையினை;
போருறு தகையன புயலுளர் வியலொளி
புதுமது நறவின புனைமலர் மழையினை ;
பொறிகிள ரமரர்கள் புகலிட மெனமனும்
பொலிமலி கலிவெலும் பொருவறு மெயிலினை;
வெறிகிள ருருவின விரைவினி னினிதெழ
எறிவரு தெரிதக வினிதுளர் கவரியை ;
விறலுள பிறவியை வெருவரு முறைதெறு
வியலெரி கதிரென மிடலுடை யொளியினை ;

(170) யாப். வி. 84.

அறிவுள வமரர்க ளதிபதி யிவனென
இடனுடை யிடிபட வெழுவன விசையினே. (அராகம்.)
மன்னுயிர் காத்தலான் மறம்விட்ட வருளினோ
டின்னுயி ருய்கென்ன வில்லறமு மியற்றினையே;
புன்மைசா லறநீக்கிப் புலவர்க டொழுதேத்தத்
தொன்மைசால் குணத்தினாற் றுறவரசாய்த் தோற்றினையே.
(பேரெண்)
பீடுடைய விருக்கையைநின் பெருமையே பேசாதோ;
வீடுடைய நெறிமையைநின் மேனியே விளக்காதோ;
ஒல்லாத வாய்மையைநின் னுறுபுகழே யுரையாதோ;
கல்லாத வறிவுநின் கட்டுரையே காட்டாதோ; (இடையெண்)
அறிவினா லளவிலைநீ; அன்பினா லசைவிலைநீ;
செறிவினாற் சிறந்தனைநீ; செம்மையாற் செழுங்கதிர் நீ;
காட்சியாற் கடையிலைநீ; கணஞ்சூழ்ந்த கதிர்ப்பினை நீ;
மாட்சியான் மகிழ்வினைநீ; மணிவரைபோல் வடிவினை நீ; (சிற்றெண்)
வலம்புரி கலந்தொருபால்; வால்வளை ஞிமிர்ந்தொருபால்;
நலந்தரு கொடியொருபால், நலம்புணர் குணமொருபால்;
தீதறு திருவொருபால்; திகழொளி மணியொருபால;
போதறு மலரொருபால்; புணர்கங்கை யாறொருபால்;
ஆடியி னொளியொருபால்; அழலெரி யதுவொருபால்;
மூடிய முரசொருபால்; முழங்குநீர்க் கடலொருபால்;
பொழிலொடு கயமொருபால்; பொருவறு களிறொருபால்;
எழிலுடை யேறொருபால்; இணையரி மாவொருபால்; (அளவெண்)
எனவாங்கு; (தனிச்சொல்)
இவைமுத லாகிய விலக்கணப் பொறிகிளர்
நவையில் காட்சி நல்லறத் தலைவநின்
தொல்குணந் தொடர்ந்துநின் றேத்துதும் பல்குணப்
பெருநெறி யருளியெம் பிறவியைத் தெறுவதோர்
வரமிகத் தருகுவை யெனநனி
பரவுதும் பரமநின் னடியிணை பணிந்தே. (சுரிதகம்)

(வஞ்சிப்பா.)

171. மந்தா நிலம் [1]வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை

---

(171) யாப். வி. 21, 32; யாப் கா. உறுப். 11. மேற்; இலக். வி. 715:
[1]மருங்கசைப்ப.

எனவாங்கு,

இனிதி னேதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே.

172. தாளோங்கிய தண்பிண்டியின்
நாண்மலர்விரி தருநிழற்கீழ்ச்
சுடர்பொன்னெயி னகர்நடுவண்
அரியணைமிசை யினிதமர்ந்தனை
அதனால்,
பெருந்தகை யண்ணனிற் பரசுதும்
திருந்திய சிவகதி சேர்கயா மெனவே.

(குறளடி வஞ்சிப்பா.)

173. அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் [1]கொழுநிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
அனந்தசதுட்டய மவையெய்த
[2]நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
[3]அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்து,
அருளெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

174. பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்

---

(172) யாப். வி. 12. (173) ௸. 13, 90; யாப் கா. உறுப். 9 மேற். இலக். வி. 716, 718 உரை; [1]குளிர்நிழற்கீழ். [2]நனந்தலையுலகுடை. [3]அந்தர துந்துமி. (174) ௸. 93; யாப். கா. உறுப். 14 மேற்.

அதனால்,

அறிவன தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவா நெறியே.

175. வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்,
[1]மயலா நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.

176. வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூறறிவனைக்
[2]கானார்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.

177. கோழியுங் கூவின [3]குக்கில் குரல்காட்டுந்
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் [4]தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியு மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்.

(சிந்தடி வஞ்சிப்பா.)

178. கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை [5]பத்திமையிற் செப்பியோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
[6]வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.

---

(175) யாப். கா. செய். 1 மேற்; இலக். வி. 740 உரை. [1]மயலார். (176) இலக். வி. 740 உரை; [2]காணு. (177) யாப். வி. 93; யாப்.கா. ஒழி. 8. மேற்: [3]குக்கிலழைத்தன, குக்கில் குரலியம்பும். [4]தண்ணல். (178) ஷை 90; யாப். கா. செய். 14 மேற். [5]பத்தியலாற். [6]விரிவுறு.

உச்சந்தமலை.

179. துடித்தடித் திமிழ்தரு துளங்குவெள் ளருவிநீர்
தொடுத்தெடுத்த மாலைபோற் றொடர்ந்துதோன்றுந் தூய்மைசால்
அடுத்தடுத் துரைபுக வசைவில்சீ ருச்சந்தம்
மடுத்தடுத்து வைகலு மறத்தலின்றி வாழ்த்துவாம்.

தீபங்குடி.

[செயங்கொண்டாரை அபயன் 'உமதூர் யாது?' என்று
கேட்டபோது சொன்னகவி.]

180. செய்யும் வினையு மிருளுண் பதுவுந்
தேனுங் நறவும் மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறமுந் தவிரப்
பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமு மிதழும் விழியுங்
காலுங் நிறமும் போலுங் கமலம்
கொய்யும் மடவார் கனிவா யதரங்
கோபங் கமழுந் தீபங் குடியே.

பழையாற்று மாதவன்.

181. ஏறுயர் கொடியி னிருவிசும் பதிரு மெறிமுர சதிர்கடற் றானை
வீறுயர் மணிக்கால் வெண்குடை யோங்கு தண்டுறை யின்பழையாற்று
மாறடு படிவ [1]மதியுறுந் தருண மாதவ னேதமில் பாதம்
வீறடு [2]கதிக ளாழ்கதி வீழ விளங்கிய விழுத்துணை யாமே.

182. முழங்கு களியானை மூரிக் கடற்படை முறிதார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட் சிறந்துநா ளுஞ்செய
எழுந்த சேதிகத்து ளிருந்தவண் ணல்லடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின் றவ்வினை துறந்துபோ மாலரோ.

சைநர்க்குச் சிறந்த மலைகள்.

183. பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
யருங்குன்றம் பேராந்தை யானை—பிருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு.

---

(179) யாப்.வி. 95. (180) தமிழ். நா. 114. (181) யாப்.வி. 95. [1]மதியுறு நகருண். [2]நெறிக. (182) ஷை. 67. (183) திருவாலவாயுடையார் பு. குறிப்புரை. பக். 288.

20. 5. 24

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோற்காரி ஆவணி மாசிமீ [பகுதி ச.

Vol. XXII. February-March-1924. No. 4.

மேற்றிசைச்செல்வம்.

யவனபுரத்துக்கலைச்செல்வம்.

(செந்தமிழ் உக-ஆம் தொகுதியின் ருஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

20. ஹோமர் என்னும் மகாகவியியற்றியதும் யவனபுரத்துக் காவியங்களுள் முதல்வைத்து எண்ணப்படுவதுமாகிய இலியட் என்னும் தொடர்நிலைச்செய்யுளைப்பற்றிச் சில கூறுவாம். இலியம் என்னும் நாட்டில் நடந்த பெரும் போரினை விரித்துக்கூறும் இந்நூலினை ஈலிய மகாகாவியம் என வழங்கலாகும். இலியநாட்டு அரசனுகிய பிரிய (Priam)மன்னனுடைய இளையமகன் பரீசன் (Paris)என்பவன் அழகே யோருருவெடுத்தாலனைய பெருநலம்வாய்ந்தவளும் யவனபுரத்துமன்னன் மேனிலாவன் (Menelans) உடைய மனையாட்டியுமாகிய ஏலேனு (Helena) வைக் கைப்பற்றித் தன்னூர்க்குக் கொண்டுசென்றான். அவளைச் சிறைமீட்குங்காரணமாக யவனபுரத்தார் இலியநாட்டின்மீது படையெடுத்துச்சென்றனர். ஆங்ஙனம் நிகழ்ந்த பெரும்போரின் ஒருபாகத்தைக் கூறும்நூல் ஈலியமகாகாவியமாகும். உலீசமகாகாவியமும், ஏநேய மகாகாவியமும் இப்போரோடு தொடர்புற்றுநின்றவரலாறுகள்சிலவற்றை விரித்துக்கூறுவன. ஈலியமகாகாவியம் தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய வனப்பு அனைத்தும் அமையப்பெற்றது; அகிலேசன் (Achilles) வஞ்சினமுரைத்தகாதை, அணிவகுப்புக்காதை, மேனிலாவபரீசர் தனியமர்புரிந்தகாதை, முதற்போர்க்காதை, தயமீதன் (Diomed) போர்த்திறமுரைத்தகாதை, விறல்வீரர்மூவர்திறலுரைத்த

னாதை, எகதனும் (Hector) அஜனும் (Ajax) தனியமர்புரிந்தகாதை, இரண்டாம்போர்க்காதை, அகிலேசனைப் படைத்துணையழைத்தகாதை, தயமீதனும் உலிசனும் (Ulysses)நள்ளிருளிற் போர்புரிந்தகாதை, அகமன்னன் (Agamemnon)போர்த்திறமுரைக்கும் மூன்றாம்போர்க்காதை, முழுமுதலாணங்கொண்ட உழிஞைவீரர்காதை, நான்காம்போர்க்காதை, மேகலைகாட்டித் தேவராஜனை வஞ்சித்தகாதை, அஜன்போர்த்திறமுரைக்கும் ஐந்தாம்போர்க்காதை, பத்திரோகலன்பட்ட ஆறாம்போர்க்காதை, மேனிலாவன்போர்த்திறமுரைத்தவேழாம்போர்க்காதை, அகிலேசக்சோகமுரைத்தகாதை, அகிலேச அகமன்னர் நட்புக்கோட்காதை, அகிலேசன் போர்த்திறமுரைத்தகாதை, காமந்தாநதிதீரத்துப் போர்நிகழ்ந்தகாதை, எகதன்பட்டகாதை, பத்திரோகலனுக்குப் பாடலொடு ஆடல்கொண்டகாதை, பிரியமன்னன் புத்திரசோகக்காதை என்னும் இருபத்துநான்கு பரிச்சேதங்களால் நடப்பது. இக்காவியாத்தினத்தின் சிற்சிலபாகங்களைத் தமிழறிஞர்பொருட்டு மொழிபெயர்த்து வெளியிடுங்கருத்துடையேன். நேரம்வாய்த்துழி அக்கடமையை நிறைவேற்றுவேன்.

21. ஹோமருடைய காலம் கலி 2057 என ஒரு சாராரும் கலி 2250 என மற்றொருசாராருங் கூறுவர். கலி 2300 வரையிலிருந்த ஹேசியோட் என்னும் பெரும்புலவர் "நாளும் வினையும்"எனப் பெரிய நூலொன்று செய்தளித்தார்; இந்நூல் நமது மொழியிலுள்ள பதினெண்கீழ்க்கணக்கினையொத்த நடையினது. ஹோமர் இயற்றிய தனிப் பாசுரங்களும் பலவுள. இவையாவும் வீரச்சுவையும் இன்பச்சுவையும் செறிந்தன. ஹோமருடையகாலத்தில் யவனபுரம் முடியுடைவேந்தராலும் குறுநிலமன்னராலும் ஆளப்பட்டுவந்தது. மன்னரும் வள்ளல்களும் தமது முன்னோர்திறமையைப் பாணர் பாடக்கேட்டு மகிழ்வடைவார். தம்மையுந் தமது முன்னோரையும் பாடும் பாணருக்கு வேண்டுவன கொடுப்பார். இக்காரணத்தினாலே கவியென்னும் பயிர் நன்குவளர்ந்தோங்கியது. கவிஞர் தெய்வதருவினை நிகர்த்தாரேனும் வரையாது கொடுக்கும் வள்ளல்களாகிய மேகங்கள் பொன்மாரிபொழியாவிடின் மலர்ந்து நறுமணங்களுற்றுது வாட்டமுற்றுச் சோர்வரென்பது வெளிப்படை. மகாகவியாகிய ஹோமர் உயிரோடிருந்தகாலத்தில் அவருடைய புகழ் விளங்கவில்லையெனக் கர்ணபரம்பரையா னறிகின்றோம். இம்மகாகவி பிறவிக்குருடர் என்பதும் ஒரு பரம்பரைககதை. இவர், யாழைக் கையி

லேந்திக்கொண்டு ஊர்தொறுஞ்சென்று அன்னத்துக்குத்தானும் அலே வுற்றாரெனவும் அறிகிறோம். இவர் தமது பெருங்காப்பியத்தையியற்றியகாலத்தில் யவனமொழி எழுதாமொழியாயிருந்தது. காப்பியம் செவிவாயிலாகவே பலநூற்றாண்டுகளுக்குள் யாண்டும் பரந்து நிலைபெற்றிருந்தது. இக்கவிச்சிரேஷ்டருடைய ஆற்றலைப் பிற்காலத்தாரே நன்கு அறிந்தனர்.

22. வீரகாவியங்களுக்குரிய யாப்பாகிய வீரப்பாவைப்பற்றி முன்னமே கூறினும். இதன்பின்னர், நமதுமொழியிலுள்ள கொச்சகவொருபோகின் நடையதாகிய "Elegiac" என்னும் ஒருவகைப்பாவும் நமது அகவற்பாவை ஒருபுடையொத்த நடையினதாகிய "Iambic" என்னும் ஒருவகைப்பாவும் தோன்றின. கொச்சகவொருபோகின் நடையினதாகிய யாப்புக்கு வீரமும், காதலும், நீதிமொழியும் பொருளாக அமைந்தசெய்யுட்கள் உரியவாயின. கைபறுநிலை, மன்னைக்காஞ்சிபோன்றசெய்யுட்களும் இவ்யாப்பிலே பாடப்பட்டன. இத்தகைய இயற்பாக்கள் தோன்றிய காலத்துக்குப்பின்னாக நமதுமொழியிலுள்ள வண்ணம், சிந்து, வரிப்பாட்டு என்னும் இவற்றைநிகர்த்த இசைப்பாக்கள் எழுந்தன. இவற்றுக்குத் திணை அகத்திணையேயாயிற்று. ஆர்க்கிலோகர் (Archilocus), அல்கேயர் (Alcaeus), சிமோனிதர் (Simonides), பிண்டார் (Pindar), அல்க்மன் (Alcman)என்னும் புலவர்களும் சபோ(Sappho) என்னும் கவிவல்ல பெண்மணியும் இசைப்பாக்கள் பல எழுதினார்கள்: இவற்றுட் பெரும்பாலன அழிந்துபோயின ; ஒருசில இன்றும் நின்று நிலவுகின்றன. தேவபாணிப்பாடல்களும், விழாக்காலங்களில் தேவர்ப் பராவுவார் பலர் ஒருங்குநின்று பாடுதற்கேற்ற குரவைப்பாடல்களும், இசைப்பாவுக்குரிய இலக்கணங்களோடு தோன்றின.

23. இதன்மேல் நாடகவியல்கள் தோன்றின. காடுகெழுசெல்விக்குப் பாவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப்புறக்கூறி வழுத்திநின்றாடும் கொற்றவைநிலைபாகிய பொதுவியற்கூத்தும் வெறியாட்டயர்ந்த வெங்களத்து மறியறுத்துக் குருதிப்பலி செலுத்தி வேலனை வழுத்திநின்றாடும் காந்தள் ஆகிய பொதுவியற்கூத்தும் ஒருபுடையொப்பெனற்குரிய பொதுவியற்கூத்தே பண்டை யவனபுரத்தில் ரிருஜடி (Tragedy) என்னும் பெயரால் வழங்கப்பட்டது. ரிருஜேடி என்னுஞ்சொல்லுக்குப் பொருள் "ஆட்டு

மறிக்கவிதை" யென்பது. உண்டாட்டுத்தெய்வமாகிய தயனிச (Dionysus) னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங்காலத்து, ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியையும் அவனைப் பரவும் வீரரது புகழையுங் கூறுவதே றிருஜெடிக்கு உரியபொருளாயிருந்தது. கிறிஸ்துவுக்குமுன் 525-ம் ஆண்டில் (கலி 2576 இல்) இருந்த அய்சகலீஸ் (Aeschylus) என்னும் புலவர் வீரருடைய மெய்க்கீர்த்தியைப்பாடும் ஆடற்பாட்டினைச் சீர்ப்படுத்தி அதனைக் கூற்றும் மாற்றமும் மிடைந்த நடையினதாக்கி, ஆட்லரங்கினும் வினவுதற்கு ஒருவரும், விடுப்பதற்கு ஒருவரும் உடனுைத்திசைப்போர் பலருமாக அமைத்தாராதலினுல், இவரையே, யவனபுரத்து நாடகவியலுக்குத் தந்தையென்றல் சாலும். இவருக்குப்பின்வந்த சோபக்கிளீஸ் (Sophocles) என்பவர் அரங்கத்தில் மூவர் நால்வர் ஒருங்குதோன்றியாடுமாறு கவியமைத்தார். இவருக்குப்பின்வந்த யூறிப்பிடீஸ் (Euripides) என்னும் புலவர் நாடகத்தை மேலும்விருத்திசெய்தார். அய்சகலீஸ் 70 நாடகமும், சொபக்ளீஸ் 113 நாடகமும், யூறிப்பிடீஸ் 92 நாடகமும் எழுதிமுடித்தார்கள். இவர் மூவரும் எழுதிய நாடகங்கள் வீரர்புகழ் கூறும் "றிருஜெடி"யின் பாலவாகலின், வீரம், வெகுளி, உருத்திரம், சோகம், பெருமிதம் என்னுஞ் சுவைகள் பொருந்தி விளங்குவன.

24. வேனில்வேள் ஆகிய தயனிசன் என்னுந்தெய்வத்துக்கு விழாக்கொண்டாடுங்காலம் மாவும் புள்ளும் துணையொடுவதியும் வசந்தகாலமாதலினுல் அக்காலத்து உண்டாட்டினுல் களிதியங்கினோரும், யாறுங்குளனுங் காவு மாடிப் பதியிகந்து காமநுகர்வோருமாகிய இளையாருடைய உள்ளத்தில் உவகையும் நகையும் தோற்றுவது இயல்பேயாம். நகைச்சுவையும் உவகைச்சுவையும் நிறைந்த நாடகங்கள் "கமிடி" (comedy) எனப்படுவன; இச்சொல்லுக்குப்பொருள் "சிறுகுடிப்பாட்டு," "பண்ணைப்பாட்டு" என்று கொள்ளலாகும். நமது தமிழ்மொழியிலுள்ள குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்னும் இவை யவனபுரத்தாரது பண்ணைப்பாட்டு இலக்கணங்களைப் பெரிதும்பெற்றன. கி. மு. 427-ம் ஆண்டிலிருந்த அறிஸ்டோபாணிஸ் (Aristophanes) என்னும் பெரும்புலவர் சமூகவாழ்க்கையிலுள்ள தவறுதல்களையும், தலைவராகவுள்ளோரது குறைவுகளையும் எடுத்துக்காட்டுவதற்குப் பண்ணைப்பாட்டினை யுபயோகித்தார். பறவைகளும், வண்டுகளும், கார்முகிலும் தங்கள் கருத்தை

வெளியிட்டுச்சொல்லுவதாக அமைத்து இப்பெரும்புலவர் சமூகவாழ்க்கையிலுள்ள தீமைகளை யெடுத்துக்காட்டும் நீர்மை மிக வியக்கத்தக்கது. இவரனையபுலவர் ஒருவர் இந்நாட்களில் நம்மிடையே யிருப்பாராகில் நமது சமூகவாழ்க்கையிலிருக்கும் தீமைகளைக் குறவஞ்சிநாடகமாகவோ, உழத்திப்பாட்டாகவோ பாடி நம்மை நகைப்பிப்பதோடு நல்வழிப்படுத்துவதற்கும் வல்லவராவார்.

25. நாடகநூல்கள் பலவாகநிறைந்தபின்னர் வசனநூல்கள் எழுந்தன. பாடலானது நிரம்பிய சுவையும் பாவமும் உடையதாயிருத்தல்வேண்டும். அதிலும் இசைப்பா பாவிகமும், மெய்ப்பாடும் பெற்றன்றிப் பிறக்கமாட்டாது. ஆசானொருவன் தன் மாணாக்கனுக்கு அறிவு நிறைவுறுத்தும்பொருட்டு இலக்கணம், தருக்கம், அறநெறி, தேசசரித்திரம், விஞ்ஞானசாஸ்திரம், தத்துவசாஸ்திரம் என்னும் இவற்றைச் சொல்லிவைக்குமிடத்துத் தெளிவுவேண்டப்படுவதேயன்றிப் பாவிகமும் மெய்ப்பாடும் வேண்டப்படா; ஆதலால் இவற்றைக்கூறும் நூல்களை உரைநடையில் அமைத்தலே பொருத்தமாம். நமது முன்னோர் செப்பலோசைவாய்ந்த வெண்பாவினும், சொற்சீரடிபெற்ற சூத்திரப்பாவினும் அமைத்ததுவும் பொருத்தமேயாம். யவனபுரத்தார் மேற்குறிப்பிட்ட பொருள்கண்மேலனவாய பலவசனநூல்கள் இயற்றினார்கள். கி. மு. 484 இல் பிறந்த ஹெறொடோற்றஸ் (Herodotus) என்பார் யவனபுரத்துத்தேசசரித்திரமொன்றைச் சிறப்புற எழுதினார். இவருக்குப்பின் வந்த துசிடிடீஸ் (Thucydides) என்பவர் பாரசீகருக்கும் யவனபுரத்தாருக்கும் இடையில் நடந்த பெலப்பொண்ணேசியயுத்தத்தைக்குறித்த ஒரு இதிகாசநூலை எழுதினார். இந்த யுத்தத்தினதுவரலாறு முதலியவற்றை யவனபுரத்து அரசியல்வரன்முறை யென்னுந் தலைப்பெயர்க்கீழ் ஆராய்வாம். செனொபன் (Xenophon) எனப் பெயரிய ஒருதளகர்த்தனும் சரித்திரச்சார்பாக இயற்றியநூல் ஒன்று உண்டு.

26. யவனபுரத்தில் சுயவாசுநிலைத்திருந்தகாலம்வரையும் இயல் இசை நாடகநூல்களும், அர்த்தசாஸ்திரம், அலங்காரசாஸ்திரம் என்னும் இவையும் பெருகிவளர்ந்தன. அரசியல் நிலைததும்பியபின்னர் மொழியும் வீழ்வெய்தியது. சுயவாசு நிலைத்திருந்தகாலத்தில் நீதிமன்றத்திலும் அத்தாணிமண்டபத்திலுஞ் சிறப்படைவதற்குச் சொல்வன்மை யின்றியமையாததொன்றாயிருந்தது. டெமொஸ்தினீஸ்

(Demosthenes)போன்ற சொல்வன்மையிற்சிறந்தோர், மக்களாற் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். அமர்க்களத்தினின்று போர்புரிந்தவீரன் அப் போரினைச் சிறப்பித்துப்பாடும்பாடலுக்கும் போர்முனையை யொருபொழுதுங்காணுத கோழைநெஞ்சன் போரினைச் சிறப்பித்துப்பாடும் பாடலுக்கும் பெரிதும் வேற்றுமையுண்டு. தமிழ்நூலிற் றலைசிறந்து விளங்கும் புறநானூறு என்னும்நூலானது வடிவேலேந்தி அடுகளத்துப் பொருத சுத்தவீரர்களாற் பாடப்பட்ட வஞ்சினக்காஞ்சிபோன்ற செய்யுட்களைத் தன்னகத்துக்கொண்டமையானன்றோ நாம் அதனைப் பொன்னேபோற்போற்றுகின்றோம். யவனபுரத்துப் பூர்வநூல்களும் இத்தகையினவே; ஆதலினாலன்றோ அவை இன்றும் நிலைபெற்றுநின்று தேவருலகத்து அமுதம்போலப் படிப்போருக்கு உற்சாகத்தையுந் தீரவீரத்தையும் தருகின்றன. ஆங்கிலநாட்டிலுள்ள இளைஞர்கள் கணக்காயரிடத்துக் கல்விகற்குங்காலத்திலேயே லத்தீன், கிறீக் மொழிகளைப் படித்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பாலப்பருவத்திலேயே வீரமும் பெருமிதமும் உடையவர்களாய் விளங்குகிறார்கள். நமதுநாட்டில் கற்றுவல்லோரென்றிருப்போர்தாமும் புறநானூற்றினைப் படிப்பதில்லை. நேற்றும் இன்றும் வெளிவந்த பிழைபொதிந்த, சீர்கெட்டநாவல்களே நமதுசிறுவர்செவிக்கு உணவாகின்றன. வீரகாவியங்களைக்கற்றால் உள்ளம் வீரத்தன்மையடையும்; ஆதலால் மேற்றிசையோர் தமதுசிறுவருக்கு ஈலியமகாகாவியம், லத்தீன்மொழியில் சீசர் என்னுஞ் சக்கரவர்த்தியெழுதிய காலதேயயுத்தம் (Gallic War) என்னும் நூல்களைக் கற்பித்துவைப்பார்.

27. யவனபுரத்துத் தத்துவஞானிகளைப்பற்றியும் அவர்களெழுதிய நூல்களைப்பற்றியும் ஒருசில கூறுவாம். கி. மு. 600 (கலி 2500) அளவில் மிலேதஸ் (Miletus) என்னும் நாட்டில்வசித்த தாலேஸ் (Thales) என்னும் தத்துவஞானி பூதநூல், வானநூல், கணிதநூல், என்னுமிவற்றில் வல்லவரெனப் பெயர்வாய்ந்தார். இவர் அனைத்துப் பொருட்களுக்கும் நீரே முதற்காரணம் எனக் கூறினர். இவர் மாணவராகிய அனக்சிமாண்டர் (Anaximander) என்பவர், மழை ஆகாயத்தினின்று வருகின்றநாதலால் நீருக்கும் முதற்காரணமாகிய ஆகாயமே அனைத்துக்கும் முதற்காரணம் என்றார். இவர் மாணவராகிய அனக்சிமேனஸ் (Anaximenes) அனைத்திலும் சலனத்தையுண்டாக்குகின்ற

பிராணனே முதற்காரணமாகும் என்னுங் கொள்கையினை நிறுவினர். இங்ஙனம் முதற்பொருளாராய்ச்சி நடந்துகொண்டிருந்தகாலத்திற்றானே, முதற்பொருளுக்கும் பிறபொருளுளவேல் அவற்றுக்கும் இடையிலுள்ளதொடர்பு (Relation) இத்தன்மையதென ஆராயும் ஆராய்ச்சியும் நடந்தது. இவ்வாராய்ச்சியின்பயனாக மூவகைப்பட்ட கொள்கைகள்நிலைபெற்றன. இவை மேலைத்தேசத்துத் தத்துவசாஸ்திரத்தில் இன்றும் நின்றுநிலவுகின்றனவாதலால் இவற்றைச் சற்று விரிவாக நோக்குவது இன்றியமையாததாகின்றது. ஆவதும் அழிவதுமாகிய தோற்றம் பொய்த்தோற்றம் என்றார் ஒரு சாரார். இவரது கொள்கையின்படி ஆதியிலுள்ளதே (Being) பொருளெனப்படுவது; ஆவதும் (Becoming) அழிவதும் உள்ளதெனப்பட்ட முதற்பொருளினின்று வேறுபட்டனவல்லவாகலான், அவற்றினைப் பிறிதுபொருள் எனல் வேண்டாஎன்பது. இக்கொள்கையோர் எலேயாரிக்ஸ்(Eleatics) எனப் படுவார். ஹெறுக்கிளிற்றஸ் (Heraclitus) என்பவருடையகொள்கையின்படி ஆவதும் அழிவதுமே பிரத்தியக்ஷமாகக்காணப்படுவவாதலால், நிலைபெற்றசீர்மையதாகிய முதற்பொருள் என்பதொன்றில்லையென்பது. மூன்றும்வகையாருள் அணுப்பரிணாமவாதிகள் நிலைபெற்ற முதற் பொருளுமுண்டு, ஆதல் அழிதலும் உண்டு என்னுங் கொள்கையினர்.

28. முதல்வகையோருட் டலைசிறந்தோர் செனொபானெஸ் (Xenophanes), பார்மெனிடஸ் (Parmenides), மெலிசஸ் (Melissus) சேனு (Zeno), கோர்கியாஸ் (Gorgias) என்பவர்கள். பூர்வயவனர் பலதெய்வவணக்கமுடையவர்களாயிருந்தார்கள். சேனேபானஸ் என்பவர் பல தெய்வவணக்கத்தைக் கண்டித்து, ஆண்டவன் ஒருவனேயென்றும், அவன் அகண்டரூபியென்றும், காணுங் கண்ணனைத்தும் கேட்குஞ் செவியனைத்தும், உணரும் உள்ளமனைத்தும் அவனதேயென்றும் போதித்தார். இவருடைய மாணவராகிய பார்மேனிடஸ் என்பவர் இறைவனொருவனே அனைத்துமாயிருக்கிறானென்றும், அவன் வேறுபாடெய்தப்பெறாதவனாதலால் ஆவதும் அழிவதும் இல்லையென்றும், அங்ஙனமாகலின், ஆவதும் அழிவதுமாகத் தோற்றுகிறதோற்றம் பொய்த்தோற்றம் என்றும் விரித்துவிளக்கினார். சகத்தோற்றம் பொய்த்தோற்றமாயினும் சிருஷ்டி சங்காரம், உண்டு என்பதும் அவை, காலவெல்லையுட்பட்டனவென்பதும் இவரது கொள்கை. இவரது மாணவர் மேலிசஸ்

என்பவர் தோற்றமும் அழிவும் பொய்யாதலின் உலகம் அநாதியாக நிலைத்திருப்பது என்றும், அது ஈஸ்வரனிடத்து உள்ளது என்றுங் கூறினர். சேனோ என்பவர் சலனம் என்பதொன்றில்லையென்றும், அனைத்துப்பொருட்களுக்கும் இடந்தருகிற ஆகாயம் என்பதை ஒரு பொருளாகக் கொள்வோமாயின், அந்தப்பொருளுக்கு இடந்தருதற்குப் பிறிதொரு ஆகாயம் வேண்டப்படும் ஆதலால் ஆகாயம் பொருளெனப் படாதென்றும் விளக்கினர். அவர் மாணாக்கர் கோர்கியாஸ் என்பவர் ஏனையபூதங்களும் இல்பொருளெனக்காட்டி ஒரு பொருளுமில்லையென வாதிக்குங் கொள்கையினராக விருந்தார்.

29. ஏனையதத்துவசாஸ்திரக்கொள்கைகளை விசாரிக்கப்புகுமுன் யவனபுரத்துத்தேவதைகளைப்பற்றி ஒருசில கூறுவாம். வானகத்தையும் மண்ணகத்தையும் உருவகப்படுத்தி, அவற்றை முறையே யுரனஸ் (Uranus,) என்பதொரு ஆண்தெய்வமாகவும் கே; ஜெ (Ge) என்பதொரு பெண்தெய்வமாகவும் பூர்வயவனர் வணங்கினர். இவ்விருதெய்வங்களுக்கும் பலபூதர்கள் (Titans) புதல்வராகத்தோற்றினரெனவும், அவருட் சிரேட்டர் கிரோனோஸ் (Chronos) என்பதாகவும் புராணங் கூறுகிறது. கிரோனோஸ் என்னும்மொழிக்குக் காலம் என்பது பொருள். கையில் அரிவாள் ஏந்திய ஒருவயோதிகனதுதோற்றமாகும் இந்தத் தெய்வத்தினது தோற்றம். கிரோனோஸ் றேயா (Rhea)வை மணமுடித்துப் பலபுதல்வர்களையும் புதல்வியர்களையும் தோற்றுவித்தார். தன் மகனொருவன் தன்னினும் மிக்கவனாகித் தான் அரசுபுரியும் தேவலோக ராஜ்யத்தைக் கைப்பற்றுவான் என்பதைக் கிரோனோஸ் அறிந்தமையினாலே றேயா பெறுகிற சிசுக்களையெல்லாம் பிறந்தவுடனே எடுத்து விழுங்கிவிடுவது கிரோனோசுக்கு இயற்கையாயிருந்தது. றேயா ஒருவகைச்சூழ்ச்சியினால் ஈற்றிற்பிறந்தசிசுவாகிய ஜூப்பிற்றரை (Jupiter) மறைத்துவைத்துவிட்டாள். இந்தப்பிள்ளை வளர்ந்து பெரியவனாகித் தந்தையைவென்று, தந்தையினால் விழுங்கப்பட்ட தனது உடன்பிறந்தாரனைவரையும் தந்தைவயிற்றிலிருந்து அழைப்பித்துத் தனக்குத் துணையாக்கி, அதன்பின்னர்த் தந்தையைத் தேவலோகத்திலிருந்து தூரத்திவிட்டுத் தானே தேவலோகத்துக்குத் தலைவனாயினன். தனது சகோதரனாகிய போசேயிடனை (Poseidon) நீருலகத்துக்குத் தலைவனாகவும், மற்றொரு சகோதரனாகிய பிளூட்டோவை இருளுலக (நரகலோக)த்துக்

குத் தலைவனாகவும் ஆக்கினான். தனது உடன்பிறந்தாளாகிய ஜூனோ (Juno)வைத் தேவலோகத்துக்கு ராணியாக்கினான்; சீரேஸ் (Ceres) என்னும் மற்றொரு சகோதரியைத் தானியங்களுக்கு அதிபதியாக்கினான்; வேஸ்டா என்னும் மற்றொரு சகோதரியை அட்டிலுக்கும் அட்டில்வைகும் அக்கினிக்குந் தலைவியாக்கினான். தேவராஜனுடையமகன் அபல்லோ (Apollo) கவிதைக்கும் இசைக்கும் தலைவன்; கையில்யாழும் வில்லும் ஏந்திய ஏர்மிக்க இளைஞனுடைய உருவம் இத்தெய்வத்தினது உருவம். தேவராஜனுடைய மற்றொருபுதல்வனாகிய ஹேர்மேஸ் (Hermes) தேவர்களுக்குத் தூதுவனாயினான். இத்தெய்வத்தைப் பற்றி ஹோமர் பாடிய இன்னிசைக்கவிதை யொன்றுண்டு. இத்தெய்வத்துக்கு வானிலும் மண்ணிலும் விரைந்துசென்று சஞ்சரிப்பதற்கு உபகாரமாகக் கால்களிலும், தலைப்பாகையிலும் சிறகுகளுண்டு. கையில் பாம்பு இரண்டு சுற்றிய தண்டு ஒன்று உண்டு. அக்னிலோகத்துக்கு அரசனும் கொற்றொழில்வல்லவனுமாகிய வல்கன் (Vulcan) என்னுந் தெய்வமும், தேவசேனாதிபதியாகிய அரேஸ் (Ares)என்னுந் தெய்வமும் முறையே கொற்றொழிலோராலும் சேனைத்தலைவராலும் வணங்கப்பட்டு வந்தன. தேவராஜனுடைய சிரத்திலிருந்து கவசம்பூண்டதோற்றத் தோடுகூடிய ஒருபெண்மகவு வெளிப்பட்டாள். இவள் ஞானத்துக்கும் வீரத்துக்குமுரிய தெய்வமாயினாள்; இவள் பெயர் அத்தேனா (Athena) என்பது; இவள் ஞானத்தக்கும் வீரத்துக்குமுரிய தெய்வமாதலால் இவள்சிந்தை சிறிதேனுங் காமத்தின்பாற் சென்றிலது. அபல்லோவோடு உடன்றோன்றிய ஆர்ட்டெமிஸ் (Artemis) என்னுந் தேவதை வில்லும் அம்பும் ஏந்தி வேட்டைத்தொழிலுக்கு உரிய தெய்வமாயினாள்; இவளைச் சந்திரமண்டலத்துக்கு அதிதேவதையாகவும், அபல்லோவைச் சூரியமண்டலத்துக்கு அதிதேவதையாகவும் யவனபுரத்தார் கொண்டார்கள். ஆவிரதை (Aphrodite) தேவராஜனுடைய மற்றொருபுதல்வி. இவள் அழகுக்குங் காமத்துக்குந் தெய்வம்; இவள் புதல்வன் ஏரோஸ் (Eros). இவன் என்றும் பாலப்பருவங்கழியாத மன்மதேவன். ஜூப்பிற்றர், பொசெயிடன், அபல்லோ, வல்கன், அரேஸ், ஹேர்மேஸ், ஜூனோ, அத்தேனா, ஆர்டெமிஸ், ஆவிரதை, வெஸ்டா, சீரேஸ் என்னும் பன்னிருதேவதைகளுமே சிறப்புடையனவாக யவனர்களாற் கொண்டாடப்பட்டுவந்த தேவதைகளாம்.

30. ஜூப்பிற்றர் என்னும் மொழி த்யாஉஸ் பித்ரு (Dyaus) Pitar) என்னும் வடசொல்லினது சிதைவாகும்; இத்தெய்வத்தை த்யாஉஸ் என்னும் மொழியினது சிதைவாகிய சேயுஸ் (Zeus) என்னும் பெயரினாலும் வழங்குவதுண்டு. த்யாஉஸ் என்னும் வடமொழி பிரகாசம் என்னும் பொருளினையுடையது. இப்பெயர் கடவுட்பெயராக இருக்குவேதத்திலும் வழங்கப்படுகிறது. யூறனஸ் என்பது உரா்ணஸ் என்பதன் சிதைவு. உகர வகர ஒற்றுமைபற்றி இச்சொல் வடமொழியில் வருண: என்று வழங்கும். ரிக்ஸம்ஹிதையில் வருணன் என்னும் மொழி வானமண்டிலத்துக்குத் தலைவனாகிய தேவதேவனைக்குறிப்பது. பின்னாட்களில் இம்மொழி கடற்றெய்வத்தின்பெயரைக் குறிப்பதாயிற்று. பூர்வ யவனர் தமது முன்னோராகிய ஆரியமக்களிடத்திருந்து பிரிந்துபோயகாலத்து இந்த இரண்டு தெய்வப்பெயரையும் அறிந்திருந்தார்களென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. காலதேவதை சூரியனுடைய புதல்வன் என்பது நமது புராணங்களின் கொள்கை. சூரியன் காலதேவதையுடைய மகனுக்குமகன் என்பது யவனபுரத்துக்கொள்கை. ஆகாசமாகிய வெறுவெளிக்குத் தேவதை யுரனஸ்; அதனினின்றும் தோற்றிய காலதத்துவத்துக்குத்தேவதை கிரோணஸ்(இத்தேவதைக்கு சற்றேண் (Saturn) என்னும் பெயருமுண்டு); அதினினின்று தோற்றிய ஒளிக்குத் தேவதை ஜூப்பிற்றர், அதனினின்று தோற்றிய சூரியசந்திரருக்குத் தேவதைகள் அபல்லோவும் ஆர்டெமிசும் என்று இவ்வாறு அறியலாகும். பொசெயிடனுக்கு மற்றொருபெயர் நேப்ரியூன்(Neptune); ஜூனோவுக்கு மற்றொருபெயர் ஹேரே (Here); அத்தேனாவுக்கு மற்றப்பெயர்கள் பல்லாஸ் (Pallas), மினேர்வா (Minerva); வல்கனுக்கு மற்றொருபெயர் ஹேபேஸ்தஸ் (Hephæstus); அரேசுக்கு மற்றொரு பெயர் மார்ஸ் (Mars); ஹெர்மெசுக்கு மற்றொருபெயர் மேர்க்கரி (Mercury); ஆர்டெமிசுக்கு மற்றொரு பெயர் டயனா (Diana); ஆவிரதைக்கு மற்றொரு பெயர் வீநசை (Venus); வெஸ்டாவுக்கு மற்றொரு பெயர் ஹெஸ்டியா (Hestia); சிறெசுக்கு மற்றொரு பெயர் டேமீற்றர் (Demeter). இனி, யவனபுரத்துத் தத்துவஞானம் என்னும் தலைப்பெயர்க்கீழ் யவனபுரத்து அறிஞருள் தலைசிறந்த தத்துவஞானிகளினுடைய கொள்கைகளை ஆராய்வாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

வசிட்டரும் வள்ளுவரும் கூறிய அரசியல்.

ஸ்ரீராமபிரானுக்கு வசிட்டர்கூறியதாக இராமாவதாரத்திற்கூறப் படும் அரசியலும், வள்ளுவர்கூறிய அரசியலும் ஒப்புமையுடையவாகக் காணப்படுதலின், அதனை இங்கே விளக்கிக்காட்டுதும்.

வசிட்டர் ஸ்ரீ ராமபிரானைநோக்கிப் "போர்வலாய்! புல்குகாதற்புர வலன் நினக்கு நானிலம் நாளைநல்கு" மென்று, பின்னும், "உனக்கு உறுதிப்பொருளொன்று கூறுவதுண்டு; நன்று கேட்டு நன்கு கடைப்பிடி" என்று அவனுக்கு அரசியல்கூறுவாராய், ஏ இராம! நீ அரசியல்நடாத் துங்கால், அதற்குத்துணையாகிய அந்தணரைப்பேணுதி. அவர்களோ!

"கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்
விரியும்பூதமொரைந்தினும்மெய்யினும்
பெரியர்" அந்த,

"அந்தணாளர்முனியவுமாங்கவர்
சிந்தையாரருள்செய்பவுந்தேவரில்
நொந்துளாரையுநொய்துயர்ந்தாரையு
மைந்தவெண்ணவரம்புமுண்டாங்கொலோ."

"அனையராதலினையவிவ்வையதி
வினையினீங்கியமேலவர்தாளிணைப்
புனையுஞ்சென்னியையாய்ப்புகழ்ந்தேத்துதி
இனியகூறிநின்றேயினசெய்தியால்"

"ஆவதற்குமழிவதற்கும்மவர்
ஏவநிற்கும்விதியுமென்றாலினி
யாவதெப்பொருளிம்மையுமம்மையும்
தேவரைப்பரவுந்துணைசேர்த்ததே"

என்று அந்தணரைப் பேணுமாறு முதற்கட்கூறினர். இவ்வந்தணரைப் பேணுதலே, வள்ளுவரும் பெரியாரைத்துணைக்கோடலென்று மதிகாரத்

தாற் கூறினர். அவ்வதிகாரப்பொருளை விளக்குழி, பரிமேலழகரும் பெரியாராவார் 'பேரறிவுடையாரென்றும், அவராவார் அரசர்க்கு மங்கங் கட்கும் மானுடத்தெய்வக்குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சர் புரோகிதரென்றும் கூறினர். பின்வாக்கியத்துட் டெய்வக்குற்றம்வாரா மற் காத்தற்குரிய புரோகிதர் என்றது அந்தணரை. இன்னும் அவ் வதிகாரத்துள்வரும்,

"உற்றநோய்நீக்கியுறு அமைமுற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல்"

என்னுங் குறளுரைக்கண் "உற்றநோய் என்றது தெய்வத்தானுக மக்க ளானுக தனக்கு முன்வந்த துன்ப"மென்றும், "அவற்றைநீக்கி உறுமை முற்காக்கும் பெற்றியாரென்றது அமைச்சரும் புரோகிதரு" மென்றும் பரிமேலழகர்கூறிய உரையானும் வள்ளுவர் அவ்வதிகாரத்துள் அமைத் தமை பெறப்படும்.

இவ்வாறு அந்தணரைப்பேணும்வழக்கம் அக்காலத்தரசர்க்குள தென்பது,

"அருந்தவமுனிவருமந்தணாளரும்
வருந்துதலின்றியேவாழ்வின்வைகினர்
இருந்துயருழக்குநரெற்பினென்பதோர்
அருந்துயர்வருத்துமென்னகத்தையென்றனன்"

என்பதனுனும், "வடாஅது பனிபடுநெடுவரைவடக்கும்" என்னும் அடி யை முதலாகவுடைய புறநானூற்றுச்செய்யுளுள்வரும்,

"இறைஞ்சுகபெரும நின்சென்னிசிறந்த
நான்மறைமுனிவரேந்துகையெதிரே"

என்னு மடிகளானும், பதிற்றுப்பத்தில்வரும் "பார்ப்பார்க்கல்லது பணி பறிகலேயே" என்னு மடியானும், வியாழ வெள்ளிகளைத் தேவாசுரர்கள் புரோகிதராகக்கொண்டு பேணினமையானும், சஞ்சயமுனிவரைத் திருத ராட்டிரன் புரோகிதராகக்கொண்டு பேணினமையானும், தௌமியமுனிவ ரைப் பாண்டு புரோகிதராகக்கொண்டு பேணினமையானும் அறியப்படும்.

இன்னும் வசிட்டர், ஸ்ரீராமபிரானைநோக்கி, அறமும் நீதியும் அருளும் எந்நாளும் நின்னால் நீக்கப்படாதன:

"உருளுநேமியுமொண்கவரெஃகமும்
மருளில்வாணியும்வல்லவர்மூவர்க்கும்
தெருளுநல்லறமும்மனச்செம்மையும்
அருளுநீத்தபின்னவதுண்டாகுமோ"

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"கொடையளிசெங்கோல்குடியோம்பல்நான்கும்
உடையானாம்வேந்தர்க்கொளி"

எனக் கூறினர். இதனுள் கொடையென்றதனா லறமும், செங்கோல் என்றதனால் நீதியும், குடியோம்பல் என்றதனால் அருளும் குறிப்பிக்கப் பட்டன.

இன்னும், வசிட்டர், சூது மிகக்கொடியது:—

"சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர்
நீதிமைந்தநினக்கிலையாயினும்
ஏதமென்பனயாவையுமெய்துதற்
கோதுமூலமவையெனவோர்தியே"

என்றார். சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர் என்றது, பெருந்துயரைத் தரும் சூது கள்ளு இருமனப்பெண்டிர்முயக்கம் என்பனவற்றை. இவ்வாறே வள்ளுவரும்,

"இருமனப்பெண்டிருங்கள்ளுங்கவறும்
திருநீக்கப்பட்டார்தொடர்பு"

எனக் கூறினர். இவை குற்றங்கட்கு மூலமாதலை இதனானும்,

"சிறுமைபலசெய்துசீரழிக்குஞ்சூதின்
வறுமைதருவதொன்றில்" என்பதனானும்,

"உடைசெல்வமூணொளிகல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின்" என்பதனானு மறிக.

இன்னும், வசிட்டர், பலரோடு பகைகொள்ளாதி; கொள்ளின் வேரொடுங்கெடுவாய். ஓரரசன்,

"யாரொடும்பகைகொள்ளிலனென்றபின்
போரொடுங்கும்புகழொடுங்காது தன்
தாரொடுங்கல்செல்லாதது தந்தபின்
வேரொடுங்கெடல்வேண்டலுண்டாகுமோ."

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"ஏமுற்றவரினுமேழைதமியனுய்ப்
பல்லார்பகைகொள்பவன்" என்பதனுலும்,

"பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே
நல்லார்தொடர்கைவிடல்"

என்னுங்குறளுள், பல்லார் பகைகொளல் என்பதினுலுங் கூறினர்.

இன்னும், வசிட்டர்,

"கோளுமைம்பொறியுங்குறையப்பொருள்
நாளுங்கண்டுநடுக்குறுகோன்மையின்
ஆளுமவ்வரசேயரசன்னது
வாளின்மேல்வருமாதவமைந்தனே"

எனக் கூறினர். இச்செய்யுளின்கருத்து, விடயங்களைக்கொள்ளுதலை யுடைய ஐம்பொறிகளும் அவ்விடயங்களைக் கொள்ளுதலிற் சுருங்க, அவற்றால் அவ்விடயங்களை அனுபவித்து, அனுபவிக்குங்கால் அதனுற் றமக்கு யாதாயினும் ஏதம்வருமோவென்று அஞ்சுகின்றவவியையோடு ஆளுகின்ற அரசே அரசு; அது வாளிற்றவமாகும் என்பது வாளி னிருந்து தவஞ்செய்வோர் சிறிது சோரினும் வீழ்ந்து அவ்வாளால் ஏத மடைவர், அது போல ஐம்பொறியையடக்கியாளுமரசும், அவ்வடக்கு தலிற் சிறிதுதவறின் அவ்வைம்பொறிவாயிலாகக் கேடடையும் என்ப தாம். [கோளும் என்பதற்குக் குற்றமென்றும், கண்டு என்பதற்குச் செய்து என்றும், நடுக்குறும் என்பதற்குப் பழித்து அஞ்சி என்றும் பொருள் கூறுவாருமுளர்.] இவ்வாறே வள்ளுவரும்,

"காதலகாதலறியாமையுய்க்கிற்பி
னேதிலவேதிலார் நூல்"

எனக் கூறினர்.

இன்னும் வசிட்டர் மிக்க தோள்வலிபுடையாராயினும் அமைச்சர் சொல்வழியொழுகல்வேண்டும்:—

"உமைக்கு நாதற்குமோங்குபுள்ளூர்திக்கும்
இமைப்பினுட்டமொரெட்டுடையானுக்கும்
சமைத்ததோள்வலிதாங்கினராயினும்
அமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே."

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்.

"செவிகைப்பச்சொற்பொறுக்கும்பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு."

எனக் கூறினர்.

இன்னும் வசிட்டர், இராம! நீ எவ்வுயிர்க்கண்ணும் அன்புடையை யாயொழுகுதி. அன்பு ஆக்கம்தரும்,—

"என்புதோலுடையார்க்குமிலார்க்குந்தம்
வன்பகைப்புலன்மாசறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிமூவுலகத்தினும்
அன்பினல்லதோராக்கமுண்டாகுமோ"

எனக் கூறினர். அவ்வன்பைத் திருவள்ளுவரும், "கொடையளிசெங் கோல்குடியோம்பல்நான்கும்—உடையானும்வேந்தர்க்கொளி" என்பதில் அளி என்பதனாலும்,

"துளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னளியின்மைவாழுமுயிர்க்கு"

என்பதனாலும், சுற்றந்தழாஅல் என்னும் அதிகாரம் முதலியவற்றானுங் கூறினர்.

இன்னும் வசிட்டர், இராம! நீ தருமநூலிற்சொன்னவிதியை ஐய மின்றி ஆராய்ந்து அதனைக் கடவாமற் காக்குதி.

"வையமன்னுயிராகவம்மன்னுயிர்
உய்யத்தாங்குமுடலன்னமன்னனுக்
கையமின்றியறங்கடவாதருள்
மெய்யினின்றபின்வேள்வியும்வேண்டுமோ"

என்று கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்
தேர்ந்துசெய்வஃதேமுறை" எனக் கூறினர்.

மேலேகூறிய இராமாவதாரச்செய்யுளில் மெய்யினிற்றல் என்றது முட்டாதுசெய்தலை. வேள்வியும்வேண்டுமோவென்றது வேள்வியின்றியே தன்னாட்டின்கண் மழைபெய்தலும், வென்றியடைதலும் முதலிய வேள்வியால்வரும்பயன்களை அடைவானென்பதுபோதரநின்றது. அதனை;

"இயல்புளிக்கோலோச்சுமன்னவனாட்ட
பெயலும்விளையுளுந்தொக்கு" என்பதனானும்,
வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின்" என்பதனானும்,

"இறைகாக்கும்வையகமெல்லாமவனை
முறைகாக்கும்முட்டாச்செயின்"

என்பதனானு முணர்க.

இன்னும் வசிட்டர்,

"இனியசொல்லினனீகையனெண்ணினன்
வினையன்றூயன்விழுமியன்வென்றியன்
நினையுநீதிநெறிகடவானெனில்
அனையமன்னற்கழிவுமுண்டாங்கொலோ"

என்று கூறினர். இதில் இனியசொல்லினன் ஈகையன் என்பது வள்ளுவர்நூலுள், "இன்சொலாலீத்து" என்னுங் குறட்பகுதியையும், 'எண்ணினன்' 'வினையன்' என்பன தெரிந்துசெயல்வகை, தெரிந்துதெளிதல், தெரிந்துவினையாடல் முதலிய அதிகாரங்களையும், 'தூயன்' என்பது குற்றங்கடிதல் என்னு மதிகாரத்தையும், 'விழுமியன்' என்பது

சிற்றினஞ்சேராமை முதலிய அதிகாரத்தையும், வெற்றியன் என்பது ஊக்கமுடைமை ஆள்வினையுடைமை இடுக்கணழியாமை முதலிய அதிகாரங்களையும், நீதிநெறிகடவான் என்பது செங்கோன்மை கொடுங்கோன்மை முதலிய அதிகாரங்களையும் குறிப்பித்து நின்றன.

இன்னும் வசிட்டர், ஸ்ரீராமபிரானைநோக்கி, நீ காலத்தைநோக்கல் வேண்டும்:—

"[5]சீலமல்லனநீக்கிச்செம்பொற்றுலைத்
தாலமன்னதனிநிலைதாங்கிய
ஞாலமன்னற்குநல்லவர்நோக்கிய
காலமல்லதுகண்ணுமுண்டாங்கொலோ"

என்றுகூறினர். இதில் சீலம் என்றது அரசஒழுக்கத்தை. அல்லன வென்றது அறமல்லாதனவற்றை. இவை வள்ளுவர்நூலுள், 'அறனிழுக்காதல்லவைநீக்கி', என்னுங் குறட்பகுதியையும், செம்பொற்றுலைத்தாலமன்னதனிநிலை, என்றது, "ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்—தேர்ந்துசெய்வஃதேமுறை" என்னுங் குறளில், 'கண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்' என்னும் பகுதியையும், 'காலமல்லது கண்ணுமுண்டாங்கொலோ' என்றது, காலமறிதல் என்னுமதிகாரத்தையும், குறிப்பித்துநின்றன. அரசு துலைக்கொப்பாக இருத்தல்வேண்டுமென்பது, "படுவதுண்டுபகலாற்றி—இனிதுருண்டசுடர்நேமி" என்னும் புறநானூற்றுச் செய்யுளடியுள்வரும் 'பகலாற்றி' என்பதனானும் அறியப்படும்.

இன்னும் வசிட்டர், இராம! நீ பெரியோரைப்பேணல்வேண்டும், ஏனெனில்,

"ஓர்வினல்வினையூற்றததிறைநூர
பேர்விறெல்விதிபெற்றுளதென்றபோ
தீர்விலன்புசெலுத்தலிற்செவ்வியோர்
ஆர்வமன்னவற்காயுதமாவதே"

ஆகலின், என்று கூறினர். இதில், ஓர்வினல்வினையூற்றத்தினர் என்றதும் செவ்வியோரென்றதும் பெரியோரைக் குறித்துநின்றன. இப்பெரியோரைப்பேணலை, வள்ளுவர் பெரியாரைத்துணைக்கோடல், பெரி

யாரைப்பிழையாமை என்னு மதிகாரங்களாற் கூறினர். விதி—கட்டளை; விதியினியல்பு எனினுமாம்.

இன்னும் வசிட்டர், இராம! நீ காமத்தையொழித்தல்வேண்டும்.

"தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வரும்
காமமில்லையெனிற்கடுங்கேடெனும்
நாமமில்லைநரகமுமில்லையே"

என்று கூறினர். இக்கருத்தை வள்ளுவரும், பெண்வழிச்சேறல், வரைவின்மகளிர் என்னு மதிகாரங்களுள் அமைத்துக்கூறினர்.

மேற்கூறிய நீதிகளையேயன்றி வேறுநீதிகளையும் வசிட்டர் ஸ்ரீ ராமபிரானுக்குக்கூறியதாக இராமாவதாரங்கூறுதலின், வள்ளுவர் கூறிய அரசியலினின்றும் எடுத்து இங்கே ஒப்புமைகாட்டாதொழிந்தனவும் அவற்றுள் அமையுமாறு ஓர்ந்துணர்க.

சி. கணேசையர்.

௳

இளங்கீரந்தையார்.

இப்புலவர் இளங்கீரன் என்ற பாவலரின் தந்தையார். இத்தொடர் சாத்தந்தை என்றாற்போல விதிநோக்கி—['இயற்பெயர்முன்னர்த்தந்தை' தொல்-புள்ளி. 52] இளங்கீரந்தை எனநின்றது. இவர் முல்லைத்திணையைப் பாடியுள்ளார். தவளைவாய் குழந்தைகள் காவிலிடும் சிறுசதங்கை வாய்க்கு ஒப்பென்பர். (குறுந்-148]. இவர் கூறும் 'தவளைவாய்' என்பதை ஆறும்வேற்றுமை நிலைமொழியீறாக நின்றகெட்டசந்தி என்றால் இயல்பு சந்தியாகாது என்பர் பிரயோகவிவேகநூலுடையார். [பிரயோ—சமாச—உ—உரை.] இவர் குறுந்தொகைப்பாட்டை [148] அகப்பொருள் விளக்கவுரைகாரர் எடுத்தாண்டு 'இறைமகள்மறுத்தல்' என்ற துறையுள் எழுதிக்காட்டுவர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௪0௨—ஆம் பக்கத்தொடர்ச்சி.)

வரைக்காட்சிப்படலம்.

[சந்திரசைலச்சாரலைச்சேர்ந்த தசரதாதியர் அம்மலைவளங்களைக் கண்டு களித்ததைக் கூறுவது.]

168. கோவை ஆர் வடக் கொழுங் குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன, வரி சிலை அனங்கன் மேற் கொண்ட,
பூவை வாய்ச்சியர் முலை சிலர் புயத்தொடும் பூட்டத்,
தேவ தாரத்தும் சந்தினும் பூட்டின சில மா.

இ - ள். (அந்தச் சந்திரசைலச்சாரலிலே) மாதர்தனங்கள் (ஆகிய யானைகள், மைந்தர்) சிலருடைய தோள் (களாகிய தூண்கள் கட்டுத்தறிகளாக, அவை)களிற் கட்டப்பட, (அந்தத் தனங்களுக்கு உவமானமாகிய) யானைகள் சில, தேவதாரு சந்தனமென்னும் மரங் (கள் கட்டுத்தறிகளாக அவை) களிற் கட்டப்பட்டன.

முதலிரண்டடிகள் மாதர் தனங்களுக்கும் மதயானைகளுக்கும் சிலேடை. கோவை ஆர் வடக் கொழுங் குவடு ஒடிதர நிவந்த - 1. [தனங்கள்] ஆகாயத்தைப்பொருந்திய வடதிசையில் உள்ள (மேரு) மலை (ஒப்பாகமாட்டாமையால்) முறிந்துபோம்படி (எனவே, தோல்வியடையும்படி) வளர்ந்தன; [கோ - ஆகாயம். ஆர் - பொருந்து. குவடு - மலை. ஒடிதர - ஒடிய - தளர (மணிமேகலை); கெட(பரிபாடல்). நிவந்த - வளர்ந்தன.] 2. [யானைகள்] ஆகாயத்தைப்பொருந்திய ஆலமரத்தின் கொழுமையான கிளைகள் ஒடியும்படி உயர்ந்தன. [வடம் - ஆலமரம்.] ஆவி வேட்டன - 1. [தனங்கள்] ஆடவரது உயிரை விரும்பின. 2. [யானைகள்] தடாகத்தை விரும்பின. வரிசிலை அநங்கன் மேற்கொண்ட— 1. [தனங்கள்.] கட்டப்பட்ட வில்லையுடைய மன்மத(ன் உருவம் தொய்யிலாக எழுதப்பட்டது)னை மேலே கொண்டன; 2. [யானைகள்] அந்த மன்மதன்போன்ற வீரர் ஏறப்பட்டன.

பூவை - நாகணவாய்ப் பறவை. அது ஆகுபெயராய் அப்பறவையின் சொல்லைக்குறித்தது. வாய் ஆகுபெயராய் வாயினுற்சொல்லப்படும் சொல்லையுணர்த்தியது. பூவைவாய்ச்சியர் - நாகணவாய்ப்பறவையின் சொற்போலும் சொற்களையுடையார் (ஆகிய மாதர்கள்). சந்து - சந்தனமரம். 'பூட்ட', 'பூட்டின' என்பவை 'எழுதிய ஓலை' என்பது போலப் படுவிகுதிதொக்குப் 'பூட்டப்பட,' 'பூட்டப்பட்டன' என்ற பொருள்பட நின்றன.

மா, எல்லா மிருகங்களுக்கும் பொதுப்பெயராயினும், இதற்குமூந்தியபாட்டிற் கூறப்பட்ட 'மன்மதக்களிறும் மாதர்கொங்கையும்' பற்றிக் கூறும் இந்தப்பாட்டில் முன்தொடர்புபற்றி யானையைக்குறித்தது. 'கோவை யார்வடக் கொழுந்துவ டொடிதர நிவந்த— ஆவி வேட்டன வரிசிலை அனங்கன்மேற் கொண்ட' என்ற விசேடணங்களாலும் 'மா' என்பது யானையை உணர்த்தியது.

169. தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும், அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர் எனும்அது வழக்கே :
உருண்ட வாய்தொறும் பொன்உருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் பொன்னிறம் ஆக்கிய, இரதம்.

இ - ள். பெரியோர், (தம் போன்ற பெரியோரை யியல்பாகச்சேர்தலன்றி ஒருகால்) சிறியோரைச் சேர்ந்தாராஞலும், அச்சிறியோருடைய சிறுமையை மாற்றுவாராய் அவரைத் தம்போலப் பெரியோராக்கு) வார் என்று சொல்லப்படுவது (உலக) வழக்கு : (அதுபோலத்) தேர்கள், (தம்) பொற்சக்கரங்கள் உருண்ட இடமெல்லாம் (அப்பொற்சக்கரங்களின் பொன்னை) உரைத்துக்கொண்டே ஓடிக் கருநிறமான கல்லையும் பொன்னிறமாக்கின.

தெருண்ட - தெளிந்த. மேலவர் - பெரியோர். மருண்ட - மயங்கிய. புன்மை - சிறுமை. மருண்டபுன்மை—மயக்கம் காரணமாக ஏற்பட்ட சிறுமை. எனும் அது - என்றுசொல்லும் அது - என்றுசொல்லப்படும் அது - என்றுசொல்லப்படுவது ; இதுபோல, 'ஆண்மையென்னுமது' ஆண்மையென்று சொல்லப்படுவது என்றபொருளில் (தாடகைவதைப் படலம் ருஎ-ம் பாட்டில்) வருதல் காண்க. வழக்கு - (உலகத்தாரால்) வழங்கப்படுவது - (உலக) வழக்கு.

[அந்த மலைச்சாரலிலே மரங்களின் அருகே சென்று, பன்னிறமணிகள் இழைந்த ஆபரணங்களணிந்த மாதர்கள் அம் மரங்களின் பல வருணப்பூப்பூத்த கொம்புகள் போன்றார். பளிங்குப் பாறையிலே தன் உருத் தோன்றும்படி ஒரு மாது படுத்துறங்க, அவளைத் தேடிவந்த அவளுடைய தோழிகள் அவளுடைய இரண்டுருவங்களைக்கண்டு திகைத்தார்கள்.]

170. மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறு மெய்யைச்
சுதைக்க ணுரை யைப் பொருவு தூசுகொடு தூசை
உதிர்த்தனர், இளங்குமார், ஓவியரின் ஓவம்
புதுக்கின ரெனத், தருண மங்கையர் பொலிந்தார்.

இ - ள். சித்திரிகர் இனிய சித்திரங்களைப் புதுப்பிப்பவர்போல, காளையர்கள், (ஆள்கள் குதிரைகள் ஆனைகள்) மிதிக்க எழுந்த தூசினால் பொலிவற்ற (தம் காதலிகளின்) மேனியினின்று (அந்த நுண்) தூசுகளைப் பால்நுரைபோன்ற (வெண்) தூசுகொண்டு (துடைத்து) உதிர்த்தார்கள். (அந்த) இள மங்கையர்கள் (புதுப்பிக்கப்பட்ட சித்திரம்போல) விளங்கினார்கள்.

தூளி - தூள். சுதை - பால். தூசு - தூள்; ஆடை. ஓவியர் - சித்திரகாரர். இன் - இனிய. ஓவம் - சித்திரம். தருணம் - இளமை.

'தூசுகொடுதூய்தா' என்றும் பாடம். 'மெய்யைத் தூசுகொடு தூசை உதிர்த்தனர்' என்பதற்கு 'மெய்யினின்றும் தூசைத் தூசு கொண்டு உதிர்த்தனர்' என்று பொருள்கொள்க. 'மெய்யினின்றும்' என்பாலது 'மெய்யை' என வந்தது, "யாதனுருபிற் கூறிற்றாயினும்-பொருள்செல் மருங்கின் வேற்றுமைசாரும்" (நன்னூல்) என்பதனால் என்க. 'மெய்யைத் தூசுகொடு தூய்தா உதிர்த்தனர்' என்ற பாடத்துக்குப் பொருள்கூறுங்கால் 'தூள் உதிர்த்தனர்' என்று 'தூள்' என்ற பதத்தை அவாய்நிலையாகக் கொள்க.

'ஓவியர் இன் ஓவம் புதுக்கினரென இளங்குமார், மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறும் [தருணமங்கையர்] மெய்யைச் சுதைக்கண் நுரையைப்பொருவு தூசுகொடு தூசை உதிர்த்தனர்: தருணமங்கையர் பொலிந்தார்' எனக் கூட்டிப் பொருள்செய்யப்பட்டது காண்க. 'புதுக்கின

ரென' என்றில்லாமல் 'புதுக்கினவென' என்று பாடமுளதாயின், 'இளங் குமார் [தருணமங்கையர்] மெய்த்தூசை, [சித்திரத்தூசைத் துடைத்து உதிர்க்கும்] ஓவியரின் (- சித்திரகாரர்போல), உதிர்த்தனர்: ஓவம் (-சித்திரங்கள்) புதுக்கினவென (-புதுக்கப்பட்டனபோல)த் தருணமங்கையர் பொலிந்தார்' என்றுகூட்டிப் பொருள்கொள்ளலாம்.

[மலையினின்று இறங்கும் சிங்க ஏறுகள் போல, அரசர் யானையினின்று இறங்கி அந்தச் சிங்க ஏறுகள் குகைகளுள் நுழைதல்போலக் கூடாரங்களினுள்ளே குடிபுகுந்தார்கள். தம்மேற் படிந்த புழுதியை உடல் குலுக்கி உதறியெறிந்த குதிரைகள், தம்மைச் சேர்ந்த தீயோரைத் தீயோரெனத்தெரிந்தமாத்திரையே விலக்கித் தள்ளிவிட்ட தூயோர் போல விளங்கின. திரைச்சீலைகள் அலையும் கூடாரங்களிலே, கழங்காடும் மங்கையர்கண்கள், கழங்குகள் செல்வழி ஓடித் திரும்பி மிளிர்கின்றவை, திரையலையும் தடாகங்களில் (இரைதேடியோடிப்) பிறழ்ந்து பிரகாசிக்கின்ற மீன்கள் போன்றன. சேனையைக் காணுதற்குவந்த தேவலோக வாசிகள் தம்மவர்களையும் சேனையிலுள்ளாரையும் பகுத்தறியமாட்டாமல் திகைப்புறும்படியிருந்ததனால், மைந்தர் மகளிரோடு பொலிந்த அந்த மலைச்சாரல், தேவர் தேவமாதரோடு தேவலோகம் வழுக்கி மண்ணில் விழுந்து விளங்கினாற்போன்றிருந்தது. மாதர்கள் கூவும் குயில்களினோடு பேசியும் எதிரொலியொலிக்கு மலையொடு கூவி எதிரொலிகேட்டும் உவந்து மயில்கள்போல உலாவித் திரிந்தார்கள். மைந்தர்கள் காலில் வீரக்கழல்கள் சத்திக்க, மாலையிலே வண்டுகள் ஒலிக்க, பக்கத்திலே வாள் விளங்க, தோளில் வாகுவலயம் துளங்க, அந்தத் தோள்போலும் மலைக்காட்சிகளைக் காண்பாராய்த் திரிந்தார்கள்.]

171. குப்புறற் கருமைபால் அக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் துளங்கு கிறை உடுபதி ஆடியின்கண்,
இப்புறத் தேயும் காண்பர் குறத்தியர், இயைந்த கோலம்;
அப்புறத் தேயும் காண்பார் அரம்பையர் அழகு மாதோ.

இ - ள். (அந்த மலை மிக உயர்ந்து) கடத்தற்கு அருமையையிருத்தலால் (கடக்கமாட்டாமல்) அந்த மலைப்பக்கத்திலேதானே தங்கி (முன்னும் பின்னும்) ஒப்ப விளங்குகின்ற சந்திரனாகிய கண்ணாடியிலே

(அதன் பூமியை நோக்கிய) இந்தப் பக்கத்திலே குறத்தியர் (தமது) அழகை நோக்குவார்கள்; (அதன் வானைநோக்கிய மறுபுறமாகிய] அந்தப் பக்கத்திலே அரம்பையர் (தமது) அழகை நோக்குவார்கள்.

குப்புறல்—கடத்தல். ஒப்புறத்துளங்குகின்ற உடுபதி ஆடி—1. (முகம்பார்க்கும் கண்ணாடி ஒருபக்கமே விளக்கமாயிருக்கும்; அதுபோலன்றி இருபக்கமும்) ஒன்றுபோல விளக்கமாயிருக்கும் சந்திரனாகிய கண்ணாடி; 2. (நம்மைக் கண்ணாடியென்று நம்பால் தம் அழகைப் பார்க்கின்ற மாதர் முகத்துக்கு) ஒப்பு உற (நாம் தகுதியில்லேமேயென்று அஞ்சி) நடுங்குகின்ற சந்திரனாகிய கண்ணாடி. துளங்குதல்—விளங்குதல்; நடுங்குதல். ஆடி—கண்ணாடி. கோலம் - அழகு.

சந்திரசைலத் துச்சியைச் சந்திரன் கடக்கமாட்டாமல் அம்மலைப் பக்கத்திலேதானே தங்கியென்றதனால், (அம்மலையின்பெயர்க்காரணம் கூறினார்போலுமென்று ஓர்நினைவெழச்செய்து) அம்மலையின் மிக்க உயர்ச்சியைக் குறிப்பித்தார்: அவ்வாறு குறிப்பித்தவர் அம்மட்டிலே நில்லாமல், சந்திரனை மிகப் பொருத்தமாகக் கண்ணாடியாக உருவகித்து, அவ்வளவிலும் அமையாமல் மற்றைக்கண்ணாடிகள் போலன்றி அவ்வுருவகக் கண்ணாடி இருபக்கமும் முகம்பார்க்குந்தன்மையுடைமையை ஏதுவாகக்கொண்டு, தம் பாவனாசத்தியால், அதன் ஒரு புறத்தில் மலைநாடியரும் மறுபுறத்தில் வானநாடியரும் தத்தம் அழகு காண்பார்களென்று அதிசயமும் ஆநந்தமும் விளையக்கூறிய நயம் பாராட்டற்பாலது.

[மலைவளங் காணும் மாதர் ஒரு சுனையைப் படிகத்தளமென்று மயங்கி விரைந்துசென்று இறங்க, அவர் செலவினைக்கண்ட மைந்தர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள்.

பல இடங்களில் உள்ள மலர்களைத் தேடியுற்றுக் கள்ளுண்டு களிக்கும் ஆண்வண்டுகள் பெண்வண்டுகள்போல, அம்மலையின் பல இடத்து வளங்களையும் நாடிச்சென்று கண்டு மைந்தரும் மகளிரும் களித்தார்கள்.

சுவர்க்கத்தை அடைந்தவர்கள்போல, மலைமேலுற்றவர்கள் பூமியில் இறங்க மனமில்லாமற் களித்துக்கொண்டிருக்கும்போது, மாலைக் காலம் வந்தது.

அப்போது, அத்தமனகிரி ஆனையை ஒத்தது; அதனை அடைந்த சூரியன், அந்த ஆனைமேற்பாய்ந்த சிங்கத்தை ஒத்தது; செவ்வானம், சிங்கம் யானைமேற் பாயப் பொங்கிய இரத்தப்பிரவாகத்தை ஒத்தது. அப்படிப்பட்ட மாலைநேரம் கழியும்பொழுது, அம் மலைமே லேறியிருந்தவர்கள், கீழே யிறங்கினார்கள்.

கிரணக்கற்றைப் பிடரிமயிரையுடைய சூரியச்சிங்கம் அத்தமன கிரியிற்புகுந்து மறையவே, அதுவரை ஒதுங்கிப் பதுங்கி ஒளித்திருந்த யானைக்கூட்டம்போல இருள்வந்து எங்கும் பரந்தது.

தீபங்கள் எங்கும் ஏற்றப்பெற்ற சேனைக்கடல், செந்தாமரைநிறையப்பூத்த தெண்ணீர்க்கடல்போல விளங்கியது.

சந்திரன் தோன்றி எங்கும்பரவிய நிலாவினிடையே, நட்சத்திரங்களினூடே செல்லாநின்ற காட்சி, வெண்மணற்பரப்பிலே தன்னால் ஈனப்பட்டுச் சூழச் சிதறுண்டுகிடக்கும் முத்துக்கள் மத்தியிலே வெண்சங்கம் ஊராநின்ற தோற்றம்போன்றது.

மீனக்கடல் ஒரு சந்திரனை யீன்றதென்று சேனைக்கடல் எண்ணிலாத சந்திரன்களை யீன்றதென்னும்படி, சேனையிலே அளவிறந்த மாதர்களின் முகமதிகள் பொலிந்தன.

நடனமாதர் நடிக்க, அதற்கியைய மத்தளிகர் மத்தளம்கொட்ட, தாளகாரர் தாளம் தட்ட, பாடகர் பாட்டுப்பாட, யாழ்ப்பாணர் யாழ் இசைக்க, வேய்ங்குழல் ஊதுவோர் ஊத, எல்லா இனிய ஓசையும் ஒன்றுக்கொன்று முரணுதலின்றி ஒற்றுமைப்பட்டுக் கூடித் தேவரும் மயங்கும்படி விம்மி ஒலித்தன.

வாயினால் உண்ணமுடியாத அருங்கலை அமிழ்தைக் காதினால் உண்டும், மாதர்களது ஆடலைக்கண்டும் பாடலைக்கேட்டும் ஊடலைத்தீர்த்தும் மைந்தர்களுக்கு இரவு கழிந்தது.]

பூக் கொய் படலம்.

172. மீன் உடை எயிற்றுக் கங்குற் கனகனை வெருண்டு, வெய்ய
கான் உடைக் கதிர்க ளென்னும் ஆயிரங் கரங்க ளோச்சித்,
தான் உடை உதய மென்னும் தமனியத் தறியுள் நின்று
மா னுடை மடங்க லென்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன்.

இ - ள். விண்மீன்களாகிய பற்களையுடைய இரவாகிய இரணியனைக் கோபித்துக் கிரணக்கைகளைநீட்டி உதயகிரியாகிய தூணினின்று நரசிங்கம் (தோன்றியது) போலச் சூரியன் உதயமானது.

மீன் - விண்மீன் - நட்சத்திரம். மீன் உடை எயிற்றுக் கங்குற் கனகன் - நட்சத்திரங்களைத் தன்னுடைய பற்களாக உடைய இரவாகிய இரணியன். கான் - காடு - அடர்ச்சி. தான் உடை - தன்னுடைய. 'யான் உடை' என்னுடைய என்ற பொருளில் பாசப் படலம் கஙூ-பாட்டில் வருதல் காண்க. உதயம், உதயகிரியை உணர்த்தி நின்றது. தறி - தூண்.

[பின்பு சேனை புறப்பட்டுச் சோணையாற்றைச் சேர்ந்தது. அப்போது உச்சிப்பொழுதாயிற்று. பூக் கொய்யவும் நீராடவும் விரும்பி மாதர்களும் மைந்தர்களும் தடாகங்கள் மலிந்த ஒரு சோலையைச் சேர்ந்தார்கள்.

மாதர்கள் தங்கள் புருவங்கள் விற்களாகக் கண்கள் அம்புகளாகத், தம்மை எய்வாரென்று பயந்தனபோல மயில்களும், அவர் வாய்ச்சொற் கேட்டு நாணினபோலக் கிளிகளும், அவர்கள் நடையழகுகண்டு ஒதுங்கினபோல அன்னங்களும் அவர்களைக்கண்டு விலகிப்போயின.

அடிமுதல் முடியளவும் (பன்னிற மணி) அணிகள் அணிந்த மாதர்களின் கூட்டம் (களிப்பால்) ஆடுதல், (பன்னிற மலர்கள்) நிறையப்பூத்த கொம்புகளின் கூட்டம் (காற்றால்) ஆடுதலை ஒப்ப, (தூரத்தே நின்று கண்ட) மைந்தர்கள் இருகூட்டத்துக்கும் பேதந்தெரியாமல் மயங்கினார்கள்.

குயில்கள் அகல்வன, மாதர்களின் ஆரவாரத்திற்கு அஞ்சியன்று, அவர் பேச்சுக்கு எதிர்பேச நாணியே: "வாசகம் வல்லார் முன்னின்று யாவர்வாய் திறக்க வல்லார்?"

மாதர்கள் இனிதாக நோக்கிக் கையால் தீண்டவே, (உணர்ச்சியில்லாத) கொம்புகளே தாழ்ந்து அவர்கள் பாதங்களில் மலர் சொரிந்து வணங்கினவென்றால், அவர்களுக்கு (வசியப்பட்டு) வணங்காதவருண்டோ?

மாதர்கள் தீண்ட மைந்தர்கள் புய மலைகள் தாழுமானால், அவர்கள் தீண்டக் கொம்புகள் தாழ்தல் ஆச்சரியமாமோ ?]

173. நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன ; அலைக்கப் போகா:
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார் ?

இ - ள். (மாதராகிய) கொடிகள் ஆறுகளிலும் குளங்களிலும் அலராத (முகங்கள் கண்க ளாகிய) தாமரையும் நீலோற்பலமும் பூத்திருக்கக் கண்ட வண்டுகள் அதிசயமுற்று (அவைகளில்) விழுந்(து மொய்த்)தன; (அவைகள் நீங்கும்படி) அலைக்க (நீங்கிப் போகா (வாய்த் தங்கி மொய்த்துக்கொண்டிருந்தன) : புதுமை (யானபொருள்களை விருப்போடு) காண்போர் அவைகளைக் கண்டால் விட்டுப்போவாரோ ?

மதிநுதல்வல்லி—பிறைபோலும் நெற்றியை உடையகொடி (களாகிய பெண்கள்). மாலை—ஒழுங்கு; வரிசை.

ஒரேகொடியிலே தாமரைகுவளையாகிய இருசாதிப் பூக்கள் பூத்திருத்தல் புதுமையென்பது குறிக்க 'அதிசயமெய்தி' என்றார். 'நளினங்கள் குவளையோடு வல்லி பூப்ப' என்றதற்கு (க் கண்களோடு கூடிய முகங்கள் போல)க் குவளைகளோடு (கூடிய) தாமரைகளைக் கொடிகள் பூக்க என்று பொருள்செய்து நீலமலர்கள் தம்மேல் மலரப்பெற்ற தாமரைமலர்களைக் கொடிகள் பூத்திருத்தல் புதுமையென்பது குறிக்க 'அதிசயமெய்தி' யென்றாரெனலுமாம்.

இது மாதாது தாமரைமலர்போலும் முகத்தில் நீலமலர்போலும் கண்கள் விளங்குதலை உட்கொண்டு "முண்டகத்தின்மீது முழுநீலம் பூத்திருக்கக் கண்டதுண்டு கேட்டதில்லை காண்" என்ற சமுத்தியை நினைவுறுத்துகின்றது. (சமுத்தி - பாடும்படி எதிரிகொடுக்கும் உள்ளுறைவசனம்.)

[பூங்கொம்புகளில் ஆடவர்களுக்கு எட்டியவை இணங்கிய மாதரையும் எட்டாதவை பிணங்கிய மாதரையும் போன்றன.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

அறியவேண்டிய சில பழங்கதைகள்.

(உக-ஆம் தோகுதியின் ருளஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி).

உ. வன்றொண்டர் கோயில்.

புள்ளிருக்குவேளூரென்ற வைத்தீசுரன்கோயிலுக்கு மேற்கில் சுமார் ஒருமைல்தூரத்திற் பெருமங்கலம் என்று ஒரு ஊருண்டு. அதற்கு நேர்தெற்கிற் சாலைக்குவடக்கே ஒரு சிறுகோயிலும் அதன் வடபாரிசமாக நான்குவீடுகளும் இருக்கின்றன. இவ்வாலயமுள்ள இடத்தைச் சிறிது கற்றவர்களும் விறன்மிண்டர்கோயில் என வழங்குகிறார்கள். எழுத்துவாசனை யறியாதவர்களோ இதனை வெறுமுண்டர்கோயில் என்கின்றனர். இதன் உண்மைகாணும்பொருட்டு யான் சில நாட்களுக்குமுன் அங்குச்சென்று கோயிலினுட்புகுந்து பார்த்தபோது, ஒரு இலிங்கமும் அதனைச்சார்ந்து பக்கத்திற் குவிகையினராய அடிகள் உருவமொன்றும் இருக்கக்கண்டு, அவற்றின்வரலாறென்னவென்று அக்கோயிற்பூசகரைக்கேட்க, அவர், தமக் கொன்றுந் தெரியாதென்றும், பெருமங்கலத்தில் வசிக்கும் தனிகராகிய அக்கோயிற் கண்காணியைக் கண்டுசாவினால் தெரிந்துகொள்ளலாமென்றுந் தெரிவித்தார். பின்பு, யான், நீடுவண்புகழ்ச்சோழர் சீர்நாட்டிடை முற்காலத்தே ஆடிபூங்கொடிசேர் நீடியநகராயிருந்து இப்பொழுது சிற்றூராகவிருக்கும் பெருமங்கலஞ்சென்று அத்தனிகரையடுத்துக் கேட்டபோது, அவர்,

> "மங்கலஞ்சேரேயர்கோன்மானுங்கலிக்காம
> ரங்கணரைத்தூதேவுமாரூரர்—தங்கணுற
> ஆவிதுறந்தவராலாவிபெற்றுநண்பாராய்
> மேவுசிவமானவிதிபோற்றி"

என்பதைச்சுட்டி, இக்கோயில், வன்றொண்டர் ஏயர்கோன்கலிக்காமநாயனரிடம் வந்தபோது, தங்கிச் சிவபூசைசெய்ததலமென்றும், கங்கைவாழ் முடியார்பக்கத்தேயிருப்பது வன்றொண்டர் திருவுருவமென்றும், இதற்கு வன்றொண்டர்கோயில் என்று பெயர் என்றும் கூறினார்கள். அவ்வூரையும், அஃது இருக்குநேர்மையையும் நோக்கியபோது,

அரும்பொற் கலத்தி லாரமு தருந்தினர்
கருங்கல வோட்டிற் காடியேற் றுண்ணவும்
பழுதில் பொற்றுகில் பன்முறை யுடுத்தோ
ரிழையிழை யவிழ்துகி லிசைத்திசைத் துடுக்கவும்
பளிதச் சாந்தம் பனிநீ ரணிந்தோர்
வெளிமட் பூழி வேர்வையிற் பூசவுந்
தந்தக் கட்டிலிற் றளிரணைத் துயின்றோர்
சந்தியம் பலத்திற் றடங்கையிற் றுயிலவு
மதக்கரி நெடுந்தேர் வாம்பரி யூர்ந்தோர்
பதத்தழற் பாலைப் பாற்றனி செல்லவு
முரசுமுன் றிரட்டு முழுமணி முன்றி
லுரைசெய் முட்டுரு வோரிகூண் டொலிப்பவு
மொற்றை வெண்குடை யரசுறு மத்தாணி
முற்றெருக் கெழுந்து முதுமுரம் பாகவுங்
கண்டு மானிடர் காமுறு செல்வ
முண்டெனக் கருதுவ தோழிநீ மனனே.

என்பது ஞாபகம் வந்தது. கடவுளவனே தீராச்செல்வத் திருவுடையா னென வழுத்தி யூர் திரும்பினேன்.

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர் பரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

இ ள ங் கீ ர ன்.

(o)

எயினந்தைமகன் இளங்கீரன் என்ற பெயருடையவரும் இவரே. வினைவயிற்பிரியுந் தலைவன் இடைச்சுரத்து நெஞ்சழுங்கலும், இல் லிடையழுங்கலும் ஆகிய பலவேறுதுறைகளை அமைத்துப் பாலைத்திணை யைச் சுவைபடக்கூறும் ஆற்றலுடையார். இவர் வேட்டுவர்குலத்தினர் எனக் கருதுவர். எயின் + தந்தை = எயினந்தை—அவர்மகன் இளங் கீரன் என்க. அகத்தில் [239] தலைவி பிறைதொழுதேத்தலைக் குறிக் கின்றார். மருதத்திணையில் அமையவேண்டிய கருப்பொருள்சிறந்த நற்றிணை 269 ம். பாட்டைப் பாலைத்திணையில் அமைத்துப்பாடுதல் நோக்கத்தக்கதொன்றும். இவர் வாக்கில் அமைந்த,

"ஏர்மட்செய்கைநீர்படுபசுங்கலம்
பெருமழைப்பெயற்கேற்ருங்கு" [308-9-10 அடி.]

என்ற அடிகள் "பசுமட்கலத்துள் நீர்பெய்திரீஇயற்று" என்ற குறளை [வினைத்தூய்மை. 10] நினைப்பூட்டுகின்றன.

வேள்விக்குண்டத்தின்கீழ் யாமையை வைத்துமூடும் வழக்கினைக் கூறுவார் இவரே [அகம். 361]. பல்லியடிப்பது நல்வாக்கு எனக் கொண்டு தலைவிவேண்டுவதாகக் கூறியது நோக்கத்தக்கது [அகம். 289]. பொறையனது கொல்லிமலையை [நற்றிணை. 346] ப் பாராட்டியுள்ளார்.

இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய மூன்றும் அகத்தில் ஒன்பதும் [3, 225, 239, 289, 299, 361, 371, 395, 399] கிடைக்கின்றன.

உ

செய்யுட்பொருத்த விலக்கணம்.

இது, செய்யுளுக்குரிய பத்துவகைப்பொருத்தத்தை யுணர்த்துகின்றது. பழந்தமிழ்நூல்கள் செல்லின்வாய்ப்பட் டழிந்துபோகாமலவைகளைப் போற்றவேண்டுமென்னும் நோக்கங்கொண்டுள்ளேன். ஆதலால் ஒருபழைய வேட்டுப்பிரதியிலிருந்த இந்நூலை எனது சிற்றறிவுக்கெட்டியவரை ஆராய்ந்து வெளியிடுகின்றேன். சிற்றறிவுடையேனாயிருந்தாலும் எனது முயற்சி தமிழ்முயற்சியாயிருத்தலின், செந்தமிழறிஞர்கள் இதனையும் அங்கீகரித்து இன்னும் பலபனுவல்களையும் வெளியிடும்வண்ணம் என்னை ஊக்கப்படுத்துவார்களென்பது எனது நம்பிக்கை.

நூல்.

பொருத்தவியல்.

1. முதன்மொழிப்பொருத்தம்மொழிந்திடுங்காலை
மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம்பாலுணைக்
கதிவருணநாட்கூறிகணமீரைந்தே.

செய்யுட்கெல்லாம் பொதுவாய்ச் சில விலக்கணங்களை யுணர்த்துவான்றொடங்கினும். செய்யுட்கெல்லாம் முன்மொழியிடத்துப் பல்

வகைப்பொருத்தம் வேண்டுவதாகவிதித்தார் முன்னோர். அவையே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப் பத்துவகைப்படும்.

பகர்செய்புண்மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம்
பாலுண்டிவருணநாட்கதியேயென்றுப்
புகரில்கணமெனப்பத்தும்பிறங்குகேள்விப்
புலவர்புகழ்முதன்மொழிக்குப்புகல்வர்செம்பொற்
சிகரகிரியெனப்பணைத்துப்புடைத்துவிம்மித்
திரண்டெழுந்துவளர்ந்திளகிச்செறிந்தகொங்கைத்
தகரமலர்க்குழற்கருங்கட்குமுதச்செவ்வாய்ச்
சரிவளைக்கைக்கொடியென்னத்தபங்குமாதே.

என்பது மேற்கோள்.

மங்கலப்பொருத்தம்.

2. மங்கலப்பொருத்தமேகங்கைமலைநிலம்
கார்புயல்பொன்மணிகடல்சொற்கரிபரி
சீர்புகழெழுத்தலர்திங்கடினகரன்
றேர்வயலமுதந்திருவுலகாரண
நீர்பிறவருமுதனிலைச்சொலியல்பே.

(இ - ள்). கங்கை, மலை, நிலம், கார், புயல், பொன், மணி, கடல், சொல், கரி, பரி, சீர், புகழ், எழுத்து, அலர், திங்கள், தினகரன், தேர், வயல், அமுதம், திரு, உலகு, ஆரணம், நீர் என்று சொல்லப்படுகின்ற இருபத்துநாற்சொல்லு மித்தொடக்கத்தன பிறவும் மங்கலச்சொல்லெனவும் செய்யுண்முதற்சொல்லெனவும் பெறும். பிறவென்றமிகையால் ஈண்டுக் குறிக்கப்பட்டவற்றின் றிரிசொல்லெல்லா மேற்கு மென்றுணர்க.

கங்கையென்பதற்கு மந்தாகினி, சுரநதி, சானவி, பகீரதி யென்பனவு மேற்கும். இவ்வகைச்சொல்லினொன்றே முதற்சொல்லாக வினையாதாயின் மங்கலச்சொல் வழுவெனப்படும்.

அங்ஙனம் கம்பர் "உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்" என்றார். திருவள்ளுவர் "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்றார். பிறவுமன்ன.

ஆயினும் அச்சொற் றுமேவாராமல் அவற்றவற்றடுக்கிய பல அடைமொழியேவரினும் ஏற்குமென்றுணர்க. சிந்தாமணியில் "மூவா முதலாவுலக" மெனவும், நைடதத்துள் மழை முதல்வாராமற் "கருவி மாமழை" எனவும் முதற்சொல்லாக மங்கலச்சொற் கடைமொழியே வந்தவாறு காண்க.

மே—ள். "மாமணிகேர்புகழமுதமெழுத்துக்கங்கை
மதிபரிதிகளிறுபரியுலகஞ்சீர்நாட்
பூமலைகர்திருக்கடனீர்பழனம்பார்சொற்
பொன்றிகிரிபிறவுமுதன்மொழிச்சீர்க்காகு
நாமவகையுளிசேர்தல்பொருளதின்மை
நலமிலதாய்வைத்தல்பலபொருளாய்த்தோன்ற
லாயினியசொல்லீறுதிரிதல்போல்வ
வாதிமொழிக்காகாவானந்தமாமே."

3. சொல்லின்பொருத்தஞ்சொல்லுங்காலை
யரிதுணர்சொல்லுமருந்திரிசொல்லுந்
திரிபுடைச்சீருந்தீதாமுதற்கே.

சொற்பொருத்தமாமாறுணர்த்துதும். செய்யுண்முதற்கண் மங்கலச்சொல்லேவரினும் கற்றவாறு மெளிதிற்புலப்படாச்சொல்லும் ஐயமாகப் பலபொருள்குறித்த வரிய பயன்றிரிசொல்லும் முதற்சீற் றெழுத்துச் சந்திவகையாற்றிரிந்தசொல்லு முடையசீர் முதற்கண்வரின் வழுவாமெனக்கொள்க.

வரலாறு:— சீரிமருவுந்திருநிழற்சோலையென்பதில் அரி என்னுஞ் சொல் சிங்கமோ, வண்டோ, பன்றியோவென்றுதோன்றுமையத்தாலாகா. கடறவாழுலகம் எனினுங் தேநருநீதருமெனினு மீற்றுத்திரிபினாலாகா.

"வகையுளிசேர்தல்வனப்பின்றாய்நிற்ற
றொகையார்பொருள்பலவாய்த்தோன்ற—றகையில்
பொருளின்மையீறுதிரிதலேபோல்வ
தருமுதற்சீர்ச்சொற்காகுந்தப்பு.

என்பதுமேற்கோள். பிறவுமன்ன.

(இன்னும்வரும்)

ந. பத்மாசனி அம்மாள்.

பிழையுந் திருத்தமும்.

சமீபத்தில் வெளிவந்துள்ள திருவள்ளுவர் நூல்நயம் என்ற புத்தகத்தில் திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்ற பகுதியில், "கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—வேட்ப மொழிவதாஞ் சொல்" என்றதற்குப் பரிமேலழகர் சிதைத்துப்பொருள்கொண்டார் என்றுகூறி, 'கருதியவினை முடியுமாற்றால் வார்த்தைசொல்ல வல்லனாதல்' என்ற பொருளுடைய 'சொல்வன்மை' யென்ற அதிகாரத்திற்குப் பொருத்தமாக உரையாசிரியர்கொண்டபொருளைப் போற்றாமலும், கேட்டார் என்னும் இறந்தகாலவினையாலணையும்பெயர் தாம் கொள்ளும் பொருளுக்கு மாறுபட்டிருப்பதை யறியாமலும் பிறிதோருரையுங் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும், 'பரிமேலழகர் கேட்டார் என்பதனைக் கேள்+தார் என்று பிரித்துக் கேண்மையுடையவர் அல்லது நட்பாளர் என்று பொருள்கொண்டு அவ்வாறே கேளார் என்னும் பதத்திற்குப் பகைவர் என்று வலிந்து பொருளுரைத்தார்' என்றுங்கூறப்பட்டிருக்கிறது. அவர் அவ்வாறு கொள்ளவில்லையென்று காட்டுகிறேன். கேட்டார் கேளார் என்பன கேள் என்ற பண்படியாகப்பிறந்து, கேண்மையுடையவர் பகைவர் என்ற செம்பொருள்கொண்டு நிற்பன வென்று பரிமேலழகர் கருதவில்லை; கேள் என்னும் வினைபடியாகப்பிறந்த வினையாலணையும் பெயராகவும், ஏற்றுக்கொண்டார் ஏற்றுக்கொள்ளாதார் (ஒப்புக்கொண்டார் ஒப்புக்கொள்ளாதார்) என்ற செம்பொருள்பட்டு நிற்பனவாகவுமே அவற்றைக் கருதினார். இச்சொற்கள் இப்பொருளில் இருவழக்கினும்பயின்று வருதல் தமிழறிஞர் யாவரு மறிந்ததே. இக்குறளின் பதவுரையில் நட்பாய் பகையாய் என வந்துள்ளவை, ஏற்றுக்கொண்டார், ஏற்றுக்கொள்ளாதார் என்பவற்றிற்கேற்ப வருவித்த சொற்களேயாம். அன்றியும், கேண்மையுடையார் பகைவர் என்றபொருளில் உடன்பாடும் எதிர்மறையும்பற்றிக் கேளென்ற பண்படி பலர்பாலில் கேளிர் கேளலார் என வருதலன்றிக் கேட்டார் கேளார் என வருமாறில்லையென்பது பரிமேலழகருக்கு நன்கு புலப்படுவதாம்.

இனி, இக்குறள்சம்பந்தமான ஒருமைப்பன்மைமயக்கத்திற்கு உதாரணமாக அங்கு "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" என்ற குறள் காட்டப்பட்டது. அக்குறளில் அம்மயக்கமின்மை அதனுரைநோக்கித் தெளிக.

ஸத்தியவாகீசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்.

புத்தபகவான்.

184. அரியேறு முன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீழ்ப்—பெரியோன்
அடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

185. வடிமலர்த்தார் நாகர் மணிக்கவரி வீச
முடிமலர்த்தேம் போதிமையோர் தன்னடிக்கீழ்ப் பெய்ய
இனிதிருந்து நல்லறஞ் சொல்லியா னெல்லாத்
துனியிருந்த துன்பந்தீர்ப் பான்.

(வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.)

186. திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
உருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வான்
இவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருணீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ன
விலங்குகதி ரோரிரண்டும் விலங்கிவலங் கொண்டுலவ
அலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ! (தரவு)

மேருகிரி யிரண்டாகு மெனப்பணைத்த விருபுயங்கண்
மாரனிதை யாவேட்டு மன்னுபுர மறுத்தனையே;

வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலைநாட்
பூண்டவரு ளாளநின் புகழ்புதிதாய்க் காட்டாதோ;

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே;

பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவனீ யென்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ;

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பாந்தள்
அழலடைந்த பணத்திடையிட் டன்றுதலை யேறினையே;

மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதியநின்
அருள்பாரா வதவுயிர்க ளனைத்திற்கு மொன்றுமோ; (தாழிசை)

அருவினை சிலகெட வொருபெரு நரகிடை
எரிசுடர் மரைமல ரெனவிடு மடியினை;

அகலிட முழுவது மழல்கெட வமிழ்துமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை; (அராகம்)

(184) மணி. பதி. இறுதி. (185) யாப். வி. 61. (186) வீரசோ. யாப். 11. உரை.

அன்பென்கோ வொப்புரவென் கோவொருவ னயில்கொண்டு
முந்திவிழித் தெறியப்பால் போந்தமுழுக் கருணையை ;

நாணென்கோ நாகமென்கோ நன்றியில்லான் பூணுந்
தீயினைப் பாய்படுத்த சிறுதுயில்கொண் டருளினை ;
(ஈரடி இரண்டம்போதரங்கம்)

கைந்நாகத் தார்க்காழி கைக்கொண் டளித்தனையே;
பைந்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே ;
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே ;
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே ;
(ஓரடி நான்கம்போதரங்கம்)

எனவாங்கு, (தனிச்சொல்)

அருள்வீற் றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதுந் தொழுதக
ஒருமன மெய்தி யிருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்
தோங்குநீ ருலகிடை யாவரும்
நீங்கா வின்பமொடு நீடுவாழ் கெனவே. (சுரிதகம்)

187. பூமகனே முதலாகப் புகுந்தமா ரெண்டிசையும்
தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவியநாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்புமோ றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே; (ஆறடித்தரவு)

தானமே முதலாகத் தசபார [1]மிறைத்தருளி
யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே;

எண்பத்தொன் பதுசித்தி யியல்பினு ளுளவென்று
பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே;

துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
முப்பதின்மே லிரண்டுகலை முறைமையான் மொழிந்தனையே;
(இரண்டடி மூன்று தாழிசை.)

ஆதியு மிடையினோ டிறுதியு மறிகுவ
தமாரு முனிவரு மரிதநின் னிலைமையை;
மீதியல் கருடனை விடவர வொடுபகை
விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை;

(187) வீரசோ. யாப். 11 உரை. [1]மிசைபத்தும்.

தீதியல் புலியது பசிகெடு வகைநின
திருவுரு வருளிய திறமலி பெருமையை;
போதியி னறமலி திருநிழ லதுநனி
பொலிவுற வடியவ ரிடர்கெட வருளினை; (நாலடி அராகம்)

திசைமுகன் மருவிய கமலந னிறமென
வசையறு முனிவொடு [1]மலியு நின்னடி;

உயர்வுறு பெருமையொ டயரறு மயர்வொடு
புரையறு நலனொடு [2]பொலியு நின்புகழ்;

(ஈரடியிரண்டாய்வந்த பேரெண்.)

கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை ;
பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை ;
மீனுரு வாகி மெய்ம்மையிற் படிந்தனை ;
மானுரு வாகி வான்குண மியற்றினை ;

(ஓரடிநான்காய்வந்த சிற்றெண்)

எண்ணிறந்த குணத்தோய் நீஇ ; [3]யாவர்க்கு மரியோய் நீஇ ;
உண்ணிறைந்த வருளோய் நீஇ; உயர்பார [4]நிறைத்தோய் நீஇ ;
மெய்ப்பொருளை யறிந்தோய் நீஇ ; மெய்யறமிங் களித்தோய் நீஇ ;
செப்பரிய தவத்தோய் நீஇ ; [5]சேர்வார்க்குச் சார்வு நீஇ ;

(முச்சீரினால் வந்த இடையெண்)

நன்மை நீஇ ; தின்மை நீஇ ; நனவு நீஇ ; கனவு நீஇ ;
வன்மை நீஇ ; மென்மை நீஇ ; மதியு நீஇ; விதியு நீஇ ;
இம்மை நீஇ ; மறுமை நீஇ; இரவு நீஇ ; பகலு நீஇ ;
செம்மை நீஇ ; கருமை நீஇ ; சேர்வு நீஇ ; சார்வு நீஇ ;

(இருசீர் பதினாறாய் வந்த அளவெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

[6]அனக நின்ற னடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டைமான் விறற்சே னாபதி
சிங்களத் தரையன் வெண்குடை யதனொடு
பொங்குபுகழ் வில்லவன் புறக்கொடை கண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே. (சுரிதகம்)

---

[1]மலிவுறு. [2]பொலிவுறு. [3]யாவர்க்கும் பெரியோய்நீஇ. [4]முறைத்தோய்நீஇ.
[5]சேர்ந்தவர்க்குச் சார்ந்தோய்நீஇ. [6]அலகிலா.

(அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.)

188. மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவரும்
கண்வாழு மாநாகர் கிளையனைத்துங் களிகூர
அந்தரதுந் துபியியங்க வமரர்க ணடமாட
இந்திரர்பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
முத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியா சரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்!
(தரவு)

எறும்புகடை யயன்முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று விடரெய்தின்
அவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்;

அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரைகதிருஞ் செழுங்கமல நனிநாண
ஒருமைக்க ணீரொன்பா னுரைவிரிப்ப வுணர்பொருளால்
அருமைக்கண் மலைவின்றி யடைந்ததுநின் றிருவார்த்தை;

இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் றிருமேனி;
(இவை மூன்றுந் தாழிசை)

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டாய்
ஓருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்;

தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே [1]முனைந்துலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்;
(பேரெண்)

போரரக்க ரோரைவர்க் கறவமிழ்தம் பொழிந்தனையே;
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே;
வார்சிறைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே;
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே; (சிற்றெண்)

அருளாழி நயந்தோய் நீஇ;
அறவாழி பயந்தோய் நீஇ;
மருளாழி துரந்தோய் நீஇ;
மறையாழி புரந்தோய் நீஇ;

---

(188) வீரசோ. யாப். 11 உரை. [1]முனைந்தொலைத்தாற்.

மாதவரின் மாதவ னீஇ ;
வானவருள் வானவ னீஇ ;
போதனரிற் போதன னீஇ ;
புண்ணியருட் புண்ணிய னீஇ ; (இடையெண்)

ஆதி நீஇ ; அமல னீஇ ; அயனு நீஇ ; அரியு நீஇ ;
சோதி நீஇ ; நாத னீஇ ; துறைவ னீஇ ; இறைவ னீஇ;
அருளு நீஇ ; பொருளு நீஇ; அறிவ னீஇ; அனக னீஇ ;
தெருளு நீஇ ; திருவு நீஇ ; செறிவு நீஇ ; செம்ம னீஇ ;
(இடையெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையு முலகிற் சிறந்துவாழ் கெனவே ; (சுரிதகம்)

189. ஆதியங் கடவுளை யருமறை யருகனை
[1]போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
சேதியஞ் செல்வநின் றிருவடி தொழுதனம் ;

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும் ;

ஆரருள் பயந்தனை யாழ்துயர் தவிர்த்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருண் மொழியைநின் றிருவடி தொழுதனம்.

190. வாடாப் போதி மரகதப் பாசடை
மரநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் றீந்தே [2]னிறைந்துநனி ஞெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கிநிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில [3]வாயின்
யாதோ மற்றது [4]மெல்லிய வாறே.

---

(189) யாப். வி. 15. [1]'போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய' என்ற ஓரடி மிகுதியாகக் கண்டபாடலு மூண்டு (ஷை. 52). (190) தொல். பொருளதி. 75, நச்; வீரசோ. பொருட் 19 உரை; [2]னுறைப்பநனி. [3]வாகலின். [4]மேவிய.

191. பாசடைப் போதிப் பேரருள் வாமன்
வரையா வீகை போல யாவிரும்
கொடைப்படு வீரக் கொடைவலம் படுமின்
முன்னை யொருமுறைத் தன்னுழை யிரந்த
அன்பி லரக்கர்வேண் டளவும் பருக
என்புதொறுங் கழிப்பித்தன் மெய்திறந்து வாக்கிக்
குருதிக் கொழும்பதங் கொடுத்தது மன்றிக்
[1]கடுந்துயர்ப் பட்ட கள்ளப் புறவின்
மாய யாக்கை [2]சொல்லிய தாற்றன்
[3]உடம்பு நிறுத்துக் கொடுத்தது மன்றி.

192. புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனுஅது
முலைமருக் குழவி வாங்கி வாய்ப்படுத்
திரையெனக் கவர்ந்தது நோக்கி யாங்க
வேரிளங் குழவிமுன் சென்று [4]தானக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் [5]போதி மேவிய பெருந்தகை
ஆருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே.

193. வேத முதல்வ வேதமி லகணித
தத்துவர் தலைவ முத்தி முதல்வ
வழுவா ஞானக் குழுவுடன் வந்து
துன்னுப் பாவ மன்னரை யவித்த
தரும நேமிப் [6]பரமனென வியந்து
துன்னின ராகி மின்னென மிளிர்ந்த
தகைமுடி சாய்த்துச் [7]சத்துவர் வணங்குப
வகைமுடி வல்வினை வாடுக வெனவே.

194. உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறாமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றின னாதலின்
ஈன்றோ ளேழ்நா ளின்னுயிர் வைத்தாள்.

---

(191) வீரசோ. பொருட் 19 உரை. [1]கருசிமிட். [2]சோலிய, கோலிய. [3]உடம் பறுத்து. (192) ஷெ. ஷை: [4]காணக். [5]போதிப்பேரருள் வாமன். (193) யாப். வி. 52: [6]பிரமனென. [7]தத்துவர். (194) விம்பசாரகதை (மணி. பக். 367).

195. முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் [1]குணமேமொழிந் தான்ற னக்கென்
றொன்றானு [2]முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்க ளன்றே.

196. அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்றன்
அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ.

197. கண்கொடுத்தா னடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான்
பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான்
மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு
விண்கொடுத்தா னவன்கொடுத்த விரித்துரைப்பன் கேளென்றாள்.

198. எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த வுலகங்க ளிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி
யெண்ணிகந்த குணத்தினா னெம்பெருமா னல்லனே.

199. தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய
வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல [3]வ்ரதமேவி வாய்மை
குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்த ஞான மிலரே.

200. எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதளிர்கள் சோதி முழுதுலகு நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழைமருவு போதி யுழைநிழல்கொள் வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர்க ளாண
வெறிதழல்கொண் மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக பாத நமசரண மாகு
மெனமுனிவர் தீமை புணர்பிறவி காணார்.

---

(195) வீரசோ. யாப். 3 உரை: (குண்டலகேசி, கடவுள்வாழ்த்து) [1]குண மொழிந்தான். [2]மில்லான். (196) சித்தாந்தத்தொகை. (197, 198.) நீலகேசி, சமயதிவாகரருரை. (199, 200) வீரசோ. யாப். 3. உரை; [3]விதமேவி.

201. அருந்தவர்கட் காதியா யைய நீக்கி
யவ்வியந்தீர்த் தவிரொளிசே ராக்கை யெய்தி
யிருந்திரட்கை யினமருப்பின் யானை யூர்தி
யீரைஞ்ஞூற் றெழிஞட்டத் திமையோ னேத்த
வொருங்குலகி னூல்கற்றோ ரோத முந்நீ
ரொளிவளர வறம்பகர்ந்த வுரவோன் பாதம்
கருங்கயற்கட் காரிகையார் காத னீக்கிக்
கைதொழுதாற் கையகலுங் கவ்வை தானே.

202. வீடுகொண்டநல்லறம்பகர்ந்துமன்பதைக்கெலாம்
விளங்குதிங்கணீர்மையான்விரிந்திலங்குமன்பினோன்
மோடுகொண்டவெண்ணுரைக்கருங்கடற்செழுஞ்சுடர்
முளைத்தெழுந்தெதன்னலாய்முகிழ்ந்திலங்கு [1]சோதியான்
நாடுகின்றழுவகைப்பவங்கடந்துகுற்றமா
ன[2]வைந்தடங்கழூன்றறுத்தநாதனுண்மலர்த்துணர்ப்
பிடிகொண்டவார்தளிர்ப்பிறங்குபோதியானையெம்
பிரானைநாளுமேத்துவார்பிறப்பிறப்பிலார்களே.

203. பைங்கண்வாளெயிற்றினப்பகட்டெருத்தின்வன்னுகிர்ப்
பரூஉத்திரட்குரூஉக்கொடாட்பாலுடைச்செனுவுடைச்
சிங்கவேறுநான்குதாங்கமீதுயர்ந்தசேயொளிச்
சித்திரங்குயிற்றிநாறுசெம்பொனாசனத்தின்மேற்
கொங்குநாறுபோதுசிந்திவானுளோரிறைஞ்சிடக்
கோதிலாவறம்பகர்ந்தமர்ந்தகோன்குளிர்நிழற்
பொங்குதாதுகொப்புளித்துவண்டுபாடுதேமலர்ப்
போதியெம்பிரானடிக்கண்போற்றில்வீடதாகுமே.

204. கூரார் வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்தவெந்நோய் நீங்க
ஓரா யிரங்கதிர்போல் வாள்விரிந்த மேனி
யுளம்விரும்பிச் சென்றங் கியைந்தனைநீ யென்றாற்
காரார் திரைமுளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ்த் தண்சினைய காமருபூம் போதி
ஏரார் முனிவரர்கள் வானவர்தங் கோவே
யெந்தா யகோவுன்னை யேத்தாதார் யாரே.

---

(201) யாப், வி. 53. (202-204) வீரசோ. யாப். 3. உரை. [1]போதியின், [2]வைந்தொடங்கொர்.

(உற்கிருதிச் சந்தம்.)

205. மணிபிலகு செறிதளிரொ டலரொளிய நிழலரசின் மருவி யறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட வுரையருளும் பெரிய வருளோன்
துணியிலகு சுடருடைய வரசரொடு பிரமர்தொழு தலைமை யவர்மா
வணியிலகு கமலமல ரனையவெழி லறிவனிணை யடிக டொழுவாம்.

(வெளிவிருத்தம்.)

206. மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்.

(சக்கரக்கவி.)

207. மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோது சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பாய் வாரன் பகலாச்சீர்த்
தாயா யலகிலரு டான்

208. விளவாய போதியை யுறுமளவும் வினமடியான்
தளர்வின்றி யோடிய தாளிணை னல்லனே.

209. அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.

210. போதி நீழற்
சோதி பாதங்
காத லானின்
றோத னன்றே.

மகாபோதி.

211. பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே.

(205) வீரசோ. யாப். 33-உரை (206) ஷை. 15 உரை [1]டிலனால். [2]என்செய்
கோயான். (207) ஷை அலங்.3 9. (208) நீலகேசி சமய. (மணிமே பக். 368.)
(209, 210) வீரசோ. யாப். 33-உரை. (211) ஷை. ஷை. 8-உரை.

212. விண்ணவர் நாயகன் வேண்டக்
கண்ணினி தளித்த காதற்
புண்ணிய் னிருந்த போதி
நண்ணிட நோய்நலி யாவே.

துடிதபுரம்.

(உற்கிருதிச்சந்தம்)

213 தொழுமடிய ரிதயமல ரொருபொழுது பிரிவரிய
துணைவ ரெனலாம்
எழுமிரவி கிரணநிக ரிலகுதுகில் புனைசெய்தரு
ளிறைவ ரிடமாம்
குழுவுமறை யவருமுனி வருமரி பிரமருர
கவனு மெவரும்
தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தெழு
துடித புரமே.

மானவூர்.

214. வானும் பரியாயு மரிண மாயும்
வன்கேழற் களிறாயு மெண்காற் புண்மான்
றானும் பணையெருமை யொருத்த லாயும்
தடக்கையிளங் களிறாயுஞ் சடங்க மாயும்
மீனாயு முயலாயு மன்ன மாயு
மயிலாயும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க
மானாயுங் கொலைகளவு கட்பொய் காமம்
வரைந்தவர்தா முறைந்தபதி மான வூரே.

215. மிக்கதனங் களைமாரி மூன்றும் பெய்யும்
வெங்களிற்றை மிகுசிந்தா மணியை மேனி
யொக்கவரிந் தொருகூற்றை யிரண்டு கண்ணை
யொளிதிகழுந் திருமுடியை யுடம்பி லூனை
எக்கிவிழுங் குருதிதனை யரசு தன்னை
யின்னுயிர்போற் றேவியையீன் றெடுத்த செல்வ
மக்களைவந் திரந்தவர்க்கு மகிழ்ந்தே யீயும்
வானவர்தா முறைந்தபதி மான வூரே.

---

(212) வீரசோ. யாப். 3 உரை. (213) ஷை, ஷை. 33 உரை. (214) நீலகேசி. சமயதிவா. (மணிமே. பக். 60). (215) ஷை, ஷை. (மணிமே. பக். 125).

மன்மதன்.

216. கரும்பேதன் கைச்சிலையுங் காமர் கணையும்
அரும்பே சுரும்பேநா ணென்றாற்—பெரும்பேய்க்
கணத்தானைப் போர்வென்று காரிகையா ரோடும்
மணத்தான மேற்றுவித்தான் வந்து.

217. யானை யிரதம் பரியா ளிவையில்லை
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனார்
[1]மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு.

218. கலையெலா முதற்கணே கண்டு கொண்டுபெண்
கொலையினுங் கொடுந்தொழில் பூண்டு கோலவெஞ்
சிலையினற் செழுஞ்சரஞ் சேர்த்த செல்வனே
மலையமா ருதத்தொடும் வந்து தோன்றுமே.

ஆன் வாழ்த்து.

219. நாகின நந்தி யினம்பொலியும் போத்தென
வாய்வா ளுழவர் வளஞ்சிறப்ப வாயர்
அகன்றூர் சுரைய கறந்தபால் சீர்சிறந்த
வான்பொருள் வட்டத் தயிராகு மத்தயிர்
மெல்லக் கடைவிடத்து நெய்தோன்று நெய்பயந்து
நல்லமு தன்ன வளையாகு நல்ல
புனிதமு மெச்சிலு நீக்கித் துனியின்றி
யன்ன பெரும்பயத்த வாகலாற் றென்மரபிற்
காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி
ஆவா ழியரோ நெடியது.

புகார்ப்பூதம்.

220. முன்னா ளிந்திரன்......
காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த
வேட்கை யமுத மீட்க வெழுவோன்
இந்நகர் காப்போர் யாரென நினைதலும்
நேரிய னெழுந்து நீவரு காறும்

(216) வீரசோ. அலங். 12 உரை; (217) ஷை. ஷை. 31 உரை; தண்டி. 77 உரை; இலக். வி. 673. [1]மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான். (218) யாப். வி. 94. (219) தொல். பொரு. 82 உரை. (220) சிலப். 6, 7—13 உரை.

தார்கெழு மார்ப தாங்கலென் கடனென
உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைந்து
வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி
வளைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோன்
இருகணும் புதையப் பாய்தலி னொருகணும்
நெஞ்சங் காண நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்.

இரண்டாவது:

அறவியல்.

உறுதிப்பொருள்.

ஔவையார்பாட்டு.

221. ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் [1]கருத்தொத்துற்—றாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

பெறுதற்கருமை.

[ஔவையார் முருகவேள் கேட்கப் பாடிய அகவல்.]

222. அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூகையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே

(221, 222) தமிழ் நா. 30, 57. [1]கருத்தொருமித்.

ஞானமுங் கல்வியு நற்குறு மாயினும்
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே.

223. வினைபல வலியி னாலே வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி தம்முட் டுன்புறூஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரிய தாகுந் தோன்றுத ரோன்றி னாலும்
இனியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன தேயாம்.

224. உயர்குடி நனியுட் டோன்ற லூனமி லியாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வறிவே யாதல் பேரறங் கோட லென்றாங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்.

அறஞ்செயல்.

225. எளிதென விகழா தரிதென வுரையாது
நமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளரும்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கு முணர்த்தின்
இவணு மும்பருந் துணையே யதனாற்
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமி னறிந்திசி னோரே.

ஔவை பாட்டு.

226. ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வள வேனுமன்ன மிட்டுண்மின்—தெய்வ
மொருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளோந்து மறும்.

தானந் தவஞ் சீலம் பூசனைகள்.

227. மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளக்கும்
தக்க தானங்க டணப்பரும் போகத்தைப் பிணிக்கும்
தொக்க சீலங்க ளியக்கமி றுறக்கத்தைப் பயக்கும்
சிக்கென் பூசனை திகழொளிப் பிழம்பினைத் திருத்தும்.

(223, 224) வளையாபதி (புறத்.) (225) ஆசிரியமாலை (புறத்).
(227) யாப். வி. 83.

விலக்கியனவொழிதல்.

228. பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ருய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

229. கள்ளன் மின்கள வாயின யாவையும்
கொள்ளன் மின்கொலை கூடி வருமறம்
எள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையும்
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின்.

230. சொல்ல லோம்புமின் றோநனி
செல்ல லோம்புமின் றீநெறி
கல்ல லோம்புமின் கைதவம்
மல்லன் ஞாலத்து மாந்தர்காள்.

231. சொல்லல் சொல்லல் தீயவை சொல்லல்—என்ஞான்றும்
புல்லல் புல்லல் தீநெறி புல்லல்—என்ஞான்றும்
கொல்லல் கொல்லல் செய்ந்நலங்கொல்லல்—என்ஞான்றும்
நில்லல் நில்லல் நீசரைச் சார்ந்தங்—கென்ஞான்றும்.

232. நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொரு ளென்கும்
புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்
தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வருச் சுற்றம்
இன்மை மேவுவார் யாவரு மின்பமொன் றெய்தார்.

அறஞ்செய்தார்.

233. முழங்குதூரன் [1]முரசியம்ப முத்திலங்கு [2]நெடுங்குடைக்கீழ்ப்
பொழிந்தமதக் கருஞ்சுவட்டுப் பொறிமுகத்த களிறூர்ந்து
பெருநிலம் பொதுநீக்கிப் பெயராத பெருமையாற்
பொருகழற்கால் வயவேந்தர் போற்றிசைப்ப வீற்றிருப்பார்
மருள்சேர்ந்த நெறிநீக்கி வாய்மைசால் குணந்தாங்கி
அருள்சேர்ந்த வறம்புரிந்தா ரமர்ந்து.

(228, 229) வளையாபதி (புறத்) (230) யாப். வி. 92. (231) ஷை. 68. (232) வீரசோ. யாப். 17. (233) யாப். வி. 85; [1]முழவியம்ப. [2]வெண்குடைக்கீழ்.

அறஞ்செய்யாதார்.

234 தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதிக்கட் சுழல்வார் தாமும்
[1]மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே.

கற்புடைமகளிர்.

235. நாடு முரு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே.

236. தார நல்லிதந் தாங்கித் தலைநின்மின்
ஊரு நாடு முவகத லொருதலை
வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே.

கற்பின்மகளிர்.

237. பள்ள முதுநீர்ப் பழகினு மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறாஉம்
கள்ளவிழ் கோதையர் காமனொ டாயினும்
உள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ.

238. உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.

239. தளிப்பெயற் றண்டுளி தாமரை யின்மேல்
வளிப்பெறு மாத்திரை நின்றற் றொருவன்
அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார்.

240. எத்துணை யாற்று ளிடுமெண ணீர்த்துளி
புற்பனி யுக்க மரத்திலை நுண்மயிர்

---

(234) யாப். வி. 94; யாப். கா. ஒழி. 7 மேற்; நன், 415, மயிலை, உரை
[1]மூழ்ந்து. (235-240) வளையாபதி (புறத்).

அத்தனை யும்பிற ரஞ்சொலி னார்மனம்
புக்கன மென்று பொதியறைப் பட்டார்.

241. தலைமகனிற் றீர்ந்தொழுக றன்பிறரிற் சேறல்
நிலைமையி றீப்பெண்டிர்ச் சார்தல்—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்ட னோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு.

பிறர்மனை நயவாமை.

242. பெண்ணி னாகிய பேரனர் பூமியுள்
எண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினு மேதில்பெண் ணீக்குமின்.

புதல்வரைப் பெறுதல்.

243. பொறையிலா வறிவு போகப் புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே.

அன்புடையார்.

244. நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று [1]முனிவ செய்யார்
அன்பு வேண்டு பவர்.

245. சொல்லுப சொல்லப் பெறுபவே யாதொன்றுஞ்
சொல்லாத சொல்லப் பெறு.

246. எல்லாரு மெந்தமக்கே
நல்லறிவே யுளவென்பார்
நல்லார்க ணனிதெரியிற்
கல்லாருங் கற்றாரும்
சொல்லாலே வெளிப்படுவர்
அதனால்,
மண்மிசை மாண்ட கற்பின்
விண்ணோர் வீடு விளக்குமா லறவே.

(241) தொல். பொரு. 154 நச். (242, 243) வளையாபதி (புறத்). (244) யாப். வி. 15, 66; வீரசோ. யாப். 15 உரை; இலக். வி. 731 உரை; [1]முனிவு செய்யார், முனிவுசொல்லார். (245) யாப். வி. 53, 57; (246) ஷை. 15.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோற்காரி௵ பங்குனிமீ [பகுதி ரு.
Vol. XXII. March-April-1924. No. 5.

பெருங்கதை.

இப்பெயர்படைத்தோங்கிய மாப்பெருங் காப்பியம் நெடுங்காலமாகப் பயில்வாரின்றி, ஸ்ரீகோசத்தறையுட் புதைந்துமறைந்துபுதையல் நிதியா யிருந்ததை அறிந்து, அஞ்சனந்தீட்டியாராய்ந்து, படியெடுப்பித்துப் பலபடப்பெருக்கி, தமிழவறிஞ ரெல்லோரும்பெற்றுத் தமிழ்ப் பெருஞ்செல்வராய்வாழுமாறு சிந்தாமணிதந்ததுபோலத் தந்தருளும் ஸ்ரீமந் மஹாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களுக்கு இத்தமிழுலகம் செய்யத்தக்க கைம்மாறு என்னென்றுசொல்லற்பாலது; "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்றலரிது" என்ற பொய்யாமொழி பொய்ப்பதோ ?

அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்துள், இடைச்சங்கப் புலவராற்செய்யப்பட்ட "கலியும், குருகும், வெண்டாளியும்முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்துசெய்த உதயணன்கதை" என்றமையானும், வீரசோழியவுரையுள், "குண்டலகேசியும், உதயணன்கதையும் முதலாகவுடையவற்றில், தெரியாதசொல்லும் பொருளும வந்தன வெனின்........அவைசெய்தகாலத்து அச்சொற்களும் பொருள்களும் விளங்கியிருக்கும்" என்றமையானும், இக்காப்பியம் மிகப் பழமைவாய்ந்த தென்று விளங்கும்

இன்னும், "திருத்தக்க மாமுனிசிந்தாமணியுங்கம்பர், விருத்தக் கவித்திறமும்வேண்டேம்—உருத்தக்க, கொங்குவேண்மாககதையுங் கூறேங்குறளொனுகேம்" என்னும் பழம்பாட்டினுள், சிந்தாமணி திருக்குறள்களோடொப்புவைத்து இந்நூல் எண்ணப்பட்டிருப்பது

கருத்து செந்தமிழ்

கொண்டும், இது, சொன்னயம், பொருணயம், தொடைநயம், நடைநயம் தொனியும் முதலிய பலநயங்களும் பொருந்தியதென்பதும் அறியலாம்.

இவ்வாறாகப் பழமையும் பெருமையும்வாய்ந்த இம்மாப்பெருங் காப்பியத்தின்வரலாறுமுதலியவற்றையும், இந்நூலா லுய்த்துணர்ந்து கொள்ளக்கிடக்கும் ஒழுக்கமும், வழக்கமும், நீதியும், நிலைமையும், நடையுடைமுதலிய பலவகைநிகழ்ச்சியும், ஆராய்ந் திடர்ப்பட்டறிய வேண்டாது யாவரு மெளிதினுணர்ந்துகொள்ளுமாறு தெளிவுபெறக் காட்டிய முகவுரையோடு, இந்நூலாசிரியர்வரலாறும், இந்நூலைப்பற்றிய அருமையான பலகுறிப்புக்களும், அபிதானவிளக்கமும், பிறவு மாராய்ந் தெழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

இக்காப்பியத்தலைவனை உதயணனது சரித்திரச்சுருக்கமொன்று இனியதமிழ்நடையில் எல்லோரும்படித்துணரும்படி ஆங்காங்கமைத் தற்குரிய நூலகத்துள்ள அகவலடிகளை யிடையிடையேயெடுத்துக் கொடுத்து இருநூறுபக்கம்வரை அழகிதாயெழுதியிருப்பது அகமகிழத் தக்கது.

இந்நூலின் முன்னும் பின்னும், இடையும் இல்லாத பாட்டுப் பகுதிஅடிகளைப் புள்ளிகளிட்டுக் காட்டி, உள்ளனவற்றை ஐந்நூறு பக்கங்களி லமைத்து, இவற்றிற்குக் குறிப்புரையும், அரும்பதமுதலிய வற்றின்அகராதியும், ஆராய்ச்சிபாலறிந்த பிறவும் நானூறுபக்கங்கள் அச்சிட்டுச்சேர்த்து முழுதும் ஆயிரம்பக்கம்அடங்கிய பெரியபுத்தக மாக்கி வெளியிட்டிருக்கும்பெருமை பிறிதொன்று லளவிடத்தக்க தன்று; "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்" என்பது சான்று. "பெருமையுடையவ ராற்றுவார் ஆற்றின், அருமை யுடைய செயல்" என்பதும் ஈண்டறியத்தக்கது.

இவ்வாறாகத் தமிழகத்துள்ள அரும்பெரும் பழங்காப்பியம் பல வற்றையும் ஆராய்ந்தச்சிட்டுபகரித்து வரும்ஐயரவர்களுக்குமேன்மேலும் ஆயுளும், ஆர்றலும், சுகவாழ்வும் வளர எல்லாம்வல்ல ஸர்வேசன் திருவருள்புரிவாராக.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

தாய்மொழியை வளர்த்தல்.

இத்தலைத்தொடர், 'மொழி என்பது யாது? தாய்மொழி என்பதன் பொருள் என்னை? நமது தாய்மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? ஏன் வளர்த்தல் வேண்டும்? வளர்க்காவிடில் வரும் இழுக்கென்னை? வளர்த்தலால்வரும் பயன் யாது?' என்ற பலபகுதிகளாக்கிக் கூறுவதால் ஒருவகையாக விரித்துரைக்கப்படலாம். ஆதலின், அம்முறையிற் சிறிது கூறுவேன்.

மொழி.

இது, மக்களாவார் ஒருவர்கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக்கருத்துக்களைத் தாமுணர்வது மாத்திரம் அன்றித் "தா மின்புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச்செய்யும் பெருமையினை ஒவ்வொருவருக்கும் தரவல்லது; செவிப்புலனும் அனுவாகிய ஒலிநுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படுவது.

தாய்மொழி.

உலகம் பலவேறுநாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக்கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்துகொள்ளவேண்டியதும் இன்றியமையாததொன்றும். ஆதலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம் தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவத்தக்கவகையில் தனித்தனி மொழிகளைப் படைத்துக்கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக்கொண்டமொழியே அந்த அந்த நாட்டினர்க்குத் தாய்மொழியாவது, இதனை நாட்டுமொழி, நிலத்துமொழி என்றும்:

தேசபாஷை என்றும் கூறுப. இதனை, "நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; இன்பிலும் துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது" எனக் கூறிச் சிறப்பிப்பர் அறிஞர். "தாய்மார்கள் இயல்பாகப்பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்" என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினர் மகாத்மா காந்தி அடிகளும்.

நமது தாய்மொழி.

நாம் என்றசொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத்தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம்; எனினும், இங்கு, யான் இதற்குக்கொண்ட பொருள் 'தண்டமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். கடவுளருளால் நமக்குத் தாய்மொழியாக அமைந்துள்ளது, "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" எனச் சிறப்பிக்கப்பெற்ற செந்தமிழ்மொழியாம் என்பதும் போதரும்.

தமிழ்மொழியின் தொன்மையும், மேன்மையும்.

செந்தமிழாம் தெய்வமணங்கமழும் நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளியநடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது, நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மரபுநிலைதிரியாது எவரையும் இனிது உணர்ந்துகொள்ளச் செய்யவல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலுந்தோறும் புதுப்புதுக்கருத்துக்களைத் தோற்றுவிப்பதும்ஆகிய தொல்காப்பியம் முதலிய பலசிறப்புற்ற இலக்கணநூல்களையும்; இயற்கையின் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினோருடைய அரிய சரித்திரங்களை வரலாற்றுமுறையுடன் அறியத் துணைசெய்யக்கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகைநூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில்விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்திவருவதும், வடமொழி ஆங்கிலம் முதலிய பலமொழியாளரும் மொழிபெயர்த்துக்கொள்ளும் பெருமையினைப்பெற்றதும், எம்மதத்தின

ரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள்போன்ற பல நீதிநூல்களையும்; புதுப்புதுக் கற்பனைகள் நிறையப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம்போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறுகூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர்புராணம்போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும் 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினராற் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிர்க்குச்செறிந்து ஆனந்தக்கண்ணீர்சொரியும்வண்ணம் செய்துவருவனவும், பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பெருக்கெடுத்துவெள்ளம்போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், திருவருட்பாப்போன்ற அருளிச்செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதிநூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத்துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும், கருத்துக்களையும் தம்மகத்துக்கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்றுமுறைப்படி எளிதிற்புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம்போன்ற பல சிறு காப்பியங்களையும்; தண்டமிழ்மூதாட்டியாம் ஒளவையின் பலதிறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞானநூல்களையும்; மருத்துவநூல்களையும், சோதிடநூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச் சேர்த்துக்கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது தன்னைத் தாய்மொழியாகக்கொண்ட ஓர் அரசனையும்; பல ஜமீந்தார்களையும்; பலமடாதிபதிகளையும்; பல நூறு பெரும் பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இருநூறுலட்சம் மக்களையும்; பல தர்மஸ்தாபனங்களையும்; பலகழகங்களையும்; பல ஸ்தல சுயஆட்சிஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம்மும்முறை வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை, ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப் பலதுறைகளினும் காலத்திற்கேற்றவாறு உயர்த்துகின்ற பல பத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன்பெருமை? அஃது இவ்வளவோடுநில்லாது வளர்வதற்

கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமைபொருந்திய, உலகவழக்கி லுள்ள, பேசுமொழியாகவும் இருக்கின்றது. இந்த, இதைப்பற்றிப் பன்னிப்பன்னிப் பல கூறலாம். எனினும் அங்ஙனம் மிகைபடக் கூறாது, இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920) களுக்கு முன் னர்த் திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்ற சென்னைமாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டத்தில் அதன் வரவேற்புக் கழகத்தலைவர், ஆண்டுக்குழுமிய புலவர் பலர்க்கும் நல்வரவுகூறுகையில் மொழிந்தவற்றுள், சிலவற்றைக் குறிக்கின்றேன். அவை வருமாறு:—

"நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொரு பழங்காலத்திலேயே ஒருசீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடை யோர் எனப்படும் பாபிலோனியர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மையைநோக்கின் தமிழைவென்றவர்களல்லர். உலகந்தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரை யும் மலைக்கச்செய்வதும், ஈடும் எடுப்பும் அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது எனயாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதும் ஆன பேரிமையமலையும் தோன்றுதற்கு முன்னரே தான் தோன்றித் தனிச் செங்கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராய வல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்துகிடக்கும் தென் னாழி முழுதும் நிலப்பரப்பாய்விரிந்திருந்தஞான்று அந்நிலப்பரப்பில் வழங்கிவந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்துகிடந்த பெருநிலப்பகுதிதான் இவ்வுலகத்து முதன்முதல் தோன்றிய நிலப் பகுதியென்றும், அந்நிலப்பகுதியிலேதான் மக்கள் முதன்முதல் தோன்றி னோர்களென்றும், இப்பொழுதுள்ள பழங்கலைப்புலவர்கள் பலரும் அறி விக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந்தமிழ்மொழியே கைக் குறியாற் கருத்தை விளக்கிவந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதன்மொழி என்பது பெறப்படுகின் றது. இப்போதுள்ள மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச்சொற் களுக்கு இயைபந்தனவாயிருப்பதும், செவ்வைபுறாத சில மொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச்சொற்களுக்கும், தமிழின் அமைப்புக் கும்) மிகநெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும், தமிழ் ஒலிகள் இயற் கை ஒலிகளுக்கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளைக்குறிக்கும் பல

தமிழ்ச்சொற்கள் மக்களது அறிவுவளர்ச்சிக்கேற்ப ஒவ்வொருகாலத்தில் அவர்கள்கண்ட அப்பொருளினது ஒவ்வொருதன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பதும் மொழி ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையையும் விளக்கி (அன்னாரை) மகிழ்விப்பனவாகும்" இஃதொன்றே ஈண்டைக்கு இப்பகுதியை விளக்கப் போதியதாம்.

வளர்த்தல்.

இங்ஙிலையில் "'நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்ட பழமைவாய்ந்ததும்,' 'அயலாய் உள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலிகளைப் பெற்றிருப்பதும், வேறு பல சிறப்புக்களையுடையதும் ஆகிய நமதுமொழி, ஏன் தாழ்ந்தநிலைமையை அடைதல்வேண்டும்?" என்று ஒருசிலர் குறிப்பாக வினவலாம். அங்ஙனம் வினவப்படின் அவர்க்கு "இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒருமொழி தனது இயற்கையான உயர்ந்தநிலைமையிலிருந்து தற்பொழுது தாழ்ந்தநிலைமைக்கு வந்திருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை; அன்றியும், அது (நமது மொழி) சில நூற்றாண்டுகளாக—ஏன், பல நூற்றாண்டுகளென்றே சொல்லப்படலாம்—காலவேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்கு வந்துளது; அதனால், அக்குறையை நமது மொழியின்மேல் ஏற்றமுடியாது; ஆனால், அது இத்துணைக்காலம் காப்பாரற்று இருந்தும் இன்னும் உயிருள்ள, உலகவழக்கிலுள்ள, பேசுமொழியாக இருப்பதே அதன் மிக உயரிய மேன்மையினை வலியுறுத்துவதாகும்" எனக்கூறலாம். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும் தமது பழையபெருமையைச் சொல்லிக் கொள்வதால் அன்னார்க்கு வரக்கூடிய நன்மை ஏதும் இன்று; அஃது அறிவுடையோரது பெருநகைப்புக்கே இடனாகும்; அன்றியும், அது, மடியாளர்செய்கையுமாம் ஆதலின், நாம் நமதுமொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன்பெறும்வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயலவேண்டுவதே நமது முதற்கடமையாகும். ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார் முதலில் அதன்கண்ணுள்ளகுறைபாட்டைத்தெரிந்துகொள்ளல்

வேண்டும். குறை—இன்றியமையாமை. இம்முறையில் அடுத்தபடியாகக் கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலிய வற்றால் நமது தற்கால உலகவாழ்க்கைக்கு வேண்டுவன முன்னினும் பலவாகப் பெருகிவிட்டன. அவை 'இவை இவை' என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், அவற்றை அடைவதற்கும் துணைபுரிவனவாகப் பல கருத்துக்களையும், வழிகளையும் நாம் பிறமொழிகளிலுள்ள நூல்களால் அறிந்துகொள்ளவேண்டிய நிலைமையிலிருக்கின்றோம் நம்முடைய பண்டைச் சரிதங்களை இன்னும் நம்மால் வரன்முறையாக எழுதப்பட வில்லை. இஃது ஒரு மறுக்கமுடியாத பெருங்குறையல்லவா? இங்கு எடுத்துக்காட்டாகத் "தமிழ்நாட்டுத்தெற்கெல்லையாகப் பண்டைச் சான் றோர் பலரும் குறித்துச்செல்லும் குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன் பது தமிழ்நாடுகள் இருந்தன என்று ஒரு சாராரும், இருந்ததில்லை யெனப் பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; முச்சங்கங்கள் இருந்தன என்று ஒரு சாராரும், அங்ஙனமன்று சங்கம் ஒன்றே விட்டு விட்டுத் தொடர்ந்துவந்தது என்று பிறிதொரு சாராரும் கூறுவன வற்றையும்; தமிழ்மொழிமாட்டுச் சிறப்பாகப் பயின்றுவரும் அகம், புறம் என்பன தனித்தமிழ்வழக்கேயன்றி ஆரியர் வழக்காகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும்பேறுகளைப்பற்றிய வழக்கன்று என்று ஒரு சாராரும், அவ்வழக்குப்பற்றியவே என்று பிறிதொருசாராரும் கூறுவனவற்றையும்; இங்ஙனமே, திருக் குறள்போன்ற நீதிநூல்கள் அகம், புறம் என்ற தமிழ்வழக்குப்பற்றி எழுந்தன என்று ஒரு சாராரும், அறம் பொருள் இன்பம், வீடு என்ற ஆரியர் வழக்குப்பற்றி எழுந்தன என்று பிறிதொருசாராரும் கூறுவன வற்றையும்; இவைபோன்ற பிற பலவற்றையும் ஆராய்ந்து உண்மை காணவேண்டுவது தண்டமிழ்ச்சரித வளர்ச்சிக்கு இன்றியமையாதன எனக்கூறலாம். சின்னாட்களாக ஆங்காங்குச் சிற்சில அறிஞர்கள் இத் துறையில் இறங்கி நாட்டிற்கும், மொழிக்கும் நன்மையைச் செய்துவரு வது நம்மனோரால் பெரிதும் போற்றத்தக்கதே. எனினும், நமது சிறார்களும் உலகியல்களை நன்கு எளிதில் உணர்ந்துகொள்ளத்தக்கவகை யில் உலகநூல், உயிர்நூல், உடல்நூல், செல்வநூல், நிலநூல், ஒளி நூல், ஒலிநூல், வானநூல், அறிவுநூல்போன்ற பற்பல நூல்கள்

பலப்பல மொழிகளினின்றும் நமது மொழியில் இன்னும் மொழி பெயர்க்கப்படவேண்டாமா? வடமொழியிலுள்ள 'சப்தகல்பத்ருமம்' 'வாசஸ்பத்யம்' போன்றனவும், ஆங்கிலத்திலுள்ள 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா' 'வெப்ஸ்டர்ஸ்' போன்றனவும் ஆகிய ஒரு பேரகராதி நமது தாய்மொழியாம் தண்டமிழ்மொழியில் இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றல்லவா? ஆங்கிலம்போன்ற பிறமொழிகளில் அவ்வம் மொழியாளர்கள், தத்தம்மொழியில் வல்லுநராயிருந்த ஷேக்ஸ்பியர் (இவர் வங்கதேசத்தறிஞர்களில் ஒருவர் எனச் சிலரால் கருதப்படுகின்றனர்) போன்ற மகாகவிகள் இயற்றிய நூல்களைப் புத்தகசாலைப் பதிப்பு என்றும், சாதாரணப்பதிப்பு என்றும் வெளியிட்டுப் பார்ப்போர்களுடைய கண்களைக் கவருமாறும், எவர்க்கும் எளிதிற் கிடைக்குமாறும் செய்கின்றார்களே. அத்தகைய நிலைமை நமது பண்டைச்சான்றோர்கள் இயற்றியருளிய தண்டமிழின் மேலாம் தரங்களாகிய பெறலருநூல்களுக்கு உண்டாதல் வேண்டாமா? உயர்ந்தகருத்துக்கள் நிறைந்தனவாய், எவரையும் எளிதில் அறிவுறுத்தத்தக்கனவாய், நாடோடியாகத் திரியும் பிச்சைக்காரர்களிடமே தங்கி உருமாறியிருப்பனவாய் உள்ள பலபாக்களும் பழமொழிகளும் தத்தம் முன்னை உருவங்களுடன் வெளிப்படுத்தப்படுதல் வேண்டாமா? அங்ஙனமே, இன்னும் நவநாகரிகம் தலைகாட்டாத சிற்றூர்களிலுள்ள பெண்பாலர்களிடத்திலும் சிறார்களிடத்திலும் தங்கியிருக்கின்ற தாலாட்டு விளையாட்டு முதலியனபோன்ற பாடல்கள் வெளிப்படுத்தப்படல்வேண்டாமா? வியவசாயத்தைப்பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும் நமது மொழியில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? சிற்பம், கணிதம் போன்ற கலைகளிலே பெரிதும் கவனஞ்செலுத்த விரும்புவோர்க்குத் துணைசெய்யத்தக்கநூல்கள் நமதுமொழியில் இருக்கின்றனவா? அரசியலைப்பற்றியநூல்கள் போதிய அளவு நமதுமொழிக்கு வேண்டுவதின்று? இவற்றால் நமது மொழியை முன்னர்ப் புகழ்பவன்போற்காட்டிப் பின்னர்ப் பழிக்கவந்தவனாக என்னை நீங்கள் கருதிவிடலாகாது. முற்காட்டிய குறைகளைப்போக்கத்தக்கனவாக ஆங்காங்குச் சிற்சில நூல்கள் வெளிவந்தும், வெளிவந்துகொண்டும் இருப்பதை நன்றாய் அறிவேன். என்றாலும், அவை, நமது நாட்டின் பரப்பையும், நமதுமொழியினைப் பேசுவோரது பெருக்கையும் நோக்கச்சிறிதும்போதாதன என்பதே எனதுகருத்து. இதுபற்றித்தான்

அவற்றைக் குறை எனக் கூறியதும். ஆயினும், இக்குறையையும் நமது மொழிமாட்டு ஏற்றமுடியவில்லை. எங்ஙனமெனில், எந்நாட்டிலும், எந்தக்காலத்திலும், எந்தமொழியிலும் காலத்திற்கேற்ற பலசிறப்புக்கட்ட புதுப்புதுக்கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தாமாகவே தோன்றின என்று யாண்டும் கேட்கப்படவில்லை. அங்ஙனம் தோன்றவும் முடியாது. ஆனால், அவை பல தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது புதிதுபுதிதாக எழுதப்பெற்றே நாளடைவில் வளர்ந்து உயர்நிலையைப் பெற்றுவருகின்றன என்க. இவற்றால், நமதுமொழி பலதுறைகளிலும் வளர்க்கப்படவேண்டிய நிலைமையிலேயே இருக்கின்றது என்பதும், வளர்த்தல் இன்றியமையாததொன்றும் என்பதும் பெறப்படுகின்றன.

எவர் எவர், எவை எவை, எப்படி எப்படி நமது மொழியை வளர்த்துவரல் வேண்டும் என்பதே இனிக் குறிப்பிடப்படல்வேண்டும்.

க. மக்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் சற்றேறக்குறைய இருகோடியினர் ஆவார்கள் என்பது முன்னர்க்கூறப்பட்டது. இன்னணம் இருந்தும், நமதுமொழி வளரவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. என்செய்வது? இனியேனும், 'அவர்கள் பொதுவாக ஒவ்வொருவரும், சிறப்பாக உயர்தரப்படிப்பைப் படித்துப் பட்டம்பெற்றவர்களும்—தாம் தாம் தமது மொழியாளராகிய பிற உடன்பிறப்பாளருடன் பேசும்போதெல்லாம் நடிக்கமுடியாத நிலைமை உண்டானாலன்றி எக்காரணங்கொண்டும் தாய்மொழியாலன்றிப் பிறமொழிகளாற் பேசிக்கொள்ளுதல் கூடாது' என்ற உறுதிப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்; இதற்கு அன்னார், "ஆங்கிலப் பார்லிமெண்டு சபையிலே இந்தியா உதவி மந்திரியாராயிருந்த கனம் ஸின்ஹாப்பிரபு அவர்களும், இந்தியா மந்திரி சபையிலே ஓர் உறுப்பினராயிருக்கும் கனம் பூபேந்திரநாதவஸு அவர்களும் லண்டன்மாநகரத்திலும் தாங்கள் தனித்துப் பேசிக்கொள்வதாயின் ஆங்கிலமொழியிற் பேசிக்கொள்ளாது தங்களது தாய்மொழியிலேதான் பேசிக்கொள்வார்கள்" என்று கேட்கப்படுவதை ஊன்றியறிதல் பொருத்தமானது. அன்றியும், அவர்கள், தமது தாய்மொழியை அறிந்தவர்களிடத்தில் அதை விடுத்துப் பிறமொழிகளாற் பேசுவதைப் பாவச்செயலாகவும் கருதல்வேண்டும்; மேலும், ஆண்டாண்டுள்ளமொழிப்

பற்றுடையார் அனைவரும் முன்னர்த் தாங்கள் நடந்துகாட்டிப் பிறரை யும் அங்ஙனமே நடந்துகொள்ளுமாறு நிருத்திவரல்வேண்டும்; "இச் சபையில் எனது தாய்மொழியாகிய தமிழிலே என்னால் பேசமுடியா மைக்கும், தெரியாமைக்கும் நான் வருந்துகிறேன்" என்று அதனையும் வேற்றுமொழியாற் கூறுவதைப் பெருமையாக நினைப்பது தவறு என் பதையும், அது வெட்ககரமானது என்பதையும் உணரல்வேண்டும்; பிரசங்கம் செய்பவர் தாம்செய்யும் பிரசங்கத்தைக்கேட்பவர்கள் எந்த மொழியை இயல்பில் அறிந்திருக்கின்றார்களோ அந்த மொழியிலேயே பிரசங்கம் செய்தால்தான் அந்தப்பிரசங்கம் குறித்த பயனை அளிக்கும்' என்பதை அவர்க்கு வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. இங்கு, அவர், "முன்னர்த் தமது தாய்மொழி (வங்காளமொழி)யிலே செய்யுளை இயற்றி அதைத்தான் பின்னர்த் தம்மால் ஆங்கிலத்தில்மொழிபெயர்க்கமுடியும்" என்று நமது (இந்தியக்) கவியரசர் ரவீந்திரநாத்தாகோர் கூறுவதன் உட்கருத்தை உற்றுநோக்கற்பாலர். இன்னும், அன்னார், ஒருநாடு ஒற் றுமையுற்று முன்னேறும்வண்ணம் துணைபுரிவதற்கு அந்தநாட்டுமொழி யின்வளர்ச்சியே பெரிதும் இன்றியமையாததொன்றும் என்பதனையும் தமதுகருத்திற் பதியவைத்துக் கோடல்வேண்டும். இதற்கு மேற்கோ ளாக "ஒருநாடு முன்னேறவேண்டுமாயின், உதிரம் உடல்முழுவதும் ஓடிப்பாவுதல்போல், அந்நாட்டுப்பெரியோர்களின்கருத்துக்கள், அந்த நாட்டு மக்கட்பாப்புமுழுவதும் ஓடிப் பாவுதல்வேண்டும். ஆனால், அவை, அவரவர்கள் தாய்மொழித்துணையாலேதான் அங்ஙனம் ஓடிப்பாவ முடி யும்" என டாக்டர் பி. ஜே. மேதா அவர்கள் கூறுவது நம்மனோரால் ஊன்றி அறியத்தக்கதாம். இவற்றால், தமிழராவார் ஒவ்வொருவரும் 'தன் கையே தனக்கு உதவி' என்ற உறுதியுரையை உணர்ந்து தத்தம் உரை செல்லுமிடங்களிலெல்லாம் நமதுமொழியின்வளர்ச்சிக்கு இன்றி யமையாத பலதுறைகளிலும் முயன்றுவரல்வேண்டும் என்பதும், 'அவர் செய்யவேண்டும், இவர்செய்யவேண்டும்' என்று வாய்ப்பேச்சுப்பேசிக் கொண்டு வாளா நாள்கழித்தல் கூடாது என்பதும் பெறப்படுகின்றன. இங்கே, தாய்மொழியை வளர்க்கவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால் "மத்திய ஐரோப்பாவிலும் கீழ் ஐரோப்பாவிலுமுள்ள யூதர்கள் தங்களுக்குள் ஒரேபாஷை உபயோகிக்கப்படவேண்டும் என்ற கருத்துடன் தாங்கள் பேசும் ஆபாச இட்டிஷ்பாஷையை ஒரு நாகரிக

பாஷையாய்ச்செய்து அதில் உலகத்திலிருக்கும் உத்தமமான கிரந்தங்களை எல்லாம் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அவர்களாற்கூட அன்னியபாஷைகளின் மூலமாய்த் தங்கள்மனோபாவங்களைத் திருப்திசெய்து கொள்ளமுடியவில்லை. தவிர, அந்த ஜாதியில் படித்திருந்த சிலர், எல்லா ஜனங்களும் அன்னியபாஷையைக்கற்று அதன்மூலமாய் அறிவைப்பெறவேண்டுமென்று நினைக்கவில்லை; ஆகையால், அவர்கள், எல்லாராலும் ஆபாசபாஷைஎன்று கருதப்பட்ட தங்களது தாய்ப்பாஷையை நிரம்பவும் கஷ்டப்பட்டுச் சீர்ப்படுத்தி, சிரேஷ்டமான நூல்களையெல்லாம் அதில் மொழிபெயர்த்து அதைக் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமான காரியம். இந்த ஒருதலைமுறையிலேயே இந்தப்பாஷை மிகவும் உன்னதநிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பாஷை வெப்ஸ்டர்ஸ் அகராதியில் 'யூதர்களால் உபயோகப்படுத்தப்படும் ஓர் ஆபாஸ கலப்பிடபாஷை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இந்தப் பாஷையானது இப்படித் தூஷிக்கப்பட்டால் ஐரோப்பாவில் இருக்கும் யூதர்களுக்குக் கோபம் உண்டாகும். இந்த யூதபண்டிதர்கள் ஒரு தலைமுறைக்குள் தங்களது ஆபாசபாஷையை உன்னதநிலைமைக்குக் கொண்டுவந்திருக்கும்பொழுது, நம்முடைய நாகரிகமடைந்த தேசபாஷைகளைச் சிறப்பிப்பது மிகவும் சுலபமான காரியம். தென்னாப்பிரிக்காவிலும் இதேமாதிரி நடந்திருக்கிறது." என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியிருப்பது நம்மனோர்க்கு நமது மொழியை வளர்க்கத்தக்க போதிய ஊக்கத்தை அளிக்கும் என நம்புகின்றேன்.

உ. நமது புலவர்கள்.

இத்திருக்கூட்டத்தார் நமது தாய்மொழியைப்பற்றிச் சிறப்பித்து 'இஃது ஓர் உயர்தனிச்செம்மொழியாம். இதில் எல்லா வளங்களும் நிறைந்துள்ளன' என்று கூறிக்கொண்டு காலத்திற்கேற்றவாறு வேண்டும் பலவற்றைச் சேர்த்துக்கோடற்கு முட்டுக்கட்டைகளாக இருந்து வருதல் கூடாது. சொற்களைப்புதுவதாகப் படைத்துக்கொள்வதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் ஆணை தந்துள்ளார் என்பதை இவர்கள் அறிந்தே இருப்பார்கள் என்பது ஒருதலை. ஆதலின் அன்னார், நமது தண்டமிழை உலகவழக்கழிந்த, உயிரற்ற சில உயர்தனிச்செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பெருமைப்படுத்த முயலலாகாது. ஆனால், அன்னார்

நமது தாய்மொழியாம் தண்டமிழை உலகவழக்கிலுள்ள, உயிர்த்திருக்கும் உயர்தனிச்செம்மொழி என்றுகூறிச் சிறப்பிக்க முயலல் வேண்டும்.

ங. கழகங்கள்.

இவை, ஆண்டிற்கொருமுறை கூட்டங்கூடிச் சில நூறு வெண்பொற்காசுகளைச் செலவுசெய்து ஆடம்பரத்துடன் பலர் ஒன்றுகூடிச் சிலர் சிலவற்றைப்பற்றிப் பேசிக் கலைவதாற் சிறிதும் பயன் விளைந்துவிடாது. ஆனால், அவை, அங்ஙனஞ்செய்தமட்டில் தங்களது கடமையை நிறைவேற்றியதாகக் கருதிவிடாது அதனினும் மேலாக மொழியின் வளர்ச்சிக்கெனப் பல துண்டுப் பிரசுரங்களை ஏராளமாய்வெளியிட்டு எவர்க்கும் இலவசத்தில் எளிதிற்கிட்டுமாறு செய்துவரல்; என்றும் நின்று நிலவக்கூடிய தகுதியினையுடையதும், சமயப்பகுதி கல்விப் பகுதி சரிதப்பகுதி, செல்வப்பகுதி உழவுப்பகுதி, கைத்தொழிற்பகுதி, வியாபாரப்பகுதி, அரசியற்பகுதி ஆதிய பல பகுதிகளையுடையதுமான சில மாதாந்தச் செந்தமிழ்ப்பத்திரிகைகளைத் தக்கஆராய்ச்சியாளர்களைக் கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரை நூல்களை வெளியிடல் ஆதியவற்றையும் மேற்போட்டுக் கொள்ளல்வேண்டும். அன்றியும், அவை, பொருள்வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றைமேற்போட்டுக்கொள்ளலாகாது. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டுமேற்போட்டுக்கொள்ளல் வேண்டும் இத்தகைய அரியசெயல்களை மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரும், சென்னைத் தமிழர்கல்விச்சங்கத்தாரும் மேற்போட்டுக்கொண்டு செய்ய முன்வரலாம். இம்முறையில் உழைக்கத்தக்கவேறு பல கழகங்களும்உள. அவை அங்ஙனம் செய்ய முன்வருதல்மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முற்றுறல்வேண்டும். இங்ஙனம், பலர் படித்தறிந்துகொள்ள முன் வருவாராயின், அத்தகைய ஆராய்ச்சிநிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளிவருவதும் இயலாததொரு காரியமன்று. தமிழ்மொழிமாட்டுப் பேரன்பு உண்டு என விருதுபேசிக் கொண்டு இருப்புக்கடலையைப்போலக் கடினமான நடையிற் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறாக நடக்காமலும் இருக்கவேண்டும். சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும், அதன் இன்றியமையாமையையும் விரித்துக்கூறுவித்தும், ஆங்

காங்குக் கிளைக்கழகங்களை நிலைபெறுவித்தும் வளர்த்துவர முயலல்வேண்டும். தாம் பேசுவது இன்னமொழியென்பதைக்கூட அறியாத பல தமிழ்மக்கள் இன்னும் நமது தமிழ்நாட்டில் பத்நாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதைத் தாழ்மையுடன் கழகங்களை நடத்துவோர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

ச. ஸ்தலசுயஆட்சிஸ்தாபனங்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நமதுநாட்டிற் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப்போக்குவரத்துக்களையும், ஏனைய நடவடிக்கைகளையும் நமது தாய்மொழியிலேயே செய்துவரல் வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகாரஎல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதியஅளவு வைத்து நடத்திவருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கும் பொருள்முட்டுப்பாடு உண்டாகாமற் போதியஅளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். நிற்க, அத்தகைய பள்ளிக்கூடங்களை நிலைபெறுவிப்பதில் மட்டும் ஆதரித்தும் வருவதால்மாத்திரம் அவை தமது கடமையை நிறைவேற்றியன ஆகா. போதிய அளவு பிரசாரவேலைசெய்து பொதுஜனங்களைப் படித்துப் பலன்பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ்மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றைநடத்துவோர் அடையும் பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ்மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

ரு. துரைத்தனம்.

நமதுமொழியை வளர்த்தற்குற்ற உரிமையையும் கடமையையும், போதிய ஆற்றலையும் பெற்றிருப்பன சென்னை, இலங்கை ஆகிய இரண்டு துரைத்தனங்களும்; பெரும்பாலும் துரைத்தனத்தாலேயே நடத்தப் பெற்றுவரும் சென்னைச் சர்வகலாசாலையுமேயாம். இவை, தமது கடமையை உணர்ந்து நமதுமொழியை வளர்க்க முன்வருமாயின், அவற்றிற்கும் அத்துறையில் அதிகத்தொல்லைகள் உண்டாகமாட்டா; நமது வேண்டுகோளும் இனிது நிறைவேற்றப்படலாம். அவை, முதலில்

தம்முடைய அதிகார எல்லைக்குட்பட்ட எல்லாநடவடிக்கைகளையும்நமது தாய்மொழியாம் தண்டமிழ்மொழியிலேயே செய்துவரல்வேண்டும். இங்குத் தாங்கள் செய்யவேண்டிய அனைத்தும்,—வேண்டுகோள்களோ, கட்டளைகளோ, அறிவிப்புக்களோ,—தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடத்திலே தான் என்பதையும், தங்களால் காக்கப்பட வேண்டியவர்களும், கற்பிக்கப்படவேண்டியவர்களும் தமிழர்களே என்பதையும், தங்களுக்கு வரும் பொருள்கள் அனைத்தும் தமிழர்கள் அரிதிலே தேடிக்கொடுப்பனவே என்பதையும், தாங்கள் செய்யும் அதிகாரமும், அடையும் பெருமையும் தங்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களாலேயே தங்களுக்குக் கிடைத்தன என்பதையும் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை. இங்ஙனம் நடைபெறுதற்குத் தாய்மொழியைப் பயிலாது படித்துப் பட்டம்பெற்றுப் பட்டதாரிகள் எனப் பலரும் வெளிவரக்கூடியதாக இருக்கும் தற்காலக் கல்விமுறை முதலில் அடியோடு மாற்றப்படல்வேண்டும். உலகத்தில் நமதுநாடு (இந்தியா) ஒன்றுதான் தாய்மொழியைப் பயிலாமல் பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலைமையில் உள்ள நாடாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதே. இத்தகைய இழிந்தநிலைமை எவ்வளவு விரைவில் நீக்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவில் நமதுமொழியும், நாடும் முன்னேறும் என்பது தவறாகாது. இக்கருத்தே பல சான்றோர்க்கும் உடன்பாடாம். இம்மட்டோ தற்காலமுறைமை? தாய்மொழிக்கு முதல் இடம் கொடுக்காததோடு தாய்மொழியைக் கற்றவர்களும் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! ஆதலின், உடனே, தற்காலக்கல்விமுறையைமாற்றித் 'தாய்மொழியைப் பயிலாது பட்டதாரிகளாக இனி எவரும் வெளிவரமுடியாது' என்ற கண்டிப்பான கட்டளையைச்செய்து கைக்கொள்ளல்வேண்டும். அன்றியும், எங்கெங்கே தாய்மொழியை வளர்த்தற்குப் பாடுபடப் பொதுஜனங்கள் முன்னுக்கு வருகின்றார்களோ அங்கங்கெல்லாம் தங்களுடைய உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவர்களுக்கு ஊக்கமளித்துவர முயலுவதுடன் அவர்களது முயற்சிக்குப் போதியஅளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். அதிகம் சொல்லுவானேன். முன்னே கூறியுள்ளவண்ணம் எல்லா முயற்சிகளுக்கும் வெளிப்படையாக முன்வந்து அவற்றிற்குத் தக்கவாறு போதிய அளவு எல்லாத் துறைகளிலும் உதவிசெய்து

வளர்த்துவரல் வேண்டும். மேலும், அவை 'எத்தகைய அரிய உயரிய பிறமொழிக்கருத்துக்களையும் தங்களுடைய குடிகளாகிய பொதுஜனங்கள் தடையின்றித் தங்கள்தங்கள் தாய்மொழியால் விரித்துவிளக்கி உரைத்துக்கொள்ளும் தகுதியினையும், அறிவினையும், ஆற்றலினையும் பெற்றிருக்கின்றார்கள்' என்று பெருமைபேசிக்கொள்ளத்தக்க நிலைமை உண்டாவதே மிக மேலான ஆட்சியின் அறிகுறி என்பதையும் அறிந்துகொள்ளல்வேண்டும். இதுபற்றி எழுதிக்கொண்டே போகலாம். எனினும், அங்ஙனம் எழுத முன்வரவில்லை. ஆனால், 'ஒருநாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும், ஆட்சிமுதலிய பிறவற்றின் வளர்ச்சிக்கும் துணைசெய்வதற்கு அந்நாட்டினர் ஒவ்வொருவரும் "முதலில் தத்தம் தாய்மொழியையும் இரண்டாவதாகத் தத்தம் சமயச்சார்பான உயர்வையும் அறிவையும் வளர்க்கத்தக்க கருத்துக்கள்நிறைந்த மொழியையும், பின்னர் ஆட்சியாளரின்மொழியையும் கற்றல்வேண்டும்', என்று பல பெரியோர்களும் கூறுவது நம்மனோரால் உய்த்துணரத்தக்கது'என எடுத்துக்கூறாமலிருக்கமுடியவில்லை. இக்கருத்துப்பட முன்னம் ஒருகால் மாட்சிமிக்க பரோடா அரசர் அவர்கள் கூறியதும் நினைவிற்கு வருகின்றது. இம்மூன்றும் ஒரேமொழியில் அமைந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. அத்தகைய நாடுதான் விரைவில் முன்னேறக்கூடியது. நமதுநாடும் ஒருகால் அத்தகைய மேலான நிலைமையில் இருந்ததே. நமது தாய்மொழியும் அம்மூன்றையும் ஒருசேரக்கொண்டுள்ளதே. என் செய்வது! தற்பொழுது சிறிதும் ஆற்றலற்றிருக்கின்றோம்! எனினும், இத்தகைய நிலைமை எந்நாட்டிலும், எப்பொழுதும் நிலைத்திருக்கமுடியாதாதலின் நமது மொழியும் விரைவில் வளர்ச்சிபெறும் என்பது ஒருதலை.

௬. போது.

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ்மொழியில் இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தகைய கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம் என்றும், வேறொரு சாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்படவேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது

எழுத்துக்களால் எழுதிச்சேர்த்துக்கொள்ளலாம் என்றும், மற்றும்
பலர் வேறு பலமாதிரியாகவும் மொழிபெயர்த்தலைப்பற்றிய கருத்துக்
களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்; வெளியிட்டும் வருகின்றனர். இது
பற்றி ஒருவகை முடிவு விரைவில் ஏற்பட்டே தீரும். அஃது எங்ஙன
மாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்ற யாற்றுநீர் தன்னொடு கலக்கும்
பிறவேற்றுநீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத்
தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்ன
ரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய்மொழியாம் தண்
டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்ற யாற்றுநீர்
போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுள்ளது. இது
முன்னரும் கூறப்பட்டது. ஆதலின், இதனுள் வேற்றுநீர்களைப்
போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்துசேருவது இயல்பே. சேர
வேண்டும் என்பதுதான் நமது விருப்பமும். அதுதான் மொழியின்
வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமேதான் பிற பேச்சுவழக்கி
லுள்ள மொழிகளும் வளர்ந்துவருகின்றன. இதற்கு உதாரணமாக
ஆங்கிலம், ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டுமொழிகளைக்
கூறலாம்.

இனி, நமது மொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப்
போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்த
மானதே. இதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப்
பெற்றுள்ள பலதிறப்பட்ட நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அத
னால் நமது தாய்மொழியாந் தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத்
தன்னகத்துக்கொள்ளும் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும்
உறுதியுறும். எனினும், இங்கு, அவையிற்றைக் குறிப்பேனாயின்;
அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு காலத்தை வீணாக்கும்.
ஆதலின், அதனைக் குறியாது விடுகிறேன்.

ஒருமொழியிலுள்ள அரியபெரிய கருத்துக்களைப் பிறிதொரு
மொழியில் மொழிபெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு
பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழிபெயர்ப்பதனால்
அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருந்த
லும் வேண்டும், 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிற்றும்'

என்ற பழமொழிக்கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து மொழி பெயர்ப்பு மொழியின் பழைய பெருமைகளை மறைத்துவிடாதநிலைமையி லும் அமைதல் வேண்டும். மேலும், இங்ஙனம் மொழிபெயர்த்தல் முத லியசெய்தற்கோ தாம் மொழிபெயர்க்கமுயலும் மொழிகளில் வல்லுந ராகப் பலர் முன்வரல்வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்திலும் நாட்டின்நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையவராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராக வும் இருத்தல்வேண்டும். அன்றியும், அன்னார்க்கு உதவிபுரியப் பல மொழிகளிலும் வல்ல பல அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத்தக்க வசதிகளும் இருத்தல்வேண்டும்.

இங்ஙனம், தத்தம் மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப்பற்றுடையார் அனைவரும் 'என் செய்வது?' என்று எண்ணி மடிந்து வாளா இராது, அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றபடி தமது முயற்சிக்குறைவினால்வந்தது எனக் கருதிப் பலர் ஒன்றுசேர்ந்தும், தனித்தனியாகவும் இயன்றஅளவு ஒவ் வொருதுறையிலும் "முயற்சி திருவினையாக்கும்" என்றதைக் கடைப் பிடித்து ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் உறுதியாய் உழைக்க முன்வருதல்வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரை வில் நீங்கிவிடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப் பின்கீழ்த் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சியுரையில் அறிஞர் ஸ்ரீமான். ராவ்பகதூர் கே. சி. ஸ்ரீநிவாஸபிள்ளை அவர்கள் எழுதியுள்ள பகுதியும், "சேணிற்பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன்—திட்டேது தட்டேது காண்" என்ற பழைய தொடர்மொழியும் ஊன்றியறியத்தக்கனவாம்.

ஏன் வளர்த்தல்வேண்டும்.

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்த நிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால், உயர்ந்த நிலைமை யிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடையவேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்வம், தந்நயங்கருதாமை, சுயமதிப்பு, நடு நிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நற்குணங்கள் இருத்தல்வேண்டும்.

அத்தகைய நற்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில் வந்தடையக் கூடியன அல்ல. அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, நக்கீரர்களது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ளவேண்டியதாகின்றது. இளமைப்பருவத்திற் கற்பதற்கோ தாய்மொழியேஅன்றி, பிறமொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய்மொழியால் அடையும் பயனைப்போன்ற அத்துணை சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்த கால அளவிலும் அறிந்து கொள்ளுவதற்கு அவரவர்களது தாய்மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற தேவர்வாக்கும் ஈண்டுச் சிந்தித் துணரற்பாலது.

வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை?

'இது வரையிற் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா?' என்று கேட்பதே இதற்குப் போதிய விடையை அளிக்கும் என்பது ஒரு தலை. என்றாலும், "தாய் மொழியைப் போற்றி வளர்க்காதிருப்பது ஜாதீயத்தற்கொலையாகும்" என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக் கூறலாம்.

வளர்த்தலால் வரும் பயன் யாது?

இந்நூலையும் கூறியதுகொண்டே இவ்வினாவுக்குப்பொருந்திய விடையை அறிந்துகொள்ளக்கூடும். எனினும், எடுத்துக்கொண்டதற்கேற்பச் சிலசொல்லி நிறுத்துவேன். நமதுமொழியைப்போலவே தற்காலத்திற்குவேண்டும் பலவற்றையும் தன்னகத்துக் கொள்ளாக்குறையைப் பெற்றிருந்த வங்கமொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிடமிருந்த அக்குறைகளினின்றும் நீங்கி இப்பொழுது நால்வளத்தாலும்

கருத்து நிறைவாலும், பிறவற்றாலும் குறைவுபடாத இந்தியமொழிகளில் ஒன்றாக விளங்குகின்றது. அம்மொழிக்குரிய வங்காளிகளாகிய நமது (இந்திய) சகோதரர்களோ முன்னேற முயலும் ஒரு நாட்டினரிடம் இருக்கவேண்டிய நற்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இருபெரும்பேறுகளையும்பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலைசிறந்து விளங்கிவருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது விடாமுயற்சியின்பயனால் வளர்ந்த அவர்களது தாய்மொழி (வங்கமொழி) யின் திருந்திய பெருக்கமேஅன்றிப் பிறிதன்று. இதனினும் மேம்பட்டபயன் உண்டோ? இஃதன்றோ மொழிப்பற்று! இங்ஙனம் முயல்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙனமே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திரசகோதரர்களது நன்முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்துவரும் பெருமையும், ஜப்பான் மிகத்தாழ்ந்தநிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவுமேலானநிலைமைக்குவந்த வரலாறும், பிறவும் நம்மனோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

முடிவுரை.

அறிஞர்களே! எனது புல்லறிவிற்கெட்டியஅளவு ஏதோசில கூறினேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங்கருதினுங்கைகூடுங்காலங்-கருதிஇடத்தாற்செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்றுகூடி, நன்கு ஆராய்ந்து, தக்கதுசெய்து நமது தாய்மொழியாந் தண்டமிழைக் காலத்திற்கேற்றவாறு பலதுறைகளிலும் வளர்த்துப் பெரும்புகழ் பெறுவீர்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உவ. சா. வேங்கடராமையர்,

கும்பகோணம்.

ஸ்ரீ :

புரூரவசரிதை.

[உக-ஆம் தொகுதியின் ருஙஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

கைலைப்படலம்.

உற்றனர்கள்வெள்ளிமணியோங்கலினுடுத்த
பொற்றபுரிசைச்சிகரிவாயிலிடைபுக்குப்
பெற்றமுகனுக்கறியவோதினர்கள்பேத
மற்றவன்முன்மற்றவனுணர்த்திடவழைத்தான். (க)

அக்கணியுமுக்கணனருக்கருதயம்போற்
செக்கர்விரிபொற்கழல்செறித்தகமலத்தின்
முக்குணமொடெக்குணமுமுற்றறிவுபெற்ற
தக்கவர்குவித்தமலர்மீக்கொடுதயங்க. (உ)

வெம்புலியதட்கருமிடற்றரவகச்சோ
டம்பரமிலங்கிடவகன்றதிருமார்பின்
பைம்பொனிதழித்தொடைபருப்பதமடந்தை
வம்பகன்முலைச்சுவடுவைத்ததைமறைப்ப. (ங)

மாகமுயரும்பவளமால்வரைமருங்கே
மேகமுறைகின்றதெனமின்னிடைமழைக்கட்
டோகையொருபாகமுறநீறொளிதுவன்ற
நாககணகங்கணவெயிற்கதிர்களுற. (ச)

சிந்துரநிறச்சசிசுடர்க்கதிர்கள்செய்தே
முந்துதயவெற்பினின்முடித்தலையிடத்தே
வந்துதயமுற்றனவனப்பினும்வனப்பா
ரைந்துவதனத்தினுமருட்சுடரெறிப்ப. (ரு)

எம்மிறைவனின்னணமெழுந்தருளியவைகச்
செம்முனிகளுஞ்சுரர்களுங்குழுமல்செய்தார்
விம்மிதமடைந்தனர்மிடைந்தனரவ்வேலை
யைம்முகிலிறுத்தயகநிக்கதிபன்வந்தான். (சா)

வேறு.

மாடகம்பயின்மகதியாழ்முனிவானிநழித்
தோடலர்ந்திடும்வேணியான்பதமலர்தொழுதுந்
தேடரும்பிரான்றிருமுகமலரொளிசிறப்ப
நீடுமன்புடைமுனிவனுக்கொருமொழிநிகழ்த்தும். (௭)

செவ்வியாழ்நாம்பேழிசையாற்றியசெல்வ
வெவ்வயிற்பலநாள்கழித்தனைகொனீயியங்கு
மவ்விடத்தினிலற்புதமென்னையென்றருள
நைவளத்திறனுணர்ந்தநாரதமுனிநவில்வான். (௮)

என்னையாளுடைநாயகவெழின்மணிமாடச்
சென்னிவாண்மெடுந்திரிகர்த்தமென்பதோர்நகரின்
மன்னர்மன்னவன்மனையவண்மணிவயிற்றிடையே
தன்னினேரிலாதுதித்தனளொருபெருந்தனயை. (௯)

அருமகத்தினல்வருமகடனையந்தவரசன்
மருமகற்கினிதுதவுவான்மணமுரசறைந்தே
திருநகர்க்கணிசெய்தனனவனுயிர்த்தெரிவை
யுரிமையுற்றதன்மருகனுக்குதவவென்றுணர்ந்தாள். (௧௦)

இருவரெண்ணியவெண்ணமுமிவையிவரிற்
றெரிவைநன்மணப்பெறுபவனியாவனோதெரிகென்
றிருண்மிடற்றிறைக்கியம்பினன்யாழ்முனியிறைவன்
விரிமலர்ப்பொகுட்டுறைமறைக்கிழவனைவினவ. (௧௧)

நதிதயங்கியவேணியம்பரமனேநடுவே
யதிசயம்பெறவந்தபின்யாவருமறியும்
விதியெனும்பெருவலித்திறந்திபற்கையைவேறு
மதியினிற்றெரித்திடலரிதென்றனன்மறையோன். (௧௨)

என்றவாசகங்கூறலுமெழின்மணிமார்பின்
மன்றலுறுபூந்தாமரைமாதுசேர்வள்ள
முன்றுநான்முகந்தொருவனையாவையுந்தொகுத்தோ
பொன்றுமாறுமதிவிதிகொலோமதிகொலோவெற்றும். (௧௩)

எனத்துழாய்முகிலியம்பலுஞ்சதுமுகத்திறைவன்
மனத்துளாய்வருமதியினைவலியெனமகிழேல்
நினைத்துளார்வயினன்றிபோபிறிதொன்றாய்நிகழ்ந்தும்
வினைத்துளாய்வரும்விதிவலிப்பெருமையார்விரிப்பார். (கச)

அற்றமில்லெனவகிலமுஞ்சராசரமனைத்தும்
பெற்றயானுமென்விதியறிபெற்றிபெற்றிலனன்
மற்றியாரினியறிகுவார்திருமறுமார்பா
சொற்றவென்றியவ்விதிக்கலாதிலையெனச்சொன்னான். (கரு)

பழுதியம்பினைபழுதிலாப்பழமறைப்பழையோய்
முழுதுணர்ந்தவர்விதியையுமதியினன்முனிவா
ரெழுதுகின்றவாண்டெண்ணிரண்டென்பதையொருவன்
வழுவநோற்றதுமதிவலத்தாலன்றோவென்றான். (கசு)

உந்திபூத்தவனுந்தியினுதித்தபேரொளியோன்
சிந்தைநேருறவிசைத்தலும்பாழிசைச்செல்வ
னிந்துசேகரத்தெம்பிரான்றிருமுனரிசைத்த
வந்தவாறுதன்மணத்திறனுணர்த்திரென்றறைந்தான். (கஎ)

நெறித்தசெஞ்சடைநாதனிவையிவைநிகழ்த்த
வெறித்ததாமரைப்பொகுட்டுறைமறைமுதல்விடத்தை
மறித்தநோக்கினன்மணவினையன்னவர்மனத்திற்
குறித்தமைந்தர்களிருவர்க்குமன்றெனக்குறித்தான். (கஅ)

போதுளானிவைநிகழ்த்தலுமுகினிறம்பூத்த
சீதரன்றிருவதுவைமற்றெவற்கெனச்செப்பக்
கேதமொன்றியபங்குவிச்செக்கடிக்கிடக்கு
மேதிலான்பெறுமன்னவளிளமுலையின்பம். (ககூ)

வங்கவாரிதிமகிதலத்தரசெலாநிற்கப்
பங்குவாகிபிச்செக்கடிக்கிடந்துழல்பவனுக்
கங்கையாற்றுடைபுனையுமென்றுரைத்தவற்புதத்தைச்
சங்கபாணியான்றெரிதருவனெனமனஞ்சமைந்தான். (உ0)

என்றுநன்மணமென்றதுநாளையென்றிசைத்தா
னன்றுநன்றினிமதியணிசடைமுடிநம்பா
மன்றுமீயெனப்புகன்றனரவனடிவணங்கி
யன்றுவானவர்தத்தமதிருக்கைசென்றடைந்தார். (உக)

கைலைப்படலமுற்றும்.

உதவிப்பத்திராதியர்.

புத்தக மதிப்புரை.

உதயனசரிதம்:—இது, மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்களால் வடமொழியினின்றும் மொழிபெயர்த்தளிக்கப்பட்டது. இதன்கண் அரசர்க்கு விளையாட்டுமேற்கொண்டு வேட்டையாடல் முதலியவற்றால்வரும் தீங்கும், அறிவிற்சிறந்த அமைச்சர்சொல்வழிநிற்றலால்வரும் நலங்களும், சிறந்த அமைச்சர்க்குரிய அரியசூழ்ச்சிமுதலிய செயல்களும், இடுக்கணுண்டாயகாலத்தும் மகளிர்க்குக் கற்பு மாசுபடலாகாதென்பதும், ஸபத்நிகள் ஒருவர்க்கொருவர் அன்போடுகூடி ஒத்துவாழ்தலும், அரசியல் ஓங்குதற்குச் செய்யற்பாலன இன்னவென்பதும், கடவுள் வழிபாட்டின் பயனும் பிறவும் புலப்படுவனவாம். இன்னும் இச்சரிதத்தின் வரலாறு முதலியனவும் பிறவும் நன்குவிளங்கும்படி யெழுதப்பட்ட செவ்வியமுகவுரையும், இப்புத்தகத்தைப்பற்றி ஸ்ரீமந் மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள், சென்னை நியாயகலாசாலைப்போசிரியர் ஸ்ரீமத் கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் (எம்., ஏ., எம்., எல்.,) ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள், இவர்களெழுதிய நன்மதிப்புப்பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கதைபடிக்கத் தொடங்கும் சிறுவர்களும் மனங்கொள்ளற்கேற்றவாறு வாக்கியங்களைச் சிறுதொடராகவமைத்தும், செய்யுளிலும்சிறிது பயிலுமாறு இடையிடையே சில வெண்பாக்களியற்றிச்சேர்த்தும் இருப்பது பாராட்டத்தக்கது. செட்டியாரவர்கள் கல்வித்திறமையை நோக்குங்கால் இது மிகச்சிறிய காரியமாயிருப்பினும், சிறுவர்களுக்கெல்லாம் கல்வியறிவளிக்கும் சிறப்பினைநோக்குங்கால் பெரியகாரியமேயாம். இவ்வாறு செட்டியாரவர்களது வடமொழி தென்மொழிவல்லமை உலகிற்பயன்படும்படி அவர்களை ஊக்கி உபகரித்துவரும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கஸபையார் நன்மு பற்சி பாராட்டத்தக்கது. இதன் விலை அணு 8. வேண்டுவோர் மேற்கண்ட ஸபையார்க்கெழுதிப் பெறலாம்.

இந்தியர் சரித்திரம்:—இது, திருச்சி ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாஸையங்கார் (எம. ஏ., எல். டி.,) அவர்களால் முதல் இரண்டு மூன்று பாகங்களாகவகுத்துச் சரித்திரநூல்வல்லார் கொள்கைகளையும், சிலா

சாசனங்களாலறியப்படுங் குறிப்புக்களையும் தழுவிக் காலக்கிரமப்படி முறைப்படுத்திப் பாலர்கள் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையில் மிக விரியாமலும் சுருங்காமலும் எழுதப்பட்டிருக்கிறது. காலமென்னுங் கரையற்ற கடலிடைத் தோணிகளோடியதடங்கள்போலத் தோன்றியழிந்தசரித்திரநிகழ்ச்சிகளை ஆராய்ந்தறிந்து முறைப்படத் தொகுப்பது யார்க்கும் அரிதாமாதலால் ஒருசிறிது மாறுதலடையக் கூடுமாயினும் அது தவறாகமாட்டாது. இன்னும், இவர்கள் முன்னமே எழுதிவெளியிட்ட பல்லவர்சரித்திரமென்னும் புத்தகமொன்றும் நம் பார்வைக்கு எட்டியது. அதனால் அவர்களது அருமையான தமிழ் நூலாராய்ச்சியும் நன்குபுலப்படுகிறது. இப்புத்தகத்தை இன்னும் திருத்தமுற மறுமுறை பதிப்பிக்கக் கருதியிருப்பதும் தெரிந்துமகிழ்வடைகிறோம். இவர்களெழுதிய இப்புத்தகங்கள் மாணவர்களுக்குத் தமிழில் நல்ல வசனநடையைப் பயிற்றுவிக்கவும் வல்லனவாயுள்ளன. இந்தியர்சரித்திரம் ஒவ்வொருபாகத்திற்கும் விலை அணா 12. பல்லவர் சரித்திரம் ரூ. 1—4—0. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

சங்கசிந்தாமணி:—இது, அகநானூற்றுப் பதிப்பாசிரியரான ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்களால் பலவருடங்களாக ஆராய்ந்தறிந்த முச்சங்கங்களின் சம்பந்தமான விடயங்கள் பலவற்றையும் தொடர்ச்சியாகவெழுதி அதன் முதற்பகுதியாகவெளியிடப்பட்டது. இதில், சங்கநூற்செய்யுட்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டவிடயங்களைக் கொண்டு கோவைப்பட இடையிடையே வேண்டுந் தொடர்மொழிகளைப் பெய்து சிறுசிறு கதைவடிவமாக்கி யொவ்வொரு சரித்திரமும் எழுதப் பட்டிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்நாட்டின் சரித்திரஆராய்ச்சிசெய்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. உயர்தரகலாசாலைமாணவர்கள் படித்தற்குரியது. இவ்வாறே ஏனைப்பகுதிகளையும் எழுதிவெளியிடுமாறு இப்புத்தகத்தை வாங்கிப்படித்து ஐயங்காரவர்களைத் தமிழ் மக்கள் ஊக்குவாராக. இதன்விலை அணா 12. வேண்டுவோர் ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்கள், கம்பர் விலாசம், மயிலாப்பூர், சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீஹரிஸமயதிவாகரம்:—இது, வைஷ்ணவஸமயக் கொள்கைகளை வெளியிட்டுவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையாகப் பண்டிதர்

ஸ்ரீமத். ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளையவர்கள் பத்திராதிபத்தியத்தில் மதுரையினின்றும் வெளிவருகிறது. இதன் முதன்மூன்றுபகுதிகள் வெளிவந்தன. அவற்றுள், பிரமாணஸித்தமான விஷயங்களே வெளியிடப் பட்டிருக்கின்றன. இப்பத்திரிகை வைணவசமயக் கோட்பாடுகளை யறிய விரும்புமவர்களுக்கெல்லாம் மிகவும் பயன்படத்தக்கது. இதன் வருடச் சந்தா ரூபா இரண்டு. தனிப்பிரதி அணா 4. வெளிநாடுகளுக்கு ரூபா 2—8—0. வேண்டுவோர் பத்திராதிபர், ஹரிஸமயதிவாகரம், (ஸ்ரீசரண்யாபிமதவிஷ்ணுசித்தராமாநுஜஸபை) கூடலழகப்பெருமாள் ஸந்நிதிவீதி, மதுரை என்றவிலாசத்திற் பெறலாம்.

இரக்தாக்ஷிவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணத்தைச்சார்ந்த நல்லூரிலுள்ள ஸ்ரீமத். சிவராமலிங்க ஐயரவர்களாலும், ஸ்ரீமத். ச. பஞ்சாக்ஷரஐயரவர்களாலும் நன்கு கணிக்கப்பட்டுப் பூர்வீகமுறைப்படி பஞ்சாங்கங்களிலறிவிக்கவேண்டிய விடயங்கள் பலவும் விளங்கும்படி தெளிவாயெழுதி 80 பக்கங்களடங்கிய புத்தகரூபமாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 5. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் பதிப்பித்தோர்க் கெழுதிப்பெறலாம்.

தமிழ்மொழியும் சைவசமயமும்:—இது, தேவகோட்டைச் சிவாகமசித்தாந்தபரிபாலனசங்கத்துக் காரியதரிசி திருவாளர். அழ. சுப. பழ. சுப்பிரமணியன்செட்டியாரவர்கள், சிறைச்சிவப்பட்டி ஸ்ரீமீநாக்ஷிசுந்தரேசுவரர்கலாசாலையின் முதலாவது ஆண்டுநிறைவுவிழாவின் சங்கத்தலைமை வகித்தபொழுது நிகழ்த்திய முன்னுரை. இதில், தமிழ்மொழியின் பெருமையைப்பற்றிப் பேசத்தொடங்கி, அது, அம்மொழிப்பெயரமைப்பைப்பற்றியும், தமிழெழுத்துக்களின் கிடக்கைமுறைபற்றியும் ஆராய்ச்சியாலும் கற்பனாசக்தியாலும் சைவசமயக்கொள்கைகளைத் தழுவியுள்ளதாகக்காட்டப்பட்டிருக்கிறது. இவர்களது தமிழபிமானமும் சைவசமயாபிமானமும் பாராட்டத்தக்கன. இதனைத் தேவகோட்டைச் சிவாகமசித்தாந்த பரிபாலனசங்கத்தார் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். வேண்டுவோர் அச்சங்கத்துக் கெழுதிப் பெறலாம்.

ஐக்கிய சங்கங்களின் மர்மங்கள்.

ஜனங்கள் நற்குண நற்செய்கைகளில் விருத்தியடைந்து ஒருவருக் கொருவர் நன்மை பயக்கும் நிலையில் வருவதற்கு முக்கிய ஏதுவாகிய ஐக்கிய நாணயச்சங்கங்கள் நமக்குக் கிடைத்துள்ள ஒரு பெரும்பாக்கிய மே. ஐக்கிய நாணயச்சங்கம் என்னும் தொடர்மொழியின் ஒவ்வோர் பகுதியும் அரியதோர் பொருளை அடக்கியிருக்கிறது. ஐக்கியம், ஒற் றுமை, நாணயம் என்றால் திரவியம் என்றும், சொன்ன சொல் தவறாது நடத்தலென்றும் பொருள்படும். சங்கம் என்பது சேர்க்கை.

ஒற்றுமை யென்பது பலருடைய எண்ணமும், செய்கையும், பேச்சும் ஒரு முக்கிய நோக்கத்தைக் குறித்துள்ளதென்பதைக் காட்டும் சொல்; எவ்விடத்தில் அல்லது எவர்களுக்குள் பிறரிடத்தில் அன்பு, தயை, ஜீவகாருண்யம் முதலிய சற்குணங்களுண்டோ அங்குதான் ஒற்றுமை காணப்படும். எவர்களுக்குள் துவேஷம், பொறாமை, இரக்க மின்மை முதலிய துர்க்குணங்கள் இருக்கின்றனவோ அத்தகைய கூட்டத்தாருக்குள் ஐக்கியம் இராதென்பதில் சந்தேகமேயில்லை. ஆனா லும் களவு, கொள்ளை முதலிய செய்யத்தகாத துஷ்ட காரியங்களைச் செய்பவர் ஒற்றுமையுடன் வாழ்வதாகப் பலரும் உரைக்கக்கேட்டிருக்கி றோம். நிதானித்துப் பார்ப்போமானால் அது நிலையற்றதென்று தெளி வாய்த்தோன்றும். ஏனெனில் ஒருபயனை எதிர்பார்த்துச்செய்யும் எந்தக் காரியமும் அதில் எதிர்பார்த்த பயன் நின்றுபோதும் காலத்தில் அதுவும் நிற்கவேண்டுவதுதானே. பிரயோசனத்தைமட்டும் கருதி யுழைக்கும் வேலைக்காரன் பிரயோசனம் நின்றுபோன காலத்தில் எஜமா னனைவிட்டு விலகுவதுபோல் ஒருகாலத்தில் துர்ச்சனர் ஒற்றுமை விலகிவிடும். நாம் எதிர்பார்க்கும் ஒற்றுமையோ நாளடைவில் நம்மை எல்லா விதங்களிலும் மேன்மையடையச் செய்யும். நமது சங்கங்களின் வியவகாரங்களைக் கவனிக்குங்கால் ஒற்றுமை என்பது சிறிதுமில்லை யென்றே சொல்லவேண்டும். ஒற்றுமை உண்டாயின் நம்பிக்கை என் பது அங்குக்காணப்படவேண்டும். நம்பிக்கையுண்டாயின் வியவகாரங்

களும் பலக்காது. அவரவருடைய வாக்குநாணயமே வில்லங்க சர்ட்டிபிக்கட் ஆக மதிக்கப்படும். வரவரச் சத்தியம், நாணயம் முதலிய நற்குண நற்செய்கைகளில் விருத்தியடைந்து ஒற்றுமை மேலிடவேண்டுமென்று கருதியே மிகவும் அத்தியாவசியமான காலங்களில் தவிர மற்றச்சமயங்களில் வில்லங்க சர்ட்டிபிக்கட் வாங்காமலிருப்பது நல்லது என்று கனம் ரிஜிஸ்டிரார் அவர்கள் கூறுகிறார்கள்.

நற்குணத்தில் பழகவேண்டுமானால் அதற்குவரும் இடையூறுகளைத் தடுத்து நல்லவழிப்படுத்தத் தகுந்த சாதனம் வேண்டும். அவ்வித இடையூறுகள் பொறாமை, அசூயை, சோம்பேறித்தனம் முதலானவை. அரசனுக்கு மந்திரி எப்படியோ அப்படி ஒவ்வொருவருக்கும் தகுந்த சிநேகிதர்கள் வேண்டும். கட்டாயத்தினால் நற்செய்கை செய்தாலும் அதுவே நாளடைவிற் பழக்கமாகி இயற்கைக் குணமாக மாறிவிடும். இவைகளுக்கு முக்கிய சாதனமாயிருப்பது சங்கம்தான். அந்தச்சங்கம் சத்சங்கமாயிருத்தல்வேண்டும். காருண்ய கவர்ன்மெண்டார் இத்தகைய சத்சங்கங்களை ஆதரிக்கவேற்படுத்தியுள்ள சட்டதிட்டங்களைக் கவனித்தால் அவைகளை இதுகாறும் தழுவாமலிருப்பது நம்முடைய குறை என்று ஒவ்வொருவரும் மனதிற்குள்ளாவது சொல்லிக்கொள்ளத்தான்வேண்டும்.

முதலாவதாகச் சங்கத்தின் அங்கத்தினராவதற்குரிய லக்ஷணங்களைக் கவனிப்போம். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் மெம்பராகலாம் என்பதும், அவர் அச்சங்கம் ஏற்படுத்தப்படும் நகரம் அல்லது கிராமத்தில் வசிப்பவராயிருக்கவேண்டுமென்பதும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதன் உட்கருத்தென்னவெனில்: வியவகாரத்தில் உணர்ச்சியும் காரியாகாரியங்களைப் பகுத்தறியும் சக்தியும் அவர்கட்குவேண்டும் என்பது வயதைக்குறிப்பிட்டதால் ஏற்படுகிறது. அவ்வூரிலேயே வசிப்பவராக இருத்தல்வேண்டும் என்பதால் அச்சங்கத்திலுள்ள ஒவ்வொருவரையும் மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதும் கேவலம் இரண்டொருவரிடம் பழகுவதைக் காட்டிலும் அனேகருடன் பழகுவதால் அடையத்தக்க பயனை நாம் அடையவேண்டும் என்பதும் வெளிப்படுகிறது. மேலும் ஒரு சங்கத்தார் என்றிருந்தாலும் அவர்கள் பரஸ்பரம் உதவிபுரிவதற்கான சமயம் வாய்க்கும்போது, தத்தம்

காரியங்களை எளிதில் சாதித்துக்கொள்ளலாம் என்பதும் ஒன்று. ஆனமட்டும் பற்றியே ஏழைகளாகவிருந்தாலும் சத்தியம், நாணயம் (சொல்லுறுதி) எவ்விதத்திலும் பிறருக்குத் தம்மால் எவ்விதநஷ்டமும் ஏற்படக்கூடாதென்ற எண்ணமும் அதற்கான முயற்சியும் ஆகியவற்றை உடையவர்களாயிருந்தால் அவர்கள் இச்சங்கங்களில் மெம்பர்களாவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. உபகார சிந்தையுள்ள மனிதர்களும் சேர்ந்து வியவகாரங்களைச் சரிவர நடத்த உதவி புரியவேண்டும் என்பதும் அதிற் பொதிந்துள்ள கருத்தே. நல்லோர்கூட்டம் என்றது எவனும் தன்னைச் சங்கத்தில் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளும்படி பஞ்சாயத்தாரைக் கட்டாயப்படுத்த நியாயமில்லை யென்றவாக்கியத்தால் அசத்துக்களின் சேர்க்கை ஏற்படுவதாயிருந்தால் அதை நீக்கிவிடவேண்டும் என்று குறிக்கப்பட்டது.

சங்கத்தில் மெம்பராகும் ஒருவர் மூன்று அல்லது 5வருஷம் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்டகாலம் வரையில் அவசியம் மெம்பராகவேயிருந்து தீரவேண்டுமென்றும், அதன்பிறகும் மகா சபையார் அல்லது பஞ்சாயத்தார் சம்மதித்தால்மாத்திரம் அவர்கள் விலகிக்கொள்ளலாமென்றும் ஏற்பட்டிருக்கும் விதியைக் கவனிக்க, ஒரு சங்கம் ஏற்பட்டால் அதன் பலன் நன்மையாகும் அல்லது தீமையாகும் என்பது சிறிது காலத்தில் காணமுடியாதாதலால், சிறிது நீண்டகாலம் பரீக்ஷித்தே பிறகு அதன் பலாபலனை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி நாம் நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் காட்டுகிறது. "ஒரு வஸ்துவை ஏழு வருஷகாலம் வைத்துவை, அதன் உபயோகம் உனக்குத்தெரியும்" என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழியுண்டு. நாம் எதையும் பரபரப்பாய் ஒரு விதமாக நிர்ணயித்துவிடக்கூடாதென்றும், இப்படிச்செய்வதானது நமது முன்னேற்றத்திற்கு இடையூறென்றும் கருதியே இந்நிபந்தனை ஏற்பட்டுள்ளது.

டிபாசிட்டுகள் (பணம் போட்டுவைத்தல்) தனிகர்களுக்கு உபகார சிந்தையையும் ஏழைகளுக்கு வருவாயின் மார்க்கத்தையும் எளிதிற் கற்பிக்கிறது. தனிகர்கள் தங்கள் பணத்தை லேசான வட்டிக்கு ஓர் சங்கத்தில் போட்டுவைக்கிறார்கள். அந்தப் பணத்தைச் சற்று அதிக வட்டி கொடுத்து ஏழைகள் வாங்கி உபயோகிக்கிறார்கள். ஏழைகளும்

கொஞ்சம் கொஞ்சமாகத் தொகைகளை டிபாசிட்செய்துவந்தால் பலதுளி பெருவெள்ளம் என்பதுபோல் நாளடைவில் பெருகுவதோடுகூடத் தாம் போட்ட முதலுக்கு அதிகம் கிடைக்கிறதென்ற ஆவலுடன் சிக்கனத்தில் பயில்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் சம்பந்தமாயுள்ள விதிகளும் ஜனங்களின் நன்மைக்காகவும் முக்கியமாய் ஏழைகளுக்கு உபயோககரமாகவும் ஏற்பட்டிருக்கின்றன. கிராமசங்கங்களின் நிபந்தனைகளைக் கவனித்தால் ஒவ்வொருவனும் தனக்குள்ள சௌகரியங்களையும் பிறர்க்குத் தாராளமாய்ச் சொல்லவேண்டி வருகிறது. மற்றவர்களும் அதன் நியாய அநியாயத்துக்குத் தக்கபடி அவனுக்கு நன்மைபுரியும் வகையில் பைசல்செய்யவேண்டி வருகிறது. இந்தக் கருத்துச் சாதாரணமாய் விளங்குவது அரிது. அறிய முயல்வது அதனிலும் அரிது.

மற்றெல்லா நிபந்தனைகளையும் காட்டிலும் கடன்சம்பந்தமான நிபந்தனைகளே இச்சங்கங்களின் ஒருமையை நன்குவிளக்குகின்றன. கேவலம் லேவாதேவி நடத்தும் ஓர் சாவகாரி ஒருவனுக்குப் பணம் கடன் கொடுக்கையில் தன் பணத்தைத் திரும்பவாப்பற்று வகையிருக்கிறதா வென்பதைமட்டிலும் கவனிப்பானேயல்லாமல் வேறெதையும் கவனிப்பதில்லை. ரூபாய் 5000 பெறுமான சொத்துள்ள ஒருவனுக்கு சாவகார் ரூபாய் 1500 அல்லது 2000 கூட யோசனைபண்ணுமல் கொடுக்கத் தயாராக இருப்பான். இச் சங்கமோ அப்படிச்செய்யத் துணியாது.

பின்வரும் கேள்விகளுக்குத் தகுந்த சமாதானம் (பதில்) வந்து திருப்தியானலொழிய கடன் பட்டுவாடாவாகாது. (1) இவனுடைய (மனுதாருடைய) சொத்திலிருந்து தற்கால வருமானம் என்ன? (2) இதர வருமானம் ஏதாவது உண்டா? (3) இவ்விரண்டு வகையிலிருந்தும் வரும் வருமானம் இவன் தன் குடும்பத்தைச் சம்ரக்ஷிக்கப் போதுமானதா? (4) போதுமானல் இப்போது கேட்கும் கடன் என்ன உபயோகத்திற்காக? (5) அது உள்ளபடி நஷ்டத்தை உண்டாக்கக்கூடாததான முயற்சிதானு? (6) அம்முயற்சியால் தானும் சிறிதுலாபமடைந்து சிறிதுசிறிதாகவாவது கடனைத்தீர்க்கமுடியுமா? (7) ஏற்கனவே உள்ள வருமானம் போதாதகாரணத்தால் கடன்கேட்கும்பக்ஷத்தில் கேட்கும் தொகையைக்கொண்டு வருவாய்க்கு இடமான ஏதாவது முயற்சிசெய்

னா? (8) அந்த முயற்சி சரியான முயற்சிதானா? அதனால் மேன் மேலும் கஷ்டம் அதிகரிக்காமலிருப்பது அவசியம்.

ஒருவனுக்கு ரூ. 5,000 பெறுமான நிலங்கள் இருக்கின்றன. அவனுக்கு நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் எச்செலவும் நீக்கி ரூ. 150:க்கு மேல் ரூ. 200-க்குள் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய குடும்பத்துக்கு மாதம் 12 ரூபாய்க்குமேல் 17 ரூ. வரையில் தான் செலவுசெய்யலாம். அப்படிச் செலவுசெய்தால் ஒரு காசுகூட மிஞ்சாது. மேல்விரித்த மாதிரியான குடும்பத்தார்களுக்கு அவர்களுடைய ரூ. 5,000 பெறுமான நிலங்களின் ஜவாப்தாரியாய் ரூ. 100 எனும் கடன்கொடுக்கப்படமாட்டாது. அப்போது தான் வாங்கும் தொகையினால் கிடைக்கும் வருமானம் தன் குடும்பத்துக்கும் கண்டு சுமார் ஒன்று அல்லது ஒன்றரை வருஷத்திலாவது கடனைத் தீர்க்கத்தக்கதாயிருக்கவேண்டும். இவ்வளவு பரிசீலனைக்கு உட்பட்டுப் பட்டுவாடாவாகும் கடன்கள் வாங்குபவருக்கும் கொடுப்பவருக்கும் கொடுக்கக்கூடிய ஆனந்தத்திற்கு அளவும் உண்டோ? இவ்விதம் காரியங்களை நடத்துபவரிடம் ஈசுவரகிருபை தானே வருமன்றோ?

மேலும் ஒரு விஷயம் இங்கு சொல்லப்படவேண்டும். ஒரு காரியத்தையுத்தேசித்து வாங்கப்பட்ட தொகை அதேகாரியத்துக்கு உபயோகப்படாவிட்டால் உடனே தொகை வாபஸ் செய்யப்படவேண்டுமென்று விதித்திருப்பது ஓர் சிலாக்கியம். இதற்குக்காரணம் ஒருவன் வீடுகட்டுவதற்கென்று 100 ரூபாய் வாங்குகிறான். திடீரென்று மழை பெய்து வீடுகட்டுவதற்குரிய சாமான்கள்வாங்கவோ வேலைநடத்தவோ முடியாமற்போயிற்று. அதைக்கொண்டு மாடு வாங்குகிறேன் என்கிறான். இதில் கவனிக்கவேண்டியவிஷயம் இரண்டுண்டு: வீடுகட்டல் அல்லது மராமத்துச்செய்தல் 1. உழவுமாடு வாங்குதல் 1. ஆக இரண்டும் அவசியமென்று வைத்துக்கொள்வோம். அதில் எது அத்தியாவசியம் என்பதைக் கவனித்துத்தான் பணம்கேட்கிறான். தன் சக்திக்கு ரூ. 100-க்கு மேல் இந்தச்சமயம் கடன் வாங்கக்கூடாதென்பது அவன் துணிபாயிருந்திருக்கவேண்டும். ஆகையால் வீடுகட்ட எத்தனித்த ஒருவன் அது செய்வதற்குப்பதிலாக அதே பணத்தை மாடுவாங்குவதற்கு உபயோகிப்பு

தால் பின் வீடெட்டவேண்டிய அவசியம் சித்தமாயிருப்பதால் அவன் 200-ரூபாய்க் கடனுக்கு உள்ளாகவேண்டிவரும்.

1. ஐக்கிய நாணயச்சங்கங்கள் நமது சகலவிதமான விருத்திக்கும் ஏற்பட்ட ஒரு முக்கியசாதனம். (2) அச்சங்கங்களின் நடவடிக்கைகளைப் பஞ்சாயத்தார் சரிவர நடத்திவந்தால்மாத்திரம் அதன் பலனை அனுபவிக்கலாம்; இல்லாவிடில் அது நம்மை அடிமையினும் அடிமையாக்கிவிடும். (3) ஆகையால் பஞ்சாயத்தார்கள் நடுவுநிலைமை தவறாதவர்களாய் இருந்து பிறரையும் தவறுங்காலத்தில் சிக்ஷித்து வசப்படுத்தி ஒழுங்குக்குக் கொண்டுவர முயலவேண்டும். (4) இவ்வாறு செய்வது தான் ஜனசமூகத்தை முன்னுக்குக்கொண்டுவரும் முறை. (5) இது தான் தேசத்துக்கே அனுகூலமான காரியம்.

இந்த இயக்கம் எந்நாட்டுக்கும் புதியதாயிருப்பினும் இந்நாட்டுக்கு இது புராதனமாயுள்ள சொத்து. எந்தக்கிராமத்தில் போய்ப்பார்த்தாலும் 'சமுதாயம்' என்ற பெயரோடுகூடிய நிலங்கள் காணப்படும். அதாவது ஒரு கிராமத்திலுள்ள மகாஜனங்களுக்கு அந்த நிலங்களின் ஆமிஸம் விதாசாரப்படி பாத்யதையுள்ளது என்று அர்த்தம். அப்படிப்பட்ட ஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கவேண்டியது என்றும், பொதுவான கண்மாய், கால், மராமத்து, காடுகாவல், கோவில்கள், பொது தருமம், ஆகிய காரியங்களுக்கு இந்த ஐவேஜைக்கொண்டு உசிதப்போல் மகாஜனங்கள் ஒன்றுகூடி ஆலோசித்து நடத்துவதென்றும் ஏற்பட்டுள்ளது. ஆனது பற்றியே "எத்தால் வாழலாம்" என்று வினவும் "ஒத்தால்வாழலாம்" என்று விடையுமாகப் பழமொழிகள் வழங்கிவருகின்றன.

நாம் ஐக்கியத்தில் பழக்கப்படின் நுனிக்கநும்பிலிருந்து அடிக்கரும்புவரை ருசிபார்ப்பவன் வரவர அதிகமான தித்திப்பை அடைவதுபோல் அனுகூலம் அதிகரிக்கப்பெறுவோம்.

சுப்பிரமணிய சாஸ்திரி,

இராமநாதபுரம் யூனியன் பிரசிடெண்டு,

மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும்.

விஷயவரிசை.

சென்ற கார்த்திகைத் திங்கட் செந்தமிழிலே திருவாளர் இ. மு. சுப்பிரமணியபிள்ளையென்பார் "மணிமேகலை" எனப் பொதுமொழியிட்டெழுதியதொரு பொருளுரை காணப்பட்டது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கொள்கையானும் சரிதப்போக்கானும் தம்முண் மாறுபட்டுள்ளன; மணிமேகலையிலே வடசொற்கள் நனிகலந்துவிட்டன; ஆதலிற் சிலப்பதிகாரக்கேட்டருளிய தண்டமிழ்ச் சாத்தனாரும் வேறு; மணிமேகலை செய்திட்டவரும் வேறு; ஞானவெட்டி என்னும் நூலுக்குத் திருவள்ளுவனார் பெயருக்கு ஆசிரியரொன்றாற் போல மணிமேகலை என்னும் நூலுக்கும் தண்டமிழ்ச்சாத்தனார் ஆசிரியர் ஆயினர் என்றாங்குப் பிள்ளையவர்கள் தமது பொருளுரையை நனியாய்ந்து புனைந்து வெளியிட்டுப் போந்தார்.

பிள்ளையவர்கள் ஆராய்ந்த முடிபுகள்.

I. சிலப்பதிகாரக்கூற்றுக்கள்.

(1) கண்ணகியம்மையார் தம் காப்புக்கடை நிறுத்தற்கு முன்னரேயே மணிமேகலை சோதைத்தாமம் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்தறம் பூண்டாள் என்பது.

(2) சித்திராபதியிடத்திலே பருவம் அடையுங்காறும் இருந்து வந்த மணிமேகலை அதன்பின் மாதவியோடு இருந்துவந்தாள் என்பது.

(3) மணிமேகலை துறவுபூண்ட கொள்கையிலே மாதவியின் நற்றாய்போலச் சித்திராபதி காணப்படுகிறாள் என்பது.

(4) மாதவி, மணிமேகலை என்னும் இவர்கள் குழல்களைந்து துறவுபூண்டனர் என்பது.

II. மணிமேகலை என்னும் நூலின் கூற்றுக்கள்.

(5) மாதவி மணிமேகலை என்னுமிவர்கள் குழல்களைந்தவராகக் கூறப்பட்டிலர் என்பது.

(6) மாதவியோடிருந்துவரும் மணிமேகலையைக் கணிகையர் கோலங் கொள்ளுமாறு சித்திராபதி மயக்கி வற்புறுத்துகிறாள் என்பது.

(7) சித்திராபதி பணைப்பேய்பிடித்து மாதவி மணிமேகலை என்னும் இவர்களை மயக்கிவருதலிலே ஓய்வுறாது நிலைபெறுகின்றாள் என்பது.

III. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னுமிவற்றமைந்த முரண்பாடுகள்.

(8) மணிமேகலையிற் கூறிய உதயகுமாரன் சாவு; புகாரழிவு என்னுமிவை சிலப்பதிகாரத்திற் காணப்பெற்றில என்பது.

(9) கண்ணகியம்மை திருக்கோயிலுட்சென்று மணிமேகலை வணங்கியது சிலப்பதிகாரத்திற் காணப்பட்டிலது என்பது.

இவற்றின் மறுப்பும், உண்மையிலை நிறுப்பும் கண்ணகியம்மைமுதலியோர் வரலாறு முதலியன விளக்கப்படும் இடங்களிலே ஏற்றபெற்றி கூறப்படும்.

I. கண்ணகியம்மை சுவர்க்கமும், செங்குட்டுவன் வழிச்செலவும்.

வைகாசித்திங்களின் கடைப்பகுதியிலே கண்ணகியம்மையோடு கோவலன் பூம்புகார் நீத்து மதுரைசெல்வான் போந்தனன். ஆடித் திங்களிற் கண்ணகியம்மையால் மதுரை எரியுண்டது.

> "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
> தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
> வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
> வுரைசான் மதுரையோ டரைசு கேடுறும்".

(சிலப். XXIII 133–36).

இதுகழிந்த பதினான்காம் நாளிறுதியிலே வஞ்சிநாட்டிலே திருச் செங்குன்றிலுள்ள ஒரு வேங்கைமரத்தினடியிலே இருந்த கண்ணகி யம்மை கடவுள்வடிவொடு விண்ணியங்கூர்திமிசைவந்த கோவலனொடு ஒருங்கு வந்தேறிச் சுவர்க்கம் புக்காள்.

> "எழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
> றொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திய
> பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
> வாடா மாமலர் மாரி பெய்தாங்
> கமரர்க் கரசன் றமர்வந் தேத்தக்
> கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
> வான வூர்தி யேறினண் மாதோ
> கானமர் புரிகுழற் கண்ணகி தானென்".

(சிலப். XXIII 193–206.)

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதைக் குறவர்களானறிந்து அவளது பெருமை முதலியவற்றை அங்குவந்து தன்னைக்கண்டு தண்கடிமைபக்கத் துக் காதலோடிருந்த தண்டமிழாசான் சாத்தன் உரைத்த உணர்ந்து கொண்டு பத்தினிக்கடவுளைப் படிமத்தெழுதிப் பரசல்வேண்டுமென விரைந்து இமயஞ்சென்று கற்கால்கொண்டு கங்கைப்பேர்யாற்றின் மங் கலநீர்ப்படுத்தி அதன்றென்கரையிலே அரசுவிளங்கிருக்கையிற் செங் குட்டுவன் அமர்ந்தினிதிருந்தான்.

ஆடித்திங்களின் ஈற்றுப்பகுதியிலே குன்றக்குறவர் வழியாகக் கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதை அறிந்துகொண்ட செங்குட்டுவன் ஆவணித்திங்களிலே வஞ்சியிலிருந்து புறப்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் புறப்பட்டவன் இமயமுதலாகிய இடங்களுக்குச் சென்று முப்பத்திரண்டாந்திங்களாகிய சித்திரையிலே கங்கைப்பேர்யாற்றுத் தென்கரையிலே அரசுவிளங்கிருக்கையில் அமர்ந்தினிதிருத்தல் வேண்டும்.

"இறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே". (சிலப். XXVII-148-150.)

II மாடலனுஞ் செங்குட்டுவனும்.

தாழ்நீர்வேலித் தலைச்செங்கானத்து நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை மாடலன் என்பான் மாதவமுனிவன் மலைவலங்கொண்டு குமரியம்பெருந்துறை கொள்கையிற் படிந்துவருபோது மதுரைமாநகர்ப் புறஞ்சேரியிற் கோவலன் கண்ணகியம்மை என்பவர்களைக்கண்டு நெஞ்சம் புண்ணாகி அன்னவர்களை மதுரையணுகி யமைந்தினிதிருக்குமாறு ஆணையிட்டான். ஆணையிட்டவன் பின்னர் வாய்வாட்டானைத் தென்னவன் கூடலுட்புக்கு வள்ளற் கோவலன் வாள்வாய்ப்பட்டதையும், மதுரையபோ டரசுகேடுற்றதையும், கண்ணகியம்மை வஞ்சிசென்று காதலனொடு வானகமருவியதையும், அதனையறிந்த மாதரி அடைக்கலமிழந்தேன் என்றனள்கொண்டு ஆருயிர்நீத்ததையும் ஒழிவின் றுணர்ந்துகொண்டு தன்பதிப் பெயர்ந்துபோந்து மாசாத்துவான் முதலியோர்க்கு அவற்றையெல்லா மறிவித்தான்.

[இவன் ஆடித்திங்களின் கடைப்பகுதியிலே மதுரையகன்று புகார் அடைதற்கு இரண்டு திங்கள் வேண்டுமாதலிற் புரட்டாதித்திங்களிற்றான் கண்ணகி கோவலன் சுவர்க்கம்புக்கதை மாசாத்துவான் முதலியோர்க்கு உணர்த்தியிருத்தல் வேண்டுமென்க.]

கோவலன்றாதையும், கண்ணகியம்மை தாதையும் மைந்தற்குற்றதையும், மடந்தைக்குற்றதையும் கேட்டுக் கொடுந்துயரெய்திப் பிக்ஷுகளின் பள்ளியையடைந்து துறவுபூண்டனர். அன்னவர் மனைவியரும் அத்துயர்க்காற்றாது துயிர்நீத்தனர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த மாதவி சித்திராபதியைநோக்கி 'யான் நற்றிறம் படர்கேன்' நீ பூப்படையாத மணிமேலையை வான்றுய ருறுக்குங் கணிகையர்கோலங்காணாதொழிகென அறிவுறுத்தி அவள்பா லொப்புவித்துத் துறவுபூணும்வேட்கை பிடர்பிடித்துந்துதலிற் பிக் குணிப்பள்ளியை மேவி ஐம்பேரொழுக்கம், முறைபிறழுணுண்ணாமை ஆகிய இருமூன்றறங்களையும் ஈராண்டுகாறும் இனிது கைக்கொண் டொழுகிவாலாயினள்.

"ஆங்ஙன மன்றியு மாபிழை கேளா
யீங்கிம் மாத ருறைவிடம் புகுந்தேன்
மறவணை நீத்த மாசறு கேள்வி
யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக்
காதல னுற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிகென் றருளி
யைவகைச் சீலத் தமைதியுங் காட்டி
யுய்வகை யிவைகொளென் றரவோ னருளினன்."
(மணி. II 58–69.)

[சிலப்பதிகாரம் நீர்ப்படைக்காதை 52-ஆம் வரி முதலாகியவற்றை யும் நோக்குக.]

["இருபது பிராயத்திற்குக் குறைவில்லாதவர்கள் துவராடையை உடுத்திக்கொண்டு தலைமுழுவதையும் முகமுழுவதையும் சிரைத்துக் கொண்டு நோககவே ஸந்யாஸத்தை அடையலாம்" என்னும் பௌத்த சங்கவிதி யுண்மையானே மாசாத்துவானும், மாநாய்கனும், கோவலனும் கண்ணகியம்மையுஞ் சுவர்க்கம்புக்கார் என்றதை மாடலன்பால் அறிந்த வுடனே துறந்தனர்.

"பெண்பாலார் இரண்டுவருஷகாலம் பஞ்சசீலம், அகாலபோஜனத் தியாகம் ஆகிய ஆறுதருமங்களையும் கைக்கொண்டொழுகிய பின்புதான் தமக்கு ஸந்யாசத்தைத் தரும்படி ஸங்கத்தின் உபயபாகத்தாரையும்

வேண்டிக்கொள்ளலாம்" என்னும் விதிகொண்டு மாதவி இரண்டாண்டு வரையும் ஒழுகிவந்தாள்.]

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு இருபத்தாறு திங்கள் கழிந்தன. இது புரட்டாதித்திங்களாகும். இரண்டு இந்திரவிழாக்களுக்கு இதுவரையும் மாதவி சென்றிலள். இத்திங்களிலே மாதவி கோதைத்தாமங் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்து அறமேற்கொண்டாள்.

இக்கொள்கையை, சுருக்கமும், மாடலனுக்குப் பௌத்தமதத்தின் மேல் இயல்பாயமைந்த வெறுப்பும் அவளது கூந்தற்கழிவிற் கிரக்கமும் பிறவும்கருதி மாடலன்கூற்றாகப் பின்வருமாறு சிலப்பதிகாரங்கூறும்.

"மற்றது கேட்ட மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுய ருறுக்குங்
கணிகையர் கோலங் காணா தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ள."

(சிலப். XXVII 103-108).

பிள்ளைபவர்கள் இவ்வடிகளை ஆதாரமாகக்கொண்டு கோவலன் கண்ணகியம்மை என்பவர்கள் சுவர்க்கம்புக்கதை மாடலனு லறிந்தபொழுதே மாதவி குழல்களைந்து துறவுபூண்டாள் என்று கூறுகின்றனர்.

கண்ணகியம்மை கோவலன் என்பவர்களின் தந்தையர் துறவு பூணற்கும், அவர்தம் மனைவியர் மக்களைநீத்த துயருக்கு ஆற்றாதவராய் உயிர்நீத்தற்கும், மாதவி கோதைத்தாமங் குழலொடுகளைந்து போதித்தானம் புரிந்தறங்கோடற்கும் தானே காரணன் என்றுகருதிய மாடலன் தனக்கமைந்த பாவத்தையொழிப்பான்விழைந்து நன்னீர்க்கங்கையாடற்குப் போந்தான்.

"என்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி
னன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்"

(சிலப். XXVII 109-110.)

[மாடலன் கங்கைக்கரையிலே சேரன் செங்குட்டுவனிடத்தே மணிமேகலை துறவைக் கூறிலன். ஆதலின் அவளது துறவுக்கு முன்னும் மாதவி துறவை அவனுழையிற் கூறினனாதலின் இவளது துறவிற்குப் பின்னும் அமைந்த இடைக்காலமே இவனது வழிச்செலவு நடந்தகாலமாகும்.

மாதவி குழல்களைந்தமை கேட்டவுடனே இவனுக்கு ஆறாத்துயரம் வந்திருத்தல் வேண்டும். வரவே, மேற்கூறிய எல்லாத் தீச்செயல்களுக்குந் தன்னையே காரணனாக எண்ணினனாதலின் மாதவி துறந்ததற்கு அடுத்த திங்களாகிய ஐப்பசியே இவன் புகாரைவிட்டுப் புறப்பாடுற்றதுவாகும்.

தென்னாட்டிலிருந்து காசியை அடைதற்கு ஆறுதிங்களே வேண்டுமென்பது பண்டையோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததொன்றாகும். ஐப்பசித்திங்களிற் புறப்பட்ட மாடலன் சித்திரைத்திங்களிலே கங்கையை அடைந்துவிட்டான்.

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன. மாடலன் சேரன்செங்குட்டுவனோடு அளவளாவியிருந்து வரும்போழ்து ஒருகணிபெழுந்து அரசே நீ வஞ்சியைநீங்கி முப்பத்திரண்டுதிங்களாயின என்று கூறினன்.

"இறைபோன் செவ்வியிற் கணிபெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த"

(சிலப். XXVII 148–150)

இதனான் மாடலன் வழியாகக் கோவலன் கண்ணகியம்மை என்னுமிவர் சுவர்க்கம்புக்கதை, மாதவி அறிந்தது முதலாக மாடலன் தனது பாவமகற்றக் கங்கைபோந்த திருதியாகவுள்ள எல்லாவற்றிற்கும் அமைந்த காலவரிசையின் உண்மை அங்கைக்கனியாதல் காண்க.

[இச்சித்திரைக்கும் மாதவி இந்திரவிழாவுக்குச் சென்றிலள், இதனோடு மூன்றுவிழாக்கள் கண்ணகியம்மை சுவர்க்கம் புக்கபின்னர் நடந்தேறிய]

போந்த மாடலன், கண்ணகியம்மையார் படிமக்கல்லை நன்னீர்க் கங்கையாட்டி, அதன் தென்கரையிலே அரசுவிளங்குமளியிலே வீற்

திருந்த செங்குட்டுவனைக்கண்டு, கோவலன் கண்ணகியம்மை என்னு மிவர் சுவர்க்கம்புக்க காரணத்தானே அவர்தம் அன்னையர் உயிர்நீத்தது முதலாக மாதவி துறந்ததுவரையும் நடந்திட்ட வரலாறுகளை, அவ னுக்கு விளங்குமாறு விளம்பினன்.

> "மாடல மறையோன் வந்து தோன்றி
> வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
> கானற் பாணி கனக விசயர்த
> முடித்தலை நெரித்தது" (சிலப் XXVII 48–51)

[சிலப். XXVII 67–110 என்னுமிவ்வடிகளையு நோக்குக.]

III. செங்குட்டுவன் வஞ்சிசேர்தல்.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க முப்பத்துநான்காந் திங்களும், செங்குட்டுவன் வஞ்சிநீங்கிய முப்பத்துமூன்றாந்திங்களுமாகிய வைகா சித்திங்களிலே மாடலனோடு செங்குட்டுவன் கங்கையிலிருந்து வஞ்சிக் குப் பிரயாணமாயினன். பகைவரை வெல்லுதல், படிமக்கல்லெடுத்தல் முதலாகிய காரணங்களானே கங்கைக்கரை சார்தற்கு எண்ணான்குதிங் கள் சென்றனவேனும்; வஞ்சியைநீங்கி நாள் பலவானமையானும், ஆண் டிருந்து வந்தபொழுதே நட்பாசர்களிடங்களிலே தங்கிவந்தமையானும் கண்ணகியம்மையைப் பிரதிஷ்டைசெய்தலி லூக்கம் நனிபடைத்திட்ட மையானும் இன்ன பிறவாற்றானும் அவன் வஞ்சியைஅடைதற்கு இரு பது திங்களே போதியவாகும்.

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு ஐம்பத்துநான்கு திங்களாயின. இதுவே தைத்திங்களாகும்.

IV. கண்ணகியம்மை பிரதிஷ்டை.

செங்குட்டுவன் இமயஞ்செல்வான் புறப்பட்டபொழுதே மங்கலா தேவியின் கோட்டப்பணியும் தொடங்கப்பெற்றிருத்தல் வேண்டும். அவன் பின்னர் வஞ்சியை அடைதற்கு ஐம்பத்துநான்குதிங்கள் ஆயின மையின் அவனடைவிற்குள்ளேயே அந்தப்பணி நிறைவுபெற்றிருத்தல் வேண்டும். அவன் வஞ்சிக்குவந்தபின்னர்க் கண்ணகியம்மையின் தெய் வப்படிமம் எழுதுவதற்கும், எழுதிய படிவத்தை நாட்டுவதற்கும் மூன்றுதிங்கள் சென்றிருத்தல்வேண்டும். ஆதலிற் கண்ணகியம்மை

திருவுருவம் பங்குனித்திங்களிலே நிறைவுபெற்றுச் சித்திரைத்திங்களிலே கருப்பக்கிருகத்திலேநாட்டப்பட்டு, நாட்டப்பட்டமைக்கேற்ற பிரதிஷ்டாவுற்சவமுதலியன நடைபெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வுற்சவ முதலியன வைகாசித்திங்களிலே இருபதாந்தேதியளவிலே நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடத்தியிருத்தல்வேண்டும். ஆனித்திங்களிடைப்பகுதியிலே மங்கலாதேவியின் ஆட்டைத்திருவிழா வாரம்பித்து ஆடித்திங்களிடைப்பகுதியிலே நிறைவுபெற்றிருத்தல் வேண்டும். அந்நிறைவு பெற்றநாளோ கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க நாளெனக.

"கைவினை முற்றிய தெய்வப் படிவத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கல முழுவதும் பூட்டி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்திக்
கடவுண் மங்கலஞ் செய்கென வேவினன்
வடதிசை யடக்கிய மன்னவ ரேறென்"

என நடுகற்காதையினும்,

"கோயில்புக்க நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்கு" என வாழ்த்துக் காதையினும்,

"கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார்"

என வரந்தரு காதையினுங் கூறியன ஆராய்தற்பாலன.

[கண்ணகியம்மை பிரதிஷ்டாகாலத்திற் றண்டமிழ்ச் சாத்தனார் வாராமைக்குரிய காரணமுஞ் சிந்திக்கற் பாலது.]

V. மணிமேகலை துறவு.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கபின்னர் நடந்த இரண்டுவிழாக்களுக்கு மாதவியே வரவில்லையென்னுஞ் சினம் அவ்வூரார்தமக்கெல்லாம் மிகுந்துவந்தது. எனினும் அம்மாதவி, கோவலன்மேல்வைத்த அன்பின் மிகுதியும், அவனதுபிரிவால் இவளதாற்றாமையும், மணிமேகலை விரைந்து பூப்படைந்திலள், ஆதலின் அவள் அடுத்த சித்திரைவிழாவிற்கு வருதல்கூடுமென்று வைத்திட்ட நம்பிக்கையும் பிறவுமே இவள்மேல் ஊரார்வைத்துவருஞ் சினந் தணிந்துவருதற்குக்காரணங்களாயின,

இச் சித்திரைத்திங்களை அடுத்துவந்த புரட்டாசித்திங்களிலே மாதவி குழல்களைந்து துறவுபூண்டாள். அவளது வடிவம் வேறுபாடுற்றமைக்குப் பெரிதும் இரக்கங்கொண்ட ஊரவரெல்லாரும் பழிதூற்றற்கு மூந்திவிட்டனர். இப்புரட்டாசியை அடுத்துவந்த சித்திரைத் திங்களிலே அவண்மேற் குறுகிய பழி மிகப்பெருகிவிட்டது.

அத்திங்களிலே மணிமேகலை பூப்படைந்துவிட்டாள். அவள் அடுத்துவரும் நான்காம்விழாவிற்கு வருதல்கூடும் என்னும் நம்பிக்கை மிகுதியான் மாதவிமேலேறியிருந்த பழிச்சுமை சிறிதுகுறைவுற்றது.

இதனையடுத்த வைகாசித்திங்களிலே சித்திராபதி நினதுமகள் பூப்படைந்துவிட்டாள்.

"மையீ ரோதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்க
ணவ்விய மறிந்தன வதுதா னறிந்தில
ளொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
நித்தில விளநகை நிரம்பா வளவின
புணர்முலை விழுந்தன புல்லக மகன்றது
தளரிடை நுணுகலுந் தகையல்குல் பரந்தது
குறங்கிணை திரண்டன கோலம் பொறாஅ
நிறங்கிளர் சீறடி நெய்தோய் தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள னாகக்
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப" (சிலப். XXX 1–23.)

உரைக்கப்பட்ட மாதவி மணிமேகலையை நோக்கி எனது மகளே ஈண்டு வருகவென்று அழைத்து அவளுக்கு ஐம்பேரொழுக்கம் பொழுதிலானித்தல் ஆகிய அறப்பொறங்களையும் ஸங்கத்தாரால் உபதேசிக்குமாறு புரிந்தாள். இவ்வுபதேசம் வைகாசித்திங்களில் நிறைவேறியது.

[சிலப்பதிகாரத்திலே,

"வருகவென் மடமகள் மணிமேகலையென்
றுருவி லாள னொருபெருஞ் சிலையொடு

விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"

என்று கூறப்பட்டுளது. செங்குட்டுவன் கண்ணகியம்மையின் கடவுண்மங்கலங் காணியவந்த தேவந்திகையைச் செவ்விதினோக்கி வாயெடுத்தாற்றிய மணிமேகலை யார்? அவள் துறத்தற்கு ஏது யாது? என்று வினவியபோழ்து அவளால் மேற்காட்டிய பிக்குணிஸங்கத்தைச்சார்ந்து இரண்டுவருஷஞ்சென்றபின்பே துறவறமேற்கோடல்வேண்டும் என்பது விதியாதலின் வருகென்று குழல்களைந்து அறம்படுத்தாள் என்பது சுருக்கமுதலியவற்றைக் கருதியதாகும்.

சித்திராபதியானவள் வயசுமுதிர்ந்தவளாயிருந்தும் தனதுமகள் குழல்களைந்ததைக் கேட்டும், துறவாதிருந்தமை அவளது இழிந்த பாத்தைமையை நன்கு புலப்படுத்தாநிற்கும்.

கண்ணகியம்மையுங் கோவலனுஞ் சுவர்க்கம்புக்கதை அறிந்த இடைமகளாகிய மாதரியும், தான் அடைக்கலமிழந்தது கருதி உயிரிழந்தும், இச்சித்திராபதியோ துறவுபூணும் விருப்பும் பக்குவமும் இல்லாதவளாய் ஒருவேளை இருந்திருப்பினும் அவ்விடைமகளைப்போல இறத்தற்குந் துணிந்திலள்.

இவளது தீக்குணத்தை மாதவி முன்னரே அறிந்துகொண்டமையானன்றே "யான் நற்றிறம் படர்கேன் நீ மணிமேகலையை வான்றுயருறுக்குங் கணிகையர் கோலங் காணாதொழிக" என்று அவளிடம் ஓம்படை கூறி ஒப்புவித்துவிட்டுச் சீலநிநோன்புமேற்கொண்டு வருவாளாயினள்.

மாதவி சித்திராபதியைக்கருதி ஐயுற்றிருந்தவாறே மணிமேகலை பூப்படைந்தவுடனே சித்திராபதியும் மாதவி, முன்னர்த் தனக்குரைத்தவற்றையெல்லாம் மறந்துவிட்டு, மாதவிக்குங் காமத்திற் போவாக் கொள்ளுமாறு மணிமேகலையின் உறுப்புமுதலியவற்றை இதுபோது வருணித்து மயக்குகின்றாள்.

இக்கூறியவற்றானே சிலப்பதிகாரங்கூறும் மாதவி நற்றாயும் மணிமேகலைகூறும் மாதவியின் நற்றாயும் வெவ்வேறானவர் என்று கருதற்கிடனின்மை காண்க.

மணிமேகலையும் பிக்குணிஸங்கத்தை அடைந்துவிட்டாள் என்னுஞ் செய்தி ஊர்முழுதும் பரம்பியது. பரம்பவே ஊர்முழுதும் மாதவியைப் பழிதூற்றற்கு முன்வந்துவிட்டது. இவ் வைகாசித்திங்களுக்குப் பதினொன்றாந்திங்களாகிய சித்திரையிலே விழா வந்துவிட்டது. அதுபோது மணிமேகலை பிக்குணிஸங்கத்தை அடைந்து நாற்பெரும்வாய்மையும் ஐம்பேரொழுக்கமு முதலியவற்றை மேற்கொண்டு இருந்தமையான் அவள் இந்திரவிழாவுக்கு வந்திலள்; இவளது வாராமைக்குக்காரணம் மாதவியே யாவாள் ஆகலின் தான் கெட்டதுமன்றி ஒருவகைத்தொடர்புமில்லாத மணிமேகலையையும் மாதவி இங்ஙனஞ் செய்துவிட்டனளே என்று அவ்வூரவரெல்லாங் கருதிவருதலின் அவர்க்கது தணியாத்துயராகித் தலைத்தலை மேல்வரலாயது.

" தீவகச் சாந்தி செய்தரு நன்னாண்
மணிமே கலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வர " (மணி. II 3–5.)

மணிமேகலையை விழவிற்குச்செல்லும் நிலைமையிலே மாதவி வைத்திருப்பளேல் மாதவிவாராத துன்பந் தணிந்திருக்கும். அங்ஙனம் மணிமேகலையை வைத்திலளாதலின் அவள்மேல் வைத்திருந்த ஆறிவருகின்ற சினமும் ஆறாது ஓங்கி வளர்வதாயிற் றென்க.

இவ்விருவர்மேலும் எய்திய அலருக்கு மாதவியின் நற்றாயாகிய சித்ராபதி ஆற்றிலளாய்த் தனதுதோழியாகிய வயந்தமாலையை அம்மாதவிபாற்சென்று ஊரலர்தூற்றுதலை உணர்த்தி வருமாறுவிடுத்தனள்.

அங்ஙனம் விடுவிக்கப்பட்ட வயந்தமாலை மாதவிபாற்சென்று அவளது துறவுமேற்கொண்டவாடிய மேனிகண்டுளம்வருந்தி அவளைவிளித்து உன்னோடு இவ்வூருற்றதொன்றுண்டு, நாடகமகளிர்க்கு நன்கனம்வகுத்த எல்லாத்துறையிலும் முறைபோகிய நீ இங்ஙனம் நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்று அலகின்முதூரான்றவரல்லது பலர்தொக்குரைக்கு பண்பில்வாய்மொழி நயம்பாடில்லை நாணுடைத்தென்று கூறிய வயந்தமாலைக்குக் கற்புடைமங்கையர்தம் நற்குணச்செய்கைகளையெல்லாம் நன்கனமெடுத்துவிளக்கிக் கற்புடை மங்கையர் தமக்கெலாங் கண்ணனைத்திகழுங் கண்ணகியம்மையின் மகளாகிய மணிமேகலையை அருந்தவப்படுத்தலல்லது, அவள் யாவதுந் திருந்தாச்செய்கை தீத்தொழிற்படாள்.

கண்ணகியம்மைக்கும் கோவலனுக்கும் நேர்ந்தவற்றையெல்லாம் அறிந்த யான் அறவணவடிகள் அடிமிசைவிழுந்து எனது கடுந்துயர் கூற அவர் நால்வகை வாய்மை, ஐம்பேரொழுக்க முதலியவற்றைக் கொள்கென வெனக்குக் கொடுத்தருளினர்; என்றுகூறி அவளை வெறிதே போகுமாறு விடுத்தாள்.

துறவுபூண்டமாதவியைப் பின்னருங் கணிகையர்கோலங்கோடற்குச் சித்திராபதி முயற்சித்ததாக மணிமேகலை கூறுகின்றது. ஆதலின் அது சிலப்பதிகாரத்தோடு முரண்பட்டதாகுமென்று பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள்.

"துறவுபூண்டவர் துறவறத்தைநடாத்தற்கு இயலாதுபோயினரேல் அவர் பூர்வநிலைமைக்குத் திரும்பவும்வந்துவிடலாம்" என்பது சங்கவிதிகளுள் ஒன்றாகும். இவ்விதிபற்றி மாதவியைக் கணிகையர்கோலங் கோடற்கு ஒருப்படுத்திவிடலாமென்று சித்திராபதிதுணிந்து முயற்சித்தலும், அவளது முயற்சியை இதுவென மணிமேகலை எடுத்துக்கூறுதலும், பிறவும் இழுக்காகா வென்க.

[மணிமேகலையிற்கூறிய ஊரலருரைத்ததை வயந்தமாலை மாதவிக்கெடுத்துரைத்தது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு நாற்பத்தாறுந் திங்களாகிய வைகாசியிலென்க]

"பொன்னேர் அனையாய் புகுந்தது கேளாய்
யுன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்."
(மணி. XX 16–17)

என்னும் இவற்றை முதலாகக்கொண்ட வடிகளை ஆதாரமாகக்கொண்ட பிள்ளையவர்கள் "மாதவி நடனத்திற்குவாராமைபற்றியதே பயங்கெழு மாநகர் அலரெனவறிபலாம். உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல் என்றதனானே மாதவி தானும் தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப் படவில்லை" என்றுங் கிளம்புகின்றனர்.

மணிமேகலையொடு மாதவி தீவகச்சாந்திக்கு வாராத் தனியாத் துன்பம் தலைத்தலை மேல்வர என்றும், "காவலன் பேரூர் கனையெரி யூட்டிய—மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை—யருந்தவப் படுத்துவதல்ல தியாவதுந்—திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்."

என்றும், "மாதவ ருறைவிடம் புகுந்தேன்—மறவண நீத்த மாசறு கேள்வி—யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து—மாபெருந் துன்பங் கொண்டோ மயங்கிக்—காவல னுற்ற கடுந்துயர் கூற," பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்—பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்—பற்றின் வருவது முன்னது பின்ன—தற்றோ ருறுவ தறிகென் றருளி—யைவகைச்சீலத் தமைதியுங் காட்டி—யுய்வகை யிவைகொளென் றறவோ னருளினன்" என்றும் வருவனவற்றைநோக்கின் மணிமேகலையொடு மாதவி விழவுக்கு வாராததுகுறித்தே ஊரவராற் பழிதூற்றப்பட்டதென்றும், உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்" என்றது மணிமேகலை துறவுபூண்டதற்குங் காரணம் மாதவியாதலின் இங்ஙனங் கூறப்பட்டதென்றும், உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல் என்று தன்னை வினவிய வயந்தமாலைக்கு விடையாக, மணிமேகலை தீச்செயற்படாள் என்றிருத்தமையே போதிய சான்றாகும் என்றும், பிறவாறும் ஆராய்ச்சியாளர் பலர்க்கும் ஒப்பப் புலப்படுதல்காண்க.

மாதவி குழல்களைந்திருப்பளேல் அவளை "மணிமே கலையொடு மாதவி வாராத்—தணியாத் துன்பம்" நமக்கெல்லாஞ் செய்தனளாக ஊரவரெல்லாரும் அலரைத்தனரென்று வயந்தமாலைவழியாக அவளுக்குச் சித்திராபதி அறிவித்திருக்கமாட்டாள் என்றாங்குப் பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள்.

இங்ஙனம் அவர்கள் கூறுதற்குக்காரணம் குழல்களைந்து துறவு மேற்கொண்டோர் எத்தகைய மயக்குரைகளைக் கேட்டனரேனும் தம் பழையநிலைமைக்கு ஒருபோதும் திரும்பாரென்பது போலும்.

அறிவிலியாகிய சித்திராபதி அவ்விருவரையும் ஒருங்கே வலைப்படுத்திவிடின் அவர்தம்முள் ஒருவரேனும் அகப்படுவர் என்றாங்கெண்ணி இங்ஙனமெல்லாமியம்பினாள் என்னில் இதற்கு விடையின்மையின் அவர்கள்கூற்று அறவே பொருந்தாதென்க இப்பொருந்தா தன்றியும் பௌத்தப்பள்ளியையடைந்து துறவுமேற்கொண்டோர் அங்கொண்டமைக்கேற்ற விதிமுறைகளை ஒழுங்குபெற நடாத்திவரும் இயல்பற்றிருப்பரேல் அவ்விருக்கையர் தம் பழையநிலைமைக்குத் திரும்பக் கடவர் என்னும் அந்தச் சங்கவிதிகள் நன்கு ஊன்றிப்பார்க்கத்தக்கன.

இவ் வைகாசித்திங்களுக்கும் அடுத்துவந்த சித்திரைத்திங்களுக்கும் இடையில் அமைந்த பதினொருதிங்களுக்குள்ளே மணிமேகலை

மலர்வனம்புக்கது முதலாக ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த தீறுகவுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றிருத்தல்வேண்டும்.

இச்சித்திரைத் திங்களின் இடைப்பகுதியிலே புகாரைக் கடல் கொண்டுவிட்டது. இவ்விடைப்பகுதியின் முடிவிலே மணிமேகலை ஆபுத்திரனோடு மணிபல்லவஞ்சென்று தீவதிலகையாற் புகாரழிவு முதலியவற்றைத் தெரிந்துகொண்டு வஞ்சிசென்று கண்ணகியம்மை மலரடி வணங்கிக் கச்சி சார்ந்து அங்கே அந்நகரத்தரசன் ஒருதெய்வத்தின் கட்டளைப்படியே புதுமையாகச்சமைத்திருந்த மணிபல்லவத்திலே மணிமேகலாதெய்வத்திற்கும், தீவதிலகைக்கும் கோயில்கள் தனித்தனி சமைக்குமாறு பணித்து நிறைவேற்றுவித்தாள்.

நிறைவேற்றியவள், பஞ்சக்கொடுமையால் ஆண்டுப் பசிநோயுற்று வாடிய ஆருயிர்க்கெல்லாம் ஆரமுதருத்திவரும்போது அறவணவடிகள் பால் உபதேசம்பெற்று நோற்றுவந்தாள்.

VI. தேவந்தி முதலோர் வஞ்சி சேர்தல்.

சித்திரைத்திங்கள் முதற்பகுதியிலே தேவந்திகை முதலியோர் மதுரைமுதலிய இடங்களைக் காண்பதற்குப் புறப்பட்டிருத்தல் வேண்டும். புறப்பட்டவர்கள் ஆடித்திங்களின் இரண்டாம்வாரத்திலே மதுரையை அடைந்து ஆண்டிருந்த மாதரி மகளோடு புறப்பட்டு வஞ்சிமாநகரையடையும் அமயத்தே மணிமேகலை துறவையுங் கேள்விப்பட்டிருத்தல் வேண்டும்.

> "வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை
> கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
> றேவந் திகையைச் செவ்விதி னோக்கி
> வாயெடுத் தரற்றிய மணிமேகலை" (சிலப். XXX 1—4.)

என்னுமிவற்றானே மணிமேகலைதுறவைத் தேவந்திகை அதுபொழுதே கேள்விப்பட்டது புலப்படுகின்றது; மாதவி முதலியோர் துறவுக்கும் ஏனையோர் இறப்புக்கும் இன்னனம் அரற்றிலள் ஆதலின் என்க.

இனி,

"பருவ மஞ்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை சோல நீங்கின ளாதலி
னாற்றினென்" (சிலப். XXX 35-37)

என்றதுகொண்டு மேற்கூறியதை மறுத்தல் சாலுங்கொல்லோவெனிற் சாலாது; என்னை? அதுபோது அங்ஙனம்வந்த துன்பத்துக்கு இது போது இங்ஙனமாற்றற்குரிய காரணவாய்ப்பின்மையின் என்க.

VII. மூன்றிளம்பெண்கள்.

கண்ணகியம்மையின் தாயும், மாமியும் அவ்வம்மைமேல்வைத்த அன்பின்மிகுதியானே வஞ்சிமாநகரத்திலே அரட்டன்செட்டி மனைவி வயிற்றில் இரட்டைகளாகப்பிறந்தனர். மாதரியும் அவ்வூரிலே திருமாலின் திருவடிபிடிப்பான்குலத்திற் சிறுமகளாகத் தோன்றினள்.

இம்மூவரையும் 'மடமொழி நல்லார்,' 'இரட்டைப்பெண்கள்,' 'சிறுமகள்,' 'முத்திறமகளிர்' 'சிறுகுறுமகளிர்' என்று அடிகள்கூறியிருத்தலை உற்றுநோக்கின் அவர்களுக்குச் சற்றேறக்குறைய ஐந்தாண்டாதல் நிறைவுற்றிருத்தல் வேண்டும்.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க திங்களிலேயே மாதரியும் இறந்துபோயினள். அதற்கு இரண்டுதிங்கள்கழித்துக் கண்ணகியம்மையின் நற்றாயும், மாமியும் இறந்துபோயினர்.

இக் காலவரையறையும் யாம் மேலேகூறிய காலவரையறையும் தம்முள் ஒன்றனை மற்றொன்று நிலைநாட்டி வலியுறுதல் காண்க.

(தொடரும்.)

K. S. நவநீதகிருஷ்ண பாரதி.



காலஞ்சென்ற திவான்பஹதூர் S. Rm. M. Ct. பெத்தாச்சிசெட்டியார்.

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.
தொகுதி உஉ.] ரக்தாக்ஷி ஹூ சித்திரைமீ [பகுதி சு.
Vol. XXII. April-May-1924. No. 6.

அநுதாபக்குறிப்பு.

ஆண்டிப்பட்டிஜமீந்தாரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்கிராஸநாதிபதியுமான ராவ்பஹாதூர் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் நடிகிது சித்திரை மீ கஅவ (30-1-24) காலம் சென்றது மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் மிக்க பரிதாபகரமாயுள்ளது. இவர் தன்சிறுபிராயந் தொடங்கித் தமிழ்ச்சங்கத்தில் அபிமானமிக்கவராய் முதற்றடவையில் 1000 ரூபா நன்கொடையாயும், மாதந்தோறும் 50 ரூபா ஊட்டுப் பொருளாயும் உதவித் தமிழ்ச்சங்கத்தை ஆதரித்து வந்ததுடன் சங்க மண்டபம் வாங்கியதற்கு ரூபா 5000-மும் உபகரித்தார். இம்மட்டிலன்றி இன்னும் சங்கத்துக்குப் பலவிதஉதவிபுரிந்து 1,00,000 ரூபா வரை மூலதனம் சேர்த்துவைக்கவும் எண்ணங்கொண்டிருந்தார். இவர் செல்வப்பெருக்கத்துக்கேற்ப இப்படிப்பட்ட பொதுநன்மைகளில் இவர் செய்தும், செய்யக்கருதியுமுள்ள பேருதவிகளும் மிகப் பலவாம். இவரது ஒப்புரவாண்மை,

> "ஊருணிநீர் நிறைந்தற்றேயுலகவாம்
> பேரறிவாளன்றிரு"

> "பயன்மாமுள்ளூர்ப்பழுத்தற்றாற்செல்வம்
> நயனுடையான்கட்படின்"

என்னும் பொய்யாமொழிகட்கு இலக்கியமாயுள்ளது. இன்னும் இவரது குணவிசேடங்கள் பலவும் அடுத்துவரும் இரங்கற்பாக்களால் விளங்கும். கொடையொளிகொண்டு குலம்விளக்கிநின்ற இவரது அகாலமரணத்தை நினைந்து வருந்தும் இவர்குடும்பத்தார்க்கு நம்மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபஅக்கிராசனாதிபதியும்
ஆண்டிபட்டி ஜமீந்தாருமான திவான்பகதூர்
சா. ராம. மு. சித.

பெத்தாச்சி செட்டியாரவர்களின்

பிரிவாற்றாமையால் தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர்
சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடிய இரங்கற்பா.

கலிவெண்பா.

தேங்கமழும் பூம்பொழிலுஞ் செந்தாமரைத்தடமும்
பாங்கரெலாந் தட்பம் பயப்பனவாய்—ஓங்குறுசீர்க்
கானாடு காத்தானிற் கற்பகமே போன்றுதித்து
வானாடும் போற்றுமுயர் வள்ளலே—மானாடுங்
கையான் பசுபதியான் கண்ணுதலான் காண்மலரின்
மெய்யான பத்தி மிகுந்தோனே—பொய்யாத
வாசகனே பெத்தாச்சி மன்னா மகிதலத்தில்
ஆசகன்ற சிந்தை யறவோனே—தேசுயர்ந்த
ஆண்டிபட்டி வேந்தே யருளாளா வார்வமுடன்
வேண்டியுற்றோர் வெம்மிடிக்கு மேவலனே—பாண்டியர்போல்
நந்தமிழை யாதரித்த நல்லோனே யெம்மைவிட்டங்
கெந்த வுலகத்திற் கேகினைநீ—சிந்தையுடன்
மண்ணிற் புலவர் வறுமை தவிர்த்தோமேல்
விண்ணிற் புலவர் மிடிதவிர்ப்போம்—எண்ணில்
அறம்போன்ற தில்லையென வாய்ந்தோவிந் நாளின்
மறந்தேய வான்புகுந்தாய் வையந்—துறந்தேநீ
பொய்வாழ்க்கை யிந்தப் புவிவாழ்க்கை யென்றுணர்ந்தோ
மெய்வாழ்க்கை வீடு விழைந்தனையாங்—கையா
வுனைப்பிரிந்து ஞால முறுதுயரந் தன்னை
நினைந்தெனவிங் காரே யிசைப்பார்—நினைந்துனையாக்

கொண்டுயிர் வாழ்ந்த குடும்பமெலாம் வெந்துயரான்
மண்டெரியி லுற்றுற்போன் மாழ்கினவே—தண்டமிழ்நூற்

பாவலரைக் கண்டாற் பரிதிகண்ட பங்கயம்போல்
ஆவலுடன் செம்பொ னளிப்போனே—காவலனே

சாற்று மதுரைத் தமிழ்ச்சங்கத் திற்குலகம்
போற்றுந் துணைத்தலைமை பூண்டோனே—மாற்றுயர்ந்த

பொன்னே மணியே புலவர்மிடிக் கோர்மருந்தே
தன்னேரிலாத தயாநிதியே—பன்னுளுஞ்

செய்யாளும் பாரதியுஞ் சேர்ந்திருக்கச் சங்கத்திற்
கையா யிரம்பொ னளித்தனையே—செய்யாமற்

செய்த வுதவி சிறிதலவே திங்கடொறு
மைதவிர்பொ னைம்பான் வழங்கினையே—பைதலின்றி

மாணவர்கள் கற்கும் வகைக்கோர் தசம்பொன்னுங்
காணுமதி தோறுநல்கிக் காத்தனையே—பேணு

நிதிசேர் சிரபுரத்து நேஷனற்கல் லூரி
துதிசேரக் கல்வி துலங்க—வதிரேக

வெண்பொனைம்ப தாயிரமு மேன்மைமிகு சென்னையினிற்
பண்புதிகழ் கோஷாவாஸ் பத்திரிக்கு—நண்புடனே

வோரிருப தாயிரமு மோங்குமயிலையினிற்
சீராமக்ருஷ்ணமடம் சீரா்ரும்—பேர்விடுதிச்

சாலைக்கைம் மூன்று சததசமுந் தைபலர்தஞ்
சூலைப் பிரசவிக்குந் தாய்விடுதிக்—கேலவே

நாலாயிரம்பொன்னு நல்கினையே யின்னவெலா
மேலாத் தெரிந்த வியன்கொடையே—நூலாயும்

விற்பனர்க்கு மாதுலர்க்கும் வேண்டினர்க்கும் வேண்டார்க்கும்
பற்பலர்க்கு மீந்த பரிசிலதுஞ்—சொற்பமதோ

இப்பே ருபகார மேய்ந்த வுனையிழந்த
திப்பே ருலக மியற்றியதோர்—செப்பரிய

பாவமே யென்று பகர்வதன்றி மற்றுமுண்டோ
கூவமே போன்றுதவுங் கோமானே—பூவுலகில்

ஏரார் திவான்பகதூரென்னு முயர்பட்டம்
போரா்நம் வேந்துதரப் பெற்றோனே—சீரார்ந்த

நன்னாட்டுக் கோட்டை நகரத்தார் தம்மரபின்
முன்னாட்டு கீர்த்தி முதிர்ந்தோனே—யெந்நாட்டுந்

தன்பேர் விளங்கத் தருமமே யோருருவா
யன்பார்ந்து வந்ததெனு மண்ணாலே—யின்பார்ந்த

சீரகத் தாரோனே சீமானே நின்பிரிவா
லாரகத் துன்ப மடையாதார்—பாரகன்று

மன்னுமிரத் தாட்சி வருடம் வருடைமதி
துன்னபர பக்கத் துவாதசிசேர்—பன்னு

மதிமகன்றன் வாரமோ வள்ளானீ வானிற்
கதியடைந்த நாளினியெக்காலுன்—அதிமதுர

வாக்கும் மலர்முகமும் வானோர் திருக்காமும்
நோக்கிக் களிப்பெம் நுவலுவாய்—ஆக்குமயன்

நன்றூர்ந்த செல்வமெலா நல்கியுயிர் வாழ்நாளை
யன்றோ குறைத்தா னருளில்லான்—நின்றே

வயப்புனையுந் தெய்வ வலியதனை மாற்றிச்
சயப்புனைவா ரில்லை சகத்தென்—றியம்பின நூல்

என்னே புரிவ மிவண்போன் றவனுநல
மன்னே புரிக மகிழ்ந்து.

௨

ஆண்டிபட்டி ஜமீன் ஆஸ்தான பண்டிதர்

ஸ்ரீமத். வி திருஞானசம்பந்தக் கவிராயரவர்களாலியற்றிய இரங்கற்பாக்கள்.

1. பெத்தாச்சிமன்னனெனத்தனவசியர்பெருங்குடியிற் பிறந்தகோவே
பத்தாய்ச்சியொன்றினுமுன் அன்புடைமைக்குவமைசொலப் படுவார்கொல்லோ
சித்தாட்சிபெறுவிருப்பம்அனுதினமுமெனக்குரைக்குந் திருநின்பேர்க்கு
ரத்தாக்ஷியோடுசேரியெதுகையெனமுடிந்ததுவோ ரசிகர்வாழ்வே.

2. முப்பதிற்றுமுக்கோடியிம்பருக்கும்உம்பருக்கும்
முறையேவேண்டும்
எப்பெரியநலமெனினுந்துணைபுரிந்துநிறைவேற்றற்
கியைந்தசிந்தைக்
கொப்புயர்வில்லாமைகண்டகண்மணியேபெத்தாச்சி
யுனையான்கண்ட
அப்புதியதினமுதலாயெனைமறந்தேன்ஏன்மறந்தா
யெனைநீயையா.

3. புண்ணியமேயுருவெடுத்துப்பூதலத்தின்மூளைத்தனைய
புனிதவள்ளால்
எண்ணியஎண்ணியவாங்கேதமிழ்ப்புலவர்தனம்படைத்தற்
கெளிதேயென்றன்
நின்னைதனிற்றினங்கூடிநினைப்பாடற்கெனைக்காணச்
செய்துசிர்த்தி
நண்ணியவைத்துயர்த்தினையேபெத்தாச்சிபிரிந்ததென்னி
நவிலுவாயே.

4. நின்னரியசரித்திரத்தைநிலவுலகங்காண்பதுவே
நீதியேனும்
உன்னரியகொடைத்திறமிக்கொப்புயர்வற்றொளிர்வதுனக்
குணர்த்தத்தானே
பன்னகமாம்பணிபணிந்தோன்உன்னெதிரேயெழுதுவித்துப்
படித்துக்காட்டற்
குன்னிபதெம்பெத்தாச்சியுத்தமனேபத்தர்பா
வுசிதவாழ்வே.

5. இன்றுவரையுளபுலவர்யாவருமுன்றனைப்பாடி
யிந்தநூல்கள்
ஒன்றுமுறைபிறழாமல்அச்சிலிட்டுப்புத்தகமா
யுதவுவாயேல்
நன்றியிதன்பொருட்டாகஇருபதிற்றையாயிரம்பொன்
நல்குவேன்யான
என்றுரைத்தாய்பெத்தாச்சியான்புரிந்தேன்நீபுரிவ
தியம்புவாயே.

6. எத்தனையோதவத்துறையுள்ளெத்தனையோமதிப்பெருநூ
    லிலங்குகோட்டம்
எத்தனையோகல்லூரியெத்தனையோதமிழ்க்கழகம்
    இனியோர்கூட்டம்.
எத்தனையோசங்கீதமுத்தயபாகவதர்வழி
    யிசைசால்சூழல்
அத்தனையும்பெத்தாச்சிமீமறப்பதெங்ஙனம்யா
    னறிகிலேனே.

7. சட்டசபைதனக்கொருவன்தமிழ்ச்சங்கந்தனக்கடுத்த
    தலைவன்தர்மப்
பெட்புறுஜில்லாப்போர்டுமுனிசிபல்சங்கங்களிலும்
    பிறங்குதோன்றல்
நட்புறுதேவஸ்தானக்கமிட்டியெம்பெத்தாச்சிபொது
    நலந்தேர்வேந்தாம்
பட்டமுடன்திவான்பகதூர்ப்பட்டமும்நீத்தேகியதேன்
    பகர்ந்திடாயே.

8. மன்மதனும்பெண்விரும்பவடிவழகுபடைத்துவந்த
    வணிகர்கோவே
நன்மதுரைத்தமிழ்ச்சங்கம்நவில்காந்தைத்தமிழ்ச்சங்கம்
    நயந்துபோற்றத்
தன்மதுரைப்பெத்தாச்சிதமிழ்வள்ளலெனப்புகலுந்
    தாந்தேர்ந்தாங்கே
பொன்மலிவிட்புலவர்சங்கம்புரக்கவுமே நினைத்தனையோ
    புனிதவேளே.

9. தருணமணிப்பணிபணிபெம்பெத்தாச்சியெனும்புனிதன்
    தருமமார்க்கம்
மரணமதுமருவாமல்வளர்தருசஞ்சீவியெனு
    மருமந்தேர்ந்தும்
பருவரிதர்க்குமாமுகிவேரோடுபறித்தபின்ற
    பகடூர்கூற்றைத்
தாரணிதனிற்புலவரென்பெரழுந்தருள்வீரரம்பாடிச்
  சபிக்கத் தானே.

காலவளவைக்கவி.

ரத்தாக்ஷிச் சித்திரைப்பூ ரட்டாதிப் புந்தியென்பார்
பெத்தாச்சிச் சிதம்பரனெனும் பேர்க்குரிய——முத்தனென்று
பத்தர்பணிதூயோன் துவாதசியிற் பைங்கருவூர்ச்
சித்தர்தம்பாற் சேர்ந்த தினம்.

உ

இவை, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார் **6–5–24**-ல் கூடிய இரங்கற்கூட்டத்திற் படிக்கப்பெற்றவை.

க. என்செய்வோம்! பெத்தாச்சி! இறந்தனையோ? தமிழர்யாம்
முன்செய்த தீவினையோ? முதுதமிழ்செய் தீவினையோ?
நன்மைசெய் தனவணிகர் நாயகனே! உனை அந்தோ!
வன்மைசெய் கூற்றுவன்றான் கொன்றனனே! வாழ்வானே?

உ. பொதுப்பணிகள் புரிவதுவே புனைகலனாப் பூண்டிருந்தோய்!
மதிப்புடைய மக்களுக்குள் மணிவிளக்காய் மன்னினையே!
துதித்தடையும் வறியோர்கள் துயரகற்றும் தண்கொடையாய்!
சதிக்கூற்றம் உனைக்கொண்டு சார்ந்ததுவும் அறமேயோ?

ங. மெய்யாரும் மதியுடையாய்! மேன்மைநிறை குணம்உடையாய்!
துய்யாரும் நடைஉடையாய்! துணைவர்பலர் குழுஉடையாய்!
பையாரும் அரவுடையான் பதமலர்க்குப் பணிவுடையாய்!
ஐயா! எம் பெத்தாச்சி! அன்றால்! நீ! அகன்றனையோ?

ச. வள்ளல்பலர் தமிழகத்தே வதிந்திருந்தார் எனக்கேட்டேம்
உள்ளுபுகழ் உடல்நிறுத்த உனையன்றிக் கண்டறியேம்
கள்ளமிலா மனம்உடையாய்! கருணைநிறை முகம்உடையாய்!
ஒள்ளியனே! ஒளித்தனையோ? பெத்தாச்சி! உத்தமனே!

ரு. தங்குபுகழ்த் தமிழ்த்தொண்டே தளராது செய்துறையும்
எங்கரந்தைத் தமிழ்ச்சங்கப் புரவலனே யினிதிருந்தே
மங்காமற் பொருளளித்தாய்! சுவடிபல மகிழ்ந்தளித்தாய்!
இங்குறைந்து தமிழ் வளர்க்கப் புலவரையும் ஈந்தனையே!

சு. தமிழ்வள்ளல் எனும்பெயர்க்குத் தகுதியுள பெருவாழ்வே!
தமிழ்ப்புலவர் தமையெல்லாம் புரந்தளித்தோய்! தருவனையாய்!
தமிழ்ச்சங்கம் பலவற்றைத் தளராது வளர்த்தவனே!
தமிழ்த்தாயின் தலைமகனே! தரணியைவிட் டேகினையோ?

எ. தமிழ்ப்புலவர் அழுதிரங்கத் தமிழ்மகளும் அழுதிரங்கத்
தமிழ்த்தொண்டர் அழுதிரங்கத் தமிழ்த்தாய்கள் அழுதிரங்கத்
தமிழ் கற்போர் அழுதிரங்கத் தமிழ்நாடே அழுதிரங்கத்
தமிழ் வள்ளல்! சென்றனையோ? பெத்தாச்சித் தாதாவே!

அ. ஆக்கைநிலை யாமைதனை அறிந்து வைத்தே அறங்கள்பல
ஊக்கமுடன் உஞற்றினையோ? உறுகருணைப் பெத்தாச்சி!
வாக்கினிய வளம்உடையாய்! வண்மையிலா மக்களுக்கோர்
போக்கறிவித் தகன்றனையோ? புண்ணியமார் புரவலனே!

கூ. இவ்வுலகில் அறங்களெலாம் இயற்றினேம் இனியந்தச்
செவ்விதிகழ் பொன்னுலகிற் செய்வமெனச் சென்றனையோ?
கொவ்வைஇதழ் உமைபாகன் கொழுஞ் செல்வத் தனதனோடும்
ஒளவியமில் நின்னினிய கேண்மைகொள அழைத்தனனோ?

௰. பொல்லாத இரத்தாட்சிப் புலையாண்டுச் சித்திரையே!
பல்லாரும் பழிக்கவரு பதினெட்டாம் நாள்புதனே!
கல்லாரும் அழுதாற்றப் பெத்தாச்சிக் காவலனை
அல்லாரும் கண்டத்தான் அடியகத்தே சேர்த்தனரோ.

*விஞ்ஞானதீபம்.

[உக-ஆம் தொகுதியின் கூ௫௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

பூதோற்பத்தி.

24. முன்னர்க்கூறிய "சூரியசந்திரோற்பத்தி," "மலைகடலுற்பத்தி" என்னும் இரண்டு அதிகாரங்களுக்கும் மேல்வரும் "தாவரசங்கமோற்பத்தி," "மானிடசரீரோற்பத்தி" என்னும் இரண்டு அதிகாரங்களுக்கும் பொதுவாகிய சில பொருண்முடிபுகளை அரிமாநோக்காக இடைநிறுத்திப் "பூதோற்பத்தி" எனப் பெயர் தந்து ஒரு தனியதிகாரமாக முடிக்கக்கருதினும்.

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம்,"

என ஆசிரியர் தொல்காப்பியனர் உரைத்த நுண்பொருளைநோக்குமிடத்து ஐம்பெரும்பூதத்தின் இயல்பினையறிந்தோர் அவற்றாலாகிய அகிலத்தினது அமைப்பையறிதல் எளிது என்பது பெறப்படுகின்றது.

25. ஐம்பெரும்பூதங்களின் உற்பத்திவரன்முறையை யாராயப்புகுமிடத்து முதலில் நமது தத்துவ சாஸ்திர நூல்களிற் கூறியிருக்கிற வரன்முறையை யுரைத்து அப்பால் மேலைத்தேச விஞ்ஞானநூல்களிற் கூறியிருக்கிற வரன்முறையை யுரைத்தல் மரபாகும். பழைமைவாய்ந்த சாங்கிய தரிசனத்திற் சொல்லப்பட்டிருக்குங் கொள்கையினை முதற்கண் எடுத்துக்கொள்வாம்.

---

*விஞ்ஞானதீபம் மேற்றிசைச்செல்வம். என்னும் இருஉரைத்தொடரையும் எழுதிவரும் ஆசிரியரது புதிய ஆச்சிரமப்பெயர் சுவாமி விபுலானந்தர் என்பது. இப்பெயரே இவர்க்கு இனிமேல் என்றும் வழங்குதற்குரியது. பூர்வாச்சிரமப்பெயரும்; கல்விக்கழகத்தார் கொடுத்த சிறப்புப் பெயர்களுஞ் சேர்ந்த பண்டித மயில்வாகனனர் B. Sc. (Lond) என்னும் பெயரும் அறிவுநூல் கற்கப்புகுந்தஞான்று குரவரளித்த பிரபோதசைதந்யர் என்னும் பெயரும் இனிவழங்குதற்குரியனவல்ல.

ஸத்வரஜஸ்தமஸாம்ஸாம்யாவஸ்தா ப்ரக்ருதி:। ப்ரக்ருதேர்மஹாந் மஹதோऽஹங்காரோऽஹங்காராத் பஞ்ச தந்மாத்ராண்யுபயமிந்த்ரியம் தந்மாத்ரேப்ய: ஸ்தூலபூதாநி புருஷ இதி பஞ்சவிம்ஶதிர்கண:॥ சாங்கியசூத்திரம் I, 61.

இது சாங் கியமத மென்றெடுத் துரைப்போன்
றனையறி வரிதாய்த் தான்முக் குணமாய்
டனநிகழ் வின்றி மாண்பமை பொதுவா
யெல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதன் மூலப் பகுதியித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்க ணாகாயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
யானது வெளிப்பட் டதன்க ணப்பின்
றன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
டவற்றின் கூட்டத் திம்மனம் வெளிப்பட்
டாப்புறு மனத்தாங் காரவி காரமும்
ஆகா யத்திற் செவியொலி விகாரமும்
வாயுவிற் றொக்கு மூறெனும் விகாரமும்
அங்கியிற் கண்ணு மொளியுமாம் விகாரமும்
தங்கிய வப்பில்வாய் சுவையெனும் விகாரமும்
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமுஞ்
சொலப்பட் டிவற்றிற் றொக்கு விகாரமும்
வாக்குப் பாணி பாதபாயுரு பத்தமென
ஆக்கிய விவைவெளிப் பட்டிங் கறைந்து
பூத விகாரத் தான்மலை மரமுத
லோதிய வெளிப்பட் டுலகாய் நிகழ்ந்து
வந்த வழியே யிவைசென் றடங்கி
யந்தமில் பிரளய மாயிறு மளவு
மொன்று யெங்கும் பரந்து நித்தியமாம்
அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி

எப்பொரு ளுந்தோன் றுதற்கிட மன்றி
அப்பொரு ளெல்லா மறிந்திடற் குணர்வாய்
ஒன்று மெங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்
புலமார் பொருள்க ளிருபத் தைந்துள
நிலநீர் தீவளி யாகா யம்மே
மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே
உறுசுவை யொளியூ றோசைநாற் றம்மே
வாக்குப் பாத பாணி பாயு ருபத்த
மாக்கு மனோபுத்தி யாங்கார சித்தம்
உயிரெனு மான்மா வொன்றொடு மாமெனச்
செயிரறச் செப்பிய திறமுங் கேட்டு,"

(மணிமேகலை XXVII)

இங்ஙனம் கூறிய இருபத்தைந்து பொருள்களும் புருடன் (உயிர், ஆன்மா) பிரகிருதி (மூலப்பகுதி) என இரண்டாயடங்குவ; எஞ்சி நின்ற இருபத்துமூன்றும் பிரகிருதியில் அடங்குவவாகலின். "எல்லாப் பொருளுந் தோன்றுதற்கிடமெனச் சொல்லுதன் மூலப்பகுதி" என்புழிப் பிரகிருதியிலக்கணமும், "எப்பொருளுந் தோன்றுதற்கிடமன்றி அப்பொருளெல்லா மறிந்திடற்குணர்வாய், ஒன்று மெங்கும் பரந்து நித்தியமாய், நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்" என்புழிப் புருடனிலக்கணமுங் கூறப்பட்டன. அறிவான் புருடன்; அறியப்படும் பொருளும் அறிவுறுத்தெய்துங் கருவியும் பிரகிருதி. பிரகிருதி முதலாய் இருபத்துநான்கு தத்துவங்களையும் சைவசாத்தாகமங்கள் ஆன்ம தத்துவம் (அசுத்ததத்துவம்) எனக்கூறுவன. புருடதத்துவத்தையும் புருடனுக்குரிய பஞ்சகஞ்சுகங்களாகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பவற்றையும் இவற்றுக்கு ஆதாரமாகிய மாயா தத்துவத்தையும் தொகுத்து வித்தியாதத்துவம் (அசுத்தாசுத்ததத்துவம்) எனக்கூறுவன; இவையனைத்துக்கும் ஆதாரமாகிய சுத்தவித்தியா தத்துவம், ஆங்கதற்கு ஆதாரமாகிய ஈசுரதத்துவம் (விந்துசத்தி), ஆங்கதற்கு ஆதாரமாகிய சாதாக்கியதத்துவம் (நாதசத்தி), ஆங்கதற்கு ஆதாரமாகிய சிவதத்துவம் சத்தி தத்துவம் என்னும் ஐந்தினை

யுந் தொகுத்துச் சிவதத்துவம் (சுத்ததத்துவம்) எனக்கூறுவன; பராசம்வித், நிஷ்களசிவம் எனப்படும். பிரமம் தத்துவாதீதமாய் ஒன்றாய்த் தத்துவம் முப்பத்தாறினுக்கும் ஆதாரமாய் அவற்றின் வேறாய் நிற்கும் என்பது சைவசாக்தநூன்முடிபு. பிரகிருதி முதலயா இருபத்துநான்குதத்துவங்களையும் பற்றிய ஆராய்ச்சி சைவசாக்த வைஷ்ணவசித்தாந்தங்களுக்கும் சங்கரபாடியத்துக்கும் சாங்கியநூலுக்கும் ஒப்பமுடிந்ததாகலின் பழைமைபொருந்திய சாங்கியநூலே ஏனைய தத்துவஆராய்ச்சிகளுக்கெல்லாம் முதனூலாய்நின்றதென்பது மறுக்கொணு உண்மையாகின்றது. மேலைத்தேசத்துத் தத்துவசாஸ்திரங்களும் சாங்கியநூற்கொள்கையைப் பெரிதும் பின்பற்றினவென்பதை "மேற்றிசைச்செல்வம்" என்னும்உரைத்தொடர்நிலையினுட்காட்டுவோம்.

26. இனி மூலப்பிரகிருதியினின்று இருபத்துமூன்று தத்துவங்களும் தோன்றியகிரமத்தை யாராய்ந்தறிந்துக்கொள்வாம். மேலைப்பிரிவினுட்காட்டிய மேற்கோள்களோடு பின்வரும் சிவஞானசித்தியார்ச் செய்யுட்களையும் உடன்வைத்து ஆராய்வாம்.

"சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்திற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வந்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.

"ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தாய்
ஈங்கார்தா னென்னே டொப்பா ரென்றியா னென்ன தென்றே
நீங்காதே நிற்குந் தானு மூன்றதாய் நிகழு மென்பார்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே".

"மனமது தைசத தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தந் தைய நிலைமையி னிற்கு மாங்கே
இனமலி சோத்தி ராதி கன்மவிந் திரிய மெல்லாம்
முனமுறை செய்த வைகா ரிகந்தரு மென்பர் முன்னோர்".

"நற்செவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரியமென்று புகன்றன ரிவைத மக்குச்

சத்தநற் பரிச ரூப விரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மன்றே".

"வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளனநி னைந்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்தம்
ஊக்கமா ரைந்து மைந்தின் றொழிலென வோதி னரே".

"ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தில்
நேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்
ஆசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்டகந் தான்

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும் வான் வளிதீ நீர்மண் டொடக்கியேயொன்றுக்கொன்றங்
கேற்றமா மோசை யாதி யிருங்குண மியைந்து நிற்கும்
ஆற்றவே விடய பூத மங்காங்கி பாவத் தாமே".

"இடந்தா மாகி வான்று னிடங்கொடுத் திடுஞ்ச லித்துப்
படந்நவை திரட்டிங் காதீச் சுட்டொன்று வித்தல் பண்ணும்
நிரந்நாங் குளிர்ந்து நின்று பதஞ்செய்யு நீர்மண் டானும்
உரந்தரும் கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே".

"மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தருமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமம் வண்ணம்
எண்டரு மெழுத்துத் தானும் லவரய ஹவ்வு மாமே".

"குறிகள்வச் சிரத்தி னோடு கோகந தஞ்சு வத்தி
அறுபுள்ளி யமுத விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக ழீசனோடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை".

இம்மேற்கோள்களை யாராயும்வழிப் பெறப்படும்முடிபுகளைத்தெளிவு நோக்கி வகுத்துக் காட்டுவாம்.

க. மூலப்பிரகிருதியானது தன்னிடத்துப்பொருந்திய சத்துவ ராஜத தாமதகுணங்களின் அவ்வியத்தவடிவாயுள்ளது. அவ்வியத்தம் அரும்பின்கண் மணம்போல வெளிப்படாது அடங்கிநிற்கும் நிலை.

ஸத்வராஜஸதாமஸாம் ஸாம்யாவஸ்தா ப்ரக்ருதிஃ

சாமியம்—சமநிலை. குணதத்துவம் பிரகிருதியினின்றுதோன்றினும் இவை இரண்டுக்கும், சொருபத்தால் வேறுபாடின்மையின் மேலோர் ஒன்றுகவேகொண்டனர்.

(உ) மூலப்பிரகிருதியே சித்தம் எனவும் படும். ஷோப்பேன் ஹாவேர் (Schopenhaver) என்னும் ஜர்மானியதத்துவசாஸ்திரியார் "Will in nature" பிரகிருதியிற் சித்ததத்துவம் என ஆராய்ந்து கண்டனவனைத்தும் இம்முடிபிற்குச் சான்றுவன. மாமும் கொடியும் உரியகாலத்தில் மலர்கனிதருவதும், இனவேறுபாடின்றித் தெங்கில் தெங்கங்காயும் பனையிற் பனங்காயுந் தோற்றுவதும், இன்னோன்னபிறவும் சித்ததத்துவத்தாலாவன. இத்தத்துவம் மனோதத்துவத்துக்கும் புத்தியகங்காரத்துக்கும் மேற்பட்டதாகலின் இதனல் ஏற்படுங் காரியங்களை அளந்துகூறுதல் ஒருவாற்றுனும் முடியாது. எல்லாவற்றுக்கும் காரணங்காட்டுவோமென்று சொல்லும் மேலைத்தேசத்துப்பண்டிதர்கள் சித்ததத்துவத்தை யளந்தறியமாட்டாது திகைப்புற்று இயற்கையறிவு என்று ஒருபெயரிட்டு மெல்லக் கடந்திவிட்டனர். இந்த இயற்கையறிவின் விசித்திரங்கள் மிகப்பல. புறப்பறவையைச் சிறைசெய்து ஆயிர மைல்தூரத்துக்கப்பாற்கொண்டுசென்று சிறைநீக்கினால் அது நேராகப் பறந்து தன் இருக்கையை யடையும்; தேனீயானது பலபூக்களிலுஞ் சென்று தேனைச்சேகரித்து வந்தவழியேதிரும்பாது ஈற்றில்நின்றவிடத்தினின்று நேரே பறந்து தவறுது தன்கூட்டினை யடையும்; மறைவருவதற்கு முன் எறும்புமுட்டைகொண்டு திட்டையேறுகின்றது; நீர்ப் பறவையின்குஞ்சு பொரித்தமாத்திரத்தே நீர்நிலையையடைந்து நீந்துகிறது. இவையெல்லாம் சித்ததத்துவத்தினுல் நிகழுகின்றன. நாம் உண்டஉணவைச் சீரணிப்பதும், உதிரத்தைச் சுற்றியோடச்செய்வதும் சுவாசிப்பதும் நம்மையறியாது நடக்கின்றசெயல்களாதலால் இவை யெல்லாம் சித்ததத்துவத்தின்பாற்படுவன. சாதாரணமனிதரினும்

தாவரசங்கம உயிர்களிலும் சித்தம் தானாகவே யியங்குவது. யோக சாதனையினால் தான் புருடன் என்பதைச் சாக்ஷாத்காரமாக அறிந்து பிரகிருதியாகிய சித்ததத்துவத்தைத் தன்வழிப்படுத்திய சித்தன் சித்ததத்துவத்தைத் தான் விரும்பியவாறியக்கும் வலிமையுடைய வனாவான். இத்தகையோனுடையசெயல்கள் சாதாரணமனிதருக்கு இரும்பூதினை விளைக்கும்நீர்மைய.


(ங) மூலப்பகுதியாகிய சித்ததத்துவத்தினின்று மகத் என்னும் புத்திதத்துவந் தோன்றும். புண்ணிய பாவம், வஸ்துநிச்சயம், சுகம், துக்கம், மோசம் என்னும் இவை புத்திதத்துவத்தைச் சார்ந்துநிற்பன. மஹதோ அஹங்காரஃ.

(ச) புத்திதத்துவத்தினின்று "நான்," "எனது" என்னும் உருவாகிய அகங்காரதத்துவம் தோன்றும். அஹங்காராத் பஞ்சதந்மாத்ராண்யுபயமிந்த்ரியம்.


(ரு) அகங்காரத்தினின்று இருவகையிந்திரியங்களும் பஞ்சதன் மாத்திரைகளுந் தோற்றுவன. அஹங்காராத் பஞ்ச தந்மாத்ராண்யுபய மிந்த்ரியம். மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் ஞானேந்திரிய மைந்துக்கும் மனத்துக்கும் உற்பத்தித்தானமாய அகங்காரத்தைத் தைசதவகங்காரமென்றும், வாக்கு பாதம் பாணி பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தினுக்கும் உற்பத்தித்தானமான அகங்காரத்தை வைகாரிக அகங்காரம் என்றும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளுக்கும் உற்பத்தித்தானமான அகங்காரத்தைப் பூதாதி யகங்காரமென்றும் அறிஞர் வகுத்துக் கூறுப.

(சூ) பஞ்சதன்மாத்திரைகளினின்று ஸ்தூலபூதம் ஐந்துந் தோற்றுவன. தந்மாத்ரேப்யஃ ஸ்தூலபூதாநி மேற்காட்டிய இருபத்துநான்கினோடு புருடனையும் உடன்வைக்கப் பொருள் இருபத்தைந்தாமென்பது. புருஷ இதி பஞ்சவிம்ஶதிர்கணஃ.

(எ) மேற்காட்டிய சாங்கியசூத்திரத்தின்பொருளையும் அதனோடு கருத்தொத்த சிவஞானசித்தியார்ச் செய்யுட்களின் பொருளையும் ஒருவாறு விளக்கிக்காட்டினும். இப்பொருளையே ஒரு அட்டவணைவடிவாகவுங் காட்டுவாம்,



(அ) இக்கொள்கையொடு சிறிது வேறுபட்டுத் தோன்றுவதாகிய மணிமேகலைநூலார்கொள்கையை மற்றொரு அட்டவணையாகத் தருவாம்.



(க) இச்சாருபமாகிய மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டுங்கூடியது புரியட்டக உடம்பாம்.

(கo) தூலபூதங்களுக்குரிய பெயர், குணம், தொழில், வடிவம், நிறம், பீசாக்ஷரம், குறி, அதிதெய்வம் என்னும் இவற்றை ஒரு அட்டவணையாகத் தருவாம். இவற்றின்கருத்தை விரிவாகப் பின்னாராய்வாம்.

பெயர்.	பிருதுவி.	அப்பு.	தேயு.	வாயு.	ஆகாயம்.
குணம்	கடினம்	குளிர்ச்சி	சூடு	சலிப்பு	அகற்சி
தொழில்	உரந்தரல்	பதஞ்செய்தல்	ஒன்றுவித்தல்	திரட்டல்	இடந்தரல்
வடிவம்	நாற்கோணம்	இருகோணம்	முக்கோணம்	அறுகோணம்	வட்டம்
நிறம்	பொன்மை	வெண்மை	செம்மை	கருமை	புகைநிறம்
பீஜாக்ஷரம்	லங்	வங்	ரங்	யங்	ஹங்
குறி	வச்சிரம்	கமலம்	சுவஸ்திகம்	அறுபுள்ளி	அமிர்தவிந்து
அதிதெய்வம்	பிரமா	விஷ்ணு	உருத்திரன்	மஹேசுவரன்	சதாசிவன்

27. மேலோர்நூல்களிற் காணப்படுகிற பூதபரிணாமவியல்பினையாராய்ந்து அப்பாற் செல்வாம்.

சுவையொளி யூறோசை நாற்றமென்
றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு.

சுவைமை பிசைமை தோற்ற நாற்றமு
றவையு நீயே யடுபோ ரண்ணால்
அவையவை கொள்ளுங் கருவியு நீயே
முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணருந் தீயு நீயே


நான்கி னுணரு நீருநீயே
ஐந்துடன் முற்றிய நிலனு நீயே.

(பரிபாடல் ௧௩-ம் பாட்டு)

யதா ப்ரதாநேந மஹாந் மஹதா ஸ ததாவ்ருத:
பூதாதிஶ்ச விகுர்வாண: ஶப்ததந்மாத்ரகம் தத:।
ஸஸர்ஜ ஶப்ததந்மாத்ராத் ஆகாஶம் ஶப்தலக்ஷணம்।
ஶப்தமாத்ரம் ததாகாஶம் பூதாதி: ஸ ஸமாவ்ருணோத்।
ஆகாஶஸ்து விகுர்வாண: ஸ்பர்ஶமாத்ரம் ஸஸர்ஜ ஹ।
பலவாநபவத்வாயு: தஸ்ய ஸ்பர்ஶோ குணோ மத:

விஷ்ணுபுராணம்.

இவற்றை யாராயுமிடத்துப் பூதபரிணாமத்தைப்பற்றி பொருசாரார் கொண்டகொள்கை புலப்படுகின்றது. தன்மாத்திரைகள்பிறப்பதற்குமுன் மகத்தத்துவத்திலிருந்து தோன்றியபூதாதியானது மகத்தத்துவத்தினாற் சூழப்பட்டுத் தன்னிலையிலே சுழன்றுகொண்டிருந்தது இங்ஙனம் சுழன்றுகொண்டிருந்த பூதாதியிலே ஒலிக்குறிப்புத்தோன்ற அவ்வொலிக்குறிப்புக்குப் பற்றுக்கோடாகியபாகம் ஆகாசம் என்னும் மகாபூதமாயிற்று, ஒலிக்குறிப்புத்தானே சப்ததன்மாத்திரையெனப் பட்டது. அதன்பின்னர்ச் சப்ததன்மாத்திரையினும்பார்க்கதடிப்பு மிக்கதாகிய பரிசதன்மாத்திரை பூதாதியில்நின்று பிறந்தது. சப்த பரிசதன்மாத்திரையாகிய இரண்டுக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் வாயுஎனப்பட்டது. பின்னர் ரூபதன்மாத்திரை யெழுந்தது; சப்த பரிச ரூபமென்னும் மூன்றுதன்மாத்திரைகளுக்கும் பற்றுக்கோடாக நின்றபாகம் தேயு எனப்பட்டது. பின்னர் ரசதன்மாத்திரை தோற்றியது. சப்த பரிச ரூப ரசமென்னும நான்குதன்மாத்திரைகளுக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் அப்புஎனப்பட்டது. பின்னர்க் கந்ததன் மாத்திரையுதித்தது. சப்த பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐந்து தன் மாத்திரைக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் பிருதுவியெனப்பட்டது. பஞ்சதன்மாத்திரைகளும் பஞ்சமகாபூதங்களும் பூதாதியிலிருந்து தோற்றிய வான்முறை யிதுவாகும். இதனைப் பின்வரும் அட்டவணை யும் விளக்கும்,



இனி வேதாந்தநூல்கள் பூதபரிணாமத்தைப்பற்றிக்கொண்ட கொள்கை வருமாறு:—பஞ்சதன்மாத்திரைகளையும் நிறுத்தி ஒவ்வொன்றையும் இரண்டுசமபாகமாகப் பங்கிடுக. ஒவ்வொருதன்மாத்திரையிலும் ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு மற்றொருபாகத்தை நாற்கூறுக்குக; இங்ஙனம் பெற்ற கூறுகள் பூரணதன்மாத்திரையில் எட்டிலொன்று என்பதுவெளிப்படை. சப்ததன்மாத்திரை அரைப்பாகத்தோடு பரிச தன்மாத்திரை எட்டிலொன்று ரூபதன்மாத்திரை எட்டிலொன்று ரசதன் மாத்திரையெட்டிலொன்று கந்ததன்மாத்திரையெட்டிலொன்று என்னும் இவற்றைச்சேர்க்க ஆகாசமகாபூதம் பிறக்கும். பரிசதன்மாத்திரை அரைப்பாகத்தோடு ஏனையவற்றுள் எட்டிலொன்று எட்டிலொன்று ஆகச்சேர்க்க வாயுமகாபூதம்பிறக்கும். இங்ஙனமேபிறவுமாம்.

> "பாழெனக் காலெனப் பாகென வொன்றென
> இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
> ஆறென வேழென எட்டெனத் தொண்டென
> நால்வகை யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பு."

என்னுங் கடுவனிளவெயினனார் கூற்றுக்கு உரைகண்ட பரிமேலழகர் "பாழ்=புருடன். சாங்கியர் பிறிதொன்றுபிறத்தற்கிடனாகாதென்ப வாகலின் அவர்மதம்பற்றிப் புருடனைப் பாழ் என்றார்; கால்=ஆகாய

முதற்பூதங்களைந்தும்; பாகு=சொல்லல், இயங்கல், கொடுத்தல், விடுத்தல், இன்புறுதல் என்னுந்தொழிலாற்பாகுபட்ட வாக்கு, கால், கை, பாயு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களைந்தும்; ஒன்று ஆகாயத்தின் பண்பாகிய ஓசை; இரண்டு காற்றின் சிறப்புப்பண்பாகிய ஊறு; மூன்று தீயின் சிறப்புப்பண்பாகிய உருவம்; நான்கு நீரின்சிறப்புப்பண்பாகிய சுவை; ஐந்து நிலத்தின்சிறப்புப்பண்பாகிய நாற்றம்; ஆறு செவி, தோல், கண், நா, மூக்கு என்னும் அறிவுப்புலன்களைந்தும்மனமும்; ஏழுஅகங்காரம்; எட்டு மான்; ஒன்பது மூலப்பகுதி; பூதங்களைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், புலன்களைந்தும் மனம்முதலிய அந்தக்கரணங்கள் மூன்றும் மூலப்பகுதியும் புருடனு மெனப்பட்ட தத்துவம் இருபத்தைந்து," எனக் கூறினர்.

"ஆதி யில்லாப் பரமா ணுக்கள்
தீதுற் றியாவதுஞ் சிதைவது செய்யா
புதிதாய்ப் பிறந்தொன் றொன்றிற் புகுதா
முதுநீ ரணுநில வணுவாய்த் திரியா
ஒன்றிரண் டாகிப் பிளப்பதுஞ் செய்யா
அவலைப் போலப் பரப்பதுஞ் செய்யா."

என்னும் உரையும் இத்தொடர்பில் ஆராயற்பாலது.

28. இனி, பூதங்களைந்தாலும் புற்கலமாகிய உடம்பு ஆகும் மார்க்கத்தை முன்னோருரையின்படி யெடுத்துரைப்பாம். இப் பிரிவினுட் கூறப்படுவன இசைநுணுக்கமுடைய சிகண்டியார் கூற்றென உரையாசிரியர் அடியார்க்குநல்லாரால் எடுத்துக்காட்டப்பட்டன.

புற்கலம் - உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண் நீர் தீ வளி வான் என விவை. என்னை?

"மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதா
மெண்ணரிய பூதங்க ளென்றறிந்து—நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னவர்கோ மானே தெளி,"

என்றாராகலின்.

இப்பூதங்களைந்தானும் புற்கலமாமென்ற ஆசானை மாணாக்கன் பணிந்து பூதங்கடாம் ஒன்றோடொன்றுகூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாகவுடைத்து; நீர் நெகிழ்தலைக்குணமாகவுடைத்து; தீத் தெறுதலைக்குணமாக வுடைத்து; காற்று ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்று; ஆகாயமென்பது ஓருருவுண்டில்லை யன்று; அன்றியும்,

"செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலா—மொப்பரிய
தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பாமொன்று
வேயாறுந் தோளி விளம்பு"

என்பதனால் மண் ஐந்துபயனுடைத்து; நீர் நான்குபயனுடைத்து; தீ மூன்றுபயனுடைத்து; காற்று இரண்டு பயனுடைத்து; வான் ஒரு பயனுடைத்து; ஆதலால் இவை ஒன்றோடொன்று கூடுவனவல்லவாகவும் இவற்றின் கூட்டம் உடம்பென்றீராதலால் இவ்வைந்தின்கூட்டம் உடம்பாவது எவ்வாறோவெனின், இதற்குவிடை:

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதடுத்துத்—துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா
லவைமுதற் புற்கல மாம்"

என்பது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறு கூறுகின்றது. பூதங்களைந்தும் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீக் கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம் பொறிகடோறும் வினியோகிக்கப்பட்ட புலன் சுவைமுதல் ஐந்துவகைப் படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம். அன்றியும், மண்ணின்பகுதி நரம்பு, இறைச்சி, மயிர் தோலென வைந்து. நீரின் பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரம் என வைந்து.

"பசிசோம்புமைதுனங்காட்சிநீர்வேட்கை
தெசிகின்றதீக்குணமோரைந்து—மொசிகின்ற
போக்குவரவுநோய்கும்பித்தன்மெய்ப்பரிசம்
வாக்குடையகாற்றின்வகை."

பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர்வேட்கை யென்பன தீயின் குணம், போக்கு வரவு நோய்தும்பித்தல் பரிசம் என விவை காற்றின்குணம்.

"ஓங்கும்வெகுளிமதமானவாங்காரம்
நீங்காவுலோபமுடனிவ்வைந்தும்—பாங்காய
வண்ணமுலைமடவாய்வாகைத்தின்கூறென்று
ரெண்ணிமிகநூலுணர்ந்தோரெண்."

வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோப மென விவை யாகாயத்தின் குணம்: இப்பூதகுணம் இருபத்தைந்துங்கொண்டு உடம்பாம்.

"ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே—யிப்பாலு
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத்த னே."

என்பது தசவாயுக்களையுணர்த்துகின்றது. அவை ஆவன: பிராணன் அபானன்—உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சய னெனவிவை.

"இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினிபூ டாவோ
டங்குகு கன்னி யலம்பு வெனவுரைத்தார்
நன்குதச நாடிக டாம்."

தசநாடிகளாவன; இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குகு, அலம்பு என விவை.

"பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோ ரைபைந்தாய் மாருதமு—மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு."

என்பது பூதபரிணாம முணர்த்துகின்றது. இங்ஙனம், பூதங்களானும் பொறி முதலியவற்றானும் வாயுக்களானும் நாடிகளானும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்பாகக்கொண்டு இருவினையுந் தன்னகத்தடக்கி உயிர் பிறக்குமென்றறிக.

(தொடரும்.)

விபுலானந்தர்.

1924-ம் ஞு ஏப்பிரல்மீ 29உ (ரக்தாக்ஷி ஞு சித்திரைமீ 17உ) காலை 9-மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———(●)———

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரசேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-௱-௱-ஸ்ரீ S சோமசுந்தரபாரதி அவர்கள் M.A, B.L.,
3. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A, B.L.,
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.,
6. ,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L., M.L.A.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1923-ஞு டிசம்பர்மீ முதல் 1924-ஞு மார்ச்சுமீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ மு பெரி. வீர. அழகர்சாமிவேளார் அவர்கள், கோனாபட்டு.

(2) ,, S. ஆழ்வாரையங்காரவர்கள், தலைமையாசிரியர், கற்பகவிநாயக கலாசாலை, கோனாபட்டு.

(3) ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், (சொந்தக்காரர். காங்கிப்பாறை எஸ்டேட், திருவாங்கூர் ஹைரேஞ்ச்), கோம்பை.

III. சங்கத்தின் வருஷோத்ஸவக்கூட்டம் கூடாததினால், சங்கத்தின் காரியநிர்வாகசபைக்கு அங்கத்தினர்களைப் புதிதாகத் தெரிந்தெடுத்தல் கூடவில்லை. ஆகையால், வருஷோத்ஸவக்கூட்டத்தில் மகா சபையோரால் புதிதாக அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படும்வரை இப்பொழுதுள்ள நிர்வாகசபை அங்கத்தினர்களே தொடர்ச்சியாக அங்கத்தினராயிருந்துவருவார்கள்.

IV. சங்கக்கட்டட ரிப்பேர்முதலியவைகளை, மகா-ா-ா-ஸ்ரீ K. ராமமையங்காரவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி அவர்கள், மகா-ா-ா ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் இவர்களிருந்து கவனித்து வேலைகள் சீக்கிரம் முடி பும்படி ஏற்பாடுசெய்யவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

கட்டடத்தின் நடுக்கூடம் (Central Hall) ரிப்பேர்சம்பந்தமாகக் கொடுத்துள்ள இரண்டுவித அபிப்பிராயத்துள் இப்போதுள்ள மேலைச் சுவரை வைத்தபடியே ரிப்பேர்செய்தல் சம்பந்தமான அபிப்பிராயம் அங்கீகரிக்கலாயிற்று.

V. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்கு மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

VI. 1923–'24-ம் ஆண்டிற்கு, சரியான வரவு செலவு மதிப்புத் திட்டம் தயாரித்துச் சங்கத்தின் காரியநிர்வாகசபையாருக்கு அனுப்பப் படவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VII. (1) வித்வத்சம்பாவனை பரீக்ஷைசம்பந்தமாகப் புதுக்கோட்டை மஹாராஜாகாலேஜ் பிரின்ஸிபால் அவர்கள் அனுப்பிய கடிதம்முதலியவற்றைச் சங்கத்தின் வித்தியாவிஷய ஆலோசனைசபையாருக்கனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

(2) திருநெல்வேலி மகா-ா-ா-ஸ்ரீ S. முத்தையபிள்ளை அவர்கள் தாம் சங்கத்தின் அங்கத்தினராக இருப்பதினின்றும் விலகிக்கொள்வதாக எழுதிய ராஜீநாமா ரிக்கார்டுசெய்யலாயிற்று.

(3) சங்கம் அச்சாபீஸ், பைண்டிங் ஆபீஸ்களுக்கு அதிகாரி (Superintendent) ஒருவரை நியமுகம்செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றியவிஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

(4) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாக சங்கமாபீசு மானேஜர் எழுதிய குறிப்பு ரிக்கார்டு செய்யலாயிற்று.

மதுரை, 29-4-1924.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும்.

(௨00-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

VIII. மணிமேகலை வணக்கமும் சிலப்பதிகாரமும்.

கண்ணகியம்மையைவணங்கிய ஆரியமன்னர், பெருஞ்சிறைக்கோட்டம் பிரிந்த மன்னர், குடகக்கொங்கர், மாளுவவேந்தர், இலங்கைக் கயவாகு என்னு மிவரையெல்லாங் கூறியிருப்பவும் அவ்வம்மையை வணங்கிய மணிமேகலையைக் கூறாததுகொண்டு மணிமேகலை என்னும் நூலுட் குறிப்பிட்ட மணிமேகலை வணக்கமும் பொருந்தாதென்று பிள்ளையவர்கள் பெரிதும் வற்புறுத்துகின்றனர்.

கண்ணகியம்மையின்பிரதிட்டைக்கும் கும்பாபிஷேகத்திற்கும் இடையிலே விண்வழியாகநண்ணி வணங்கிய மணிமேகலை வேற்றுருக்கொண்டு வஞ்சியிலேயிருந்துவந்தமையின் அடிகட்கது புலப்பட்டில தென்க.

மாதவி மணிமேகலை என்பவர்களின் துறவும், மாடலன் தேவந்திகை என்பவர்களின் வழியாகவே அடிகளறிந்ததாகச் சிலப்பதிகாரத்திலே கூறியிருத்தலும் மேலையதை வலியுறுத்தா நிற்கும்.

வரந்தருகாதையிலே கண்ணகியம்மையைக் கடவுண் மங்கலங் காணியவந்தாரையே எடுத்துக்கூறப்பட்டமையும், உரைபெறுகட்டுரையிலே அம்மையைப்பிரதிஷ்டித்தாரையே கூறப்பட்டமையும் நோக்காது கண்ணகியம்மையை வணங்கிய எல்லாரையுங் கூறியிருக்கவும் மணிமேகலை கண்ணகியை வணங்கியிருப்பளேல் அடிகள் கூறுநிரார் என்று பிள்ளையவர்கள் கூறுவது பொருந்தாது.

IX. சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலம்.

இன்னும் உரைபெறு கட்டுரையிலே உறையூர்ச் சோழனாகிய சோழன்பெருங்கிள்ளி, வெற்றிவேற்செழியன், கொங்கிளங்கோசர், கடல்சூழிலங்கைக் கயவாகு என்னுமிவர் நங்கைக்குச் சிறப்பயர்ந்தவெல்

லாங் கூறப்படுகின்றன. இவற்றையெல்லாஞ் செவ்வே உற்றுநோக்கின் நூல்செய்தபின்னரே இவ் வுரைபெறு கட்டுரை நுவலப்பட்டதென்பது புலனாகும்.

இக்கட்டுரை உறையூர்ச்சோழனை எடுத்துக்கூறியதுபோல் புகார்ச் சோழன் நங்கைக்குச் சிறப்பயர்ந்ததை எடுத்துக்கூறாமையால் அதனது அழிவின்பின்னரே இது செய்யப்பட்டமை வெள்ளிடை மலையிலக்காம்.

சாத்தனாரால் கண்ணகியம்மையின் வரலாறுகளைக் கேள்விப்பட்ட வுடனே அடிகளும் சிலப்பதிகாரத்தைப் பாடத்தொடங்கிவிட்டார். காட்சிக்காதை பாடிமுடித்தவளவிலே இமயஞ்சென்ற செங்குட்டுவனுங் கண்ணகியம்மை சிலையொடும் வந்தான். ஆங்கு நிகழ்ந்தவற்றையெல்லாங் கேட்டறிந்த அடிகளும் கால்கோட்காதை, நீர்ப்படைக்காதை, நடுகற் காதை என்னு மிவற்றைப் பாடியிருத்தல் வேண்டும்.

"குன்றக் குரவையு மென்றிவை யனைத்துடன், காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல், வாழ்த்து வரந்தரு காதையொ, டிவ்வாறைந்தும்" என்னும் இவ்வடிகளிலே குன்றக்குரவையும் என்று சொல்லப்பட்ட விவ் விருபத்து நான்குடனே என்று பிரித்தது காண்டப்பிரிவுநோக்கிய தாகாது ; நாடுகாண்காதையும், காடுகாண்காதையும் என விக்கொள் கைக்கேற்ப முன்னம் பிரிக்கப்பெறாமையின் என்க. "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்" என்னும் நான்கினையும் ஓரடிக்குள்ளே அமைபவைத் தும், அதன் பின்னர் "வாழ்த்து வரந்தரு காதை யொடு" என்னுமிவற் றைத் தனியடியில் அமைத்துப்போதலின், இவ்விருகாதைகளும் நடுகற் காதைமுற்றுப்பெற்றவுடனே எஞ்சியகாதைகளையும் முடித்தனரென்றும், காட்சிக்காதையைச் செய்தவர் செங்குட்டுவன் வஞ்சிசேர்ந்த பின்னரே எஞ்சியவற்றையும் இயற்றிவிட்டாரென்றும் அறியக்கிடந்தமை காண்க.

சிலப்பதிகாரத்தின்பதிகம் பிறராற்செய்யப்பட்டது ஆதலின் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று தன்மைப் பன்மைக் கிளவியில் அடிகள் குறிக்கப்பட்டனர். இளங்கோவடிகளுக்கு "உரைசா லடிக ளருள" என்னு மிவற்றையும் நோக்குக.

இனி, அடிகள் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் இடந்தோறும் ஒருமைக்கிளவியிலே கூறிச் செல்கின்றார். வேள்விச்சாலையின் வேந்தன்

போந்தபின்—னியானுஞ் சென்றேன்" "என்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி" என்பவற்றையும் நோக்குக.

இக்கூறியவற்றானே சாத்தனுரையும் "யாம்" என்னுங்கிளவி உள்ளடக்கியதென்பது பொருந்தாதென்க.

"அடிகணீரே யருளுகென் றற்கு"என்னும் இதனையும் ஆதாரமாகக் கொண்டு சாத்தனாரையும் பிற்காலத்தார் உள்ளடக்கி விட்டார் போலும். இவ்வடக்கியார்க்கு "நன்னூற் புலவற்கு" என்றதூஉம் வலியாயிற்றுப் போலும்.

மற்றுத்தான் இக்கூற்றுக்குளதாகுங் காரணந்தான் யாதோவெனிற் கூறுதும். சாத்தனார் கதையின் வரலாற்றினைக் கூறியது கொண்டு அவர்தமக்கு அக்கதை செய்தலில் ஊக்கஞ் சென்றிலது என்னும் இதனையும் குறிப்பித்தற்கு இங்ஙனங் கூறினாரென்க.

சிலப்பதிகாரம் நிறைவேறிய பின்னரே மணிமேகலை செய்யப்பெற்ற தென்பது இவ்விருபெருநூலின் ஒருபெரும்போக்கினை உற்றுநோக்கு வார்க்கு உண்மையாகும்.

சிலப்பதிகாரத்தைச் சாத்தனார் கேட்டபிறகே அவர் மணிமேகலை நூலையியற்றி வெற்றிவேற்செழிய னவைக்களத்தே அரங்கேற்றினா ரென்க.

சிலப்பதிகாரம் கண்ணகியம்மையின்வரலாற்றினைச் சாத்தனார் வழியாகக் கேள்வியுற்ற அடிகள் அது முதலாகவே இயற்றிநிறை வேற்றினா ரென்பது முன்னரே விளக்கப்பட்டது. மணிமேகலையின் துறவு வாழ்த்துக்காதையிற்றான் கேட்கப்படுகின்றது. இதனான் மணிமேகலை என்னும் நூல் சிலப்பதிகாரம் இயற்றப்பெறுவதற்கு முன்னரே நிறைவேறிற்றென்பது பொருந்தாதென்க.

ஆயின் "நன்னூற் புலவற்கு" என்று அவர் விதந்துகூறப்பட்டமைக்குக் காரணம் இன்றாகிக் குற்றம் பயக்குமெனிற் பயவாது; என்னை? தொகைநூல்களிலே அவரது பாக்கள் யாக்கப்பட்டமையின் என்க.

X. புகாரழிவுஞ் சிலப்பதிகாரமும்.

மணிமேகலையிற் பலவிடங்களிலுங் கூறப்பட்ட புகாரழிவைச் சிலப்பதிகாரம் ஓரிடத்திலேனுங் கூறுது போந்தமையிற் சிலப்பதி காரத்துக்கு மணிமேகலை பிந்திய நூலென்று பிள்ளைபவர்கள் கூறு கின்றூர்கள்.

அடிகள் வாழ்த்துக்காதை பாடிமுடிக்கும் வரையினும் புகாரழி வைத் தெரிந்துகொண்டில ரென்பதுவே இதனுற்றெற்றெனப் புலனு கின்றது. மாதவி மணிமேகலைகளின் றுறவைத்தானும் வெகுகாலங் கழித்து அறிந்துகொண்டிலர் என்பது ஏற்புடைத் தாகாதா?

உரைபெறு கட்டுரையுள் "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக்கட வுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமுஞ் சமைத்து நித்த விழாவணி நிகழ்வித் தோனே". உறையூர்ச்சோழர் இங்ஙனம் நங்கைக்கு இயற்றியதை எடுத்துக் கூறிய அடிகள், புகார்ச்சோழர் செயலையும் எடுத்துக் கூறிலர் ஆதலினானும், "விரிதிரை வந்து வியனகர் விழுங்க—வொருதனி போயின னுலக மன்னவன்" என்று மணிமேகலை கூறினமையானும், இக்கடலழிவைக் கூறுதற்கு இடனின்மையானும் புகாரழிவுகொண்டு அந்நகர்ச் சோழன் நங்கைக்குச் சிறப்பயர்ந்தில னென்றுங்கு உரைபெறுகட்டுரையுட் கூறுதல் அசம்பாவிதமும், அமங்கலமும் ஆகுமாதலானும் சிலப்பதிகாரத்தி லிவ்வழிவு கூறப்பட்டில தென்க.

உதயகுமாரன் ஒருகணிகையின் பொருட்டு உயிர் விடுத்தமை யானும், அதனைச் சிலப்பதிகாரங் கூறவேண்டுமென்னுமோர்யாப் புறவின்மையானும், அவனது சாவும் சிலப்பதிகாரத்தில் இல்லையென்க.

இவற்றுற் புகாரழிவும் உதயகுமாரன் சாவும் சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டில ஆதலிற் சிலப்பதிகாரத்தினும் மணிமேகலை காலத்திற் பிந்திய நூலாகுமென்ற பிள்ளையவர்கள் வாதம் பொருந்தாதென்க.

புகாரழிவு வஞ்சிசேர்ந்த தேவந்திகை முதலியோர்க்குத் தெரிந் திருக்குமேல் அவர்,

கோப்புகழ மாதவிக்குங் கோவலற்கும் வரிப்பாவாற்
றீச்செய்கை செய்கடலே தெய்வப்புகார் நகரை
மோய்ச்சென் றழித்ததையுங் கேட்டாயோ தோழி
எரிமதுரை யழித்ததையுங் கேட்டாயோ தோழி.

என்றுங்குப் பாடியிருப்பர்.

அங்ஙனம் பாடிலராதலி னவர்க்க துபுலப்பட்டிலதென்க. அக்கடல் கோளை முக்கால வுணர்ச்சிகொண்ட அறவணவடிகள்பால் மாசாத்துவானும், தெய்வஞ்சான்ற தீவதிலகைபால் மணிமேகலையுமே அது போதே யறிந்தனராதலிற் பிறர்க்கது தெரிந்தில தென்க.

மாடலனுந் தேவந்திகையும் செங்குட்டுவற்கு மாதவி மணிமேகலை என்னும் இவரை யுள்ளிட்டோர்தம் வரலாற்றுமுறையைக் கூறிலரேல் சிலப்பதிகாரம் கண்ணகியம்மையின் தாயும் மாமியும் இறந்தது; தந்தை மாமன், மாதவி, மணிமேகலை என்னுமிவர் துறந்தது என்னும் இத் தொடக்கத்தனவற்றைக் கூற இடம்பெறாது. பெற்றிலதேல் இந் நிகழ்ச்சியெல்லா:ம் பொய்யாகுங்கொல்லோ?

மணிமேகலையிலே மாநாய்கன், கண்ணகியம்மையின்தாய், மாமி, கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதை உணர்த்திய மாடலன்என்னும் இவர்கள் கூறப்பட்டிலர் ஆதலின் அக்கூறிய சிலப்பதிகாரக்கூற்றுப் பொய் யாகுமென்று விலக்குவாருமுண்டோ?

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க மாசத்திலே மாதரியும் இறந்து போயினள். மாசாத்துவான், மாநாய்கன் என்னும் இவர்கள் துறவும், இன்னவர்தம் மனைவியரிறப்பும், மாதவி பிக்குணிசங்கத்தைச்சார்ந்து நால்வகை வாய்மை ஐம்பேரொழுக்க முதலாயவற்றைக் கைக்கோடலும் ஆகியஇவையெல்லாம் அதற்கடுத்த புரட்டாதித்திங்களிலே நடந்திருப்பவும் கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு இருபத்தைந்தாந்திங்களிலும் அறுபதாந்திங்களிலும் இவற்றையெல்லாம் எடுத்துரைத்தற்கிருந்த காரணந்தானென்னை?

(தொடரும்)

நவநீதகிருஷ்ணபாரதி.

தமிழ்ப்பரீக்ஷை விளம்பரம்.

தமிழ்நாட்டுள் அரசுரிமையும், தமிழபிமானமும் பூண்டுவிளங்கும் புதுக்கோட்டை ராஜஸ்தானத்தின் மகா-ா-ா-ஸ்ரீ ரீஜெண்டு ஸாஹேப் அவர்கள் இத்தமிழ்நாட்டில் தமிழ்ப்பயிற்சிகுன்றாது வளர்ச்சியடையும் பொருட்டு வருடந்தோறும் நவராத்திரிகாலத்தில் தமிழ்ப்பரீக்ஷை நடத்தித்தேர்ச்சிபெறுமவர்க்குத்தகுதியானபரிசும் யோக்கியதாபத்திரமுமளித்துவரும்படி யேற்பாடுகள் செய்யக் கருணைகூர்ந்து கட்டளையிட்டிருப்பது நம்தமிழ்ச்சங்கத்தாருக்கெல்லாம் மிகுந்தசந்தோஷத்தை விளைவிக்கின்றது.

இப்பரீக்ஷைக்குச்செல்லுமவர்களெல்லோரும் முதலில் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களடங்கிய விளம்பரமொன்று புதுக்கோட்டை மகா-ா-ா ஸ்ரீ திவானவர்களால் வெளியிடப்பெற்றிருக்கிறது. அதனை நம் நேயர்களெல்லோரும் அறிந்துகொள்ளற்குபகாரமாகும்படி பின்வருமாறு காட்டலாயிற்று.

ா-திவான் அவர்களால் விளம்பரம்.

தமிழ்ப்படிப்பை அபிவிர்த்திசெய்யும்பொருட்டுத் தமிழ் வித்யார்த்திகளுக்குப் பிரதிவருஷமும் தமிழில் பரீக்ஷை ஒன்று ஏற்பாடு செய்யும்படி மஹா-ா-ா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் கனிகூர்ந்து ஆக்ஞாபித்திருக்கிறார்கள். இப்பரீக்ஷை சமஸ்கிருத வித்யார்த்திகளுக்கு நடக்கும் பரீக்ஷையைப்போல் ஒவ்வொரு வருஷமும் நவராத்திரியில் நடத்தப்படும். தேறின மாணாக்கர்களுக்குத் தகுந்த பணப்பரிசு அளிப்பதுடன் தேர்ச்சியின் திறமையைக்காண்பிக்கும் யோக்கியதாபத்திரங்களும் அளிக்கப்படும். பல மெம்பர்கள் அடங்கியசபையினால் மேற்படி பரீக்ஷை நடத்தப்படும். பிராமணரல்லாதவர்களும் பரீக்ஷைக்கு வரலாம். பரீக்ஷை அநேகமாய் எழுத்துமூலமாய் நடத்தப்படும்.

பரீக்ஷை நடக்கும் சமயம் பரீக்ஷை செய்யும் இடம், இன்னும் மற்ற விஷயங்களைக்குறித்து விவரமான விளம்பரம் பின்னுடிப்பிரசுரிக்கப்படும்.

2. 1924-ம் வருஷத்துப் பரீக்ஷை சபையின் மெம்பர்கள்.

ரா-திவான் அவர்கள்—அக்கிராசனுதிபதி.

1. மகிபாலம்பட்டி வித்வான் ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்கள் .... மெம்பர்.

2. பிர்ம்மஸ்ரீ B. V. காமேசுவர ஐய்யர் அவர்கள், எம். ஏ. .... ,,

3. பிர்ம்மஸ்ரீ ஆர். சுந்தராச்சாரியார் அவர்கள், காலேஜ் பென்ஷன் தமிழ் பண்டிட். ,,

4. பிர்ம்மஸ்ரீ வி. டி. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள், காலேஜ் தலைமைத் தமிழ் பண்டிதர் .... மெம்பர் & காரியதரிசி.

3. அடியிற்கண்ட பாடங்களில் பரீக்ஷை நடத்தப்படும்.

I. இலக்கணம்.

1. (1) நன்னூல் விருத்தியுரை.
   (2) தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.
   (3) தொல்காப்பியம் பொருள் அதிகாரம்.
   (4) இறையனர் அகப்பொருளுரை.

2. (1) யாப்பருங்கலவிருத்தி.
   (2) மாறனலங்காரம்.
   (3) நேமிநாதம் (உரையுடன்).
   (4) இலக்கண விளக்கச் சூறாவளி.

II. இலக்கியம்.

1. (1) கம்பராமாயணம்-கிஷ்கிந்தாகாண்டம் & சுந்தரகாண்டம்
   (2) பெரியபுராணம் முதல் 500 செய்யுள்.
   (3) திணைமாலை நூற்றைம்பது.
   (4) பெரியதிருமொழி 1 முதல் 100 வரை.

(5) தேவாரம் பண்முறை அப்பர் திரு நேரிசை.

(6) திருக்கோவையார் 1 முதல் 100.

2. (1) சிந்தாமணி முதல் இரண்டு இலம்பகம்.

(2) திருக்குறள் பரிமேலழகர் உரையுடன்.

(3) கலித்தொகை (பாலைக்கலி மருதக்கலி).

(4) புறநானூறு (முதல் நூறு செய்யுள்).

(5) பரிபாடல் முதல் 10 பாட்டு.

III. வசனம்.

(1) கடைபெழுவள்ளல் காலம் (2) சோழவம்ச சரித்திரம்.

IV. வியாசம்.

கொடுத்த விஷயத்தை விரித்து எழுதல்.

V. செய்யுள் இயற்றல்.

நான்கு பாக்களும்—கொடுத்த விஷயத்தை அமைத்துப்பாடல்.

4. வருகிற நவராத்திரியில் நடைபெறும் தமிழ் வித்வத் பரீக்ஷைக்கு ஆஜராகப் பிரியமுள்ள மாணாக்கர்கள் 1924-ம் வரு ஆகஸ்டுமீ 15 உக்கு முன் பிரிஸிடெண்டுக்கு (புதுக்கோட்டை ஸ்டேட்டு டா-திவான் அவர்களுக்கு) வந்து சேரும்படி தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

5. ஒவ்வொரு பாடத்திலும் 100-க்கு 40 வீதமும், மொத்தத்தில் 100-க்கு 50 வீதமும் மார்க்கும் வாங்கத்தவறுகிற மாணாக்கர்கள் பரீக்ஷை தேறினவர்களாக அங்கீகரிக்கப்படமாட்டார்கள்.

P. K. KUNHUNNI MENON,

3—7—24. *Dewan.*

நாவடக்கம்.

247. ஆக்கப் படுக்கு மருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திரிய மைந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே.

248. கல்லாதார் வாயிற் கடுஞ்சொல்லாங் காரரவு
நல்லாரைச் சென்று நனிகடிக்குஞ்—சொல்லாலோர்
மந்திரமு மில்லை மகிதலத்தே மற்றுமொரு
தந்திரமு மில்லையதன் சால்பு.

249. வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற [1]வருவன வுரைப்பன வுரைப்பன்மற்
றெறிவுறு [2]தொழிலினர் சிறந்தவ ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.

250. கெட்டகழு தைக்குரல தென்பர்குயில் கூவின்
நட்டவர்கள் போன்மகிழ்வர் நண்பதனொ டென்னை
பட்டபொருள் சொல்லலுற லுண்டெனினும் யாரும்
வெட்டென வுரைத்தலை விடுத்திடுமி னென்றான்.

பெரியோர்.

251. நிற்பவே நிற்பவே நிற்பவே நிற்பவே
செந்நெறிக் கண்ணும் புகழ்க்கண்ணுஞ் சால்பினும்
மெய்ந்நெறிக் கண்ணும்வாழ் வார்.

252. காதன் மதியங் களங்கமுடைத் தானும்
பூதலத்தை யெல்லாம் பொலிவிக்கும்—ஓதுசில
குற்ற முடையா ரெனினுங் குவலயத்துள்
நற்றகையார் நல்லரென்றே நாடு.

253. பெரியோ ருழையும் பிழைசிறிதுண் டாயின்
இருநிலத்தில் யாரு மறிதல்—தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.

---

(247) வளையாபதி (புறத்). (248) வீரசோ. அலங். 23. மேற். (249) யாப். வி. 67; யாப். கா. செய். 7 மேற்; இலக். வி. 731 மேற். [1]வரும்வழி. [2]தகையினர். (250) நீலகேசி. மேற். (251) ௸. 51. (251) வீரசோ. அலங். 80 உரை. (253) ௸ ௸. 32 உரை; தண்டி. 83, மேற். இலக். வி. 678,

254. எண்ணூறும் பயன்றாக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்—தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றோ கடன்.

பெரியோர் சிறியோர் இயல்புகள்.

255. உலகினுட்,
பெருந்தகையார் பெருந்தகைமை [1]பிறழாவே பிறழினும்
இருந்தகைய [2]இறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை [3]சிறப்பென்றும் பிறழ்வின்றி
[4]உறுதகைய வுலகிற்கோ ரொப்பாகித் தோன்றாவே.

256. சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

257. பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்
முசுப்போல முன்காந் திருப்பார்—பசுத்தான்
வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்.

258. எற்றை கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும்—[1]முற்றும்
முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க்கு முண்டோ குணம்.

259. ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ.

260. குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்

---

(254) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47; இலக். வி. 651. (255) யாப். வி. 94; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி. 8 மேற். [1]பிறழாவே, [2]விறுவரைமே, [3]சிறப்பெனினும் [4]உறுதகைமை பிழைப்பினும் (எ.பா.) (256) ஔவையார்வாக்கென்பர். (257) நன். 95 மயிலைநாதருரை. (258) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47 உரை. [1]முற்ற (260) 'காளமேகப்புலவர்வாக் கென்பர்.

பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

261. ஞானம் பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தகுங்கல்வி நீதிநெறி
துற்குணருக் கில்லையென்றே சொல்.

தத்துவப்பிரகாசர்பாட்டு.

262. குரங்குமாய் நண்டுகெட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்துப் பேயு மேறி
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி
யிஞ்சிதின்று கொள்ளிபிடித் [1]தெழுந்தாற் போலத்
தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்விற்
றண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

263. பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தா னீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியு மாக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தரணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் [2]குணமுண் டாக்குந்
திறமறியா தேநின்று திகைக்கின் றோமே.

அறிவின்மை.

264. கல்லார்க் கினிய வுரைத்தலுங் கைக்கொண்ட
வில்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

265. அந்தக னந்தகற் காறுசொலல் யாதொக்கும்
முந்துசெய் குற்றங் கெடுப்பான் முழுவதும்
நன்கறி வில்லா னறிவறி யாதவற்
கின்புறு வீட்டி னெறிசொல்லு மாறே.

(261) அருணாசலக்கவிராயர்வாக்கென்பர் (தமிழ்ப் புல. ச. பக். 20) (262, 263) தமிழ்நா. 235, 236. [1]எரிந்தாற் போலத். [2]குணமுண் டாக்கத் திறமறி யாமனின்று. (264) தஞ்சைச் சரசுவதிமாலிகையுள்ள பிரதியொன்றிற் கண்ட பாடல். (265) வளையாபதி (புறத்.)

நல்குரவு.

266. பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்டவீ ருகா குறிப்பி னஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போல்வர்த மக்களு மொட்டார்.

267. சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணர்
நல்லவை யாரு நனிமதிப் பாரல்லர்
கல்வியுங் கைப்பொரு ளில்லார் பயிற்றிய
புல்லென்று போதலே மெய்யென்று கொண்ணீ.

268. தொழுமக ளுபினுந் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப.

269. பொருளில் குலனும் பொறுமையி னோன்பும்
அருளி லறனு மமைச்சி லரசும்
இருளினு ளிட்ட விருண்மயி ரென்றே
மருளில் புலவர் மனங்கொண் டுரைப்ப.

ஔவையார் பாட்டு.

270. உடையராய்ச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்காற் சுற்றம்
[1]உடையாளும் வேறு படும்.

271. [1]கவிகற் றவர்க்குங் கணிகற் றவர்க்குங்கம் மாளருக்கும்
ஓவிகற் றவர்க்கு முவாத்தி களுக்கு முயர்ந்தமட்டுங்
குவிவைக்கு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களுக்கும்
இவரெட்டுப் பேர்கட்கு நீங்காத் தரித்திர மென்றைக்குமே.

(266–269)வளையாபதி(புறத்). (270)யாப்.வி. 93; [1]உடைவயிறும். (271) தனிப்பா. [1]கவிகற்ற பேர்க்குங் கணிதங்கற் றோர்க்குங்கம் மாளருக்குங், குவி கட்டு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களுக்கு, மவியுற்ற யோகிக்கும் வாத்திமை யோர்க்கும்வண் ணார்களுக்கும், இவரெட்டுப் பேருக்கும் வெய்ய தரித்திர மெய்திடுமே (செந்தமிழ். தொ. 22, பக். 58, 59)

272. கருங்கட லுடுத்த மல்லன் ஞாலத்துச்
செம்மையின் வழாஅது கொடைக்கடம் பூண்டு
வாழ்வது பொருந்தா தாகிற்
சாவது மினிதவர் வீவது முறுமே.

273. உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே
செல்வர்தாம் பெருந்திரு வுறுக பல்பகல்
நீவா ழியரோ நெடிதே யீயாச்
சிறுவிலைக் காலத் தானு
முறுபொரு டந்தெஞ் சொற்கொள் வோயே.

274. மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு [1]மோரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—கொன்னே
ஒளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு.

275. சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்க—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.

276. ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

277. சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ளைப்
பெறுநன்றி [1]மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்.

278. துற்றன வாகத் தொகுத்து விரல்வைத்த
தெற்றுக்கலீ தென்னி னிதுவதன் காரணம்
அற்றமி றூன மெனைப்பல வாயினுந்
துற்றவி ழொவ்வாத் துணிவென்னு மாறே.

---

(272) யாப். வி. 53. (273) நன். 268 மயிலைநாதருரை; [தஞ்சைச் சரச்சுவதிமால் ஏட்டுப்பிரதி யொன்றில் ஒருபாட்டாகக் காணப்படுகின்றது]. (274) பெரும்பொருள்விளக்கம் (புறத்; தொல். பொ. 90. நச்.) [1]மொன்றாகிப். (276) ஔவைவாக்கென்பர். (277) யாப். வி. 4, 95; யாப். கா. ஒழி. 1 மேற். [1]பின்னும். (278) வளையாபதி (புறத்).

279. ஈட்டிய தெல்லா மிதன்பொருட் [1]டென்பது
காட்டிய கைவண்மை காட்டினர்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து.

ஈயாமை.

280. இறைத்தொறு மிறைத்தொறு மணற்கிணற்றிற் சுருங்காது
பன்னா ணிற்பினும் புண்ணடையின் மிகாஅது
இரப்போர்க் கீயுங் கடனறி வாளர்
கையோ முடங்கக் கண்டது மிலையால்
ஈயா மாந்த ரீட்டிய பெரும்பொருள்
பாரி பறம்பிற் பனிவரை போல
உயரக் கண்டது மிலையா லறனறிந்
தற்றோர்க் குதவா னாயிற்
கற்றோர் விச்சையொடு கல்லா னாயிச்
இளமுலை மாத ரின்னகைச் செவ்விக்
கலவி யின்பங் கலவா னாயின்
விருந்துற வருந்தா னாயின்
மருந்தோ வாழ்க்கை மாநிலத் தோர்க்கே.

281. சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ றுரியப்பே
யெற்றுஞ் சுடுகாட் டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னொக்குந்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்.

ஔவை பாடல்கள்.

282. கருங்குளவிச் சூரைத்தூற் றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—யரும்பகலே
இச்சித் திருந்தபொரு ளாயத்தார் கொள்வரே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

283. தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை யடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமே லவன்குடி
எச்ச மிறுமே விறு.

---

(279) பெரும்பொருள்விளக்கம். (புறத்; தொல். பொரு. 75 நச்.) [1]டென்பதே. (280) தஞ்சைச் சரச்சுவதிமால் ஏட்டுப்பிரதியொன்றிற்கண்ட பாடல்; (281-282) ஔவையார்க்கென்பர் (தனிப்பா.) (283) தமிழ் நா. 33.

284. பாடல் பெறுனேற் பலர்மெச்ச வாழானேல்
நாடறிய நன்மணங்க ளுடானேற்—சேட
னிவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரிற்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னை காண்.

285. நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

இரட்டையர்வாக்கு.

286. கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுரைப்பழத்தின்
உண்ணாடிப் புக்க வுறுபொருளு—மண்ணு
கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினந்தெரிந்த வாறெனவே செப்பு.

287. வெள்ளிலைவே லற்பநிழன் மெத்தவே மூட்டைக்குந்
துள்ளுநரு வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
அடுக்கவொட்டா வாறுபோ லற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமுங் கொடார்.

288. கல்லா லயமாந் தேவருமாங் கழுதை கசடர் பொதிசுமக்குங்
கடாவோ வுழுது பயிரிடற்காங் கட்டம் பன்றிக் கிரையாகும்
புல்லே நீசர் வாகனமாம் பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடிந்து மறையோர்க்குப் பொருளு மீந்து புகழெய்தும்
மல்லார் குட்டிச் சுவரெனிலோ மாடு முரைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோ மாட கூடந் தனைவிளக்கும்
அல்லா துலுத்தன் றனக்கிணையா யாரை யுரைப்பன் புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத் தவனுக் கவனே யிணையாமே.

ஏற்றல்.

289. நிலம்பொறை யாற்று நிதிபல கொண்டுங்
குலம்பெறு தீங் கந்தணர் கொள்ளார்—நலங்கிளர்
தீவா யவிசொரியத் தீவிளங்கு மாறுபோற்
றூவா தொளிசிறந்தார் தாம்.

(284, 285) ஔவை வாக்கென்பர். (286) செந்தமிழ். 4, 180; (287) ஷை. 3, 481. (288) இராமசந்திரகவிராயர் வாக்கென்பர். (289) பெரும்பொருள்விளக்கம் (புறத்; தொல், பொருளதி, 75.)

நன்றிமறவாமை.

290. முன்னொருவன் செய்யு முபகார மூவுலகந்
தன்னைக் கொடுத்தாலுஞ் சாலுமே—யென்னே
உயிர்க்குறுதி யாக வொருவர்சோ றுண்டார்
பிறர்க்குரிய ராவரோ பேசு.

புகழ்.

(இரண்டு திருக்குறளிணைந்த பாட்டு).

291. எய்தற் கரிய வியன்றக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயலென்று—வையகத்
தீத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

292. வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு [1]மழைமுகிலைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றம் [2]பலவெனினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.

293. கல்லார் நாவிற் கட்டுரை கொள்வார்—புகழெய்தார்
புல்லார் வாயிற் சொற்றெளி வுற்றார்—புகழெய்தார்
நல்லார் மேவு நண்பு துறந்தார்—புகழெய்தார்
இல்லா ராய்நின் றின்ப முவந்தார்—புகழெய்தார்.

நிலையாமை.

294. நெருந லென்பது சென்றது நின்ற
வின்றுஞ் செல்லா நின்றமுன் சென்று
வருநாள் கண்டவர் யாரே யதனால்
ஒருநா ளகப்படுத் துடையோ ரின்மையின்
இல்லது நாடுமி னுள்ளது கொழுமின்
வாழ்வி லின்பமும் புணர்மி னஃதான்று
ஏழது நீரகம் புகினு மேலது
விசும்பின் பிடர்த்தலை யேறினும் புடையது
நேமி மால்வரைக் கப்புறம் புகினும்
கோள்வாய்த் துக் கொட்குங் கூற்றத்து
வீளிக் கொடுமா விலக்குதற் கரிதே

(290) பாரதவெண்பா. (291) யாப். வி. 60. (292) வீரசோ. அலங். 20; தண்டி 47; இலக். வி. 651. [1]முகிறன்னைப. [2]பலவரினும், இருப்பினும். (293) வீரசோ, யாப். 15, மேற். (294) ஆசிரியமாலை (புறத்.)

295. பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னாண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்கு மெறிபடையு மாற்றலு [1]மாண்பும்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனொ டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத லீயிருங் காண்டிர் நினைத்தக்
கூறிய வெம்மொழி பிழைபாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.

296. பரவை மாக்கடற் [2]றொகுதிரை வரவும்
பண்டைச் [3]செய்தி யின்றிவண் வரவும்
பகற்பின் முட்டா திரவினது வரவும்
பசியு மார்கையும் வரவும்
பரியினும் போகா தவப்பினும் வருமே.

297. இளமையு நிலையாவா லின்பமு நின்றவல்ல
வளமையு மஃதேயால் வைகலுந் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக் கென்றுமென்றும்
விளைநில முழுவார்போல் வித்துநீர் செய்துகொண்மின்.

298. கண்டார் காணு வுலகத்தே காதல் செய்து நில்லாதே
பண்டே பரமன் படைத்தநாட் பார்த்து நின்று நையாதே
தண்டா மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
உண்டே லுண்டு மிக்கதிவ் வுலகம் மறிய வைம்மினே.

299. நில்லாது செல்வ நிலவா ருடம்படைந்தார்
செல்லா ரொருங்கென்று சிந்தித்து—[4]நல்லார்
அருளுளம் புரிகுவ ராயி
னிருளறு சிவகதி யெய்தலோ வெளிதே.

300. அந்தாத் துள்ளே யகங்கை புறங்கையா
[5]மந்தரம் போலு மனைவாழ்க்கை—[6]அந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாளுளும்
போகின்ற பூளையே போன்று.

---

(295) யாப். வி 55.; யாப். கா. செய். 15. மேற். [1]அன்பும். (296) யாப். வி. 40, 53. [2]படுதிரை. [3]செய்தியினின்றிவண். (297) வளையாபதி (புறத்.) (298) திருவெள்ளறைச் சாஸனப்பாடல் (செந்தமிழ். 4. 399). (299) யாப். வி. 55. [4]நல்லவ ருள்ளம் புரிகுவ. (300) வீரசோ. யாப். 5; யாப். வி. 87. யாப். கா. ஒழி. 6. மேற்; [5]மந்தரமே. [6]மந்தரத்து.

301. கல்வியா னல்லனே காமாதி யாற்றீயன்
செல்வத் தியைந்தான் குலத்தினிற் றாழ்ந்தனனும்
வல்லுவா னென்றொன்று வல்லா னிதுவன்றே
நில்லாமை நீத்த நிலை.

யாக்கைநிலையாமை.

302. யாணர் வரவின் மேனா ளீங்கிவன்
இளமைச் செவ்வி நயந்த பேதையர்
காத லுண்கண் வருபனி நீங்கி
இன்னுந் துயில்கொண் டிலவே யின்றிவன்
போர்வை பசையற வுணங்கிப் பாணர்
பழந்தலைச் சீறியாழ் போலக் குரலழிந்து
நரம்புமடித் தியாத்த யாக்கை மூப்புறப்
பதிகெழு மூதூர் மன்றத்துப்
பொதியிற் புறஞ்சிறைச் சார்ந்தனன் மன்னே.

303. உள்ளது காக்குமிக் கள்ள யாக்கை
மேம்படு குற்ற மூன்றொடு வழங்கலின்
உண்டி நல்லரசு தண்டத்தின் வருத்த
நோன்பிணி யகப்பட் டிருப்பினும்
தோன்றுவது பின்னர்க் காப்பது முன்னே.

304. நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே.

305. வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழையக்
கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதா
நாற்ப திகந்தா மரைத்தாது வந்ததினி
நீத்த றுணிவா நிலையா திளமையே.

306. கழிந்த திளமை கழிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கந்—கழிந்து
கருநெறிபுல கூந்தலார் காதலேய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்.

---

(301) நீலகேசி. மொக்கல. 113. சமயதிவாகரருரை. (302, 303) ஆசிரியமாலை (புறத்.) (304) வளையாபதி; யாப். வி. 93. (305) வளையாபதி (புறத்.). (306) நீலகேசி. குலவ. 26 உரை; குண்டல. 6 உரை.

307. நன்மைக்கு நாறுமி தென்றிவ்
வுடம்பு நயக்கின்ற தாயின்
ஒன்பது வாயில்க டோறு
முண்ணின் றழுக்குச் சொரியத்
தின்பதொர் நாயு மிழுப்பத்
திசைதொறுஞ் சிப்பிலகு போழ்தின்
இன்பநன் ஞற்ற மிதன்க
ணெவ்வகை யாற்கொள்ள லாமே.

308. உறுப்புக்க டாமுடன் கூடி
யொன்று யியைந்த பெரும்பை
மறைப்பில் விழைவிற்குச் சார்வாய்
மக்குவ தேலிவ் வுறுப்புக்
குறைத்தன போல வழுகிக்
குறைந்து குறைந்து சொரிய
வெறுப்பிற் கிடந்த பொழுதின்
வேண்டப் படுவது முண்டோ.

செல்வநிலையாமை.

309. அரையது துகிலே மார்பின தார
முடியது முருகு நாறுந் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது, மாலை தாழ்ந்த மணிக்காற் றனிக்குடை
முன்னது முரசு முழங்குந் தானை
இந்நிலை யினைய செல்வத் திங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதுஞ் செய்தனர் மாந்த ரேயென
மயக்க நீங்கக் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலின்
உலைந்திய துணிபு முடுத்து
மாசுமிப் போர்த்த யாக்கையொடு
தாமே யொருசிறை யிருந்தனர் மன்னே.

310. வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டான் மயங்காதே

(307, 308) குண்டலகேசி (புறத்.) (309) ஆசிரியமாலை(புறத்). (310) வளையாபதி (யாப். வி. 93)

உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்க ணின்றாக்கஞ் செய்ரியேற்
சித்தி படர்த றெளிவாழி நெஞ்சே.

311. வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயங்
கள்வரென் றிவ்வாற்றிற் கைகரப்பத் தீர்ந்தகலும்
உள்ளி னுறுபொருளை யொட்டா தொழிந்தவர்
எள்ளும் பெருந்துயர்நோ யெவ்வ மிகப்பவே.

312. ஒழிந்த பிறவற முண்டெடன்பா ருட்க
வழிந்து பிறரவாம் வம்பப் பொருளை
இழந்து சிறிதானு மெய்தா தொழிந்தார்
அழிந்து பெருந்துயர்நோய்க் கல்லாப் பவரே.

313. இன்மை யிழிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையி லரும்பொருளைத்
துன்னு தொழிந்தார் துறவோ விழுமிதே.

314. ஈண்ட லரிதாய்க் கெடுத லெளிதாகி
நாண்டல் சிறிதாய் நடுக்கம் பலதரூஉம்
மாண்பி லியற்கை மறுவி லரும்பொருளை
வேண்டா தொழிந்தார் விறலோ விழுமிதே.

315. இல்லெனின் வாழ்க்கையு மில்லையுண் டாய்விடிற்
கொல்வர் கயவர் கொலப்பட்டும் விடுவர்
இல்லையுண் டாய்விடி னிம்மை மறுமைக்கும்
புல்லென்று காட்டும் புணர்வது மன்றே.

அருளுடைமை.

316. ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாம்
தூற்று மின்னறந் தோகனி துன்னன்மின்
மாற்று மின்கழி யாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவிவை கொண்மினீர்.

317. பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் செய்பா
தருளைப் பொருளா வறஞ்செய்தல் வேண்டும்
அருளைப் பொருளா வறஞ்செய்து வான்கண்
இருளிலியல் பெய்தாத தென்னோ நமர்காள்.

(311-317) வளையாபதி (புறத்).

கொல்லாமை.

318. எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

319. இந்நோய் நமக்குண்டென் றெண்ணாதே யெவ்வுயிரும்
முன்னைவக் கொன்றுண்ணு மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவ ரிசைந்து.

320. தகாதுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவம்
அவாவிலையி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்
புகாவலை விலங்காய்ப் பொருதுபிற வூன்கொன்
றவாவிலையில் விற்பானு மாண்டருகல் வேண்டும்.

321. பிறவிக் கடலகத் தாராய்ந் துணரிற்
றெறுவதிற் குற்ற மிலார்களு மில்லை
யறவகை யோரா விடக்கு மிசைவோர்
குறைவின்றித் தஞ்சுற்றந் தின்றன ராவர்.

322. உயிர்க ளோம்புமி னூன்விழைந் துண்ணன்மின்
செயிர்க ணீக்குமின் செற்ற மிகந்தொரீஇக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.

323. உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளி
னிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறின ரறிந்தார்.

பொய்யாமை.

324. அற்றன் றாத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனேர்த்தல்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்.

325. கல்வி யின்மையுங் கைப்பொருள் போகலும்
நல்லில் செல்லல்க ளானவி வுண்மையும்
பொய்யில் பொய்யொடு கூடுதற் காகுதல்
அய்ய மில்லை யதுகடிந் தோம்புமின்.

---

(318) யாப் வி. 3. (319) பாரதவெண்பா. (320–323) வளையாபதி. (புறத்.)
324. நீலகேசி. மேற். (325) வளையாபதி (புறத்.)

326. பொய்யி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டைய மின்றி யறநெறி யாற்றுமின்
வைகல் வேதனை வந்துற லொன்றின்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டதே.

கள்ளாமை.

327. பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே.

தவம்

328. வரிக்கடை நெடுங்கண் விளங்க மேதக
மணித்தோடு பெய்து வாண்முகந் திருத்தி
நானிலம் வளைத்த பரவையொடு கெழீஇய
கான்யாற்று வருபுன லாடலுந் தேமலர்
வல்லிப் பந்தர் வண்டுவா ழொருசிறை
நிலமகட் புணருஞ் சேக்கையு மாமுதன்
மெல்லுரி வெண்டுகி லுடையுந் தொல்வகைப்
படைபுழா விளையுளி னுணவு மந்திரத்துச்
சுடர்முதற் குலமுறை வளர்த்தலும் வரையாது
வருவிருந் தோம்புஞ் செல்வமும் வரைமுதற்
காடுகைக் கொள்ளு முறைபுளு மெய்திவ்
வெண்வகை மரபி னிசைந்த வாழ்க்கை
யைம்பொறிச் சேனை காத்து மாற்றலொடு
வென்றுவிளங்கு தவத்தின ராசியற் பெருமை
மாக்கட லுடுத்த வரைப்பின்
யார்க்கினி தன்றாம் தமியுநர்ப் பெறினே.

329. [1]மைனமக் கருளும் வியனருங் கலமே
மேலக விசும்பின் விழுவொடு வருமே
மேருவரை யன்ன விழுக்குணத் தவமே
மேவதன் றிறனி மிக்கதென் மனமே.

(326, 327) வளையாபதி (புறத்.) (328) ஆசிரியமாலை (புறத்). (329) யாப். வி. 52, 95. [1]மென்மக்கட் கருளும், யென்மக்க ளருளும்.

330. தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கல தரிதே
மயக்கு நீக்குதன் மனமொழி யொடுமெயிற் செறிதல்
உவத்தல் காய்தலொ டிலாதுபல் வகையுயிர்க் கருளை
நயத்து நீங்குதல் பொருடனை யனையது மறிநீ.

331. பொருளொடு போகம் புணர்த லுறினும்
அருளுதல் சான்ற வருந்தவஞ் செய்ம்மின்
இருளில் கதிச்சென் றினியவண் வாரீர்
தெருள லுறினுந் தெருண்மி னதுவே.

332. தானஞ் செய்கிலந் தவமு மஃதே
கானந் தோய்நில விற்கழி வெய்தின்
நானந் தோய்குழ னமக்குய்த லுண்டோ
மானஞ்சீர் கொள்கையார் மாற்றம்பொய் யல்லவாய்.

பற்றறுத்தல்.

333. உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகு மென்ப
அதனால், நற்றிற [1]நாடுத னன்மை
[2]பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.

334. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையிவை யுள்வழிப்
பற்றா வினையாய்ப் பலபல யோனிகள்
அற்றா யுழலு மறுத்தற் கரிதே.

335. உற்ற வுதிர மொழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுத லென்றெக்கும்
பற்றினா னாகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே.

336. பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி
யொருவந்த வுள்ளத் துவத்த லொழிமின்
வெருவந்த துன்பம் விடுக்குந் திறலோன்
ஒருவ னுலகிற் குளனென்னு மாறே.

(330–332) வளையாபதி (புறத்.). (333) யாப்.வி. 94; தொல். செய். 50, நச்; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி. 8 மேற். [1]நாடுக. [2]பற்றிய. (334–336) வளையாபதி (புறத்.).

337. வேரிக் கமழ்தா ரரசன்விடு கென்ற போதும்
[1]தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்ந்த [2]பின்னும்
பூரித்தல் வாட லிவற்றாற்பொலி [3]யாத விட்டான்
பாரித்த வெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்.

338. ஒருமன மாந்தர் மூவகை யுலகின்
இருமனம் பட்டுநாற் கதியுழல் வோரே
இருமனம் பட்டு நாற்கதி யுழல்வோர்
ஒருமன மாகி மூன்றுதிரி விலரே
மூன்றுதிரி வறிந்த முதலோன் றறிந்தோர்
ஆன்ற நாற்கதி யிரண்டன்வர விலரே
ஆன்ற நாற்கதி யிரண்டன்வர வுடையோர்
மேற்செயன் மூன்றி னொன்றுணர்ந் தோரே.

339. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த பெருமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

ஔவையார் தத்துவங் கூறிய வெண்பா.

340. ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
[4]வென்றான்றன் வீரமே வீரமாம்—ஒன்றானுஞ்
சாகாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
வோம லுண்பதே யூண்.

341. பெரும்பாவ மறத்துய்த்துப் பெறுதும்யாம் வீடென்னும்
அரும்பாவ காரிநீ யாவர்வா யதுகேட்டாய்
வரும்பாவ மெதிர்காத்து மன்னுந்தம் பழவினையும்
ஒருங்காக வுதிர்த்தக்கா லுயிர்த்தூய்மை வீடென்றான்.

பழவினை.

342. உய்த்தன்றி யோர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னெக்கும்
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தேதா னிடர்ப்படு மாறே.

(337) குண்டலகேசி (புறத்.); [1]சோரிக்கலத்தின். [2]போதும். [3]வின்றி நின்றான். வீரசோ. அலங். 9 உரை. (338) யாப். வி. 95. (339) அடையாற் றப்புத்தகசாலைத் திருக்குறளேட்டிற் கண்ட பாட்டு. (340) தமிழ்நா. 59. [4]வென்றான் றனவீர மேவீரம். (341) நீலகேசி. (342) வளையாபதி (புறத்).

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி ஹு வைகாசிமீ [பகுதி எ.
Vol. XXII. *May-June-1924.* No. 7.

பாடாந்தரமும் பொருள்கோடலும்.

இராமாவதாரம்.

—(●)—

கடிமணப்படலம்.

"புயலுள மின்னுள பொருவின் மீனுள
இயன்மணி யினமுள சுடரி ரண்டுள
மயன்முதற் றிருத்திய மணிசெய் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட மொத்ததே"

இச்செய்யுளில், 'சுடரிரண்டுள' என்னும்பாடத்தைச் 'சுடர்களின்றுள' எனப் பாடங்கொள்வாருமுளர். சுடரிரண்டுள என்னும் பாடம் பொருத்தமும் சிறப்பு மின்றாயினன்றோ? 'சுடர்களின்றுள' என்னும் பாடங் கொள்ளத்தக்கது. இச்செய்யுள் சிலேடையுவமையாதலின் அதற்கேற்பப் பொருள்கொள்ளுமிடத்துச் 'சுடரிரண்டுள' என்னும் பாடமே சிறந்துகாட்டலின் அதுவே பொருத்தமும் சிறப்புமுடைத்தாம். சுடர்களின்றுள என்னும்பாடம் சிலேடையுவமைக்கேற்பப் பொருள்கொள்ளுமிடத்து அத்துணை சிறந்துகாட்டாமையின், அது பொருத்தமும் சிறப்புமின்றாம். சிலேடையுவமைக்கேற்பச் 'சுடரிரண்டுள' என்பதற்குப் பொருள்கொள்ளுமிடத்து மண்டபத்தின்கண் தசரதன் சனகனென்னுஞ் சுடர்களிரண்டுள்ளன என்றும், அண்டத்தின்கண் ஞாயிறுந் திங்களுமாகிய சுடர்களிரண்டுள என்றும் பொருள்கொள்க. சுடரிரண்டுள என்பதற்கு உவமையாகப் பொருள்கூறலும் பொருந்தும். தசரதன்

சனகனென்னுமிருவரையும் ஞாயிறுந் திங்களுமாக உருவகித்தது எது பற்றியெனின், பேரரசனாகிய தசரதன், தானேவிளங்கும் பேரொளியாகிய ஞாயிறுபோலத் தானே விளங்கும் பேரொளியுடையனும், சிற்றரசனாகிய சனகன், தானேவிளங்கமாட்டாது ஞாயிற்றான்விளங்கு மதிபோலத் தானேவிளங்கமாட்டாது தசரதனான்விளங்குஞ் சிற்றொளியுடையனுமு மிருத்தல்பற்றியேயாம். தசரதனான்விளங்குஞ் சிற்றொளியுடையனென்றது அவ்வொளியை அவன் உவந்துழிப் பெறுதலும் காய்ந்துழி யிழத்தலுநோக்கி. பேரொளியுஞ் சிற்றொளியுமுடைமைபற்றியே ஆசிரியர் இவ்வாறு கூறினரென்பது, அவரே எதிர்கோட்படலத்திலே,

"வந்தன னரச னென்ன மனத்தெழு முவகை பொங்கிக்
கந்தடு களிறுந் தேருங் கவனமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான்."

எனக் கூறியதனானு முணரப்படும். இற்றைக்குச் சிலவருடங்களுக்கு முன்னே தேகவியோகமடைந்தவரும், கம்பர்போக்கும் வாக்கு முணர்ந்து பொருளுரைத்தலில்வல்லவரும், நமதாசிரியருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்கருத்து மிதுவே.

இங்கே, கம்பர் ஞாயிற்றையுந்திங்களையும் முறையே தசரதனுக்குஞ் சனகனுக்குமுவமைகூறியதுபோலவே சீவகசிந்தாமணியிலே திருத்தக்க தேவரும் சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் உவமைபுணர்த்தி,

"மொய்வார் குழலார் முலைப்போர்க்கள மாயமார்பிற்
செய்யோன் செழும்பொற் சரஞ்சென்றன சென்றதாவி
வெய்தா விளியா வெருவத்துவர் வாய்மடியா
மைபார் விசும்பின் மதிவீழ்வது போலவீழ்ந்தான்."

எனக் கூறினர். அவர் ஞாயிற்றின்முன்னர் மதி நில்லாதேகெடுதல் போலக் கட்டியங்காரன் சீவகன்முன் எதிர்நிற்கமுடியாது கெட்டமை பற்றியும், இராக்காலத்தே இருள்பரப்ப மதியாண்டதுபோல உலகிற் கொடுங்கோல் இருள்பரப்ப அரசாண்டதன்மைபற்றியுமே உவமை புணர்த்தினர். திருத்தக்கதேவர் உவமைபுணர்த்திய திறமையினும் கம்பர் உவமைபுணர்த்தியதிறமை மிக வியக்கற்பாலதேயாம்; என்னை?

பேரரசின்பேரொளிக்கும் சிற்றரசின்சிற்றொளிக்கும் உவமைபுணர்த்தினு ராதலின். இவ்வாறே திருத்தக்கதேவர்கூறிய வுவமைகளைக் கம்பர் கூறு மிடத்து மிக அழகுறக்கூறுவர். அதனை: சேதுசமஸ்தானவித்துவா னும், தொடக்கத்திலே செந்தமிழ்ப்பத்திரிகைக்கு அதிபராயிருந்தவரும் அறிவிற்பெரியாருமாகிய ஸ்ரீமான் ரா. ராகவையங்காரவர்கள் செந்தமிழ் ௪-ந். தொகுதி, கம். பகுதி முதலியவற்றில் வெளியிட்ட திருத்தக்க தேவரும் கம்பரு மென்னும் விஷயம் நன்குவிளக்கும். அதனைநோக்கி உணர்க.

இனி, கம்பர்கூறியவாறே கச்சியப்பசிவாசாரியரும்,

"சொற்றிறன் மேதகு சூரெனும் வெய்யோ
னுற்றிடும் வைப்பினி லோரிடை தன்னின்
மற்றொ ரிளம்பிறை வைகிய வாபோற்
கொற்றவ னுமுசு குந்த னிருந்தான்." என்றுகூறுதல்காண்க.

இனி இவ்வாறன்றி, இச்செய்யுளுக்கு அண்டங்காறுமுயர்ந்த மண் டபத்தின்கண் புயன் முதலியன அடங்கியுளவாதலின் மண்டபம் அண் டம் ஒத்தது என்று, சிலேடையுவமைபாகக் கூறிப் பொருள்கோடலும் பொருத்தமுஞ் சிறப்புமின்றாம்.

உலாவியற்படலம்.

"வெங்க ணானையி னுன்றனி வெண்குடை
திங்கள் தங்கள் குலக்கொடி சீதையாம்
மங்கை மாமணங் காணிய வந்தருள்
பொங்கி யோங்கித் தழைப்பது போன்றதே."

இச்செய்யுளிற் கம்பர் தங்கள் குலக்கொடியெனக்கூறியது சீதையின் றந்தையாகிய சனகன் சந்திரவம்மிசத்தவனாதல்கருதி யென்றும், சனகன் சூரியகுலத்தனாதலின் அவர்கூறியது பிழையென்றும் கம்பர் கூறிய கருத்துணராது மறுத்துரைத்தனர் சிலர். கம்பர் சந்திரனும் சீதையும் ஒருகுலத்திற் பிறந்தவராதல்பற்றித் தங்கள்குலக்கொடி யென்றாரன்றிச் சந்திரவம்மிசமென்று கூறினாரல்லர். தன்குலக்கொடி யென்னாது தங்கள்குலக்கொடி யென்றபாடமே அதற்குச் சான்றாகும்.

திருவும் சந்திரனும் பாற்கடலிற்பிறந்தமைபற்றித் திருவின் அவதாரத்த ளாகிய சீதையையும் திருவாகக்கருதித் தங்கள்குலக்கொடியென்ருர்.

இங்ஙனமே,

"குன்றம்மாடக்கோவினளிக்குங்கடலன்றி
அன்றம்மாடத்தும்பாளிக்குமமுதன்னுள்" என்றும்,

"மானணிநோக்கினுர்தம்மங்கலக்கழுத்துக்கெல்லாம்
தானணியானபோது தனக்கணியாதுமாதோ" என்றும்,

"கருங்கடற்பள்ளியிற்கலவிநீங்கிப்போய்ப்
பிரிந்தவர்கூடினுற்பேசவேண்டுமோ" என்றும்,

பிறுண்டும் சீதையைத் திருவாகவே ஆசிரியர் கூறுதல்காண்க. பாற்கட லாகிய ஒரேகுலத்தில் சந்திரனுந் திருவும் பிறந்தமையை ஆசிரியர் மூன்னும்,

"கொடியையல்லைநீயாரையுங்கொல்கிலாய்
மடிவிலின்னமுதத்தொடும்வந்தனை
பிடியின்மென்னடைப்பெண்ணொடென்ருலெனைச்
சுடுதியோகடற்ருேன்றியதிங்களே".

என்னுஞ்செய்யுளிற் கூறுதல்காண்க. குலக்கொடியென்பதைக் குலமகள் என்பதுபோலக்கொள்ளினு மமையும்.

இங்ஙனமே கம்பர்கூறியகருத்துணராது ஆங்கிலங்கற்றபுலவர்சிலர் நம் ஆராய்ச்சிவல்லமையைக்காட்டுமாறு அவர்கவிமேற் குற்றம்பாரிப்பர். முன் ஆங்கிலங்கற்றபுலவரொருவர் கம்பர்கவியையியந்த என்மீதுகோபங் கொண்டெழுந்து கம்பர்கவியிலே கூறியதுகூறன்முதலிய பலகுற்றங்கள் விரவியுள்ளன எனக் கண்டனமொன்றுவரைந்தனர். சிற்றறிவுடையமக் கள்மேற்குற்றம்வருவது உண்மையேயாயினும் அவர்கள்கருத்துணராது அவர்செயலிற் பிழைகூறல் தக்கதன்றென்பது எமதுகருத்து.

இடைச்சங்கப்புலவர்களாற் சுவைபடச்செய்யப்பட்ட நூல்கள் பலவுள. அவைகள் கற்றவருள்ளும் நுண்மாணுழைபுலமுடையார்க்கே சுவை பயப்பனவாம். கம்பராற்செய்யப்பட்ட இராமாவதாரக் கவிகள்

யாவர்க்கும் படிக்கக்கேட்டவுடன் மிகச் சுவைபயக்கும். ஆதலின் எக்கவியினும் இராமாவதாரக்கவிகளே இக்காலத்துக்கு மிகப் பயன்படுவனவாகும். கம்பர்செய்த இராமாவதாரத்துள்ளகவிகளோ பிரதி எழுதுவோரால் பலபாடமாகத்திரிந்து பிழையுற்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து சுவைபயக்கும் உண்மைப்பாடம் இதுவெனக்காண்டல் மிக அரிது. காண்டற்கோ பலநூலுணர்ச்சியும் நுண்மாணுழைபுலமும் வேண்டும்.

அவ்விரண்டும்பெற்றுப் புலமைபடைந்த புலவர்சிலர் இப்போது நம் மதுரைமாநகரத்துக்கூடியிருக்கின்ற தமிழ்ச்சங்கத்தின்கண் உளர். அவர்கள் கம்பரியற்றிய இராமாவதாரக்கவிகளைப் பலஏட்டுப்பிரதிகளோடொப்புநோக்கி யாராய்ந்து சுவைபயக்கும் உண்மையானபாடங்களைக் கண்டு திருத்தி அச்சிற்பதிப்பித்து உலகிற்குபகரிப்பாராயின் அது பேருபகாரமாகும். அவர்கள் ஆராயமுயலின் பொருளுடையபிரபுக்கள் அவரைஆதரித்துப் பதிப்பித்தல் அதனினும் பேருபகாரமாகும். இராமாவதாரத்தின் முதற்காண்டமாகிய பாலகாண்டத்தை யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரவர்களும், சென்னையில்வசித்த, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்களும் நன்குஆராய்ந்து திருத்தி யச்சிட்டனர். அத்திருத்தம் பாலகாண்டத்தின் பெரும்பகுதியை உண்மையானபாடம் இவை எனக் காணச்செய்தன. அதனால் அவர்செயலென்றும் வியக்கத்தக்கதாகும். அவ்வாறே அயோத்தியா காண்டத்தையும் ஆராய்ந்து திருத்திவந்தனர். அம்முயற்சி கைகூடுமுன் இருவருந் தேகவியோகமாயினர். அவர் தேகவியோகமடைந்தமை தமிழ்நாடுசெய்த தவக்குறைவென்றேசொல்லலாம்.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

கௌடில்யரது அர்த்தசாஸ்திரம்.

பிரகரணம்-க—வித்தைகளின்வகைதெரிதல்.

ஆந்வீக்ஷிகீஸ்தாபனம்.

அத்தியாயம் ௨.

ஆந்வீக்ஷிகீ, த்ரயீ, வார்த்தை, தண்டநீதி என்பன வித்தைகளாம். த்ரயியின் விசேஷமாகவே ஆந்வீக்ஷிகீ இருப்பதால், த்ரயீ, வார்த்தை, தண்டநீதி என்பன மூன்றே வித்தைகள் என்று மனுபரம்பரையினர் கொள்வர். உலகநடையறிந்தவன் பிறரை வஞ்சித்தற்பொருட்டே த்ரயீ ஏற்பட்டதால் வார்த்தை, தண்டநீதி எனபன இரண்டே வித்தைகள் என்று பிருஹஸ்பதிபரம்பரையினர் கொள்வர். வித்தைகள் எல்லாம் தண்டநீதியை அடிப்படையாக்கிக் கொண்டிருத்தலினலே தண்டநீதியொன்றே வித்தையென்று சுக்கிராசாரியபரம்பரையினர் கொள்வர். வித்தைகள் நான்கே என்பது கௌடில்யரது மதம். அவற்ருல் தர்மார்த்தங்கள் அறியப்படும் சிறப்புப்பற்றி அவற்றிற்கு *வித்தைகள் எனப் பெயர் வழங்கியது.

சாங்கியயோகலோகாயத சாஸ்திரங்கள் ஆந்வீக்ஷிகீ எனப்படும். த்ரயியில் தர்மாதர்மங்களும், வார்த்தையில் அர்த்தாநர்த்தங்களும், தண்டநீதியில் நயாபநயங்களும் கூறப்படுகின்றன. ஆந்வீக்ஷிகீ இவற்றின் பலாபலங்களை நியாயமுறையால் ஆராய்ந்து உலகத்தார்க்கு உபகரிக்கின்றது.—இன்பதுன்பங்களில் புத்தியைச் சலிக்கவிடாது ஒருநிலைப்படுத்துகின்றது. மனம், மொழி, செயல் இவற்றிற்குத் திறம் நல்குகிறது.

விநயாதிகாரமென்றமுதலதிகாரணத்தில் வித்தைகளின்வகைதெரிதலில், ஆந்வீக்ஷிகீஸ்தாபனமென்ற இரண்டாம்அத்தியாயம் முற்றிற்று.

---

* வித்தை.—அறிவு.

பிரகரணம் ௧—வித்தைகளின் வகைதெரிதல்

த்ரயீஸ்தாபனம்.

அத்தியாயம் ௩.

ஸாமவேதம், ருக்வேதம், யசுர்வேதம் என்பன மூன்றும் த்ரயீ என்று சொல்லப்படும். அதர்வ இதிஹாஸவேதங்களும் வேதங்களே யாம். சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம் என்ற ஆறும் வேதாங்கங்களென்ப. மூன்று வேதங்களாலும் நிறுவப்பட்ட அறமானது, நால்வகை வருணம், நால்வகை ஆச்சிரமம் இவற்றிற்குரிய கடன்களை ஸ்தாபித்து உபகரிக்கின்றது.

*ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என்பன பிராமணனுக்கு ஸ்வதர்மம். ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் என்பன க்ஷத்திரியனுக்கு ஸ்வதர்மம். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகமென்பன வைசிய னுக்கு ஸ்வதர்மம். இருபிறப்பாளரை வழிபட்டொழுகுதல், †வார்த்தை காருகத்தொழில், ‡குயிலுவத்தொழில் என்பன சூத்திரனுக்கு ஸ்வதர்மம்.

கிருஹஸ்தனுக்குரிய கடன்களாவன:—தனக்கேற்பட்ட தொழில் களால் உயிர்வாழ்தல், ஒத்தகுலத்தில் ஸகோத்திரமல்லாதவிடத்து மணம்புரிதல், §ருதுகாமியாயிருத்தல், §தென்புலத்தார், தெய்வம், விருந்து இவர்களுக்குப் பூசனை இயற்றல், ஏவலாளர் விரும்பியன கொடுத்தல், ¶எஞ்சியனவுண்ணல் என்பனவாம்.

---

*"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்—ஈதல் ஏற்றலென் றாறுபுரிந் தொழுகும்—அறம்புரியந்தணர்" [பதிற் 24] தொல்காப்பியம் பொரு—புறத்— 16 (இளம்.)

† உழவு, நிரையோம்பல், வாணிகம் என்பன வார்த்தை.

‡ குயிலுவத்தொழில்—ஆடற்பாடற்றொழில்.

§ தீண்டாநாண்முந்நாளுநோக்கார் நீராடியபின்—ஈராறு நாளுமிகவற்க வென்பதே—போறிவாளர் துணிபு—(ஆசாரக்கோவை).

§ தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலுனென்றாங்—கைம்புலத்தாறோம்ப றலை (திருக்குறள் 43.)

¶ தென்புலத்தார் முதலானவர்களுக்குப் பூசனைசெய்தபின் தானுண்ணல்,

பிரமசாரிக்குரிய கடன்களாவன:—வேதமோதுதல், எரியோம்பல், நீராடல், பிக்ஷையெடுத்துண்ணல், உயிரிருக்குமளவும் ஆசிரியனை வழி பட்டொழுகுதல், ஆசிரியனில்லாதவிடத்து—அவனது புத்திரன்மாட்டு அவ்வாறொழுகுதல், அல்லது உடன்பயில்வான்மாட்டு அவ்வா றொழுகுதல் என்பனவாம்.

வானப்பிரஸ்தனுக்கு உரிய கடன்களாவன :—பிரமசரியம், நிலத்திடைக்கிடத்தல், சடைபுனைதல், தோலுடுத்தல், எரியோம்பல், நீராடல், தெய்வபூசை, பிதிரர்பூசை, அதிதிபூசை, காட்டிலுள்ள உணவுகோடல் என்பனவாம்.

துறவிக்கு உரிய கடன்களாவன :—ஐந்தவித்தல், தொழின் முயற்சியின்மை, துவரத்துறத்தல், அவாவின்மை, பிக்ஷையேற்றல், காட்டிற் பலவிடங்களில்வசித்தல், அகத்தூய்மை, புறத்தூய்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, அழுக்காறாமை, அருளுடைமை, பொறை யுடைமை என்பனவாம்.

உரிய கடன்களையாற்றில் சுவர்க்கமாதி மறுமையும் வீடும் பெறுதல் கூடும். இவற்றை ஆற்றாவிடின் உலகத்தார் முறைபிறழ்ந்து மபங்கி நாசமடைவர்.

ஆதலால் மக்கள் ஸ்வதர்மத்தைக் கடவாதபடி அரசன் காக்க வேண்டும் ஸ்வதர்மத்தில் நிற்பவன் இம்மையினும், மறுமையினும் சுகமடைகின்றான்.

உயர்ந்த ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதும், வருணாச்சிரமங்கள் நிறுவப்பட்டுள்ளதும் வேதங்களால் காக்கப்படுவதுமான உலகம் செழித்து விளங்குமேயன்றி யழியமாட்டாது.

விநயாதிகாரமென்ற முதலதிகாரணத்தில் வித்தைகளின் வகை தெரிதலில் த்ரயீஸ்தாபனம் என்ற மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

G. ஹரிஹரசாஸ்திரீ,

வடமொழி நூற்பிரசுரசாலை, திருவனந்தபுரம்.

ஸ்ரீ:

மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம்.

பரிசிற்றுறைதழுவிய பாணிப்பாட்டு.

விண்ணின்ற சோதி விரிகதிர் மண்டிலத்தின்
உண்ணின்ற தெய்வ வுருவமே—கண்ணின்

ஒளியே யொளிக்கொளியே பொன்பதும மேவும்
அளியே யளிக்குமுத லாயன்—களிகூறும்

பெண்ணரசி யேநினது பேரெழிலின் றோற்றத்தை
எண்ணி யுரைக்க வியைந்துநின்ற—விண்ணவர்கோன்

எல்லையற்ற தோர்பொருளுக் கெல்லையிடல் யாங்ஙனமென்
றல்லலுற்று னென்னு மறிஞருரை—மெல்லச்

செவியகத்துச் சேர்தலும்யான் சிந்தைநைந்தே னன்னுப்
கவியகத்துத் தேர்ந்த கலைஞர்—புவியகத்துப்

பைந்தொடி மெல்விரல்லார் பாணி யுரைக்குங்காற்
செந்திருநீ யாரென்னச் செப்புவார்—சுந்தரமாந்

தாக்கணங்கே நின்றிருவைச் சாற்றுவதென் றூலடியேன்
ஆக்க மரிப்பிரியை யாயவம்மை—நோக்கில்

தனக்குவமை தானென்பேன் றாயே சிறியேன்
மனக்கமல பீடம் வதிந்து—நினைக்கரிய

பேரெழிலைக் காட்டுவையேற் பேணுமறி விற்கெட்டுஞ்
சீர்சொலலென் நாவின் செயல்.

வானகத்தும் மண்ணகத்தும் வயங்குசுடர் நீயாயின்
கானகத்தும் பொழிலகத்துங் கருதுமெழில் நீயாயின்
நானகத்துக் கொண்டனநின் னளினமலர்ப் பதமாயின்
தேனகத்த வனசமொன்றோ திருப்பீட மாவதுவே;

கோபாலன் றிருமார்பிற் குலவுமொளி நீயாயின்
பூபாலர் தடந்தோளிற் பொலிவனப்பு நீயாயின்
நாவார வழுத்தவநின் னளினமலர்ப் பதமாயிற்
பூவாரும் பதுமமொன்றே புதுப்பீட மாவதுவே;

பொன்னீர்நெல் மணியணிசீர் புகழிளமை நீயாயின்
மின்னீர விடைமடவார் வியனெழிலு நீயாயின்
நன்னீர ருளத்தனநின் னளினமலர்ப் பதமாயின்
செந்நீர்மைக் கமலமொன்றே திருப்பீட மாவதுவே;

எனவாங்கு,

மன்றலந்தார்க் குழலமுதை மாக்கடலிற் பிறந்தாளைக்
கன்றெறிந்த விறைமகிழுங் கனங்குழையைப் பணிந்துநின்றேன்
நின்ற வெல்லையு னீடருள் சுரந்தென்
மனக்கண் காண வலக்கண் டுடிப்ப
உளமெனும் பீடத் துவந்து தோற்றினள்
வளரிள மதிநுதல் வயங்கொளி மலர்மகள்

ஆங்கு,

பொன்றிறங்கொள் திருமேனி பொலிவுறுநல் லெழில்கண்டேன்
குன்றனைய பயோதரத்திற் குளிர்முத்த வடங்கண்டேன்
அன்றலர்ந்த செங்கமல மங்கைமலர் மிசைக்கண்டேன்
வன்றிறற்கோ லனைச்செற்ற வச்சிரதண் டமுங்கண்டேன்;

வெண்ணிறத்த சுரிசங்கம் விளங்குதிருக் கரங்கண்டேன்
அண்ணலஞ்சீர்த் தனியாழி யமர்ந்தவிறற் கரங்கண்டேன்
புண்ணியச்செங் கருடன்மிசைப் பொருந்துதிரு வுருக்கண்டேன்
மண்ணகம்விண் ணகம்போற்றும் வைணவியைக் கண்டேனே;

கண்டுளங் களிகூர்ந் தண்டரு மவுணரும்
பாற்கடல் கடைந்த காலத் தார்த்தெழு
நஞ்சொடு மமுதொடும் நளிரிளம் பனிமதிப்
பிள்ளைப் பிறையொடு மொள்ளொளி வெள்ளைப்
பரியொடு மரம்பையர் பலரொடுந் தோற்றிய

கிள்ளை மென்மொழிக் கிளரொளி யணங்கே
வேண்டுவார் வேண்டும் வரமருள் திருவே
காண்டற் கரிய கமல வல்லி
போக மோக்ஷம் பொருந்துவிப் பவளே
யோகசா தனையா லுளத்துதிப் பவளே
ஆதியீ றில்லா வானந்த நிறைவே
ஞாலருக் குமத்துத் தோன்றினின் றவளே
மாலளிப் பவளே மயக்கறுப் பவளே
ஞாலமே முண்ட நாதன் பானிறை
வேலையிற் றுயில விழைவொடு மவன்செய்
வேலையைப் புரியும் விமல வல்லி
யானறி யளவையிற் றமிழ்புனைந் தேத்தினன்
கானமர் புரிகுழற் கமலைநின் றிருவடி
வாழ்கென வேத்தி வணங்கினின் றனனால்;

அவ்வமயம்,

ஆழியா னுளங்கவரு மணந்துமருள் வளஞ்சுரந்து
காழியா ரிளங்கோவின் கவிமருவு தமிழ்வாழ்க
ஊழிதோ றாழிதோ றுலவுகநற் றமிழ்நாடு
வாழியசெந் தமிழறிஞர் வாழியவென் றெனைநோக்கி,

செம்மொழிநற் றமிழ்ப்புலவ செவ்வியுற நீயுரைத்த
செம்மொழிநற் றமிழ்ப்பனுவற் செய்யுள்விலை செப்பென்றாள்;
அம்மொழியென் செவிப்படலு மகங்குழைந்து முகமலர்வுற்
றம்மொழியென் செவிப்படுத்த வன்னைபடி பணிந்துரைப்பேன்,

வாழி நாரணன் சிரங்கொண் மெல்லடி
வனச வல்லியே யவ்வை பாடலைச்
சூழ ளித்துற வாடிநின்றவோர்
குறவர் மாமக ளெளிது கொண்டனள்;

மூநிர மால்வரைத் தலைவ னாகிய
முடிவில் சீர்ப்புகழ்க் குமண மன்னவன்
சதுர ழிந்தபின் புலவன் வந்துறத்
தலைவி லைக்கொரு பனுவல் கொண்டனன்;

அதிய னஞ்சிபல் லாண்டு வாழ்வினை
யதிக மென்றெணு னரிய தெய்விகக்
கரிய நெல்லியின் கனியை யவ்வைசெங்
கைக்கொ டுத்தொரு கவிதை கொண்டனன்;

பனியின் மால்வரை யெல்லை யாதன்முப்
பத்தொ டெட்டியாண் டிறையு மூர்களும்
உனதெ னக்கொடுத் தும்பல் சேர்குமட்
டூரர் செந்தமிழ்ப் பாடல் கொண்டனன்;

எண்ணைந் தொன்று நூ றாயி ரம்பொனும்
ஏற்ற பாகமும் போற்றி நல்கியே
கண்ணி நார்முடிச் சேரல் காப்பியூர்க்
காப்பி யன்றருங் கவிதை கொண்டனன்;

தோட்டி தழ்த்தொடைச் சேரர் கோமகன்
சோர்வில் மைந்தனை யூரை நல்கியே
பாட்டி தழ்த்தொடைப் பயன ளித்தசீர்ப்
பாணர் பாடிய பனுவல் கொண்டனன்;

மத்த யானையான் வளவர் கோமகன்
மன்னு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டனன்;

இன்னனமுன் னுடைந்த வியல்புசில வெடுத்துரைத்தேன்
கன்னியிளந் தமிழ்க்கவியெங் கண்ணுதலைக் காரிருளிற்
பொன்னனையார் பாற்றாதாய்ப் போக்குமெனில் விலையுமுண்டோ
பின்னுரைப்பிற் கொள்வோர்தம் பெருமதியெங் கவிமதிப்பே;

கூழுடையார் கூழளிப்பார் கோமக்கள் பொன்னளிப்பார்
ஆழிமணி முடிவேந்த ரகனிலத்தை யெமக்களிப்பார்
ஏழ்மக்கள் வசையளிப்பார் கேள்வியிலார் நகையளிப்பார்
வாழ்வளிப்பார் மாமுனிவர் மறைமுதல்வன் வீடளிப்பான்;

நீயளிப்ப தெதுவம்மா நித்திலமும் பொற்குவையும்
சேயொளிசேர் மலர்ப்பதத்தின் சிறுபூழி யாகாவே
வாசவனும் வடதிசையின் மரகதனும் பெறுநிதியம்
தேசுசெறி கால்விரல்சேர் சிறுபீலிக் கிணையாமோ;

கங்கைநீர்க் கரையடைந்தோர் கங்கையா டனைநோக்கி
யங்கைநீர்க் கிரந்துநிற்ற லறிவின்பாற் படுவதோ
சங்குசேர் திருக்கரத்தோய் தமியனே னிதயமெனும்
பங்கயத்து ணீயுறையிற் பாரிலொரு குறையுளதோ;

எனவழுத்தி யிறைஞ்சி நின்றே னிகபரத்து வருபொருளைத்
தினைபொழுத்த துணைமதியாச் சிவானந்த வருட்கூவன்
புனிதவடித்தொண்டெனுமெய்ப்பொருள்படைத்தபெருமையினேன்
வனசமலர்ச் செழுந்திருவும் வனப்பிளமை வளம்விளங்க

அணிநிற மதிமுகத் தருணகை யொளிதர
மணிமருள் செவ்வாய் மலரிதழ் விரித்துத்
தமிழ்வளம் பொலிக தமிழ்நாடு வாழ்க
அமிழ்தன தமிழ்புனை யறிஞர் வாழ்க
பனுவல்கேட் டுவந்தனன் பரிசில் கொண்மதி
வாழ்கென வொருவரை வாழ்த்துவை யாயின்
வாழுமன் னோர்க்கு மலிவள மளிப்பேன்
வீழ்கென வொருவரை விளம்புவை யாயின்
வீழுமன் னோர்பால் மேவேன் யானெனப்
பரிபுர மலர்ப் பதங் காட்டித்
திருவின் செல்வியும் அருள்வழங் கினளே.

—— விபுலாநந்தர்.

செய்யுட்பொருத்தவிலக்கணம்.

(கருக—ஆம் பக்கத்தொடர்ச்சி.)

எழுத்துப்பொருத்தம்.

4. எழுத்தின்பொருத்தமேயெழுவாய்ச்சீர்க்கண்மூன்
றைந்தேழொன்பதுவியனிலைநன்று
மிரண்டுநான்காறெட்டுச்சமனிலைவழுவாம்.

என்பது, எழுத்தின்பொருத்தமாமாறுணர்த்துகிறது. முதற்சீராக வொற்று முயிரு முயிர்மெய்யும், ஒற்றைப்பட மூன்று மைந்து மேழும் ஒன்பதுமாகவரின் அது வியனிலையாகிய நற்பொருத்தமாம். இரண்டும் நான்கும் ஆறும் எட்டுமாகவரின் அது சமனிலையாகிய வழுவாமென்க.

முதற்கண் மூவசையின் மிக்கன சீர் வாராவென்றமையானும், மூவசைச்சீரும் ஒற்றொழித் தொன்பதெழுத்தாகவாராவென்றமையானும் ஒற்று முட்படக்கொண்டவாறு காண்க.

சிறுபான்மை இரண்டெழுத்து வருதலுமுண்டு. வரலாறு:—"சிந்தாமணி"யில் "மூவா" என்பது முதற்கண் இரண்டெழுத்தாய் வந்தது.

மேற்கோள் :—

"தப்பாதமுன்றைந்தேழொன்பான்றவறிலவென்
றொப்பாமுதற்சீர்க்குமைசெய்வர்—செப்புங்காற்
றண்டாதநாலாறெட்டாகாதவிர்கென்று
கொண்டாரெழுத்தின்குறி"

என்பது பாட்டியல்.

தானப்பொருத்தம்.

5. தானமேநம்மூவரிணைந்து இஉவ்வுடன்
ஐஔவுஞ்சேர்வுழிபைந்தாமவற்றுட்
டிலமகனியற்பெயர்த்தானமுதலாப்
பாலன்குமாரனரசன்மூப்பு

மரணமுறையெண்ணிவருமுதலெழுத்தின்
குணமீற்றிரண்டெனிற்றவிர்கவென்ப.

எ - று, தானப்பொருத்தமாமாறுணர்த்துகிறது. குற்றெழுத்தைந்தையும் அவற்றுெத்தநெடிலையுங் கூட்டி இ வருந்தானத்தில் ஐயும், உவ் வருந்தானத்தில் ஔவுஞ் சேர்த்தால் ஐந்தானமாகும்.

அவையே:அ ஆவும், இ ஈ ஐயும், உ ஊ ஔவும், எ ஏயும், ஒ ஓவும் என்றிவை உயிராகவரினும், உயிர்மெய்யாகவரினும் எழுத்தின்ருனம் ஐந்தெனக்காண்க.

இவற்றைக் கொள்ளுமாறு:—பாட்டு நாயகனியற்பெயர் முதலெழுத்தின்தானமுதற்கொண்டெண்ணி முறையே ஐந்தானங்கட்கும் பாலன், குமரன், அரசன், மூப்பு, மரணம் எனப் பெயரிட்டு மங்கலச்சொன் முதலெழுத்துமூப்பென்னுந் தானத்திலும், மரணமென்னுந் தானத்திலும் வரிற் றகாதென்று தவிர்தல்வேண்டுமென்ப.

அங்ஙனம் "இராமாயண" நாயகன் இராமனுதலின் இவருந்தானம் பாலதானமாகக்கொண்டு கம்பனெடுத்த மங்கலச்சொல்லாகிய "உலகத்"தின் முதலெழுத்துக் குமரதானமாயிற்றெனக்கொள்க. "தேம்பாவணி" நாயகன் வளவனுகையால் அ வருந் தானம் பாலதானமாகிச் சீரிபவென்னும் முதற்சொற்குப்பார்க்கிற் குமரதானமாகவும் "உலகம்" என்னும் மங்கலச்சொற்குப் பார்க்கில் இராசதானமாகவும் வந்தவாறு காண்க.

மேற்கோள் :—

"குறிலோர்ந்துந்தர்நெடில்கொண்டிஉஐஔசேர்ந்
தறிபாலனுதியாவைந்து — மிறைவன்பேர்
முன்னெழுத்துப்பாலனில்வைத்தெண்ணிமூப்பேமரண
மென்னுமிவைதீதென்றேயெண்."

என்பது பாட்டியல்.

பாற்பொருத்தம்.

6. பாலே,

குறிலாணெடில்பெண்மற்றுயிரானுயிர்
மெய்பெண்ணொன்மருமூளரேயவைதம்
பாலியல்கெடினுமாமற்றவையலியே.

எ - து, பாற்பொருத்தமாமா றுணர்த்துகிறது. குற்றெழுத்தெல்லாம் ஆண்பாலெனவும் நெட்டெழுத்தெல்லாம் பெண்பாலெனவும் கொள்க. அன்றியும் உயிரெல்லாம் ஆண்பாலெனவும் உயிர்மெய்யெல்லாம் பெண்பாலெனவுங் கொள்வர் பிங்கலந்தை முதலிய நூலுடையார். அவற்றுள் ஆடவரைப்புகழ ஆண்பாலெழுத்தும், மாதரைப்புகழப் பெண்பாலெழுத்தும் முதற்கண்வரிற் பாலொன்றிச் சிறப்பாமாயினும் அவையே மயங்கிவரினு மிழுக்கா. ஒற்றெழுத்து மாய்தமும் முதற்கண்வாரா. அவை யலியெனப்படும்.

மேற்கோள்.

"எண்ணுங்குறிலாணியைந்தநெடிலெல்லாம்
பெண்ணாகுமொற்றுய்தம்பேடாகும்—பெண்ணினோ
டாண்புணர்ச்சிக்கவ்வவ்வெழுத்தேமயங்கினுமா
மாண்பில்பேடென்றார்மதித்து." என்பது பாட்டியல்.

உணவுப்பொருத்தம்.

7\. உணவே, அஇஉஎகசதநபமவ
வமுதெழுத்தாகியாதிச்சீர்க்குந்
தசாங்கத்தயற்குந்தகுவனவென்ப
யாயோராரோலாலோவவற்றொற்
றாய்தமொடு மக்குறளாய்தநச்செழுத்தே.

எ—து, உணவுப்பொருத்தமாமாறுணர்த்துகிறது. கூறியநாலுயிரும் எழேற்றும் அமுதெழுத்தெனப்படும். இவை முதற்சீர்க்கும், மலைமுதலிய தசாங்கத்தயற்குமாகும். அன்றியும், யா, யோ, ரா, ரோ, லா, லோ, ய், ர், ல் என்னும் எழுத்துக்களும், இரண்டளபெடையும் மகரக்குறுக்கமும் ஆய்தமுமெனவிவை நச்செழுத்தாகி முதற்சீர்க்கண்ணும் தசாங்கத்தினயற்கு மாகாதென்ப.

மேற்கோள் :—

"மதித்தகசதநபமவ்வோடுவவ்வு
முதித்தவைந்தாற்குற்றுயிருந்—துதிக்கமுதென்
றோதிமொழிக்குந்தசாங்கத்தயலுக்குந்
தீதிலவேயென்றார்தெரிந்து. என்பது பாட்டியல்,

(தொடரும்)

ந. பத்மாவதி அம்மாள்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(கசசு–ஆம் பக்கத்தொடர்ச்சி.)

171. "போர்" என்ன வீங்கும், பொருப்பன்ன பொலம்கொள் திண்தோள்
மாரன் அனையான், மலர் கொய்திருந் தானை, வந்தோர்
கார் அன்ன கூந்தற் குயில் அன்னவள் கண்டு தைப்ப,
"ஆர்?" என்ன லோடும், அனல் என்ன அயிர்த்து யிர்த்தாள்.

இ - ள். மேகம்போன்ற கூந்தலையுடைய, குயிலையொத்த (குரலையுடைய)வள் (ஒருத்தி), "போர்" என்றுசொல்ல (க் கேட்டவுடனே, அதைச்செய்ய எழும் ஆசையால்) பூரிக்கின்ற, வலிய தோளையுடைய, மன்மதன்போன்ற (தன் கண) வன் பூப்பறித்துக்கொண்டிருந்தவனைக் கண்பொருந்த, (அவன்) "ஆர்?" என்றவுடனே, (அவனிடத்துத் தன்னைப்போல விளையாடும்மாதர் பிறர் உளர்; இல்லையாயின் இவ்வாறுகேட்டிரானென்று) சந்தேகித்து (உலை நெருப்புப்போல (க் கோபத்தால்மேனி சிவந்து, துருத்தியால் ஊதப்பட்டு உலைநெருப்பினின்று புறப்படும் காற்றுப்போலப்) பெருமூச்செறிந்தாள்.

பொலம் - அழகு. 'வீங்கும் தோள்,' 'பொருப்பு அன்ன தோள்'; 'அயிர்த்து அனல் என்ன உயிர்த்தாள்' எனக் கூட்டுக.

[ஒருமன்னன் தான் வைத்திருக்கும் ஒரு மலரைவேண்டி இரண்டு மாதர் கையேந்திநிற்க, (அம்மலரை ஒருத்திக்குக் கொடுத்தால், மற்றொருத்தி மனம்நோவாளென்று) மிக்க லோபிபோலக் கொடுக்கமாட்டானாய்க் கொடாது மறுக்கவுமாட்டானாய் வாளாநின்றுகொண்டிருந்தான்.

மற்றொருமன்னன் தன்னிடத்தே உள்ள பூக்களை இரண்டு மாதருக்குச் சமமாகப் பகுத்துக்கொடுக்க, இருவரும். ('என்னை அதிகமாக நேசிக்கவில்லை' 'என்னை அதிகமாகநேசிக்கவில்லை' யென்று)கோபங்கொண்டு அந்த மலர்களை வீசியெறிந்தார்கள்.

வேறொரு மன்னன் ஒருத்திபால் மிக்க காதல்கொண்டு, அவளொடு பழக்க மாகுதற்கு வேறு யாது செய்வதென்று தெரியானாய், "என் கையில் உள்ள மந்தாரமலரைப் பெற்றுக்கொண்டு உன் கையில் உள்ள மாதவிமலரைத் தருவாயா" என்று கூறி யிரந்து நின்றான்.

பின்னுமொருமன்னன், தன் அழகை நுகரவிரும்பித் தன் காதலியர் கண்கள் சூழாநிற்க, உலாவுவோன், மதநீரை யுண்ணவிரும்பி வண்டுகள் சூழாநிற்கத் திரிகின்ற யானையை ஒத்தான்.

இன்னுமொரு மன்னன், தன் கையிலே தாமரைமலரை யேந்தி, தன்காதலியர் முகக்கமலங்கள் தன்னைச் சூழ்ந்துநோக்க உலாவி, தாமரையைக் கையிலேந்தித் தாமரைக்காட்டி னிடையேசெல்லும் சூரியனைப் போன்றான்.

ஒரு மாது, எல்லாப் பூக்களும் பறிக்கப்பட்டு வெறுமையான ஒரு கொம்பை நோக்கி, இது இந் நிலைமையில் என் ஆருயிர்நாயகன் காணுதற் கினிதாயிராதென்று, அதற்குத் தன் ஆபரணங்களை அணிந்து பார்த்து மகிழ்ந்துநின்றாள்.

மற்றொருமாது ஓர் அன்னத்தைக்கண்டு, அதன் நடையைக்கண்டு, அது தன்னை உறவென்றெண்ணியதுபோலத் தொடர்தலைக்கண்டு, அது தன்னொடு தோழமையுடையதெனக்கொண்டு, அன்புடன் அதனைநோக்கி "நீ என் தோழி" என்றாள்; பின்பு "சேலையில்லாத உன்னைக்கண்டவர்கள் இகழ்வார்கள். இதை உடுத்துக்கொள்" என்று ஒருசேலையைக்கொடுத்தாள்.

மாதர்கள் தம் உயிரென்றோ, அதனினும் இனியதென்றோ, கூந்தல் குலைதலையும் ஆடை அவிழ்தலையும் அறியாராய், மலர் எங்கே கிடைக்குமென்று தேடித் திரிவாராயினர்.]

175. யாழொக் குஞ்சொற் பொன் அனை யாள், ஓர் இகல் மன்னன்
தாழத் தாழாள்; தாழ்ந்த மனத்தாள்; தளர்கின்றாள்;
ஆழத் துள்ளும் கள்ள நினைப்பாள்; அவன் நின்ற
சூழற் கே தன் கிள்ளையை யேவித் தொடர்வாளும்.

இ - ள். யாழ் (இசை) போலும் சொல்லையுடைய திருமகளொப்பாள் (ஒருத்தி, கணவனாகிய) மன்னன் (கோபம் தணியும்படி) பணியவும் (கோபம்) தணியாதவள், (அவன் பிரிந்துபோனபின்பு கோபம்) தணிந்த மனத்தினள் (ஆகி, அவன் பணிந்தபோது இணங்கினேமில்லையே யென்று பச்சாத்தாபப்பட்டு) வருந்துகின்றவள், (அவன்பால் வலியச்செல்ல விரும்பி அவ்வாறு சென்றால், பரிகாசத்துக் கிடமாமென்று தன் கிளியை அவன்பாற் செல்லச்சொல்லிவிட்டு, அதனைத் தேடிச்செல்லல்போலச் சென்று அவனை அடைதலே அப்பரிகாசத்தை நீக்கத்தக்க உபாயமென்றும் கருதி அக்கருத்து முகக்குறி முதலிய எவ்வாற்றானும் வெளிப்படாது மறைக்கவேண்டித் தன் நெஞ்சில் மேற்புறத்தன்றி) ஆழத்திலே நினைந்த கள்ள நினைப்பினள், அவன் நின்ற இடத்துக்கு (ச் செல்லும்படி) தன் கிளியை ஏவி (அதனை)த் தொடர்வாள் (ஆயினள்.)

இகல் - வலி. ஆழத்து உள்ளும் - (நெஞ்சில்) ஆழத்தில் நினைக்கின்ற; உம்மை இறந்ததும் எதிரதும் தழுவியது. இப்பாட்டினும் இதன் முன்னும் பின்னும் 'ஒருத்தி இவ்வாறு செய்வாளும்' 'ஒருத்தன் இவ்வாறு செய்வானும்' எனப் பன்னிரண்டு பாட்டுக்கள் குளகமாகப் பாடி, அவையாவும் 'ஆயினர்' என்பதை அவாய்நிலையாக்கொண்டு முடிவு பெற வைத்திருப்பது காண்க. (குளகம்-"பல பாக்கள் கூடி ஒருவினை கொண்டு முடிவது." அவாய்நிலை - "ஒருபதம் தன்னொடு பொருந்திப் பொருள்முடித்தற்குரிய மற்றொரு பதத்தை வேண்டி நிற்கும் நிலை,")

176\. சோலைத் தும்பி மென் குழ லாகத், தொடை மேவும்
கோலைக் கொண்ட மன்மத ஆயன் குறி உய்ப்ப,
நீலத் துண் கண் மங்கையர் சூழ, நிறை ஆவின்,
மாலைப் போதின், மால்விடை யென்ன வருவாரும்.

இ - ள். (அந்தச்) சோலையிலே வண்டோசை மெல்லியவேய்ங்குழலோசையாக, மதன (ன் ஆகிய) கோபாலன் குறித்த இடத்துக்குச் செலுத்த, (ஆடவர்கள்) மாலை நேரத்தில், பசுக்கூட்டம்போல மாதர் சூழ்ந்துவர, காளைகள்போலச் செல்வார் (ஆயினர்.)

தும்பி - வண்டு. குழல் - வேய்ங்குழல் (சிந்தாமணி). இரண்டும் அநுனதம் ஓசையைக்குறித்தன. தொடை - பூமாலை; வில்நாண். கோல்-

மரக்கொம்பு; அம்பு. 'தொடை மேவும் கோல்' என்ற தொடர்க்கு 'நாணிற்பொருந்திய அம்பு'என மன்மதனுக்குப் பொருந்தவும் 'பூமாலை (சுற்றப்பட்டுப்) பொருந்திய (பசு ஓட்டும்) கோல்' என இடையனுக்குப் பொருந்தவும் பொருள்கொள்க. ஆயன் - இடையன். நீலத்து உண்கண்- நீலநிறத்தையுடைய (மை) உண்டகண்களையுடைய. நிரை - வரிசை. ஆ - பசு. ஆ நிரையின் (-பசுக்கூட்டம்போல) மங்கையர்சூழ்'என மாற்றுக. மால் - பெருமை. மால் விடை - பெரிய இடபம். இப்பாட்டும் இதன் முற்பாட்டுப்போல 'ஆயினர்' என்பதை அவாய்நிலையாகக்கொண்டு முடிந்தது.

[பூக்கொய்விளையாட்டைப் போதிய அளவு செய்து வெறுத்த மாதரும் மைந்தரும் நீர்விளையாட்டைவிரும்பித் தடாகங்களை அடைந்தார்கள்.]

நீர்விளையாட்டுப்படலம்.

177. அங்கவர் பண்ணை நன்னீர் ஆடுவான் அமைந்த தோற்றம்,
கங்கைவார் சடையோன் அன்ன மா முனி கனல, மேனாள்,
மங்கையர் கூட்டத் தோடும் வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்கு மா கடலுட் செல்லும் தோற்றமே போன்ற தம்மா!

இ - ள். அந்தத் தடாகத்திலே (நீராடவந்த) அவர் (களுடைய கூட்டத்திலே) மகளிர்கூட்டம் நீர்விளையாட (அந்தத் தடாகத்துள்ளே செல்ல) அமைந்த காட்சி, துருவாசமுனிவர் சாபத்தினால் இந்திரனது செல்வத்தோடு - தேவமாதர்கூட்டம் கடலுட்செல்லலுற்றதோற்றத்தை ஒத்தது.

பண்ணை - மகளிர்கூட்டம். அமைந்த - பொருந்திய (பரிபாடல்). கனலல், காய்தல்போல, நெருப்பின் தொழிலாய், தாற்பரியப்பொருளாக, கோபித்தலை யுணர்த்தி, கோபித்தல்காரணமான சபித்தலைக்குறித்தது. மேனாள் - முன்னாளில். செல்வம் (கற்பகதரு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு முதலிய) பொருள்கள்.

[ஆழநீரில் தம் நாயகர் மார்பிலும் தோளிலும் ஏந்தப்பெற்ற மாதர்கள் முறையே விட்டுணுவின் மார்பிலும் தோளிலும் வீற்றிருக்கும் திருமகளையும் வீரலக்குமியையும் போன்றனர்.

காதலர்களும் காதலியர்களும் ஒருவர்மேலொருவர் வாசனைப்பொடிகளை வீசுவாரும் பூமாலைகொண்டோச்சுவாரும் நீரை அள்ளியிறைப்பாருமாயினர்;

அந்தத் தடாகத்து மீன்களைக்கண்டு, தடாகத்துக்கும் கண்களுண்டோவென்று ஒரு மாது தன் கணவனை வினவினாள்,

மற்றொருமாது ஊடிப்பிரிந்துபோய் ஒரு தாமரைமலர்கள்நிறைந்திருந்த இடத்திலே மறைந்துகொள்ள, அவள் நாயகன்அங்கே தோன்றியவைகளுள் இது தாமரை இது முகம் என்று வேற்றுமை தெரியானாய் உற்றுப்பார்ப்பானாயினான்.

வேறொரு மாது முகமட்டும் தோன்ற நீருள் முழுக, அவள்முகம், நீரிலே தோன்றும் சந்திரபிம்பம்போல விளங்கியது.

தடாகத்தில் நீராடிய மாதர்களுடைய செவ்வாய்வெளுக்கக் கண்கள் சிவக்கப் பூசிய சந்தனகுங்குமங்கள் அழிய ஆடை அவிழ்ந்ததினால், அம்மாதர்கள் கொழுநரோடாடிய மாதர் போன்றனர்: தடாகம் கொழுநர் போன்றது.

நீராடலால், பூசியிருந்த சந்தனமுதலியன கழுவப்பெற்று விளங்கிய பெண்மணிகள் அழுக்ககற்றப்பட்ட ஒண்மணிகள் ஒத்தனர். (ஒள் மணி - பிரகாசமான ரத்தினம்).

தாமரை மேலேறிய அன்னங்கள், தங்களை நடையினால் தோல்வியடையச்செய்த மாதர்களுடைய பாதங்களுக்கு அம்மலர்கள் உவமானமாயிருக்கின்றனவென்று கோபித்து அம்மலர்களை மிதிப்பனபோலத் தோன்றின.

அலையால் தடுமாறி முழுகுகிற தாமரைமலர்கள், மாதர்முகங்களைத் தாம் ஒவ்வாமைக்கு நாணி ஒளிப்பன போன்றன.

ஒரு மன்னவன் தன் காதற்கருத்தை ஒருமாதுக்குக் கைச்சைகையாற் சொன்னான். அதனை அவள் தன்தோழிக்குக் கண்சமிக்ஞையாற் சொன்னாள்.

நீராட்டுமுடித்து மாதரும் மைந்தரும் கரையேறவே, தடாகம், தாமரைமலர்கள் குடிபோனது போன்றது; அன்றி நிறைந்து விளங்கிய நட்சத்திரங்கள் நீங்கிய வானத்தை ஒத்தது.

ஆடவரும் பெண்டிரும் நீராடியதைக்கண்டு, தானும் நீராடவிரும்பினான் போலச், சூரியன் மேற்றிசைக் கடலில் விழுந்து அத்தமனமானான்.

எதிர்த்த அரசன்முன் நிற்கமாட்டாமல் தோற்று ஓடி ஒளித்திருந்த அரசன் மீளவும் போர்செய்ய வெளிப்பட்டுத்தோன்றுதல்போல மாதர் முகங்களுக்குத் தோற்றோடி யொளித்திருந்த சந்திரன் மீளவும் தோன்றினான்]

உண்டாட்டுப்படலம்-

(உண்டாட்டு – கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடல்)

178. கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப், பிரிந்
துலர்ந்தவர்க் குயிர்சுடு விடமும் ஆய், உடன்
புலந்தவர்க் குதவு செய் புதிய தூதும் ஆய்
மலர்ந்தது, நெடு நிலா, மதனன் வேண்டவே.

இ - ள். சந்திரிகையானது, (பிரியாமல்) சேர்ந்து வாழ்வார் (களாகிய காதலர்)க்கு (க் காமத்தை அதிகப்படுத்தும்) கள்ளுப்போன்றதாய், பிரிந்து வாடுவார் (ஆகிய காதலர்)க்கு (உடம்பேயன்றி) உயிரை(யும்) வெதுப்பும் விடம்போன்றதாய், ஊடல்செய்வார் (ஆகிய காதலர்)க்கு (அவர்களுடைய காமத்தை மிகுவித்து ஊடல்நீங்கிக் கூடுதற்கு) விரைவாய் உதவிசெய்யும் தூதுபோன்றதாய், மன்மதன் வேண்டிக்கொள்ள, (அவன்வேண்டுகோட் கிணைந்தாற்போல எங்கும்) பரவியது.

'ஆய்' மூன்றும் 'போன்று' என்ற பொருளுடையன. மலர்ந்தது—விரிந்தது, பரந்தது. உடன் - உடனே, அங்கணமே (சங்க அகராதி)—விரைவாக. நெடுநிலா - பெரியசந்திரிகை. நிலா கள்ளுமாய், விடமுமாய்த் தூதுமாய், மதனன் வேண்ட, மலர்ந்தது எனக் கூட்டுக.

(தொடரும்.)

வெ ப. சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

க. பஞ்சாமிர்தம்:—இது, சென்னை மயிலாப்பூரில் ஸ்ரீமத். அ. மாதவையரவர்கள் பத்திராதிபத்தியத்தில் நடைபெற்றுவரும் ஒரு மாதாந்தரத்தமிழ்ப்பத்திரிகை. டெம்மி 90 பக்கங்களடங்கிய புத்தகமாக வெளியிடப்பெற்றுவருகிறது. இதன் முதலிரண்டுகோசுகள்வந்தன. அவற்றுள் இக்காலநிலைமைக்கேற்றபடி தமிழ்மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய சிறந்த பலவிடயங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை பத்திராதிபர் முதலிய கெண்யதையுள்ள ஆங்கிலகலாவிற்பன்னர்களால் இனிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகையின் பெயர்க்காரணத்தாலே இதிலுள்ள விடயங்கள் பலவும் இன்சுவையுடையவாமென்பது சொல்லாமலேயமையும். இது, தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிக்க உபயோகமுடையது. இதன் வருடச்சந்தா ரூ. 5. தனிப்பிரதி அணா 8. வேண்டுவோர் ஷை பத்திராதிபரிடம் பெறலாம்.

உ. தமிழ்நாட்டுச்செல்வம்:—இது, காரைக்குடி ஹிந்துமதாபிமானசங்கத்தின் ஆறாம் ஆண்டு விழாவில் சென்னை நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பேசியவிஷயங்களினின்றும் தொகுக்கப்பெற்று, ஷை சங்கத்தாரால் புத்தகரூபமாயச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் தமிழ்நாடு, அதன் தொன்மை, மொழி, வாழ்வு, அரசியல், நாகரிகத்துறை, பாட்டு, சமயம், தமிழ், வேதம் முதலிய விஷயங்கள் நன்கு ஆராயப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 1. வேண்டுவோர் ஷை சங்கத்திற் பெறலாம்.

ங. கோங்குவேள்:—இது, ஈரோட்டினின்றும் ஸ்ரீமான். தி. அ. முத்துஸாமிக்கோனாரவர்கள் பத்திராதிபத்தியத்தில் வெளியிடப்பட்டு வரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில், கொங்குமண்டல சம்பந்தமான பலவகைச்சரிதங்களும், மற்றும் பொதுவான ஆராய்ச்சிவிஷயங்களும் எழுதப்பெறுகின்றன. இதன் வருஷச்சந்தா ரூ. 2—8—0. தனிப்பிரதி அணா 4. வேண்டுவோர் ஸ்ரீமான். ப. அ. ஆறுமுகம்பிள்ளையவர்கள், மானேஜர், கொங்குவேளாபீஸ், ஈரோடு என்ற விலாசத்திற் பெறலாம்.

ச. முத்தநாயனுர் திருவிரட்டைமணிமாலை :—இது, கொட்ட பூர்ச் சாமிநாததேசிகர் பலமேற்கோள்களுடன் எழுதிய விரிவுரையே இரண்டாம்பதிப்பாக யாழ்ப்பாணம் சோதிடப்பிரகாசயந்திரசாலை பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 3. வேண்டுவோர் ச யந்திரசாலையிற் பேறலாம்.

ரு. நாலடியார் மூலம் :—(முதல் இருநூறுபாட்டு). இது, லாப்பூர் A. K. ஸ்வாமி அண்டு கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டி கிறது. பாட்டுக்களுக்கு மேற்கோள் விளக்கமும் அரும்பத அகரா யும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 8. வேண்டுவோ ஷை கம்பெனியாரிடம் பெறலாம்.

சா. (1) மஹாத்மா காந்தி (ஜீவியசரித்திரம்), (2) நீதிதர்ம (மஹாத்மாகாந்தி யியற்றியதன் மொழிபெயர்ப்பு), (3) ஆரோக்கியவ (மஹாத்மாகாந்தி யியற்றியதன் மொழிபெயர்ப்பு) :—இவை மூன்று சென்னை திருவல்லிக்கேணி S. கணேசன் கம்பெனியில் கிடைக்கும்.

எ. மோகனு அல்லது மோசம்போன தாராநாதன் :—இது கோயமுத்தூர் ஸ்ரீமத். K. கிருஷ்ணஸாமி ஐயரவர்களால் இயற்றப் பட்ட நவீனகம். காமக்கேடு முதலியவற்றைக் காட்டிச்செல்வது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் ஸ்ரீமத். சி கு நாராயணஸாமி முதலியா ரவர்கள் 126 தாமஸ்வீதி, கோயமுத்தூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

அ. பக்திரஸபஜனுமிருதம் :—இது, கோம்பை ஜமீன்மாபின ரான ஸ்ரீமான். க. திருமலைஜக்கயக்கவுடர் அவர்களிபற்றிப சிவ... தனங்களடங்கியது. வேண்டுவோர் இதனைப் பதிப்பித்த கோம்பை ஜக்கதேவி கருணுவிலாசவித்யாசாலைபாசிரியர் ஸ்ரீமான். R. திருமலை ஜக்கயக்கவுடரவர்களுக்கு எழுதி விலை முதலியன தெரிக.

மணிமேகலையும் சிலப்பதிகாரமும்.

(உஉகூ-ம்பக்கத் தொடர்ச்சி.)

XI. மணிமேகலையும் இளங்கோவடிகளும்.

மணிமேகலையின் பதிகத்திலே,

"இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென்" என்றும்,

சிலப்பதிகாரத்தின் பதிகத்திலே,

"உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன், இது,
பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்"

என்றும் கூறப்பட்டுள. சிலப்பதிகாரத்திலே,

"அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவனது பட்டதென் றுரைப்போன்" என்றும்,

"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றற்கவர்" என்றும்,

"மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்" என்றும்,

"நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்கு" என்றும்,

வருவனவற்றானே சிலப்பதிகாரநூலாசிரியர் மணிமேகலையையும், மணிமேகலைநூலாசிரியர் சிலப்பதிகாரத்தையுங் கேட்டனரென்று பிற்காலத்துச்சான்றோர்பல்லோருந் துணிந்துவிட்டனர்.

சிலப்பதிகாரநூலாசிரியர் இளங்கோவாகவுந் துறவியாகவும் இருந்தமைபற்றி இளங்கோ, அடிகள், இளங்கோவடிகள் என்றாங்கு வழங்கற்கு உரியரானார்.

4

"குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு" என்றும்,
"உரைசா லடிக ளருள" என்றும்,
"இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்றும்

வருவனவற்றை நோக்குக.

இளங்கோவடிகள் வேந்தராகவிருந்தது யாண்டுமின்மையின் அவரை இளங்கோவேந்தன் என்றலுஞ் சாலாது.

இனி, இளங்கோவேந்தன் என்றது சிலப்பதிகார நூலாசிரியரையே குறிக்குமெனில் அக்குறிப்பு அடிகளின் துறவிலே மணிமேகலைப்பதிக மெழுதினார்க்கு நன்குமதிப்பெழுந்திலது என்னும் அவ்வொன்றனையே புலப்படுத்திவிடும். ஆதலின் அங்ஙனங் கூறுதலுஞ் சாலாது.

நூலரங்கேறிய களத்தைக் குறிப்பிடற்பொருட்டு அடிகள் இளங்கோவேந்தன் என்று விதந்துகூறப்பட்டனர் என்றலும் பொருந்தாது ; என்னை ? இளங்கோவென்றதுவே வேந்திற்கும் அமையுமாதலானும், பின்னரும் வேந்தன் என்று பெய்தல் கூறியதுகூறல் ஆகும் ஆதலின் அதனைவிடுத்து அவர்தம் புலமையைக் குறித்தற் கேற்றதொரு பிறிதொருசொல்லைப் பெய்துரைத்தலே பொருந்துமாறும், கொள்கையும், அழகும் ஆகலானும் ; இளங்கோவடிகளென்னும் பிரசித்தப்பெயரைவிடுத்து வேறோரப்பிரசித்தப்பெயரை நாட்டுதலாற் போந்தபயனொன்றேனும் இன்மையானும் அங்ஙனங்கூறுதல் பொருந்தாதென்க.

இனி, ஞானவேந்தன் என்றுக்கின் அவ்வாக்குதலும் மலைகல்வி எலிபிடித்தவாறுரைத்து இகழ்ந்திடப்படுமென்க. இளங்கோவடிகளென்று வழங்கிவருபேரினுள்ளே அடிகளென்பதை விடுத்து வேந்தன் என்பதை வீணே பெய்துகொண்டு அப்பெய்துகொண்டமைக்கேற்ப ஞானம் என்னுஞ் சொல்லை அடைகொடுத்தலோ அறிவுடைப் பெரியார்தமாற்றலாகும் ?

செங்குட்டுவனவையிலே ஆசிரியர் இளங்கோவடிகள் கேட்டாரென்றிருப்பின் அவ்விருப்பே அரசனவைக்களத்துப் புலவர் கேட்டார் என்னும் விதிக்கேற்புடைத்தாகும். செம்பொன்முடிபுனைந்த செங்குட்டுவனை விடுப்பதும், அடிகளுக்கு அவர்கோலத்துக்குங் கொள்கைக்கும் வழக்கிற்கும் ஒவ்வாத வேந்துப்பட்டத்தை ஏற்றுவதும், இன்ன பிறவும் பொருந்தாவென்று மறுக்க.

இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் "உரைசாலடிகள்" என்று கூறியதற்குமாறாக மணிமேகலையின் பதிகம் "இளங்கோவேந்தன்" என்று கூறுதல் ஆராயத்தக்கது.

இவற்றானே சிலப்பதிகாரநூலாசிரியர் மணிமேகலையைக் கேட்டிலரென்பது வெளிப்படையாயிற்று.

நெடுஞ்செழியன் மதுரையையாண்டுவரும்பொழுதே அவனது தம்பியாகிய 'இளங்கோ' வெற்றிவேற்செழியன்வேந்தனுக்கொற்கையையாண்டு வந்தான். ஆதலின் அவன் இளங்கோவேந்தனென்பதற்குரியனாயினான்.

கோவலனைக் கொலைசெய்து கோடிய கோலினனாகத் தன்னைக் கருதிக்கொண்டு புரைதீர்கற்பிற் றேவிதன்னுடன் அரசுகட்டிலிலே பாண்டியன் நெடுஞ்செழியன் றுஞ்சியபிறகு இளங்கோவேந்தனாகிய அவ் வெற்றிவேற்செழியன் அரசுகட்டிலேறினான்.

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
....
புரைசெல வெறுத்த மதுரை மூதூ
ரரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டி
லிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
வொருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே றினனென
மாலைத் திங்கள் வழியோ னேறினன்"

(சிலப். XXVII. 127-138)

என்று மாடலனால் அவ்விளங்கோ வேந்தனாகிய வெற்றிவேற்செழியன் சிறப்பிக்கப்படுதலின் அவனது சிறப்பு முதலியன தாமே போதரும்.

மணிமேகலை நிறைவேறியகாலத்திலே புகார்ச்சோழர்மாபிற்கும் உறையூர்ச்சோழர்மாபிற்கும் இளங்கோவேந்தர் என்னற்குரியோர் எவருமில்லை யென்பது பலரும் அறிந்ததே.

தண்டமிழ்ச்சாத்தனார் மதுரையிலிருந்து வருதலினானும், அதுபொழுது அம்மதுரையை அரசாண்டுவருபவன் இளங்கோவேந்தனாகிய வெற்றிவேற்செழியன் ஆதலினானும், அச்செழியனே செம்பொன்முடி புனைந்த செங்குட்டுவற்குமுன்னர் நாடெலாம்புகழும் நாமமுற்றிய மாடலன் பொய்யாநாவாற்புகழும் புகழ்படைத்தவனாதலானும், அப் படைத்தவனே இளங்கோவேந்தனென்று இடம்படவுரைத்தற்கிடம்பெற் றமைபானும், அன்றியும் பாண்டிப்பதியே செந்தமிழ்நாடாதலானும், செந் தமிழ்சிவணிய பனுவலைச் செந்தமிழ்நாடன் அவைக்களத்தேயரங்கேற்று தலும் ஒருசிறப்பாதலானும், பாண்டிநாட்டுச்செந்தமிழ்க்கூட்டத்து ஈண்டிய தமிழுலகத்தோடொருங்கிருந்த பெருஞ்சிறப்புக்கருதித் தண்டமிழ்ச் சாத்தனாரை அடிகள் தமது நூலைக்கேட்குமாறு பணித்தாராதலினானும், இளங்கோவேந்தனென்னும் பெயரை யடிகளுக்கேற்றிய- னவரது சாபப் பேறுபெறுத லொருதலையாகுமாதலானும் அன்னபிறவற்றானும் தண் டமிழ்ச்சாத்தனார் தமது நூலை யவ் வெற்றிவேற்செழியனவைக்களத்தே அரங்கேற்றியிருத்தல்வேண்டுமென்பது ஒருதலையாகும்.

இனி, "நன்னூற்புலவற்கு" என்று அடிகளே அருளிச்செய்திருத் தல்கொண்டு படியார்க்கு நல்லமுதம்பாலித்தருளிய அடியார்க்குநல்லாரை யுள்ளிட்ட சான்றோரெல்லாரும் மணிமேகலை என்னும் நூலைத் தண் டமிழ்ச்சாத்தனார் சிலப்பதிகாரமியற்றுதற்குமுன்னரே செய்தனரென்று ஒருதலையாகக் கொண்டிட்டனர். அக்கொண்டமைக் கேற்குமாறு "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்" எனனும் இதனை வலி திழுத்துப் பொருளுரைத்துககொண்டு அக்கொண்டமையை வழக்கி லுக்கிப்போந்தனர். அப்போக்கு, சிலப்பதிகாரம் நிறைவேறியகாலத் துக்கும் ஆராய்ச்சிமுறைக்கும் அன்னபிறவற்றிற்கும்போக்காகித் தடை செய்தலிற் பொருந்தாவென விடுக்க.

இனி, தண்டமிழ்ச்சாத்தனாரை நன்னூற்புலவரென அடிகள் விசே டித்ததற்குக் காரணந்தா னென்னையோவெனிற் கூறுதும். சாத்தனார் தம் பாக்கள் சங்கத்தொகைநூல்களிலே சேர்க்கப்பெற்றிருத்தலின், அவர் நன்னூற்புலவர் எனப்பட்டாரெனக.

மணிமேகலையையே அடிகள் குறித்தல்வேண்டுமென்று கருதி யிருப்பரேல் அவர் இங்ஙனம் பொதுப்படககூறி யிடர்ப்படுத்தியிருக்கவே மாட்டார். இன்னதுறையில் அறஞரெல்லாரு மிரங்கி ஆராய்வாராக.

XII. கண்ணகியம்மையின் சமயம்.

மணிமேகலை கண்ணகியம்மையைப் பௌத்த ஸமயத்தினளாகக் கூறுகின்றது.

[மணி XXVI. 35—61. என்னு மிவ்வடிகளை நோக்குக.]

அம்மையின் தந்தை, மாமன் என்னு மிவர்களும் மாதவி மணிமே கலை என்னும் இவர்களும் பௌத்தமதத்தினரெனறு மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமுந் தெரிவிக்கின்றன.

சிலப்பதிகாரம் கண்ணகியம்மையைப் பௌத்தமதத்தினளாக நேரேகூறவில்லை. கோவலன கண்ணகி எனனுமிவர்கள் சைனாலயங்களை வணங்கியதினாலும் கௌந்தியடிகளைப் பினபற்றிவந்ததினாலும் இவர்க ளின் ஸமயம் சைனமாகுமென்று சிலர் கருதுகின்றனர். கவுந்தியடிகள் வழியாகச் சைனமதக்கொள்கை நிரம்பக் கூறப்பட்டிருந்தலின், கண் ணகியம்மை சமயமும் அதுவேயென்பது பொருந்தாது. நான்மறை யாளர்க்குத் தானங்கொடுத்தன் முதலாய கோவலனசெய்கைகளை நோக் குழி அவனை வைதிகமதச் சார்பினன என்று கூறுதலே தகும். இவ னது தானச்செயலை அடைக்கலக்காதையுட் காண்க. கண்ணகியம்மை கோவலன் இவர்கடம் மணச்சடங்கும் அந்தணனுன் நிறைவேறியதூஉம் இதனை வலியுறுத்தா நிற்கும்.

"வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை"
(சிலப். I. 50-53.)

துறவுபூண்டவர் எச்சமயத்தவரேனும் இல்லறத்தார் அவர்தம்மை ...ங்கி உபசரித்த லியல்பாகும்.

மணிமேகலையின் முற்பிறப்பிலே அவளிடத்தில் ஒரு பௌத்த ...ணமுனிவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர ...ள் அவனை நோக்கி,

"அமர கேளின் றமரல மாயினு
மந்தீந் தண்ணீ ரமுதொடு கொணர்கே
முண்டி யாமுன் குறிப்பின மென்றலு
மெம்மனை யுண்கே னீங்குக் கொணர்கென
வந்நா ளவனுண் டருளிய," (மணி. X. 36-40).

...ன்பதனையும் நோக்குக.

கௌந்தியடிகள் சார்பும், சினலய தரிசனமும், இன்னபிறவும் கண் ...ரகியம்மையைச் சைனமதத்தினளாகச்செய்தல் சாலாது.

மணிமேகலையிலே அம்மைக்குக் கூறப்பட்ட பௌத்தமதச்சார்பும் ...தெய்வப்பிறப்பிற்குப் பலபிறப்புகள் கழிந்தபின்னரேயாதலின் அம்மை ...க்கள் யாக்கையோ டிருப்புழி வைதிகசமயத்தினளாவளென்பது வெள் ...ரிடை விலங்கலாயிற்றென்க.

XIII. இருபெருநூலாசிரியர்தஞ்சமயம்.

இளங்கோவடிகள் குணவாயிற்கோட்டத் தரசு துறந்திருந்த ...ன்னுமிவ்வடியிலேயுள்ள கோட்டம் என்றதற்கு அருகன் கோயி ...லென்று அடியார்க்குநல்லார் உரையெழுதிவிட்டார். ஆதலி னவர் ...டிகளையுஞ் சைனமதத்தினராக்கிவிட்டார். கோட்டம் என்பதற்குக் ...காயிலென்பதுவே பொருளென்க. காஞ்சிப்புராணமுதலியவற்றையு ...நாக்குக. மணிமேகலை ஆசிரியர்தம் மதம் இதுவெனத் தெரிதற்கு ...துபோது சான்றுக ளொன்று மகப்பட்டில.

இவ்விருநூலாசிரியர்களும் தத்தம் நூல்களிலே கடவுள் ...ாழ்த்துக் கூறுதுபோந்தமையும் மேற்கூறியதை வலியுறுத்தாநிற்கும்.

XIV. மணிமேகலையில் வடசொற்கலப்பு.

மணிமேகலையிலே தருக்கமுறை பயின்றுவரும் சமயக்கொள்கைகள் பலப்பலவிடங்களிலே நிரம்பப்பயின்றுவந்துள. அப்பயின்று வருமிடங்களிலே வடசொற்கலப்பு நனிவந்துளது. இவ்விடங்களை எத்தகையவர் கூறப்புகுந்தாலும் வடசொற்கலப்பைச் சாத்தனரினும் அக்கூறப்புகுந்தவர் குறைவுபடுத்துவர் என்பது வீணே யாகும்.

தொகைநூல்களிலே தண்ணொன் றொழுக்கம்பெற்றுப் பயில் வருஞ் சாத்தனார்பாக்களுக்கும், மணிமேகலைக்கும் வேற்றுமை என் றறிதலரிதே.

சிலப்பதிகாரத்தினும் சமயவிஷயங்கூறியவிடங்களிலே மணி மேகலையினும் பன்மடங்கு விஞ்சியிருத்தலை யெல்லாருமறிப.

நூற்பாவுக்குத் திலகமெனத் தொல்காப்பியம் நிற்றல்போல ஆசிரியப்பாவிற்குத் திலகமென இம்மணிமேகலையும் நிலைபெற்று வருகின்ற தென்பது மொருதலைமுடிபென்க.

XV. முடிவுரை.

இக்கூறியவற்றானே, முப்பெருந்தமிழுலகிலே ஒப்பெனப்பிறவொன் றில்லாதவுயர்ச்சி வாய்ந்த இருபெரு நூல்களாகிய மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும் சரிதப்போக்கானும், கொள்கையானுந் தம்முண் மா றுபட்டனவாகா வெனபதூஉம்,—மணிமேகலையிலே வடசொற்கலப் பிகுந்தமைகொண்டு அது காலத்திற் பிற்பட்ட நூலாகிச் சிலப்பதிகாரங் கேட்டருளிய தண்டமிழ்ச்சாத்தனாரா லியற்றப்பட்ட தொன்றன்றென் பது வழக்குரை யாகாது எனபதூஉம், சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட சித்திராபதிதான் நற்குணம் வாய்நதவள், மணிமேகலையிற் கூறப்பட்டாள் அங்ஙனம் வாய்க்கப்பெற்றிலள் என்று கூறுதல்பொருந்தாதெனபதூஉம், மணிமேகலைக் கதை நிகழ்ச்சி இரண்டாண்டினுக்குள்ளே நிகழ்ந்திருக்க வேண்டுமென்று கருதியது வாயே யெனினும், அதனை வாய்மையாகக் கொண்டு குற்றப்படுத்தல் நற்றமெனப் படாதெனபதூஉம், சிலப்பதி காரத்திற் கூறப்பட்டதையே மெய்யென்றுகருதி மணிமேகலை நிகழ்ச்சி களை ஒருபுறந்தள்ளுதல கூடாதென்பதூஉம், மாதவி மணிமேகலை களின் குழல் களையப்பட்டதைச் சிலப்பதிகாரம்போல மணிமேகலை அறிவியா திருத்தலின் அது குற்றமுடைத்தெனக் கருதுவது கூடா தென்பதூஉம், இவர்கூற்றுப்படி பிற்காலத்தில் மணிமேகலை யெழுதப் பட்டிருப்பின் சிலப்பதிகாரத்துக்குமாறுபட்டனவென விவராற் காட்டப் பெற்றவை அழகிய அருமபெருங்காப்பியஞ்செய்த சாத்தனாரலறியப் பெறாதிருத்தல் ஒருபெரு வியப்பேயாகு மென்பதூஉம், மணிமேகலை கேட்ட இளங்கோவேந்தன கொற்கையாண்ட வெற்றிவேற்செழியனேயா னென்பதூஉம், இன்ன பிறவும் விளங்கிக் கிடந்தமைகாண்க.

குறிப்பு:—இவ்வாராய்ச்சி தனிவிரித் தெழுதப்பட்டுச் சின்னாளில் நூல்வடிவமாகி வெளிவரும்.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

இருபெருநூலின்
நிகழ்ச்சிக்குரிய காலவட்டவணை.

(மு)தலாம் ஆண்டு வைகாசித்திங்கள்:—கண்ணகியுங் கோவலனும் மதுரை நோக்கிப் புறப்படுதல்.

,, ஆடித்திங்கள்:— (1) கோவலன் சாவு.

,, ,, (2) மதுரை எரியுண்டது.

,, ,, (3) மாதரி சாவு.

,, ,, (4) கண்ணகி சுவர்க்கம்புக்கது.

,, ,, (5) மாடலன் புகாருக்குப் புறப்படுதல்.

,, ஆவணித்திங்கள்:—செங்குட்டுவன் இமய நோக்கி வஞ்சியிலிருந்து புறப்படுதல்.

,, புரட்டாசித்திங்கள்:—(1) மாடலன் புகாரடைதல்.

,, ,, (2) கோவலன் கண்ணகி என்பவர்கள் சுவர்க்கம்புக்கதைக்கேட்ட மாசாத்துவான் மாநாய்கன் என்பவர் துறவுபூணல்.

,, ,, (3) அவர்தம் மனைவியரிறத்தல்.

,, ,, (4) சித்திராபதியிடம் மணிமேகலையை ஒப்புவித்துவிட்டு மாதவி பிக்குணிஸங்கத்தைச்சார்தல்.

(மூ)ன்றும் ஆண்டு புரட்டாசித்திங்கள்:—மாதவி குழல்களைந்து துறவு பூணல்.

,, ஐப்பசித்திங்கள்:—மாதவியின் துறவு முதலியவற்றைக் கேள்வியுற்ற மாடலன் கங்கையாடப் புறப்படுதல்.

(நா)ன்காம்ஆண்டு சித்திரைத்திங்கள்:-(1) கங்கைத்தென்கரையில் செங்குட்டுவனும் மாடலனும் அளவளாவுதல்.

(2) மணிமேகலை பூப்படைதல்.

நான்காம்ஆண்டு வைகாசித்திங்கள்:-(1) வஞ்சிநோக்கிச் செங்குட்டுவன் மாடலனோடு புறப்படுதல்.

(2) மணிமேகலை பிக்குணிலங்கத்தைச்சார்தல்.

ஐந்தாம் ஆண்டு சித்திரைத்திங்கள்:—மாதவியோடு மணிமேகலை இந்திரவிழவுக்கு வாராதவிழுக்கு.

,, வைகாசித்திங்கள்:—ஊரலருரைத்தமைஎப்பச்சித்திராபதி வயந்தமாலைவழியாக மாதவிக்கறிவித்தல்.

,, தைத்திங்கள்:—மாடலனோடு செங்குட்டுவன் வஞ்சிசேர்தல்

,, பங்குனித்திங்கள்:-கண்ணகியின் உருவநிறைவு

ஆறும் ஆண்டு சித்திரைத்திங்கள்:-(1) தேவந்திகைமுதலியோர் புறப்படுதல்.

(2) கண்ணகி பிரதிட்டோற்சவமும் வேள்வியும்.

(3) புகாரைக் கடல்கொண்டது.

(4) மணிமேகலை மணிபல்லவத்தைச் சார்தல்.

(5) மணிமேகலை வஞ்சிமாநகரஞ்சார்ந்து கண்ணகியை வணங்குதல்.

(6) மணிமேகலை கச்சிசார்ந்து ஆங்கமைக்கப்பட்ட மணிபல்லவத்தில் தீவதிலகைக்கும், மணிமேகலா தெய்வத்துக்குங் கோயில்கள் சமைப்பித்தல்.

,, வைகாசித்திங்கள்:-(1) மணிமேகலை கச்சியிலாருயிரருத்தி வருதல்.

(2) மணிமேகலை தவத்திறம்பூண்டு தருமங்கேட்டல்.

,, ஆடித்திங்கள்:—கண்ணகி கும்பாபிஷேகமும் தேவந்திகை முதலியோரின் வணக்கமும்.

343. இட்டமுட னென்றலைமி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாப்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

344. ஆர வடமு மதிசித சந்தனமும்
ஈர நிலவு [1]மெரிவிரவும்—பாரிற்
றுதிவகையான் மேம்பட்ட தாப்புரவர் தத்தம்
விதிவகையான் வேறு படும்.

345. தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் [2]குற்றங்க டீர்ந்தான்—உலகிற்
றனிமுதன்மை பூண்டியர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்.

346. எய்த வின்னல் வந்த போழ்தி யாவ ரேனும் யாவையும்
செய்ய வல்ல ரென்ப தோர்க சென்னெ றிக்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே.

மூன்றாவது:

பொருளியல்.

அரசரியல்பு.

347. நண்ணினர்க்கு [3]நண்ணார்க்கு நாடோறுங் கோடாமைத்
தண்ணியராய் வெய்யராய்த் தக்காரோ—டெண்ணிக்
கருங்கடல்சூழ் மாநிலத்தைக் காப்பதா மன்றே
இருங்கழற்கால் வேந்தர்க் கியல்பு.

அரசர் பெருக்கற்குரிய ஆறும் கடிதற்குரிய ஏழும்.

348. நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடி னரைப்பிரித்தல் கூட்டலா—நீடிலா
வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காமமிவை யேழு.

---

(343) ஔவைவாக்கென்பர். (344, 345) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47. [1]மெரிவிரியும். [2]குற்றங் கடிந்தான். (346) இராமாவதாரம் (புறத்). (347) யாப். வி 94: [3]மேனோர்க்கு. (348) பு. வெ. 9, 37. உரை.

அரசியற் சிறப்பு.

(மேசாற்சீரடி.)

349. திருக்கொண்டு பெருக்கமெய்தி வீற்றிருந்து
குற்றங்கெடுத்து விசும்புதைவரக் கொற்றக்குடை யெடுப்பித்து
நிலநெளியப் படைபரப்பி
ஆங்காங்குக் களிறியாத்து
நாடுவளம் பெருகக் கிளைகுடி யோம்பி
நற்றாய் போல வுற்றது பரிந்து
நுகத்துக்குப் பகலாணிபோலவும்
மக்கட்குக் கொப்பூழ்போலவும்
உலகத்துக்கு மந்தரமேபோலவும்
நடுவுநின்று செங்கோலோச்சி
யாறில்வழி யாறுதோற்றுவித்துக்
குளனில்வழிக் குளந்தொடுவித்து
முயல்பாய்வழிக் கயல்பாயப் பண்ணியும்
களிறுபிளிற்றும்வழிப் பெற்றம்பிளிற்றக்கண்டும்
களிறூர் பலகால் சென்றுதேன் சோரவும்
தண்புனற் படப்பைத்தாகியும்
குழைகொண்டு கோழியெறிந்தும்
இழைகொண் டான்றட்டும்
இலக்கங் கொண்டு செங்காணரை யெறிந்தும்
உலக்கைகொண்டு வாளையோச்சியும்
தங்குறை நீக்கியும் பிறர்குறை தீர்த்தும்
நாடாள்வதே யரசாட்சி.

கொடுங்கோன்மை.

350, தற்பாடு பறவை பசிப்பப் பசையற
நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச்
சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகா லூன்றா வளவயல் விளையா
வாய்மையுஞ் சேட்சென்று காக்குந் திறநாப்
பிறவு மெல்லா நெறிமாறு படுமே
கடுஞ்சினங் கவைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே.

---

(349) யாப். வி. 93; (350) ஆசிரியமாலை (புறத்).

கல்வி.

351. எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

352. எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை.

353. நண்ணு வார்வினை நைய நாடொறும்
நற்றவர்க்கர சாய ஞானநற்
கண்ணி னுடியே யடைவார்கள் கற்றவரே.

354. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

355. வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

356. ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாதலால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

கல்லார்.

இரட்டையர்.

357. மூடர்முன்னே பாடன்மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனானல்.

---

(351) குறள். 392 பரிமே. மேற். (352) தனிப்பா. (353) யாப். வி. 64. (354) தனிப்பா. (ஔவைவாக்கென்ப) (355) தனிப்பா. (356) தொல். பொரு. 75 நச்.

ஓதத்தகாத நாள்கள்.

358. அட்டமியி லோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு நிதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை.

அறிவுடைமை.

359. இளையர் முதிய ரெனவிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா—இளையனுய்த்
தன்ருதை காம நுகர்தற்குத் தன்காம
மொன்ருது நீத்தா னுளன்.

பெண்ணறிவு.

360. நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே.

அறிவுடையோர்செய்திறம்.

361. மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியொ டாசார நண்பி னயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவில்
ஆதர்க் கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே.

(தந்துவப்பிரகாசர்).

362. ஆயிரம் புலவோரி லொருவன் ப்ரபந்தகவி
யவரா யிரர்க்கு ளொருவ
னந்தாதி தூதுலா பரணிகோ வைக்கமக
னவரா யிரர்க்கு ளொருவன்
போயிடம் பொருளுை டகபுரா ணிகனவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பொருட்பெருங் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பாயிரந் தருபஞ்ச [1]லட்சண விதானியிப்
படியா யிரர்க்கு ளொருவன்

---

(358) தனிப்பா. (359) பெரும்பொருள்விளக்கம் (புறத்). (360) நன் 264 மயிலை. (361) தனிப் பா. (362) தமிழ் நா. 229. [1]லட்சணவி தானனிப்.

பரசமய தர்க்கநூல் பகர்வாதி மற்றும்ப்
படியா யிரர்க்கு ளொருவன்
தேயமெண் டிசைபரவு தேசிகோத் தமனத்
திறத்தா யிரர்க்கு ளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவக் கியானியே.

363. நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பலகவிதை
நினைவினைத் திருடி வையோம்
நீடுலகின் மனிதரைப் பாடிலோ நாமென்று
நீள்வசைகள் பாட வறியோம்
பின்னைய நாவல ருடன்பங்கு பேசிப்
ப்ரபந்தங்கள் பாடிக் கொடோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
பேய்க்கிரந் தங்கள் பேசோம்
[1]இனிமைதரு குலத்துக் குருக்களை மறந்தெட்
டிடங்களிற் றீட்சை போகோம்
இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்
டழைக்கநா மிறுமாந் திரோம்
தனியிருந் தெம்மைப் புறங்கூறு வார்பாடு
தயனியக் கவிபா டுவோம்
[2]சமணூல் களைப்பொரு ளெனக்கொளோந்
திருஞான சம்பந்த ரடியர்நாமே.

ஆடம்பரகவி.

(ஔவையார்.)

364. விரக ரிருவர் புகழ்வாரும் வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையிலொரு
பஞ்சேனும் பட்டேனும் [3]வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.

நிபகவி.

365. போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடிற்
றூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.

(363) தமிழ்நா. 231; [1]இனிமைதரு பூருவத் துக்குருக் களைமறந் தெட்டிடத் தினிற்றீட்சைபோய். [2]சமயநூல். (364) ஷை. 55; [3]மில்லையோ பாவலிகவி. (365) தனிப்பா. (சோழன்வாக்கு.)

366. இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறு கமலத்தை நேடும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

அவைபத்தாரியல்பு.

367. அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை
ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை—யிழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய வெட்டுறுப்புக் காண்.

368. குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங்—கெடுக்கும்
அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா வவையின்க ணெட்டு.

369. குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு [1]காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் [2]தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை [3]யவாஅ வின்மையென
இருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
[4]யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே.

நல்லவை.

370. நல்லவை யென்பது நாடுங் காலை
எத்துறை யானு மிருவரு மியம்பும்
அத்துறை வல்லோ ரறனெறி புணர்ந்தோர்
மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர்

---

(366) தனிப்பா. (367) வீரசோ. பொருட். 19 மேற். (368) பு. வெ. 8. 19 மேற். (369) ஆசிரியமாலை (புறத்); தொல். பொரு. 76; [1]நாவினும். [2]துடங்கி. [3]யவாவின்மை யென்றுங். [4]உடனய விருக்கை யொருநா ளாமெனின். (370) யாப். வி. 96.

கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர்
செற்றமுஞ் சினமுஞ் சேரா மனத்தோர்
முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர்
இனிய முகத்தோ ரிருந்துரை கேட்போர்
[1]வேந்த னொருவற்குப் பாங்கு படினும்
தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர்
அன்னோர் முன்னர்க் கூறிய பொழுதிற்
றொலையு மாயினுந் தொலைவெனப் படாஅது
வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே.

தீயவை.

371. தீயவை யென்பது தெரியுங் காலைச்
சுலாவுஞ் (?) சுண்டுந் தாமேற் கொண்டு
நிலவாப் பொருள்களைக் குலவி யெடுத்தாங்
குரைத்தவொரு வற்காய்ச் செருவென மொழிந்து
சொல்லிய துணராத வல்லவை யுணர்ந்து
வாராம் படுவது தீயவை யாகும்.

(பூதத்தார் அவையடக்கு).

372. நிரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்
உரைத்த வுரையதனைக் கேட்டு—முரைத்த
பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்.

மன்றிற் பரிதானம்பெறல்.

(ஔவையார் கிழியிறப்பாடியது).

373 சென்றுமுழ துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுமுழ துண்டான் மனைவாழ்க்கை—முன்றிலிற்
றுச்சி லிருந்து துடைத்தெழுகண் ணீராலெழ்
எச்ச மிறுமே லிறு.

வழக்கழிவு.

(ஷை)

374. வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின்—வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் [2]துடைத்தெழுகண் ணீராலேழ்
சுற்ற மிறுமே லிறு.

---

[1]வேந்த னொருவர்கண் வாரம் படினும். (371) யாப். வி. 95. (372) தொல். பொரு. 425. (373) தமிழ்நா. 34. (374) ஷை. 35; [2]துடைத்தழு கண்ணீராற்.

375. உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் தன்கிளையும்
எச்சமிறு மென்று விறு.

376. கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலைபுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போன் மாண்டு.

தீநட்பு.

377. கெட்டே மிதுவென் னிலையென்று சார்தற்கண்
நட்டவ ரல்லார் நனிமிகு பவர்சுற்றம்
பெற்றது சொல்லிப் பெரிதிகழ்ந் தாற்றவும்
எட்டவந் தோரிடத் தேசி நிற்பவே.

378. அளவறியா னட்டவன் கேண்மையே கீழ்நீர்த்
தறியறியான் பாய்ந்தாடி யற்று.

முயற்சி.

379. தண்டலைறநீர் நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்று ளம்பருகும் பான்மொழியாய் பார்மேன்
முயன்றுன் முடியாப் பொருள்.

முயற்சியில்லார்.

380. தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னு மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும்பிளிற்றி யாங்கே.

பொருள்செயல்வகை.

381. குலந்தருங் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைக ளழிபசி நீக்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருடரப் புன்கண்மை யுண்டோ.

---

(375) தனிப்பா. (376) இரட்டையர்வாக்குப்போலும், ஒளவைவாக்கென்றுரைப்பாருமுளர். (377) வளையாபதி (புறத்) (378) யாப்.வி. 39. (379) தண்டி. 87 மேற். (380) யாப். வி. 67; யாப். கா. செய். 7. வீரசோ. யாப். 15 மேற்; இலக். வி. 731 உரை. (381) வளையாபதி (புறத்).

அறக்காவல்.

382. ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னுற்குப் பெறலருமை யாதரோ
வார்திரைய மாமகர வெள்ளத்த நாப்பணும்
போர்மலைந்து வெல்லும் புகழ்.

பண்புடைமை.

383. நகைநனி தீது துனிநன் றியார்க்கும்
பகைநனி தீது பணிந்தியா ரோடும்
இவைமிகு பொருளென் றிறத்த லிலரே
வகைமிகு வானுல கெய்தி வாழ்பவே.

பேதைமை.

384. தெண்ணீர் பரந்து திசைதொறும் போய்க்கெட்ட
எண்ணெய்கொண் டீட்ட விவறுத லென்னொக்கும்
பெண்மனம் பேதித் தொருப்படுப் பன்னெனும்
எண்ணி லொருவ னியல்பென்னு மாறே.

காமக்கேடு.

385. ஆசை யல்குல் பெரியாரை யருளு மிடையுஞ் சிறியாரைக்
கூச மொழியும் புருவமுங் குடில மாகி யிருப்பாரை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே.

386. ஆனை யூற்றின் மீன்சுவையி னசுண மிசையி னளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டிடுக்க ணெய்து மிவ்வனைத்தும்
கான மயிலஞ் சாயலார் காட்டிக் களவை விளைத்தாலும்
மான மாந்த ரெவன்கொலோ வரையா தவரை வைப்பதே.

387. ஆசைப் படுவ வருந்தவங் கல்வியல் லாப்பிறகள்
பேசப் படுவ திலமினை யாவையு மேபிறப்பாம்
தேசத் தியற்கை தெரிந்துணர் வாருக்குச் சேயிழைமார்
பாசப் படுகுழிப் பற்றறுத் தார்வினைப் பற்றறுத்தார்.

---

(382) இரும்பல்காஞ்சி (புறத்). (383—384) வளையாபதி (புறத்), (385—387) யாப். வி. 95.

388. கொடியிடை மாதர் மேனி குவளைமல ருண்க ணென்றும்
பிடிநடை மாதர் மாண்ட நடைதானெனப் பேது செய்தும்
வடிவொடு வார்ந்த மென்றோள் வளைசேர்ந்தகை காந்த ளென்றும்
இடையிடை நின்று நின்று பலகாலு முவப்ப தென்னே.

389. எண்ணின்றி யேதுணியு மெவ்வழி யானு மோடும்
உண்ணின் றுருக்கு முரவோருரை கோட லின்று
நண்ணின்றி யேயு நயவாரை நயந்து நிற்குங்
கண்ணின்று காம நனிகாமுறு வாரை வீழ்க்கும்.

390. சான்றோ ருவர்ப்பத் தனிநின்று பழிப்ப காணார்
ஆன்றுங் கமைந்த குரவர்மொழி கோட லீயார்
வான்றுங்கி நின்ற புகழ்மாசு படுப்பர் காமன்
தான்றுங்கி விட்ட கணைமெய்ப்படு மாயி னக்கால்.

391. மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பர் காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க்கொள்வ தாயி னக்கால்.

392. நக்கே விலாவிறுவர் நாணுவர் நாணும் வேண்டார்
புக்கே கிடப்பர் கனவுந்நினை கையு மேற்பர்
துற்றாண் மறப்ப ரழிவர்நனி துஞ்ச லில்லார்
நற்றோண் மிகைபெரிது நாடறி துன்ப மாக்கும்.

393. அரசொடு நட்டவ ராள்ப விருத்தி
அரவொடு நட்டவ ராட்டியு முண்பர்
புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்
விரகில ரென்று விடுத்தனர் முன்னே.

394. வகையெழிற் றோள்க ளென்று மணிநிறக் குஞ்சி யென்றும்
புகழெழ விகற்பிக் கின்ற பொருளில்கா மத்தை மற்றோர்
தொகையெழுங் காத றன்னாற் றுய்த்தியாந் துடைத்து மென்பார்
அகையழ லழுவந் தன்னை நெய்யினா லவிக்க லாமோ.

395. அனலென நினைப்பிற் பொத்தி யகந்தலைக் கொண்ட காமக்
கனலினை யுவப்பு நீராற் கடையற வவித்து மென்னார்
நினைவிலாப் புணர்ச்சி தன்னா னிக்குது மென்று நிற்பார்
புனலினைப் புனலி னாலே யாவர்போ காமை வைப்பார்.

(389-393) வளையாபதி (புறத்.) (394-395) குண்டலகேசி, (புறத்).

உழவு.

(ஔவையார்)

396. ஏரு மிரண்டுள தா யில்லத்தே வித்துள தாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே யினிது.

ஏரோர்பெருமை.

397. யானை நிரையுடைய [1]ரேனு மெழில்சிறந்தார்
ஏனை [2]நிரையுடை யோர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கு [3]வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு.

398. வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வா ரயலுழுவார்
வாழ்வாருள் வாழா தவர்.

399. மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
யாழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை.

வேளாளர் நிரைகாவல்.

400. போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கா
ரேர்வாழ்ந ரென்பதற் கேதுவாஞ்—சீர்சால்
உரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தாந்தம்
நிரைகாத்துத் தந்த நிதி.

பன்னெறி.

பிதாக்களாவார்.

401. பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண்.

---

(396) தமிழ்நா. 60. (397) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல்-புறத். 21 நச்; [1]ரேரோ ரினுஞ்சிறந்தோர். [2]நிரையுடைய. [3]நன்றி. (398) யாப். வி. 96. (399) கம்பர்வாக்கென்பர். (400) தொல். புறத். 21 நச். (401) தனிப்பா.

(ஔவையார்).

இதனின் இது நன்றெனல்.

402. எசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

இன்ன இன்னவை அழகாம் எனல்.

408. சுரதந் தனிலிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி—நிரதங்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

இன்னாரை இன்னவிடத்துப் புகழ்க எனல்.

404. நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

இன்னார்க்கு இது துரும்பு எனல்.

405. போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பாம்—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் றுரும்பு.

பயனற்றவை இவையெனல்.

406. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநன்
னாடில்லான் செங்கோ னடாத்துவது—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல்.

(வேற்றொலி வெண்டுறைவகை.)

407: கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற்
    கருமம் யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே யேமுற்று
    விளைவ தென்னும்

(402—406) தனிப்பாட்டுக்கள் (407) யாப். வி. 67.

பொல்லாதார் நன்கல மெய்புதைப்பப் பூண்டாலும்
பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவே லமையாதோ.

(ஔவையார் பாட்டு).

408. வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

இதனோடு இது நீங்குமெனல்.

409. தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—மாயவாழ்
வுற்றா ருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

அட்டமத்துச் சனிபோல்வார்.

410. காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனும்
ஆலையெரி போன்ற வயலானும்—சால
மனைக்கட் டழிக்கு மனையாளு மூன்றுந்
தனக்கட் டமத்துச் சனி.

இவரிவர் கெடுவர் எனல்

411. கிட்டேரா மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

முதற்சிறு பகையெனல்.

412. இருளுக் கெரிவிளக் கென்றும் பகையே
அருளுக் கலைவாழ்க்கை யனைத்தும் பகையே
மருளுக்கு வாலறிவு [1]டாளாப் பகையே
பொருளுக்கனை தின்மை பகை.

(408—411) தனிப்பா. (412) யாப். வி. 40. [1]மாயாப்.

மதிக்கத்தகாப்பொருள்கள்.

413. துறவுளவாச் சான்றோ ரிளிவரவுந் தூய
பிறவுளவா லூன்றுறவா லூணும்—பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

குறுகத்தகாதவை.

414. வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்.

(ஔவையார் நாலுகோடி கவிபாடியது).

415. (1) மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
(2) உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையி
லுண்ணாமை கோடி யுறும்.
(3) கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
(4) கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும்.

பொய்ம்மகள்.

416. [1]ஆயத் துறைப்பிறந் தந்தணர் பால்குடித் தையிருநாள்
மாயக்கண் வேசை யிடத்தே வளர்ந்துவண் மையொருநாள்
ஏயப் புலவ ரிடத்தெட்டு நாள்செட்டி யேயெனன்றபின்
போயக்க சாலே புகுந்தனள்கா ணந்தப் பொய்ம்மகளே.

(ஔவையார்பாடிய நேர்நிறைநில்லாத அகவல்.)

417. வையக மெல்லாம் வளவயலா வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமு முத்து மணியுங் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநாள்
ஒருபொழு தொருவனா டொழிதல் பார்க்கும்
நேர்நிறை யில்லா தென்றுமென் மனனே
நேர்நிறை யில்லா தென்றுமென் மனனே.

---

(413) தண்டி. 38. (414) நன். 377 மயிலை. (415) தமிழ்நா. 37.
(416) தனிப்பாட்டு; [1]ஆயத் துறையிற் பிறந்தவள் தந்தணர் பால்குடித்து.
(417) தமிழ்நா. 36.

பதினாறு பேறுகள்.

418. துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயின்மை பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

புறத்திணைப்பிரிவு.

419. வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்.

வெட்சி.

மன்னுறுதொழில்.

420. வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றாள்வல் லிளையவர் தாஞ்செல்லி—னாளைக்
கணைகுர [1]னல்லாவின் கன்றுள்ளப் பாலி
னனைவது போலு மிவ்வூர்.

421. எடுத்த நிரைகொணு வென்றலுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத்—துடித்தனவே
நண்ணாரா மார்புந் தடந்தோளும் வேல்விழியுற்
எண்ணாத மன்னர்க் கிடம்.

விரிச்சி.

422. நிரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ [2]ளின்றுரைத்த நற்சொல்—நிரையன்றி
எல்லைநீர் வைய மிறையோற் களிக்குமால்
[3]வல்லையே சென்மின் வழி.

---

(418) காளமேகப்புலவர்வாக்கென்பர். (419) வீரசோ. பொருட் 21 மேற்; பிங். (420) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல். பொருளதி. 58. [1]நல்லாத்தன் கன்றுள்ளப் பாலா. (421) தண்டி. 39. (422) பெரும் பொருள்வி. (புறத்); முல்லைப்பாட்டு. 8–11 மேற். [2]ளேற்றுரைத்த. [3]வல்லைநீர்.

விரிச்சிவிலக்கிய வீரக்குறிப்பு.

423. நாளும் புள்ளுங் கேளா தூக்கமொ
டெங்கோ னேயின னாதலின் யாமத்துச்
[1]செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
எயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே.

வேய்.

424. நெடுநிலையா யத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்று
நினக்குரிய வாக நிரை.

நிரைகோள்ளற்குக் கொற்றவையின் பரவுக்கடன்.

425. வந்த நிரையி னிருப்பு மணியுடன்
எந்தலை நின்றலை [2]யாந்தருது—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு.

துடிநிலை.

426. நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்ப்பூசி யோர்ந்துடீஇத்—தத்தம்
துடியரோ டேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு.

செலவு.

427. காந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசென் மன்னர் பதிந்தார்—அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமிவ் வூர்.

(423-424) தகடூர் யாத். தொல். பொரு 58. மேற். [1]செங்கோல். (425) பெரும்பொருள் வி. (புறத்); சிலப். 12. பக். 331; தொல். பொரு. 53; [2]யான் றருவன். (426) தொல். பொரு. 59. (427) ஷை. ஷை, 58.

உறையூர்

மு. ரா. கு.
தொகைநன்கொடையாக...
6-10-2...

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௨.] ரக்தாக்ஷி ஆனிமீ [பகுதி அ.

Vol. XXII. June-July-1924. No. 8.

தமிழரும் ஆந்திரரும்.*

[மு. இராகவையங்கார் எழுதியது.]

பாதகண்டத்தின் தென்பாகத்தில் உள்ள தேசங்களிலே, தமிழ் தெலுங்கு கன்னடம் என்ற பாஷைகள் வழங்கும் நாடுகள், பழமையும் பெருமையும் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்தவிஷயம். ஒன்றையொன்று அடுத்துள்ள இத்தேசங்கள் அரசியலாலும் பாஷைவகையாலும் பூர்வகாலமுதலே சம்பந்தம்பெற்றிருக்கக்கூடியவையாதலால், 'அத்தொடர்புகள் யாவை' என்று அறியமுயல்வதில் நம்மவர்க்கு விருப்பமிருப்பது இயல்பேயாம். இவ் விருப்பமிகுதியே 'தமிழரும் ஆந்திரரும்' என்றவிஷயத்தை இம்மகாசபையில் உபந்யஸிக்கும்படி என்னைத் தூண்டியது. கன்னடபாஷையானது வளமும் பழமையும் வாய்ந்ததேயாயினும், தமிழ்நாட்டுடன் ஆந்திரதேசத்துக்கு அதிகத்தொடர்புண்மைபற்றியும் சுருக்கங்கருதியும், அவ்விரண்டுநாட்டார்க்கும் அமைந்த சம்பந்தத்தையே இன்று ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளலானேன். நம் சகோதரவகுப்பினராகிய ஆந்திரமக்களால் தமிழ்நாட்டவர் பூர்வத்தில் அடைந்த நன்மைகளும் உண்டு; ஆதலின் அவற்றை மறவாது எடுத்துரைப்பதற்குத் தமிழின் தலைமைக்களமாகிய இத் தமிழ்ச்சங்கத்

*இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருஷக்கூட்டத்தில் தலைமைவகித்த வித்யாவிலாசமந்திரியாகிய Hon. Sir. A. பரசுராமதாஸ் பாத்ரோ B. A., B. L., Kt., அவர்கள் முன்னிலையிற் படிக்கப்பட்டது.

தினுஞ் சிறந்த இடம் வேறுண்டோ? இவ்வாறு காரணமுங் களமும் அமைந்திருப்பதுடன் காலமும் பொருந்தியதாயுள்ளது. அஃதாவது, ஆந்திரதேச சம்பந்தமுடையவராய் இன்று சங்கக்கூட்டத்தின் தலைமை வகிக்கும் நம் வித்யாவிலாசா மந்திரியாரின் முன்னிலையில் இவ்விஷயத்தைப் பேசும்படி நேர்ந்திருப்பதேயாம். இனி, நான் தொடங்கிய விஷயத்துட் புகுவேன்.

பாஷாதத்துவநூலோர், திராவிடபாஷைகள் என்று பகுத்துள்ள தொகுதியுள், தமிழ் ஆந்திரம் கன்னடம் என்ற மூன்றும் ஓரினத்தைச் சார்ந்தவை என்பது, அறிஞரெல்லாம் ஒத்துக்கொண்ட முடிபாம். இவற்றுள், முதலிரண்டு மொழிகளுமே அதிகப் பழமைபாராட்டுதற்குரியவை. நூற்பெருமையால் கன்னடம் குறைவுடையதன்றேனும், அது, தமிழ் வடுகு என்ற இரண்டன்சேர்க்கையால் ஆனதொருபாஷை என்பதே தமிழ்முன்னோரின் கருத்தாகும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டினரும் கவிச்சக்கரவர்த்தி என்று மதிக்கப்பட்டவருமாகிய சயங்கொண்டார்—

"மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"

என்று—சிறுபான்மை வடுகும் பெரும்பான்மை தமிழுங்கலந்தமொழியே கன்னடம் என—இக்கருத்தேபடக் கூறுவது காணலாம். இது, பழைய தமிழ்மக்கட்குக் கன்னடபாஷையைப்பற்றியிருந்த அபிப்பிராயம் இன்னதென்பதைக் காட்டுவதன்றோ? பழங்கன்னடத்தை (ஹள கன்னடம்) ஆராய்வோர்க்கு இதனுண்மை நன்குவிளங்கத் தடையில்லை. இனி, மலையாளபாஷையைத் தமிழின் குழவிமொழி என்பதே தக்கதாம். மேலைக்கடலையொட்டிய மலைநாடுமுழுதும் தமிழகத்தின் பழையபிரிவுகளுட் சேர்ந்ததாகவும், சில நூற்றாண்டுகட்குமுன்பெல்லாம் பாஷையாற் சிறிதும்வேறுபடாததாகவும் இருந்ததென்பது, மலையாளபாஷையிலுள்ள பழையநூல்களாலும், அந்நாட்டுச் சிலாதாமிரசாஸனங்களாலும் தெளியப்பட்டது. இதுபற்றியே, கல்வியிற்பெரிய கம்பநாடரும், "வடகலை தென்கலை வடுகு கன்னடம், இடமுள பாடையா தொன்றி னுயினும்" என்று—தங்காலத்தே மலையாளம் தமிழின்வேறான பெரும்பாஷையாகக் கருதப்படாததைக் குறிப்பித்தலுங் காணலாம்.

இவ்வாறு, தமிழ் வடுகு கன்னடமொழிகள் ஒரு வகுப்பினவாயின், 'இவற்றுக்கு மூலமான தாய்மொழியாது' என்ற கேள்வி அடுத்து நிகழக்கூடியதே. இதற்கு யாவரும் ஒப்பக்கூடியவிடையை இப்போது பெறுதல் அரிதென்னலாம். 'திராவிடத்தொகுதியுள் தமிழே தாய் மொழியாகத்தக்கது' என்பது நம் நாட்டறிஞர்சிலர் அபிப்பிராயம். இப்பொழுது வழங்கும் தமிழ்நூல்களுள்ளே தொல்காப்பியமே பழமையும் பெருமையும் உடையதென்பது யாவரும் அறிவர். அந்நூல், தமிழ்வழங்கும் நிலத்தைப் பன்னிரண்டுபகுதியாக்கி, அப்பன்னிரண்டுக்கும் புறம்பாகிய வடுகுமுதலிய நாடுகளிலிருந்து தமிழில் வழங்கும் பதங்களைத் திசைச்சொற்கள் என்று பகுக்கின்றது. தொல்காப்பியர்காலத்தவராகிய பனம்பாரனாரும் 'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனத் தமிழ்வழங்கும்நிலத்தை வேங்கடமலைக்கு அப்புறம் நிறுத்தினாரில்லை. காக்கைபாடினியார் என்ற பழம்புலவரும் "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக" என்று ஆந்திரபாஷை வழங்குநிலமே தமிழின்வடவெல்லையாகக்கொண்டார். இவற்றால் தொல்காப்பியனார் முதலிய முன்னோர்க்கு நெடுங்காலத்துக்கு முன்பே, தமிழும் வடுகுந் தனியே வேறுபட்டிருந்த பாஷைகள் என்பது தெளியப்படும். இப்போதுள்ள பழைய தமிழ்ப் பிரமாணங்களைக் கொண்டு நோக்குமிடத்து, வடுகுக்கும் தமிழினளவு பழமையுண் டென்றே சொல்லலாம்.

சங்ககாலத்துத் தமிழ்மக்கள் ஆந்திரரை வடுகர்* என்றும், அவர் மொழியை வடுகு என்றும் பெரும்பான்மை வழங்கிவந்தனர். அவ்வாறே ஆந்திரர் தமிழரை அரவர் என்றும், அவர் மொழியை அரவம் என்றும் வழங்கலாயினர். வடகர் என்பதற்கு வடக்கிலுள்ளவர் என்பது பொருளாம். குடக்கிலுள்ளது குடகு என்பதுபோல, வடக்கிலுள்ளது வடகு என்றாகி, பின் வடுகு எனத் திரிந்தது. "வடதிசை மருங்கின வடுகு" (காக்கைபாடினியம்) "வடவடுகர்வாளோட்டிய" (புற. 378) என்ற பழந்தொடர்களிலே, வடுகு என்பது வடக்கடிபாகப் பிறந்தது என்பது

*மத்தியகாலத்திலே தெலுங்கர் என்றும் வழங்கியதுண்டு; "சேனை மடி களங்கண்டு திகைத்து நின்றேந் தெலுங்கரேம்" என்று சயங்கொண்டார் பாடுதல் காண்க (கலிங்கத் 12. 158). பிற்காலத்தில் இவ்வடுகர் என்பதை ஆந்திரரில் 'பலிஜர்' க்குத் தமிழர் வழங்குவர்.

குறிக்கப்படுதல் காண்க. தொல்காப்பியப்பாயிரங் கூறுமாறு, வேங்கட மலைக்கு வடக்கணுள்ளபூமி இவ்வடுகர்தேசமாகவே கடைச்சங்கநாளி னுங் கருதப்பட்டது. இதனை,

"ஒங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்...
வானிணைப் புகவின் வடுகர் தேஎத்து" (அகம், 213)

"புடையலங் கழற்காற் *புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎய மிறந்தன ராயினும்" (ஷை. 295)

என்ற தொடர்களால் நன்கறியலாம். இவ்வடுகர் என்ற சொல்லைக் கன் னடரில் ஒருசாரார்க்குச் சிறுபான்மை தமிழ்மக்கள் வழங்கியதுமுண்டு; "வடுகர் பெருமகன் பேரிசை யெருமை......குடநாடு" (அகம் 115, 253) எனக் காண்க. இவ்வாறு ஆந்திரருங் கன்னடரும் வடுகர் என்ற பொதுச்சொல்லாற் சங்கநாளிற் கூறப்பட்டதுகொண்டு, அவ்விருவரும் அக்காலத்தே வேறன்றி ஓரினத்தவராயிருந்தனரென்றும், அவ்விருவர் பேசிவந்தபாஷையும் ஒன்றாய் வடுகு என்ற பெயர்பெற்றதாகல்வேண்டு மென்றும், பிற்காலத்தேதான் கன்னடம் பிரிந்து தனிமொழியாயிற் றென்றும் †அறிஞர்சிலராற் கருதப்பட்டுள்ளது. ஆனால்—

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்" (சிலப். 25, 156).
"கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடரும்" (ஷை. 26, 106)

எனச் சங்ககாலத்தவரான இளங்கோவடிகள், கன்னடமொழிபேசும் மக் களைக் கருநாடர் எனத் தனியே கூறுதலாலும்,

"கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம்" (அகத்தியம்)
"கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்" (நன். 272 மயிலை.)

எனத் தமிழ்நாட்டைச்சூழ்ந்த நிலங்களிலே, கன்னடந் தெலுங்குகள் பயிலுநாடுகள் பிரித்தெண்ணப்படுதலாலும் முற் கூறிய அறிஞர் கொள்கை முடிவுடையதாகத் துணியக்கூடவில்லை.

---

*புல்லி குன்றம்—கள்வர்தலைவனாகிய புல்லிக்குரிய வேங்கடம்.
†The Tamils 1800 years ago, p. 29.

இனி, மைசூர்-ராஜ்யத்தின் வடபாகத்துக்கும், பல்லாரி அனந்த புரம்ஜில்லாக்களின்பகுதிகட்கும் படகநாடு என்ற வழக்குண்டு என்பது, அப்பக்கங்களிலுள்ள கன்னடர்க்கு படகவாரு, படகநாட்டிவாரு என்ற பெயர்கள் இன்றும் வழங்குவதால் விளங்குவதென்றும், இது வடுகநா டென்பதன் திரிபாமென்றும், அகநானூற்றில் நக்கீரனால்,

"நேரா வல்லேரள் வடுகர் பெருமகன்
பேரிசை யெருமை நன்னாட் டுள்ளதை
அயிரியா றிறந்தன ராயினும்,, (253)

என்ற அடிகளிலே, வடுகர்பெருமகனான எருமையென்பவனுக்கு உரிய தாகவும், அயிரி என்ற நதியையுடையதாகவுங்கூறப்பட்ட குடநாடு என் பது இப்படகநாட்டைக் குறிப்பதென்றும், அயிரியென்பது அந்நாட்டி லோடித் துங்கபத்திரையோடு கலக்கும், அகிரிநதியே என்றும், பழைய மௌரிய ஏகாதிபத்தியத்தின் தெற்கெல்லையாயிருந்தது இப்படகநாடே என்பதற்கு அசோகசாஸனம் ஆங்குள்ளதே சான்றுமென்றும் தெரிய வருகின்றன.* இங்ஙனமாயின், தமிழ்நாட்டின் வடபாலுள்ள தெலுங்கரும், மேல்பாலுள்ள படகக் கன்னடரும் வடுகரென்று பொதுப் பட வழங்கப்பட்டனர் என்பது பெறப்படும்.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
*பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்தொகை, 11.)

என்ற மாமூலனார்வாக்கில், கட்டியென்பவனது நாட்டிற்குமப்பால் வடுகர் முனையையுடைய மொழிபெயர்தேயம் உள்ளதென்று கூறப்படுகின்றது. கட்டியரென்பவர் சங்கநாளில் வலிமைபெற்றிருந்த ஒருசார் சிற்றரசர்; †பல்வேற்கட்டியர்'(சிலப். 25. 157; குறுந். 11), 'கங்கன்கட்டி'(அகம்.44),

---

*வடுகர் விஷயமாக நான் உசாவிவந்தபோது, சாஸனபரிசோதகரும் என் நண்பருமான ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதியவர்கள் B. A., இவ்வபிப்பிரா யங்களைத் தெரிவித்தனர். இவை, அறிஞரது ஆராய்ச்சிக்கு உரியனவேயாம்.

†'பல்வேற்கட்டி' என்ற பாடத்தை 'வல்வேற்காட்டின்' என்று கொண்டு பழவேற்காட்டைத் தமிழ்நாட்டெல்லையாகச் சரித்திர மெழுதிச்செல்வாரும் உளர். 'பல்வேற்கட்டியா' (சிலப். 25. 157) என்றதொடர் முன்னூலிற் பயில்வ தோடு, கட்டியர் என்றவர் தமிழ்நாட்டினெல்லைப்புறத் தாண்டவராக நூல்களிற் காணப்படுவதாலும், யான்கூறிய பாடம் ஏடுகளிற்கண்டதாதலாலும், அதுவே கொள்ளத்தக்கதென்க.

'போரடுதானைக்கட்டி' (ஷை 226.) என்ற பழந்தொடர்கள் காண்க. விஜயநகரவரசர்காலத்தும் அதன்பின்பும் கட்டிமுதலியார்கள் என்று பிரபலராய் விளங்கிய தலைவர்கள் இக்கட்டிமரபினராகவே கருதற்பாலர். இன்னோரது ஆட்சிக்குட்பட்ட நாடு தமிழ் கன்னட தேசங்களினிடைப்பட்ட சேலம் ஜில்லாவிற் பாதிக்குமேற்பட்டிருந்தது. மற்றும் இவர் வரலாறுகள் சரித்திரநூல்களால்* அறியத்தக்கன. தமிழ்நாட்டெல்லையில் இக்கட்டிநாடுள்ளதாக மாமூலனார் கூறியவாறே, அவர் மரபினரான கட்டிமுதலியார்நாடும் பிற்காலத்தமைந்திருந்தமை அறியத்தக்கது. இக்கட்டிநாட்டுக்கும் அப்பாலுள்ளதாகக் குறுந்தொகை கூறும் வடுகர்முனையென்பது, மேற்கூறிய படகர்நாட்டைக் குறிப்பதாகவே கொள்ளவிடமுண்டு.

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" (அகம் 107.)
"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)
"கற்றுரிக் குரம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)

எனச் சங்கச் செய்யுள்களினும்,

"வடுக வேடுவர்......ஆறலைக்கு மிடம்" (முருகன் பூண்டித்தேவாரம்.)
"வடுகர்வாழ் முருகன் பூண்டி" (ஷை.)

எனச் சுந்தரமூர்த்திநாயனாரால், கொங்குநாட்டுத் திருமுருகன்பூண்டித் தேவாரத்துங் கூறப்பட்டவர்கள், இப்படகநாட்டுள்ள அல்லது அங்கிருந்து வந்தேறிய கன்னடவேடராகவே கருதத்தகும். வேம்பத்தூரார் திருவிளையாடலில், மூர்த்திநாயனார்காலத்து மதுரையை வென்று கைப்பற்றிய சமணவரசனை, 'கருநாடர் மன்னன்" என்று கூறிய அதனாசிரியர், அவனையே மற்றோரிடத்து "வடுகவேந்தன்" என்று பாடுகின்றார்.† இதுவும் மேற்கூறியவற்றோடு சேர்த்து ஆராயற்பாலது. இப்போது நீலகிரியில் வாழும் படகர் என்ற கூட்டத்தார் மைசூரின் வடபாலினின்று ஆங்கு வந்தேறியவராகச் சொல்லப்படுதலால்‡ அவரும் இப்படகநாட்டவரேயாதல்வேண்டும்.

---

*Gazetteer of Salem District, Vol. I, p 69; Vol. II p. 262-69.

† 'பஞ்சவற்றுரந்து, மதுரை வவ்விய கருநடவேந்தன்' எனக் கல்லாடத்து (57) கருநடவரசனாகவே கூறப்பட்டுள்ளது.

‡ Gazetteer of Nilgiri District p. 128.

தமிழகத்தைச் சூழ்ந்த நிலங்களிலே, கன்னடம் வடுகு தெலுங்கம் என்பவை தனித்தனி நாடுகள் என்று நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 400 உரை), நன்னூற் பழையவுரைகாரரும் (272 மயிலை. உரை) கூறுகின்றனர். இவ்வாறு தெலுங்குநாட்டின் வேறாக வடுகநாடென்று எண்ணப்படுவது, மேற்கூறிய படகநாட்டைக் கருதியதாகக் கொள்ளலாம். அன்றேல், ஆந்திரதேசத்தின் வடபாகம் தெலுங்கம் என்றும், அதன் தென்பாகம் வடுகு என்றும்—செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற தமிழகப் பகுப்புப்போல—ஆந்திரமும் இருவேறாகத் தமிழரால் முற்காலத்து வழங்கப்பட்டது என்று கருதல்வேண்டும். எவ்வாறாயினும், பிற்காலத்துத் தமிழ்மக்களெல்லாம் அவ்வேறுபாடு சிறிதுங் கருதாது, ஆந்திரபாஷையையும் அதன் மக்களையுமே, வடுகு வடுகர் என்ற சொற்களால் வழங்கிவரலாயினர்;

"சிலவடுகும் பலதமிழுங் குழறித்தரு கருநாடியர்" (கலிங். பரணி).

"வடகலை தென்கலை வடுகு கன்னடம்" (கம்பர்)

"கருநாடகச் சந்தமும்.........வடுகச் சந்தமும்" (யாப். வி.)

"வடுக ரருவாளர் வான்கருநாடர்" (நன். மயிலை).

என்ற தொடர்களால், தெலுங்கும் வடுகும் வேறல்ல என்பது தெளிவாதல் காண்க.

இனி, வடுகர் என்ற பெயரை ஆந்திரமக்கள் தங்கட்குள் வழங்கினவர் என்பதற்கு ஆதாரங் கிடைக்கவில்லை. அவ்வாறே, அரவர் என்ற பெயரைப் பழைய தமிழ்மக்கள் தங்கள் பெயராக வழங்கினரில்லை. ஆனால் 300- ஆண்டுகட்குமுன்னிருந்த அகராதிநிகண்டு நூலார் மட்டும், இச்சொல்லை 'அரவரென்பது தமிழராகும்' என்று எடுத்தாண்டனர். அரவம் என்ற வடசொற்கு, ஒலி என்பது பொருளாயிருத்தல் கொண்டு, ஆந்திரர்க்குத் தமிழ் வெற்றொலியாகவே கேட்கப்பட்டமை பற்றி அதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று என்று தெலுங்கர் சிலர் பொருள் கூறுவதுண்டு. இது விநோதமான விற்பத்தியேயாகும். பழைய ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிவந்த பெயர் அருவர் என்பதேயன்றி அரவர் என்பதன்று. கலிங்கத்துப்போரிலே அந்நாட்டுச் சேனைகள் சோழர்படையைக்கண்டு 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிநடுங்கியது என்பதைக் கூறவந்தவிடத்தே, சயங்கொண்டார்—

"அருவர்! அருவர்!!" என விறைஞ்சினர்
அபய மபய மெனுந டுங்கியே"

என்று பாடுகின்றார். இவ்வாறே, சோழர் நடத்திய அப்பெரும் போரைப்பற்றிய பழைய வெண்பாவொன்றும்,

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரேன வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது."

என்று தண்டியலங்காரத்தில் மேற்கோள் காட்டப்பட்டுளது. இப்பிரமாணங்களிலிருந்து, அருவர் என்பதே ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிய பழைய பெயரென்பது வெளியாம். தெலுங்கு தேசத்தை ஒட்டியுள்ள தமிழகத்தின் பகுதிகள், அருவா, அருவாவடதலை என்ற நாடுகளாம். இந்நாட்டாரை அருவாளர் என்பது பழைய தமிழ்வழக்கு. தம் பக்கத்து வாழும் தமிழராகிய இவ்வருவாநாட்டாரையே, வடுகர் முதலில் அருவர் என வழங்க, அதுவே தமிழர்க்கெல்லாம் உரிய பொதுப்பெயராக வழங்கலாயிற்று என்று, அச்சொற்கு உற்பத்திப் பொருள்கொள்வதே நேரானது என்று கொள்க.

இனி, தமிழரும் வடுகரும் முற்காலத்தும் பிற்காலத்தும் எவ்வகைத் தொடர்புகொண்டிருந்தனர் என்பதை நோக்குவோம். இத்தொடர்பை மூன்றுபகுதியாகக்கொண்டு ஆராய்ச்சிசெய்தல் தகும். முதலாவது—தமிழரும் ஆந்திரருந் தம்முள் அதிக மாறுபாடுகொள்ளாது வாழ்ந்த காலமாகும். இரண்டாவது—தமிழர் ஆந்திரரின் மேம்பட்டு ஆண்ட காலமாம். மூன்றாவது—ஆந்திரர் தமிழரைமேற்பட்டு ஆண்ட காலமாகும்.

இவற்றுள், முதற்பகுப்பு, சங்ககாலத்துக்கு உரியது. சங்கச் செய்யுள்கள் என்றுவழங்கும் பழைய தமிழ்நூல்களை ஆராய்வோமாயின் தமிழகத்தின் எல்லைப்பக்கங்களிலே சிறு கலகங்கள் நடந்திருக்கக்கூடுமேனும், பெரும்பகைமை அவர்க்குளிருந்ததாகவேனும், அதனாற் பெரும் போர்கள் விளைந்தனவாகவேனும் வெளியாகவில்லை.

"மூரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு" (அகம். 281)

"சோழர் பெருமகன்...இளம் பெருஞ் சென்னி
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலே சவட்டி" (ஷை. 375)

என்ற தொடர்களிற் கூறப்பட்ட வடுகர், மௌரியர் நன்னன் என்பவர்க்குத் துணையாகவந்த படகநாட்டுக் கன்னடராகத் தோற்றுகின்றனரேயன்றி, ஆந்திரநாட்டவராகத் துணியக்கூடவில்லை. இனித் தமிழரசராகிய சேரசோழபாண்டியர் மூவரும், வடவேங்கடந் தென்குமரிக்கு உட்பட்ட நிலத்தைத் தாண்டி, வேற்றுமொழி பயிலும் நாடுகளைத் தங்கீழ்ப்படுத்தியாளச் சிறிதும் எண்ணங்கொண்டவர்களல்லர். 'தமிழ் கூறுநல்லுலகமே' தங்கள் தேசம் என்ற அபிமானம் அவர்க்குள் மிகுந்திருந்தமையால், அந்நியபாஷை வழங்கும் நிலப்பகுதிகளைத் தமிழகத்துடன் கலப்பதில் அவர்கள் வெறுப்புக்கொண்டவராயிருந்தனர் என்றே சொல்லலாம்.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பவ்வமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு" (சிலப்)

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல்)

"தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலே யிறந்தே" (அகம்)

"பனிபடு சோலே வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (ஷை)

"கட்டிநன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்)

எனவருந் தொடர்கள் இக்கருத்தையே குறிப்பிடக்கூடியன. ஆனால், அந்நியரான வடவேந்தர் தமிழ்நாட்டுட்புக முயன்றகாலங்களிலே, தமிழ் மூவேந்தரும் ஒருங்குதிரண்டு, தமிழகத்தில் அவர்களைத் தலேநீட்டவு முடியாமற் றடுத்துவந்தனர். அதனால், திக்குவிசயஞ்செய்து போராற்றல்வாய்ந்திருந்த வடவரசர்க்கும் தமிழ்நாடு என்றால் விலகிநிற்க வேண்டியதாயிற்று. பரதகண்டம் பெரும்பான்மையும் ஒருகுடைக்கீழ் வைத்தாண்ட அசோகசக்கரவர்த்திகாலத்தும் தமிழராற்றல் ஓங்கியிருந்ததென்பது, அவ்வரசர்பெருமான் தமிழ்மூவேந்தரையுந் தன்னேடொத்தவராகக்கருதி நட்புமுறையில் அவர்களிடந் தூதர்களை அனுப்பிப்

போந்த செய்தியால் தெரியலாம். மௌரிய ஏகாதிபத்தியம் தமிழகத்தின் எல்லைக்குமப்பால் மைசூர்ப்பிராந்தியத்தை ஒட்டியிருந்தது என்ற விஷயமும் அறியத்தக்கது. பிற்காலத்தே பிரபலம்பெற்றெழுந்த குப்த-ஏகாதிபத்தியமும் தமிழ்நாட்டைத் தன்னுட்கொண்டதாகவில்லை. ஆகவே, சங்ககாலத்தே, தமிழ்வேந்தர், பாஷை நடைமுதலியவற்றால் வேறானமக்களை அடக்கியாள முயலாததோடு, தம் நாட்டில் அந்நியர் பிரவேசிக்கவும் இடங்கொடுத்திலர் என்ற விஷயந் தெளிவாயிற்று. அங்ஙனமே, அக்காலத்து வடுகரசரும் தமிழ்நாட்டை ஆளமுயன்ற செய்திக்குச் சங்கநூல்களிலும் ஆந்திரத்திலும் ஆதாரங்காணப்படாமையால், அவர்களும், முற்காலத்தே தமிழருடன் அமைதிபெற்றிருந்தவரென்றே சொல்லத்தடையில்லை.

இங்ஙனமிருந்த தமிழர்-வடுகரது நிலைமை, சங்ககாலத்துக்குப்பின்பே மாறுவதாயிற்று. இம்மாற்றத்திற்குக் காரணமும், அவ்விருவருமன்றி, வடக்கிலிருந்து படையெடுத்துவந்த வேற்றரசரேயாவர். பல்லவர் சளுக்கர் என்ற வடவேந்தர், ஆந்திரங் கன்னட முதலிய தேசங்களை வென்றடிப்படுத்திய காலங்களில் அவர்கள் பேராசை தமிழ்நாட்டையும் கவர்ந்தது. அதுமுதலே தமிழர்க்கும் வடவர்க்கும் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் நடந்த போர்ச்செய்திகள் மிகுதியாகக் கேட்கப்படுகின்றன. இறையனார்களவியலுரையிற்கண்ட பாண்டிக்கோவைப்பாடல்களும், ஆழ்வார்முதலியோர் பாசுரங்களும், சிலா தாமிர சாஸனங்களும் இச்செய்திகளை விளக்கக்கூடியன. பல்லவர் தமிழ்நாட்டில் வேரூன்றிய காலத்தில் அவர்க்கும் வடுகர்க்கும் நடந்த போர்களுமுண்டு.

"முலைபொழி தீம்பால் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பரிசிலைத் தொண்டைப் பல்லவ னாணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுர நீங்
கடந்து கொண்ட பல்லா நிரையே." (தொல். பொ. 55, நச். உரை.)

என்ற பழையபாட்டில் 'தொண்டைநாடாண்ட பல்லவனுடையசேனை, பகைவராகிய வடுகரது போரிலே கவர்ந்துவந்த பசுக்கூட்டங்கள், உலகத்தை ஊட்டிக் காக்கக்கூடியவை' என்ற கருத்துப்படப் பாடப்

பட்டிருந்தல், மேற்கூறிய போர்ச்செய்தியைக் காட்டும். இப்பல்லவரைப் போலவே, சளுக்கியவேந்தரும் பின்பு ஆந்திரதேசத்தில் வேங்கிநாட்டில் தம் அதிகாரத்தைத் தாபித்து, ஆந்திரரென்று சொல்லும்படி ஆயினர். இவர்களுடன் பெரும்போர்களைச் சோழர்கள் தெலுங்குதேசத்திலே சென்று நடத்தவேண்டியதாயிற்று. முதல் இராசராசன், முதல்இராசேந்திரன் முதலிய சோழர்கள் நடத்திய அப்போர்விவரங்கள் சாஸனங்களால் தெரியவருகின்றன. இவ்வாறு நடந்த போர்களொன்றில், வீர ராஜேந்திரன் என்ற சோழன், வேங்கிநாட்டை வென்று விஜயாதித்தன் என்ற சளுக்கரசனுக்கு அளித்துதவினன் என்று சரித்திரத்தால் அறியப்படுகின்றது.* வீரசோழியவுரையில்—

"வேங்கை வளநாடன் விசயவா டைக்கதிபன்
ஒங்கு புகழுதயா தித்தனுக்குத்—தாங்குகடல்
நேராமென் றூலு நிறத்தா லவன்செய்யன்
காரார் நிறமக் கடல்."

என்ற பழஞ்செய்யுளொன்று உதகரிக்கப்பட்டுள்ளது. இதனிற் குறிக்கப்பட்டவரசன், மேற்கூறிய உதவிபெற்ற விஜயாதித்தனே அன்றி, வேறொரு சளுக்கரசனே ஆதல்வேண்டும்.

இனி, சோழர்க்கும் வேங்கியரசரான சளுக்கர்க்கும் நடந்த இப்போர்களினின்றும் மற்றொரு விசேடமும் ஏற்பட்டது. அஃதாவது—சோழர்கள் தங்கள் பெண்களை அச்சளுக்கியர்க்கு மூன்று தலைமுறைகளாக மணம்புரிவித்து இருவரும் உறவுகொண்டாடிவந்ததேயாகும். கீழைச்சளுக்கியரில் முதல்வனாகிய விமலாதித்தன் என்பவன் (கி. பி. 1015–1022) முதல் இராஜராஜசோழன்மகள் குந்தவையையும், அவன்மகன் சளுக்கிய ராஜராஜநரேந்திரன் என்பவன் (1022—1061) கங்கைகொண்டசோழன்மகள் அம்மங்கதேவியையும், மேலைச்சளுக்கியரில் விக்கிரமாதித்தன் என்பவன் வீரராஜேந்திரசோழன்மகளையும் மணம்புரிந்துகொண்டவர்களென்பது தெரியவருகிறது.† இத்தகைய சம்பந்தங்களால் ஆதியிற் பகைமைகொண்டிருந்த அவ்வரசரிருவரும் சமாதானம் பெறலாயினர். அன்றியும், இக் கீழைச்சளுக்கிய சம்பந்த

*சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம், பக். 25.

† Ibid p. 25.

மானது, முடிவில், ஆந்திரதேசத்தையே தமிழரது உரிமைநாடாகவும் ஆக்கிவிட்டதென்பது இங்கு அறியத்தக்கது. எவ்வாறெனில்—முற்கூறியவாறு, இராஜேந்திரன்மகள் அம்மங்கதேவியை மணம்புரிந்துகொண்டு ஆந்திரதேசத்தை ஆண்டுவந்த சளுக்கிய ராஜன் கி. பி. 1062-ல் இறந்ததும், அவன்மகன் இராஜேந்திரன் என்பவன் அந்நாட்டுக்கு அரசனாயினன். அப்போது, சோழராஜ்யத்துக்கு வமிசமின்றிக் குழப்பம்நேரவே, தானே அந்தராஜ்யத்துக்குத் தௌகித்திரபாத்தியங் கொண்டாடி அதனைக் கைப்பற்றிக்கொண்டு சோழசிம்மாஸனத்தில் கி.பி. 1070ல் ஏறினன்*. அதனால் தமிழ்நாடுகளையெல்லாம் உள்ளடக்கிய சோழஏகாதிபத்தியத்துக்கும் ஆந்திரதேசத்துக்கும் இவன் அதிபதியானன். இவனே—அபயன், விஜயதரன், குலோத்துங்கன் முதலிய பெயர்கள் பெற்ற சோழன். தந்தைவழியால் சந்திரகுலத்துச் சளுக்கியவமிசத்தவனாகவும, தாய்வழியால் சூரியகுலத்துச் சோழவமிசத்தவனாகவும் இவன விளங்கினமையால், 'உபயகுலோத்தமன்' என்றும்,

"இருண்முழுது மகற்றும்விது குலத்தோன் றேவி
யிகல்விளங்கு தபனகுலத் திராச ராசன்
அருடிருவின் றிருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையி லவதரித்தா னவனே மீள"

"திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றும்
செய்யபரு திக்குழவி யையனிவ னென்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே".

என்றும் இவன்காலத்துப் புலவர்பெருமக்களாற் புகழ்ந்துகூறப்படுவன். இக்குலோத்துங்கன் பெருவீரனானமையால் தெற்கிலும் வடக்கிலும் பல தேசங்களைவென்று பகையரசரெல்லாம் நடுநடுங்கும்படி செய்துவந்தான். ஒருகால், கலிங்கநாட்டரசனான சோடகங்கன் என்ற அனந்தபதுமன் தனக்குரிய திறையைக் கொடுக்க மறுத்தமைபற்றித் தன்சேனாபதியாகிய கருணாகரத்தொண்டைமானைக்கொண்டு அக்கலிங்கத்தின்மேற் படையெடுத்துவென்று அதனைத் தன்கீழ்ப்படுத்தினன். இப்பெரிய வெற்றியே, சயங்கொண்டார் என்ற புலவர்பெருமானியற்றிய

* Ibid. p. 31, 32.

கலிங்கத்துப்பரணி என்ற நூலாற் சிறப்பித்துப் பாடப்படுவது. தன் மகன் வீரசோழன் விக்கிரமசோழன் எனபவர்களை வேங்கிநாட்டின் பிரதிநிதிகளாகவைத்துத் தான் கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து சோழ ஏகாதிபத்தியத்தை ஆட்சிபுரிந்துவந்தனன். இவன் கி. பி. 1117—ல் இறந்ததும், இவன்மகன் விக்கிரமசோழன் பட்டமடைந்தான். இவன்காலத்தும் இவன்மகன்—இரண்டாங்குலோத்துங்கன், பேரன்—இராசராசன் II காலங்களிலுமே, ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பர், புகழேந்திபோன்ற பெரும்புலவர்கள் விளங்கினர். இவ்வரசரெல்லாம் தமிழ் ஆந்திரமென்ற இரண்டுதேசங்கட்கும் அதிபதிகளாக ஆட்சிபுரிந்த வர்களே. இவர்களாட்சியில், சோழவமிசத்தைச்சேர்ந்த தலைவர் பலர் ஆந்திரதேசங்களிற் பிரதிநிதிகளாய் அமைய, அவ்வமிசத்தவர், வேல நாண்டுச்சோழர், போத்தப்பிச்சோழர் முதலிய பெயர்களுடன் ஆந்திர தேசப்பகுதிகளை ஆண்டு முடிவில் ஆந்திரர்களாகவே ஆனார்கள். இவர் களைப்பற்றிய ஆந்திர நூல்களும் உண்டென்பர்.

மேலும், இக்காலத்துத் தமிழ்ப்புலவர்கட்கு ஆந்திரநூல்களில் ஆராய்ச்சியுமிருந்தது. உத்தேசம் 10, அல்லது 11ம் நூற்றுண்டில் இயற் றப்பட்டதாகச் சொல்லக்கூடிய யாப்பருங்கலவிருத்தி என்ற அரிய பெரிய உரைநூலிலே ஆந்திரபாஷையிற் பழைமையாக வழங்கிவந்த யாப்பிலக்கணநூலொன்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை, அவ்விருத்திநூலுள்—"இவற்றை யெல்லாம்...குணகாங்கி* என்னுங் கருநாடகச் சந்தமும், வாஞ்சியார்செய்த வடுகச்சந்தமும் ஆகியவற்றுள் ளும், மாபுராணமுதலாகிய தமிழ்நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுக்கொள்க." எனவரும் வாக்கியத்தால் அறியலாம். இதனால், கன்னட ஆந்திரபாஷைகளில் அமைந்த யாப்புநூல்களிலும் பண்டைத் தமிழ்ப்புலவர்க்கு ஆராய்ச்சியிருந்தமை புலப்படுகின்றதன்றோ? வடுகச் சந்தநூல்செய்தவர் வாஞ்சியார் என்று அச்சுப்பிரதியிற்காணப்படுகின்ற தாயினும், ஏட்டெழுத்துமுறையில் "அவரஞ்சியார் செய்த வடுகச்சந்த மும்" என்றும், படிக்கக்கூடியதாகின்றது. தக்க தெலுங்குப்பண்டிதர் களை விசாரித்தவளவில், இத்தகைய பெயருடைய ஆந்திரவாசிரியரையும்

---

*"குணகாங்கியம் என்னுங் கருநாடகச் சந்தமே போலவும்' என்று, யாப் பருங்கலக்காரிகையுரையிற் காணப்படுகின்றது.

அவர் நூலையும்பற்றி ஒன்றும் இப்போது தெரியவரவில்லை. ஆந்திர பாஷையில் மிகப்பிராசீனமான யாப்புநூலொன்றிருந்தது என்ற அரிய செய்தி 11-ம் நூற்றாண்டுத் தமிழ்மக்களது எழுத்திலிருந்து வெளியாவது, ஆந்திரமக்கள் அறிந்து மகிழத்தக்கதாம். எப்போது ஒருபாஷை யாப்பிலக்கணத்தைப் பழமையாகவே கொண்டுள்ளதோ, அப்போதே இலக்கியவளத்தையும் அது பெற்றிருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். நன்னயபட்டர்க்குமுன்பு வழங்கிய தெலுங்குநூல்கள் காணப்படாமையால், அப்பாஷை, அவர் காலமாகிய 11-ம் நூற்றாண்டுக்கு முன்பு இலக்கியவிலக்கணவளம் பெற்றிருந்ததில்லை என்று கருதப்படுவதற்கு இடமில்லை என்பது இதனால் விசதமாகக்கூடியது. இது நிற்க.

மேற்கூறிய விஷயங்களால், திராவிட ஆந்திரதேசங்கள், சோழர் பிராபல்யமிகுந்திருந்த இரண்டு நூற்றாண்டுகள்வரை இராஜாங்கசம்பந்தத்தால் பின்னிக்கிடந்தன என்பது விளங்கியது. 'வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்' என்று இலக்கணநூல்களில் அடிக்கடி பயிலுந்தொடர், சோழர் ஆந்திரரின்மேம்பட்டு விளங்கிய இக்காலத்தெழுந்த வாக்கியமாகவே கொள்ளத்தக்கது. இந்நிலைமை 12-ம் நூற்றாண்டுமுடிய நின்றது. 13-ம் நூற்றாண்டிலே, சோழரது வலிமைகுன்றவே, ஆந்திர தேசமும் பிறவும் அவர்கள் கையைவிட்டு நழுவுவனவாயின. இவ்வாறாவதற்குக் காரணம் மேற்கே ஓரங்கல் (Warangal) நாட்டில் காகதீயவரசர் வலிமைபெற்றோங்கியதேயாகும். இவர்களில் முதற்பிரதாபருத்திரன் என்பவன் (1162–1197) மிகப்பிரபலனாய்ச் சோழராட்சிக்கு உட்பட்டிருந்த வேங்கிநாட்டைத் தன்குடைக்கீழ்க் கொண்டுவந்தான். இவன் காலத்துச்சோழன், முதற்குலோத்துங்கனுக்குக் கொட்பேரனான இராசராசன் (II) என்பவன். இவன் நாளில்தான் கம்பநாடர் என்ற கவிச்சக்கரவர்த்தி விளங்கினர். எக்காரணத்தாலோ இப்புலவர்க்கும் இராசராசனுக்கும் பிணக்கம்பகை முற்றியதென்றும், அதனால் அச்சோழனுடன் கோபித்துக்கொண்டு, கம்பர் சோணாட்டைவிட்டகன்று, மேற்கூறிய பிரதாபருத்திரனைக்கொண்டு அவனையடக்கவெண்ணி, அவனிடஞ் சென்றனரென்றும் தெரியவருகின்றன. "கம்பர் பிரதாபருத்ரனிடத்திற்போய் அவன் அடைப்பைகட்டிவரப் பாடியவெண்பா" என்ற தலைப்புடன் உள்ள பழைய செய்யுளொன்று தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுவது வருமாறு:—

"அவனிமுழு துண்டு மயிரா வதத்தன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா நின்னுடைய ஓங்க ணாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்."

'பூமியிலுள்ளாரெல்லாம் வந்துண்ணுவதாலும், அயிராவதம் போலும் பட்டத்தியானையின்மேல் நீ பவனிவரும்போது உன்னைப் பார்த்த பருவமாதர்கள் காமவெப்பம் ஆற்றுமற் குளிர்ச்சிக்காகப் பரப்பிப் படுத்தலாலும், அரசே! உன்னுடைய நாட்டில் வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்பது இதன்பொருள். 'வாழைகள் குருத்தில்லாமற் போயின' என்று தக்கசந்தர்ப்பமொன்றிற் கொடுக்கப் பட்ட ஸமஸ்யையைச் சமயோசிதமாகப் பாடிமுடித்துக் கம்பநாடர் அப்பிரதாபருத்திரனை மகிழ்வித்தனரென்பது இதனால் புலப்படு கின்றது. இவ்வாறு வலிமை பெற்ற ஆந்திரவேந்தனிடஞ் சென்று தம் பெரும்புலமையால் அவனை வசப்படுத்தி அழைத்துவந்து சோழன் முன் அவன் தனக்கு அடைப்பைகட்டிநிற்கும் பெருநிலைமையைக் காட்டித் தம்மாற்றலைப் புலப்படுத்தினர் அப்புலவர்பெருமான் என்பது தெரியலாம். ஆயின் இங்ஙனஞ் செய்த புலவரைப்பற்றி எத்தகைய வெண்ணம், சோழன் கொண்டிருத்தல்கூடும்? அப்புலவரால் தனக்குப் பகைபரசன் விளைக்குங் கேடு திண்ணம் என்பதை அறிந்த அவன், கம்பநாடரைக் கொல்லக் காலம்பார்த்துக்கொண்டே, அவரிடம் நட் புடையவன்போல நடித்துவந்தான். அதனை உண்மையாகக் கருதிச் சோழனுடன் பழகிவந்த கம்பர் ஒருகால் அரண்மனைக்குட் புகுந்தபோது அவன் அவ்விடத்துக் கட்டப்பட்டிருந்த புலியொன்றை அவிழ்த்து விடச்செய்ய, அஃது அவர்மேற் பாய்ந்துவந்தநிலையிலே அவன் அப்புலியை எய்பவன்போலக் கம்பரையே தன்னம்பால் எய்துவீழ்த்தித் தன் பகைமையைத் தீர்த்துக்கொண்டனன். அம்புபாய்ந்து வீழ்ந்த அப்புலவர்பெருமான், உள்ளநிகழ்ச்சியை அறிந்துகொண்டு, சோழனை நோக்கி,

"வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி"

என்று சபித்துப் பாடினர். தெய்வப்புலவராகிய இவர்வாக்கின்படியே, சோழவமிசம், இவ்விராசராசனுக்குப்பின்பு, வலிகுன்றிச் சிலதலைமுறைகளுள் நிலைகுலைந்ததென்பதைச் சரித்திரபூர்வமாக நாம் நன்கறியலாம். பிரதாபருத்திரனைக் கம்பர் தம் வாக்குவன்மையால் வசப்படுத்தி அவன் தமக்கு அடைப்பைகட்டிவரச்செய்த செய்தியையே, சோனைக்கொண்டு அவர் அவ்வாறு செய்வித்ததாகவும், அம்புபட்டிறந்தவன், கம்பரன்றி அவர்மகன் அம்பிகாபதி எனறும் இக்காலத்தார் மாற்றிக் கதைபெழுத அவையே இப்போது உண்மைச்செய்திகள்போல வழங்கிவருகின்றன. இது நிற்க. மேற்கூறிய சரித்திரத்தினின்றும், தமிழ்ப்பெரும்புலவர்களையும் ஆந்திரவரசர் ஆதரித்துப் பெரிதுங் கௌரவித்துவந்தசெய்தி நன்கு விளங்கும். கம்பநாடர் பிரதாபருத்திரனிடஞ் சென்று வந்தனரென்பதற்கு ஏற்ப, அவரருளிச்செய்த இராமாவதாரமென்று பெயர் கொண்ட இராமாயணத்திலே,

"தாண் மிடைந்தன தம்மீ மிடைந்தென"

"அக்கட விராவணற் கமைந்த வாற்றலே"

"மசரத மனையவர் வாழும் வாழ்வும்"

எனவருந் தொடர்களில் தம்மி (=தாமரை), அக்கட (=இரக்கக்குறிப்பு) மல (=மாயை, பொய்; மசரதம்—பொய்த்தேர், கானல்) என்ற தெலுங்குச்சொற்களை அப்புலவர் பிரயோகித்தல் அவர் தெலுங்கருடன் பழகி வந்தவரென்பதைக் குறிப்பிக்கக்கூடியதன்றோ?

இனிச் சோழர் ஆதிக்கங்குன்றிய இரண்டுமூன்றுநூற்றாண்டுகட்குப்பின்பு, தெலுங்கர் தமிழரைக் கீழ்ப்படுத்தியாண்ட காலவிசேடத்தைக் காணலாம். சோழர் ஆதிபத்தியத்தின்கீழ் அமைந்த சிற்றரசர்களும் தலைவர்களும், அத்தலைமையரசாங்கம் நிலைகுலையவும் தாமே பெரியவுஞ் சிறியவுமான நாடுகட்குச் சுவாதீனத் தலைவர்களாயினர். அக்காலத்தே வடக்கிலிருந்து வேகமாகப் படையெடுத்துவந்த துருக்கவரசர் ஆந்திரநாட்டிலும் தென்னாட்டிலும் புகுந்து சூறையாடினர். அப்போது, தென்னாட்டின் சநாதனதர்மங்களைக் காப்பதற்கென்றே விஜயநகர ராஜ்யம் உதயமாயிற்று. 14-ம் நூற்றாண்டில் ஆரம்பமான அம்மஹாராஜ்யத்தின் பலபராக்கிரமங்களால் தென்னாடுமுழுமையும் பாதுகாக்கப்பட்டவாலாறு, சரித்திரவறிஞரெல்லாம் நன்கறிந்ததே, அவ்விஜயநகர—

ஏகாதிபத்திபத்தை அம்பி (Hampi) மாநகரிலிருந்து ஆண்டுவந்த அரசர்களும் அவர்பிரதிநிதிகளும், தமிழ்நாட்டவரிடத்தும் அந்நாட்டுத் தேவாலயங்களிடத்தும் அபிமானமும் ஆதரவும் மிகுந்துள்ளவரா யிருந்தனர் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. அவ்வரசர் பெருமக்களிலே, மல்லிகார்ச்சுனராயர் (1449—1465), விருபாக்ஷராயர் (1466—1485) காலங்களில், தமிழ்நாட்டின் இராசப்பிரதிநிதியாய் அனுப்பப்பட்டு ஆட்சிபுரிந்துவந்தவர், சாளுவத்திருமலைராயர் என்பவர். தென்னாட்டிற் பலவருஷம் அப்பதவியை நிர்வகித்துவந்த இவர், தமிழில் அறிவுடையராயிருந்ததோடு, தமிழ்ப்புலவர்களிற் சிறந்தவர்களைப் பெரிதும் ஆதரித்தும்வந்தனர். இவர்காலத்திற்றான் காளமேகப் புலவர் என்ற ஆசுகவிச்சிங்கம் விளங்கியது. திருமலைராயர்சபைக்குக் காளமேகம் முதலில் எழுதிவிடுத்ததாகத் தமிழ்நாவலர்சரிதையிற் கண்ட பாடல் அடியில்வருமாறு:—

"தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்
பலசந்த மாலை சொலவும்
சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்
றொகைபெற வகுத் தோதவும்

பாதஞ்செய் மடல் கோவை பத்துநா ழிகையினிற்
பரணியொரு நாண்முழுதுநீள்
பாரகா வியமெலா மீரிரு தினத்தினிற்
பகரக் கொடிக்கட்டினேன்

சீதஞ் செயுந்தொங்கன் மார்பிலு னியவிசை
தெரிந்த திருமலைராயன்முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரு
திருட்டுக் கவிப்புலவரைக்

காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
காத்திட் டடித்தமுதுகிற்
கலனைவைத் தேமுகக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநானே."

தம் ஆசுகவித்திறமையை இவ்வண்ணம் புகழ்ந்துகூறிய காளமேகத் தின் தற்புகழ்ச்சியில் நம்பிக்கைகொள்ளாது அவ்வுண்மையையறியத் திருமலைராயர் பல வருத்தும்வழிகளாலுஞ் சோதிக்கலாயினர். அங்ங னம் சோதித்தவிர்தலைக் குறிக்கும் செய்யுட்கள் தனிப்பாக்களாக

வழங்குதலைப் பலரும் அறிவர். இச்சோதனைக் கெல்லாம் அப்புலவர் அஞ்சாது நின்று தம் பெருங்கவித்திறமையைக் காட்டவே, அரசன் வியப்பும் உவப்பும் அடைந்து அவர்க்கு வேண்டிய வரிசைகளையும் கௌரவங்களையும் அளித்துச் சிறப்பித்தனன். இங்ஙனம் திருமலைராச ரால் வறுமைநீங்கித் தாம் பெருமைபெற்றதை அடியில்வருமாறு அப் புலவர் அழகுபடப் பாடுகின்றார்—

"இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்
அங்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வாள்

அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலமதாகு மமுதினைக் கொள்வோம்
ஆரெனை யுலகினி லொப்பார்

சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்

மந்தர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினுற் குபே ரனுக்கினு னவனே
மாசிலீ சாவனு வானே"

உடுத்த ஆடை பல துளைக்கண்கள் உடையதென்பார் 'இந்திரன் கலையாயிருந்தான்' என்றும், பசி வயிற்றைவிட்டு நீங்கிற்றில்லை என்பார் 'அக்கினி உதரம் விட்டகலான்' என்றும், சிவனதுபிக்ஷாடனரூபத்தைக் கொண்டு திரியும் என்பால்வர யமன் அஞ்சினன் என்பார் 'எமனெனைக் கருதான் அரனெனக்கருதி' என்றும், இவர்களே இந்நிலையரானபோது, ஒரு பெண்பாலாள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பார், 'நிருதிவந் தென்னை யென்செய்வாள்' என்றும், வறுமைத்துயரால்வரும் நீர் கண் களைவிட்டொழியவில்லை என்பார் 'வருண னிருகண்விட் டகலான்' என்றும், வாயுவே தன்குடும்பத்திற்கு ஆகாரமாயுள்ளது என்பார் 'அநிலமதாகுமமுதினைக்கொள்வோம்' என்றும், இங்ஙனம் திக்குப்பாலக

ரில் அறுவர் தம்வசமாயிருத்தலால், 'ஆரெனையுலகினிலொப்பார்' என்றும், முடிவில் இவ்வருத்தங்கள் நீங்கத் தம்மைக் குபேரசம்பத்தில் வைத்தவன் திருமலைராயனானதால் அவனை ஈசானனாகிய சிவபிரானென்றும் கூறினர்.

"இய லிசை தெரிந்த திருமலைராயன்' என்று புலவர்பாடுதலால், அத்தலைவர் தமிழறிவிற் சிறந்தவராயிருந்தமை பெறப்படும். மேற்குறித்த பாடலினின்று, சாளுவவமிசத்துக் கோப்பயன் என்பவரது புத்திரர் திருமலைராசர் என்பது தெரியலாம். திருவானைக்காக் கோயிலின் தெற்குத்திருமதிலில் உள்ள சாஸனமொன்று* கோபராஜன் குமாரரான சாளுவத்திருமலைராசர் சகாப்தம் 137...-ல். ஸ்ரீமுக-ஹூ ஜம்புகேசுவரர்க்குத் திருவாபரணமொன்று அளித்ததாகக் கூறுகின்றது. அக்காலத்துக்குச் சரியான கிறிஸ்தவாப்தம் 1453-ஆகும். இதனால், காளமேகப்புலவரை ஆதரித்த திருமலைராசரைப்பற்றியதே அச்சாஸனம் என்பதும், அவ்விருவரும் 15-ம் நூற்றாண்டின்மத்தியில் வாழ்ந்தவரென்பதும் தெளிவாதல் காண்க. கல்யாணி என்பது சாளுவவரசரது பூர்வகுடிப்பெயரும் விதரணராமன் என்பது அவரது பட்டப்பெயருமாகச் சாஸனங்களிற் காணப்படுகின்றன என்பர். இங்ஙனம் தம்மைப் பெரிதும் ஆதரித்த அரசனுடைய ஊரை மண்மாரியால் அழியும்படி புலவர் பாடினரென்று பிற்காலத்தார் எழுதிப்போந்தகதை உண்மையுடையதாகாதென்றே கொள்க.

இனி, இக்காலத்துக்குப்பின்பு ஆந்திரவரசர்களும் தமிழ்ப்புலவர்களை நேரே அபிமானித்த செய்தி தெரியவருகின்றது. விஜயநகரவேந்தர்களிலே கிருஷ்ணதேவராயர் என்பவரே (1509—1529) மிகப் பிரபலராக விளங்கியவர். இவர்காலத்தில் விஜயநகர ஏகாதிபத்தியம், ஆந்திர கன்னட தேசங்களையும் தமிழகத்தையுந் தன்னுட்கொண்டதாயிருந்தது. இவ்வரசர் அறிவு திரு ஆற்றல் என்ற மூவகைச் சம்பத்தும் நிரம்பினவர். தாமும் பெரிபகவியாய்ப் பல கவிசிரேஷ்டர்களையும் ஆதரித்தவர். கோயில்களும் குளங்களும் இவர்காலத்துப் போலப்பட்டும் பெருகியும் வந்ததுபோல வேறெக்காலத்தும் நிகழவில்லை. மற்றும்

* Ep. Rep. 67 of 1903 (Inscriptions of Madras Presidency. pp. 1560.

இவரது அருமைபெருமைகளையெல்லாம் இங்கெடுத்துக்கூறின் மிக விரியும். ஆயினும், சந்தர்ப்பத்துக்குப்பொருந்த ஒன்றை இவ்விடத்துக் கூறல் தகும். அஃதாவது இவர் தமிழ்ப்புலவர்களையும் பெரியோர்களையும் அபிமானித்து ஆதரித்துவந்தமையேயாம். இதற்குச் சில சான்றுகள் கூறுவோம்.

ஒட்டரதேசத்தைக் கடகநகரில் (Cuttack) இருந்தாண்ட கஜபதியரசனாகிய பிரதாபருத்திரன் (1497–1540) என்பவன், தமக்கு அடங்காதிருந்ததனால், கிருஷ்ணதேவராயர் உத்தேசம் 1515-ல், அவனாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்றதோடு, அவ்வரசன் மகளாகிய துக்கா என்ற மாதை மணம்புரிந்துகொண்டனர் என்பது அவ்விராயரது பிரசித்தசரித்திரங்களுள் ஒன்று. இது நிகழ்ந்த காலத்தே அவ்வரசர்பிரானுடனிருந்த குமாரசரசுவதி என்ற தமிழ்ப் புலவர் அத்திருமணத்தைச் சிறப்பித்துப்பாடியிருத்தல் அறியத்தக்கது. அவர் பாடலாவது—

"கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மான கிருஷ்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்."

எனக் காண்க. இப்பாட்டில், உனக்குத் தோல்வியுற்ற ஒட்டரதேசத் தரசனைப்போலவே, அவன் பெண்ணும், கலிங்கம் நுதிக்கைச்சங்கம் கடகமென்னும் இவற்றை உன்முன் நெகிழவிட்டாள் என்று சிலேடை நயம் பெறப் பாடப்பட்டுளது. 'ஒட்டியன் கலிங்கதேசத்தையும், நுதிக்கையுடைய யானைக்கூட்டத்தையும்* கடகம் என்ற தலைநகரையும் போரில் இழந்தோடினன்; அங்ஙனம் இழக்கும்படி செய்த உன்பிரதாபத்தை அறிந்த அவன் மகளும் வீரனான உன்னையடைய விரும்பியதனால் உண்டான தன் தேகமெலிவால் தானும் கலிங்கத்தையும் (=வஸ்திரத்தையும்), நுதிக்கைச்சங்கத்தையும் (=முன்கையிலணிந்த வளைகளையும்), கடகத்தையும் (=தோள்வளையையும்) நழுவ விடலானாள்' என்று கவி சமற்காரமாகக் கூறும் அழகு அறிந்து மகிழத்தக்கதாம். இதனால், அவ்வரசரது ஆஸ்தானத்தில் பெருந்தமிழ்ப்புலவர்களும் எப்போதும்

* கஜபதியாதலின், யானைக்கூட்டங்களை யிழந்தானென்க.

இருந்துவந்தனர் என்பது விளங்குகின்றது. இக்குமாரசரசுவதி போலவே, கிருஷ்ணதேவராயரால் அபிமானித்துக் கௌரவிக்கப்பட்ட தமிழ்ப்புலவர்கள் பலர். தமிழிற் பிரபலமாக வழங்கும் சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டலபுருஷர் என்ற சமண் புலவர் இவ்வரசர்பெருமானால் ஆதரிக்கப்பெற்றவருள் ஒருவர். இவர் தம் நூற்கண்ணே 'கொடைமடம்' என்ற சொற்குப் பொருள்கூறும்போது,

> "படைமயக் குற்றபோதும் படைமட மொன்றி லாதான்
> மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
> கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிண ராயன் கைபோற்
> கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே".

என்று, வரையாது யாவர்க்குங் கிருஷ்ணராயர் வழங்குவதுபோலக் கொடுப்பதே; அத்தொடர்மொழியின்பொருள் என்கின்றார். இவ்வாறு பாடுதல், அவ்வேந்தரது கொடைப்பெருமையைத் தாமும் நேரிலறிந்தனுபவித்தவர் என்பதற்குத் தக்க சான்றுமன்றோ? மண்டலவர் புகழ்ந்த இக்கிருஷ்ணராயரை, இரட்டவரசனான கிருஷ்ணன் என்று சிலர் கருதிவருவது தவறும் என்பது, பங்களூரிற்பிரசுரமாகும் 'மிதிக்-ஸொஸைடி' பத்திரிகையில் யான் ஆங்கிலத்தில் எழுதுவித்த வியாசத்தால் நன்கு விளங்கக்கூடியது.* இனி, இவ்வரசர்பெருந்தகைமேல் வேளாண்மரபினராகவும் துறவியாகவும் விளங்கிய ஞானப்பிரகாசர் என்ற பெரியவரொருவர்,† 'மஞ்சரிப்பா' என்றபிரபந்தம் பாடியிருந்தார் என்றசெய்தி—

---

* ஷை பத்திரிகையிலே, ஸ்ரீ கே.ஜி. சங்கர ஐயரவர்கள் என் கொள்கைகளை மறுத்தெழுதிய விஷயத்தைப் பார்வையிடலானேன். தக்க காரணங்களுடனும், தமிழ்ச்சரித்திரவழக்கு சொற்பொருள்வழக்குக்களில் ஆராய்ச்சி காட்டியும், அம்மறுப்புரை எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அவற்றை விரித்தெழுதுவதற்கு இது சந்தர்ப்பமன்று. மண்டலவர், இரட்டவரசனான கிருஷ்ணன் காலத்தவரென்பது முன்னரே தீர்ந்தவிஷயமென்று அவர்களெழுதியதன் கருத்து விளங்கவில்லை. என் கொள்கைக்குக் கூறப்பட்ட காரணங்களைத் தக்கவாறு பரிசிலனைசெய்யும் தமிழறிஞரெவரும் அவ்வபிப்பிராயங்கொள்ளாரென்பது திண்ணம்.

† கிருஷ்ணதேவராயர் மந்திரிகளுள் ஒருவரான அம்பி—அறம்வளர்த்த முதலியாரால், வேளாளர்க்குக் குருவாக நியமிக்கப்பட்டவர் இவரென்பர். (அபிதானசிந்தாமணி).

"வானப்ர காசப் புகழ்க்கிருட்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே."

என்னுந் தொண்டைமண்டலசதகச் செய்யுளால் வெளியாகின்றது. இப்பிரபந்தம் இப்போது கிடைத்திலது. இதுவன்றித் தேவாலயங்களிலும் தர்மஸ்தாபனங்களில் அதிக்கிரமங்கள் நடந்தால், அவற்றைத் தமிழ்ப்பெரியோர்களும் புலவர்களும் தம்மரசராகிய கிருஷ்ண தேவர்க்குச் செய்யுள்மூலமாக அறிவித்து வந்திருக்கின்றனர். திருவாரூர்க் கோயிலில், திருவிழாவை ஒழுங்காகநடத்தாமலே, பட்டர்கள் கொடியிறக்கப்புக, அதனைக்கண்டு மனஞ்சகியாமல் சைவத்துறவியும் புலவருமாகிய தத்துவப்பிரகாசர் என்பவர்—

"மருவுபுகழ்க் கிருட்ண மகராச ராணை
அரிய [1]வடமலையா ராணை—திருவாரூர்ப்
[2]பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே."

என்று கொடியிறக்கவொட்டாமல் அரசாணைகூறித் தகைந்துவிட்டு, அப்பட்டர்களுடைய அதிக்கிரமச்செய்கையை,

[3] "ஊழித் துலுக்கல்ல வொட்டியான் மூனுமல்ல
வீழித் [4]துலுக்குவந்து மேலிட்டே—யாழி[5]
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிட்டிவாரா யா."

[1]வடமலையார் - கிருஷ்ணதேவராயருடைய தலைமையமைச்சராய்க் கீர்த்தி பெற்ற சாளுவ-திம்மவரசு (திருமலைராசர்) என்று தோற்றுகிறது. [2]தியாகராசருடைய உற்சவங்களிலே 'பாகற்கொடியறுத்தல்' அல்லது 'பாகல்வேட்டை' என்ற திருவிழாவைப்பற்றித் திருவாரூருலா 421-ம்கண்ணி, அரும்பதவுரையுள் மகாமகோபாத்தியாய-ஐயரவர்கள் எழுதிய குறிப்பு அறியத்தக்கது. [3]கிருஷ்ண தேவர் பட்டமடைவதற்குமுன், ஒட்டியரும் துருக்கரும் சேர்ந்துபிரவேசித்துத் தென்னாட்டையலைத்துவந்தமையால், 'ஊழித்துலுக்கல்ல ஒட்டியான்மூனுமல்ல' எனப்பட்டதென்க. [4]திருவீழிமிழலையிலிருந்து ஸ்வாமிபூசனைபுரிந்துவந்த பட்டரது தீச்செயல்நோக்கி, அவரை 'வீழித்துலுக்கர்' என்றாரென்க. [5]திருவாரூர்த் தேர்க்கு 'ஆழித்தேர்' என்ற பெயர்வழங்குமென்பர்.

என்று கிருஷ்ணதேவராயர்க்கு எழுதிவிடுத்தனர் என்றும், உடனே இராயர் அக்கோயிற்பட்டர்களை மாற்றிவிடக் கட்டளையிட்டனரென்றும், அப்போது அவர்களை நோக்கித் தத்துவப்பிரகாசர்—

"உண்ட வயிற்றி லுமிக்காந்த விட்டதே
தொண்டரே வீழித் தலுக்கரே—பண்டெல்லாம்
அப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து"

என்று இகழ்ந்து கூறினரென்றும் அறியப்படுகின்றன (தமிழ் நா.). இவ்வாறே மற்றொருகாலத்தில், அக்கோயிலிலிருந்த அறுபத்துமூவர்விக்கிரகங்களில் இரண்டை, அருச்சகரோ அதிகாரியோ ஆகிய நாகரசநம்பி என்பவர் வெட்டியுருக்கிவிட்டதை அறிந்த அத்தலத்தார், அச்செய்தியைக் கிளிக்குப் பாடப் பழக்கி, அதனைக் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு சொல்லும்படி செய்தனர் என்று தெரியவருகிறது. அப் பாடலாவது:—

"முன்னு ளறுபத்து மூவரிருந் தாரவரில்
இந்நா ளிரண்டுபே ரேகினார்—கன்னன்
நருக்குகின்றான் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான் கிட்டிணரா யா" என்பது.

இனி, சைவ வைணவ வாதங்களைப்பற்றிப் பாடப்பட்ட இருசமய விளக்கம் என்றநூலியற்றிய அரிதாசர் என்ற புலவர் இக்கிருஷ்ணதேவர் காலத்தவரென்பதும், அவரால் அபிமானிக்கப்பட்டவரென்பதும் அறியப்படுகின்றன. ஷை நூலின் பாயிரத்துள்,

"கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்ணராயர்
தரைமீது சிங்காத் திரியிற்சயத் தம்பநாட்ட
வரமா தரவா லளித்தேவட கூவமேவும்
கருமா மணிவண் ணனைநீடு கருத்துள்வைப்பாம்"

என்றுள்ள பாடலினின்று மேற்கூறிய செய்திகளை அறியலாம். கிருஷ்ணதேவராயர் *சிம்மாசலமென்ற திருமால் திருப்பதியில் ஜயஸ்தம்பமொன்று நாட்டினார் என்ற விஷயம் இப்பாட்டிற்கூறப்படுகின்றது. அவ்வரசர் நாட்டிய இத்தம்பம், நாம் மேலேகூறிய கலிங்கவரச

*விசாகபட்டணத்துக்கு வடமேற்கே 4 மைலில் உள்ளது.

னை பிரதாபருத்திரனுடன் உத்தேசம் 1515-ல் அவர்நடத்தியபோரின் வெற்றிக்குறியேயாகும். அவ்வரசரே பாடிய ஆமுக்தமால்யதா (காண். 4, பத். 290) விலும், அவரது ஆஸ்தானகவியாகிய அல்லசானி பேத்தன்னர்பாடிய மனுசரிதத்திலும் (காண். 1, பத். 36, 38) சாஸனத்திலும் (Ep. Rep. No. 74 of 1903) ஷெ ஜயஸ்தம்பத்தைப்பற்றிப் பேசப்பட்டுள்ளன என்பர்.* சிம்மாத்திரியில் அத்தம்பம் நாட்டப்பட்டதாக இருசமயவிளக்கமுடையார் கூறினும், பொட்டுனூர் என்றவூரில் அஃது அமைந்ததாகத் தெரிகின்றது. இதனால் அவ்வூரும் சிம்மாசலமும் மிகவும் அடுத்துள்ளனவாகவேண்டும் என்பதும், சிம்மாசலத்தின் அடிவாரத்தில் சிம்மாத்திரிப் பொட்டுனூர்† என்று இப்போதும் வழங்கும் ஊரே, அத்தம்பம் நாட்டப்பட்ட இடமாகவேண்டுமென்றும் கருதல் தகும். அல்லசானி—பெத்தன்னகவியும்—

"சிம்மாசலத்துத் திருமாலுடைய பிரமோற்சவத்தைச் சேவிக்கவருந்தேவர்கள், பொட்டுனூர் என்ற ஊரில் கிருஷ்ணதேவராயர்நாட்டிய ஸ்தம்பத்தின்மேல் வரைந்துள்ள சாஸனம் இன்னதென்பதைப் பார்க்கவந்து, அதனெழுத்துக்கள் தெளிவாயில்லாமையால், கலிங்க (ராசனாகிய பிரதாபருத்திர) னுடைய அபகீர்த்தியாகிய மையைத் தடவி வாசிப்பாராயினர்." (மனுசரிதம்).

என்று அழகாகப்பாடுதல், அவ்விரண்டூர்களும் நெருங்கியுள்ளனவே என்பதற்குச் சிறந்த சான்றன்றோ? சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும் பக்திகொண்டிருந்தவர் என்பது, சகஆ 1438 1411-ல் அவ்வரசர் அநேகவூர்களும் திருவாபரணங்களும் அத் திருமாலுக் களித்தனரென்று சாஸனங்கள் சிம்மாசலக்கோயிலிற் காணப்படுவதால் விளங்கக்கூடியது.

இவற்றால், கோயில்முதலிய தர்மங்களின் குறைபாடுகளை அவ்வப்போது கேட்டுத் தீர்த்து மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து வந்ததோடு, தமிழபிமானமும் உடையராயிருந்தனர் அவ் வரசர்பெருமான் என்பது பெறப்படும். பெருங் கல்விமானாகவும், சிறந்தகவியாக

*Gazatteer of Vizagapatam District, pp. 28-29, 230.

†சிம்மாசலத்துக்கு உத்தேசம் 30 மைலில் பொட்டுனூர்என்ற ஊரொன்றுமுள்ளது. அதனையே, ஷெ ஜயஸ்தம்பம் நாட்டிய இடமாகச் சரித்திரவுறிஞர் எழுதியிருப்பது பொருத்தமாகத் தோற்றவில்லை,

வும் விளங்கித் தமிழ்நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்துவந்த போரசராகிய அவர்க்குத் தமிழ்ப்பாஷையில் அறிவும் ஆதரவும் இருந்தன என்பது ஓர் ஆச்சரியமன்று. அவ்வரசர் இயற்றிய கிரந்தமாய்ப் பலரும் அருமைபாராட்டிவருவது ஆமுக்தமால்யதா என்ற ஆந்திரநூலாம். சூடிக்கொடுத்தாள் என்பதே 'ஆமுக்தமால்யதா' என்பதன் பொருள். ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தைப்பற்றி அவர் பாடியுள்ள சொற்செறிவு பொருளமைதிகளைப்பற்றி, ஆந்திரவறிஞர் புகழ்ந்து பாராட்டுவதைப் பலமுறை நான் கேட்டிருக்கிறேன். இவ்வரசர் அரசியன்முறையாற் பொதுநோக்கமுடையராயினும், சமயக்கொள்கையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தைத் தழுவியவர். இவர்க்கு ஆசாரியர் இன்னாரென்பதற்குத் தெளிவான ஆதாரமில்லையென்றும், ஆனால், இவர் பின்னோர் காஞ்சீபுரம் ஸ்ரீதாததேசிகன் திருவடிஸம்பந்திகளென்பதற்குப் பிரமாணங்களுண்டென்றும் கூறுவர். இவ நடைய கிரந்தத்தில் ஸ்ரீ ஆண்டாள்பாசுரங்களின் அருமைபெருமைகளும், தமிழ்நாட்டின் சிறப்புக்களும், நம்மாழ்வார், ஆளவந்தார், உடையவர், வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள், அஹோபிலம் ஜீயர் என்ற ஸ்ரீவைஷ்ணவ பரமாசார்யர்களின் அவதாரமகிமைகளும் அழகாகக்கூறப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. இதனால், மதரீதியாலும் திராவிடபாஷையை இவ்வரசர் கௌரவித்தவர் என்பது விசதமாகும். அன்றியும், தென்னாட்டரசியன்முறைக்கென்று, தமிழமைச்சரையும் இவ்வரசர் உடையராயிருந்தனர். அவ்வமைச்சருள் அம்பி-அறம்வளர்த்தமுதலியார் என்பவரொருவர். இம்முதலியார் அபிமானத்தைத் தமிழரசர்களும் அக்காலத்து எதிர்பார்த்தவராயிருந்தனர். பாண்டியனொருவன், இவர்மேற் கலம்பகமொன்றுபாடினனாக, 'அவ்வாறுபாடியது தகுமா?' என்பதுபற்றி உசாவிய புலவர்க்கு விடையாக, அவ்வரசன்பாடிய செய்யுளொன்று, அடியில் வருமாறு தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுகின்றது.

'அறம்வளர்த்தமுதலியாரைப் பாண்டியன் கலம்பகம்பாடலாமோ'
என்ற புலவர்க்குக் கூறியது.

"உங்கண் மனந்தெரி யும்புல வீரொரு சீர்மரபோந்
திங்கண் மரபினர் திங்களின் கூடச்செம் பூரமா
துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றே
எங்கண் மரபுன் டெனக்கலி பாடினம் யாமவற்கே"

"சிவபிரான், திங்களுடன் கங்கையையுஞ் சடையிற் றரித்துள்ளமையால், திங்கள்மரபினராகிய எமக்கும் கங்கைமரபினராகிய முதலியார்க்கும் உறவுண்மைபற்றி, யாம் அவரைப் பாடலாயினேம்" என்பது இப்பாடற் கருத்தாதல் காண்க. [செம்பூர் அறமாதுங்கன்-செம்பூர்-அறம் வளர்த்தமுதலியார்; செம்பூர் அவரதுரிமையூரும், அம்பி (Hampi) அவர் உத்யோகப்வகித்த வூருமாகக் கொள்ளத்தக்கன]. ஒருகால் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு வேளாளமகளிரைப்போல வேஷம்பூண்டு ஆடிய கூத்தர் சிலரைக் கண்டு இம்முதலியார் பொறுமல் தங்குலத்துக்கு அவமானமாக நடித்த அவர்களை வாளால்வெட்டி மடிவித்தாரென்ற சரித்திரமும் வழங்குகின்றது. இது கி. பி. 1511-ல் நடந்ததென்று கூறுவர்*. இச்செய்தி அடியில்வரும் தொண்டைமண்டல சதகச்செய்யுளாலும் அறியத்தக்கதாம்.

> "தாளாண்மை யுள்ள புகழ்க்ருஷ்ண ராயன் சமுகத்திலே
> வேளாண் மகளிரைப் போலே விநோதித்து வேடங்கொண்டு
> கோளார் வயிரியர் கூத்தாடத் தங்கள் குடிமையெண்ணி
> வாளா லவருயிர் மாய்த்ததன் றேதொண்டை மண்டலமே."

இனி, கிருஷ்ணதேவராயர்காலத்துக்குப் பின்பு, அச்சுதசதாசிவதேவராயர்கள் நாளில் அவ்விராயவம்சத்துப் பிரதிநிதியாய்த் தென்னாட்டில் வெல்லப்படாத பகுதிகளையும் வென்று ஆட்சிபுரிந்துவந்தவர், விட்டலதேவராயர் என்பவர். இவருடைய சாஸனங்களில் 'வீரப்ரதாப மகாமண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டலதேவ மகாராஜா' என்று சிறப்பிக்கப்படுவர் (Ep. Rep. 129 of 1905). இவர், இராயராட்சிக்கடங்காதிருந்த கோளதேசத்தின் தலைநகராகிய அனந்தசயனத்தின் மேல் கி. பி. 1543-ல் படையெடுத்துச் சென்றனரென்றும், இவரது சேனைகள் தெற்கே கன்னியாகுமரிமுதல் வடக்கே நைஸாம் ராஜ்யத்து முத்துகல்வரையுமுள்ள பிரதேசங்களை வென்றடிப்படுத்தின என்றும் சொல்லப்படுகின்றன. இவர் கன்னியாகுமரிக்குப் படையெடுத்துச் சென்று வென்றதற்கு அறிகுறியாக, அக்குமரிப்பக்கத்துச் சுசீந்திரம்—விஷ்ணுகோயிலிலுள்ள சாஸனமொன்று கொல்லமாண்டு 722—(கி.பி. 1546—47)ல் இவர் பிறந்தநாளன்று அர்ச்சனை நடத்திவருதற்கென்று, அந்நாட்டரசனாகிய பூதல வீரராமவர்மாவால் சிலபொருள்கள் வைக்கப்

---

*தொண்டைமண்டலசதகவுரை.

பட்டதைக் கூறுகின்றது.* . இங்ஙனம், விட்டலதேவராயர் கன்னியாகுமரியைநோக்கிப் படையெடுத்துச் சென்றதையே, அப்போதிருந்த பாண்டியனொருவன்—

"தொட்டி லிருக்கத் தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதென் செப்பு."

என்று பாடியிருக்குஞ்செய்தி, தமிழ்நாவலர்சரிதையாற் றெரியலாம். இதனால் இவ்விட்டலதேவரும் தமிழறிவும் அபிமானமும் உடையரா யிருந்தவர் என்பது பெறப்படும்.

இங்ஙனம் தென்னாட்டின் சநாதனதர்மங்களையும் தர்மஸ்தாபனங்களையும் பாதுகாத்துவந்து அதன் வாழ்த்துக்கு உரியதாய் விளங்கிய மகாராஜ்யமானது, 1565-ல் நடந்த தலைக்கோட்டைப் பெரும்போரிலே, நிலைகுலைந்துவீழ்ந்தது. இது தக்ஷிணதேசத்தின் பெருந்துரதிர்ஷ்டமேயாம். அவ்வேகாதிபத்தியம் நிலைகுலையவே அதன் பிரதிநிதிகளாய்த் தென்னாடாண்ட தலைவர்களும் வலியவர்களும் சிறியவும் பெரியவுமான இராஜ்யங்களை ஆங்காங்குத் தாபித்துக்கொண்டனர். அப்படித் தாபிக்கப்பெற்ற அரசுகளிலே மதுரை நாயகராஜ்யத்தை ஈண்டுக்குறிப்பிடல் தகும். பாண்டியர்கட்குப் பின்பு இம்மதுரையம்பதியைத் தலைநகராகக்கொண்டு, பல தலைமுறைகளாக விஜயநகரவேந்தரின் பிரதிநிதிகளாய் ஆட்சிபுரிந்துவந்த இவ்வரசர்களுள்ளே திருமலைநாயகரே (1623–1659) சிறந்தவர். பெரும்புகழாளராகிய இவர்காலத்தே கோயில்களும் குளங்களும்செழிக்க மதுரையே புதுப்பிக்கப்பட்டசெய்தி பலரும் அறிந்தது. இவர்காலத்தில் தமிழ்ப்பெரும்புலவர்களும் சிறப்பிக்கப்பட்டனர். குமரகுருபரமுனிவர், தாம் ஸ்ரீமீனாட்சியம்மைபேரிற் பாடிய பிள்ளைத்தமிழை இவ்வரசர்திருமுன் அரங்கேற்றுவித்தனரெனபதும், அப்போது "தொடுக்குங்கடவுட்பழம்பாடல்" என்றசெய்யுள்வர, அதன் அருமைப்பாட்டுக்கு வசப்பட்டு ஸ்ரீமீனாட்சியே ஒரு பெண்குழந்தை வடிவாக ஸபையில் எழுந்தருளியிருந்து கேட்டுவந்து மகிழ்ந்தனளென்பதும் பிரசித்தமானசரித்திரம். அம்முனிவர் இயற்றிய மீனாட்சியம்மை குறம் என்ற மற்றொரு பிரபந்தவிறுதியில்—

---

*Tinnevelly Gazetteer. pp. 59.

"சீர்வாழி தென்மதுரை நின்மலனு ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே"

என்று அம்முனிவர் திருமலைநாயகரை மனமாரவாழ்த்துதலும் அறியத்தக்கது. நாயகவரசர் பூர்வத்திற் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவர்என்று சொல்லப்படுதலால், 'கச்சிநகர்த்திருமலைபூபதி' எனக் கூறப்பட்டனர் என்க இவர் முன்னோருள் ஒருவராகிய கிருஷ்ணவீரப்பர் (கி. பி. 1572) என்பவரும் இவ்வாறே கூறப்படுதலை, "அன்னவ னரசர்சூழுங் கச்சிவீ ரப்பனென்னும்—மன்னவன்" என்னும் சுந்தரபாண்டியப்பாயிரத் தொடராலும், 'கதிக்கும் பரமன்னர் பொன்னூர் முடிகளைக் காலி லெற்றி—மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்கிட்ண வீரப்பனே"என்ற மதுரைத் திருப்பணிமாலைத் தொடராலும் அறியலாம். நிற்க. நாயக வரசர்கட்கு உள்ளடங்கிய தென்னாட்டுப் பாளையப்பட்டுக்கள் 74-ல் பாதிக்குமேல் தெலுங்கத்தலைவர்கள் ஆட்சியைச் சேர்ந்தவை. இத்தலை வர்களிற் பலர் தமிழறிவுடையராய்த் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர்களே. கூளப்பநாயகன்காதல், விறலிவிடுதூது போன்ற சில்லறைப்பிரபந்தங்கள் பல இன்னோர்காலங்களில் எழுந்தவைகளாம். இத்தலைவர்களிலே எட்டயபுரத்தரசர்கள், தமிழறிவும் ஆதரவும் மிக்குடையவர்களாயிருந்தன ரென்பது, அவர்களைப்பற்றிப் புலவர்கள் பாடிப்போந்த தனிப்பாடல்களி னின்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாந்திரவரசர்களும் வலிமைகுன்றிய சிலகாலத்திற்கெல்லாம், இவர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி மகமதியராஜாங்கம் மேலோங்கியது. அமைதிக்கே இடமின்றியொழிந்த இக்காலங்களில், தமிழ் வளர்ச்சிக்கு இடமில்லையென்று நாம் துக்கப்படநியாயமேயில்லை. பிறகு, ஆங்கில ஸாம்ராஜ்யம், நம் சென்னையிலிருந்து தொடங்கிப் பரதகண்ட முழுதும் வியாபிக்கவே, எங்கும்போல நம்நாட்டிலும் அமைதியும் நல்வாழ்வும் ஏற்பட்டுள்ள விஷயம் நாம் நன்கறிந்தது.

தமிழ்மக்கள் ஆந்திரதேசத்தை ஆண்ட காலங்களிலும் ஆந்திர மக்கள் தமிழகத்தை ஆண்ட காலங்களிலும் பாஷை நடையுடைகளாலும் மனோபாவங்களாலும் அவ்விருவரும் பெரிதும் கலப்புற்றிருக்கவேண்டு மென்பது, சொல்லாமலே அமையும். ஆந்திரகவிகளில் நூற்றுக்கணக்

கானவர், தமிழகத்தினின்று ஆந்திரதேசத்துக் குடியேறியவராகவும் திராவிடதேசத்தவராகவும் உள்ளனர் என்று, சிலஆண்டுகட்குமுன் இம் மதுரைமாநகரிற் கூடிய "ஆந்திரஸாஹித்திய பரிஷத்" என்ற மகாசபை யில் அதன் அக்கிராசனாதிபதி வெளியிட்டனராம். இச்செய்தி, அவ்விரு நாட்டார்க்கும் இருந்த சம்பந்தத்தை நன்குவிளக்குவதன்றோ? சில நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டின் பலபாகங்களிலுங் குடியேறிவந்த ஆந்திரமக்களுள்ளே, பெரியோர்களும் வித்வான்களும் பலர் விளங்கி யிருந்தனர். இவர்களால் தென்னாடு அடைந்த பயன்களிலே, ஸ்ரீதியா கையர் என்ற மகானால் கர்நாடகசங்கீதத்துக்கே ஒருபுதுத்தோற்றமுங் கிளர்ச்சியும் உண்டானசெய்தியை இங்கே குறிப்பிடல் தகும்.

ஆங்கில ஸாம்ராஜ்யத்தின் மாகாணப்பிரிவுகளிலே திராவிடபாஷை கள் என்று கூறப்படும் தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னடம் என்ற பெரும் பாஷைகள் வழங்குந் தேசங்கள் ஒருதொகுதியாக அமைக்கப் பட்டுள்ளன. இத்தேசப்பிரிவைச் சென்னைமாகாணம் என்று, இட வமைதிபற்றிப் பெயர்கூறுவதினும், 'திராவிடமாகாணம்' என்று பாஷைபமைதியைக்கொண்டு வழங்குவது மிகவும் பொருந்துவது எனலாம். பாஷைகள் வழங்கும் முறையாகவே தேசங்கள் பிரித்தாளப் படவேண்டும் என்ற கிளர்ச்சி சிலகாலமாக ஆந்திரமக்கட்குள் அதிகமாக உண்டாயினும், இப்போது அமைந்துள்ள மாகாணப்பிரிவு, பூர்வசரித் திரமுறைக்கு ஒத்ததாய் மேற்குறித்த நான்கு திராவிடமக்களை நெடுங் காலம் ஒருசேரவைத்து ஒற்றுமைப்படுத்தி வந்திருக்கிறதென்பது திண் ணம். இவ்வொற்றுமைக்கு, இன்று அக்கிராசனம் வகிக்கும் நம் வித்யா விலாகா—மந்திரியாரும் ஒரு சாட்சியாவர். சென்னைமாகாணத்தின் வடகோடிநாட்டினராகிய இவர், செந்தமிழ்நாட்டின் தலைநகரில் அமைந்த தமிழ்ச்சங்கத்தை அபிமானித்து, இன்று அதன் வருஷக் கூட்டத்தின் தலைமைவகிப்பது, நான் மேலே கூறிப்போந்த ஆந்திரத் தலைவர்களுடைய சரித்திரத்தை ஞாபகப்படுத்துகின்றது. ஆந்திரத் தலைவர்கள் தமிழை அபிமானித்தாதரித்தது புதியதன்று எனபதும், இதுபோலும் சம்பந்தம் என்றுமிருந்து பரஸ்பரம் பாஷைமுதலிய வற்றுக்குப் பேருதவி அமையவேண்டும் என்பதுமே இவ்வுபந்நியா சத்தை இம்மகாசபையில் யான் எழுதிப் படித்ததன் நோக்கம். இத்தகைய தொடர்பு நீடு வாழ்வதாக.

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

22-23-ம் வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சிவிவரம்.

நிகழும் ரக்தாக்ஷி-ஸூ ஆனிமீ ௧௨, ௧௩உகளில் நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டு இருபத்துமூன்றும் வருடக்கொண்டாட்டம், இம்மதுரைமாநகரில் ஸேதுபதிஉயர்தரக்கலாசாலைக்கட்டடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாளாகிய ௧௨உ மாலை ஐந்துமணிக்கு ஸபைகூடியது. அதற்குச் சென்னை வித்தியா இலாகா மந்திரியும், சென்னைச் சருவகலாசங்கத்துப் புரோசான்சலருமான கனம் பொருந்திய ஸ்ரீமான் ஸர். பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள், இச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியும் தமிழ்வள்ளலுமான மாட்சிமை தங்கிய ராஜராஜேசுவர முத்துராமலிங்கஸேதுபதிமன்னரவர்கள், ஸ்ரீமான்களான இடையகோட்டை ஜமீந்தாரவர்கள், கடலூர் ஸப் ஜமீந்தாரவர்கள், மாம்பாறை மைனர்ஜமீந்தாரவர்கள், தோட்டப்பநாயக்கனூர் ஜமீந்தாரவர்கள், மதுரை ஜில்லாநீதிபதி V. S. நாராயணையரவர்கள், ஸப்ஜட்ஜ் பாஷ்யமையங்காரவர்கள், ராமநாதபுரம்ஜில்லா நீதிபதி, கிருஷ்ணஸாமி ஐயரவர்கள், ஸப்ஜட்ஜ் சவுரிராஜுலுநாயுடு அவர்கள், மதுரைஜில்லா இன்கம்டாக்ஸ்ஆபீஸர், ராமநாதபுரம்ஜில்லா இன்கம் டாக்ஸ்ஆபீஸர், கள்ளர் ஸ்பெஷல் ஆபீஸர் ராஜாஐயரவர்கள், மதுரை ஜில்லா போலீஸ் டெப்டி சூபரிண்டெண்டு கற்பகவிநாயகம்பிள்ளையவர்கள், மதுரை நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டையரவர்கள், M. T. சுப்பிரமணியமுதலியாரவர்கள், P. T. ராஜன் அவர்கள், A. ரெங்கஸாமி ஐயரவர்கள், K. இராமையங்காரவர்கள், ஸோமசுந்தரபாரதியவர்கள். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள், V. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள், N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், R. கணபதிஐயரவர்கள், மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள், விபுலாநந்தசுவாமிகள், ஸேதுஸமஸ்தானவித்வான் ரா. இராகவையங்காரவர்கள், சென்னை லெக்ஸிகன்கமிட்டி தமிழ்ப்பண்டி

தர், மு. இராகவையங்காரவர்கள், திருச்சி நேஷனல்காலேஜ் ஸ்தாபகரு ளொருவரான சுந்தரசாஸ்திரிகள், திருச்சிநேஷனல்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், செந்தமிழ்ப்பத்திராதிபர் தி. நா. நாராயணையங்காரவர்கள், மஹிபாலன்பட்டிவித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள், V. முத்துஸாமிஐயரவர்கள் M.A., L.T., (நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர்), சென்னை அடையாற்று நேஷனல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பண்டித அ. கோபாலையரவர்கள், கீழக்கரை ஸையதுமஹம்மது ஆலிம் புலவரவர்கள், M. அப்பாய் நாயுடு அவர்கள், P. R. ரங்கஸாமிநாயுடு அவர்கள், S. S. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்காரவர்கள், தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் பண்டித ஹரிஹரையரவர்கள், ஷை கலாசாலை உபாத்தியாயர் சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள், திருமெய்யம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் நெடுவை திரு. ராமஸ்வாமி ஐயங்காரவர்கள், மதுரை அமெரிக்கன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஆ. கார்மேகக்கோனாரவர்கள், திருவையாற்று ஸம்ஸ்க்ருத கலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் சந்தானமையங்காரவர்கள், இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வி. திருஞானசம்பந்தக் கவிராயரவர்கள், கண்டாமாணிக்கம் தமிழ்ப்பண்டிதர் வ. மு இரத்திநேசுவரையரவர்கள், மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், ஸேதுபதிஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பண்டித அரங்கராமாநுஜபிள்ளையவர்கள், கோநகர்க் கற்பகவிநாயககலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஆழ்வாரையங்காரவர்கள், திருவரங்கம் T. சுதர்சனாசாரியரவர்கள் முதலிய உள்ளூர்வாசிகளும் வெளியூர்வாசிகளும் விஜயம் செய்திருந்தனர்.

முதலில் இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருஞானஸம்பந்தக்கவிராயரவர்களும், திருவையாற்று ஸமஸ்க்ருதகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சந்தானமையங்காரவர்களும் கடவுள்வாழ்த்துப்பாடினார்கள். பின்னர், தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள், ஷை கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத். சு நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய மங்கலவாழ்த்துப்பாடலைப் படித்தார்கள், அதன்பின் மதுரை அமெரிக்கன்

காலேஜ் ஸம்ஸ்க்ருதபண்டிதர் ஸ்ரீமத் ராமநாதசாஸ்திரிகள் தாம் இயற்றிய ஸ்வாகதபத்திரிகையைப் படித்தார்கள்.

அதன்மேல் ஸபையாரின் சார்பாக, மாட்சிமைதங்கிய ஸேதுபதி மன்னரவர்கள், கனம் பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள் தகுதியை எடுத்தியம்பி அவர்களை அக்ராசனராயிருக்குமாறு வேண்ட, அவர்கள் அக்கிராசனத்தமர்ந்தார்கள். பின்னர் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் ஸ்ரீமான்களான சென்னை C. P. ராமசுவாமி ஐயரவர்கள், மண்டபம் மரைக்காயரவர்கள், சிங்கம்பட்டி ஜமீந்தாரவர்கள், வடமொழிவியாசபாரதத் தமிழ்மொழிபெயர்ப்புப்பதிப்பாசிரியர் எம். வி ராமாநுஜாசாரியர், திருநெல்வேலி A. மஹாலிங்கையரவர்கள் (B A.), சென்னை திருவொற்றியூர் K. சதாசிவச்செட்டியாரவர்கள் (B.A.), K. C. வீரராகவையரவர்கள் (M A, L T), சென்னை பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் இ. வை. அநந்தராமையரவர்கள், யாழ்ப்பாணம்வித்துவான் ஆ. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள், காரைக்குடி தனவைசியஊழியன் பத்திராதிபர் ராய. சொக்கலிங்கம்செட்டியாரவர்கள் முதலியோர் சங்கக்கொண்டாட்டத்துக்குவரமுடியாமையை அறிவித்துத் தமிழ் நன்குசிறந்துவளம்பெறவும், சங்கக்கூட்டம் இனிதுநிறைவெய்தவும் பிரார்த்தித்து வாழ்த்தியனுப்பிய தந்திகளும் கடிதங்களும் சங்கத்தின் அறிக்கைப்பத்திரமும் படிக்கப்பட்டன.

அதன்பின்னர் விஜயஞ்செய்திருந்த கனவான்களில் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், மதுரைத்தலவிசேடத்தையும் கூடலென்பது சங்கத்துக்கு முற்காலத்தார் இட்டுவழங்கிய தமிழ்ப்பெயரென்பதனையும், ஸேதுபதிகள் புலவர்க்களித்த பெருங்கொடைகளையும், செந்தமிழ் அரியவிஷயங்கள்பலவற்றைப் பலர்க்கும் உதவியதென்பதையும், தற்காலக்கல்விமுறையிலுள்ள கேட்டினையும், முற்காலக்கல்விமுறையிலுள்ள நன்மையையும், தற்காலத்திற்கல்விபயில்வோர் பெரும்பாலும் பட்டத்தையும் பதவியையுமே கருதிக்கற்கின்றனரென்பதையும், சங்கத்திற்பயின்ற மாணவரின் திறமையையும் நன்குவிளக்கியும் சங்கத்தை மேலும் பலவழிகளிலும் அதிகாரிகள் அபிவிருத்தியடையும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்தியும் பேசினார்கள்,

பின்பு, ஸேது ஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள், பாத்திரசப்ரார்த்தத்தை விளக்கி, அது அவர்கள் பதவிக்கமைந்ததென்று காட்டி, அதற்கியைய அறிவு ஆற்றல் உத்தியோகம் முதலியவற்றாற் சிறந்துவிளங்கும் அக்கிராசனரின் தகுதியையும், அவர்களின் முன்னோ நடையசிறப்பையும்நன்குவிளக்கி, அவர்களை அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டிப்பேசி, தமிழ் அநாதியாயுள்ளதென்றும், சங்கம் பலவருணத்தாரும் ஏகீபவித்துக் கூடிய இடமென்றும், தமிழைவளர்த்த பாண்டியர்கள் மத்ஸ்யாவதாரத்துக்குமுன் இடிக்கொடியையுடையாராயிருந்தனரென்றும், அதன்பின் மீனக்கொடியுடையராயினரென்றும், பாண்டியரேபோலப் பின்னாளில் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வளர்த்த ஸேதுவேந்தர்கள் அறக்காவல் முதலியவற்றாலும் தலைசிறந்து விளங்கினார்களென்றும், தற்காலம் ஆங்கில கலாசாலைகளிலும் பிற இடங்களிலும் தமிழ்ப்பண்டிதர்களுக்கு மிகக்குறைந்தசம்பளமேகிடைக்கிறதென்றும், ஆங்கிலஉபாத்தியாயர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும், அது தமிழ் அபிவிருத்தியடைதற்கு ஒருவழியென்றும், கனம் அக்கிராசனரவர்கள் தமிழும் தமிழ்ப்பண்டிதர்களும் அபிவிருத்தியடைதற்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டுமென்றும் தம் கருத்தை வெளியிட்டார்கள்.

பின்பு, சுவாமி விபுலானந்தர், இக்காலத்தார்போலன்றி முற்காலத்தார் பலரும் ஜீவனோபாயத்தின்பொருட்டு வேறுவேறு தொழிலுடையராய் ஆன்மார்த்தமாகப் பலநூல்களையும்பயின்று நிரம்பிய புலமையடைதலையே வழக்காறாக உடையாராயிருந்தனரென்றும், கௌரவத்தினிமித்தம் தமிழ்ப்பண்டிதர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டுவது அவசியமேயென்றும், இதனால்மட்டும் தமிழ் அபிவிருத்தியடைந்து விடாது, தமிழ் அபிவிருத்தியடையவேண்டின், எல்லாத்தொழிலாளரும், ஆங்கிலங்கற்று வேறு உத்தியோகத்துறையில் அமர்ந்துள்ளவர்களும், தமிழ்நூல்களைப் படித்துவரல்வேண்டும், தமிழ்நூல்கள் பலவற்றையும் படித்தற்கியலாதாயின், திருக்குறளொன்றையாவது முற்றக் கற்றல்வேண்டும், பிறநாட்டவர்களைப்போல நாமும் ஒருவரோடொருவர் எக்காலத்தும் எவ்விடத்தும் தமிழையே பேசிவரவேண்டுமென்றும் கூறினார்கள்.

பின்பு, மஹிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முற்கால தற்காலக் கல்விமுறையிலுள்ள ஏற்றத்தாழ்ச்சிகளையும் அந்நாளில் அரசரால் புலவரும், புலவரால் அரசரும் நன்மையடைந்து வந்தமையையும் விளக்கி, தமிழ்ப்பண்டிதர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கிடைக்கச்செய்து கௌரவிக்கவேண்டியது அவசியமேயாயினும் உயர்வு தாழ்வுகளுக்கும் இன்பதுன்பங்களுக்கும் அவரவர் மனநிலையும் தகுதியுமே காரணமென்றும் பேசினார்கள்.

அப்பால், கீழக்கரை ஸ்ரீமத். ஸையது முகம்மது ஆலீம்புலவரவர்கள், தாய்ப்பாஷையாகிய தமிழைத் தமிழரனைவரும் அவசியம் கற்கவேண்டுமென்றும், தமிழிலுள்ள அரியநூல்களைக் கற்றவர்க்கு அந்நிய பாஷையிலுள்ள நூல்கள் எளிதில் விளங்குமென்றும் ஸ்வாநுபவங்கொண்டு நிரூபித்துக்காட்டி அபிப்பிராயங் கூறினார்கள்.

அதன்பின் அக்கிராசனரவர்கள் சங்கப்பரீக்ஷைகளிற்றேறிய மாணவர்களுக்குப் பரிசுமுதலியனவளித்துச் சபையோர் மகிழுமாறு ஆங்கிலத்தில் ஒரு உபந்யாசமும் செய்தார்கள்.

அதன்பின், இச்சங்கத்தின் உபாக்கிராசனாதிபதியும், பெருங்கொடைவள்ளலும், ஆண்டிபட்டி ஜமீந்தாருமான திவான்பஹதூர் ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களின் அகால மரணத்தைக் குறித்து இரங்கி அக்கிராசனரவர்கள் ஒரு அநுதாபத் தீர்மானத்தைப் பிரேரிக்க, மதுரை வக்கீல் ஸ்ரீமத் சோமசுந்தரபாரதியவர்களும், மஹிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமத்கதிரேசச்செட்டியாரவர்களும் பெத்தாச்சிசெட்டியாரவர்கள் பேச்சுவன்மையையும் கொடைத்திறன் முதலியவற்றையும் வியந்து பாராட்டி அத்தீர்மானத்தை ஆமோதிக்கச் சபையோரனைவரும் எழுந்துநின்று அதனை அங்கீகரித்தனர்.

பின்னர் நெடுவை ஸ்ரீமத். திரு. இராமசுவாமி ஐயங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடவும் சங்கத்தின் நிர்வாகஸபையங்கத்தினரான மதுரை வக்கீல் ஸ்ரீமான். வி. எஸ். இராமஸ்வாமி சாஸ்திரிகள் அக்கிராசனர்க்கு வந்தனோபசாரங் கூறவும் இரவு 8 மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

கஙஉ-காலை 8½ மணிக்கு ஸபைகூடியது. ஸபைத்தலைவர் ஸ்ரீமான் புத்ரோ அவர்கள் வேறுகாரியமாகச் சென்றுவரத் தாமதித்தமையால்

ஸபையார் வேண்டுகோளுக்கிசைந்து மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபாநாயகராயிருந்தார்கள். ஸ்ரீமான்களான சந்தானமையங்காரவர்களும், நெடுவை திரு. இராமசுவாமி ஐயங்காரவர்களும், திருஞானசம்பந்தக் கவிராயரவர்களும் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். பின்னர் திருச்சி நாஷனல் காலேஜ் ஸ்தாபகருள் ஒருவராகிய ஸ்ரீமத் சுந்தரசாஸ்திரிகள் தாமியற்றிய மங்களஸ்லோகங்களைப் படித்துப் பொருள்கூறினார்கள். பின்னர் ஸபாநாயகரான கனம் பாத்ரோ அவர்கள் விஜயம் செய்ய அவர்களும் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களும் ஸபாநாயகர்களாக இருந்தார்கள்.

அதன்பின், சென்னை லெக்ஸிகன் கமிட்டி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் மு. ராகவையங்காரவர்கள், தாம் எழுதிய தமிழரும் ஆந்திரரும் என்ற சிறந்த பொருளுரையைப் படித்து ஸபையோரைக் களிப்பித்தார்கள். அதன்பின் ஸ்ரீமத். V. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T., (நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர்) தாம் இயற்றிய மங்களவாழ்த்துப் பாடலைப் படித்தார்கள். பின்னர், ஸபாநாயகரான கனம் பாத்ரோ அவர்கள் வேறுகாரியார்த்தமாய் வெளியே செல்லநேர்ந்தமையால் வந்தனோபசாரத்துடன் விடைபெற்றுக்கொண்டார்கள்.

அதன்பின்னர், சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடத்தைச்சேர்ந்த ஸ்ரீவிபுலானந்தசுவாமிகள் 'ஷேக்ஸ்பியரும் தமிழ் நாடக இயலும்' என்ற விஷயமேற்கொண்டு, தொல்காப்பிய முதலிய நூல்களிலிருந்து நாடக இலக்கணங்களை எடுத்து விளக்கி, அதற்குதாரணமாக ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களினின்றும் விஷயங்களை விளங்கக்காட்டியும், தமிழில் நாடகவிலக்கணநூல் நிரம்பியிருந்தும் இலக்கியங்கள் இல்லாதிருத்தலையும், ஆங்கிலத்தில் இலக்கணங்களில்லாதிருக்க இலக்கியங்கள்நிரம்பியிருத்தலையும் நன்கு புலப்படுத்தியும் உபந்யாஸத்தை முடித்தார்கள்.

பின்னர் அக்கிராசனரான மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் ஸபையிற் படிக்கப்பட்ட வியாஸத்தையும் உபந்யாஸத்தையும் பாராட்டி அவற்றைச் செந்தமிழில் வெளியிட்டால் பலர்க்கும் பயன்படும் என்று உவப்புரைகூற, 11½ மணிக்குக் காலைக்கூட்டம் நன்கு நிறைவெய்தியது.

அன்று பிற்பகல் 4½ மணிக்கு மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் ஸபாநாயகராயிருக்கமறுபடியும் ஸபைகூடிற்று. முதலில் ஸ்ரீமத் சந்தான

மையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். அதன்பின் ஸேது ஸமஸ்தான வித்வான் முத்துஸாமி ஐயங்காரவர்கள் மாணவரும், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பலபாஷைகளிற் சிறந்தபயிற்சியுள்ளவரும் ஆகிய மைசூர் ஸ்ரீமத் R. நரஸிம்மாசாரியர் இக்கூட்டத்திற் படிக்கும்படி அனுப்பிய கன்னடகவிகளின் ஜீவிய சரித்திரம் என்ற ஆங்கிலப்புத்தகத்தின் முகவுரையின் ஒருபகுதி சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களாற் படிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் இயற்றிய புவியெழுபது என்னும் செய்யுணூலிலிருந்து இடையிடையே பலகவிகளை இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள் படிக்க ஐயங்காரவர்கள் அவற்றின் பொருளை இனிதுவிளக்கினார்கள். முதலில் ஐயங்காரவர்கள், பல தமிழ்ச்சொற்கள் பின்லண்டு எகிப்து முதலிய வெளிநாடுகளில் உருவம் சிறிதும் வேறுபடாமல் வழங்கிவருவதை நிரூபித்துத் தமிழுக்கு உலகபாஷை யென்றும், வடமொழிக்குத் தேவ பாஷையென்றும் பெயர் வழக்குண்டென்றும், உலகத்தை உலகபாஷையால் துதிக்கவே இந்நூல் எழுந்ததென்றும்; இதுவே இதன்வரலாறென்றும், பூமிக்கு ஆகர்ஷணசக்தியுண்டென்பதை நியூட்டன் கண்டு வெளியிட்டானென்பது தவறென்றும், இவ்விஷயத்தை ஹிந்துக்கள் நெடுங்காலத்துக்குமுன்னே அறிந்தவர்களென்றும், இது, அவர்கள் பூமிக்கு இட்டுவழங்கும் பெயர்களுள் ஒன்றாகிய ஹ்ரீ என்னுஞ் சொல்லை ஆராய்வார்க்கு நன்குவிளங்குமென்றும் ஸபையோர் வியக்குமாறு உபந்யசித்தார்கள்.

அதன்பின் ஸபாநாயகரவர்கள் ஸபையிற் படிக்கப்பட்ட வியாஸத்தையும் உபந்யாசத்தையும் பாராட்டி அபிப்பிராயங்கூறினார்கள். பின்னர், சங்கக்காரியநிர்வாகக்கூட்டம் நடைபெற்றது. (அதிற்செய்யப்பட்ட தீர்மானங்கள் இதன்பின் சேர்க்கப்பட்டுள்ளன). பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகிய ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் அக்கிராசனர்க்கும் ஸபையோர்முதலிய பிறர்க்கும் வந்தனோபசாரங்கூறக் கடவுள் வாழ்த்துடன் இரவு 8½ மணிக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டு இருபத்துமூன்றும் வருஷக்கொண்டாட்டம் இனிது நிறைவெய்தியது.

உ

ஆசிரியர் நல்லந்துவனார்காலம்.

*தஞ்சைமாநகரிலே வாழ்ந்துவந்த ஸ்ரீமத். மு. ஆபிரகாம் பண்டிதர் தமது சங்கீதரத்நாகரம் என்னும் நூலில் தமிழ்மக்கள் இசையில் வல்லவராயிருந்ததோடு சோதிடத்திலும் வல்லவர்களாயிருந்தனர் என்று எழுதி அதற்கெடுத்துக்காட்டாகப் பரிபாடல் 11-ம் பாட்டின் முற்பகுதியையும் பதிப்பித்தார்கள்

தஞ்சைக் கலியாணசுந்தரம் ஆங்கிலப்பாடசாலைச் சமஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமத். S சுப்பிரமணியசாஸ்திரிகள் அதனைப் படித்தபின்னர் அவர் எழுதியவற்றுள் தற்கால சோதிடக் குறிப்புகட்கு ஒற்றுமைப் படாதவைகளை எடுத்துக்கொண்டு அதற்கு ஆதாரமாக, ஆசாரிய வராக மிஹிரரால் எழுதப்பட்டதொரு அரைச்சுலோகத்தையும் அதற்குப் பட்டோத்பலர் எழுதிய விரிவுரையையும் அவர்கள் பெயரைக்குறியாமல் எடுத்துக்காட்டியதோடு தமிழ்மக்கள் சோதிடத்தில் அறியாமைமிகுதியுமுடையரென்று சொல்லாமற்சுட்டிச் செந்தமிழ் 16-ம் தொகுதியில் (309-312 பக்கங்களில்) எழுதிவிடுத்தார்கள்.

அதன்பின்னர் யான் இப்பரிபாடலிற் கண்ட சோதிடக்குறிப்புக்கள் ஆசிரியர்கூறியவாறு இருத்தல் இயலுமென்றும், ஆசிரியர் நல்லந்துவனார்கூறிய கோணிலைகளிலுள்ள தனிப்பகுதியான அ க த் தி ய ன் என்னுங் கோளைச் சுட்டியும், பொதுநெறியாகக்கூறி உண்டாய ஐயத்தை ஒருவாறு நீக்கிச் செந்தமிழ்த்தொகுதி ௧௯-ல் (249-255 பக்கங்களில்) எழுதினேன்.

இதனைக் கண்ணுற்ற தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும் தமிழ்ப்பேரபிமானியுமான ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாசையங்காரவர்கள் B.A., B.L., மதுரைவக்கீல் ஸ்ரீமத் R. S. நாராயணசாமி ஐயரவர்களைக் கண்டு மேற்கூறியவைகளைப்படித்துப்பார்த்துத் தமது அபிப்பிராயத்தை அப்பொழுது கூடுவதாயிருந்த சங்கத்தின் 20-ம் வருடக்கொண்டாட்டத்திற் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்களாம். அதன்மேல்

---

*முன்றொடர்பு புதிதாகப் பார்ப்பவர்கட்கு விளங்குவதற்காகவும், தொடர்ச்சியை முன்னிட்டும் மிகச் சுருக்கிக் கூறப்படுகிறது.

அவர்கள் அவ்வாண்டுவிழாவின்போது தமிழணங்கே உருவாய ஸ்ரீமத் மகாமகோபாத்யாய வே. சாமிநாதையரவர்களது தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் (1) அகத்தியன் என ஒருகோள் இல்லையென்றும் அஃதில்லை யாகவே அதற்குச் சஞ்சாரமுமில்லையென்றும் (2) பண்டித சுப்பிர மணியசாஸ்திரிகளின்கூற்றைவொப்ப மற்றைக்கோள்களின்நிலையும் இய லாதன வெனவும் (3 அவை இயலுமென்றுகொண்டாலும் புலர்விடிய லாகாதெனவும், (4) சிங்கத்தில் அருக்கன் நிற்கக் கும்பத்திற் சோம னிருந்தாற்றான் பூரணையுண்டாகுமென்றும், ஆகவே இது ஏலாத தொன்றும் என்றும் வாதித்தார்கள்.

ஆண்டிருந்த செந்தமிழ்ப்பத்திராசிரியரும் தமிழ்ச்சங்கக்கலா சாலைத் தலைமைஉபாத்தியாயரும் வேதாங்கவிற்பன்னருமான ஸ்ரீமத் திரு. நாராயணையங்கார்சுவாமிகள், அவர்கள் வாதத்தை ஏற்றுப் பிரதி யுத்தரமாக அகத்தியன் என ஒரு விண்மீன் உண்டென்றும், அதற் குரிய சஞ்சாரமுதலியவைகளை எடுத்துக்காட்டியும், பண்டித சுப்ரமண்ய சாஸ்திரிகளும் ஸ்ரீமத் நாராயணசாமிஐயரவர்களும் எடுத்துக்காட்டிய அரைச்சுலோகத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து அதன் முற்பாகம் கொண்டு உரையிடல்வேண்டுமென்றும், மற்றைக்கடாக்களுக்கும் வேண்டுஞ் சமாதானம் அவையிற்கூறியும் அவைத் தலைவர் விருப்பப் படி செந்தமிழ்த்தொகுதி பத்தொன்பதில் (365–370 பக்கங்களில்) எழுதியும் விடுத்தார்கள்.

அவர்களைப் பின்பற்றியே அவையிலிருந்த ஸ்ரீமான் R. கணபதி ஐயரவர்கள் M.A., B.L., உம் சில சமாதானங்களைக் கூறியும் எழுதியும் விடுத்தார்கள். (செந்தமிழ்த்தொகுதி XIX பக்கம் 370–377.)

பின்னரும் ஸ்ரீமத் R. S. நாராயணசாமி ஐயரவர்கள், இக்கோளிலை கள் இயலாதனவெனவும், இருந்தாலும் இக்காலம் ஆடிமாதத்திலிருக்க வேண்டுமென்றும், இது கி. பி. 572-ம் வருடம் (கலி 3474 ஆடிமீ 15உ யாக விருக்கவேண்டுமென்றும் காட்டிச் செந்தமிழ்த்தொகுதி 19-ல் (பக்கங்கள் 378—384-ல்) வெளியிட்டார்கள்.

இவற்றைக் கண்ட யான் அவர்கள் குறித்த நாள் கணிதத்திற்கு ஒற்றுமைப்படாதென்று எடுத்துக்காட்டியபோது அவர்கள், எழுதிய

கடிதத்தில் தாம் சென்னை அரசாங்க உத்தியோகத்தரான ஸ்ரீமத் திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் வெளியிட்ட இந்திய காலகணிதம் (Indian Chronology) என்ற புத்தகத்திற்காட்டிய கணக்கின்படி கணித்ததால் பிழையிருப்பினுமிருக்கலாமென்றும் எழுதி விடுத்தார்கள். பின்னர்ச் செந்தமிழ்த்தொகுதி 20-ல் (பக்கம் 182-188ல்), ஸ்ரீமத் நாராயணசாமி ஐயரவர்களும் பண்டித சுப்பிரமணிய சாஸ்திரிகளும் எழுதிய அரைச்சுலோகம் பிருகத்ஜாதகத்தி லுள்ளதென்றும், அதன்முற்பகுதி இதுவாகுமென்றும், அதன் முன்பின்றொடர்புகளைக் காட்டியும் ஆசாரிய வராஹமிஹிரர்காலத்திலேயே இப்படிப்பட்ட ஐயங்கள் தோன்றிப் பூர்வாசார்யர்களுடைய சம்மத மிதுவாகுமென அவர்களே கொண்டனர்களென்றும் காட்டினேன். அப்பொழுதே ஸ்ரீமான் நாராயணசாமி ஐயரவர்கள் காட்டிய காலம் ஒவ்வாதென்றும் காட்டியதோடு பின்னொருசமயம் இக்காலந்தான் யாதோவென ஆராய்வேனென்றும் எழுதினேன்.

இதன்பின்னர் இப்பொருளுரை உலகப்பிரசித்தமாகிவிட்டது. சென்ற 1922-ம் ஆண்டுநடுவில், சென்னை அரசாங்கப்பெரும்பதவியாளர் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் ரூபா 75 விலையுள்ள சோதிட காலகணித மென்றொருநூலை அரசாங்க மூலமாக வெளியிட்டார்கள். அதன் முதலாவது புத்தகத்தில் தமது கணித அட்டவணையை ருசிப்பிக்கு முகத்தானே பரிபாடற் காலமென்று எடுத்துக்கொண்டு [பக்கம் 100-109-ல் 247-270 பகுதிகளில் (Paras)] ஆராய்ந்து, அந்தக்காலத்தில் ஆசிரியர் சுத்தஸ்புடம் என்னும் கோள்களின் உண்மை நிலைகளை யறிந்திரார் என்றும், மத்தியகதிகளையே (Mean Longitudes) அறிந்திருப்பார்களென்றும், இன்னும் பல ஐயங்களையும் வினாக்களையும் எழுப்பியும், அவற்றிற்குத் தாமே விடைகூறியும் இக்காலம் 17.6. 634 இருக்கவேண்டுமென்றும் எழுதி வெளியிட்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகச் சரித்திரப்போசிரியரான டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் இதனை யொப்பாது கணிதசாஸ்திர நிபுணரான ஜர்மானியபண்டிதர் ஹெர்மான் யாகோப்பி (Herrman Jacobi) அவர்கட்கு எழுத அவர்களும் இக்காலத்தை யொப்பவில்லையென்று தெரிகிறது. இதன்மேல், பெங்களூரில்நடைபெறும் மிதிக்

சங்க வெளியீட்டில் (Journal of the Mythic Society) ஸ்ரீமத் K. G. சங்கர ஐயரவர்கள் இக்காலம் பொருத்தமில்லையென்றும், கி.பி. 254 (கலி 3356) ஆகவிருக்கலாமென்றும் எழுதியிருப்பதாகவும் அறிகிறேன். இவ்விதமாக இது பொதுவிடயமாக ஆகிவிட்டதால் இதனை யாராய்ச்சிசெய்ய முற்பட்டேன்.

முதலாவதாக ஸ்ரீமான் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களின்கூற்றைச் சுருக்கமாகவரைந்து அவற்றிற்கு விடையிறுத்து மேற்செல்லுவேன்.

247. ஐந்து (V. A) என்ற வாய்பாடு பெருங்கோள்களான செவ்வாய், குரு, சநி இவர்களின் மத்தியஸ்புடத்தை 2000 வருடங்களுக்குக் காட்டுகிறது. இது ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும். இதனைத் தமிழர்களுக்கு மிக முக்கியமான ஒரு எடுத்துக்காட்டுமூலம் காட்டுவேன். பரிபாடலென்ற பழந்தமிழ்த்தொகைநூலை மகாவித்வானை மகாமகோபாத்யாய. வே. சாமிநாதையரவர்கள் சிறக்க அச்சிட்டு வெளியிட்டார்கள். இதன் காலம் விளங்காவிடினும், அதனிலுள்ள பதினொராம் பாடலால், மதுரைக்கருகில் ஒரு பெருவெள்ளம்வந்ததை அறிகிறோம். இதனாசிரியர் சங்கப்புலவரென்று நம்பப்படுபவரும் கலித்தொகையைத் தொகுத்தவருமான (ஆசிரியர்) நல்லந்துவனாராவர். இவர் சந்திரகிரகணமுண்டான ஒருநாட்காலையில் வானில் கார்த்திகை உச்சமாகும்போதும், செவ்வாய் மேஷத்திலும், குரு மீனத்திலும், சநி தனுசிலுமிருந்து மகரத்துக்குச் செல்லும்போதும், சுக்கிரன் ரிஷபத்திலும், புதன் மிதுனத்திலும் நிற்க, வைகையில் வெள்ளம்வரக்கண்டார்.

248. இப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட இவ்வரிகள் உண்மையில் ஒரு சாதகக்குறிப்பேயாம். ஒருகுழந்தை பிறந்ததின்குறிப்பாயிராவிடினும், இது ஒரு காலக்குறிப்பேயாகும். இக்காலக்குறிப்பை யாராய்வது கடினமாக இருப்பதுடன் அநேக இடையூறுகளும் தோன்றுகின்றன.

முதலாவதாக இக்குறிப்பு வெகு புராதனமானதாகவிருந்தால் (I)* புலவர் மத்தியஸ்புடம்தான் அறிந்திருக்கவேண்டும். அதனோடு வானிற் றோன்றிய கிரகநிலையையும் உற்றுநோக்கியிருக்கலாம்.

---

* உரோமனெண் இட்டிருப்பது முடிவில் எடுத்துக்காட்டுவதற்கு அநுகூலமாக விருப்பதற்கே.

ii. இக்கோணிலைகளெல்லாம் தமிழ்ப்பாவிலே யமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாஷையின்மொழிநயத்தால் அப்பாவின்பொருளை யறிவது எல்லோர்க்கும் எளிதன்று. நற்காலமாகத் தெய்வப் புலமைவாய்ந்தஆசிரியர் திருவள்ளுவரது திருக்குறளுக்கு உரை எழுதிக் கீர்த்திவாய்ந்த ஆசிரியர் பரிமேலழகர் இதற்கும் உரை எழுதியுள்ளார். முப்பால் முதலாய இலக்கியங்கட்கு எழுதிய உரையால் இலக்கியத்தில் நுண்ணறிவுடையாரென்பதுபோன்று சோதிடத்திலும் இவர் வல்லவரென்றேகொள்ளலாம்.

iii. சாந்திரமானமாதமாவது சூரியனது நிலையாவது செய்யுளில் ஆசிரியராற் குறிக்கப்படவில்லை. ஆனால் 26·7° க்கும், 40 பாகைக்கும் நடுவணுள்ள கார்த்திகை உச்சமாகப் புலர்விடியல் என்பதால் (II) ஆசிரியர் பரிமேலழகர் சூரியன் 116.7° க்கும் 130° பாகைக்கும் நடுவில் இருக்கவேண்டுமென ஊகிக்கிறுர். அப்படியாயின் சூரியன் சிம்மராசியிற்புகுந்து சிலநாட்களே சென்றிருக்கவேண்டும். இதுவே உரையாசிரியர்வாக்கு.

iv. சூரிய சந்திரர்கள் நிற்கும்ராசியைக் குறிக்கக்கூடியகுறிப்பொன்றிருப்பதை உரையாசிரியர் ஊன்றிநோக்கிக் குறிக்கின்றுர். அதாவது சிராவணமாத (ஆவணி) சந்திரகிரகணமாகையால் சந்திரன் அவிட்டத்தில் இருக்கவேண்டும். சந்திரனுக்கு 180 பாகையிற் சூரியனிருந்தாற்றான் கிரகணமுண்டாகுமாகையால் சூரியன் 113·30° முதல் 127 பாகைக்குள் இருக்கவேண்டும். ஆவணியிலும் 7 தேதிக்குமேற் சென்றிருக்க வியலாது. சூரியன் சிம்மத்திலும், சந்திரன் அவிட்டத்திலும் (III) இருக்கின்றனரென்று சொல்வதற்குள்ள ஓரோவொரு குறிப்பான புலர் விடியல் அங்கி என்பதைக் கணிகள் பலமாக ஆக்ஷேபிக்கக் கூடும். ஆனல் பழமைவாய்ந்த உரையாசிரியரான பரிமேலழகர் இவ்விஷயத்தில் யாதொரு ஐயமுமுறவில்லை.

v. உரையாசிரியர்கொள்கை யுண்மையானுல் சூரியனது நிலையையும் (120° –127°) புத (60° –89°) சுக்கிரர் (30° –59°) களது நிலையையும் பார்க்கும்போது ஆசிரியர் (நல்லந்துவனர்) கிரகங்களின் சுத்தஸ்புடநிலைகளை (உண்மைநிலை Actual Position) நினைத்திரார் என்று ஊகிக்கலாம். இக்கோள்களின்

நிலையே இப்பாட்டிலுள்ள சிக்கலுக்கு மூலம். இதைப்பற்றிப் பின்னர்க் கவனிப்போம்.

vi. இப்புத்தகத்தில் (பிள்ளையவர்கள் கணிதபுத்தகம்) கொடுக்கப் பட்டகிரகங்களின் சீக்கிரமந்தகதிகளைப்பார்ப்போமாயின், புதன் 26 பாகைக்கு மேலும் சுக்கிரன் 43·3 பாகைக்குமேலும் செல்வதில்லையென்பது புலப்படும். ஆசிரியரோ சுக்கிரனுக்கு60 பாகையும், புதனுக்கு30பாகையும் கொடுக்கிறார். ஆகையால், சுக்கிரன் நிலையைக்கொண்டு ஆசிரியர் மத்தியகதியையே குறித்துளார் என்பது விளங்கும். அப்படியாயின், மற்றவைகட்கும் மத்தியகதிதானே குறித்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

249 vii. கிரகநிலைகளை ஆசிரியர் தாம் ஆகாயத்திற் கண்டபடியும் குறித்திருக்கலாம். ஒருவேளை சிலவற்றை நோக்கியும் சிலவற்றைத் தமது கணிதப்பயிற்சியாற் கணித்துமிருக்கலாம். (IV) எவ்வாறாயினும் முன்னர்க் கூறியதுபோலச் சுக்கிரனைமாத்திரம் இவர் கண்ணாரக் கண்டிருக்கவியலாது.

250. இவ்விதமாக இந்த எழுவகை இடையூறுகளையும் கண்டதாலே இவைகளை V ௨ வாய்பாடுமூலமாக நீக்கமுயலுவாம். இதற்குமேல், செவ்வாய், குரு, சநி இவர்களுக்கு வாய்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. [இது 251, 252-வது பகுதிகள்வரை செல்லுகிறது.] புத சுக்கிரர்களுக்கு வாய்பாடு கொடுக்காத காரணம் அவர்களின் நிலை சூரியனைக்கொண்டு இருப்பதால் கொடுக்கப்படவில்லை. (V) அவைகளும் நமக்கு அவ்வளவு முக்கியமல்ல.

253.† நமக்குப் பெருங்கோள்களின் உண்மைநிலை [சுத்தஸ்புடம்] தெரிந்துகொள்வதற்கு அந்தமாதம் தெரிந்தாற் போதுமானதாகும். இக்கோள்களின் நிலையையும் மத்தியத்தையும் அறிந்து அவைகள் குறித்த இடத்தில் இருக்கின்றனவாவெனச் சோதிப்பது எளிதானகாரியமன்று. அங்காரகன்மட்டிலும் காலத்துக்குத் தக்கபடி மத்தியஸ்புடத்திலும் சுத்தஸ்புடத்திலும் மிக்க மாறுபாட்டுடன் காணப்படும். நாம் கொடுத்திருக்கிற அங்காரக எண்களை உற்றுநோக்கின் ஒரு ஆண்டின் 130-வது நாளில் செவ்வாய் சுத்தஸ்புடம்மேஷமானால் அதன்மத்தியம் 320 முதல்

†251, 252 பகுதிகள் மேற்கூறிய நூலில் வாய்பாடுகளாகவிருப்பதால் அவற்றால் நமக்கு உபயோகமொன்றுமின்மையின் நீக்கப்பட்டன, முன்னரும் வாய்பாடுகளாக வருபவைகள் நீக்கப்பட்டன.

340 பாகைக்குள்ளிருக்கும். கி.மு. ஒன்றிலிருந்து தற்காலம் பிறக்க கி.மு. 1-க்குக் கண்ட எண்ணோடு 3+170 கூட்டவேண்டுமென்பதுமேலே காட்டிய வாய்பாட்டைப் பார்க்கப் புலனும். குரு, சநிக்கும் அவ்வாறே கொடுத்துள்ளோமாயினும் அவற்றின் வித்தியாசம் மிகக்குறைவாகவே காணப்படும்.

255. இனி, இவைகளின்படி பின்கண்ட ஆண்டுகளில் கோள்களின் மத்தியநிலை காட்டப்படுகிறது.

ஆண்டு	சந்திரகிரஹணம் வந்தமாதம்.	சௌரமான நாட்கள்.	செவ்வாய்	குரு	சநி
கி. பி. 17	சிராவண மாதம்	134	14	156	208
634	ஆஷாடம்	128	31	161	187
694	ஆசுவினம்	114	355	181	200
871	பாத்ரபதம்	135	54	153	203
931	கிரஹணமில்லை	131	358	173	216
1050	சிராவணம்	134	95	185	230
கி. மு. 160	சிராவணம்	...	–25	–176	–156
220	மே மாதம்	...	–349	–196	–168
397	மே	...	–28	–168	–171
1572	கிரஹணமில்லை	...	–289	–186	–128

256. கி. மு. ஆண்டுகளில் எப்பொழுது கிரகணம் உண்டாயிற்றென்றும், பெருங்கோள்களின் நிலை யின்னதென்றும் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியம். (VI.) அப்படியிருந்தும் கி. மு. 161 சிராவண மாதத்தில் கிரகணமிருந்திருக்கிறது. ஆனல் அங்காரகனுடைய மத்தி

யத்தைக் கவனிக்கும்போது அதன் சுத்தஸ்புடம் மேஷத்திலிரா தென்று நன்கு புலப்படும். மற்றைய கி. மு. வருடங்களில் கிரகணங் கள் இல்லாமையால் அவற்றைப்பற்றி யாராய்வதிற் பயனில்லை.

258. உரையாசிரியரைநம்பிச் சந்திரகிரகணம் வந்ததென்பதை யொருகுறிப்பாகக்கொண்டு கி. பி. வருடங்களைச் சோதிப்போமானால். கி.பி. 17 (வர்த்தமான கலி 3119) ஒன்றே பரிபாடற்காலத்துக்கு ஒத்துக் காணப்படும். இந்த வருடத்தை யொப்புக்கொள்ள வெகுபேர் சம் மதியார்களென்பது திண்ணம. இந்தவாண்டிலும் அங்காரகன், குரு, சனிகளின் உண்மைநிலை (சுத்தஸ்புடநிலை) வெகுதூரத்தி லிருந்ததென் பது காணப்படும். முன் 237–239 பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக் கும் குறிப்புக்களைக்கொண்டாவது V A, V B வாய்பாடு மூலமாக வாவது செவ்வாய் மேஷத்திலும் 25·5°, குரு 334° மீனத்தில் 4 பாகை யும், சனி 274·1° மகரத்தில் 4 பாகையும் சென்றிருக்கின்றனரென்று தெரிந்துகொள்ளலாம். அதே தேதிக்குச் சுக்கிரமத்தியம் 28 பாகை யாக ரிஷபத்திற்கு இரண்டுபாகை குறைவென்று தென்படும். மத்தியஸ்புடம் இதுவாயினும் சுத்தஸ்புடம் மேஷமாவது ரிஷபமாவது ஆகாதென்று முன்னரே காட்டப்பட்டது. கி. பி. 17-ம் ஆண்டு சிரா வணமாதம் அமாவாசையின்போது சுக்கிரன் 90·02-ல் அதாவது மிது னத்தின் கடையில் இருக்கிறான். புதமத்தியம் சிராவண பூர்ணிமையில் மிதுனத்திலும் சுத்தம் 156·02 லும் இருக்கிறது.

259. கி. பி. வருடங்களில் 17-ம் ஆண்டைத்தவிர 1050-ல் சிரா வணமாதத்திற்முன் கிரகணம் உண்டாயிற்று. அக்காலம் புதமத்தி யம் 95° சுத்தம் 92·57°. அதாவது கடகத்தில் மூன்று பாகை செல்லு. சுக்கிரனும் அப்படியே காணப்படுகிறது. ஆகையால் இதைப் பற்றி ஆராயவேண்டுவதில்லை.

260. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர் என்ற நூலாசிரியரான வெ. கனகசபைப்பிள்ளை ஸ்ரீமத. A. குமாரசாமி இவர்கள் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கட்கு கி.பி. 17(கதகலி 3118) தகுதியுடையதாகக் காணப்படினும், அக்கொள்கை டாக்டர் ஹூல்ஷால் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி II பகுதி 3-ல் (பக். 370) செவ்வனே மறுக்கப்பட்டிருக்கிறது. (IX) அவர் (டாக்டர் ஹூல்ஷ்) இப்பொழுது காணப்படும் சங்கநூல்களெல்லாம் கி. பி. எட்டாம்நூற்

ருண்டிற் றேன்றியனவென்று கூறுவதே நமதுசந்தேகத்திற்கு விரோத மாக நிற்கிறது. இதனோடு இந்தியக்கணிகள் எப்பொழுது கோணிலை களைக் கணித்துச் சாதகக்குறிப்பு எழுத முற்பட்டனர் என்று சொல்வ தற்குரிய ஆதாரமொன்றும் காணப்படவில்லை. இதுவன்றித் (VII) தென்னிந்தியர் கிறிஸ்து பிறப்பதற்குமுன்னரே கலதேயர்களிட மிருந்து நேரே கிரகநடைகளை (கோள்சாரங்களை) அறிந்துகொண்டதால் இவைகளைத் திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனாலும், இத் தென் னிந்தியவாசிகளும் கி. பி. ஏழாம்நூற்றாண்டுக்குமுன்னர்ச் சாதகங் கள் குறிக்கவில்லையென்று திட்டமாகக் கூறலாம். மகா அலெக்ஸாந்தர் காலத்துக்கு முற்படாவிட்டாலும், அவர் காலத்திலிருந்தாவது பார்ப்பனரைவிட ஜயினசிரமணர்கள் வானசாத்திரத்தில் தாங்கள் வல்ல வர்கள் என்று சொல்லிக்கொண்டதாகக் காணப்படுகிறது. கி. மு. 4-ம் நூற்றாண்டுமுதலே தென்னிந்தியாவில் சிரமணர்கள் அதிகமாகையால் அவர்கள் நூல்களிலிருந்து தென்னிந்தியர் கிரகசாரங்களையறிந்து கொண்டுமிருக்கலாம். இந்தியாவிலுள்ள மற்றைப்பகுதியினர்மாத்திரம் சாந்திரமானகணனப்படி நடக்கத் தமிழர்மாத்திரம் சௌரமான கணி தத்தைவிடாது பற்றிக்கொண்டிருப்பதுமாத்திரம் அவர்கள் வழக்கு வெகு புராதனமானதென்று கொள்வதற்கு இடம் தருகிறது. சில சௌரமான மாதப்பெயர்களும் தமிழர், தோடர், துளுவர்கட்குத் தனியா யிருப்பதோடு பிங்கலந்தையில் நட்சத்திரங்கட்குப் பல தமிழ்ப்பெயர்கள் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

261. கி. பி. 17-ம் ஆண்டையொப்புக்கொள்ளுமுன் சங்ககாலத் தை யாராயவேண்டியிருக்கிறது. குறள், சிலப்பதிகாரம்; மணிமேகலை, சிந்தாமணி முதலாய நூல்களே சங்கநூல்களாகக் காணப்படுகின்றன. மற்றவை தொகைநூல்களாகத் தொகுக்கப்பட்டவை. (VIII) பல பாக் களைச்சேர்த்துத்தொகுத்திருப்பதாலாயே இப்பாக்களின் ஆசிரியர்காலத் தைச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இவர்கள் பாடியவை முதலில் வெளிப்பட்டு நின்றுநிலவிச் சீரழிந்து கெட்டுப்போனபிறகே வழிவந் தோர் கிடைத்தவைகளைச் சேர்த்து வெகுகாலத்திற்குப்பின் தொகுத் திருக்கவேண்டும்.

262. பரிபாடலைப்பற்றியோவெனின், அதன் பதிப்பாசிரியரே இந்நூலையச்சிடுவதற்கு இரண்டே ஏடுகள் கிடைத்தனவென்றும், அவை

களும் முற்றுப்பெறுதனவென்றும் எழுதுகின்றார்கள். மிகுதி கிடைக்குமோவென்பது சந்தேகமே. ஆயினும் பரிபாடலிற்காணப்படும் சைவ வைஷ்ணவ விடயங்களைக் கண்ணுறின், டாக்டர் பண்டாரகர் முதலிய கீர்த்திவாய்ந்த ஆசிரியர்களது கொள்கைகளின்படி இவை (சைவவைஷ்ணவ சம்பிரதாயங்கள்) கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகட்குப் பிற்பட்டவை என்பது தெளிவாம்.

263. இதுகாறுங்கூறியவிடயங்களில் உரையாசிரியரான பரிமேலழகருக்குப் பெருமைகொடுத்தோமாயினும், சுக்கிரனை அதோகதியில் விட்டோம். புதனைச் சற்றேனுங் கண்ணெடுத்துநோக்கினோமில்லை. அதுவுமன்றி கி.பி. 17-ல் கிரகணம் காலையிலில்லை. 27—7—17 மாலை 7-மணிக்குக் காணப்படுகிறது. இது முதற் குறையாக நிற்கிறது. உரையாசிரியரோ கார்த்திகையானது இரவுசென்று விடியும்போது உச்சியிலிருக்க என்கிறார். இப்பொழுது, ஒல்லை என்கிறார்; முதனாளிரவு முன்னேரமாகவிருந்தால் இவ்விதம் கூறார்.

264. ஆகையால் உரையாசிரியரும் நம்மைப் போலவே ஏதோ ஒரு நாளைத் தீர்மானிக்க முயல்கிறார் (X). நாம் இப்பொழுது கணித்துள்ள வாய்பாடுகள்போன்று அந்நாளில் அவருக்குக் கிடையாது. ஆவணி மாதமென்றும், புதன் மிதுனத்திலென்றும், சுக்கிரன் இடபத்திலென்றும் ஊகித்துக்கொண்டார்.

265. கணிதத்தின்பொருட்டு உரையாசிரியர்போன்றோரது அபிப்பிராயங்களை நிராகரிப்பது ஆபத்துக்கிடமேயாயினும், கணிதமுறையில் எல்லாவழிகளிலும் தேடிப்பார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை (XI). ஆனால் உரையாசிரியர் பரிமேழலகர்தானே இல்லையோவென்பது சந்தேகமாக விருககின்றது. (XII.)

266. சந்திரகிரகணம் ஆஷாடத்தில் (சூரியன் 90°) உள்ள ஒரு ஆண்டு கி.பி. 634 (கத கலி 3735) ஆகும் (XIII). அதாவது 634-ம் ஆண்டு ஜூலை மீ 17-ம் தேதி இந்தக் கிரகணம் உண்டானது சூரியோதய காலமாகும். இது கிரஸ்தாஸ்தமனமாகையால் நூலாசிரியர் சொல்லுகிற விதமாகவே காணப்படுகிறது. ஆயினும், இது விஷயத்தில் உரையாசிரியரைப் புறக்கணித்தவர்களாவோம். இவர் (உரையாசிரியர்) கணக்குப்படி கார்த்திகை உச்சத்திற்குவரச் சூரியன் 120 பாகையில் இருக்க வேண்டும். ஆனால் உயர் என்ற சொல்லுக்கு உச்சி என்றும் மேல்

என்றும் பொருளுண்டு. கிரகணங்களைக்காணுமுறை (L'art De Verifior Les Dates) என்னும் பிராஞ்சிய நூற்படி அன்று கிரகணம் 1½ (ஒன்றரை) டிஜிட் உண்டாயிற்று. இது மதுரையில் விடியல் சுமார் 4½ மணிக்குத் தெரியும். சந்திரன் கிரகணத்தால் மறைபடுவதால் நட்சத்திரங்கள் வெறுங்கண்ணுக்குப் புலப்படும். அப்பொழுது புலர்விடியல் என்பதும் பொருந்தும்.

268. மேற்குறித்த 17–6–634-க்கு ஆஷாடமாதம் பௌரணமி நாழிகை 60—0.

கோள்நிலை.

கோள்கள்:	செவ்வாய்	குரு	சநி	சுக்கிரன்	புதன்
மத்தியம்	331·92	330·83	262·41	296·23	371·56
சுத்தஸ்புடம்	16·12	339·53	265·51	41·53	70·38
நிற்கும்ராசிகள்	மேடம்	மீனம்	தநுசு	இடபம்	மிதுனம்

இந்த நாளைக் கொள்வதில் முன்னர்த் தென்பட்ட இடையூறுகள் பலவும் இலவாகின்றன. புதசுக்கிரர்கள் கூடவேண்டியநிலையில் இருக்கின்றனர். ஆனால் சனியோ தான் இருக்கவேண்டிய நிலைக்கு 13 பாகை குறைகிறான். (பரிபாடற்) செய்யுட்கு வில்லிற்கடை என்றும், பின்னர் மகரம் செல்கின்றான் என்றும் பொருள்கொள்ளவேண்டும். ஸ்ரீமான் மாணிக்கநாயகர் கூறுகிறபடி விற்கடை என்றால் ஆசிரியர்கூற்றுப் பொருந்தும் (XIV). வில்லிற்கடை என்பதால் மேற்கூறிய பொருள்தான் பொருத்தமானது. மற்றைக்கோள்கள் தத்தம் வீட்டிலிருப்பதால் சநியும் இருக்கவேண்டுமென்றது ஒற்றுமையுடையதென்றே கொள்ளலாம். கோள்கள் அவ்வரவரது சொந்தவீட்டில் (சுவக்ஷேத்திரத்தில்) இருந்தால் ஜாதகன் பலவானென்று பலன்சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது செய்துவரும்கணிதப்படி சநிக்குக் கணித்தால் கி.மு. 161ல் அவன் இருக்கவேண்டிய இடத்தைவிட ஆறு பாகை முன்னேசென்றிருந்தான் என்று தெரிகிறது. கி. பி. 900-ல் அவன் நிலை இப்பொழுதைய கணிதத்திற்கு ஒற்றுமைப்பட்டிருக்கிறது. கி. பி. 600-ல் 2·4 பாகை முன்சென்றான். ஆகையால் கி. பி. 634-ல் அவனுக்கு எவ்விதமாய்க் கணக்குச்செய்தனரோ அறியோம்.

269. ஆசிரியர் சூரியன் சிம்மத்திலிருக்கிறானென்று கூறினதாகத் தெரியவில்லை (XV). உண்மையாக அப்படியிருந்தால் அவர் கூறும

விரார். மேலும் கிரகங்கள் சுவக்ஷேத்திரத்தி விருப்பதையோ செல்வதை யோ குறித்திருக்கிறார். சந்திரன் தனுசில் 2·6 சென்றார் என்று காணப்படுகிறது.

270. இதுவரையிற் சொல்லியதுகொண்டு ஆசிரியர் சந்திரகிரகணத்தை நிச்சயமாகக்கொண்டபடியால் இந்த 634ம் ஆண்டுதான் ஆசிரியர்கூறிய காலமென்பதிற் றடையில்லை. இதுதானென்று காட்டுவதற்கு மற்றொருகுறிப்பு முண்டு. அது யான் சிலப்பதிகாரகாலம் கி. பி. 756 என்று குறித்திருப்பதாகும். இக்குறிப்பினாலும் பரிபாடற்காலம் 634 என்பது வலியுறுகின்றது என்பதாம்.

இவர்களின் கூற்றுக்களைச் சுருங்கக்கூறுமிடத்து:—

I. முன்னோர் மத்தியஸ்புடங்களை அறிந்திருந்தார்களேயொழியச் சுத்தஸ்புடங்களை யறியாரென்பது.

II. சிம்மத்தில் சூரியன் இருக்கவேண்டுமென்பது உரையாசிரியர் ஊகமென்பது.

III. அதற்குக் காரணம் கார்த்திகை உச்சத்தில்தோன்றியதொன்றே என்பது.

IV. இவர் காலப்படி புத சுக்கிரர் தென்பட்டிரார் என்பது.

V. இப்பாட்டுக்குப் புதசுக்கிரர் முக்கியமில்லையென்பது.

VI. கி. மு. 161 கவனிக்கவேண்டுவதில்லையென்பது.

VII. தென்னிந்தியமக்கள் கலதேயர்களிடமிருந்தும் சமணர்களிடமிருந்தும் இச்சாத்திரத்தை யறிந்தார்களென்பது.

VIII. தொகைநூல்களின் காலம் பிற்பட்டதென்பது.

IX. சங்ககாலமும் சிலப்பதிகாரகாலமும் எட்டாம் நூற்றாண்டென்பது.

X. உரையாசிரியரும் நம்மைப்போல் ஒருநாளைக் குறிக்கமுயன்றவரென்பது.

XI. உரையாசிரியர்கொள்கை ஒற்றுமைப்படவில்லையென்பது.

XII. உரையாசிரியர் பரிமேலழகர்தானோ இல்லையோவென்பது.

XIII. இக்காலம் கி. பி. 634 என்பது.

XIV. வில்லின்கடைமகரம் என்பது.

XV. நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருந்ததாகக் கூறவில்லை யென்பது முதலியவைகளாம்.

[தொடரும்]

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகன்.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ருதிரோத்காரி௵ பங்குனி௴ 26, 27, 28 (1924-௵ ஏப்பிரல்௴ 7, 8, 9)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்ச்சி எண்.	நிரலெண்.	
1.	4.	ஞா. தேவநேசக்கவிவாணன், மிஷின் உயர்தரப்பாடசாலை, ஆம்பூர், வடஆற்காடு ஜில்லா.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	18.	இ. ராசநாயகம்தங்கம்மாள், ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.
2.	9.	ஆ. பொன்னுச்சாமி, தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
3.	8.	வே. இராமநாதன், தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
4.	14.	எஸ். தொராமையர், 198, கீழைச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1.	24.	ஜ. ராஜுமுதலி, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை (முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2-வது வகுப்பு.

1	51.	ஈ. வெங்கட்டரமணையர், தமிழ்ப்பண்டிதர், வி. சி. செக்கண்டரி ஸ்கூல், ஒமலூர்.
2.	21.	S. M. R. சாமுவேல்தானியேல், மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
3.	19.	A. திருமலை, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
4.	39.	A. பசுபதிஐயர், வடக்குவீதி, பந்தநல்லூர் போஸ்டு.
5.	33.	சா. சிதம்பரம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தட்டாங்குடி, தஞ்சை.
6.	20.	நாராயணன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
7.	22.	ரெ. அழகிரிசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
8.	41.	அ. ரா. சாமிநாதபிள்ளை, வேடம்பூர், ஆலங்குடி போஸ்டு.

B இராஜராஜேஸ்வர ஸேதுபதி,

18—6—24. அக்கிராசனாதிபதி.

ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1924-ஆம் மார்ச்சுமீ 8உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதா பத்திரம் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்க் கங்கள்.	ரிஜிஸ்டர் க்கங்கள்.	
1.	2.	A. முத்துசாமிபிள்ளை. பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	4.	T. M. அருணாசலம் ஷை ஷை.
3.	3.	A. V. சந்திரசேகரன் ஷை ஷை
4.	5.	A. N. மகரபூஷணன், செயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

எப். ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	31.	M. முத்துசாமிபிள்ளை, செயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	70.	R. V. வரதராஜன், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
3.	96.	N, கலியப்பெருமாள், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
4.	54,	A. ஜான்தேவசகாயம், சி. எம். கலாசாலை, திருநெல்வேலி.
5.	65.	கே. ஆர். இராதாகிருஷ்ணன், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
6.	90.	T. நடேசன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
7.	69.	V. S. வெங்கடாசலம், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
8.	76.	V. கன்னையன், மன்னார்குடி பிண்டிலே காலேஜ். மன்னார்குடி.

9. 67. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, சேலம்முனிசிபல் காலேஜ், சேலம்.

10. 34. P. முத்துதனபாலன், கவர்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.

11. 61. எஸ். கோபாலையர், ஸ்காட் கிரிஸ்டியன் காலேஜ், நாகர் கோவில்,.

12. 10. P. ஷண்முகம் அமெரிக்கன் காலேஜ், மதுரை.

13. 16. C. சங்கரலிங்கம், நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

14. 64. S. ஜாயிஸ் சமாதானம், (பெண்) H. H. The Maharajah's Collage for Women திருவனந்தபுரம்.

15. 86. K. அரங்கநாதன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

16. 8. R. சுப்பிரமணியன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

17. 35. K. சோமசுந்தரம், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.

18. 18. T. R. ஸ்ரீனிவாஸன், நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

19. 45. T. M. பாஸ்கரன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

20. 47. T. R.. திருவாய்மொழிப்பெருமாள், ஷை ஷை

21. 7. V. தங்கசாமி, அமெரிக்கன் காலேஜ், மதுரை.

22. 94. S. நாராயணன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

23. 60. பி. சுப்பிரமணியம், ஸ்காட் கிரிஸ்டியன் காலேஜ், நாகர் கோவில்.

24. 72. K. கல்யாணசுந்தரம், மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

25. 29. K. R. நடேசன், ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப் பள்ளி.

26. 92. S. திருவேங்கடம். மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

27. 52. ந. மூக்காண்டி., ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

28. 88. R அரங்கநாதன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1. 441. S. மாணிக்கவாசகம், ஹைஸ்கூல், பத்தமடை.

2. 527. S. இராமகிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், நாங்குநேரி.

3. 328. S. சுயம்பிரகாசன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

4. 362. டி. எம். திருமலை, மன்னார்குடி, பின்டிலே காலேஜ்.

5. 226. T. T. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
6. 227. P. K. பிரமநாயகம், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
7. 287. D. V. ராஜம், செண்ட் ஜோஸப் ஸ்கூல், கூடலூர்.
8. 225. M. இசக்கிமுத்து, சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
9. 532. K. இராமன். போர்டு ஹை ஸ்கூல், நாங்குநேரி.
10. 435. S. S. S. குருசாமி, இந்து நாடார் விக்டோரியா ஹை ஸ்கூல், சிவகாசி.
11. 234. K. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
12. 235. A. பிரமநாயகம், ஷை ஷை
13. 266. S. சவரிமுத்து, செண்ட்மைக்கல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
14. 238. T. R. அழகியமணவாளன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
15. 327. P. S. நித்தியானந்தம், ஹைஸ்கூல், திருககாட்டுப்பள்ளி.
16. 439. A. S. சோமசுந்தரம், இந்துநாடார் விக்டோரியா ஹை ஸ்கூல், சிவகாசி.
17. 228. R. கவிதீர்த்தபெருமாள், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
18. 476. R. வரதராஜன், அமெரிக்கன் ஆற்காடு மிஷின்ஹைஸ்கூல், திண்டிவனம்.
19. 449. M. கோபாலகிருஷ்ணன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
20. 457. R. ராஜாராமன், போர்டு ஹைஸ்கூல், நன்னிலம்.
21. 131. M. முத்துக்கருப்பையா, க்ஷத்திரியஹைஸ்கூல், விருதுபட்டி.
22. 445. P. ஸ்ரீநிவாஸன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
23. 180. R. A. வையாபுரி, போர்டு ஹைஸ்கூல், லால்குடி.
24. 379. S. ருத்திராபதி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
25. 259. M. இரத்தினசபாபதி, முனிசிபல் காலேஜ், சேலம்.
26. 216. T. K. உலகுமந்திரம், ஹிந்து ஹைஸ்கூல், திருநெல்வேலி.
27. 285. K. S. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர்.
28. 440 S. பொன்னு, ஹைஸ்கூல், பத்தமடை.
29. 334. Z. எலிசபெத், அமெரிக்கன்ஆற்காடு மிஷின் பெண்பாடசாலை, ராணிப்பேட்டை.
30. 233. S. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
31. 472. கே. குப்புசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
32. 390. M. A. சூசை அலங்காரம் மூருயிஸ், அர்ச்சவேரியார் கலாசாலை, தூத்துக்குடி.
33. 375. S. T. சம்பந்தம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,

13-6-1924. அக்கிராசனாதிபதி.

The Third All-India Oriental conference, Madras, 1924.

THE third session of the All-India Oriental Conference will be held in Madras during the Christmas holidays. His Excellency the Governor of Madras will open the Conference. Mahamahopadhyaya Dr. Ganganath Jha, M.A., D. LITT., Vice-Chancellor of the Allahabad University has accepted the Presidentship of the Conference.

THE Conference will last for three days. Papers offered for presentation to the Conference must reach the Secretary by the 1st of November next. A brief summary of the papers indicating the salient issues should be sent along with the papers. These summaries will be published if the paper should be accepted, for presentation to the members of the Conference for facility of discussion. The time allowed for each paper would be only 15 minutes. Scholars interested in the work of the Conference are invited to take part and submit their papers to the undersigned before the said date.

S. KRISHNASWAMI AIYANGAR,
Honorary Secretary.
(Sri Venkatesa Vilas, Nadu Street,
Mylapore, Madras.)

உ

நாளிது 1924-௵ டிசம்பர்௴ சென்னையில் நடைபெறும்

கீழ்த்திசைத் தொன்னிலையாராய்ச்சிக்கழகத்தின்

அகில-இந்தியக்கூட்ட விளம்பரம்.

(The Third All-India Oriental conference, Madras, 1924.)

இக்கழகத்தின் மூன்றாவது கூட்டம் டிசம்பர்மாசப் பிற்பகுதியில் (கிறிஸ்ட்மஸ் விடுமுறை நாட்களில்) சென்னையில் மேன்மைதங்கிய சென்னைமாகாணக்கவர்னரவர்களது முன்னிலையில் ஆரம்பமாகும். அலகபாத் ஸர்வகலாசங்கத்தின் உதவித்தலைவராகிய மஹாமஹோபாத்யாய Dr. கங்காநாத்ஜா M.A., D. Litt., அவர்கள் சபாநாயகரா யிருப்பார்கள்.

கூட்டம் மூன்றுநாள் நடைபெறும். கழகத்தின் முன்னிலையிற் படிக்கவிரும்பிய ஆராய்ச்சி வியாசங்கள் நவம்பர்௴ முதற்றேதிக்குள்ளாக கழகத்தின் கௌரவ காரியதரிசியாராகிய Dr. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., Ph.D., அவர்களுக்கு ஸ்ரீவேங்கடேசவிலாஸம், நடுத்தெரு, மயிலாப்பூர் சென்னை என்ற விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். அனுப்பும் வியாசத்துடன் அதன்சுருக்கக்குறிப்பொன்றும் தனியாகஎழுதிச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். வியாசம் தக்கதென்று கொள்ளப்படுமாயின் சுருக்கக்குறிப்பு அச்சிடப்பட்டுக் கழகக் கூட்டத்துக்குவந்திருப்பவர்களுக்கு, அவர்கள், தங்களபிப்பிராயத்தை வெளியிடும்பொருட்டுவழங்கப்பெறும். ஒவ்வொருவியாசமும் பதினைந்து நிமிஷங்களுக்குட் படிக்கத்தக்கதாயிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் ஆராய்ச்சிசெய்யும்பண்டிதர்கள் இக்கழகம் மேன்மேலும் விருத்தி யடையும்படி சிரத்தைசெய்வார்களாக.

1924௵ ஜூன்௴ 26௳ (ரக்தாக்ஷி௵ ஆனி௴ 13௳) வியாழக்கிழமை மாலை மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாஸபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷயவிவரக்குறிப்பு.

---

1 மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க ஸேதுபதி மன்னரவர்கள்,—சாசுவத அக்கிராஸனாதிபதி.

2 மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள்

3 ,, ரா. இராகவையங்காரவர்கள்

4 ,, மு. ராகவையங்காரவர்கள்

5 ,, திரு. நாராயணையங்காரவர்கள்

6 ,, ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்

7 ,, மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

8 ,, சையத் முகம்மது ஆலீம் புலவரவர்கள்

9 ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்

10 ,, வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T.,

11 ,, ஆ. கார்மேகக்கோனாரவர்கள்

12 ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.,

13 ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,

14 ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,

15 ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.,

16 மகா-ா-ா-ஸ்ரீ R. கணபதி ஐயரவர்கள், B.A., B.L.

17 ,, M. N. சேஷையரவர்கள்

18 ,, நெடுவை. திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள்

19 ,, ஆழ்வார் ஐயங்காரவர்கள்

20 ,, V. M. இரத்தினேசுவரையரவர்கள்

21 ,, திருமலை ஐக்கையா அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் சபைத்தலைமை வகித்தார்கள்.

தீர்மானங்கள்.

1. இப்போதுள்ள நிர்வாக ஸபையாரில் மகா-ா-ா-ஸ்ரீ P. சுப்பராய ஐயரவர்கள்தவிர மற்றவர்களும் காரியதரிசிகளும் இன்னும் மூன்றுவருஷங்களுக்கு நிர்வாகஸபையங்கத்தினராக இருக்கவேண்டுமென்றும், மகா-ா-ா-ஸ்ரீ P. சுப்பராய ஐயரவர்களுக்குப்பதிலாக மகிபாலன்பட்டி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் நிர்வாகஸபையங்கத்தினராக இருக்கவேண்டுமென்றும், மகா-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் பிரேரேபிக்க மகா-ா-ா-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் ஆமோதிக்க ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

2. வித்யாவிஷய ஆலோசனைஸபைக்கு இப்போதுள்ள எட்டு அங்கத்தினர்களுடன் மகிபாலன்பட்டி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியார் அவர்களும் இன்னும் மூன்றுவருஷங்களுக்கு அங்கத்தினராக இருக்கவேண்டுமென்று மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பிரேரேபிக்க மகா-ா-ா-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஆமோதிக்க ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 26—6—24.

வே. சாமிநாதையர்,
சபைத்தலைவர்,

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி௵ ஆடிமீ [பகுதி கூ.
Vol. XXII. July-August-1924. No. 9.

மதங்க சூளாமணி.

[முகவுரை]

"அந்தணர் வேள்வியொ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியொ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கியற் பொருளுரை நிரம்பிவினை முடிக
வாழ்க நெடுமுடி கூர்கம் வாய்மொழி
என யாம்,
மங்கல நல்லுரை வழிமுறை யியம்புதும்
திங்களங் குழவி சேர்த்திய திருமுடி
ஐங்கரன் சித்தி விநாயகன்
செங்கதிர் புரைகழற் சேவடி தொழுதே."

மதங்கர் - கூத்தர்; அன்னாருக்கு ஒரு சிரோரத்தினம்போன்றாரை மதங்கசூளாமணியெனல் பொருத்தமாகும். உலகனைத்தும் ஒரு நாடக மேடையாமெனவும், ஆடவரும் பெண்டிரும் அந் நாடகமேடையினுட் புகுந்து நடிக்கின்ற கூத்தருங்கூத்தியருமாவரெனவுங்கூறிய ஓர் ஆங்கிலக் கவிவாணர் உளர். சிறந்த நாடகக்கவியாகிய இப்பெருந்தகையார் உலக வாழ்க்கையனைத்தையுமே ஒரு நாடகமாகக் கற்பித்து அதனை மதலைப் பருவம், பாலப்பருவம், யௌவனப்பருவம், வீரப்பருவம், நீதிப்பருவம், வயோதிகப்பருவம், இறுதிப்பருவம் என ஏழங்கமாக்கிக்கூறியது சால வுஞ்சிறப்புடைத்து. அக்கூற்று வருமாறு:—

"அங்கணுல கனைத்தினையும் ஆடரங்க மெனலாகு மவனி வாழும்
மங்கையரை யாடவரை நடம்புரியு மக்களென மதித்தல் வேண்டும்
இங்கிவர்தாம் பலகோல மெய்தினின்ற நாடகத்தி னியல்பு கூறிற்
பொங்குமங்க மேழாகிப் போக்குவர விருக்கையொடு பொருந்து மன்றே.

முதலங்கத் தியல்புரைப்பின் முலைப்பருந்தி மணியிதழ்வாய் முகிழ்திறந்து
குதலைச்சின் மொழிமொழிந்து செவிலித்தாய் கரதலத்திற் கூத்து மாடித்
திதலைப்பொன் செறிதனத்தார் சேர்த்தணைகச் சிறுநகையிற் சிறப்புக் காட்டும்
மதலைச்செம் பருவத்தின் வனப்பனைத்தும் விளங்குகின்ற மார்க்க மாகும்.

மணிமருள்வா யிளஞ்செவ்வி மதலையென நடித்தமகன் வதன நோக்கம்
அணிசிறையு மோரைந்தாண் டைதலுமே கணக்காய ரகத்தை நோக்கி
இணைபிரிந்த விளஞ்சிந்தை பின்னீர்க்க முன்னேகி யிளஞா யிற்றின்
குணநிறைந்த சிறுபொழுதிற் குறுகிநடந் துறுகின்ற குறிப்பி ரண்டே.

எல்லைவந்த மூன்றாகு மங்கத்தின் குறிப்புரைப்பி னேருஞ் சீரும்
புல்லநின்ற யௌவனமாம் பருவமுற வேனில்வேள் பொருபோர் வேட்டு
மெல்லிநல்லார் தமைநாடி யன்னவர்தங் கட்புருவம் வியந்து பாடிச்
சொல்லரிய காமவன லுளம்வெதுப்ப நெடிதுயிர்க்குந் தோற்ற மாகும்.

அடலரியே றெனவார்த்துப் புலிமுகத்த னிவனென்ன வடுபோர் வேட்டுப்
படுகளத்தி லதிரிடிபோற் படிந்துறுமும் பீரங்கிப் படைமுன் னுக
மிடல்சிறப்பப் பொருதெனினும் புகழ்பெறுவன் யானென்ன வீர மேவல்
தொடர்புடைய நான்காகு மங்கத்தின் குறிப்பென்னச் சொல்ல லாமே.

வட்டவுரு வெய்துதரம் வடிவினிற்சற் றகன்றுநிற்ப மனத்தி னீர்மை
திட்டமுற நயனத்திற் சினக்குறிப்பு மருட்குறிப்புஞ் சேர்ந்து நிற்பச்
சட்டமுறை யறிந்தெவர்க்குஞ் சமனிலையாய் நீதிசொலும் சார்பின் மேவி
இட்டமுறும் பெருமகன்ற னியனிலையை யைந்தென்ன வியம்ப லாமே.

முதுமையுற வுடல்தளர்ந்து முகஞ்சுருங்கி யுருக்குலைந்து மூப்பின் றோற்றம்
இதுவெனக்கண் டௌமெலிய விணைவிழியிற் படிகக்கண் ணியைந்து நிற்பக்
கதுமெனவே யிருமல்வரக் காறளர்ந்து தள்ளாடிக் கருத்து மாறிக்
குதலைமொழிச் சிறுவருரை குலவுகின்ற கிழப்பருவங் கூறி னாறே.

"பண்ணியையு மென்மொழிசேர் பாலரொக்குங் கிழப்பருவம் பயின்ற பின்னர்க்
கண்ணிணைகள் நோக்கொழியப் பல்லொழியச் சுவையொழியக் கருத்து நீங்க
உண்ணுமுணவொழித்தனைத்துமொழிந்துமறைந்துயிர்வாழ்க்கை யொருவுந் தோ
எண்ணுமிந்த நாடகத்தி னிறுதியென யாமெடுத்தி யம்பு வாமே." [ற்றம்

இவ்வாறு உலகவாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக்கூறிய இக் கவிவாணர் வனப்பின்மிக்க நாடகநூல்கள்பலவற்றை உலகுக்கு அளித்துள்ளார். அஃதன்றி, அரங்கினுட்புகுந்து தாமும் கூத்தருள் ஒருவராக நின்று நடித்துள்ளார். நாடகக்கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறரிலர். ஆதலால் ஷேக்ஸ்பியர் என்னும் இயற்பெயர் பூண்ட இக் கவிவாணரை யாம் மதங்கசூளாமணி யென வழங்குவாம். இவரது நாடகங்களுள் அமைந்துகிடந்த வனப்பினுட் சிலவற்றை

யாராயப்புகுந்த இவ்வுரைத்தொடரும் மதங்கசூளாமணியென வழங்கப் பெறும்.

கவிவாணர் இயற்பெயரைத் தமிழ்மொழியாக்கிச் செகசிற்பியார் என வழங்குதலும் பொருத்தமாகும். என்னை? நலனில்லாச் சிலையுருவை உளியாற் செதுக்கி நலனிறைந்த திருவுருவமாக்குவோன் கைவல்ல சிற்பியெனப்படுவானன்றே? அங்ஙனமாதலின், அயன்படைத்த படைப்பினும்பார்க்க நயன்படைத்த மெல்லியலாரையும் ஆடவரையும் உருப்படுத்தியுதவும் நாடகக்கவியை யென்னென்று புகழ்ந்தேத்துவதென உன்னுமிடத்துச் "செகசிற்பியா"ரெனப் புகழ்ந்து போற்றுதல் சிறப்புடைத்தாமெனப் புலப்படுகின்றது.

கம்பநாட்டாழ்வார் அகலக்கவிகளுள் முதன்மைபெற்றுவிளங்குவதுபோலச் செகசிற்பியார் நாடகக்கவிகளுள் முதன்மைபெற்றுவிளங்குகின்றார். இவர் அமைத்த நாடகநூல்கள் தமிழறிஞர் வகுத்துரைத்த சந்தியுஞ் சுவையுஞ் சத்துவமும் பிறவுமென்னும் நாடகவுறுப்புக்களனைத்தும் செவ்விதினமைந்துகிடக்கு மியல்பினவாதலின், அவற்றையாராய்தல் நாடகத்தமிழாராய்ச்சிக்கு இன்றியமையாததாமென எனது உள்ளத்துப் புலப்பட்டது. அஃதன்றியும், "வடவேங்கடந் தென்குமரி" யென வெல்லைவகுத்தது எழுத்திலக்கணத்துக்குஞ் சொல்லிலக்கணத்துக்கும் மாத்திரந்தானே. "இமையோர்தேளத்து மெறிகடல்வரைப்பினு-மவையில் காலமின்மை யான" வென்றமையால் அறம் பொருள் இன்பமும் அவற்றினது நுகர்ச்சியும், அவற்றைக்கூறும் பொருணூலும் நாடகநூலும் என்னும் இவை யாண்டும் ஒப்பமுடிந்தனவாம். ஆதலால், பிறமொழியாளர் வகுத்துரைத்த நாடகநூலுள் ஏற்பனவற்றைக் கொள்ளுதலால் எய்துவதோர் இழுக்கில்லை.

"இனி இசைத்தமிழ்நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன்செய்த பஞ்சபாரதீய முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ்நூலாகிய பரதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சாரார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையு மிறந்தன போலும்" என ஆசிரியர் அடியார்க்குநல்லார் கூறினாராதலின், தொன்மை

வளஞ்சான்ற நாடகப்பெருநூல்கள் அவர்காலத்துக்குமுன்பே யழிந்து போயின. அவர்காலத் திருந்தநூல்களும் பின்ன ரழிந்தொழிந்தன. அடியார்க்குநல்லார் இயற்றியருளிய சிலப்பதிகாரவுரையில் ஆங்காங்குக் காட்டப்பட்டிருக்கும் நாடகவிலக்கணமுடிபுகளை யாதாரமாக நிறுத்திச் செகசிற்பியாருடைய நாடகநூல்களை இலக்கியமாகப் பொருந்தவைத்து ஆராய்வதுகருதிற்று இவ்வாராய்ச்சி. அடியார்க்குநல்லார்காலத்திருந்து பின்ன ரிறந்துபோன இசைநாடகநூல்களாவன:— "தேவவிருடியாகிய குறுமுனிபாற்கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டியென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலனென்னுந் தெய்வப்பாண்டியன் தேரொடு விசும்புசெல்வோன் திலோத்தமையென்னுந் தெய்வமகளைக் கண்டு தேரிற்கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச்செய்த இசைநுணுக்கமும், பாரசைவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார்செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார்செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார்செய்த முதநூல்களினுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ்நூலும்" என்பன.

மேலைப்பிரிவினுட் குறிப்பிட்ட நூல்களினின்றும் எடுக்கப்பட்ட சூத்திரங்கள்சில அடியார்க்குநல்லாருரையால் அறியக்கிடக்கின்றன. அவற்றானுணரப்படும் இலக்கணமரபுக்கு இலக்கியமாகிய நாடகங்கள் இறந்தொழிந்தன. பிற்காலத்துத்தோன்றிய நாடகங்கள் சந்தி, சுவை, பொருளொருமை யென்னு மிவற்றைத் தெளிவுறக்காட்டாது விரவி நடந்த காரணத்தால் அவற்றை இலக்கணமமைந்தநாடகங்களெனச் சொல்லுதற்கு இடமில்லை. இனிப் புதுநாடகமமைப்பதற்கு முற்படும் கவிஞருக்கு முறையறிந்தமைப்பதற்கு உதவியாகிய கருவிநூலு மில்லை. செஞ்சொற்புலவர் செவ்விநிறைந்த நாடகங்களை யமைத்துதவாதகாரணத்தினாலே கல்வியறிவில்லாதார் கண்டகண்டவாறு நாடகங்களை யமைக்கமுற்பட்டு நாடகத்துக்கே ஓர் இழிந்த பெயரையுண்டாக்கிவிட்டனர். உயிர்க்குறுதிபயக்கு மருந்தினை உண்ணவிரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்துவைத்து உதவுகின்ற அன்புடையாளன்போல, உயிர்க்குறுதிபயக்கும் உண்மையினை

நவரசங்களுட் செறிந்துவைத்து உதவுஞ்சீர்மையது நாடகம். நாடகக் கவி தன்னை யோர்வைத்தியனென அறிதல்வேண்டும். நோயாளி யிடத்துப் பொருளினைப்பெறுதல்கருதிப் பொருந்தாப்பண்டத்தை மருந் தெனக்கொடுக்கும்வைத்திய னுளனுயின் அவனுல் விளையுங் கேட்டுக் கோர் அளவில்லை. காமக்கனலை மூட்டுதற்கெண்ணிச் சிற்றின்பச்சரிதை களை நாடகமாக்கியுதவும் போலிநாடகக்கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற கேடு மேற்குறித்த போலிவைத்தியனுல் விளைகின்ற கேட்டினைப்பார்க் கினும் பல்லாயிரமடங்கு பெரிது. முத்தமிழினு ளொன்ருகிய நாட கத்தை வெறுத்தொதுக்காது அதனை யாராய்ந்து சீர்ப்படுத்தி நல்ல நாடகங்களையமைப்பது கற்றுவல்லோர்கடனுகும்.

நாடகவியலினை யாராயப்புகுந்த இச்சிற்ருராய்ச்சியிற் கண்ட முடிபுகளனைத்தும் பலநாளாக என் னுள்ளத்தினுட் பயின்றுகிடந்தன. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்துமூன்ரும்வருடோத்ஸவத்துக்குச் சென்றிருந்தபோது அவற்றினைத் தொகுத்துத் தமிழ்நாட்டுப்பெரும் புலவர் குழுமியிருந்த வித்துவக்கழகத்திற் பெரும்புலவருட் பெரும் புலவராகிய மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்களது தலைமை யின்கீழ் இயன்றவரை விரித்துக்கூறினேன். இவ்வாராய்ச்சி பயன் றரத்தக்கதென மஹாமஹோபாத்யாயரவர்களும் ஏனையபுலவர்களும் பாராட்டினுர்களாதலாலும் சங்கத்துக் கௌரவகாரியதரிசியாராகவிருந்து தமிழபிவிருத்திக்காகப் பல்லாற்ருனும் முயற்சித்துத் தமதுகைப் பொருளையும் நேரத்தையுஞ் செலவிட்டுவருபவரும் எனது நண்பருமாகிய மதுரை ஹைக்கோர்ட்வக்கீல் ஸ்ரீமாந் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இவ்வாராய்ச்சியை விரிவுற எழுதி வெளியிடவேண்டுமென்று பலமுறை கூறி ஊக்கப்படுத்தினுர்களாதலினுலும், இதனை எழுதி வெளியிடத் துணிந்தேன். சங்கப்புலவர் வீற்றிருந்து தமிழாராய்ந்த நான்மாடக் கூடலிலிருந்து இவ்வாராய்ச்சியை எழுதப்பெற்ற பெரும்பேற்றினை நினைக்கும்போது என்னுள்ளம் உருகுகின்றது. சிறியேனுகியயான் எடுத்துக்கொண்ட இக்கருமம் இனிது நிறைவுறும்பொருட்டு உலக மாதாவாகிய மீனுக்ஷியம்மையாரும் சோமசுந்தரக்கடவுளும் திருவருள் பாலிப்பாராக.

உறுப்பியல்.

க. திருமலியுலகினிற் புலவராற் பாடுதற்கமைந்த இருவகை வழக்கினுள்ளே நாடகவழக்கினை யாராயப்புகுந்த இவ்வாராய்ச்சியை உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று இயலாக வகுத்துக்கொள்வாம். முதனின்ற உறுப்பியலுள் நாடகவுறுப்புக்கள் இவையென ஆராய்ந்துணர்வாம். எடுத்துக்காட்டியலினுள், செகசிற்பியார் இயற்றிய நாடகங்கள் பன்னிரண்டினைச் சந்தியும் சுவையும்நோக்கி யாராய்வாம்; ஒழிபியலுள் எஞ்சிய நாடகவிலக்கணமுடிபுகளை இயன்றவரை யாராய்ந்துணர்வாம்.

உ. நாடகம் - கதை தழுவிவருங்கூத்து. சாந்திக்கூத்தின்வகை நான்கினுள் இஃது ஒன்று என்ப. "சாந்திக் கூத்தே தலைவ னவிநய, மேந்தி நின் றாடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடக, மென்றிப் பாற்படு மென்மனார் புலவர்" என்றமையாற் சாந்திக்கூத்து நால்வகைப்படுமெனவும், அவ்வகைதாம் சொக்கம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து, நாடகம் என்பனவாமெனவும் அறிகின்றாம். இவற்றுள், சொக்கமென்பது சுத்தநிருத்தம். மெய்க்கூத்து அகச்சுவைபற்றியெடுத்தலின் அகமார்க்கமெனப்படும். அவிநயக்கூத்தாவது நிருத்தக்கை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து. இவற்றின்விரிவைப் பின்னர் ஒழிபியலுட் கூறுவாம். சாந்திக்கூத்து என்னும் பெயர்க்காரணத்தை நோக்கும்போது, நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து ஆதலின் சாந்திக்கூத்தெனுங் குறியீடுபெற்றது என அறிகின்றாம். சாந்தமாக ஆடிய கூத்தை ஒருவகைப்படுத்துக்கூறலின், சாந்தமின்றியாடிய கூத்தும் உளவோவென ஆராய்த லொருதலை. கொற்றவைநிலை, காந்தள், வள்ளிக்கூத்து, கழனிலைக்கூத்து, பிள்ளையாட்டு, ஆர்மலைந்தாடியகூத்து எனப் புறத்திணையுட்கூறப்பட்ட பல்வகைக்கூத்தும், "மாற்றானொடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்-மேற்படக் கூறும் வென்றிக் கூத்து"ம், பல்வகையுருவமும் பழித்துக்காட்டவல்லவனொருவன் பிறர்இழுக்கத்தைப் புலப்படுத்தும்பொருட்டுப் பழித்துக்காட்டும் வசைக்கூத்தும், மறியறுத்துக் குருதிப்பலிசெலுத்தி வேலனைவழுத்திநின்றாடும் வெறியாடலும், குரவைக்கூத்து, கழாய்க்கூத்து, குடக்கூத்து, காணக்கூத்து,

நோக்குக்கூத்து, தோற்பாவைக்கூத்து என அறுவகைப்பட்டுநின்ற விநோதக்கூத்தும் பிறவும் சாந்தநிலைதவறியநீர்மையவாதலின் சாந்திக் கூத்தின் வேறாயின.

௩. சாந்திக்கூத்தின்வகை நான்கினுள் ஈற்றில்நின்ற நாடகம் பல்லாற்றானும் சிறப்புடையது. உள்ளத்து நிகழ்ந்தநிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப்படுத்துவதற்கு அவிநயம், இசை, மொழிப்பொருள் என்னும் மூன்றும் பயன்படுவன. இம்மூன்றினையும் தழுவிநின்றமையால் நாடகஞ் சிறந்தது. மொழிக்கு இயற்கையாகவமைந்த பொருள் கருவியாக உள்ளத்துநிகழ்ந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழின்றன்மை. மொழிப்பொருளோடு இசையுஞ்சேர்ந்துநிற்க மனக்குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத்தமிழின்றன்மை. மொழிப்பொருள், இசையென்னும் இரண்டினோடு அவிநயமுஞ் சத்துவமுஞ் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறருக்குப் புலப்படுத்துவது நாடகத்தமிழின்றன்மை. அங்ஙனமாதலின், குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் இவற்றோடுகூடிநின்ற ஒன்பது வகைச் சுவையும் நாடகத்துக்கே சிறப்பியல்பாக வுரியனவென்பது பெறப்படுகின்றது. இவற்றினை நாடகத்தினுள் அமைக்குமிடத்துச் சாந்தநெறிதவறாதநீர்மையவாக அமைத்தல்வேண்டும். அங்ஙனம் அமைத்தற்குரியமார்க்கத்தை எடுத்துக்காட்டியலினுள் விரித்துவிளக்குவாம். இயற்றமிழுக்கு அணியெனவமைந்துநின்ற ஒன்பதுவகைச் சுவையும் நாடகத்தமிழுக்கு இன்றியமையா உறுப்புக்களெனநின்றனவாதலால் அவற்றினை இவ்வாராய்ச்சியினுள் விரிவுற வாராய்தலும்வேண்டும்.

௪. மேற்கூறியபடி சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் நான்கும் நாடகவுறுப்புக்களாம்; இவை யொருபாலாக இவற்றொடு பொருள், சாதி, யோனி, விருத்தி யென நான்கும், சொல், சொல்வகை, வண்ணம், வரி யென நான்கும், சந்தி, சேதம் என விரண்டும்கூடிய பதினான்கும் நாடகவுறுப்புக்களாம். இவற்றினுட் சந்தியென்னுமிலக்கணம் நாடகத்தினது அமைப்பினைக் காட்டும் நீர்மையதாதலின் முதலில் அதனையாராய்ந்து அப்பாற்செல்வாம். "சந்தியிற் றொடர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி" எனத் தண்டி

யாசிரியர் காப்பியவிலக்கணங் கூறினாராதலினால், சந்தியென்னும் இலக்கணம் காப்பியத்துக்கு முரியது. கத்தியரூபமாகமுடிந்த கதைகளுக்கு முரியது. சந்தி ஐந்துவகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என விவை. இவற்றை ஒரு உதாரணத்தினால் விளக்குவாம். கீழ்மக்களது நட்பினை எய்துதலினும்பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை அறிவுறுத்துதற்கு ஒருபுலவன் ஒருநாடகம் அமைக்கப்போகின்றானென்று வைத்துக்கொள்ளுவோம்.

> "செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
> எய்தலின் எய்தாமை நன்று."

[செய்துவைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது நட்பு ஒருவர்க்குண்டாதலின் இல்லையாதல் நன்று.]

> "உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை.
> பெறினும் இழப்பினும் என்"

[தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினைப் பெற்றால் ஆக்க மியாது ? இழந்தாற் கேடியாது?]

> "கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
> யுள்ளினு முள்ளஞ் சுடும்"

[ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டுநீங்குவார் முன் அவனோடு செய்தநட்புத் தன்னைக் கூற்றடுங்காலத்து ஒருவனினைப்பினும் அந்நினைத்த உள்ளத்தைச் சுடும்.]

மேற்காட்டிய மூன்று திருக்குறட் பாக்களும் அமைக்கப்புகுந்த நாடகத்துக்கு "வித்து" என்னும் நீர்மைய. வித்தினையெடுத்து உழவினாற் சமைக்கப்பட்ட புழுதியினுள்ளே விதைத்தால் அதுமுளைத்து, நாற்றாகிக், கருப்பமுற்றி, விரிந்து, கதிர்திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முற்றி விளைய, விளையப்பட்டபொருளை அப்பொருளுக்குரியோர் அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வார். இம்மரபே நாட்டியக்கட்டுரையும் ஐவகைப்படும். "முகமாவது எழுவகைப்பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுளிட்ட வித்துப் பருவஞ்செய்து முளைத்துமுடிவதுபோல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல்முதலாய் இலைதோன்றி நாற்றாய்முடிவது

போல்வது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட்பொருள்பொதிந்து கருப்பமுற்றிநிற்பதுபோல்வது. விளைவாவது கருப்பமுதலாய் விரிந்து கதிர்திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முற்றி விளைந்துமுடிவதுபோல்வது. துய்த்நலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வதுபோல்வது". இங்ஙனம் ஐந்து சந்தியாகப் பகுத்துக்கொண்ட முறையினையே செகசிற்பியாரும் மாறாது கைக்கொண்டார். முளையினைக் கண்டோர் விளைவு இதுவென ஊகித்தறிந்துகொள்ளுதல்போல நாடகத்தின் முகத்தினைப் படித்தமாத்திரத்தே விளைவு இதுவாகும் என ஊகித்தறிந்துகொள்ளத்தக்கதாக முதற் சந்தியாகிய முகம் அமைக்கப்பட்டிருந்தல்வேண்டும். முதற்சந்தியாகிய முகத்தில் கட்டியக்காரன், விதூஷகன், சூத்திரதாரன், அரசன், மந்திரியென்னும் இவரைமாத்திரம் வருவித்து நிறுத்தி அரசன் நாட்டுவளம் விசாரிப்பதோடு முடித்துவிட்டால், பார்ப்போருடைய உள்ளம் ஒரு வழிப்படாது பலவழியிலுஞ்சென்று மேல்நடப்பது இதுவாமோ அதுவாமோ வென ஐயப்பாடுற்று அலையும். ஆதலினால் முதற்சந்தியாகிய முகத்திலேயே விளைவு ஒருவகையாகக் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். கீழ்மக்களது நட்பினையெய்துதலினும் பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை யறிவுறுத்துதற்கு எழுந்தநாடகத்துக்கு நாடகபாத்திரராவார் யாவராகவிருத்தல்வேண்டுமெனின், கதாநாயகனாக ஒரு செல்வப்பிரபு வேண்டும்; அவரது செல்வத்தையுண்டு அநுபவித்துப் பின்னர் வறுமைவந்துற்றகாலத்து அவரைவிட்டுப் பிரிந்து அவரை இகழ்ந்தவமதிக்கின்ற பொய்ந்நண்பர் ஒருவரோ பலரோ விருத்தல்வேண்டும்; பிரபுவுக்கு வேண்டியவிடத்து இடித்துரைகூறும் அறிவுடையோன் ஒருவன் இருத்தல்வேண்டும்; உண்மையுள்ள ஒரு வேலைக்காரன் இருத்தல்வேண்டும்; இச்சகம்பேசுவார் பல ரிருத்தல்வேண்டும் என்பது. செல்வப் பிரபுவானவர் நட்பாராயாது பலரையும் நட்புச்செய்தாரென்றும், இச்சகம்பேசுவோருக்குத் தமது பொருளெல்லாமளித்தகாரணத்தினாலே யவருக்கு வறுமைவந்துற்றது எனவும், தான் நட்பாளராகக்கருதியவரிடத்துச் சிற்றளவு உதவிபெறுதற்கு முயன்றாரெனவும், அன்னோர் மறுத்தாரெனவும், பிரபுவை யிழித்துரைத்தாரெனவும், பிரபு அன்னோர் கண்முன் னிருக்காது காட்டிற்சென்றனரெனவும், ஆங்கு ஒரு பொற்

குவை யகப்பட்டது எனவும், அவர் பொன்னுல்லிழையும்கேட்டை யனு பவித்தவ ராதலினால், பொற்குவியலைக் கருதிற்றிலரெனவும், அவ்வழி ஒருசேனைத்தலைவன்சென்றானெனவும், அவன் அப்பிரபுவின் பக்கலிருந்த பொற்குவியலைக்கண்டு விழைந்து நின்றானெனவும், அவனை அக்குவியலை யெடுத்துக்கொள்ளும்படி பிரபு அநுமதிகொடுத்தாரெனவும், அதனைப் பெற்ற போர்வீரன் நன்றியறிதலுக்கு அறிகுறியாகப் பிரபுவின்நாட் டினைத் தாக்கித் தீநட்பாளரை யழித்தானெனவும், இவ்வாறே பிற வாறே பொருளை வகைசெய்து நாடகக்கட்டுரை வகுத்துக்கொண்டபின்பு ஏற்றபெற்றியறிந்து ஐந்துசந்தியாகப் பகுத்துக்கொள்ளலாம். செக சிற்பியார் இத்துறைமேல் "தீநட்பஞ்சிய தீமோன்சரிதை" எனப் பெய ரிய ஒரு நாடகஞ் செய்திருக்கின்றார். அதன் சந்திமுதலியவற்றை எடுத் துக்காட்டியவினுட் கூறுவாம். சேதம் என்பது கதையை நாடகத்துக் கொப்பச் சேதித்திடுவது. பாதுகாபட்டாபிஷேகம், வாலிமோக்ஷம், குசலவசரிதை என்னும் நாடகங்கள் இராமாவதாரப் பெருங்காப்பியத் தின் பாகங்களாயினமையை நோக்குக.

ரு. இனிச், சுவை குறிப்பு சத்துவம் அவிநயம் என்னும் நான்கு உறுப்புக்களையும் ஆராய்ந்துணர்வாம். ஒன்பது சுவையாவன: வீரச் சுவை, அச்சச்சுவை, இழிப்புச்சுவை, அற்புதச்சுவை, இன்பச்சுவை, அவலச்சுவை, நகைச்சுவை, நடுவுநிலைச்சுவை, உருத்திரச்சுவை யென் பன. இவற்றினுள் நடுவுநிலை ஐம்புலமடங்கிய அறிவர்பால் நிகழ்வது. இவர் காமம் வெகுளி மயக்கத்தினின்று நீங்கியவராதலால், யாவருங் கண்டஞ்சும் யமனுக்கும் அஞ்சார்; எத்துணை இளிவரல்காணினும் இழித்துக்கூறார்; கல்வி நிறைந்திருந்தும் அதனைப் பொருளெனக் கொள்ளாக் காரணத்தினுற் பெருமிதங் காட்டார்; புதுமை, பெருமை, சிறுமை, ஆக்க மென்பன நிலையில்பொருள்களென அறிவாராதலினால், அவற்றினைக்கண்டு வியப்புறார்; துன்பம் வந்தெய்தாத் தூயவுள்ளத்தை யுடையாராகிய இவர் இன்பத்தை விழையார்; நகையாடார்; வெகுளார். ஆதலினாற் சமநிலை யெனப்படும் நடுவுநிலை பொருந்திநிற்கும் நல்லோ ரிடத்து "நகையே யழுகை யிளிவரன் மருட்கை, யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென, றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப" எனத் தொல் லாசிரியர் வகுத்துக்கூறிய எண்வகைமெய்ப்பாடும் நிகழாவாம். ஒரோ வழி யிகழுமிடத்துக் காமம் பற்றுக்கோடாக நிகழாது அருள் பற்றுக்

கோடாக நிகழுமென்பது. இக்காரணத்தினாற்றான் "பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும், கண்ணிய புறனே நானான் கென்ப" என முடியுடைவேந்தரும் குறுநிலமன்னரு முதலாயினோர் நாடகமகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் காமநுகரும் இன்பவிளையாட்டினுட் டோன்றிய மெய்ப்பாட்டுவகையை யுணர்த்தப்புகுந்த ஆசிரியர் தொல்காப்பியனார் நடுவுநிலையை ஒன்றாகவைத்து ஓதாராயினார். "ஆங்கவை யொருபா லாக வொருபால், உடைமை யின்புற னடுவுநிலை யருளல்" என்னுஞ் சூத்திரத்தாள் நடுவுநிலை கூறப்பட்டது. ஒன்பது சுவையினுள் ஒன்றாகிய நடுவுநிலையொழித்து ஒழிந்தனவற்றைக் கூறுதலின் மெய்ப்பாடு எட்டாயின.

௬. இவற்றினுள் இன்பம் (உவகை), நகை, வியப்பு (மருட்கை) என்னும்மூன்றும் ஒருபாலாகி யகத்திணையைச் சார்ந்துநின்றன. வீரம், வெகுளி (உருத்திரம்), அவலம் (அழுகை), அச்சம், இளிவரல் என்னும் ஐந்தும் ஒருபாலாகிப் புறத்திணையைச் சார்ந்துநின்றன. அகத்திணையினுள் வீரமுதலிய ஐந்தும் புறத்திணையினுள் இன்பமுதலிய மூன்றும் ஓரோவழித் தோற்றுவவெனினும் பெருவரவுபற்றி இவ்வாறு வகுத்துக் கொள்ளுதலால் எய்தியதோர் இழுக்கில்லை. அகத்திணையைச் சார்ந்து இன்பம், நகை, வியப்பு என்னும் மூன்று மெய்ப்பாடும் தோற்றநின்ற நாடகங்களை மேனாட்டார் கமிடி (comedy) யென்பர்; புறத்திணையைச் சார்ந்து வீரமுதலிய வைந்தும் விளங்கநின்ற நாடகங்களை மேனாட்டார் ரிருஜெடி (tragedy) யென்பர். இவற்றை நாம் முறையே வேத்தியல் பொதுவியலென வழங்கலாகும். "காடுகெழுசெல்விக்குப் பராவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப்புறக்கூறி வழுத்திநின்றாடும் கொற்றவைநிலையாகிய பொதுவியற்கூத்தும், வெறியாட்டயர்ந்த வெங்களத்துக் குருதிப்பலிசெலுத்தி வேலனை வழுத்திநின்றாடும் காந்தளாகிய பொதுவியற்கூத்தும் ஒருபுடை யொப்பெனற்குரிய பொதுவியற் கூத்தே பண்டை யவனபுரத்தில் ரிருஜெடி என்னும் பெயரால் வழங்கப்பட்டது; ரிருஜெடி யென்னுஞ் சொல்லுக்குப் பொருள் "ஆட்டுமறிக் கவிதை" யென்பது; உண்டாட்டுத்தெய்வமாகிய தயனிச (Dionysus) னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங்காலத்து, ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியையும் அவனைப் பரவும் வீரரதுபுகழையும் கூறுவதே ரிருஜெடிக்கு உரியபொருளாயிருந்தது

எனவும், வேனில்வேளாகிய தயனிசன் என்னுந் தெய்வத்துக்கு விழாக் கொண்டாடுங்காலம் மாவும் புள்ளுந் துணையொடுவதியும், வசந்தகாலமாதலினால் அக்காலத்து உண்டாட்டினாற் களிதியங்கினோரும் யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து காமநுகர்வோருமாகிய இளையாருடைய உள்ளத்தில் உவகையும் நகையும் தோற்றுவது இயல்பேயாம்; நகைச்சுவையும் உவகைச்சுவையும் நிறைந்த நாடகங்கள் கமிடி எனப் படுவன; இச்சொல்லுக்குப்பொருள் சிறுநடிப்பாட்டு, பண்ணைப்பாட்டு என்று கொள்ளலாகும்," எனவும் யாம் மேற்றிசைச் செல்வம் என்னும் தொடர்நிலையுரையினுட் கூறியன ஈண்டு ஆராயத் தக்கன.

எ. சுவையை யாராயுமிடத்துச் "சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்பும், குறிப்புக்கள்பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர்சிலிர்த்தலு முதலாக உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை யெட்டோடுங்கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ முப்பத்திரண்டாம்," எனப் பொருளதிகாரவுரையாசிரியர் கூறினர். சுவைக்கப்படும்பொருளையும் சுவையுணர்வையும் இருவேறுநிலனாகவைத்து ஆராய்ந்தமைக்கு அவர் கூறிய காரணங்களைத் தருவாம். "நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவானொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவையெனப்படும். வேம்பென்னும்பொருளும் நாவெனும்பொறியும் தலைப்பெய்தவழியல்லது கைப்புச்சுவை பிறவாததுபோல், அப்பொருள் கண்டவழியல்லது நகையும் அச்சமுந் தோன்றா. ஒழிந்த காமமுதலியனவும் அன்ன. இக் கருத்தேபற்றிப் பிற்காலத்து நாடகநூல்செய்த ஆசிரியரும் 'இருவகை நிலத்தி னியல்வது சுவையே' என்றாரென்பது. இனி இருவகைநிலனென்பன உய்ப்போன்செய்தது காண்போர்க்கெய்துதலன்றோவெனின், சுவையெனபது ஒப்பினானாபபெயராகலான வேம்புசுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினாற் பிறனுணரான், இவன் கைப்புச்சுவைத்தானெனக் கண்ணுணர்வினான் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒருபொருள் கண்டு அஞ்சி ஓடிவருகின்றானொருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலாயினகண்டு

அஞ்சினு னென்றறிவதல்லது வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான்கண்டானுயின் அதுவுஞ் சுவைபெனவேபடும். ஆகவே அஞ்சினுனைக் கண்டு நகுதலுங் கருணைசெய்தலும் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின்பெற்றியாற் செல்லாதாகலின் இருவகை நிலமெனப் படுவன சுவைப்பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல்வேண்டுமென்பது." சுவைக்கப்படும் பொருளும் சுவையுணர்வுங் கூடியவழிச் சுவைபிறக்குமென அறிந்தாம்; குறிப்பு என்பது இவற்றின் வேறுபட்டதோவெனின், "குறிப்பென்பது, கைப்பின் சுவையுணர்வுபிறந்தவழி வெறுப்புமுதலாயின உள்ளநிகழ்ச்சிபோல அஞ்சுதக்கனகண்டவழி அவற்றை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி" யாதலினுல் இது சுவைக்கப்படும்பொருள் சுவையுணர்வு என்னும் இரண்டினும் வேறுபட்டது என்று அறிதல்வேண்டும். சத்துவம் என்பது, அவ்வுள்ளநிகழ்ச்சிபிறந்தவழி வேம்புதின்ருர்க்குத் தலை நடுங்குவதுபோலத் தாமே தோன்றும் நடுக்கமுதலாயின. அங்ஙனந் தோன்றிய சத்துவத்தைப் பிறருக்கறிவுறுத்தும்பொருட்டுப் பாவகப் படுத்துஞ்செய்கை அவிநயம் எனப்படும். இவற்றை யின்னும் தெளிவுறவிளக்கும்பொருட்டு மனநூல் (Psychology) முடிபு சிலவற்றைத் தருவாம். காட்டிற்சென்ற ஒருமகன் ஒரு வேங்கைப்புலியைக் கண்டான். கண்டமாத்திரத்தி லவனுள்ளத்தே யச்சவுணர்வு தோன்றிற்று. அவ் வரிவேங்கை தன்னுயிரை வௌவுமேயென்று அவன் எண்ணியவழி அச்சக்குறிப்புத் தோன்றிற்று; அச்சக்குறிப்புத்தோன்ற உடல் நடுக்க மாகிய சத்துவந்தோன்றிற்று. இங்ஙனம் அஞ்சிய மகன் பின்னெரில் நாடகவரங்கத்து முன்னர்த் தான் அநுபவித்த சுவையுணர்வைப் பிறர்க்குப் புலப்படுத்தமுயன்றவெல்லையிற் பாவகமாகிய அவிநயம் பிறக்கும். ஆசிரியர்செயிற்றியனுர் சுவையுணர்வையுஞ் சுவைப்பொருளையும் ஒன்றாக அடக்கிச் சுவை, குறிப்பு, சத்துவம் என மூன்றாக்குவர்; அவிநயத்தைத் தனித்துக்கூறுவர். குறிப்புஞ் சத்துவமும் சுவையினுள் ளடங்க "எண்ணான்கு பொருளும்" எட்டாய்முடிவனவாதலின், "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" என ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறினர்.

அவர் சமநிலைகூறுமைக்குப் பொருளதிகாரவுரையாசிரியர் காட்டிய காரண மெதுவெனின் "சமநிலைக்கு ஓர்விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதில னென்பது; அதற்கு விகாரமுண்டெனின் முன்னையெட்ட னுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப்படும். அஃதல்லதூஉம் அஃ துலகியல் நீங்கினார்பெற்றியாகலின், ஈண்டு உலகவழக்கினுட் சொல்லியதிலனென் பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினான்" என்பது.

அ. சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் இவற்றினது இலக்கணத்தை இப்பிரிவினுள் தொகுத்துக்கூறுவாம்; மேல் எடுத்துக் காட்டியவினுள் இலக்கியங்காட்டி விரித்துவிளக்குவாம்.

நகை:—"எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

எள்ளல் என்பது இகழ்ச்சி. தான் பிறரையெள்ளிநகுதல், பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதல், இளமையாற் பிறரை நகுதல், பிற ரிளமைகண்டு தான் நகுதல், தன்பேதைமையாற் பிறரை நகுதல், பிறர் பேதைமைபொருளாக நகைதோன்றுதல், தன்மடத்தால் நகைதோன்று தல், பிறர்மடம் பொருளாக நகை தோன்றுதல் என நகைக்குறிப்பு எட்டாகும்.

"நகையி னவிநய நாட்டுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது.....................
விட்டுமூரி புருவமொடு விலாவுறுப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன வென்ப."

அழுகை:—"இளிவே யிழவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே"

இளிவென்பது பிறரான் இகழப்பட்டு எளியனாதல் இழவென்பது தந்தையுந் தாயு முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவென்பது பண்டைநிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமையென்பது போகந்துய்ப் பப்பெறாத பற்றுள்ளம். இவை நான்குந் தன்கட்டோன்றினும் பிறன் கட்டோன்றினும் அவலமாமென்பது

"அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைகை யழிதலும் நீர்மையில் கிளவியும்
பொறையின் ருகலும் புணர்த்தினர் புலவர்".

இளிவரல்:—"மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர ஞன்கே"

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை யென நான்கு பொருள்பற்றிப் பிறக்கும் இளிவரல். இவை முன்னையபோலத் தன்கட் டோன்றுவனவும் பிறன்கட்டோன்றுவனவும்பற்றி எட்டாதலுடைய.

"இழிப்பி னவிநய மியம்புங் காலை
யிடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலு
மொடுங்கிய முகமு முளுற்ருக் காலுஞ்
சோர்ந்த வாக்கையுஞ் சொன்னிரம் பாமையு
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே."

மருட்கை:—"புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

புதிதாகக் கண்டனவும், கழியப் பெரியவாயினவும், இறப்பச்சிறியனவும், ஒன்று ஒன்ருய்த் திரிந்தனவுமென நான்கும்பற்றி வியப்புத்தோன்றும். இவையும் தன்கட் டோன்றினவும் பிறன்கட் டோன்றினவுமென எட்டாதலுடைய.

"அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய விமைத்தலும் விழித்தலு மிகந்ததென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப."

அச்சம்:—"அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்
பிணங்கல் சாலா வச்ச நான்கே"

"அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறுகிய பதினெண்கணனும் நிரயப் பாலரும்பிறரும் அணங்குதற்ருெழிலாகிய சவர்தின் பெண்டிர் முதலாயினரும் உருமிசைத்தொடக்கத்தனவு மெனப்படும். விலங்

கென்பன அரிமாமுதலாகிய அஞ்சுதக்கன. கள்வரென்பார் தீத்தொழில் புரிவார். இறையெனப்படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினர். பிணங்கல் சாலா அச்சமென்றதனால் முன்னையபோல விவை தன்கட் டோன்றலும் பிறன்கட் டோன்றலுமென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிதுபொருள்பற்றியே வருமென்பது".

"அச்ச வவிநய மாயுங் காலை
யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுளனுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே."

பெருமிதம்:—"கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே"

"கல்வியும் தறுகண்மையும் புகழுங் கொடையும் என்னும் நான்கும் பற்றி வீரம் பிறக்கும். இச்சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதமென் றெண்ணினன்; என்னை? எல்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமித மெனப்படும் என்றற் கென்பது. கல்வி யென்பது தவ முதலாகிய வித்தை. தறுகணென்பது அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை. இசைமை யென்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப் பினும் பழியொடுவருவனசெய்யாமை. கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப்பொருளுங் கொடுத்தல்". இது தன்கட்டோன்றிய பொருள்பற்றி வரும். மேற்கூறிய நான்கனுள் அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமையாகிய தறுகண்மை அடுகளத்து முன்னணியினிற்கும் போர்வீரனது பெருமிதத்தைக் குறிப் பது. இதனியல்பைப் பின்வருஞ் சூத்திரங் கூறுகின்றது.

"வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறும்
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

வெகுளி:—"உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே."

உறுப்பறையென்பது, கைகுறைத்தலும் கண்குறைத்தலும்முதலாயின; குடிகோளென்பது, தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடுசூழ்தல்; அலையென்பது, கோல்கொண்டலைத்தன் முதலாயின; கொலையென்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். இது பிறன்கட் டோன்றியபொருள்பற்றிவரும்.

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்புந்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமொ டாய்ந்தனர் கொளலே."

உவகை:—"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்ல லீத்த வுவகை நான்கே"

செல்வம் எவ்பது நுகர்ச்சி. புலனென்பது கல்விப்பயனாகிய அறிவுடைமை. புணர்வு காதலிருவர் கருத்தொத்தல். விளையாட்டு யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்துவருதல். தன்கட்டோன்றியபொருள் பற்றியும் பிறன் கட்டோன்றிய இன்பம்பற்றியும் உவகை பிறக்கும்.

"காம வவிநயங் கருதுங் காலைத்
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தாரே."

நடுவுநிலை:—"செஞ்சாந் தெறியினுஞ் செத்தினும் போழினு
நெஞ்சஞ்சோர்ந் தோடா நிலை"

இது நாம் முற்கூறியவாறே காம வெகுளி மயக்க நீங்கினோர் கண்ணே நிகழ்வது.

"நாட்டுங் காலை நடுவுநிலை யவிநயங்
கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியும்
அறந்தரு நெஞ்சமும் ஆறிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும்

குறிப்பின் ஞுகலுந் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையும்
அளத்தற் கருமையும் அன்பொடு புணர்தலும்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்."

௬. எள்ளல்முதலாக விளையாட்டு இறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் ஒருபாலாக உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை நடுக்கம் என்னும் இவையும் மெய்ப்பாடாம் மேற்கூறியவற்றின்பொருண்மைய வல்லாதவிடத்து. இவற்றினுட் சிலவற்றுக்கு முந்தையோர் கூறிய இலக்கணத்தை எடுத்து மொழிவாம்.

இன்புறல்:—"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற்
றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையும்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு
மயங்கி வந்த செலவுநனி யுடைமையும்
அழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையும்
எழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையும்
கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடைமையு
நலங்கெழு புலவர் நாடின ரென்ப."

இதனொடு தொடர்புடைய உவந்தோனவிநயம் வருமாறு:—

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு
மினிதி னியன்ற வுள்ள முடைமையு
முனிவி னகன்ற முறுவனகை யுடைமையு
மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவும்
ஒருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே."

அன்பு:—"அன்புக்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்."

அடக்கம்:—"ஒருமையு ளாமைபோ லைந்தடக்கல்,"
"காங்காத்துக் கற்றடங்கல்,"

நன்மை:—"உலகத்தோடொட்டவொழுகல்."

ஐயம்:—"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
ஐய முற்றோ னவிநய முரைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும்
அறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே."

அழுக்காறமை:-"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி
னிழுக்கொடு புணர்ந்த விசைபொரு ளுடைமையுங்
கூம்பிய வாயுங் கோடிய வுரையும்
ஓம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையு
மாரணங் காகிய வெகுளி யுடைமையுங்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையு
மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவாப்
பொலிவு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

துஞ்சல்:—"துஞ்சா நின்றோ னவிநயந் துணியி
னெஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு
மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றியும்
அலந்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்".

மடிமை:—"மடியி னவிநயம் வகுக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு
மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலுங்
காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

மேற்கூறியவற்றுள் வெகுண்டோ னவிநயம், ஐயமுற்றோனவிநயம், மடியினவிநயம், அழுக்கா றுடையோனவிநயம், இன்பமொடுபுணர்ந்தா னவிநயம், துஞ்சாநின்றானவிநயம் என்பனவற்றோடு களித்தோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், சிந்தையுடம் பட்டோனவிநயம், இன்றுயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற் றலைப்பட்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவி நயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறப்

பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயம் என்னும் இவற்றையும் ஒருபடியாகவைத்து ஓதுவர் நாடகநூலாசிரியர். எஞ்சியவற்றின் இலக்கணத்தை ஒழிபியலுட் டருவாம்.

௪0. இனிப் பொருள், சாதி, யோனி, விருத்தி என்னும் நான்கினையும் ஆராய்வாம். அவற்றுள், பொருளாவது நான்குவகைப்படும். என்னை? "அறம்பொரு ளின்பம் வீடென நான்கும்—திறப்படு பொருளெனச் செப்பினர் புலவர்."

சாதி நான்குவகைப்படும். "அறமுத லன்கு மொன்பான் சுவையு, முறைமூன் றுடைக மூன்றே னுரும்" என ஆசிரியர் செயிற்றியனுர் கூறினாராதலினால் அறமுதலாற்பொருளும் ஒன்பதுவகைச்சுவையும் பெற்றுவருவது அந்தணர் சாதி. "அறம் பொரு ளின்பம் அரசர்சாதி" "அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப." "அறமேற் சூத்திரங்கமாகும்" என ஆசிரியர் செயிற்றியனுர் கூறியவாற்றுல் ஏனையமூன்று சாதியும அறிந்துகொள்க. இவை நான்கும் நாடகமேயாம். வடமொழி வழக்குப்பற்றி நாடகம் பிரகாணப்பிரகாணம், பிரகாணம், அங்க மெனப் பெயரிட்டுவழங்குதலும் பொருந்தும். "அவைதாம், நாடகம் பிரகாணப் பிரகாணம், ஆடிய பிரகாண மங்க மென்றே, யோதுப நன்னூலுணர்ந்திசி னோரே" என்றார் ஆசிரியர் மதிவாணனுர்.

யோனி நான்குவகைப்படும். உள்ளோன் தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் றலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனுக இல்லதோர்பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனுக இல்லதோர்பொருண்மேற்செய்தலு மென விவை; என்னை? "உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது, முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது, மெள்ளா துரைத்தல் யோனியாகும்" என்றாராகலின்.

விருத்தி நான்குவகைப்படும். அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி யென விவை. இவற்றுள், சாத்துவதியாவது அறம் பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது. ஆரபடியாவது பொருள்

பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது. கைசிகியாவது காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது. பாரதி விருத்தியாவது அசுரரைக்கொல்ல அமரராடின பதினோராடலும். இது தெய்வவிருத்தியெனவும்படும்.

கக. பதினோ ராடலாவன:—

"கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து."

இவற்றி னிலக்கணஞ் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையினுட் கூறப்பட்டிருக்கிறது. அதனை ஈண்டுத்தருவாம்.

"மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியும் நலம்பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ண னாடிய வாடலு
ளல்லியத் தொகுதியு மவுணற் கடந்த
மல்லி னாடலு மாக்கட னடுவ
ணீர்த்திரை யரங்கத்து நிகர்த்து முன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும்
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும்
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னாடிய குடமு
மாண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம னாடிய பேடி யாடலும்

காய்சின வவுணர் கடுந்தொழில் பொறாஅண்
மாயவ ளாடிய மரக்கா லாடலுஞ்
செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலு
ளயிராணி மடந்தை யாடிய கடையமு
மவரவ ரணியுட னவரவர் கொள்கையி
னிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோராடலும்."

அநிருத்த நாடகத்தினுள்ளே மேற்கூறிய பதினோராடலுள் நான்கு ஆடல் காணப்படுகின்றன. காமன்மகன் அநிருத்தனைத் தன்மகள் உழை காரணமாக வாணாசுரன் சிறைவைத்தான். அநிருத்தனது சிறையை மீட்கக்கருதி அவனது சோ என்னும் நகரவீதியிற்சென்று நிலங்கடந்த நெடுமுடியண்ணல் பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் செய்த குடங்கொண்டாடியகூத்துக் குடக்கூத்து. வாணனுடைய பெரிய நகரின் வடக்குவாயிற்கண் உளதாகிய வாயிலிடத்தே நின்று அயிராணி மடந்தை உழத்தியர்கோலத்தோடு ஆடியகூத்துக் கடையமெனப்படுவது. அஞ்சனவண்ணனாகிய கண்ணன் மல்லர்கோலமாகச் சென்று வாணனை உயிர்போக நெரித்துத் தொலைத்த கூத்து மல் எனப்படுவது. தனது மகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் ஆண்மைதிரிந்த பெண்மைக் கோலத்தோடு சோநகரவீதியி லாடியகூத்துப் பேடு எனப்படுவது. அஞ்சனவண்ணனாடிய ஆடல் பத்துள், கஞ்சன் வஞ்சத்தின்வந்த யானையின்கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய கூத்து அல்லியத்தொகுதி யென்பது. கொடுகொட்டியும் பாண்டரங்கமும் திரிபுரமெரித்தகாலத்திலே இறைவனாடிய கூத்து. "தேவர் திரிபுரமெரியவேண்டுதலால் வடவையெரியைத் தலையிலேயுடைய பெரியவம்பு ஏவல்கேட்டவளவிலே அப்புரத்தில் அவுணர் வெந்துவிழுந்த வெண்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே (பாரதி—பைரவி, அவளரங்கம்—சுடுகாடு) உமையவள் ஒருகூற்றினளாய்நின்று பாணி தூக்குச் சீரென்னுந் தாளங்களைச் செலுத்தத் தேவர்யாவரினுமுயர்ந்த இறைவன் ஜயஆனந்தத்தாற் கைகொட்டிநின்று ஆடியது கொடுகொட்டி" யென்பது. தேவானமைந்த தேரின்முன் சாரதியாகிய திசைமுகன் காணும்படி பாரதிவடிவாகிய இறைவன் வெண்ணீற்றையணிந் தாடியகூத்துப் பாண்டரங்கம் எனப்படும். சூரபத்மன் மாமரமாகிக் கருங்கடலினடுவுநிற்க அவனது வேற்றுருவாகிய வஞ்

சத்தை யறிந்த முருகக்கடவுள், கடலினடுவே திரையே அரங்கமாக நின்று துடிகொட்டியாடிய கூத்துத் துடிக்கூத்து. அவுணர் தாம்போர் செய்தற்கெடுத்த படைக்கலங்களைப் போரிற்காற்றாது போகட்டு வருத்த முற்றவளவிலே முருகக்கடவுளானவர் தமது குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுகவெழினியாக நின்றாடிய கூத்துக் குடைக் கூத்து. காயுஞ்சினத்தையுடைய அவுணர் வஞ்சத்தாற் செய்யுங் கொடுந்தொழிலைப் பொருளாய்த் துர்க்காதேவி ஆடிய கூத்து மாக்கால் என்னும் பெயரையுடையது. அவுணர் வஞ்சனையினாற் பாம்பு தேள் முதலியபாகப் புகுதல்கண்டு தம்மை அவற்றை உழக்கிக் களைதற்கு மாக்கால்கொண்டு ஆடினாளாதலினால் மாக்காலாடலாயிற்று. அவுணர் போர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலத்தோடு மோகித்து வீழும்படி செய்யோளாகிய திருமகள் கொல்லிப்பாவைவடிவாய்நின்று ஆடிய கூத்துப் பாவை யென்னு மாடலாகும். "மாயோன் பாணியும் வருணப் பூதர், நால்வகைப்பாணியு நலம்பெறு கொள்கை, வானூர் மதியமும் பாடி" என்பதனை ஒழிபியலுள் ஆராய்வாம்.

௧௨. இனி எஞ்சிநின்ற சொல், சொல்வகை, வண்ணம், வரி யென்னும் நான்கினையும் ஆராய்வாம். சொல் மூன்று வகைப்படும்; உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல்லெனை; அவை முறையே நெஞ் சொடுகூறல், கேட்போர்க்குரைத்தல், தானேகூறல் என விவை. "நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல், தஞ்சம் வரவறிவு தானே கூறலென், றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே."

சொல்வகை நான்குவகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென. சுண்ணம் நான்கடியான்வருவது; சுரிதகம் எட்டடியான் வருவது; வண்ணம் நானான்கடியான்வருவது; வரிதகம் முப்பத்திரண் டடியான்வருவது.

"வண்ணந் தானே நாலைந் தென்ப"

"அவைதாம், பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ண நலிபு வண்ண
முகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண

மொழுகு வண்ண மொரூஉ வண்ணம்
எண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங்கன மறிப வறிந்திசி னோரே"

யென்பதனால் வண்ணம் அறிக. பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ண மென வகுத்தும், நூறுவண்ணமாக விரித்துங் காட்டுவாருமுளர்.

வரிப்பாடலாவது: "பண்ணுந் திறனும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி, மயங்கச்சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியுங் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியுஞ் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும்." அது தேவபாணியாகவும், மக்களைப்போற்றும்பொருண்மைத்தாகவும், திணைநிலைவரி இணைநிலைவரி யென இருவகையாகவும், கண்கூடுவரி, கானல்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி யென எட்டுவகையாகவும் வரிப்பாடல் ஆராயப்படும். இவற்றின் விரிவை ஒழிபியலுட் கூறுவாம்.

"விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப்
பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியும்
சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ் சத்துவமு
மவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும்
வரியுஞ் சேதமு முளப்படத் தொகைஇ
யிசைய வெண்ணி னீரே ழுறுப்பே"

என வகுத்து, பதினான்கு விலக்குறுப்பினிலக்கணத்தை உறுப்பியலாகிய இம் முதலியலுட் கூறினும்; கூத்தின்வகை, அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கு முரிய உருக்கள், கூத்துவிகற்பங்களுக்கமைந்த வாச்சியக்கூறுகள், அகக்கூத்துக்கும் புறக்கூத்துக்கு முரிய ஆடல்கள், பாடல், பாணி, தூக்கு, பிண்டி, பிணையல், குரவை, வரி, அரங்கினமைதி என்னு மிவற்றையெல்லாம் ஒழிபியலுட் கூறுவாம்.

(தொடரும்)

விபுலானந்தர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்
இருபத்திரண்டு, இருபத்துமூன்ருவது வருஷோத்ஸவ
மங்களவாழ்த்து.

தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர்

ஸ்ரீமத் சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்

பாடியது.

கலிவெண்பா.

தண்ணமிழ்தை நேருந் தமிழுந் தமிழ்நிலமும்
எண்ணரிய வைக லிழைத்தபெரும்—புண்ணியமே
ஒருருவர் யுற்றிவ் வுலகினிடைப் போந்ததெனப்
பேருலகம் பேசும் பெருமையோன்—சீருலவு
பாலவ னத்தப் பதியாளன் பாவலரைச்
சால வனத்தந் தவிர்த்தாள்வோன்—கோலப்
பிறைமதியஞ் சூடும் பெருமானை யல்லால்
இறையெனமற் றோர்கடவு ளெண்ணுன்—நிறைமதியான்
சொல்லாரும் பாண்டித் துரைசெந் தமிழ்ப்புலமை.
யெல்லாரு மெய்திபிவ ணின்புறுவான்—மல்லாரு
மஞ்சுதவ ழிஞ்சி வளமாடக் கூடலிதில்
நெஞ்சுவகை கூர்ந்து நிறுவியசீர்—விஞ்சுதமிழ்ச்
சங்கந் தழைத்துத் தனதிருபான் மூன்றுண்டு
துங்க முடனிறைந்து தோன்றுமிந்நாள்—எங்கணுந்தன்
செங்கோல் விளங்கச் செகம்புரக்குஞ் சேதுபதி
யெங்கோன் இராஜரா ஜேச்வரவேள்—கொங்காரு
முல்லையந் தாரான் முகவை நகராதிபன்
இல்லையெனக் கூறு வியற்கொடையான்—எல்லையில்சீர்
மன்னு தமிழ்ச்சங்க மன்னவனிவ் வற்சரத்தின்
நன்னர் திருநாள் நடாத்துவான்—முன்னி
நிதிசேர் வடநாட்டு நீணிதிக்கோ னெனனத்
துதிசேர் குலத்துதித்த தூயோன்—பதியால்

விளங்குசென்னை மாகாண வித்தை வகைக்கு
வளங்குலவு மந்திரியாய் வந்திங்—கிளம்பிறைபோல்
வையமெலாங் கல்வி வளரும் வகைக்கேற்ற
செய்யசட்ட திட்டமதுஞ் செய்தளிப்போன்—மெய்தவிரான்
ஞாலம் புகழ்பரசு ராமதாஸ் பாத்ரோவாஞ்
சீலம் பிறழாத் திறலோனைச்—சாலுமுயர்
அக்ரா சனாதிபதி யாக வெனவேண்ட
இக்கோமா னுள்ள மிசைந்தருளித்—தக்கோர்
மிகுசபைக்கு நாயகமா வீற்றிருப்பான் வந்தான்
தகுநந் தமிழ்க்கிசைந்த சால்பே—நகுவெள்ளி
வேதண்டத் தானும் வியன்சார்ங்க மென்னுமெழிற்
கோதண்டத் தானுங் குழைந்ததமிழ்—மூதண்ட
மெங்கும் பரந்ததமி ழீறிலா நந்தமிழை
யிங்கோர் தனிமொழியன் றென்னுமல்—மங்காத
ஆந்திர நாட்டா ரரிய தமதுமொழி
ஏந்து தனித்தலைமை யெய்தும்வகை—ஓர்ந்தே
சருவகலா சங்கந் தனையமைக்கு மாபோற்
சருவகலா சங்கந் தமிழ்க்கும்—மருவும்வகை
செய்துநந் தேசஞ் சிறக்க நலமருள்வான்
எய்தும் வரவிங் கினிதாக—மொய்தமிழும்
சங்கமுஞ் சங்கத் தனித்தலைமை பூண்டோரும்
பொங்கு சபைநிறைந்த புண்ணியரும்—மங்குலென
நற்றமிழ்ச் சங்கம் நலந்தழைக்க வாதரிக்குங்
குற்றமிலா வண்மைக் குணத்தோரும்—மற்றவரும்
வாழிதோ றூழி பொருமுதல்வன் றன்னருளால்
வாழி யுலகின் மகிழ்ந்து.

சக்கரவர்த்தி வாழ்த்து.

திங்கள்வெண் கொற்றச் செழுங்குடைக்கீழ் வையமெலாந்
தங்கப் புரக்குமைந்தாஞ் ஜார்ஜ்மன்னும்—நங்கோமான்
செங்கோலு மன்னோன் றிருமரபும் வாழ்கவிவண்
எங்கோ னருளா லினிது.

நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ

V. முத்துஸாமி ஐயரவர்கள், M.A., L.T.,

பாடியது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்த்திநனிகுலவியொளிர்சென்னைமாகாணத்திற்சிறப்பால்மாந்தர்
நேத்திரமாப்போற்றற்காங்கலைத்துறையின்நிருவாகநிலைமைபூணப்
பாத்திரமாப்போந்துயரும்மந்திரநற்பதவியுறும்பரசுராம
பாத்திர! தென்கலைமதுரைத்தமிழ்ச்சங்கவிழாத்தலைமைபரித்தேற்பாயே.

முந்துபுகழ்த்தமிழ்நாட்டுமுடிமன்னர்காத்தளித்தமுறையேபோலெம்
சிந்தையொடுசேதுவண்சிங்காதனஞ்சார்இராசராசேசமன்னன்
சொந்தமுறப்பாலனஞ்செய்தமிழ்ச்சங்கம்இத்தினத்திற்சூழ்ச்சிமிக்க
மந்திரி! நின்பாலனமும்வாய்ந்தபெரும்பேறுவந்துமதிக்கின்றேமால்.

உச்சையினிபுரங்கலிங்கம்ஓரங்கல்ஆதியசேண்ணூரும்பெரும்
மெச்சுதமிழ்த்திறம்“உரியன்”எனுமுன்னைவயப்படுத்தல்வியப்போ? அன்றி
இச்சைமிகச்சருவகலாசாலைமுதற்சிறூர்பள்ளிஈறுஎங்கும்
விச்சைதிருத்தமைச்சுநீதமிழ்ச்சங்கமுறல்வியப்போ? விள்ளுவாயே.

வந்துறுபஞ்மாணவரைப்பண்டிதராமாற்றியவர்வாயிலாலும்
சொந்தமுள‘செந்தமிழ்’ப்பத்திரத்தாலும்வேறுபிரசுரங்களாலும்
சந்தமுறத்தமிழ்வளர்க்கும்சங்கமிதற்காக்கநலம்சாரும்வண்ணம்
மந்திரியாவந்துறையும்மதியாள! ஆதியாளவகைசெய்வாயே.

வாழியசெந்தமிழ்நாடுவாழியசெந்தமிழ்ப்பாஷைவளமிக்கோங்கி
வாழியசெந்தமிழ்ச்சங்கம்மன்சேதுபதிவாழிவளர்திங்கள்போல்
வாழியஅக்ராசனமந்திரிப்பெருமானமற்றையபிமானசீலர்
வாழியநம்ஜார்ஜரசும்வையகமும்சொக்கருள்மாண்பால்வாழி.

ஶ்ரீ

மதுரை அமெரிக்கன் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்

ஶ்ரீமத் S. I. ராமநாதசாஸ்திகள் இயற்றியது.

𑌮𑌧𑍁𑌰𑌾𑌨𑌗𑌰𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌸𑌂𑌸𑍍𑌥𑌸𑍍𑌯

𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑌵𑌰𑍍𑌷𑌪𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌵𑍇 𑌸𑌭𑌾𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂

𑌮𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌰𑌾𑌜𑌕𑍀𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌭𑌾𑌗𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑌾𑌂

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌾𑌂 **Hon. Sir. A. P. Patro** 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌂.

𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾

𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑍀𑌨𑌯𑌨𑌾𑌯𑌮𑌾𑌨𑌮𑌧𑍁𑌰 𑌶𑍍𑌰𑍀𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑍂𑌮𑌯𑍇, 𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌸𑌂𑌘𑌨𑌾𑌮𑌕𑌕𑌲𑌾𑌶𑌾𑌲𑌾𑌨𑌂 𑌵𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌃, 𑌸𑍍𑌥𑌾𑌵𑍀𑌨𑍈𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌰𑌨𑌾𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌰𑍈𑌃, 𑌶𑍍𑌰𑌾𑌵𑍇𑌷𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌧𑍁𑌰𑌾𑌵𑌰𑍇𑌵𑌿𑌜𑌯𑌤𑍇𑌽𑌸𑍍𑌯 𑌸𑌤𑌾𑌭𑌾𑌵𑌾 𑌦𑍍𑌰𑌤𑌃 ॥

𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌸𑌵𑍇𑌽𑌸𑍍𑌯 𑌸𑌭𑌿𑌤𑍇𑌨𑌿 𑌵𑍇𑌦𑌾𑌭𑌾𑌸 𑌯𑍋𑌕𑍍𑌷𑌤𑌾, 𑌮𑌹𑌾𑌤𑍋𑌨𑌿𑌤𑌰𑌾𑌂𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌸𑌾𑌽𑌸𑍍𑌯 𑌸𑌤𑌾𑌨𑌾𑌯𑍇𑌨𑌯𑌃', '𑌪𑌾𑌤𑍍𑌰𑍋'𑌇𑌤𑍍𑌯𑌤𑌿𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃𑌪𑌰𑌶𑌾𑌰 𑌮𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑍋𑌹𑌿𑌤𑍋, 𑌮𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌧𑍀𑌵𑌿𑌭𑌾𑌗 𑌸𑌚𑌿𑌵𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌸𑌜𑍍𑌜𑌯𑌤𑍇 ॥

𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑍇 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌤𑍇 𑌧𑍀𑌮𑌤𑍇, 𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌤𑍀𑌵𑌰𑌿𑌷𑍍𑌟 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌵𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌮𑌹𑌃 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 ।, 𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌂𑌤𑌃𑌪𑌾𑌰𑌾𑌷𑍇𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌸𑍍𑌯𑌕𑍃𑌪𑌯𑌾𑌽𑌰𑍇𑌗𑍍𑌯𑌂 𑌵𑌿𑌰𑌾𑌯𑌾𑌯𑌃 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌵𑌿𑌪𑌾𑌲𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌤𑌰𑌤𑍍𑌵𑌿𑌤𑍍𑌯𑌾𑌶𑌾𑌂𑌸𑌤𑍇 ॥

𑌪𑌦𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌭𑌾𑌰𑌤𑍀 𑌸𑌦𑍍𑌯𑌾 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌾𑌦𑌿𑌮𑌾 ।
'𑌪𑌾𑌤𑍍𑌰𑍋'𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌰𑌾𑌜𑌤𑌾𑌂 𑌶𑌰𑌦𑌾𑌂 𑌶𑌤𑌂 ॥

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(உ௰௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

179. ஆறெலாம் கங்கையே ஆய; ஆழிதாம்
கூறு பாற் கடலையே ஒத்த; குன்றெலாம்
ஈறிலான் கயிலையை இயைந்த; என் இனி
வேறு யாம் புகல்வது நிலவின் வீக்கமே?

இ - ள். (சந்திரிகை தம்மேற் பாவப்பெற்று வெண்ணிறம் அடைந்ததனால்) எல்லா ஆறுகளும் (இயல்பாக வெண்மையான) கங்காநதிபோன்றன; கடல்களெல்லாம் பாற்கடல் நேர்ந்தன; மலைகள் யாவையும் வெள்ளிமலையொத்தன: (இவ்வாறு கூறுவதன்றி) நிலாப்பெருக்கத்தை (ப்பற்றி) இனி நாம் வேறு கூறத்தக்கது யாது (உளது)? (ஒன்றும் இல்லை).

ஆய - ஒத்தன. 'செம்மரந்த தெங்கின் இளநீரை ஓர் செம்மல் நோக்கி - அம்மா இவை மங்கையர் கொங்கைகள் ஆகும் என்ன' (பூக்கொய் படலம் கஎ) என்பதில் 'ஆதல்' 'ஒத்தல்' என்ற பொருள்பட வருதல் காண்க. கூறு - (மற்றைக் கடல்களினுஞ் சிறந்ததாகக்)கூறப்பட்ட. இயைந்த - ஒத்தன என் - யாது. வீக்கம்-மிகுதி, (வீங்குதல் - மிகுதல் புறநானூறு) பெருமை (சிந்தாமணி).

'கங்கையே' 'கடலையே' என்பவற்றில்வரும் 'ஏ' "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ?" என்பதில் உள்ள 'ஏ' போல உயர்வுசிறப்புப்பொருள்தந்து நின்றது. அந்த 'ஏ' கயிலையை என்பதன்பின் தொக்குநின்றது.

சாமானியமான ஆறுகளைச் சங்கரன் சடையில் தரித்த மகிமையுடைய கங்கையாறாகவும், சாதாரணமான கடல்களைத் திருமால் பள்ளிகொள்ளும் சீர்படைத்த பாற்கடலாகவும், பல இடங்களிலும் காணப்படும் மலைகளை ஈசன் வாழும் மகத்துவம் மிகுந்த கைலைமலையாகவும் செய்து வெண்ணிறமும் சிவபெருமான் திருமுடிமேல் விளங்கும் சந்திரனது ஒளியாம் பெருமையும் உடைய சந்திரிகையானது, தான் சார்ந்த பொருள்களைத் தன்னைப்போல வெண்மையும் மேன்மையும் அடையச் செய்ததென்று பொருள் விரித்துரைக்கலாம். நிலவு பாவப்பெற்ற கருங்

கடல் கரியமலை முதலியன வெண்ணிறமடைந்தனவென்பது "உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி—இருண்ட கல்லையும் பொன்னிற மாக்கிய இரதம்" (சந்திரசைலப்படலம் அ) என்பதனோடு ஒப்பிடற்குரியது.

[மாதர்கள், முத்துப் பந்தலிலும், பூம்பந்தலிலும், கூடாரங்களி லும், தாம் நீராடிவிட்டு நீங்கிய தடாகங்கள்போன்ற பளிங்குப்பாறை களிலும் சென்று தங்கிப், பூவிலே தேனை வார்த்தாற்போல வாயிலே கள்ளை ஊற்றி உண்பாராயினர்.]

180. உக்க பால் புரை நிலா உண்ட வள்ளமும்
கைக் கொள்வாள் ஒளி படச் சிவந்து காட்டத், தன்
மைக் கணும் சிவந்த(து,) ஓர் மடந்தை ; வாய் வழிப்
புக்க தேன் அமிழ்தமாய்ப் பொலிந்த போன்றவே.

இ. ள். சிந்தி(ப்பரவி)ய பால்போன்ற. (பரந்த வெண்மையான) நிலாப் பொருந்திய (தனல் வெளுத்திருந்த செம்பொற்) கிண்ண மானது, (அதனை, அதனிலிருந்த கள்ளையுண்ட) ஒருமாது கையால் எடுப்ப, (எடுத்த) வளது (செங்கை) ஒளிபடச் சிவந்து தோன்ற, (கள்ளுண்ட காரணத்தால் அவளுடைய) கருங்கண் சிவந்தது ; (அதே காரணத்தால் வெளுத்திருந்த) வாயிலே அவள் உண்ணும்படி ஊற்றப்) புகுந்த (செந்) தேன் (வெண்மையான) அமிழ்தமாய்விளங்கியது போன்றது.

உக்க—சிந்திய. புரை—ஒத்த. உண்ட—பொருந்திய (சங்க அகராதி) 'பொலிந்த', 'போன்ற' என்பவை துவ்விகுதிதொக்குநின்றன. "வருவ போற் கலுழன்மேல் வந்து தோன்றினன்" (திருஅவதாரப்படலம்-கஉ) 'பூதகணத் தாசேந்தி அனல் நின்றும் புறப்பட்ட" என்பவைகளில் 'வருவ' 'புறப்பட்ட' என்பன துவ்விகுதி தொக்குநின்றதைக் காண்க. உம்மைகள் இசைநிறை.

[ஓமாக்கினி உள்ளே உள்ள ஓமகுண்டத்தின் வாயில் ஊற்றும் நெய் ஓமாக்கினியை ஓங்கி வளரச் செய்தல் போல, காமாக்கினி உள்ளே உள்ள மாதர் வாயில் வார்த்த கள், காமாக்கினியைக் கதித்துப் பெருகச் செய்தது.

கள்ளுண்டு அறிவுமயங்கியதனாலோ, மாதர்க்கியற்கையாகவுள்ள பேதமையினாலோ, ஒருமாது, கள்வார்த்தகிண்ணத்திலே தன்வடிவைக் கண்டு "தோழியே! என்னுடன் கள்ளுண்பாயாக" என்றாள்;

மற்றொருமாது, தன்முகத்தைக் கள் வள்ளத்திலே கண்டு "பைத்தியக்காரி! யாது செய்தாய்! வேறு நிரம்பக் கள்ளிருக்க, எச்சிற் கள்ளை உண்ணுகின்றாயே!" என்றாள்;

வேறொருமாது, கள்வட்டிலிலே சந்திரிகை பாய்ந்து கள் நிறைந்ததுபோலத் தோன்றக்கண்டு உண்ணுதற்கு வாய் வைக்கவே, பக்கத்தில் நின்றோர் பார்த்துப் பரிகசிக்க, வெட்கமுற்றாள்;

பிறிதொருமாது, தன் கண்ணின் நிழல் கள்ளிலே தோன்ற வண்டென்று ஓட்டலுற்றாள்;

ஏனை ஒருமாது, தான் இருந்த பூம்பந்தரின் விதானத்தில் உள்ள துளைகள்வழியாகஒழுகும் நிலாவைக் கள்ளென்று வள்ளத்தில் ஏற்றாள்;

இன்னும் ஒருமாது, கள்ளுச் சாடியுள்ளே சந்திர பிம்பத்தைக் கண்டு "சந்திரா! நீ வானத்திலுள்ள இராகுவென்னும் பாம்புக்குப் பயந்து இங்கு வந்து ஒளித்தாய் போலும். பயப்படாதே; அபயம் அளித்தேன்" என்றாள்;

பின்னும் ஒருமாது, கள் வள்ளத்துள்ளே தன் முகத்தைக்கண்டு, கள்ளுண்ணும் ஆசையால் சந்திரன் அவ்வள்ளத்துள் விழுந்தானென்று எண்ணி "யான் என் கணவனோடு ஊடும் நாள்களில் நீ கொதிமதியாகாமல் குளிர்மதியாவாயானால், யான் உனக்குக் கள் உண்ணக் கொடுப்பேன்" என்றாள்;

பெயர்க்கும் ஒருமாது பூமாலையை அரையிலும் பொன்மாலையைக் கூந்தலிலும் சுற்றினாள்;

இவ்வாறு அறிவு மயங்கியமாதர் செயல்கள் ஆக, அறிவு மயங்காத மாதொருத்தி, தன் உள்ளத்தில் உறைகின்ற கணவன் கள்ளுண்ணாதவனென்பதை நினைந்து, அவன் உள்ள உள்ளத்தில் கள் உண்ண எண்ணும் எண்ணத்துக்கும் இடங்கொடுத்தலாகாதென்று, கள் உண்ணலை எண்ணாலும் செய்யாது விலக்கினாள்.

ஒரு மாது, தன் காதலைத் தன் கணவனுக்குத் தெரிவிக்கும்படி தோழியைத் தூதனுப்புகின்றவள், "தோழீ! என் நெஞ்சைத் தூது விட்டேன். அது அவரிடமே தங்கி வாராமல் தாழ்த்தது: அதுபோல நீயும் தாமதித்துவிடுவாயோ? திரும்பிவருவாயோ?" என்றாள்.

ஒருபேதை, தன் தோழியரெல்லாரையும் ஒருத்திபின் ஒருத்தியாகத் தன் நாயகன்பால் தூதனுப்பிவிட்டு, அவர்கள்பின் தானும் தனியளாய்ச் சென்றாள்.

ஒருகோதை, சயனத்திலே தன்னோடிருந்த கொழுநனோடு ஊடினாள்; பின்பு அவள் ஊடல் நீங்க எண்ணங்கொண்டாள். அந்தக் குறிப்பை அவன் அறியாதிருந்தான்: ஆகவே, பேசாதிருந்த தான் வலிந்து பேசுவதை மறைக்க, சோம்பல் விடுவாள்போன்று, கைகால்களை நிமிர்த்துக் கொட்டாவிவிட்டுக்கொண்டு "எத்தனை நாழிகை கழிந்தன?" என்று கேட்டாள்.

ஒரு பாவை புலவி செய்தாள்; அதனை அவள் காமம் நீக்கி அதிகப்பட, அதனைத் தீர்த்தற்கு அவள் பொய்யுறக்கம் உறங்கிக் கனவு கண்டு பயந்தவள்போலக் காந்தனைக் கட்டிக்கொண்டாள்.

ஒரு பூவை, தான் செல்வது பிறரறியாதபடி சதங்கை முதலிய ஒலி செய்யும் ஆபரணங்களைக் கழற்றி வைத்துவிட்டுத் தன் புருடனிருக்கு மிடத்துக்குப் புறப்பட்டாள். அப்போது சந்திரன் தோன்ற, அது தன்னை வெளிப்படுத்தித் தான் கரந்து செல்லுதற்குத் தடையாயினதென்று கடுமையாகக் கோபித்து அதனைத் தீத்துவிடுவாள் போலப் பார்த்தாள்.

ஒரு நங்கை, தான் காமனால் வருந்துவதைச் சொல்லக் கருதி, அவன் உருவம் உள்ள படத்தைப் பார்த்தது த்தோழியை நோக்கினாள். அதனால் அவள் காமநோயுற்றதைத் தோழி ஊகித்துணர்ந்து, அந் நோயைத் தீர்க்க அவள் காதலனை அழைத்துவரப் புறப்படுவாளாகி அவன் இருந்த திசையை நோக்கினாள்; அந்நோக்கின் குறிப்புணர்ந்து தன் நோக்கின் சமிக்கையால் அந்நங்கை விடையளித்தாள்.)

ஒருமங்கை, தன் மணவாளனுள்ள இடத்துக்குச் செல்வாளானாள்: அவளை யழைத்துச்சென்றதுது, மதுவோ, மதியோ, மன்மதனோ? தெரியேம்.

ஒரு மடந்தை தன் கேள்வன்மீது கொண்ட கோபமும் மோகமும் ஒன்றோடொன்று போராட, கோபம் தோற்றோட, கோபத்தைச் செலுத்தற்கிடமில்லாது போயிற்றே யென்று நாணிக் கண்ணீர்விட, அது கண்ட அவன் "யாது நேர்ந்தது!" என்று நகைக்கத், தானும் நகைத்து நாணம் விடுத்தாள்.]

(தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஆசிரியர் நல்லந்துவனார்காலம்.

(ாகஉ-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிள்ளையவர்கள்முடிபுகளிற் பன்னிரண்டாவதாகிய பரிபாடல் உரையாசிரியர் பரிமேலழகரோ அன்றோ என்னும் ஐயத்தை நீக்கிக் கொண்டு மற்றவைகளைப் பின்னர் ஆராய்வோம்.

முதலாவதாக, பரிபாடற் பதிப்பின் ஈற்றிற்காட்டப்பட்டிருக்கும் உரைச்சிறப்புப்பாயிரமொன்றே பரிபாட்டுரையாசிரியர் பரிமேலழகர் என்பதற்குப் போதியசான்றாம். அது,

"கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனைவேன் முருக னெனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவ ரருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலு
ளரிதி னெழுந்த பரிபாட் டமுத
மாசுநிலை திரீஇய வளப்பருங் காலக்
கோதில் சொன்மக ளோதகக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிசைபடு பொருளை நகைபடு புன்சொலிற்
றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பு
மெழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பு
மொருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடந்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
யெல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய
வணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டின
னீணிலங் கடந்தோன் றாடொழு மரபிற்
பரிமே லழகி னுரிமையி னுணர்ந்தே"

என்பதாம்,

இதன் செம்பொருளாவது:-ஆலவாயெம்பெருமானென அவிர்சடைக் கடவுள், தவம் காட்சி முதலியவற்றிற் பெரியோனும் உடலிற் சிறியோனென அகத்தியமுனிவன், குறிஞ்சிநிலத்தெய்வமாகிய கூர்மைபொருந்திய வேலையுடையமுருக னென் றின்னோரன்னபெரியார்கூடித் தமிழையாய்ந்த சங்கமென்னுங் கடலிலே எழுந்த அமுதமாகிய பரிபாட்டினை, தன் புன்சொற்களை இடைமடுத்துக் கந்தி என்ற நகைமொழிபெற்ற புல்லறிவாளனது இடைச்செருகலையும், செல்லரித்த புள்ளியல்லாமல் மெய்யொற்றும் புள்ளி முதலியவின்றி ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழைகளையும், மற்றையோரால் நேர்ந்த வழுக்களையுங் களைந்து கற்றோர்க்குக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் இன்பமும் மகிழ்ச்சியுமுண்டாகும்படி ஐயந்திரிபுகளைநீக்கி இதுதான் சுத்தமான பாடமென்று காட்டினதோடு, சுருங்கிய உரையால் விளங்கவைத்தனன்; நீணிலங்கடந்த நெடிமுடியண்ணலை வழிபடுவோனாகிய பரிமேலழகனென்னும் புலவன் என்பது.

தமிழபிமானிகட்கு இக்கரியோன்றுமே போதுமாயினும், தற்கால ஆங்கிலக்கல்வியாளர்க்கு ஒருசான்று போதியதல்லவாகையாற், பின்னுஞ் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம். திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்களுட் டலைமைபெற்றார் பரிமேலழகரென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டதொருசெய்தியாம். இதனை யொருபுலவர்,

"தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல்லா முடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து"

என்று பாடியுள்ளார். இதனாலே இவருக்குத் திருக்குற ளுரையாசிரியரென வொரு சிறப்புப்பெய ரெய்தியது. பிற்காலத்தவரான புலவர் பெருமானொருவர் திருக்குறளிற் காணப்படும் அருந்தொடர்களுக்குத் திருக்குறள் நுண்பொருண்மாலை என ஒரு உரை யெழுதிப் போந்தார். அவர் ஆசிரியர் பரிமேலழகர் பரிபாடற்கு உரைபெழுதியதைப் பலவிடங்களிற் சுட்டுகின்றார். அவற்றுட் சில வருமாறு:—

i. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (380)

என்னுங் குறள்வெண்பாவில் பெருவலி—என்ற தொடரை யெடுத்துக்கொண்டு "பெருவலி—பெருவலியையுடையன; பண்புத்தொகைப்புறத்து

வந்த ஆகுபெயரென்னாது ஆகுபெயரென்றார்; 'பாயிரும்பனிக்கடல்'என்னும்(5-ம்)பரிபாட்டினுள், கயந்தலைக்கும் (பரி.பக். 33) பண்புத்தொகைப்புறத்துவந்த அன்மொழி; ஈண்டு ஆகுபெயரென்றார் இவ்வுரையாசிரியர்". (பரிமேலழகர்).

ii "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு" (231)

என்னுங் குறள்வெண்பாவில் பட என்பதற்கு உண்டாக வென்று பொருள் கூறியதைச் சுட்டி "இனி இவ்வுரையாசிரியர் பரிபாட்டினுள் "இலம்படுப்புலவ ரேற்றகை நிறையப், பொலஞ் சொரி வழுதி" (பரி 10 வரி 126-127) என்பதற்குத் தொல்காப்பியத்துள் "இலமென்கிளவிக்கு" என்னுஞ் சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரைத்தாங் குரைத்தார்" என்றார். ['இலம்படு-இன்மையாற்பற்றப்பட்ட' எனப் பொருள்கண்டார்].

iii. "சீரிடமென்பதற்கு (திருக்குறள் 821) வாய்த்த இடமென இறந்தகால வினைத் தொகையாமெனப் பொருள்கூறி 'புகர்வரிவண்டு' (பரி 22 வரி 39) என்னும் இப்பகுதியை எடுத்துக்காட்டிப் புகர்த்த வரிவண்டெனப் பொருளும் எழுதினர்" என்றார்.

இதுபோன்று காணப்படும் சான்றுகள் பலவிருப்பினும் இவை போதுமாகையான் இவ்வளவோடு நிறுத்தி மற்றுமொரு புறச்சான்று காட்டுவேன். ஐந்தாம்பரிபாடல்மாத்திரம் தனிப்படஎழுதியஏடொன்றில் "இந்தப்பாட்டிற்கெல்லாம் பரிமேலழகரையனுரையாற் பொருளுணர்ந்து கொள்க" என்று எழுதப்பட்டிருப்பதையும் (பரி : பக். 38) பரிபாடற் பதிப்பாசிரியர் பதித்திருப்பது சிறந்த சான்றுகளுள் ஒன்றாக மதிக்கப் பட்டிருக்கிறது. இதுவரையிற் கூறியதுகொண்டு இப்பரிபாட்டுரையாசிரியர் பரிமேலழகர்தானென்று யாதொரு ஐயமுமின்றிக் கொள்ளலாம். உரையாசிரியர் பரிமேலழகராகவே, அவரைப்பற்றிக் காலவாராய்ச்சியாளர் "In this case the Commentator himself an ancient classical author PARIMELALAGAR whose Commentary on Tiruvalluvar's Tirukkural is well known and enjoys the reputation of being thoroughly reliable in literary matters and he may be presumed to be no less so in Astronomical

matters"* என்று கூறுவதால் உரையாசிரியர் உரை பழுதுடையதன் றென்பது இவர்கட்கும் ஒப்பமுடிந்ததென்பது போந்தபொருளாம்.

இனி இரண்டாவதாகிய "சிம்மத்திற் சூரியனிருக்கவேண்டுமென் பது உரையாசிரியர் ஊக"மென்பதையும்; மூன்றாவதான (இதற்காதாரம்) 'அங்கியுயர்நிற்ப'என்பதையும்; பதினைந்தாவதான 'நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருப்பதாகக் கூறவில்லை' என்பதையும் ஆராய்வோம். இதற் காதாரமான பரிபாடற்பகுதி வருமாறு:—

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையு
ளுருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில்"

"ஆரல் அங்கியே யளகிறால் அழல் அறுமீன் கார்த்திகை" என்பத னாலே அங்கி கார்த்திகை யெனப் பொருள்கண்டார். ஒவ்வொருமாதத்தி லும் பொழுதுபடும்பொழுதும், புலரும்பொழுதும் இன்னின்னஉடுக்கள் வானத்தின்உச்சியிற் றோன்று மென்றிருக்கும் குறிப்பின்படி ஆவணி மாதத்திற் புலர்விடியலிற் றோன்றுவது கார்த்திகையாம். இது இன் றும் காணக்கூடிய வொரு காட்சியாகும். 'புலர்விடியல் அங்கிஉயர் நிற்ப'வென்றதால் இது ஆவணிமாதமென்றும், ஆவணியாகவே சூரியன் சிங்கவோரையில் இருக்கிறானென்றும் குறித்தார். ஆதித்தனைக் குறிப் பதற்காகவே அவர் அங்கியைக் குறித்தார். முதலில் இடபத்திலுள்ள கோளையும், பின் மேடத்திலுள்ள கோளையும், அடுத்து மிதுனத்துள்ள கோளையும் கூறியபிறகு சொல்லவேண்டியது அடுத்த ஓரையிலுள்ளதை யன்றோ. கடகத்திற் கோளில்லையாகவே சிங்கத்திலுள்ள சூரியனைக் கூறுவான் 'புலர்விடியல் அங்கி உயர்நிற்ப' என்றார். இவ்வாடிமாதம்

* இதன் தமிழ்மொழிபெயர்ப்பு செந்தமிழ்த்தொகுதி உஉ பக. ௬௦இல் 248-வது பாராவின் ii-வது பிரிவில் காட்டப்பட்டது.

15-ம்தேதியிற் படுசுடர் அமையத்துச் சோதி விசாகமும், புலர்விடிய லில் அசுவதியும் உச்சத்திலிருக்கக் காண்கிறோம். ஆவணிமாத முற் பகுதியில் கார்த்திகை புலர்விடியலில் உயர்நிற்கக் காண்கிறோம். இதை இவ்வாறு கூறும் நூல்களும் முற்காலத்து இருந்திருத்தல்வேண்டும். ஆங்கிலத்தில் The Heavens, The Midnight Sky என்ற நூல்களில் இவ்விதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்றே தமிழிலும் இருந்திருக்கவேண்டும். இப்பொழுது அவ்விதநூல் நமக்குப் புலப் படுவதில்லையாயிற்று. இதனாற்றான் உரையாசிரியரும் "ஆதித்தன் சீயத்தைய்டைய வென்பார் புலர்விடியல் அங்கி உயர்நிற்ப" என்று பொருள் கூறினர். இதிலுள்ள என்பார் என்பது நூலாசிரியரான நல்லந்துவனாரைச் சுட்டாநின்றது. இனி உயர் என்பது உச்சி என் றும் மேல் என்றும் பொருள்படுமென்றார்கள். இம்மொழிக்கு இவ் விரண்டுபொருள்களும் பொருந்துமாயினும் பிள்ளையவர்கள் கொள் கைக்குக் கார்த்திகை தோன்ற என்றுவது என்ற பொருளிலாவது வரவேண்டும். சூனமத்தியில் இவ்வுடுக்கூட்டம் தோன்றுதென்பது இவர்களறிந்தவிடயமேயாம். காணப்படாத காணமுடியாத ஒன்றை மேல் என்று எப்படிக் கொள்வது. வான கபாலத்திற் (Horizon) றேன்றி 90 பாகை வந்தபொழுதன்றோ மேல் என்று கூறலாம். தோன்றுதபொழுது எவ்வாறு மேல் என்று கொள்வது. ஆகவே உயர்நிற்ப என்பதற்கு உச்சமாக என்று கொண்ட பொருளே அமைவுடைத்து.

இன்னும், ஆதித்தன் சியத்திலிருக்கின்றான் என்று நூலாசிரியர் அழுத்தமாகக் கூறியுள்ளார் என்று மற்றொரு செய்தியாலும் பெறு வதைக் காட்டுவேன். சநி மகரத்தைபடையப் பாம்பாகிய இராகு மதி யத்தை மறைக்கின்றநாளிலே என்றார். இதனால் சநி சந்திரன் இரு வரும் மகரத்தில்நிற்க என்பது பெறுகின்றோம். இவ்வாறு பொரு ளில்லையாயின் இதுவரை ஒவ்வொரு கோளுக்கும் அதது நின்ற இராசி யைக் கூறிவந்தவர் இச்சநிக்கும் சந்திரனுக்கும் கூறியிருக்கவேண்டும். கூறியது சநிக்காயின் சந்திரனுக்கு ஒன்றுவேண்டும். இதற்காக இவற் றின்பின்னர்நிற்கும் குருவைக்கூறி இவர்கள் இருவரும் ஒரு ராசியில் நிற்கின்றனர் என்று சுட்ட மகரத்தை நடுநிலையாக வைத்தார். மேலும் சந்திரக்கிரகணம் என்று கூறியதனாலே பூரணையும் அது அன்றுதொட்டு இன்றுகாறும் பிழைபடாது தோன்றும் அவிட்டநாளும் பெற்றாம்.

பூரணையும் அவிட்டமும் தோன்றுவது ஆவணிமாதமென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததே. அன்றி, மதிநிறைநாளில் சோமனை அரவு தீண்டுவதுண்மையின், சந்திரனினின்றும் 180 பாகைக்குமேல் சூரியனிற்பது இல்லையென்று காலவாராய்ச்சியாளரே கூறினாராகலின், சூரியன் சிங்கத்தில் நின்றான் என்று வெள்ளிடை விலங்கலெனப் பெறுகின்றாம். உரையாசிரியரான பரிமேலழகரும் நூலிற்கண்ட சொற்களுக்கு உரையெழுதிச் சென்றாரேயொழியத் தம் மனப்போக்குப்படி உரைசொல்லும் இக்காலத்தார்போன்று அவர் கூறவேயில்லை. அதனாலன்றோ சிறப்புப்பாயிரமுடையார் துணிதருபொருளைச் சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன் என்றார். இது வரையிற் கூறியதுகொண்டு நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருந்தானென்று கூறியுள்ளாரென்பதும், உரையாசிரியர்கொள்கையொன்றுங் காணப்படவில்லையென்பதும், புலர்விடியலங்கியென்பதுமாத்திரங்கொண்டு இது துணியவேண்டுவதில்லையென்பதும் பெற்றாம்.

இனி, பதினான்காவதாகக்கண்ட 'வில்லிற்கடைமகரம்' என்பதற்கு, சநி தனுசில் இருக்கவேண்டுமேயொழிய மகரத்திலில்லை என்னுங் கூற்றை யாராய்வேன். 'இறையமன்வில்லிற்கடைமகரமேவ' என்பது நூல். அதற்கு ஆசிரியர் பரிமேலழகர் யமனைத் தமையனாகவுடைய சநி வில்லுக்குப்பின்னாகிய மகரத்தைச்சேர என்று பொருள் கூறியுள்ளார். இதைத்தவிர விசேஷவுரை ஒன்றும் எழுதவில்லை. பிள்ளையவர்கள் சநி தன்னோடு ஒற்றுமைப்படாததுகண்டு வில்லின் கடை என்று பிரித்துக் கொண்டார்கள். தனக்கு ஆதாரமாகச் ஸ்ரீமான் மாணிக்கநாயக்கரவர்களையுங் கூறினார்கள். நாயக்கரவர்கள் தனுசுக்கு அடுத்த மகரமென்று சொல்லவேண்டுமானால் விற்கு அடை மகர மென்று இருக்கவேண்டுமென்றும், வில்லிற்கடைமகர மென்றிருப்பதாலே தனுசிலிருக்க என்றே பொருள்படும் என்றும் கூறியதாகச் சொல்லுகிறார்கள். முன்னொருக்கால் தாம் வெளியிட்ட இந்தியகாலகணிதம் (இண்டியன் க்ரனொலஜி Indian Chronology) என்னும் நூலில் நினத்தியாச்சியத்தைப் பற்றி எழுதும்போது பஞ்சாங்கங்களில் கொடுக்கப்பட்டிருப்பவை இவ்வளவோடு முடிவடையுமென்று குறிக்கும் என்றும், இதுவும் வேறு சிலவும் திரிக்சித்தாந்தகணி ஸ்ரீமத் விசுவநாத சிரௌதி முதலாயினோருக்கும் சம்மதமென்றும் எழுதினார்கள். யான் அச்சிரௌதிகட்கு

எழுதிக்கேட்டபோது அவர்கள் Thyajyam only commences at the time given in the Almanacks. I am not responsible for Mr. L. D. S's statement என்றெழுதியுள்ளார்கள். பஞ்சாங்கங்களிற் காணப்படும் தியாச்சியகாலங்கள் அதன்மேல் மூன்றேமுக்கால் நாழிகை செலவுடையதென்பது உலகவழக்கு. காலப்பிரகாசிகைஎன்னும் சோதிடநூலின் சம்மதமும் அதுவே. இவ்விதமே எனது ஆப்தநண்பரும் பெருங்கணியும் வேதாங்க விற்பன்னருமான காலஞ்சென்ற திருவையாறு ஸ்ரீமாந்—சாமிநாத சாஸ்திரிகளும் தெரிவித்தார்கள். அஃதேபோன்று எனது நண்பர் சீமான் மாணிக்கநாய்க்கரவர்களும் சொல்லக்கூடுமென் றஞ்சுகிறேன். வில்லிற்கடைமகரம் மேவ என்று கொண்டால் வில்லிற்கு ஏற்பட்டுள்ள 30 பாகையிலே கடைப்பாகையான 30-வது பாகையிலிருந்து மகரத்தின் முதற்பாகை செல்லுகிறுன் என்று பொருள் பயக்கவேண்டும். அதற்கு வாசகத்தைப் பிணைக்கக்கூடிய மொழிகள் சிலவேண்டும். வில்லிற் கடை என்பதற்கு தனுசின் 30-வது பாகை என்று கொள்ளலாம். மகரமேவ என்பதற்கு மகரத்தில் பொருந்த என்ற பொருள் பயப்பதல்லது வேறுபொருள் பயவாது. மேவ-பொருந்த, சேர; ஆகவே அதற்கு ஒரு வேற்றுமையுருபு வேண்டும். இவ்வாறு வலிந்து பொருள்கொள்ளினும் தனுசிலிருந்தான் என்று பொருள் கொள்வது யாங்ஙனம்? அன்றியும், அவன் மகரம் மேவ என்ற இரு மொழிகளும் வேண்டப்படாவாம். இத்துணை அருமையான ஒரு பாவிலே பயனில்சொற்களை ஆசிரியர் புகுத்தினர் என்ற குற்றம் பாரிக்க என் மனம் பதறுகின்றது. அன்றியும், வெற்றுச்சொற்களை மடுத்துப் பாட்டினழகினைக் கெடுப்பது பழந்தமிழ்ப்புலவர்கள்வழக்காறல்ல. குல்லாவுக்குத்தகுந்த தலைசெய்யும் வழக்கம் அந்நாளிலில்லை என்று திட்டமாகக் கூறலாம்.

இனி, உரையாசிரியர் கொண்டபடி வில்லிற்கு அடை மகர மேவ என்று கொள்வதில் இப்பொழுது அடையும் துன்பங்கள் காண்பதில்லை. ஆயினும், விற்கடை என்று கூறாது வில்லிற்கு என ஒரு இன்சாரியை சேர்த்தது என்னகருதி எனக் கடாயவழிப் பாட்டு இன்னோசை பெறுதற் பொருட்டு அச்சாரியையை ஆண்டுச் சேர்த்ததாமென்க. விற்கடை மகரமேவ, வில்லிற்கடைமகரமேவ என்னுந் தொடர்மொழிகளைப் பலதரங்கூறி அவற்றது பெருமை சிறுமை அறிக. அன்றியும், முன்னர்ச்

சோமனும் மகரத்தில் நிற்கிறதைச் சுட்ட நடுவில் இச்சொல்லைப் பெய்துவைத்தார் என்று கூறியதையும் உற்றுநோக்குக. ஆகையால் வில்லிற்கு அடை மகரம் என்பதே பொருந்தும் என்பதும் சநி மகரத்திலே இருந்தான் என்பதும் இதனாற் பெற்றாம்.

மேல், பத்தாவதான உரையாசிரியரும்நம்மைப்போல்ஒருகாலத்தைக் குறிக்க முயன்றனரா (அது பதினோராவது கூற்றின்படி ஒற்றுமைப் படவில்லையா) வென்பதை ஆராய்வோம். உரையாசிரியர் இப்பாட்டிற்குக் கூறியுள்ளதெல்லாம் "நிறத்தையுடைய வெள்ளி இடபத்தைச்சேரச் செவ்வாய் மேடத்தைச்சேரப் புதன் மிதுனத்தைச்சேரக் கார்த்திகை உச்சமாக விடிதலுண்டாக, வியாழம் சனியின் இல்லமிரண்டாகிய மகர கும்பங்கட்கு உப்பாலே மீனத்தைச்சேர, யமனைத் தமையனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச்சேர இராகு மதியமறையும்படி வருநாளின்கண்" என்பதே. மேல் தொகுப்புரை, இதனாற் சொல்லிபது, ஆவணித்திங்கள் அவிட்டநாளின் இக்கோள்கள் தமக்குரிய நிலமாகிய இவ்விராசிகளில் நிற்பச் சோமனை அரவுதீண்டவென்பதாயிற்று என்பதாம். இத்தொகுப்புரையாவது இக்காலத்து (Summing up) என்று ஆங்கிலவழக்கிலுள்ளபடியாகும். மேலேகூறியதில் யாண்டும் உரையாசிரியர் ஒரு காலத்தைக் குறிக்கமுயன்றதாக வென் சிற்றறிவுக் கெட்டவில்லை அன்றியும், இக்காலத்தைப்போல் அக்காலத்து இந்தியாவில் அதனிலும் தென்றேயத்தில் மேனாட்டு நாகரீகம்பரவித்தான் இந்தியர் எவற்றையும் பயின்றனர் என்னுங் கொள்கையில்லையென்பது தேற்றம். ஆகவே அவர்கட்குக் கலி இன்ன ஆண்டிற்றான் இது நிகழ்ந்ததென்று குறிக்கவேண்டிய அவசியமும் இலதாயிற்று. உரையாசிரியர் பின்னோர் இடர்ப்பாடுறாமல் செவ்விதிற் பொருளறியவேண்டி எழுதிவைத்தாரேயன்றிக் காலநிர்ணயஞ்செய்ய வந்தவரன்று. அவ்வாறு அவருக்கு அக்காலம் தோன்றியிருக்குமாயின், காலத்தைத் திட்டமாகக் கூறி அதற்குரிய ஆதாரங்களையுங் காட்டியிருப்பார். ஆகவே, அவர் ஒருகாலத்தையும் கூறவந்தவருமன்று. கூறியது தவறவுமில்லை.

[தொடரும்]

இலக்கணவிளக்க பரம்பரைத்,

திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகன்.

428. பிறர்புல மென்னார் தமர்புல மென்னார்
விறல்வெய்யோர் வீங்கிருட்கட் சென்றார்—நிறையுங்
கடாஅஞ் செருக்குங் கடுங்களி யானை
படாஅ முகம்படுத் தாங்கு.

429. [1]வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றார்—எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியோடு புக்கு.

வேய்.

430. ஒருவ ரொருவ ருணராமற் சென்றாங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.

புறத்திறை.

431. இருநில மருங்கி னெப்பிறப் பாயினும்
மருவின் மாலையோ வினிதே யிரவின்
ஆகோண் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தன மாகத் தாந்தம்
கன்றுகுரல் கேட்டன போல
நின்றுசெவி [2]யோர்த்தன சென்றுபடு நிரையே.

வள்ளிக்கூத்து.

432. மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ளேற்றாள் பெரிது.

பூசன்மாற்று.

433. ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படரத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றார்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் றாக்கினார்
வெம்பூசன் மாற்றிய வில்.

---

(428) பெரும்பொருள்வி (புறத்). தொல். பொரு. 58. நச். (429) பெரும்பொருள்வி. (புறத்). [1]வெவ்வாய். (430) தொல். பொரு. 58. (431) தகடூர் யாத்-தொல். பொரு. 58. [2]யேற்றன. (432) சிலப். 12. பக். 328; தொல். பொரு. 60. நச். (433). தொல். பொரு. 58.

தந்துநிறை.

434\. குளிறு குரன்முரசங் கோட்டின் வெரூஉங்
களிறெருடுதேர் காண்டலு மாற்ரு—நளிமணி
நல்லா ளினநிரை நம்மூர்ப் [1]பெருங்கானம்
எல்லாம் பெருக விடம்.

435\. கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமின்—எழுவொழித்தாற்
போமே யிவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து.

வேய்கூறினூர்க்குச் சிறப்பு.

436\. மாற்றருந் துப்பின் வயவேந்த னல்லனே
ஏற்ற பெருஞ்சிறப் பின்றீதும்—வேற்றூரிற்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்ருேற்றி
நல்வே யுரைத்தார்க்கு நாம்.

கரந்தை.

படைத்தலைவர் படையாளரைக் கூயது.

437\. கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவின் மேலோன் மறுத்தோம்ப லொட்டான்
அடிபுனை தோளி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை.

படைச்செருக்கு.

438\. வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
ருன்வல் விளையவர் தாஞ்செல்வி—ஞளைக்
கனைகுர னல்லாத்தன் கன்றுள்ளப் பாலால்
நனைவது போலுநம் மூர்.

ஊர்கொலை.

439\. அரவூர் மதியிற் கரிதூர வீம
விரவூ ரெரிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் றெழுவும் பகற்காண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெறூஅர் கொதித்து.

(435—437) தொல். பொரு. 58. நச். [1]புறங்கானம். (438) தொல். ஷை. 'பெரும்பொருள்வி (புறத்). (439) தொல். பொரு. 58 மேற்.

440. சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றூண்
டிகலிழந்த வல்வி லிளையோர்புண் டீரத்
துகளெழுங்கொல் பல்லான் றொழு.

நிரைமீட்சி.

441. அடியதி ரார்ப்பின ராபெயர்த்தற் கன்றாய்
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம்.

442. கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர் [1]கருதார் குழாஅந்
துரந்து நிரைமீட்ட தோள்.

பூசன்மாற்று.

443. ஆனு ரெறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவு முட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துழைக்குரற் குணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கட னெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தனன்
அஞ்சுதக் கன்றாற் செஞ்சோற்று நிலையே.

நிரைமீட்டோர் வரவு.

444. காட்டகஞ் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறாள்—ஒட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழும்
[2]என்னதுயர் பட்டாயோ வென்று.

---

(440) தொல். பொரு. 58 மேற். (441) பெரும்பொருள்வி (புறத்). (442, 443) ஷை; தொல். பொரு. 58. மேற். [1]கருதாதாருள்ளம். (444) பெரும்பொருள்வி (புறத்). தொல். பொரு. 58. மேற். [2]என்னெதிர்ப்பட்டாயோ; என்னது பட்டாயோ.

445. கல்கெழு சிறூர்க் கடைகாண் விருப்பினன்
மெல்ல நடவா [1]விரையு நிரையென்னே
தெள்ளறற் கானியாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவா வகை.

446. கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
எங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—[2]தங்கிளைகண்
மன்றுகாண் வேட்கை [3]மடிசுரப்பத் தோன்றுவ
கன்றுகாண் [4]மெய்குளிர்வீர் கண்டு.

பாதீடு.

447. யாமே பகுத்திட வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொல்—ஏமுற
அன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சென்று.

நிரைக்கோடை.

448. கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
முடித்தன னென்றிருந்த மூத்தோன்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.

உண்டாட்டு.

449. பகைவர் கொண்ட படுமணி யாயம்
மீட்டிவட் டந்த வாட்டிறற் குரிசின்
முழவுத் துயின்மறந்த மூதூ ராங்கண்
விழவுத் தலைக்கொண்ட விளையாட் டாயத்
தான்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பலகூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவற் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறும்
கொள்வினை மாற்றாக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதூ வாளே.

---

(445) பெரும்பொருள்வி(புறத). தொல். ஷை. [1]விரையுநிரை-யொல்லென. (446) பெரும்பொருள்வி (புறத்). [2]தங்கிளைக்கண். [3]மடிசுரப்ப வேதோன்றுங். [4]மெய்குளிர்ப்பர். (447) ஷை; தொல். பொரு. 58 நச். (448-449) ஷை.

வஞ்சி.

வஞ்சியரவம்.

450. விண்ணசைஇச் செல்கின்ற வேலிளைய ரார்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்தன்—எண்ணம்
ஒருபாற் படர்தரக்கண் டொன்னார்த முள்ளம்
இருபாற் படுவ தெவன்.

451. போர்ப்படை யார்ப்பப் பொடியா யெழுமரோ
பார்ப்புர வெண்ணுன்கொல் பார்வேந்த—னூர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிய நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது.

துணைவந்தபோது அரசர் விளக்கம்.

452. மேற்செல்லுங் காலத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசினு—னுற்கடல்சூழ்
மண்மகிழுங் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மேம்பட்டான் வேந்து.

கொற்றவஞ்சி.

453. நீணில [1]வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்று ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
முனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே.

454. ஆளுங் கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து.

மாராயவஞ்சி.

455. போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாந்
தானுதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
வனுதிப் பட்டத் திவன்.

(450, 451) தொல். பொரு. 63; பெரும்பொருள்வி (புறத்). (452–453) ௸. ௸. ௸. [1]வேந்தருடன்செல். (454) தண்டி. 54; வீரசோ. அலங். 25 மேற்; (455) தொல். பொரு. 63.

பெருஞ்சோற்றுநிலை.

456. உண்டியின் முந்தா னுடனுண்பான் றண்டேறல்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக் குயிர்நேர்ந்தார் மன்னர்க்
குறவிலர் கண்ணோடா தோர்ந்து.

தழிஞ்சி.

457. தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்.

கொடைவஞ்சி.

458. வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்துநர்க் கீதுமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கலி மான்றே ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல.

சூடின நொச்சியைப் புகழ்ந்தது.

459. மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சி
போதுவிரி பன்மா னுள்ளுஞ் சிறந்த
காத னன்மா நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
[1]தொடியணி மகளி ரல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.

உழிஞை.

அகத்தோன் செல்வம்.

460. பொருசின மாமுப் புலிப்போத் துறையும்
அருவரை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து.

---

(456) தொல். பொரு. 63. (457) ஷை; பெரும்பொருள்வி (புறத்). (458) தொல். பொரு. 63. நச். (459) ஷை. ஷை. 68. [1]தொடையுடை. (460) ஷை. ஷை. 67; பெரும்பொருள்வி (புறத்).

461. மேலது வானத்து மூவா நகரும்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
கொள்ளை சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
பல்வேறு விழுநிதி யெல்லா மவ்வழிக்
கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
தோலாத் துப்பிற் றுணிழல் வாழ்க்கை
வலம்படு மள்ளர்க்கு வீசி யிலங்கையில்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை யரக்கர் கோவே.

(பொன்முடியார் சேரமானுக்குத் தகடூரின்தன்மை கூறியது).

462. மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப
எவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை துமித்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்ட றகாது வெந்துறை யானே.

அகத்தோன் குடைநாட்கோள்.

463. குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வொன்றார்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் றோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து.

அகத்தோன் வாணட்கோள்.

464. முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவா ணாட்கொண்டான்—புற்றிழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வென்னுங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து.

(461) ஆசிரியமாலை (புறத்). (462) தொல். பொரு. 67 நச். (463, 464) ஷை., ஷை, 68; பெரும்பொருள்வி (புறத்).

அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

465. புற்றுறை பாம்பின் விடநோக்கம் போனேக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவ
ஞெரெயின்மேற் ரேன்றிஞ ரந்தரத்துக் கூடாத
போரெயின்மேல் வாழவுணர் போன்று.

அகத்தோர் ஏணி மயக்கம்.

466. இடையெழுவிற் போர்விலங்கும் யானையோர் போலும்
மடையமை யேணி மயக்கிற்—படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோர்க்கு
வாயி லெவனுங்கொன் மற்று.

அகத்தோன் பாசிமறம்.

467. தாந்தங் கடைதொறுஞ் சாய்ப்பவு மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணைத்து வீழ்தலா—னுங்கு
மதுக்கமழுந் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று.

அகத்தோன் முற்றிய முதிர்வு.

468. ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
ருகஞ்சேர் தோள்கொட்டி யார்த்து.

அகத்தோன்தோகைநிலை.

469. தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலைவன் வலைசுருக்கி யாங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தான்
உண்டற்ற செற்ருெரொழித்து.

எயில்காத்தல்.

470. தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தூக்க முடையோ ரொதுங்கியும்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்றுர் மாற்றுர்
அடிபிறக் கிடு மரிது.

(465–469) தொல், ஷை. (470) ஷை; பெரும்பொருள்வி (புறத்).

அகத்தோன் எயில்காத்த நொச்சி.

471. இருகன்றி ஞென்றிழந்த வீற்றுப்போற் சிறி
ஒருதன் பதிசுற் றொழியப்—புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று.

472. பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிடார்
காத்தவிக் காவல ரேனையார்—பார்த்துறூர்
வேண்டார் வணக்கி விறன்மதி ருன்கோடல்
வேண்டுமோம் வேண்டார் மகன்.

அகத்தோன் வாண்மங்கலம்.

473. வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
யொருபெரு வேந்தற்கூ ரீந்தாள்—[1]ஒருவன்வாள்
இவ்வுலகிற் பெற்ற விசகற்கலையேற் றூர்தியாள்
அவ்வுலகிற் போய்ப்பெறுங்கொ லாங்கு.

அகத்தோன் மண்ணுமங்கலம்.

474. வென்றி பெறவந்த வேந்தை யிகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் றூர்த்தார் பிறர்.

புறத்தான் குடைநாட்கோள்.

475. பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலரணத் துள்ளவ ரெல்லாம்—அகலிய
விண்டஞ்ச மென்ன விரிந்தகுடை நாட்கொள்ளக்
கண்டஞ்சிச் சும்புளித்தார் கண்.

புறத்தோன் வாணாட்கோள்.

476. தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
அழுது விழாக்கொள்வ ரன்றோ—முழுதளிப்போன்
வாணாட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோ ளென்று நினைத்து.

---

(471) தொல். ஷை. (472) யாப். வி. 94; நன். 154 மயிலை. (473, 474) தொல். பொரு. 68, [1]ஒருவன்பால், (475, 476) ஷை; பெரும்பொருள்வி (புறத்).

கொள்ளார்தேஎங் குறித்தகொற்றம்.

477. மாற்றுப் புலந்தோறு [1]மண்டில மாக்கள்செல
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாணொலி பல்கின்று லொன்று
ருடையன தாம்பெற் றவந்து.

இயங்குபடையரவம்.

478. இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சரம்
எரியவிர்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல லிவுளி
கோன்முனைக் கொடியின் விரவா வல்லோன்
நோன்வினை கடக்குந் தோன்றல பெரிதெழுந்
தருவியி னொலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே முரசங் கண்ணுற்றுக்
கதத்தெழு மாதிரங் கல்லென வொலிப்பக்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யார்ப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேஎம்
நெஞ்சுபுக லழிந்து நிலைதளர் பொரீஇ
ஒல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவன் வீங்கிய செலவே.

479. செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமி னிடிமுரச மார்ப்ப—வரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

புறத்தோன் முற்றிய முதிர்வு.

480. கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றுப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு.

---

(477) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி (புறத்). [1]போர்மண்டி மாக்க ளங்கொள். (478)தொல்.ஷை. (479)முத்தொள்ளாயிரம்(புறத்). (480)தொல். பொரு. 68. நச்.

தோலின் பெருக்கம்.

481. [1]இருசுட ரியங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் [2]கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழரணம் போன்ற
துடல்சின வேந்தன் முற்றிய வூரே.

482. மாமுது தாதை யேவலி னூர்துறந்து
கானுறை வாழ்க்கையிற் கலந்த விராமன்
மாஅ வி[?]லை வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் றுஅது
சுற்றமுஞ் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சுகறை படுத்த புன்மிடற் றிறைவன்
உலகுபொதி யுருவமொடு கோதையைத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்ற மெடுத்த மீளி
வன்றோ ளாண்டகை யூரே யன்றோர்
சொன்முறை மறந்தனம் வாழி
வில்லு முண்டவற் கந்நா ளாங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமும்
நீலக் குவளை நிறமும் பாழ்பட
இலங்கை யகழி முற்று மாக்கிய
கருங்கா னெடுங்கழைக் கண்ணும் விளிம்பழிந்து
பெருநீ ருகுதன் மாதோ
குரங்குதொழி லாண்ட விராமன்
அலங்குதடற் றுள்வான் (கழித்த?) ஞான்றே.

(சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன்படைபட்டதன்மை கூறக்கோட்டோற்து அவர் கூறியது)

483. கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்னு ளினியே

---

(481) ஆசிரியமாலை (புறத்); தொல்.பொரு. 67.நச். [1]இருசுடர் வழங்காட். [2]கடந்தடு. (482) ஆசிரியமாலை (புறத்). (483) தொல். பொரு. 67. நச்.

யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்க ணுடைவர்
உருகெழு வெகுளியர் [1]செறுத்தன ரார்ப்ப
[2]மிளைபோ யின்று நாளை நாமே
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமுர சிரங்க வூர்கொள் குவமே.

ஏணிமயக்கம்.

484. சேணுயர் ஞாயிற் றிணிதோளா னேற்றவும்
ஏணி தவிரப்பாய்ந் தேறவும்—பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு.

485. பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ [3]ருடன்றெழுந்த காலை—யிருவரு
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்.

புறத்தோன் அகமிசைக் கிவர்தல்.

486. வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினர் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயிற்
கொடுமுடிமேற் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து.

தோல்லெயிற் கிவர்தல்.

487. இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றேரான் போனகங்கைக் கொள்ளானல்—எற்றுங்கொல்
ஆறாத [4]வெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாறா மறலி வயிறு.

பாசி.

488. பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதின் றாயிற்—கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னும் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோ னின்று.

பாசிமறம்.

489. மறநாட்டுந் தங்கணவர் வைமந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—எறிதொறும்போய்

---

[1]செறுத்தெழுந் தார்பப. [2]எறும்போய். (484) தொல் பொரு. 68 (485) ஷை; பெருமபொருள்வி (புறத்). [3]ருடன்றெழுந்தாராயில். (486) ஷை. (487) ஷை 67. [4]வெம்பசித் தியா லுயிர்பருகி. (488, 489) ஷை 68.

நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு வுற்றுரைக் கண்டு.

புறத்தோன் மனங்காத்த நொச்சி.

490. தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு.

நல்லிசைவஞ்சி.

491. பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையின்
ஆன்போ யரிவையர்போ யாடவர்போ யாயீன்ற
வீன்போ யுறையு மிடம்.

492. வாகை வனமாலை சூடி யரசுறையும்
ஓகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

493. இரியன் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவின்
ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
ணும்பா ராட்டாதார் நாடு.

494. [1]வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு.

495. கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

புறத்தோன் வீழ்ந்த புதுமை.

496. வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்

---

(490) தொல். பொரு; பெரும்பொருள்வி (புறத்) (491—495) முத்தொள்ளாயிரம். [1]வேரறுகுபம்பிச்சுரைபரந்து. (496)தொல்.பொரு. 68; பெரும்பொருள்வி (புறத்).

வான்றோய் புரிசை பொறியு மடங்கின
ஆன்றோ ரடக்கம்போ லாங்கு.

497. மழுவான் மிளைபோய் மதிலா னகழ்தூர்ந்
தெழுவாளா னேற்றுண்ட தெல்லாம்—இழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட [1]மிகை.

புறத்தோன் வாண்மங்கலம்.

498. செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொல்—முற்றியோன்
பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.

மண்ணுமங்கலம்.

499. மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தி—னெழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினான் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.

புறத்தோன் தொகைநிலை.

500. கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
எதிர்சுருக்கி [2]யேந்தெயில்பா ழாக்கிப்—பதியிற்
பெயர்வான் றொகுத்த படைத்துகளாற் பின்னும்
உயர்வான் குறித்த துலகு.

தும்பை.

தானைநிலை.

501. கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடற்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால்—வற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை.

502. அனைத்துலகுஞ் [3]சூழ்போ யருநிதியங் கைக்கொண்
டினைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடன்

---

(497) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி(புறத்). [1]வகை. (498–500) ஷை 68. [2]யேற்றெயில்பா. (501) தண்டி. 48. (502) ஷை; வீரசோ. அலங். 23 மேற். [3]சேய்போ யரும்பொருள்.

மன்னவரின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு.

503. நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்கு—மாய்படை
பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு.

504. வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ [1]னொளிவழங்குஞ் செம்மற்றே—கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை.

505. நற்கொள் பெருவிறல் வேந்தவப்பத் தானவற்
கொற்கத் [2]துதவினு னுகுமாற் பிறபிற்
பலர்புகழ் [3]செல்வந் தருமாற் பலர்தொழ
[4]வானக வாழ்க்கையு மீயுமா லன்னதொர்
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு.

யானைமறம்.

506. மாயத்தாற் ருக்கு மலையு மலையும்போற்
காயத்து றஞ்சாக் களிற்றொடும்போய்ச்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினர் வான்மேன்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து.

507. மம்மர் விசும்பின் மதியு மதிப்பகையும்
தம்மிற் றமொற்றம் போன்றதே—வெம்முனையிற்
போர்யானை மன்னர் புறங்கவித்த வெண்குடையைக்
கார்யானை யன்றடர்த்த கை.

508. வான்றோய் கழுகினமும் வள்ளுகிர்ப் பேய்க்கணமும்
ஊன்றோய் நரியு முடன்றொக்க—மூன்றும்
கடமா நிலநனைக்குங் கார்யானைக் கிட்ட
படமாறு நீப்பதனைப் பார்த்து.

சேரவ்யானை.

509. வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேறுது

(503) தொல். பொரு. 312 உரை. (504) ஷை. ஷை. 72; பெரும் பொருள்வி (புறத்). [1]ஒளிதிகழுஞ். (505) ஷை. [2]துலந்தானு மாகுமால். [3]செம்ம லுடைத்தால். [4]வானுறை. (506) தொல். பொரு. 72 உரை; பெரும்பொருள்வி (புறத்). (507, 508) பெரும்பொருள்வி (புறத்).

செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

சோழன்யானை.

510. அயிற்கதவம் பாய்ந்துழக்கி [1]யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
[2]பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.

511. கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேநங்
கோழியர்கோன் கிள்ளி களிறு.

512. பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படா
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

513. கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

514. மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று [3]பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

515. எங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.

516. கானிமிர்த்தாற் கண்பரிப வல்லியோ புல்லாதார்
மானனையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வார்கழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.

(509, 510) முத்தொள்ளாயிரம். [1]யாழித்தேர் குத்தி, [2]பாய்செய்த. (511-513) ஷை (புறத்). (514) தொல். பொரு. 307 மேற்; வீரசோ. அலங். 25 மேற்; தண்டி. 55 மேற். [3]பனிமதியம் போல்வதூஉம். (515) வீரசோ. அலங். 31 மேற்; தண்டி. 77 மேற். (516) தண்டி. 23.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி௵ ஆவணிமீ [பகுதி ௧௦.

Vol. XXII. *August-September-1924.* No. 10.

மதங்கசூளாமணி.

(௩௪௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

எடுத்துக்காட்டியல்.

௧. மதங்கசூளாமணியாகிய செகசிற்பியார், இற்றைக்கு முந்நூற்றறுபது வருடங்களுக்குமுன்னே (கி. பி. 1564), ஆங்கில நாட்டின் நடுப்பாகத்திலுள்ள ஸ்ரிரூற்போர்ட்-ஒண்-அவோண (Stratford-on-Avon) என்னும் நகரத்திலே உற்பவித்தார். இவர்தந்தையார்பெயர் ஜோண் ஷேக்ஸ்பியர் என்பது. அக்காலத்தில் ஆங்கிலநாட்டிற் செங்கோலோச்சிய அரசியின்பெயர் எலிசபெத் ராணியென்பது. எலிசபெத் ராணியின்காலத்தில் ஆங்கிலநாட்டிற் செல்வமுங் கல்வியும் பெரிதும் விருத்தியெய்தின. செகசிற்பியார் தமது இருபத்தேழாம்வயதுமுதல் நூலியற்றிவந்தாரெனவும் ஐம்பத்துமூன்றாம்வயதில் உலகவாழ்வையொருவினாரெனவும் அறிகின்றோம். இப்புலவர்கோமகன் முதன்முதலெழுதிய நாடகம் காதல் கைம்மிக்க காவலன்சரிதை (Love's Labour's Lost) யென ஆராய்ச்சியாளர் கூறுவர். செகசிற்பியார் இயற்றிய மொத்தநூல்களின் றொகை நாற்பத்தைந்து என்ப. இவற்றினுள் ஒருசில பிற்காலத்தார் இவர் பெயரால் இயற்றிய நூல்களென ஒருசாரார் கூறுவர். அவையனைத்தினையும் ஆராயப்புகின், ஆராய்ச்சி பல்கி வரம்பினுட்படாது இகந்துவிடுமென அஞ்சி, நகைச்சுவையுணர்த்தும் காதல் கைம்மிக்க காவலன்சரிதை (Love's Labour's Lost) என்னும் ஒன்றும், அவலமும் இளிவரலு முணர்த்தும் ஆகுலராஜன்சரிதை

(King Lear) என்னும் ஒன்றும், அவலமும் உவகையு முணர்த்தும் இரம்மியன் சுசீலை சரிதை (Romeo and Juliet) என்னும் ஒன்றும், அவலமும் வெகுளியும் உணர்த்தும் தீநட்பஞ்சிய தீமோன்சரிதை (Timon of Athens)என்னும் ஒன்றும், மருட்கையு முவகையுமுணர்த்தும் பெரும்புயற்சரிதை (The Tempest) என்னும் ஒன்றும், அச்சமுணர்த்தும் மகபதிசரிதை (Macbeth) என்னும் ஒன்றும், பெருமிதமுணர்த்தும் வணிகதேயவர்த்தகன்சரிதை (The Merchant of Venice), யூலியசீசர்சரிதை (Julius Caesar) என்னும் இரண்டும், வெகுளியுணர்த்தும் சேனாதிபதிசரிதை (Titus Andronicus) என்னும் ஒன்றும், உவகையுணர்த்தும் வேனிற்காதை (As You Like It) கூதிர்க்காதை (The Winter's Tale) என இரண்டும், உவகையு நகையுமுணர்த்தும் கருதியது எய்திய காதலர்சரிதை (Twelfth Night or What You Will) என்னும் ஒன்றும் ஆகிய பன்னிரண்டு நாடகங்களையும் ஆராய்தற் கெடுத்துக்கொண்டாம். இவற்றை ஒரு சுவை, இருசுவையோடு சார்த்திக்கூறினமையின் இவை பிறசுவை பெறாவோவெனின், அங்ஙனமன்று, பெருவரவிற்றாகிய சுவையொடு சார்த்திக்கூறினும்; இவை பிறசுவையும் நிறைந்துவருவன வென்பது.

கவிச்சுவை நிறைந்தபாகங்களை இயன்றவரை செய்யுளுருவமாக மொழிபெயர்த்துத் தருவாம். வேண்டியவிடத்துச் செகசிற்பியார் வழங்கிய ஊர்ப்பெயர், மக்கட்பெயர், தெய்வப்பெயரென் றின்னவற்றைத் தமிழ்மொழிமரபுக்கியைய, வேற்றுமைப்படுத்தி வழங்குவாம். இருமொழிவழக்கையும் நிரனிறுத்துக்காட்டும் ஓர் அட்டவணையை வியாசமுடிவிற் றருவாம். இனி நிறுத்தமுறையே காதல் கைம்மிக்க காவலன் சரிதையை யாராயப்புகுவாம். நாடகத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாகிய சந்தியென்னும் உறுப்பு இச்சரிதையினுள் இன்னவாறு அமைந்துநின்றது என்பதைக் காட்டும்பொருட்டுச் சந்தியின் உட்பிரிவாகிய காட்சிகள் ஒவ்வொன்றினது சாரத்தையும் தனித்தனியாகத் தருவாம். வடநூலார் நாடகத்தின் பெரும்பிரிவை அங்கமென வழங்குவார். தமிழில் நாடகமெழுதினோர் அங்கத்தின் உட்பிரிவைக் காட்சியென வழங்கினர். யாமும் அவ்வழக்கைத் தழுவுவாம்.

I முகம்.

முதற்காட்சி :—சாவகதேசத்தரசனாகிய பிரியதத்தமன்னன் தனது உயிர்த்தோழராகிய வீரன், இலாவணன் சோமகன் என்னும் மூவரையும் விளித்துப் பின்வருமாறு கூறுகிறான்.

அரசனுரை : வாரீர்நண்பரே! "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றபடி இவ்வுலகி லுதித்த யாம் புகழினைத் தேடவேண்டும். காலமென்னுங் கழுகானது நம் வாழ்நாளை உண்டு தொலைத்துவிட, மரணம் என்னும் இளிவரல் வந்தெய்துமன்றோ? அங்ஙனம் வந்தெய்துதற்கு முன்னமே மாறாத புகழினைச் சம்பாதிக்கவேண்டும். பூதவுடம்பு கழிந்தபின்பும் நமது புகழுடம்பு எக்காலத்தும் நிலைபெற்றிருத்தல்வேண்டும். ஆதலால், ஆசையென்னு மிருட்சேனையை யடர்ந்தெதிர்ந்து வெல்லவேண்டும். தன்னைத் தான் வென்ற வீரனிலும் பார்க்கப் பெரியவீரன் ஒருவன் உளனோ? அத்தகைய வீரராகிய என்நண்பரீர்! நீவிர் மூன்றாண்டுக்கு என்னோடு வாழவேண்டும்; யாம் நால்வரும் சிற்றின்பங்களனைத்தினையும் வெறுத்துக் கல்வியே கருத்தாக இரவு பகல் சிந்தைவேறற்றுக் கல்வியில் மூழ்கியிருத்தல்வேண்டும். நமது அரமனை யொரு கல்விநிலயமாதல்வேண்டும். சாவகநாடு கண்டோருங் கேட்டோரும் அதிசயிக்கும் கல்விக்களஞ்சியமாதல்வேண்டும். நாம் எவ்விதமாக வாழவேண்டும் என்பதைப்பற்றி விரிவாக ஒரு பத்திர மெழுதி வைத்திருக்கிறேன்; அப்பத்திரத்தில் எனது நண்பராகிய நீவிர் கைச்சாத்திடல்வேண்டும்.

இங்ஙனம் அரசன் கூற இலாவணனும் சோமகனும் உடன்பட்டுக் கைச்சாத்திட்டனர். வீரன் பத்திரத்தைவாசித்துப்,பெண்களைக் கண்ணினும் பார்த்தல்கூடாது என்ற வாக்கியம் ஆங்கு எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து, அரசனைநோக்கி, "அரசே! நாகநாட்டரசன்புதல்வி தோழியர்மூவரோடும் பிற பரிசனர்களோடும் இங்கு வந்திருக்கிறாள்; அரசிளங்குமரியை வரவேற்று உபசரிப்பது தேவரீருடைய கடமையாயிற்று; ஆதலால் இந்தக்கட்டளையைத் தலைவராகிய தேவரீரே மீறி நடக்கப்போகின்றீர்" என்றான்.

அரசனுரை. ஆம், ஆம். இவ்விஷயத்தைப்பற்றி நான் பராமுகமாயிருந்துவிட்டேன். அரசிளங்குமரியை வரவேற்றல் அவசியமான காரியமே; ஆதலால் இந்த ஒருசட்டத்தை மீறிநடக்கத்தான் வேண்டும்.

வீரனுரை. அரசே! அவசியமேற்படும்போது சட்டத்தை மீறிநடப்பது சத்தியத்துக்குவிரோதமில்லையென்பதை நேரிற் கண்டுகொண்டேன்; கைச்சாத்திடுகிறேன்; இந்த மூன்றுவருஷத்துக்குள்ளே மூவாயிரம் அவசியம் ஏற்படுதல்கூடும்.

அரசனுரை. அன்பரீர்! நமதுபொழுது சந்தோஷமாகக்கழியும் என்பதற்குச் சந்தேகமில்லை. பலதேசங்களிலும் யாத்திரைசெய்து அநுபவமடைந்த அதிசூரன் என்னும் அறிஞனொருவன் நமது ஓய்வுநேரங்களில் நமக்கு நல்விஷயங்களைக்கூறி உவகையளிப்பான்.

[இத்தருணத்தில் மட்டி யென்னும் ஒருசேவகன் இருளப்பனென்னும் ஒரு நாட்டுப்புறத்தானையிட்டுக்கொண்டு ராஜசமுகத்துக்குவந்து அரசனை நமஸ்கரித்து ஒரு பத்திரத்தை யளித்தான்.]

அப்பத்திரத்தின் சாரம் வருமாறு:—

“என்னுயிர்க்குத் தெய்வமே! என் உடலைக்காக்கும் எஜமானே! ஏகசக்கிராதிபதியாகச் சாவகமுற்றையும் காப்பாற்றிவரும் பெருந்தகாய்! பறவை குடம்பையடையும் மாலைப்பொழுதில் எனதுஉடலிலுற்ற சிரமத்தைநீக்கும்பொருட்டு உவவனத்துக்கு உலாவச்சென்றிருந்தேன். அங்கு நான்கண்ட அருவருப்புக்குரிய செய்தியை யென்னென்றெடுத்துரைப்பேன். கீழ்மகனாகிய இருளப்பன் தேவரீருடைய கட்டளைக்கு மாறாக ஒருபெண்பாலோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தான். அவனைப் பிடித்துத் தேவரீருடைய சமுகத்துக்கு அனுப்புகிறேன். பெண்பாலின் பெயர் காஞ்சனை; தேவரீருடைய கட்டளைபிறக்கும்வரையும் அவளை என்னிடத்தில் நிறுத்திவைத்திருக்கிறேன்”.

இங்ஙனம்,

மாறா அடிமைபூண்ட ஊழியன்,

அதிசூரன்.

அரசன் வழக்கைவிசாரித்து இருளப்பன் உப்புக்கஞ்சியுணவோடு ஒருவாரஞ் சிறைச்சாலையிலிருக்கவேண்டுமென்று தீர்ப்பிட்டான்.

இரண்டாம்காட்சி :—அதிசூரன் விட்டில் என்னும் சிறுவனோடு வார்த்தையாடிக்கொண்டிருக்கிறான்.

[இச்சம்பாஷணையில் எள்ளலும் இளமையும்பற்றிய நகைச்சுவை தோன்றுகிறது; விரிவஞ்சி மொழிபெயர்க்காது விடுகின்றாம்]

இத்தருணத்தில் மட்டியும், இருளப்பனும், காஞ்சனையும் வருகிறார்கள். அதிசூரன் காஞ்சனையைநோக்கிச் சோலையிலுள்ள ஒரு வீட்டினைக் காட்டி, "அதோபார்; உனது சிறைவீடு; நீ அங்குப் போயிரு; நானே அவ்விடம் வந்து உன்னைத் தண்டிக்கிறேன்" என்று சொல்லுகிறான். அனைவரும் போயினபின்னர் அதிசூரன் தனியேயிருந்து மன்மதபாணத்தின் வலிமையைப்பற்றித் தன்னுள்ளே யாலோசிக்கிறான்.

[இதனோடு முதற்சந்தியாகிய முகம் முடிகின்றது.]

II. பிரதிமுகம்.

முதற்காட்சி :—நாகநாட்டு ராஜகுமாரியும், அவளது தோழியராகிய சாலினி, மாலினி, கத்துரு என்னும் நாககன்னியரும் அபயனென்னும் நாகநாட்டு மந்திரியும் தோற்றுகின்றனர். சாவகதேசத்தரசன் கைக்கொண்டிருக்கிற மூன்றுவருடவிரதத்தைப்பற்றியும் அரசனது தோழராகிய வீர லாவண சோமகரைப்பற்றியும் நாககன்னியர் தம்முள்ளே பலவாறாக வார்த்தையாடுகின்றனர். அரசன் தனது விருந்தினராகிய நாககன்னியருக்கு நகர்க்குப்புறத்தே விடுதியேற்படுத்தியிருப்பதாக அபயன் சொல்லுகிறான்.

[இத்தருணத்தில் அரசனும் மூன்றுதோழரும் பரிசனரும் வருகின்றனர்.]

இராஜகுமாரியை அரமனைக்கு அழைப்பது விரதபங்கமாகுமேயென்னும் எண்ணம் ஒருபக்கம் இழுக்க, நகர்ப்புறத்தே விட்டுச்செல்வது மரபாகாதேயென்னும் எண்ணம் மற்றொருபக்கம் இழுக்க அரசன் செய்வதென்னவென்றறியாது தியங்குகின்றான். ராஜகுமாரியின்

எண்ணம் மெல்லமெல்லப் பிரியதத்தமன்னனுடைய உள்ளத்தைப் பற்றுகிறது. வீரன் சாலினியை முன்பு கண்டறிந்தவன்; தன்னை மறந்து அவளோடு பலவாறாக வார்த்தையாடுகின்றான்.

சோமகன்: (அபயனைநோக்கி) ஐய! ஒருவார்த்தை; அதோநிற்கும் இளம்பெண்ணின்பெய ரென்ன?

அபயன்: அவள் எம்மூர்ப் பிரபு ஒருவரது புதல்வி; பெயர் கத்துருவர்கும்.

இலாவணன்: (அபயனைநோக்கி) ஐய! ஒருவார்த்தை; தூய வெள்ளை வஸ்திரந்தரித்துக்கொண்டு அதோ தோன்றும் நல்லாள் யாரோ?

அபயன்: அவள் ஒருபெண்.

இலாவணன்: அவள் பெயரை விரும்புகிறேன்.

அபயன்: அவளுக்கு உள்ளது ஒருபெயர். அதனை நீர் விரும்புவது வெட்கமாகும்.

இலாவணன்: அவள் யாருடையபுதல்வியென்று தெரிவிப்பீரையா.

அபயன்: அவளை ஈன்றுளது புதல்வியென்று அறிந்துகொள்வீராக.

இலாவணன்: நரைமுதிர்ந்த நுமது தாடியை இறைவன் என்றுங் காப்பாற்றுவாராக.

அபயன்: ஐய! கோபித்துக்கொள்ளாதீர்; அம்மடவரல் நாகநாட்டுப் பாற்குனபுரத்து மன்னன்புதல்வி.

இலாவணன்: அவள் அழகிலும் நற்குணங்களிலும் மிகச்சிறந்தவள்.

அபயன்: இருக்கலாம்.

[அரசனும் தோழர் பரிசனர்களும் போய்விடுகின்றனர்.]

அபயன் இராஜகுமாரியைநோக்கிச் சாவகதேசத்து மன்னன் அவள் மீது அடங்காக்காதல்கொண்டிருப்பதாகவும், தான் அதனைக் குறிப்பினால் உணர்ந்துகொண்டதாகவும் கூறுகிறான்.

[இதனோடு இரண்டாஞ்சந்தியாகிய பிரதிமுகம் முடிகின்றது. மூன்றாஞ்சந்தியாகிய கருப்பத்தினதுசாரத்தைக் கூறுவதற்குமுன் முதலிரண்டுசந்திகளினது அமைப்பைப்பற்றிச் சிலகுறிப்புக்கள் கூறுவாம். முகமும் பிரதிமுகமும் முறையே முளையும் நாற்றும் போல்வன வென உறுப்பியலினுட் கூறினும். முளைத்து நாற்றுவதற்கு ஒரு

வித்து வேண்டுமே, அவ்வித்து எதுவோவென்னின், நாடகங்கருதிய பொருளே அவ்வித்தாமென்பது. "காண லாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டாற்—பூணு வார்மபல் காளையர்" என்பது நாம் எடுத்துக் கொண்ட நாடகத்துக்குரிய வித்து. முதற்சந்தியாகிய முளையினுள்ளே அரசனது பிரமசரியநோக்கமும் அதன் பொருந்தாமையும், பொருந்தாச் சட்டத்தைப் பிறப்பித்தோர் தாமே யதற்கு மாறுகொள்வா ரென்னு முண்மையும், பிறர்பாற் குற்றங் காண்போர் அதிசூரனைப்போலத் தாமும்அக்குற்றத்துக்கு உட்படுவாரென்பதும், அரசனது விரத பங்கத்துக்குக் காரணம் நெருங்கிவிட்டது என்னுங் குறிப்புங் காட்டப் பட்டது. பிரதிமுகத்தினுள்ளே நாகநாட்டு இராஜகுமாரியினது வருகையும், அரசனது உள்ளம் அவள்பாற் சென்றமையும், அரசனது தோழர் மூவரும் இராஜகுமாரியினது தோழியர்மூவரையும் காதலித்து நின்றமையும் கூறப்பட்டதாதலின் முதற்சந்தியினுள்ளெழுந்த முளை நாற்றாகிமுடிந்ததன்மையது இரண்டாஞ்சந்தியாகிய பிரதிமுகமென்று அறிகின்றோம்.]

III. கருப்பம்.

நகர்ப்புறத்தேயிருந்த பூஞ்சோலையின் ஒருபக்கத்திலே அதிசூரனும் விட்டிலும் தோற்றுகின்றனர். அதிசூரன் தனதுமனம் காதலால் அலைவுற்றிருப்பதைப் பற்றிச் சிலவார்த்தைகள் கூறியபின், விட்டிலை நோக்கிச் சிறைச்சாலையிலிருக்கும் இருளப்பனை அழைத்துவரும்படி கட்டளையிடுகிறான். விட்டில் இருளப்பனையழைத்துவர அதிசூரன் இருளப்பனைநோக்கித் தான் அவனதுசிறையை நீக்கிவிடுவதாகவும் தான் கொடுக்கும் ஒருகடிதத்தைக் காஞ்சனையிடத்துக் கொடுத்துவிட வேண்டுமென்பதாகவுஞ் சொல்லுகிறான். இருளப்பன் அதற்குச் சம்மதித்துக் கடிதத்தைப்பெற்றுக்கொண்டு புறத்தே போகும்போது அரசனதுதோழருளொருவனாகிய வீரனைச் சந்திக்கிறான்.

வீரன்: (இருளப்பனைநோக்கி)

"மாலைவந் தடையு முன்னர் மன்னவன் மகளோ டிந்தச்
சோலையுட் பூக்கள் கொய்யத் தோழியர் மூவர் சார்வார்
சாலினி யென்னு நாமந் தரித்தமெல் லியல்பா லிந்த
ஓலையைக் கொடுத்து மீள்த லுன்பெருங் கடமை கண்டாய்!"

ஏடா! இருளப்பா! நாகநாட்டரசன்புதல்வியும் தோழியரும் மாலைக் காலம்வருவதற்குமுன்னர் இச்சோலைக்குப் பூக்கள்கொய்யவருவார். அவருள்ளே ஒரு மெல்லியல் உளள்; இன்மொழிநாவோர் அவள்பெயரை உரைக்குங்காற் சாலினியெனக்கூறுவார்; அன்னளது செவ்வியகரத்திலே இக்கடிதத்தைக் கொடுத்துவிடுவாயாக; இதோ இப்பணத்தை யெடுத்துக் கொள்.

[இருளப்பன் போனபின் வீரன் தனதுவிரதத்தைப்பற்றியும் அதனை நிலைகுலைக்க முற்பட்ட சாலினியைப்பற்றியும் தன்னுள்ளே யெண்ணி நெடுமூச்செறிகிறான்; இதனோடு மூன்றாஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது. அதிசூரனும் வீரனும் கொடுத்த கடிதங்களை இருளப்பன் மாறிக்கொடுத்துவிடுவதையும் அதனால் நேர்ந்த விளைவினையும் நான்காஞ்சந்தியாகிய விளைவினுட் காணலாகும்]

(தொடரும்.)

விபுலாநந்தர்.

ச ர ம க வி.

வெண்பா.

1. தொக்ககொல்ல மாயிரத்துத் தொண்ணூறொ டொன்பதினிற்
பக்கமதி ஆடியிரு பான்மூன்றில்—மிக்ககுரு
வாரமதில் நள்ளிரவில் மாமூல மன்னவனித்
தாரணியின் வாழ்வுநீத் தான்.

2. திருமால் திருவடிபோய்ச் சேர்ந்துதிரு மூலப்
பெருமான் பெரும்பேறு பெற்றான்—உருமேகு
விண்மழை போல வியன்வஞ்சி மாதழுத
கண்மழை வெள்ளங் கடந்து.

3. பொய்யுடலைக் கொண்டு புகழுடலைக் கண்டஞ்சி
வையகம்விட் டோடும் மறலியே—ஐயமறக்
கற்றுத் தெளிந்த கவிவாணர் சொல்வீர
வெற்றியுனக் குண்டோ விளம்பு.

திருவநந்தைவாசன்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௬௨௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

181. பொய்த்தலை மருங்குலாள் ஒருத்தி, புல்லிய
கைத்தலம் நீக்கிலள்; கருத்தில் நீக்கினள்:
சித்திரம் போன்ற அச் செயல் ஓர் தோன்றற்குச்
சத்திரம் மார்பிடைத் தைத்த தொத்ததே.

இ-ள். ஒருத்தி, தன்னைத் தழுவிய தலைவனது கைகளைத் தள்ளவில்லை; மனத்துள் அவனை ஏற்றுக்கொள்ளவுமில்லை: (தன்னை அடைந்தாரை வெறுத்துத் தள்ளுதலும் விரும்பிக் கொள்ளுதலும் செய்யாத) சித்திரம் போன்ற அவள் செயல், அவனுக்கு நெஞ்சில் வேல்பாய்ந்தது போன்றது.

பொய்த்து அலை மருங்குலாள்-பொய்யாகி (இருந்தும் இல்லாததென்றுசொல்லும்படி சிறியதாய்த் துவளுகின்ற இடையினையுடையாள். கைத்தலம்-கை. தோன்றல்-தலைவன். சத்திரம்-வேலாயுதம்.

[ஒருத்தி தன் பிரிய சகியை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, அன்பு பாராட்டி "என் நாயகன் பால் தூதுபோ" என்று சொல்ல உன்னுவாள்; நாணத்தாற் சொல்லமாட்டாள்: திரும்பவும் சொல்லஉன்னுவாள்; திரும்பவும் நாணத்தாற் சொல்லமாட்டாள்; இவ்வாறு பல முறை பயனின்றி முயன்று நெடுநேரம் தோழியைத் தழுவியபடியே நின்று விம்மிக் கொண்டிருந்தாள்.]

182. உருத் தெரி தன்மைய உயிரும் ஒன்று தாம்
அருத்தியும் அத் துணை ஆய நீரினர்
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்துவ ராம் எனப் புல்லினர் அரோ.

இ-ள். (காதலனும் காதலியுமாகிய ஒருவனுக்கும் ஒருத்திக்கும்) உருவம் தோன்றும் தன்மையுடைய உயிர் ஒன்று; அன்பும் ஒன்று: அப்படிப்பட்ட தன்மையுடையார் (ஆன அந்த) ஒருவனும் ஒருத்தியும்

உடம்பும் ஒன்றேயென்னும்படி (மெழுகுப் பாவை யிரண்டை ஒன்றாக) இணைப்பார்போலத் தம் உடல்கள் ஒன்றி ஐக்கமாகத் தழுவினார்கள்.

உரு தெரி தன்மைய-உருவம் (கண்ணுக்குத்) தெரியும் தன்மையை உடைய. அருத்தி-அன்பு. அத் துணை-(ஒன்று என்ற) அந்த அளவு. ஆய-அப்படிப்பட்ட. 'ஆயவன்' அப்படிப்பட்டவன் என்ற பொருள் பட, "ஆயவன் ஒரு பகல் அயனை யேனிகர்" (திருஅவதாரப்படலம். க) என்பதில் வருதல் காண்க. ஆம், அரோ அசைகள்.

'தாம்' என்பதைப் பகுதிப்பொருள்விகுதியாகக்கொண்டு கடவுள் வாழ்த்தில் 'உலகம் யாவையும் தாம் உள' என்பதை 'உலகம் யாவை தாமும் உள' எனக் கூட்டியதுபோல, 'உயிரும் ஒன்று தாம்' என்பதை '(இருவர்) உயிர்(கள்) தாமும் ஒன்று' எனக் கூட்டுக.

அச்சிடப்பட்டிருக்கிற பாலகாண்டப் பிரதிகள் ஒன்றில், உயிர் கண்ணுக்குப் புலப்படாத தன்மையதாதலாலோ, வேறு காரணத்தாலோ, 'உருத் தெரி தன்மைய உயிர்'என்றபாடம் தள்ளப்பட்டுக் 'கருத்தொரு தன்மையதுயிர்' என்றபாடம், மோனையின்றி யிருந்தும் கொள்ளப்பட்டிருக்கிறது. முந்திய பாடம், மோனையுடைமைபற்றியும் பின்வரும் விளக்கம்பற்றியும் இத்திரட்டில் எடுத்தாளப்பட்டது. அவ்விளக்கம் வருமாறு:—

மற்றையோர்க்குப் போலன்றிக் காதலர்க்கு அவர் உயிர் அவரால் காதலிக்கப்பட்டார் உருவமாகத் தோன்றுமென்பதுபற்றி இங்கே காதலராகிய ஒருத்தனுக்கும் ஒருத்திக்கும் 'உருத் தெரி தன்மைய உயிர்' என்றார். ஒரு காதலன் தன் காதலியின்தோற்றத்தைத் தன் உயிரின் தோற்றமாகக் கொண்டு கூறியதாக வேறொரு கவி பாடிய பின் வரும் பாட்டினை நோக்குக.

"காணு மரபிற் றுயிரென மொழிவோர்,
நாணிலர் மன்ற, பொய்ம்மொழிந் தனரே:
யாஅங்கண் டிசினே அரும்பெற லுயிரே;
சொல்லும், ஆடும், மென்மெல இயலும்,
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர்ப் பணைப்பெருந் தோட்டே".

(மன்ற-நிச்சயமாக. தோட்டு-தோளையுடையது.)

காதலனுக்குக் காதலியாகிய உயிரும் காதலிக்குக் காதலனாகிய உயிரும் ஒன்றுக்கொன்று ஏற்றந்தாழ்வில்லாமல் இன்பம் பயத்தலில் ஒன்றுபோன் றிருத்தல்பற்றி 'உயிர் ஒன்று' என்றார். அவர்கள் ஒத்த அன்பினராதல் குறிக்க 'அருத்தி ஒன்று' என்றார்.

[நெடுங்காலம் பிரிந்திருந்த காதல ரிருவர், சந்திக்கச் சமயம் கிட்டிய போது, உடல்கள் (மெழுகுப் பாவைகள்போல) ஒட்டும்படி இறுகத் தழுவினார்கள்; ஒட்டிய உடல்களை அவசத்தாற் பிரிக்க அறியாராய் நெடும்பொழுது பிரியாராயினர்.

ஒரு காதலன் தன் காதலியை மார்பு அழுந்தத் தழுவ, அவள் அவனை எதிர் தழுவியபோது, அவள் கைகள் அவன் முதுகை அணைத் தது, அவள் தனங்கள் அவன் மார்பை உருவி முதுகுப்புறத்து வெளிப்பட்டனவோவென்று தொட்டுப்பார்த்ததுபோன்றது.

காமாவேசங்கொண்ட ஒரு மாது தன் காதலன்பால் தோழியைத் தூதுவிட்டவள், விடும்போது அவள்பாற் சொல்லிய தின்னதென்று நினைவுகூர்தற் கியலாதவாறு அவளோடு அறிவையும் போக்கினாள்].

183. மறப்பிலள் கொழுநனை, வரவு நோக்குவாள்,
பிறப்பினோ டிறப்பெனப் பெயரும் சிந்தையாள்,
துறப்பரும் முகிலிடைத் தோன்றும் மின் எனப்
புறப்படும், புகும், ஒரு பூத்த கொம்பனாள்.

இ-ள். (ஆபரணங்கள் அணிந்து) பூத்த கொம்புபோன்ற ஒருமாது, தன்நாயகனை (ஒருபொழுதும்) மறவாதவள், அவன் வரவை (ஒவ்வொரு கணமும்) எதிர்பார்ப்பவள், (ஓர் உயிர்க்குப்) பிறப்பும் இறப்பும் (மாறி மாறி வருதல்) போல (ஒருகால் வருவானென்ற எண்ணமும் ஒருகால் வாரானென்ற எண்ணமும் மாறி மாறி வர) நிலைமாறும் மனத்தினாள்,— மேகத்தினின்று தோன்றும் மின் (அடுத்தடுத்து வெளிப்படலும் மறைத லும்) போல (ப் பலமுறை கூடாரத்தினின்று நாயகன் வருவானென்று வரவேற்க) வெளியேவருவாளும் (வாரானென்று) உள்ளே போவாளு மாயினாள்.

பெயரும் - நிலைபெயரும் - நிலைமாறும். துறப்புஅருமுகில் - (மின் னுக்கு உறைவிடமாகியதனால் அதற்கு) நீங்குதற்கரிய மேகம்; (மழை

பெய்து பிராணுதாரமாதலால் உலகத்தார், வெறுத்துவிடக்கூடாத மேகம்.

மின் பெண்ணுக்கும், மின் தோன்றல் மறைதல் பெண் வெளியே வரல் உள்ளேபோதலுக்கும் உவமானம். உவமானமாகிய மேகத்தைக் கூறி உவமேயமாகிய கூடாரத்தைக் கூருது உய்த்துணரவைத்தார். இவ் வுவமான வுவமேயங்களின் பொருத்தம் நினையுந்தோறும் மிக்க மகிழ்ச்சி விளைப்பதாயுள்ளது. மைந்தரும் மாதரும் கூடாரத்துறைதல் சந்திரசைலப்படலம் கஎ, கஅ-ல் கூறப்பட்டது.

இப்பாட்டு "வருவார் கொழுந ரெனத்திறந்தும் வாரார் கொழுந ரென அடைத்தும்—திருகும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமினோ" என்னும் கலிங்கத்துப்பரணிப்பாட்டை நினைவுறுத்து கின்றது.

[ஒரு மாது, தன் கொழுநன் தன்பால் அன்புபாராட்டும்போது, தன்னை இளையாள் பெயரால் விளிக்க, அவளிடத்திலும் தன்னிடத்து அதிக அன்புடையான்போல அவன் நடித்த கரவு வெளிப்படக்கண்டு சிரித்தாள்; அதே சமயத்தில் தன்னைக் குறைவாக நேசித்தானென்று கண்ணீர் பெருக்கினாள்].

184. கொள்ளைப்போர் வாட்க ணாள் அங் கொருத்தி,ஓர் குமரன் அன்னான்
வள்ளற்றூர் அகலம் தன்னை மலர்க்கையாற் புதைப்ப, நோக்கி,
"உள்ளத்தார் உயிர் அன் னாள் மேல் உதைபடு மென்று நீ நின்
கள்ளத்தாற் புதைத்தி" என்னு முன்னையிற் கனன்று மிக்காள்

இ - ள். ஒருத்தி, (ஊடற் காலத்தில் கோபித்து உதைக்கப்போம் போது) அவள் நாயகன் (அவனுடைய பொன்னாலும் மணிகளாலும் அமைந்த) மாலை அணிந்த மார்பை (அம் மாலைகள் பட்டு அவள் பாதங் கள் வருந்துமென்று) கைகளினுற் பொத்தக்கண்டு, "உன் உள்ளத்துள் ளே உறைகின்ற உன் உயிரை ஒத்தவள்மேல் உதைபடுமென்று உனக் குள்ள கள்ளத்தனத்தினுல் மூடுகின்றாய்" என்று முன்னினும் அதிக மாகக் கோபித்தாள்.

கொள்ளை - மிகுதி. குமரன் - முருகன். வள் - வலி (புறப்பொருள் வெண்பாமாலை). 'தொடை', 'தொடையல்' இரண்டும் மாலையைக் குறித்

தல்போல, 'வள்', 'வள்ளல்' இரண்டும் ஒருபொருள் குறித்தனபோலும். அப்படியாயின், 'வள்ளல்தார்' என்பதற்கு வன்மையான (மணிகளாலும் பொன்னாலும் அமைந்த) மாலையென்று பொருள்கொள்ளலாம். 'வள்ளல்' என்பது "வள்ளற்சேக்கைக் கரியவன்" (மிதிலைக் காட்சிப்படலம் ௧௬௪) என முன்னும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. 'வள்ளத்தார்' என்ற பாடங்கொண்டு 'வள்ளம்' 'வளம்' ஆயதெனலும் உண்டு.

[முற்பிறப்பிலே அறத்தை முற்றுப்பெறச் செய்யாதவர்கள் இப்பிறப்பிலே "கருவிலே திருவுடையவர்" ஆகிப் பெற்ற பிறவிச்செல்வம் அவர் இறக்குமளவும் குறைவின்றி நில்லாது இடையிலே குன்றிவிடுதல்போலச் சந்திரன் உதயமாகும்போது உடன் தோன்றிய ஒளி இடையிலே (அத்தமிக்குமுன்) மழுங்கும்படி உதயகாலம்வர, திருமாலின் கரிய பெரிய திருமார்பில் விளக்கும் சிவந்த கவுத்துவரத்தினம் போல, கரும் பெருங் கடலிலே செஞ்ஞாயிறு உதயமாயிற்று.]

எதிர்கோட்படலம்.

(சனகர் தசரதரை எதிர்கொண்டு வரவேற்றதைக் கூறுவது).

[தசரதர் சேனைசமுத்திரத்துடன் கங்காநதியை அடைந்தார்].

185. கப்புடை நாவின் நாகர் உலகமும் கண்ணிற் றோன்றத்,
துப்புடை மணலிற் றாகிக், கங்கை நீர் சுருங்கிக் காட்ட,
அப்புடை அநீக வேலை அகன் புனல் முகந்து மாந்த,
உப்புடைக் கடலும் தெள்நீர் உண் நசை உற்ற தன்றே.

இ-ள். கங்கையாறு (நீர் குறைந்து) நாகலோகமும் கண்ணுக்குப் புலப்பட, (முன்பு நீரினால் மறைக்கப்பட்டிருந்த) மணல் (வெளிப்பட்டுத் தோன்றுதல்) உடையதாகிச் சுருங்கியதாய்த் தோன்றும்படி அதன் நீரைப் படைக்கடல் முகந்துண்டதனால் (அந்நீர் தன்பால் மிகுதியாக வந்துகொண்டிருந்ததை உண்டுகொண்டு தாகம் தவிர்ந்திருந்த) லவணசமுத்திரம் நீருண்ணும் விருப்பம் மிகுந்தது.

கப்பு - பிளவு. நாவின் - நாவினையுடைய. துப்பு உடை - தூய்மையுடைய. மணலிற்று—மணலையுடையது. அப்பு உடை—அம்பினை உடைய. 'அம்பு', 'அப்பு' ஆக விகாரப்பட்டது. அனீகம் - சேனை. வேலை - கடல். அகன்புனல் - விரிநீர். நசை - விருப்பு.

[தசரதர் மிதிலையை அணுகியபோது, சந்திரன் சூரியனை யெதிர் கொண்டாற்போல, சந்திரகுலச் சனகர் சூரியகுலத்தசரதரை வரவேற் கப் புறப்பட்டார்.]

தசரதர் சேனை (பாற்கடலொழிய) மற்றெல்லாக்கடல்களும் ஒருங்கு திரண்டுவந்தாற்போல்வர, அதனைத் திருமகளைப்பெற்ற பாற்கடல் சந் தித்ததுபோல, சீதாதேவியைப்பெற்ற மிதிலா நகர ஜனசமூகம் சந்தித் தது.

தசரதர்சேனையைச் சனகர்சேனை கூடிய ஆரவாரம் கடலில் ஆறு சங்கமிக்கும் ஓசையை ஒத்தது.

தம் சேனையைப் பின் நிற்கச்செய்து, சனகர், தேரில்வந்து தசரதர் தேர் முன் இறங்க, அவர்தம் தேரில் ஏறுகவெனக் கைகாட்ட, ஏறினர். ஏறினவரை அகமும் முகமும் மலரத் தசரதர் தழுவினர். பின் இரு வரும் மிதிலைநோக்கிச் சென்றார்கள்.

இராமலக்குமணர் மிதிலையினின்று புறப்பட்டுப் பிதாவை யெதிர் கொள்ளவந்தார்கள். முன் பிரிந்த உயிர் திரும்பி வந்து சேர்ந்தாற்போல, இராமர் தசரதரை அடைந்து வணங்கத் தசரதர் அவரை ஆலிங்கனஞ் செய்தார். இலக்குமணர் இறைஞ்ச அவரையும் தழுவினர். இருவரும் தாய்மாரையும் தொழுதார்கள்.

இராமர் தசரதரை வணங்கியதுபோலப் பரதர் இராமரையும், இலக்குமணர் பரதரையும், சத்துருக்கர் இராமலக்குமண ரிருவரையும் பணிந்தார்கள்.

தம்பியர் குதிரைமேல் இருபக்கமும் வர, இராமர் தேர்மீதுசெல்ல, எல்லாரும் மிதிலையை அடைந்தார்கள்.

186. பஞ்சி சூழ் மெல் அடிப் பாவைமார் பண்ணை சூழ்
மஞ்சு சூழ் நெடிய மா ளிகையின் வந் திடை விராய்
நஞ்சு சூழ் விழிகள் பூ மழையின் மேல் விழ நடந்
திஞ்சி சூழ் மிதிலை மா வீதி சென் றெய்தினன்.

இ - ள். மாதர்களின்கூட்டம் மாளிகைகளினின்றும் வெளியே வந்து (மற்றச் சனங்களோடு) கலக்க, (அவர்களுடைய) பார்வை (மாரி) (தேவரும் மனிதரும் பொழியும்) பூமாரியினும் அதிகமாகத் தம்மீது விழ, இராமர் மிதிலைநகர வீதியிலே செல்வாரானர்.

பஞ்சி - பஞ்சு. அது செம்பஞ்சுக்காகிச் செம்பஞ்சுக்குழம்பைக் குறித்தது. பண்ணை - பெண்களின்கூட்டம். விராய் - விரவி - கலந்து. மழையின் மேல் - மழையினும் அதிகமாக. இஞ்சி - மதில்.

சூழ், இரண்டாம் அடி நான்காம் அடிகளில் தன் பொருளாகிய வளைதலையும், எதுகையில்நிற்றல் காரணமாக முதலடியில் ஊட்டுதலையும் மூன்றும் அடியில் ஒத்தலையும் உணர்த்தியது.

[தெருவில் வந்துசேர்ந்த மாதருள் பேதைமுதலாகப் பேரிளம் பெண் ஈறாக ஏழுபருவத்துப் பெண்களும் இருந்தார்கள்.]

உலாவியற்படலம்.

இராமர் மிதிலைவீதியிற் பவனியாகச்சென்றதைக் கூறுவது.

(உலா - பவனி - ஊர்கோலம். இயல் - தன்மை; இலக்கணம்)

[மான்கூட்டமும் மயிற்கூட்டமும் மின்கூட்டமும்போன்ற மாதர் கூட்டங்கள், தேனுண்ண மொய்க்கும் வண்டுகள்போல, இராமர் அழகை நோக்க நெருங்கிக்கூடின.]

187. கண்ணினுற் காதல் என்னும் பொருளையே காண்கின் றேம், இப்
பெண்ணின்நீர் மையினுல் எய்தும்பயன் இன்று பெறுதும்என்பார்,
மண்ணில்நீர் உலர்ந்து வானம் மழை அற வறந்த காலத்
துண்ணும்நீர் கண்டு வீழும் உழைக்குலம் பலவும் ஒத்தார்.

இ - ள். (மாதர்கள், 'நாம் இதுவரை காதாற்கேட்டதேயன்றிக் கண்ணுற்பாராத) காதலென்றபொருளை (—காதலே உருக்கொண்டாற் போன்ற இவரை — இன்று நேராகக்) கண்ணாலே காண்கின் (ற பாக்கியம் பெற்) றோம், நாம் பெண்ணாகப் பிறந்ததனுற் பெறக்கூடிய பிரயோசனத்தை இன்று பெறுவோம்' என்று எண்ணுவாராய், பூமியில் (எங்கும்) நீர் வற்றி வானமும் மழை (பெய்தல்) வறட்சி உண்டான காலத்திலே உண்ணும் நீரை (ஓரிடத்திலே) கண்டு (அந்நீரருகே) திரளும் மான் கூட்டங்களை ஒத்தார்கள்.

பெண்ணின் நீர்மை - பெண்தன்மை - பெண்மை. பெறுதும் - பெறுவோம், என்பார் - என்றெண்ணுவார் (குறள். ௩௬). வீழும் -

திரளும் (சிந்தாமணி). இப்பதம் இப்பொருள்பட இப்படலத்தில் ௫-ம் பாட்டிலும் வருதல் காண்க. உழை - மான். குலம் - கூட்டம்.

மாதர் கூட்டங்கள் பலவாயிருந்தமை குறிக்க 'உழைக்குலம் பலவும் ஒத்தார்' என்றார்.

188. பள்ளத்துப் பாயும் நன்னீர் அனையவர், பானல் பூத்த
வெள்ளத்தும் பெரிய கண்ணார், மென் சிலம்(பு) அலம்பும் மென் பூத்
தள்ளத், தம் இடைகள் நோவத், தமைவலித் தவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் என்ன, ஓடுகின் றாரும் ஒத்தார்.

இ - ள். மாதர்கள் தம்மை இராமர்பால் இழுத்துக்கொண்டு (தமக்கு முன்னாகச்) செல்லும் தம்மனத்தை (எட்டிப்) பிடிப்போமென்று ஓடுகின்றாரையும் ஒத்தார்கள்.

பள்ளத்துப் பாயும் நல் நீர் அனையவர்—தண்ணீர் பள்ளத்தை நோக்கி யோடுதல்போல இராமரை நோக்கி யோடும் மாதர்கள். பானல் - கருங்குவளை. பானல் பூத்த - கருங்குவளைமலர்போல மலர்ந்த. வெள்ளம் - கடல். வெள்ளத்தினும் பெரிய கண்ணாரெனற்பாலது செய்யுளாதலால் வெள்ளத்தும் பெரியகண்ணாரென இன் உருபு தொக்கு வந்தது. வேறோரிடத்துக் 'கஞ்சத்தி னளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்' என்பர். சிலம்பு அலம்பும் மெல் பூ தள்ள - சிலம்புகள் ஒலிக்கும் மெல்லிய பூ (ப் போன்ற பாதங்கள்) தள்ளாட. வலித்து - இழுத்து. பிடித்தும் - பிடிப்போம். பள்ளத்துப்பாயும் நன்னீர் என்று உவமானத்தைமட்டும் கூறி 'இராமரை நோக்கி ஓடும் மாதர்' என்ற உவமேயத்தைக் கூறாமலே சிறிதும் ஐயமின்றி நன்கு விளங்கவைத்த நயம் பாராட்டற்குரியது.

189. அரத்தம் உண் டனைய மேனி அகலிகைக் களித்த தாளும்,
விரைக் கருங் குழலிக் காக வில் இற நிமிர்ந்து வீங்கும்
வரைத் தடந் தோளும், காண மறுகினில் வீழும் மாதர்,
இரைத்து வந் தமிழ்தின் மொய்க்கும் ஈ இனம் என்ன லானார்.

இ - ள். அகலிகைக்கு (ச்சாபம் ஒழித்து) அருள்செய்த தாளையும் சீதாதேவிக்காக வில்லொடித்த தோளையும் காணும்படி தெருவிலே திரண்ட மாதர்கள் அமிழ்தில் மொய்க்கும் வண்டுக்கூட்டம் போன்றார்கள். அரத்தம் உண்டு அனைய - செந்நிறத்தை உட்கொண்டாற்

போன்ற. அளித்தல் - அருள்செய்தல் (சங்கஅகாதி). விரை - வாசனை. இற - ஒடிய. வீழும் - நிரளும் (சிந்தாமணி). இரைத்து - ஒலித்து. ஈ - வண்டு. தோள்கண்டார் தோளேகண்டார்! தொடுகழற் கமலம் அன்ன, தாள்கண்டார் தாளேகண்டார்! தடக்கைகண்டாரும் அஃதே" என்பதற்கியைய, இராமரது எல்லா உறுப்புக்களும், ஒன்று போல, அழகுடையனவாயினும், மாதர்கள் தம்போன்ற இரு பெண்களுக்கு நன்மைசெய்த தாளையும் தோளையும் விசேடமாகக் காண விரும்பினர்க ளெனலாம்.

190. வீதி வாய்ச் செல்கின் றூன் போல் விழித் திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவு மான் தேரிற் செல்வான்,
யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறு பொருள் உணர்த்தி விட்டான்.

இ - ள். (தோற்றத்தில்) வீதியிலே (உலாப்) போவார் போன்று, (உண்மையில், தம் அழகை நன்கு நோக்கக் கண்களை அலர) விழித்து (இமைத்தால், அச்சமயத்தில், அவ்வழகின் காட்சி மறையுமென்று) இமை கொட்டாமல் நின்ற மாதர்களுடைய கண்களுக்குள்ளே (தாம் மாத்திர மன்றித்) தாவும் குதிரை பூட்டிய (பெரிய தேரோடு செல்வாராகி, உயர்ந்தோர்கள் தம்மை எல்லாருக்கும் கண்ணன் என்பதற்குப் பொருள் (எல்லாருடைய 'கண்ணிடத்தவன்' என்று இராமர்) விளங்கச் செய்துவிட்டார்.

வீதிவாய் - தெருவில். வாவும் - தாவும். மான் - குதிரை. யாதினும் - எதனிலும் - கல்வி அறிவு ஒழுக்கங்கள் எதனிலும். கண்ணன் - கண்ணில் உள்ளவன்.

கரியன் என்று பொருள்படும் 'கிருஷ்ணன்' என்ற வடமொழிச் சொல் 'கண்ணன்' எனத் தமிழில் மருவியதென்பர். அச்சொல்லுக்குப் பொருள் 'கண்ணினிடத்து உள்ளான்' என்று காரணம் கற்பித்துக் கூறிய நயம் கவனிக்கத்தக்கது.

191. "எண்கடந் தல கிலா தின் றேகுறும், இவன் தேர்" என்று,
பெண்கள் தந் தம்மில் நோக்கு பேதுறு கின்ற காலை,
மண் கடந் தமரர் வைகும் வான் கடந் தானைத் தான் தன்
கண் கட வாமற் காத்த காரிகை வலிய ளோ காண்.

இ- ள். 'மனவேகத்தையும் கடந்து (தான் செல்லும் வேகத்துக்கு) அளவில்லாமல் செல்லாநின்றது இவர் தேர்' என்று பெண்கள் தங்கள் தங்களுள்ளே (நினைந்து) வருந்தி மயங்குகின்றபோது, (ஈரடியால்) பூமியைத் தாண்டி வானையுந் தாண்டிய (திரிவிக்கிரமாவதார மெடுத்த திருமாலாகிய) இராமரைத் தம்பார்வைக்கு எட்டாததூரம் போகாதபடி (எப்போதும் கிட்ட இருக்கும் வண்ணம் தம்மணவாளராகக்கட்டிக்) காத்துக்கொண்ட சீதாபிராட்டி வல்லமையுள்ளவரே.

எண் - மனம். அது மனவேகத்தைக்குறித்தது. இவ்வாறே 'சிந்தை' மனவேகத்தைக் குறிப்பதைப் பெருங்கதை உஞ்சைக்காண்டம் கங்கைநீராடியது 215-ம் அடியிற் காண்க. அலகு - அளவு. தம்தம்மில் - தங்கள் தங்களுள்.

மற்றைய மாதருக்குச் சிறிது நீடித்தகோமும் சற்றுத் தூரத்திலேயும் காட்சி அளிக்காதவரும் நினைக்குமுன்னே மூன்றுலகத்தையும் கடந்தவருமாகிய இராமரை எப்போதும் தம் அருகேயிருக்கும்படி தம் மணவாளராகச்செய்துகொண்ட சீதாதேவியின்சத்தி வியப்புறக் கூறப்பட்டது.

காதலர்க்குத் தம்மாற் காதலிக்கப்பட்டாரைக்கண்டு களிக்கும் பொழுது நெடும்பொழுதா யிருப்பினும், அது கணம்போலத் தோன்றுதலே, ஊர்கோலமாக மெல்லச் சென்ற இராமர்தேர் மனவேகத்தினும் அதிவேகமாகச் சென்றதெனக் காதலுற்றமாதர் கூறினரென்பதனாற் குறிப்பித்தார்.

[ஒருமாது, தனக்குரியவைகளுள், உயிரொன்றை ஒழிய, ஆடையும் வளையும், நாணும் நிறையும் முதலிய புறப்பொருள்களும் அகப்பொருள்களு மாகிய எல்லாவற்றையும் போக்கிநின்றாள்.

இராமபிரானது கரிய திருமேனியின் ஒளி தோய்ந்து மாதர்கண்கள் கரியவாயினவோ? மாதர்கள் கண்ணொளிபாய்ந்து அவர் திருமேனி கரியதாயினதோ? தெரியேம்.]

192. மாந்தளிர் மேனி யாள், ஓர் வாள் நுதல், மதனன் எங்கும்
பூந் துணர் வாளி மாரி பொழிகின்ற பூசல் நோக்கி,
"வேந்தர் கோன் ஆணை நோக்கான், வீரன் வில் ஆண்மை பாரான்,
ஏந்திழை யாரை எய்வான் யாவனோ ஒருவன்" என்றாள்,

இ-ள். ஒருமாது, மன்மதன் எல்லா மாதர்மீதும் புட்பசரமாரி பொழிந்து செய்கின்ற சண்டையைநோக்கி, "(எளியாரை வலியார் வருத்தாது காக்கும்) சக்கரவர்த்தியின் ஆணையை மதியானாய், வீர (ர்க்குள் வீர) ராகிய இராமனது வில்லாண்மைக்கு எதிரேநிற்கும் தகுதி ஒரு வருக்குமில்லை யென்பதையும் எண்ணிப்) பாரானாய் மாதரை எவனோ ஒருவன் எய்கின்றான்" என்றாள்.

வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றி (யுடையாள்). துணர் - கொத்து. 'ஏந்திழையாரை யாவனோ ஒருவன் எய்வான் எனக் கூட்டுக.

193. சொன்னலம் கடந்த காமச் சுவையை ஓர் உருவம் ஆக்கி
இன் நலம் தெரிய வல்லார் எழுதிய தென்ன நின்றாள்,
பொன்னையும் பொருவும் நீராள், புனைந்தன எல்லாம் போகத்,
தன்னையும் தாங்க லாதாள், துகில் ஒன்றும் தாங்கி நின்றாள்.

இ-ள். சொல்லவொண்ணாததும் (மற்றெல்லா) இன்பங்களுக்கும் மேற்பட்டதுமான காம இன்பத்தை ஒருவடிவமாக இன்பங்களை(ப் பகுத்தறிந்து அவற்றுட் சிறந்தவை இவையென)த் தெரியவல்லான் (ஆகிய சித்திரிகன்) சித்திரித்த சித்திரமென்று சொல்லும்படி நின்ற ஒரு மாது, (காமபரவசத்தால்) தான் அணிந்திருந்தன வெல்லாம் (நெகிழ்ந்து) நீங்கத் தன்னுடம்பையே தாங்கமாட்டாளாய் (ச் சோர்வு மிகுத்திருந்தும் மானம் மிக்குடையாளாதலால் அம்மானத்தைக் காக்கும்) சேலை யொன்று மட்டும் (நீங்கவிடாது) தாங்கி நின்றாள்.

'சொல் கடந்த,' 'நலம் கடந்த' எனக் கூட்டிப் பொருள்கொள்க. எழுதல் - சித்திரம் எழுதுதல். எழுதியது - சித்திரித்தது - சித்திரம். இன் நலம் - இனிய இன்பங்கள்.

"அகத்து நிகழ்ந்த காமச்சுவை பிறர்க்குப் புலப்படுமாறு இற்றென வாயாற் கூறலரியதும் ஏனை உலக வின்பங்களிற் சிறந்ததுமாகலின், 'சொன்னலங் கடந்த காமச் சுவை' என்றார்."

[ஒருத்தி, காமபரவசத்தினால், இராமரையன்றி வேறொருபொருளையும் காணாளாய் "நால்வகைப் படையுடன் பெருவைபவத்துடன் வரற்பாலராகிய இவர் தனித்து வருவானேன்?" என்றாள்.]

194. மைக் கருங் கூந்தற் செவ்வாய் வாள் நுதல் ஒருத்தி, உள்ளம்
நெக்கனள், உருகு கின்றாள், "நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன், போகா வண்ணம் கண் எனும் புலங் கொள் வாயில்
சிக்கென அடைத்தேன், தோழி! சேருதும் அமளி" என்றாள்.

இ - ள். ஒருத்தி, (காமத்தால்) நெஞ்சம் நெக்கு உருகுகின்றவள், (தன் கண்ணைக் கையால் இறுகப் பொத்திக்கொண்டு) "தோழீ! (எனக்குக் காதல் உண்டாக்கிவிட்டு அதனைத் தீர்க்காத) கள்ளன் (என் கண் வழியாக) என் உள்ளத்துள்ளே புகுந்தான். (அவன் வெளியே தப்பிப்) போய்விடாதபடி (அவன் உள்ளே நுழைந்த என்) கண்ணாகிய வழியை உறுதியாக அடைத்தேன். நாம் பள்ளியறையை அடைவோம். (என்னை அங்கே நடத்திக்கொண்டுபோவாயாக)" என்றாள்.

மை - மேகம். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. நெக்கனள் - இளகினவள் (ஆகி). புலம் - விடயம். வாயில் - வழி. சிக்கென - உறுதியாக. சேருதும் - சேர்வோம். அமளி - பள்ளியறை; படுக்கை.

[ஒருத்தி தன்னை மன்மதன் அம்புகள் துளைத்ததையும் ஆடை ஆபரணங்கள் நெகிழ்ந்து நீங்கினதையும் அறியாளாய், ஏனை மாதர்கள் இராமரை நோக்குவதைக்கண்டு பொறுமல் அவர்களைக் கடுமையாகக் கோபித்துப் பார்த்தாள்.]

195. களிப்பன, மதர்ப்ப, நீண்டு கதுப்பினை அளப்ப, கள்ளம்
ஒளிப்பன, வெளிப்பட் டோடப் பார்ப்பன, சிவப்புள் ஊறி
வெளுப்பன, கறுப்ப ஆன வேற் கணாள், ஒருத்தி, உள்ளம்
குளிப்பொடு காண வந்தாள்; வெதுப்பொடு கோயில் புக்காள்.

இ - ள். ஒருத்தி குளிர்ந்த மனத்துடன் இராமரைப் பார்க்க வந்தாள்; கொதித்த மனத்துடன் வீட்டுக்குப்போனாள்.

களிப்ப - மகிழ்வன - மகிழ்ச்சியைக் காட்டுவன. மதர்ப்ப-செருக்குவன - இறுமாப்பைக் காட்டுவன. நீண்டு - காதுப்பக்கம் சென்று. கதுப்பு - கூந்தல், கன்னம் அன்று. "கொண்டையுறு நீலவிழி" (குற்றாலத்தலபுராணம் கவுற்சனச்சருக்கம் க.) கொண்டை - கூந்தலைப் பக்கத்து முடித்த முடி. கள்ளம் ஒளிப்பன - ஒரு சமயத்தில் கள்ளக் கருத்தை வெளிப்படாது மறைத்துக் கபடமாகப் பார்ப்பன. வெளிப்

பட்டோடப் பார்ப்பன - மற்றொரு சமயத்தில், மனச்சிறையில் அடைத்திருந்த அக் கள்ளக்கருத்து யாரும் அறியும்படி வெளிப்பட்டு ஓடச்சுத்தமான பார்வையாகப் பார்ப்பன. சிவப்பு, சிவந்த ரேகைகளைக் குறித்தது. வெளுப்ப - (வெள்விழி, தூய) வெண்மையாயிருப்பன. கறுப்ப - (கருவிழி, கனிந்த) கருநிறமுடையன. குளிர்ப்பு, மகிழ்ச்சியைக்குறித்தது. வெதுப்பு - (காம) வெப்பம். கோயில் - அரண்மனை 'உள்ளம் குளிர்ப்பொடு வந்தாள், உள்ளம் வெதுப்பொடு கோயில்புக்காள்' என உள்ளத்தை வெதுப்பின்முன்னும் கூட்டுக.

இப்பாட்டில் அதிசாதுரியமாக மாதர்கண்ணின் தொழில்கள் பலவற்றை இனிது தொகுத்துக்கூறிய வனப்புப் பாராட்டத்தக்கது.

பாட்டின் முக்கிய கருத்தாகிய 'வீட்டினின்று மனக்குளிர்ச்சியோடு வெளியே வந்தவள் மனவெப்பத்தோடு திரும்பி உள்ளே போனாள்' என்பதை ஓரடியில் அமைத்துக்கொண்டு உறுப்பிற் சிறந்த கண்ணை வருணனையிற் சிறந்த வருணனையால் சிறப்பித்து ஏனை மூன்றடிகளையும் பூரித்த கவித்திறம், யாவரையும், விசேடமாகக் கவிஞரையும் மிக மகிழ்விப்பது.

[ஒரு மாது, அளகபாரமும் தனபாரமும் ஆடையாபரண பாரமும் மிக்க பிறமாதர்கள் தன்முன் நின்று தான் இராமரைக் காணாதபடி மறைக்க, வேறு வழி கிடையாமல், அம்மாதாது இடைகளின் இடையே உள்ள சந்து வழியாக, இராமரைப் பார்ப்பாளாயினாள்.]

196. தோள் கண்டார் தோளே கண்டார்! தொடு கழற் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்! தடக்கை கண் டாரும் அஃதே!
வாள் கொண்ட கண்ணார்! யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ் கொண்ட சமயத் தன்னான் உருவு கண் டாரை ஒத்தார்!

இ- ள். (இராமபிரானைப்பார்த்த மாதர்களுள்ளே முதற் கண் அவருடைய, தோளை நோக்கும்படி நேர்ந்தவர்கள் (அத்தோளழகில் ஈடுபட்டு வேறுயுறுப்புக்களை நோக்கும் எண்ணமே தோன்றாராய்த்) தோளழகையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்! தாளழகை நோக்கியவர்களும் தாளழகையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்! கையை நோக்கியவர்களும் அப்படியே! அம்மாதர்களுள் யார்தாம் அவர் வடிவை முடியக் கண்டவர்கள்? (ஒருவரும் இலர்.) அவர்கள், ஒன்றுக்கொன்று பாறு

(பட்ட அபிப்பிராயங் கொண்ட சமயங்களில் (கூறப்பட்ட) அவருடைய (வெவ்வேறு) மூர்த்தங்களை (மனக்கண்ணுற்) கண்ட சமயிகள் (தாம் தாம் கண்ட மூர்த்தமன்றி வேறு மூர்த்தங்களைக் காணாதவர்கள்) போன்றார்கள்.

தொடுகழல் - கட்டிய வீரகண்டைகளையுடைய. அஃதே - தடக் கையே கண்டார். மூன்றும் அடியில் 'கொண்ட' என்பது எதுகையில் நிற்றல்பற்றி 'நிகர்த்த' என்னும் பொருள் குறித்தது. ஊழ் - பகை (கம்பரா.நாட்டு.கள); முடிவு (மணிமேகலை ; முறை (மேற்படி). ஊழ் கொண்ட- "இதனிற் சிறந்ததில்லையென்று தனித்தனியே முடிவு கொண்ட". 'ஊழ்கொண்ட' என்பதற்குத் தத்தமக்குரிய 'முறையைக் கொண்ட' என்றும் பொருள் கூறலாம்.

[அண்டங்களனைத்தையும் வயிற்றிலடக்கிய திருமாலாகிய இராம பிரானினும் பெரியார் யார் உளர்? அவ்வளவு உருவிற் பெரியார் (அதினும் கருணையிற் பெரியாராய்) ஒரு மாது வருந்தாது உய்யும்படி அவள் உள்ளத்துள்ளே ஒடுங்கினார்.

ஒருத்தி இராமரைப்பார்க்க வீட்டினின்று மேகலையும் சிலம்பும் பேரொலி செய்ய வேகமாகக் காலால் நடந்து வெளியே வந்தாள்: அவரைக் கண்டு, மயல்கொண்டு, வசமிழந்து தோழியர் கைம்மீது சுமந்து உள்ளே கொண்டுபோகப்பட்டாள்.]

197. அருப்பு மென் முலை யாள், அங்கோர் ஆயிழை,
"இருப்பு நெஞ்சினை யேனும், ஓர் ஏழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா!
கருப்பு வில் இறுத் தாட்கொண்டு கா" என்றாள்.

இ - ள். ஒருமாது, (இராமரை நோக்கி, "எம்போன்ற) ஒரு பெண்ணுக்காக (வன்மையான) மலைவில்லை ஒடித்த புண்ணியரே! (அவளைக் காதலித்தது போல எங்களைக் காதலிக்காமல் எங்கள் திறத்தில்) இரும்பு (போல இளகாத) நெஞ்சினையுடையீரென்றாலும், (காதல் காரண மாகவன்றிக் கருணை காரணமாக, எங்களுக்காகக் கரும்புவில்லை ஒடித்து (எங்களை மனைவியராகக் கொள்ளவில்லையானாலும்) அடிமைகளாகக் கொண்டு காப்பீராக" என்றாள்.

ஆய் இழை - தெரிந்தெடுத்த ஆபரணம். அது அன்மொழித் தொகையாய் அதனையுடையாளாகிய பெண்ணைக் குறித்தது. ஏழை - பெண். இறுத்து - ஒடித்து. ஆட்கொண்டு - அடிமைகொண்டு. அருப்பு, இருப்பு கருப்பு என்பவை அரும்பு இரும்பு கரும்பு என்பவைகளின் விகாரம்.

[ஒருத்தி, இராமர் தேர் கண்மறையப்போனபின், அவர் உரு வெளித்தோற்றத்தைக்கண்டு "தேர்மீது செல்லவிட்டுத் திரும்பி இங்கே கிட்ட வந்து அவர் என் கண்ணெதிர் நிற்பதன்காரணம், அவர் கபடமோ? என்கனவோ"? என்றாள்.

ஒருத்தி, இராமர் போனபின் அவர்பால் அனுப்புதற்குத் தன் மன மன்றி வேறு தூது கிடையாதவளாய் விரகவேதனையால் உயிர் தளர் கின்றவள், "என்போல வருந்தாது அவரை அடையச் 'சீதை எத் தவம் செய்தனளோ!' என்றாள்.

ஒருத்தி, காதல் மிகுதியால், துடித்து, அழுது பெருமூச் செறிந்து, சோர்ந்து, தோழியைத் தொழுது "என்னை இவ்வாறும்படி செய்த மன்மதன், அவரை நான் சித்திரத்திலாவது கண்டு களிக்கும்படி அவர் வடிவை யெழுதவல்லனோ! (அவ் வல்லமை யில்லாதவன் என்னை ஏன் மயல்கொள்ளச்செய்தான்?)" என்றாள்.

ஒருத்தி, பக்கத்து நின்றாரை நோக்கி "இவ்வளவு அழகு மனித னுக்கு அமைதல் இயல்வதோ! இவர் திருமாலே! இது உண்மை யென் பதை நான் இப்போதே காண்கின்றேன்! பின்பு நீங்களும் காண்பீர்கள்!" என்றாள்.

ஒருத்தி, "இராமர் இந் நகர்க்கண் வந்தது சீதையின்பிதா செய்த தவத்தால், நமது பிதாக்கள் தவத்தாலன்று; இராமர் சீதையை மணத்த லன்றி நம்மை மணத்தல் இல்லையாதலால்" என்றாள்.

ஒருத்தி, "முனிவர் மன்னர் முதலியோர் உடன் வரவின்றி இராமர் தனியே என் கனவிலே வருவாரோ?" என்றாள்.

ஒருத்தி, "இவர் தம்மால் காம மயக்க மடைந்த மாதர்பால் ஒன்றும் விரும்பாராய் அவரை ஒரு சிறிதும் நோக்காராய்ச் சும்மா செல்கின்றார். ஆதலால், கருணையென்பதைக் கண்டறியாதவர். ஞானியோவென்னில், சீதாதேவியை விரும்புவானேன்? இவர் ஏனை மாதர்பால் இரக்கமில்லாத படுகொலைகாரர்!"

ஒருத்தி, காமபரவசத்தால், ஒரு செயலுமின்றி, உணர்ச்சியுமின்றிப் 'பிழைப்பாள்' என்று சிலரும் 'பிழையாள்' என்று சிலரும் கூறுமாறு ஓய்ந்து, ஒடுங்கிக்கிடந்தாள்.

ஒருத்தி, இராமரை அடைதல் கூடுமென்று அவர் தேர்பின் செல்வாள்; கூடாதென்று திரும்புவாள்; இவ்வாறாக ஊசலாடுவாள் போன்றாள்.

ஒருத்தி, மற்றொருத்தியை நோக்கி "என் மனத்தைக் காணேன். அஃது இவ்வழியாகப் போகக்கண்டாயோ?" என்று நாணமின்றிக் கேட்டாள். இச்சை கொண்டார்க்கு லச்சையுண்டோ?]

198\. நங்கை அங்கொரு பொன், "நயந் தார் உய்யத்
தங்கள் இன் னுயி ருங் கொடுத் தார், தமர்;
எங்கள் இன் உயிர் எங்களுக் கீகிலா
வெங்கண் எங்கண் விளைந்த திவற்" றென்றாள்.

இ-ள். ஒருத்தி, "இவர் சுற்றத்தார் (ஆகிய இவருடைய முன்னோர் தம்பால்) அன்புற்றோர் பிழைக்கும்படி தங்கள் இனியஉயிரையும் கொடுத்தார்கள். (அப்படிப்பட்டவர்கள் வழித்தோன்றிய) இவருக்குத் தம்பால் அன்புற்றதனால் இறந்துபடும்) எங்களுக்கு எங்களுயிரையே கொடுக்காத கொடுமை எங்கே யிருந்து உண்டாகியது!" என்றாள்.

பொன்-இலக்குமி (போல்வாள்). நயத்தல்-விரும்புதல்; அன்பாற் சிறத்தல் (பரிபாடல்). தவர்-உறவினர். வெங்கண்-கொடுமை.

[ஒருத்தி, முத்துமாலை சோர, மற்ற ஆபரணங்களனைத்தும் சோர, ஆடை சோர, ஆவி சோராநின்றவள், "எவரும் அஞ்சும் இந்த வில்வீரர் எதிரிலேயே என்னைக் கொல்லுகின்ற மன்மதனினும் வலியார் யார்!" என்றாள்.

இவ்வாறு மாதர்கள் காதலால் துன்புறுநிற்க, இராமர், அரசர் குழாம் புடைசூழத் தம்பியரோடு சென்று வசிட்டரும் விசுவாமித்திரரும் இருந்த மண்டபத்தைச் சேர்ந்தார். அங்கே தசரதரும் வந்தார்.]

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

[களரு-ம் பக்கத் தொடர்ச்சி.]

கிரவுஞ்சப்படலம்.

தந்துவார் துணைத்தாட்கமலாசனத்தலைவன்
இந்திராதியர்யாவருமெம்பிரான்றன்னை
வந்துசூழ்ந்தனர்யானும்போய்வலஞ்செய்வேனென்ன
வுந்துதேரவனுத்தரத்துற்றனனன்றே. (க)

மொய்கொள்வாரிதிபுலகமாந்தலைமகன்முன்னர்
மையாரவுகட்கங்குலந்தெரிவையிவ்வைகல்
ஐயரீங்கிடமுதுக்குறைந்தெனவந்திமடந்தை
செய்யகோலமுற்றெதிர்ந்தெனவெழுந்ததுசெக்கர். (உ)

வளைக்கும்வெவ்விருட்கருங்கடன்முகட்டினில்வந்து
முளைக்கும்வெண்கலைத்துழவினுற்றுழவிமுன்றுலகும்
விளைக்கும்வென்றியங்கடற்றுறைகடந்தமீகாமன்
றிளைக்குமம்பியினெழுந்ததுகுழவிவெண்டிங்கள். (௩)

அரவநீள்வடம்பிணித்துமந்தரவரையதனாற்
கரைசெயாப்பெருங்களியமுதெழும்படிகடையத்
திரைசெய்வேலையினமுதவெண்டிவலைகடெறித்த
வொருவன்மேனியிற்பொலிந்தனவுடுக்களாலும்பர். (ச)

விரைவினம்மிறைக்காகுலமியற்றியவெய்யோன்
குரவடைந்தனனென்னவாய்மலர்ந்தனகுமுதந்
தெருளிலோர்கள்வாய்திறந்திடில்யாமும்வாய்திறத்தல்
கருமமன்றெனவடங்கினர்போன்றனகமலம். (ரு)

மஞ்சுதோய்நெடுமாடமேலாடவர்மகளிர்
நெஞ்சுதோய்முலைநேமிகைப்பற்றலுநேரா
வெஞ்சலின்றியேயெம்மையும்பற்றுவரென்ன
வஞ்சிநீங்கினவொத்தனசக்கரவாகம். (சு)

தாணிகாறருங்கங்குலசம்பெரும்பயிர்தழைப்பக்
கருதுவாரிநீர்பாய்ச்சுவான்மாலையங்கருத்தா
விரவுவெள்ளியங்கூன்கலைக்கயிற்றினுல்விடல்போல்
வருணவாரியினாழ்ந்ததுகுழவிவெண்மதியே. (எ)

ஆயபோறிவொடுபொருணீங்கவாதன்போ
னேயமாகியேயெங்கனுமிடையறநிறைந்த
மாயனு பரம்பரமனுர்வேறெனமதிக்கும்
தீயபாதகர்விழுநரகொத்தது திமிரம். (அ)

அள்ளலாமெனுமிருட்பிழம்புலகெலாமடைய
நள்ளிராவிலக்கன்னியையார்கொலோநயந்தார்
உள்ளமீர்குவனெனவுருத் துலவினனுலவும்
பிள்ளைமாருதத்தேருடைபொருதனிப்பெரியோன். (கூ)

அன்னகன்னிபூணலர்முலைப்பெருங்குவட்டிடையே
கொன்னுறுக்கணைதொடுத்திடப்பூங்கணைகொளுவி
யுன்னினுனவள்மனையிலக்கன்றெனவுணர்ந்தே
பின்னதாகியதூணியிற்பெய்தனன்பெயர்ந்தான். (க0)

வாங்குதெண்டிரையுலகெலாந்தருமமேவடிவாய்
வீங்குகின்றது தானெனும்பருவம்விட்டொழிய?
வாங்குகா........வந்தனுகு........னுவைவிட்டகல?
நீங்குமாயையினீங்கினநீங்கலாநிசியே.? (கக)

செறிந்தபேரிருட்கங்குலாங்காமிசைசெல்ல
வறிந்தவாரணக்காரணக்குறியுணர்ந்தழைப்ப
மறிந்ததெண்டிரைக்கடலிறத்திருமறுமார்ப
னெறிந்தசெஞ்சுடர்த்திகிரிபோற்கதிரவனெழுந்தான். (கஉ)

தஞ்சமின்றியவெளிமையிற்செம்மையின்றன்மை
கொஞ்சமன்றெனவடங்கினர்போன்றனகுமுத
மஞ்சுபூதமுமைம்பெரும்புலன்களுமடங்க
நெஞ்சுணேக்குவோர்கண்களைபொத்தசெங்நீலம். (கஙு)

புள்ளியந்தனியள்ளியெனுமேழிசைப்புலவோற்
குள்ளுவந்தினி தூறியபொருளெலாமுண்ண
வெள்ளமின்றியேமுகமலர்ந்தன்பொடுமீயும்
வள்ளியோர்முகமலரெனமலர்ந்த துவனசம். (கச)

பத்திகைப்படுமறையவரொடுஞ்செழும்பருவப்
பித்திகைப்பெருவனங்களுங்கண்மழைபெய்யக்
கத்திகைக்குழலியரொடுங்கலந்தவர்மனமு
மெத்திகைக்கனுஞ்சங்கமும்பேரியுமேங்க. (கரு)

பண்ணியம்பிடச்சுரும்பினமூரன்றிடப்பதியை
நண்ணலின்றிய துயாறச்செயலெலாநடக்க
வெண்ணுநான்மறைமுதலவர்முதற்குலத்தியற்கைப்
புண்ணியங்களும்பொலிந்திடப்பொலிந்த துபுவனம். (கசு)

அக்கணத்தினிலணிதுழாய்மணிமுடியமலன்
பக்கநின்றுயர்கலுழனைச்சிறிதுகண்பார்க்க
வெக்கருத்தெவையென்பணியென்றினிதிறைஞ்சச்
செக்கர்வாய்திறந்தொருவிளையாட்டினைத்தெரித்தான். (௧௭)

பன்னகப்பெருவயிரிகேளிமையவர்பரம
னன்னநான்முகன்முதலியயாவருமறியா
தின்னசெக்கடிக்கிடக்குமிப்பங்குவையெடுத்தே
பின்னொர்தீவினிலுய்த்திடுகென்றனன்பெரியோன். (௧௮)

கடனிறப்பிரானுரைத்தலும்பசியகட்கவைநா
விடதரப்பகைதொழுதெழுந்தன்னவன்விடைகொண்
டுடலுயிர்ப்பொறையொழிந்திலனென்னநொந்துழலும்
படர்மிகுத்தவப்பங்குவைக்கவர்ந்தனன்படர்ந்தான். (௧௯)

பணத்தபாந்தளின்பஃறலைக்கிடந்தபாமகளை
மணத்ததிண்புயமிரண்டையுமொன்றுறவலித்தே
கணத்தினிற்கடறுவியகலுழனக்கரியோ
னிணைத்தமந்தரங்கொண்டகல்கின்றதுமியையும். (௨௰)

வயினதேயனூர்வல்லையிற்கவர்ந்துவான்செல்ல
வயனிழைத்ததீவினைகிடந்தனகொலென்றயர்ந்தான்
உயிர்பிழைத்திடலரிதிதற்கிரையன்றேவுடலஞ்
செயலினிப்பிறிதிலதெனவுணர்ந்தனன்றிறலோன். (௨௧)

அரசிழந்தனனரும்பதிநீங்கினனன்பாய்
விரவுகாந்தையையொழிந்தனன்மக்களைவிடுத்தேன்
புரைசெய்யாக்கையுந்தாங்கினன்விசும்பிலூர்புள்ளுக்
கிரைசெய்வான்கொலோவிதித்தனைபரமவென்றிசைத்தான். (௨௨)

வேறு.

மெய்யாயழியாதவெளிக்கிடையே
பொய்யாகியமாலைபுணர்த்தியவா
செய்யாசெயலற்றவர்சிந்தைவிடா
ஐயாவெளியேயுன்னடைக்கலமே. (௨௩)

ஓவாநிலனுமுலவும்புனலுந்
தீவாயுவும்வானொடுதேவர்களு
மூவாமுகனும்முதன்மூவர்களு
மேவாபெரியேயுன்னடைக்கலமே. (௨௪)

பொல்லாமணியேபுனையாவணியே
யெல்லாவையுமாகியிருந்தவனே
சொல்லாலிழுவென்பதோர்சுட்டுருவு
மல்லாதவனேயுன்னடைக்கலமே. (உரு)

பொறிவாய்வழிபுந்திபுறத்துவிடா
நெறிவாய்தவரன்பொடுநின்றவனே
சிறியாய்பெரியாய்செயலேதுமிலாய்
அறியாயறிவாயுன்னடைக்கலமே. (உசு)

நாகாபரணநயனுயுதசெம்
பாகார்மொழிபங்கரசங்கரனே
மோகாதியின்மூழ்கிமூளைத்திடும்வித்
தாகாதளியேனுன்னடைக்கலமே. (உஎ)

என்றங்கவையோதிடுமேல்வையினில்
நின்றஞ்சலெனுஞ்சொனிகழ்ந்தசிறை
மினறந்தவனுங்கிரவுஞ்சமெனுங்
குன்றின்புடையிற்கொடுபோயினனே. (உஅ)

வேறு.

வரையினோர்புடைவைத்தனன் வைத்துமேல்
விரசுவானறனைநோக்கினன்மெய்யினை
யுரைசெய்யாதுவிடுத்ததென்னேவெனப்
புரைசெய்வாரணமன்னன்புகலுவான். (உகூ)

ஆரையோபுகலாழ்கடலைந்தினைப்
போவிந்தப்பிறங்கலிற்பெய்தனை
தீரவெண்ணலைதீப்பசிதீர்தர
நீரையேனுமிரப்புவதியாரென. (ஙo)

வண்ணவெஞ்சிறைநாகவயிரியன்
றண்ணல்வேந்தனையன்பொடுநோக்கியே
புண்ணநல்லமுதூட்டுவனஞ்சலென்
றெண்ணிமாகத்தின்வேகமொடேகினன. (ஙக)

கிரவுஞ்சப்படலமுற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

ஆசிரியர் நல்லந்துவனார்காலம்.

(௩௯௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேல், ஒன்பதாவதான சிலப்பதிகாரகாலமும் சங்ககாலமும் எட்டாம்நூற்றாண்டென்னுங் கொள்கையை எடுத்துக்கொள்வோம். பிள்ளையவர்கள் சிலப்பதிகாரகாலவாராய்ச்சிசெய்தகாலத்திலேயே இவர்கள் காலவாராய்ச்சி பிழையுடையதென்று பலராலும் காட்டப்பட்டுளது. அதனை மறுத்துக்கூறுமற்றும்கூறினதையே மறுபடியும் கூறுவதைத்தவிர்த்து வேறொன்றும் அவர்கள் சொல்லியதாயில்லை. இவர்களைப்போலவே இவர்களோடு ஒத்துழைக்க முன்வந்தவர் கல்வெட்டுப் பரிசோதகரான திருவாளர் K. V. சுப்பிரமணிய ஐயர் B.A., M.R. A.S. அவர்கள். இவர்கள் சொற்களுக்குப் பொருள்கொள்ளுட் விதங்களே விநோதமானவை. முன்னொரு சமயம் இவர்கள் கொண்ட கருத்துக்கள் செந்தமிழிற் குறிக்கப்பட்டுள்ளன. இவர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களைப் பின்பற்றிக் கடைச்சங்ககால மிதுவாகுமென்று பல வியாசங்கள் ஆங்கிலத்தில் எழுதி விடுத்தார்கள். இவைகட்கெல்லாம் மறுமொழியாகச் சென்னைப் பல்கலைக்கழகச் சரித்திரப்போாசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தமது பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள் மூலமாகவும், சிறுநூல்கள் மூலமாகவும் முடிவு கூறி வெளியிட்டுள்ளார்கள். இதுவுமன்றி விஜயநகர ஸமஸ்தான கலாசாலைச் சரித்திர ஆசிரியரான ஸ்ரீமான் M. S. இராமசாமி ஐயங்காரவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்.

*Vidvan Raghava Iyengar collecting the various evidences then available has maintained Kanakasabhai Pillay's

---

*வித்வான் ராகவையங்காரவர்கள் அப்பொழுதுகிடைத்த சான்றுகளையெல்லாந் திரட்டிச் சில காலவேறுபாடுகளுடன் கனகசபைப்பிள்ளைகொள்கையை நிலைநிறுத்தினார்கள். இக்கொள்கையைச் சிலர் ஏற்கவில்லை. அவர்களுள், திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களும், சுப்பிரமணியஐயரவர்களும் இங்குக் குறித்தற்குரியர். இவர்கள் சங்ககாலம் கி. பி. 7-ம் (எழாம்) நூற்றாண்டாகும் என்று கூறுகின்றனர். ஆனால் இது நிலைநிற்காதென ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் காட்டினார்கள்.

theory with slight modifications in the dates of a few kings. This view however, was not accepted by a section of scholars among whom Dewan Bahadur Swamikkannu Pillai and Subramania Iyer deserve special mention. These maintain that the date of the Sangam is to be sought in the 7th Centuary A. D. a position since proved untenable by Prof. S. Krishnasami Iyengar.

* * * * *

The publication of †Cheran-Chenguttuvan at once arrested the attention of scholars who at that time made no serious attempts to controvert Pandit Raghava Iyengar's arguments, Prof. S. Krishnasami Iyengar however took up the subject for re-examination of evidences and rightly concentrated his attention on this important topic. His 'Beginnings of South Indian History' published a few years ago was intended perhaps as *a final reply to the various theories propounded regarding the date of the Sangham.*

* * * * *

It may be said that he (Prof. S.K.) met the arguments of Subramania Iyer whose bold enunciation of *theories rightly received severe rebuff at the hands of the learned Professor*. (The italics are mine).

---

†'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூல் பல ஆசிரியர் மனதைக் கவர்ந்தாயினும், அதனிற் கூறியவைகளை மறுக்க ஒருவரும் முற்படவில்லை. சரித்திர ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் மறுபடியும் சான்றுகளை ஆராய்ந்து சங்ககாலத்தைத் தாபிக்க முற்பட்டார்கள். அவர்களது 'தென்னிந்திய சரித்திரத்தொடக்கம்' என்னும் நூல் சங்ககாலத்தைக்குறித்து வெளியான பல கொள்கைகளுக்குத் தகுந்த வாய்ப்பூட்டு என்று சொல்லலாம்.

... ...

புதிய கொள்கைகளைப் புகுத்த முற்பட்ட சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு அவர் தகுதியான மறுமொழிகூறிவிட்டார் என்று சொல்லலாம்.

மேலே கூறியவற்றைக்கொண்டு இவர்கள்கொள்கை பிழையுடைய தென்பதும், ஏமாற்றத்தை யுண்டுபண்ணக்கூடியதென்பதும் சொல்லாமலே விளங்குவதால் இதனைப்பற்றி அதிகம் எழுதவில்லை.

மேல், எட்டாவதான தொகைநூல்களின்காலம் பிற்பட்டனவாவென்பதைப்பற்றி யாராய்வோம். தொகைநூல்களாவன :—

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

என்பனவாம்.

இத்தொகைநூல்களிற் பலவற்றைப் பாடியவர்கள் கபிலர், பரணர், ஔவை, நல்லந்துவனார், மாமூலர், நக்கீரர், ஆவூர்கிழார், கோவூர்கிழார் முதலிய சங்கமேறிய நாற்பத்தொன்பதின்மரும் அவரை யுள்ளிட்டாருமாவர். காலவாராய்ச்சியாளர் இப்புலவர்கள் பாடி வெகுகாலமானபிறகு இவைகள் தொகுக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், இதனாலே அவற்றிற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாவது முன் சென்றிருக்க வேண்டுமென்றும், எழுதுகிறார்கள். இது முழுதும் உண்மையே. புறநானூற்றைப் பார்ப்போமாயின், அதிற் கடைச்சங்கத்திற்கு வெகு காலத்துக்குமுன்னர் வதிந்த புலவரான நெட்டிமையார் என்றொரு புலவர் பஃறுளியாறு என்றொரு ஆறு இருந்தகாலத்தே அரசாண்ட பேரரசனான முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடிய பாடல்கள் சில தொகுக்கப்பட்டிருக்கின்றன வென அறிவோம். இவன்காலம் வெகு புராதனமானது என்பது அவனை வாழ்த்திக்கூறிய வாழ்த்துச்செய்யுட்களை ஊன்றிநோக்கப் புலனாகும். அதனிற் பஃறுளி ஓடியது கூறப்படுகிறது. இந்தப் பஃறுளி ஒருகாலத்திற் கடலாற்கொள்ளப்பட்டதென்றுமாத்திரம் படிக்கிறோமேயொழிய, அது இக்காலமென யாம் திட்டமாயறியோம். இச்செய்தி கதையாகவழங்கும் இக்காலத்தைக் கொண்டு இதன்காலத்தைக் கணிப்பது பேதைமையாகும். ஆயினும், பின்வந்த பாண்டியவரசர் சிலர் இவனைத் தம் முன்னோனாகக்கூறும் சில செப்புப்பட்டயங்களையும் கல்வெட்டுக்களையுங்கொண்டு இவனும் பிற்காலத்தவன் என்று கூசாது கூறிவிட்டனர் பிள்ளையவர்கள்கூட்டத்

தினர். தன்குலத்தில் வந்த பெருமைவாய்ந்த முன்னோனொருவனைத் தன் முன்னோனாகப் பின்னோனொருவன் கூறுவது இந்நாட்டில்மாத்திரமன்று; எந்நாட்டிலும் மரபாகலின் இவனும் அதனைப் பின்பற்றினன். இவன்கூறும் வமிசாவளி வாழையடிவாழையாக வந்ததன்று. அதனாலே அவன்காலத்தை யாராயும்போது பாவிற் கூறிய மொழிகள் கொண்டு நிச்சயிக்கவேண்டும். அன்றியும், ஒன்றைப்பற்றியாராயும்போது தாராளமானநோக்கத்துடன் ஆராயவேண்டும். இல்லாவிடின் இடர்ப்படும். ஆகையாலே இத்தொகைநூல்கள் பிற்காலத்தே தொகுக்கப்பட்டதாகக் கொண்டாலும், செய்யுட்களை இயற்றியவர்காலமே நமக்கு வேண்டியதாகும். அவர்கள் எக்காலத்தினர் என்று ஆராயவேண்டும். இவர்களைப் போற்றிய புரவலரும், இவர்கள்காலத்திருந்த பாவலரும் யாவர் எனப் பார்க்கவேண்டும். இவ்வாறு ஆராய்ந்தே கடைச்சங்கமுடிவுகாலம் கி. பி. இரண்டாம்நூற்றாண்டுக்குமேற்படாதென்று ஸ்ரீமான். ராவ்பகதூர் சினிவாசபிள்ளை, கிருஷ்ணசாமிஐயங்கார்முதலியோர் முடிபுகட்டினார்கள்.

இன்னும், இத்தொகைநூல்களைத் தொகுத்தோர்களை யாராய்வோமாயின் அகநானூறு தொகுப்பித்தான் உக்கிரப்பெருவழுதி; புறநானூறு தொகுத்தார் இன்னாரென்று விளங்கவில்லை; நற்றிணையைத் தொகுப்பித்தவன் பாண்டியன் மாறன்வழுதி; குறுந்தொகை தொகுத்தான் பூரிக்கோ; ஐங்குறுநூறுதொகுப்பித்தான் மாந்தரஞ்சேரலிரும்பொறை; பதிற்றுப்பத்து முழுமையும் அகப்படாமையால் தொகுப்பித்தான் இன்னானென்று விளங்கவில்லை. என்றாலும், அதனில் வந்துள்ள அரசரும் பாடிய புலவரும் கடைச்சங்ககாலத்தவரே. ஆகவே பரிபாடலும் அக்காலத்ததேயாகும். ஆகையால் தொகைநூல்களின்செய்யுட்கள் சங்ககாலத்தனவேயன்றிப் பிற்காலத்தனவாகா.

இனி, ஏழாவதான தென்னிந்தியமக்கள் கல்தேயர்களிடமிருந்து (Chaldeans) சோதிடம் வானசாத்திரம் முதலியவற்றைக் கற்றனரென்று கூறுவதைக் கவனிப்போம். முதலாவதாகக் கல்தேயர்கள் இவ்விதமான சோதிடப்பயிற்சியுடையாரென்று இதுவரை திட்டமாகக் கூறினாரொருவருமில்லை. அவர்களது சோதிடநூல் இத்தன்மைத்து என அறிந்தவரும் ஒருசிலர் இருக்கின்றனரோ இல்லையோ அறிகிலோம்,

சோதிடத்திற்குத் தலை அதுதான் என்று சொல்லிவருகின்றனரே யொழிய அவர்கள் கூறும் பொருளுரை இவையென்று ஒருகிரகத்துக் காவது திட்டமாகக்கூறினர் ஒருவரையும் காணோம். அன்றியும், பிள்ளை யவர்கள் தென்னிந்தியரை ஓரிடத்திற் புகழ்ச்சியாகவும் ஓரிடத்தில் இகழ்ச்சியாகவும் பேசுகின்றனர். அதனாலே மிகுதியாக எழுதத் தடையுண்டாகிறது. இவர்களே தமிழ்நூல்களிலிருந்து அவர்கள்காலத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்திருக்கின்றார்கள். அப்படி அவர்கள் தங்கள் பாக்களிற் சோதிடக்குறிகளைப் புகுத்த அந்நூல் வெகு எளிதாக நாட்டிற் பயின்றுவரவேண்டும். அங்ஙனமிராவிடில் அவைகளைப் பெரியார் தம் பாக்களில் அமைக்கமாட்டார்கள். இஃ தன்றித் தமிழருள் எழுத்துக்களுக்கு நட்சத்திரப்பொருத்தம் அமைத் திருக்கின்றனர். ஒருவன்மீது பாடத்தொடங்குமுன் இவன் ஆரம்பிக் கும் முதற்சொல்லிலுள்ள முதலெழுத்துப் பாட்டுடைத்தலைவனுக்குப் பொருத்தமுள்ளதாக விருக்கவேண்டுமென்று இலக்கணவிதி யிருக் கின்றது. அது காட்டுதும்.

ஆவிமுதனான்காலப்பான்
மேவியவைந்தும்வியன்பூராடம்.
மற்றையமூன்றுமுத்திராடம்மே.
ககரவருக்கத்தொருநான்குமிரண்டுந்
திகழ்திருவோணந்திருவாதிரையாம்
பிற்பான்மூன்றுமூன்றும்பேசிற்
பொற்புறுபுணர்தம்பூசமாகும்.
சகரவருக்கந்தனின்முதனான்கும்
புகலுங்காலைப்புருடநாண்மே
லைந்துமூன்றச்சுவினிபரணி.
உற்றஞகரத்தொருமூன்றினையு
மற்றையவிட்டமாமெனப்பகர்வர்.
மன்னியதகரத்திரண்டேழ்மூன்று
தன்னியற்சோதிவிசாகஞ்சதயம்.
ஆங்குறுநகரத்தாறுமூன்றுமூன்
றோங்கும்பின்னுமாங்கொளிபுரட்டாதி.

நற்பகரத்தினுன்கிரண்டாறு
முற்படுமுத்திரத்தொட்டுமூன்றே.

ஆறுமூன் றுமூன்றுமகரத்தில்
தேறுமகங்கட்செவியொண்பூரம்.

உற்றயாவொன் றுமுத்திரட்டாதி
யூயோவிரண்டுபேயுமூலம்.

எடுத்தவகரத்திருநான்கிற்கு
மடுத்தரோகணிமான்றலையாகும்.

இறைவன்பெயர்முதலெழுத்தைநோக்கி
யுறுநாளினைமூவொன்பதாக்கி
யொன்றுமூன்றைந்தேழொருமுத்திறத்தினு
மொன்றுவண்ணமுறைமுதற்சீர்க்கே.

எட்டாமிராசியும்வைநாசிகமும்

விட்டுமுதற்சீர்விளம்புதன்மரபே. (இலக். பாட்டியல்.)

என்றும், "பிறநூன்முடிபுதானுடன்படுதல் என்னு ஞியாய நூல்வழக்கால் இறைவன்பெயர்நாட்கு மூன்றும்பரியாயத்தினின்ற மூன்று, ஐந்து, ஏழு பொருத்தமுடையவென்றுகோடலுஞ் சென்மநாள்தொடங்கிப் பொருத்தங்கோடலுங் கொள்க" என்றும் காணப்படுகிறது. இவைக ளெல்லாம் மாமூலர் இந்திரகாளியர் முதலிய பழந்தமிழ்ப்புலவர் கூறிய வைகளைப் பின்பற்றிக் கூறப்படுவனவாம். ஆகாயத்திற் றோன்றும் உடுக்களுக்கும் புவியிலுள்ள மக்களுக்கும் தொடர்புண்டென்றுகொள்ப வர்கள் இந்தியரேயன்றி மேற்றிசையினரென்று கேட்டதில்லை. இவ்வாறு எழுத்துக்களுக்கே இவர்கள் நாட்பொருத்தம் கூறுவார்களாயின் இவர்கள் சோதிடநுட்பம் எவ்வாறு இருந்திருக்குமென ஊகித்துக்கொள்ளலாம்.

இதுவன்றித் தமிழர் புறத்திணைநிகழ்ச்சிகள் ஆரம்பிக்குமுன்னர் விரிச்சியோர்தல், நிமித்தங்கேட்டல் முதலியன உண்டெனப் படிக்கின் றோம். இவைகள் அடிப்பட்ட சான்றோரிடமிருந்துவந்திருக்கவேண்டுமே யல்லது நடுவிற் புகுத்தியிருத்தல் இயலாது. மேலும் நிமித்திகன் கூற்றும் கணியினதுசொல்லும் முன்றொட்டு நடந்துவருவவெனப் பழந் தமிழ்நூல்களால் அறிகின்றோம். நிமித்திகன்வாய்மொழியே இப்

பொழுது ஆரூடமாகவும் பிரச்னம்சொல்லுதலாகவும் வழங்கிவருகிற தென்பது ஊன்றிநோக்க விளங்கும். இது முன்னர், செந்தமிழில் வெளியான தென்னாட்டாரும் சோதிடமும் என்ற பொருளுரையைக் கவனித்தாற் றெரியவரும். ஆகையால், தமிழர் கல்தேயர்களிடமிருந்து கற்றனரென்றுசொல்வது பொருந்தாவுரையாகும். ஆனாற் றமிழர் வெகுகாலமாக யவனதேசத்தாருடன் வாணிபம் நடாத்தியவர்களாதலால் இக்கல்தேயரும் சோதிடமறிந்திருப்பார்களாயின் ஒருவருக்கொருவர் கலந்து தங்கள் அறிவை விருத்திசெய்துகொண்டிருக்கலாம். இது இயல்பான காரியமே. மேலும், பிள்ளையவர்களே இத்தமிழர் சௌரமானகாலத்தை விடாமற் பற்றியிருத்தலும், பல உடுக்களின்பெயர்களும் கோள்களும் சுத்தத் தமிழ்ச்சொற்களாலேயே வழங்கப்படுதலும் இவர்கள் சோதிடத்தை வெகுநாளாக அறிந்திருந்தனரென்பதைக் காட்டு மென்கின்றனர். இதைவிட வேறுசான் றென்னவேண்டியிருக்கின்றது. ஆயினும், உரோமதேசத்தில் ஸ்திரீகள் வீடுவிட்டு வெளிச்செல்வதற்குமுன் இந்திய நிமித்திகர்களைக்கொண்டு நிமித்தங்கண்டு புறப்பட்டனர் என்ற ஜூவினல் வசைப்பாட்டடிகளை எடுத்துக்காட்டி நிமித்தம் சோதிடத்தின்பாற்படா தென்கின்றனர். முன்னர் நிமித்தமே ஆரூடமென்றும். இதற்குக் கோணிலைகள் தெரியவேண்டுவது இன்றியமையாததாகும். இப்பொழுது நம்நாட்டு வள்ளுவமுதுமகாரிற் பலர் இந்நிமித்தங்களைக்கண்டு நடக்கப்போகும் பல பெருங்காரியங்களை முன்னமே தெரிவிக்கின்றனரென்பது எல்லோரு மறிந்ததே. ஆங்கில விற்பன்னர்கள் பலரும் எல்லாக்கலைகளும் மேனாட்டிலிருந்துவந்தனவென்ற கொள்கையுடையராய்ப் பிழைபாடுறுகின்றனர். கம்பர்கருத்தே ஷேக்ஸ்பியர்மகாகவியிற் காணப்படுகிறதென்றால் இவர் அவர் எழுதியதைப் படித்தறிந்து பின்னர்ச் செய்யுளியற்றினரென்று கொள்வதா? அவரவர்கள் புத்திக்கெட்டியதை யவரவர்கள் எழுதியிருக்கலாமேயொழிய ஒருவரையொருவர் பார்த்து எழுதினரென்பது பொருந்தாவுரையாவது போல இதுவும் ஆம். இதைத் தவிர்த்து வேறுவிதமாகவிருக்க நியதியில்லை. காலவாராய்ச்சியாளர் தென்னாட்டிற் சாதகம் குறிக்கும் வழக்கம் மத்தியகாலத்தில் வந்ததேயொழியப் பழையகாலத்தி லில்லையென்கின்றனர். இவர்களே புறநானூறுமுதலான நூல்களிலிருந்து எடுத்துக்காட்டி பாராய்ந்திருப்பதால் இது பயனில்கூற்றாகும். ஆகவே கல்தேயர்க

ளிடமிருந்துதான் தமிழர் இக்கலையைக் கற்றார்களென்பதற்குப் போதிய வாதாரங் காட்டப்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழர் சோதிடக்கலையைத் தொன்றுதொட்டுத் தமது நூல்களிற் புகுத்திவரு கின்றனரென்று காட்டப்பட்டது.

இனி முதலாவதான முன்னோர் மத்தியகணிதமறிந்திருந்தனரே யொழிய அதனிலேற்படும் வாக்கியப்பிழைகளைத் தீர்க்க வகையறிந்திலர் என்பதைக் கவனிப்போம். இவர்கள் அதற்குப் போதிய ஆதாரம் காட்டி னார்களில்லை. அவர்கள் அறிந்திருக்க வியலாதென்பதுமாத்திரம் தகுதியாகாது. அதற்குத் தக்க சான்று வேண்டும். அன்றியும், சூரிய சந்திரர்களுக்கு வாக்கியப்பிழைதீர்த்தபிறகே உண்மைநிலை ஒற் றுமைப்பட்டுநிற்கக் காண்கிறோம். இப்படிச் சூரியசந்திரர்கள்மட்டும் ஒற்றுமைப்படும்போது மற்றைக்கோள்கள் ஒற்றுமைப்படவில்லையென் பது எப்படிப்பொருந்தும்?. மேலும், முன்னோர் அறிந்த பலவிடயங் களை நா மறியவில்லையென்று ஒரு உதாரணத்தாற் காட்டுகிறேன். இப் பரிபாடற்பாட்டில் அகத்தியரைபபற்றிக் கூறியிருக்கிறது. இதுவரை நண்பர் பலர் அகத்தியர் என்று ஒரு கோளிருப்பதைக்கூடச் சந்தேகித் தனர். அதற்கு நித்திய கதியும், சலனமும், உண்டென்று புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதென்று காட்டப்பட்டது. இதனைப்பற்றி ஆசார்ய வராஹமிஹிரர் தமது பிருகத்சம்ஹிதையில் இருபத்தொருசுலோகங்க ளடங்கிய ஒரு அத்தியாயம் (XII) சொல்லியிருக்கின்றனரென்றால் அதன் நிகழ்ச்சிகளை இப்பொழுது அறிந்தார் இலரெனறே கூறவேண்டி யிருக்கிறது. அன்றியும், அவரது சுலோகங்களுக்கு எளிதிற் பொருள் காண வியலவில்லையென்று உரைகாரர் கூறுகின்றனர். இவ்வாறு முன் னோர் அறிந்த பலவிடயங்களை நாமறியாமலிருக்கும்பொழுது அவர்கள் இப்பொழுதுள்ளமுறைமை அறிந்திரார் என்பது பொருந்தாவுரையாகும்.

இனி இவர்கள் பரிபாடலுடையார்கூறுகின்றபடி சுக்கிரனைக் கண்டிருக்கமுடியாதென்பதைப்பற்றி யாராய்வோம். ஆசிரியர் நல்லந் துவனார் வெள்ளி இடபத்திலிருக்க வென்று கூறுகின்றார். கார்த்திகை உச்சமாகும்போது அதற்குக் கீழ் ஆறுநட்சத்திரங்களும் மேல் ஆறு நட்சத்திரங்களும் ஆகாயத்திற் றோன்றுமென்றும், உதயமீனுக்கு உச்ச மீன் ஆறமீன், உச்சமீனுக் கத்தமீ னறுமீனென்றும் பெரியார் கூறுப

வாகலின், திருவாதிரை உதயமாகி வெகுநேரமாயிருக்கவேண்டும். அப்பொழுது உடனெழும் வெள்ளி தோன்றுதல் இயல்பே. இதனில் ஆகாத தொன்றையும் காணோம்.

மேல் ஐந்தாவதான புதசுக்கிரர்கள் இப்பாட்டுக்கு முக்கிய மில்லை என்பது பொருத்தமானதில்லை. இவர்கள், புதசுக்கிரர்கள்கதி சூரியனுடைய சலனத்துக்குத்தக்கபடி இருக்கும் என்னும் தற்கால கணிதப் போக்கின்படி கூறுகின்றார்களேயன்றி இரண்டாயிரவருடங்கட்கு முன்னர் எவ்வாறு கணித்தார்களென்று அறிந்து சொல்லவில்லை. தாங்கொண்ட கணிதத்திலுங்கூடச் சநியின்கதி மாறுபடுவதைச் சுட்டி அக்காலத்துக் கணிதமுறை தெரிந்திலது என்று இவர்களே எழுதுவதால் இப் புதசுக்கிரர் அவசியமில்லை என்பது பொருந்ாது. ஆனால் அவர்கள் கணிதமுறையை யாமறிவதற்கில்லை. ஆதலால் நம்மாற் கணிக்கமுடியவில்லை என்பதைத் தவிர்த்து வேறுவிதமாகக் கூறுதலடாததாம்.

இனிப் பதின்மூன்றுவதான இவர்களது கி. பி. 634-ம்வருடத்தை யாராய்வாம். முன்னர் இக்காலம் தென்னிந்தியாவில் எப்படி இருந்ததென்று கவனிப்பாம். கடைச்சங்ககாலங் கடந்து பன்னெடுநாளாகிப் பல்லவர் அரசாண்டகாலம், மகேந்திரவர்மன் முதலாம்நரசிம்மவர்மன் முதலாபவர் அரசாண்டகாலம். அப்பொழுது சமண பௌத்த மதம் அழியத்தலைப்பட்டுச் சைவமதம் மறுபடி வேரூன்ற ஆரம்பித்தகாலம். கல்வெட்டுக்களும் செப்புப்பட்டயங்களும் காணப்படுகின்றகாலம். இப்படிப்பட்ட பெருமைபொருந்தியவிடயமொன்று இருக்குமானால் அது ஏதாவதொரு இடத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கும். ஆகவே இந்நாட்கு இவைகளெல்லாம் தடைகளாக விருக்கின்றன.

இனி, இந்நாளிற் கோள்கள் இவர்கள் கூறுகிறபடி இருந்தனவாவெனக் கணித்துப்பார்ப்போம். இவர்கள்நூற்படி கி. பி. 634-க்குக் கதகலி அப்தம் 3735. அன்று வருஷப்பிரவேசம் விடிந்து 1நாழிகை 27விநாடி 30தற்பரையாகும். இவர்களும் ·0243 என்று கண்டிருக்கிறார்கள். இந்தவருடம் ஆங்கிலக்கணக்குக்கு மார்ச்சுமீ 20௳ பிறந்திருக்கிறது. இவர்கள் குறிக்கும் நாள் சூன்மீ 17௳. அதற்கு மார்ச்சு 12நாள், ஏப்பிரல்30நாள் மே31நாள் சூன்16நாள் ஆகக் கூடியது 89.

நமக்குவேண்டியது 17ம்தேதியாகையால் 16ம்தேதிக்குக் கணக்கிடுவோமானல் மறுநாள் உதயமே கிடைக்கும். இதனாலே 89நாள் கணக்கிட்டோம். ஆக இதற்குக் கலி பிறந்து 1364328நாளாகிறது. அன்று சூரியன் இராசி 2 பாகை 25 கலை 31 விகலை 31ல் இருக்கிறான். சந்திரனுக்குக் கணனஞ்செய்ய, கலியுகநாளான 1364328ஐ600ல் பெருக்க வருவது 818596800. இதனை 66393க்கு ஈந்து வந்த மிகுதியை 12ற் பெருக்கி மேற்கூறிய வகுக்குமெண்ணால் வகுத்துவந்தமிச்சத்தை 30, 60, 60ற் பெருக்கி வகுக்க வருவது ராசி பாகை கலைகளாம். இவ் விதமாகச் செய்யக் கிடைத்தது ராசி 9 பாகை 1 கலை 6 விகலை 12. இதற்குமேல்1364328ஐ வைத்து 2920க்கு ஈந்துவந்த ஈவு கலை; மிகுதியை 60ற் பெருக்கி 2920-க்கு ஈயவருவது விகலை. இவைகளை முன்கண்ட ராசி பாகைகளிற் கழிக்க (ராசி 9 பாகை 1 கலை 6 விகலை 12-பாகை 7 கலை 47 விகலை 51) மிகுதிபாவது ராசி 8 பாகை 23 கலை 18 விகலை 21. இதனோடு துருவமான இராசி 6 பாகை 19 கலை 17 விகலை 27 கூட்டச் சந்திரமத்தியமாம். ஆகக் கூடியது இராசி 3 பாகை 12 கலை 35 விகலை 48: இதுவே சந்திரமத்தியம். இனி இதனது சுத்தஸ்புடம் காணத் துங்கமத்தியத்தைக் கழித்து வாக்கியப்பிழைநீக்கவேண்டும். இதுவே சுத்தஸ்புடம் அல்லது உண்மைநிலையாகும். அப்படிக் கிடைத்தது இராசி3 பாகை7 கலை36 விகலை48. இதற்கு அன்று தினக்குறிப்பு வருமாறு :—

இங்கிலீஷ் கி. பி. 634 ஜுன் 17 அல்லது 17-6-634க்கு வர்த்தமானகலி 3736ம் ஆண்டு(நாள்90க்கு) ஆனிமீ 28உ வெள்ளிக்கிழமை சுக்கிலபட்சத்து நியை 55 நாழிகை 2விநாடி பூசம்41—38 என்று காணப்படுகிறது. முதல்நாள் பிரதமை59-23 புனர்பூசம் 40-43 என்று காணப்படுகிறது. ஆகையினல் இவர்கள் சொல்லுகிற பூரணையான நிறைமதியப் பின்னும் பதின்மூன்றுநாள்வேண்டியிருக்கிறது. இந்த நாளை இவர்கள் எவ்வாறு கண்டார்களோ அறியக்கூடவில்லை. என் கணக்குப் பிழையென்றுகூறுவார்களோவென்றுதான் கணிதத்தைச் செய்துகாட்டியுள்ளேன். அவர்கள் தங் கணக்கை நிரூபிக்கும்வரை அந்நாள் ஒற்றுமையுடையதல்லவென்றே கொள்ளலாம். முதலில் வேண்டிய பூர்ணிமை யில்லாமையினாலேயே மற்றைக் கிரகங்களைச் சோதிக்காமல் விட்டுவிட்டேன்.

இனி 27-7-17 ஆன கலி 3119 ஆவணிமீ த்துக்கு இவர்கள், அந்நாள் சங்ககாலமல்லவென்றும் (2)அன்று கிரகணம் முன்னிரவில் இருந்ததென்றும் ஆசிரியர் விடியற்காலையில் கிரஸ்தாஸ்தமனமாக இருந்ததென்று கூறியிருக்கிறாரென்றும் ஆட்சேபணை கூறுகிறார்கள். முதலாவது ஆட்சேபத்திற்கு டாக்டர் எஸ். கிருஷ்ணசாமிஐயங்கார் போன்ற சரித்திரஆராய்ச்சிக்காரர்களது அபிப்பிராயமே ஒத்துக்கொள்ளக்கூடியதேயொழியப் பிள்ளையவர்கள் சொல்வது சரித்திரவேற்றுமையுடையதாகின்றது. இரண்டாவதான கிரகணத்தைப்பற்றி ஆசிரியர் பாம்பு ஒல்லை மதிய மறையவரும்நாளில் என்றார்களேயொழிய அவர் கிரஸ்தாஸ்தமனமென்று கூறவில்லை. அன்று கிரகணமென்று கூறுவதன்றிப் பாதாளக்ரகணமென்பதற் குரிய சொல் ஒன்றுமில்லை. அப்படியிருந்தால் அதனைக் கூறியிருப்பார். இவர்களுக்கு இந்நாள் பிடித்தமில்லையாயின், கிமு 161ஆன கலி2941*ஐக் கவனிப்பாம். அன்று பிள்ளையவர்களே கிரகணமுண்டென்று கூறுகின்றார்கள். இந்நாளை இவர்கள் ஆராயவே இல்லை. வர்த்தமானகலி2941க்குப் பிரமாதிஹு ஆவணிமீ 12௳ வியாழக்கிழமை சதுர்த்தசி 15-4 அவிட்டம் 45-33 என்று காணப்படுகிறது. அன்று பாட்டிற்கண்டபடி நிறைமதிநாளான அவிட்டநாளாகிறது. அற்றைநாளிற் சூரியன் சிம்மத்திலும் சந்திரன் மகரத்திலும், செவ்வாய் இவர்கள்கூறியபடி கடகத்திலும், புதன் மிதுனத்திலும், சுக்கிரன் மிதுனத்தின் இரண்டாம் பாகையிலும், சனி மகரத்திலும், குரு கும்பத்திலும் காணப்படுகின்றனர். ஆசிரியர் கூற்றுக்குச் செவ்வாயும் குருவும் பிறழ்ச்சியுடையராகக் காணப்படுகின்றனர். முன்கூறியபடி அக்கால கணிதநிலையைத் துணிந்துகூறற்குப் போதிய கருவிகள் இக்காலத்தி லில்லையாகலாற் சற்றேறக்குறையப் பொருந்துகின்ற நாளையே கொள்வது அமைவுடையது. ஆயின் இவர்கள் கி பி 17ம் ஆண்டையே ஏற்கவில்லை. இவ்வாண்டா ஏற்கும். இவர்களுக்கு இவ்வாண்டு ஒவ்வாதாயினும் தமிழர்பலரும் இதனையொப்புவார்களென்பதில் ஐயமில்லை. இதற்கு மற்றொரு சான்றும் கூறுவாம். கரிகாலனுடையகாலமாகப் பின்வரும் செய்யுளொன்று சோழமண்டல சதகத்திற் காணப்படுகிறது. அது வருமாறு :—

---

* இந்தவருஷம் ஆடிமீ 30௳ உண்டான கிரகணத்தையும் கவனிக்க, இதனைப்போன்றே அக்காலத்தும் சம்பவித்திருக்கவேண்டும்.

*"தொக்ககலியின்மூவாயிரத்துத்தொண்ணூற்றில்
மிக்ககரிகால்வேந்தனுந்தான்—பக்க
மலைக்கும்புகழ்ப்பொன்னியாறுகரையிட்டான்
மலைக்கும்புயத்தானுவந்து."

[இதனில் முதல்வரியில், 'தொக்கசகனிற்றெளாயிரத்து' என்றொரு பாடமுண்டாயினும் அது பழைய ஏடுகளிற் காணப்படவில்லை.]

இப்பாடலோடு பின்வரும்பாடலையும் சேர்த்து வாசிப்போமாயின், கரிகாலனதுசெய்திகள் பல புலப்படும். அவை வருமாறு:—

*"அஞ்சிலேமுடிகவித்துஐம்பத்துமூன்றளவில்
விஞ்சுகாவிரிகரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்துமூன்றளவுமாண்டிருந்தான்
விண்புக்கான்தனிப்புக்கான்வேந்து."

ஆகவே இப்பாக்களினால், கரிகாலனதுகாலம் உறுதிப்படுமானால் இவைகட்கு ஒருநூற்றாண்டுக்குமுன்னர் இது சம்பவித்திருக்கலாமென்று கொள்வதும் தவறாகாது. எவ்வாறாயினும் பிள்ளையவர்கள் கொண்ட 6'4ம்-ஆண்டு பொருந்தாதென்போம்.

(தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை

திருவாரூர் சோமசுந்தரதேசிகன்.

---

*மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகரும் திருவாடுதுறையாதீனவித்துவானுமான ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களிடமுள்ள பழையகையெழுத்துப்பிரதியில் இப்பாடல்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:— உதவிப்பத்திராதிபர்.

தொக்ககலியிற்றெளாயிரத்துத்தொண்ணூற்றில்
மிக்ககரிகாலவேந்துநித்துத்—தக்கபொன்னி
யாறுகரைகண்டான்பின்னுதொண்டைவேந்துகச்சி
யூருகண்டான்வேளாளருற்று.

அஞ்சின்முடிபூண்டேயைம்பத்துமூன்றுவரை
கஞ்சிகாவேரிகரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்துமூன்றுடனேயிரண்டோளிருந்தான்
நண்புறுமாதொண்டைமன்னர்நாள்.

பாண்டியன்யானை.

517. உருவத்தார்த் தென்னவ னேங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—னொருகோடு
வேற்று சகல முழுமே யொருகோடு
மாற்றார் மதிற்றிறக்கு மால்.

518. மருப்பூசி யாக மறங்கனல்வேன் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

519. அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித நாணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

520. தோற்ற மலைகட லோசை புயல்கடாஅங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்ங்—கூற்றுங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோன்
எறிகதிர்வேன் மாறன் களிறு.

521. கையது கையோ டொருதுணி கோட்டது
மொய்யிலைவேன் மன்னர் முடித்தலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே யெங்கோன்
வயவெம்போர் மாறன் களிறு.

களப்பாளன்யானை.

522. படுபருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்குஞ் செந்நாய்
கொடிகழுகு மின்னவெலாங் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

யானைநிலை.

523. ஆர்த்தார்த்துக் கண்சேந்து வேர்த்து விரைந்துதன்
பொன்னோடை யானையின் மேற்கொண்டா னென்னுங்கொல்
மன்ன ருறையு [1]மதில்.

524. மட்டுத்தா னுண்டு மதஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் களியானைக்
கியாரோ வெதிர்நிற் பவர்.

(517—520) முத்தொள்ளாயிரம். (521) தொல். பொரு. 72 நச். (522) தனிப்பாட்டு. (523, 524) யாப். வி. 94. [1]மெயில்.

525. ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

துதிரைநிலை.

526. முற்குளம்பி ஞற்கிளறி மோந்தங்கோர் முக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானிறத்த மால்வெண் பரி.

527. பல்லுருவக் [1]காலின் பரியுருவத் தாக்கித்தன்
தொல்லை யுருவிழந்த தோற்றம்போல்—எல்லா
மொருகணத்துத் தாக்கி யுருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புர்ண்டு.

மாவளவன்துதிரை.

528. சாலியரி சூட்டான் மடையடைக்கு நீர்நாடன்
மாலு மழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

பாண்டியன்துதிரை.

529. நிரைகதிர்வேன் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யுறநிமிர்ந்து பொங்கா—விரசர்த
முன்முன்னு [2]வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

போர்த்தொழில்.

530. சேந்தன வேந்தன் திருநெடுங்கண் டெவ்வேந்தர்
வந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்த
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீந்து.

531. செம்மை யுடையார் சிறியார்மேற் சொல்லுஞ்சொல்
வெம்மை யுடைய விறற்பகழி—தம்வன்மை
காவிட்டா னென்னுது காய்ந்தவர்மேற் பாய்ந்தனவே
மேலிட் டுயிர்போக மிக்கு.

---

(525) தொல். பொரு. 254. (526) வீரசோ. அலங். 10. மேற். (527) தொல். பொரு. 72. நச். [1]காரி. (528) ஷை. ஷை. 86. (529) முத்தொள்ளாயிரம், [2]வீழ்ந்தார், (530) தண்டி. 38, (531) வீரசோ. அலங். 12 மேற்.

532. குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகையர்
ஆண்மை யுள்ளங் கேண்மையிற் றூரத்தலின்
அழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரும்
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநரும்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரும்
முட்டியின் முறைமுறை குத்து வோரும்
கட்டிய கையொடு காறட் குநரும்
கிட்டினர் [1]கையற் றெட்டிநிற் போரும்
சுட்டிய பெயரை [2]விட்டழிப் போரும்
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநரும்
சிலைப்புடை முரசிற் றலைப்புடைக் குநரும்
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியும்
ஊக்கியு முரப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியும்
எயிறுடன் றிருகியுங் கயிறுபல வீசியும்
இனைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையுஞ்
அரைசறி பெருமையு முரைசெ லாண்மையும்
உடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலின்
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்துதம் மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே.

ஓடாப்படையாண்மை.

533. மாநாக முன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானா வருமதனைத் தாங்கினான்—மேனாள்
அருகணையா வண்ண மடற்போரின் வென்று
வருகணையாற் பெற்ற மகன்.

(532) தொல். பொரு. 72 நச். [1]கையிற் றெட்டுநிற்போரும். [2]யிட்டழைப் போரும். (533) வீரசோ. பொருட். 15.

மெய்யாற்பொருதல்.

534. கொல்லேறு பாய்ந்திறுத்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாருத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தார்
வெருட லாய ரென.

களிறெறிந்தெதிர்ந்தோர் பெருமை.

535. இடியா னிருண்முகிலு மேறண்ணு மென்னும்
படியாற் பகடொன்று மீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கொண்
டறிந்தார்த்தார் வானோரு மாங்கு.

536. இருபாற் சேனையு நனிமருண்டு நோக்க
முடுகியற் பெருவிசை யுரவுக்கடுங் கொட்பின்
எண்டிசை மருங்கினு மெண்ணிறைந்து தோன்றினும்
ஒருதனி யனுமன் கையகன்று பரப்பிய
வன்மரந் துணிபட வேறுபல நோன்படை
வழங்கி யகம்பன் றோள்படை யாக
ஒச்சியாங் கவனு முன்கையி னழுத்தலிற்
றனுஅது வன்றலை யுடல்புக்குக் குளிப்பக்
கரிந்துயிர் போகு செந்நெறி பெருமையிற்
பொருகளத்து நின்றன நெடுஞ்சேட் பொழுதே.

537. பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்றார்
குருதிவாள் கூறிரண்டு செய்ய—ஒருதனி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே யென்று.

538. அறத்திற் பிறழ வரசெறியுந் தானை
மறத்திற் புறங்கண்டு மாறன்—குறைத்தடுக்கிச்
செல்லுங்காற் காட்டுத்தீச் சென்றாங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி.

539. சென்ற வுயிர்போலத் தோன்றா துடல்சிதைந்தோன்
நின்ற வடிபெயரா நின்றவை—மன்ற
லரமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து.

---

(534) தொல். பொரு. 72. நச். (535) ஷை; பெரும்பொருள்வி. (புறத்).
(536) ஆசிரியமாலை (புறத்). (537)தொல்.பொரு. 71 நச். (538,539)ஷை.72.

அட்டையாடுதல்.

540. வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை—மான்றேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல.

இருவருந்தபுநிலை.

541. அறத்துறைபோ லாரெயில் வேட்ட வரசர்
மறத்துறையு மின்னாது மன்னோ—நிறைச்சுடர்கள்
ஒன்றி வரப்பகல்வா யொக்க வொளிதேய்ந்தாங்
கின்றிவர் வீழ்ந்தா ரெதிர்ந்து.

வாளோராடும் அமலை.

542. ஆளுங் குரிசி லுவகைக் களவென்னுங்
கேளன்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினா ரார்த்தா ரடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து.

எருமைமறம்.

543. சீற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கால்
ஏற்றெருமை போன்றா னிகல்வெய்யோன்—மாற்றான்
படைவரவு [1]காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்.

வாகை.

கூதிர்ப்பாசறை.

544. மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை
மாதர்பாற் பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான்
ஐங்கணை தோற்ற வழிவு.

அவிப்பலி.

545. நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாங் காணேங்கொல்—மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை.

---

(540) தொல். பொரு. 71 நச். (541) ஷை. 68 நச். (542) பெரும்பொருள்வி (புறத்); தொல். பொரு. 72 மேற். (543) தொல். ஷை. [1]பார்த்துத்தன் பல் படையைக்காத்துய்த். (544) பெரும்பொருள்வி (புறத்). (545) சிலப். காதை 12. பக். 331.

களவேள்வி.

546. வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ்க் கொற்றவை—நின்றளிப்ப
உண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து.

547. மரகதப் பூண்மன்னர் தோள்வளை [1]கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

548. முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—யெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

549. ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
றூனையாற் கண்புதைத்தான் றூர்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

550. வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

பகையிடமழிதல்.

551. கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.

வென்றி.

552. கொடித்தலைத்தார் மன்னவன் றேற்றூன்போ னின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேல்
கண்ணோரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணோரா மன்னரைக் கண்டு.

---

(546) பெரும்பொருளவி(புறத்). (547-550) முத்தொள்ளாயிரம். [1]கிளா.
(551) தண்டி. 94. (552) முத்தொள்ளாயிரம்.

553. தொழிறேற்றுப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர்—கழலடைந்து
மண்ணளித்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணளித்தந் தீர்க்கு மருந்து.

திறை.

554. பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
[1]வல்லிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

555. நேமி நிமிர்தோ ளிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல னாணையால்
ஏம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

556. நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொள்
இறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்றார் மொய்த்து.

557. நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

அறிவன்வாகை.

558. வாய்மை வாழ்நர் மூதறி வாள
நீயே யொருதனித் தோன்ற லுறைபதி
யாருமி லொருசிறை யானே தேரின்
அவ்வழி வந்தநின் னுணர்வுமுதற் றங்குந்
தொன்னெறி மரபினு மூவகை நின்றன
காலமு நின்னொடு வேறென
யாரோவு பெருமநிற் றேர்கு வோரே.

(553—557) முத்தொள்ளாயிரம். [1]வள்ளிதழ். (558) தொல். பொரு. 75, மேற்.

பாடாண்.

அரசன் சிறப்பு.

559. மின்னூர் மணிப்பைம்பூண் வேந்தே நினக்குலகில்
இன்னா தவர்யாரு மில்லையால்—ஒன்னார்
குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்.

560. விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்ன வயவேந்தே—தண்ணளியிற்
சோரா வவுணர் திறங்களையுந் தேவர்கோன்
நேரார்மே லத்தகையை நீ.

செங்கோற் சிறப்பு.

561. [1]சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்
கொடியன [2]குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.

562. வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெளியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர
மென்கோவி யாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ [3]னிலவு நிலத்து.

மன்னர்திறம்.

563. உறையு மிடமன்றே பாரெலா மும்பர்
[4]நெறியு நிலாமுற்ற மன்றே—சிறுவாய்க்கா
லற்றன்றே முந்நீ ரகன்றுயர்ந்த மாமேரு
புற்றன்றே நீமுனிந்த போது..

(பொய்கையார்)

564. அவிழ்ந்த துணியசைக்கு மம்பலமுஞ் சிக்கும்
மகிழ்ந்திடுவார் முன்ன மலருங்—கவிழ்ந்து
நிழறுழா யானை நெடுமொன்றேர்க் கிள்ளி
கழறொழா மன்னர்தங் கை.

---

(559) தண்டி. 100 மேற்; வீரசோ. (560) ஷை. 30. (561, 562) ஷை. 75; வீரசோ. அலங். 30 மேற். [1]சிறைபயில்வ. [2]மாளிகையின் குன்றமே [3]னுலவு. (563) வீரசோ, பொருட். 15 மேற். [4]உலவு. (564)யாப். வி. 36,

கண்படைநிலை.

565. வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
ஓவா வீகையி னுயிர்ப்பிடம் பெறுஅர்
களிறுகவர் முயற்சியிற் பெரிதுவருந் தினரே
உலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிது துயில்கோடல் வேண்டுநின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே.

அரசனுக்குச் சென்றநாழிகைக்குச்சொன்ன கவி.

566. பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் றிரியுங் கருவூரா—யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்று.

நாண்மங்கலம்.

[பறைசாற்றியது.]

567. ஏமாரு மன்னீ ரெயிறிறமி னெங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநா—ளாமாறு
காம நுகருமின் கண்படுமி னென்னுமே
ஏம முரசின் குரல்.

[வெள்ளணிநாட் செருவொழிந்தது.]

568. கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்.

569. அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

சிறைவிடுதல்.

570. செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனுற் போந்தாமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்தக் குழாம்.

(565) தொல். பொரு. 90 நச். (566) சிலப். 5, 49 அடி. (567) தொல். பொரு. 91 நச். (568, 569) ஷை; முத்தொள்ளாயிரம். (570) தொல். பொரு. 91 நச்.

மன்னுமங்கலம்.

571. அளிமுடியாக் கண்குடையா ளுகுதிநாள் வேய்ந்த
ஒளிமுடி பொன்மலையே யொக்கும்—ஒளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலையே
லந்தரத்துக் கங்கை யனைத்து.

வாண்மங்கலம்.

572. ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினோ கூத்தாடக்—காளிக்குத்
தீராத வெம்பசி தீர்த்துநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம்.

573. அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த [1]வொள்வாள்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்போடு
[2]வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

குடைமங்கலம்.

574. மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.

575. அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளு முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் கண்டன் குடை.

576. மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனித்தொடையற் பார்த்திவர்கோ னெங்கோன்—தனிக்கவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் மிகும்.

வேள்விநிலை.

577. பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றாதந்
தின்மகிழா னந்தணரை யின்புறப்பர்—சென்னிதன்
மாநிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று.

(571, 572) தொல். பொரு. 91 நச். (573, 574) ஷை; முத்தொள்ளாயிரம். [1]வென்வேல். [2]கொண்டாடும் பக்கமு முண்டு குறுநரி, யுண்டாடும் பக்கமு முண்டு. (576) வீரசோ, அலங், 29; தண்டி, 74 மேற். (577) தொல். பொரு. 90 நச்.

விளக்குநிலை.

578. மைம்மிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து.

வாயினிலை.

579. வேற்றுச் சுரத்தோடு வேந்தர்கண் வெம்மையும்
மாற்றற்கு வந்தனெம் வாயிலோய்—வேற்றூர்
திறைமயக்கு முற்றத்துச் சேணோங்கு கோயில்
இறைமகற்கெம் மாற்ற மிசை.

செவியறிவுறூஉ.

(மருட்பா)

580. பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானை தேரோடு கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிற
[1]லாழி நிமிர்தோட் பெருவழுதி யென்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்க் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழவ ரிழைக்கும் [2]வரைகா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
[3]அடைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
[4]ஈகைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி, மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப் படேற்க [5]வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
[6]செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்

(578, 579) தொல். பொரு, 90 நச். (580) யாப். வி. 55; வீரசோ. பக். 189; யாப். கா. செய். 27 மேற். [1]லாளி. [2]குலநெறி யீட்டங்; வரைக்கா ணிதி யீட்டம்; [3]படைத்த. [4]இனந்தைப். [5]வரத்தால். [6]செவியிசைக்குந் தீய கடுஞ்சொ லுடைத்தாய்க்.

கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செகுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினாய் மற்றும்
இவையிவை [1]நீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

(செவியறிவுறூஉச் சமநிலைமருட்பா.)

581. இருமூன்றி லொன்றுகொண் டேதங் [2]கடிந்து
பெருநீர்மை யார்தொடர்ச்சி பேணி—யிருநிலங்
காப்பா யாகுமதி கடனென
மாப்பெருந் தானை மன்ன ரேறே.

புறநிலைவாழ்த்து.

582. தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

(மதிவாணனார்)

583. அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென.

பரிசில்கடாநிலை.

584. தென்குமரி வடவிமய
மாஅவெல்லைத் தம்புகழ்விளங்கக்
கடலன்ன படைநாப்பண்
மலையன்ன களிற்றெருத்தின்
ஞாயிற்றன்ன சேண்விளங்குதிறலர்
திங்களன்ன வெண்குடையுயரிய
ஒன்னாதார் மிடல்சாயத்
துன்னரிய வகழ்கடந்தவர்

---

[1]நீவாதொழுகிற் றொலையாப். (581,582) யாப்.வி. 55. [2]களைந்து. (583) சிலப். 6.36. (584) யாப். வி. 94.

பொன்னுடைய வெயின்முருக்கி
ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
கோவத் தன்ன கனையெரி கவரச்
சென்றவர்திறன் மழுங்கவாற்றலிற்
புலவர்பல புகழ்கொண்டு
பெறலரிய விழுத்தாயம்
விறலியர்க்கு மகிழ்ந்துவீசினை
ஒன்னார் துப்பிற் றென்னவர் மருக
பல்கிளைப் பசிநோனாது
கல்பிறங்கிய சுரநீந்தி
இவண்வந்த நசைவாழ்நன்
எனவைத் தெல்லாம்பிறர்க்கும் ?
ஈந்ததெல்லாம் எனக்காகும் ?
பொருள்கொடுத்தும் புகழ்கொள்வனென
இவற்கீயே னெனக்கெவனென்ன
என்னோக்காது நின்னோக்கி
என்னை விடுமதி வென்வேல் வழுதி
வெயிற்கதிர் நுழையா வியன்பெருங் காவிற்
றண்புனல் வையை யொண்டுறைத் தொகுத்த
கோடுறு மணலினு மேத்திப்
பாடுதும் பெருமநின் னொடாறும் புகழ்ந்தே.

பாணாற்றுப்படை.

585. மேற்கோட்டுநீர் கீழ்ப்பாய்ந்துதன்
[1]விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் [2]காம்புகிழியப்
பாய்ந்துசென்றுசென் றோங்குநலிபுநின்
றெதிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதூ ரோனே பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனோ
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே.

(585) தொல். செய். 20. பேரா; நச். [1]விழுக்கோட்டுமேல். [2]காம்புகழியப்.

இயன்மொழி.

(கொடைச்சிறப்பு)

586. வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து.

587. சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினன்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர [1]மோசென்னி பண்பு.

588. முத்தரும்பிச் செம்பொன் முறிதழைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு.

589. உள்ளிய வுள்ளியாங் கீயு முயர்விற்றுங்
கள்ளவிழ் பூஞ்சோலைக் கற்பகமும்—வள்ளல்
வளைபாய் புனலுடன் மானவே ளின்றும்
உளவாக வாடா துலகு.

(புகழ்)

590. மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

591. செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றா—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

592. கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.

---

(586) வீரசோ. அலங். 19 மேற்; தண்டி. 36 மேற். (587-588) வீரசோ. அலங். 28 மேற்; தண்டி. 69 மேற். (589) வீரசோ. அலங். 12 மேற். (590-592) முத்தொள்ளாயிரம்.

593. வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

594. பார்படுவ செம்பொன் பதிபடுவ முத்தமிழ்நூல்
நீர்படுவ வெண்சங்கு நித்திலமுஞ்—சாரன்
மலைபடுவ யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுவ தார்வேந்தர் மார்பு.

595. அருமணி யைந்தலை யாடரவம் வானத்
துருமேற்றை யஞ்சி யொளிக்கும்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு.

(வெட்சியும் வாகையும் வந்த பாடாண்)

596. முனைப்புலத்துக் கலைதுடை முன்னரைப்போல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி—யெனைப்புலத்துஞ்
சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போல்
நன்று முண்டாக நமக்கு.

(கடவுள் மானிடப்பெண்டிரை நயந்தது)

597. குடுமிப் பருவத்தே கோதை புனைந்த
[1]இடுமுத்தப் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் [2]புறம்பணையாய்க்
கென்ன முறைய ளிவள்.

தெய்வப்பாடாண்.

(கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தது.)

598. வெண்பலிச் சாந்த முழுமெய்யு மேற்பூசி
உண்பலிக் கூரூர் திரிவது மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
எண்பலித் தாளிவள் யாதுவாய் வாளே.

(திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்போல்)

599. வருக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதகி லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேளீர்

(593-595) முத்தொள்ளாயிரம். (596) தொல். பொரு. 80. (597) ஷை. செய். 149 பேரா. [1]இடுமுத்தம், நெடுமுத்தம். [2]புறம்பணையார்க். (598) ஷை. ஷை., 80 பேரா; நச். (599) தனிப்பா,

அருட்குலவு மயிலைத்னி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையுமோர் பெண்ணாக்க லியல்பு தானே.

(திருமங்கையாழ்வார்பேரில்.)

600. கடியுண்ட நெடுவாளை காவிற் றப்பிக்
கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு குலைசிதறு மாலி நாடா
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவேன் தானே.

புலவிபொருளாகத்தோற்றிய பாடாண்.

(பாண்டியன்மனைவி)

601. வேண்டியபோ தின்பம் விளைக்கு மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவவெலாஞ் சொல்.

கைக்கிளை.

சேரன்.

602. காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை—யாமும்
இருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.

603. தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாங் கண்ணி வயுமான்றேர்க் கோதையைக்
கண்டுலாம் வீதிக் கதவு.

604. காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவங் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

(600, 601) தனிப்பா. (602) தொல். செய். 19 பேரா; நச். (603, 604) முத்தொள்ளாயிரம்.

உபயம்
பெ. நா. பெ.
சொக்கலிங்கம்
பாகனேரி
8-12-24

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி௵ புரட்டாசி௴ [பகுதி கக.
Vol. XXII. *September-October-1924.* No. 11.

மதங்கசூளாமணி.

எடுத்துக்காட்டியல்.

(௩௪அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

IV. விளைவு.

முதற்காட்சி:—நகர்ப்புறத்தேயுள்ள பூஞ்சோலையின் ஒருபக்கத்தில் இராஜகுமாரி, சாலினி, மாலினி, கத்துரு, அபயன் ஆகிய ஐவரும் பரிசனரும் ஒரு வனசரனும் வருகின்றனர்.

இராஜகுமாரி: செங்குத்தான மலைச்சாரலிலே மிக விரைவாகக் குதிரையைச் செலுத்திக்கொண்டு அதோ போகின்றவர் சாவகநாட்டரசரா?

அபயன்: அரசரல்லவென் றெண்ணுகிறேன்.

இராஜகுமாரி: யாராயினும் சரி; இன்று நாம் அரசரிடம் விடைபெற்றுக்கொண்டு வருகிற சனிவாரம் நாகநாட்டுக்குப் போகவேண்டும். (வனசரனைநோக்கி) ஏ வனசரா! பூஞ்சோலையைப் பார்க்கப்போகும் பொழுது குற்றமற்றமிருகமாகிய மானை அம்பினால் எய்துவிழுத்துவதும் மரபாயிற்று; எங்கப் புதர்மறைவிலிருந்து யான் கொலைத்தொழில்புரியவேண்டுமெனக் காட்டுவாய்.

[இவ்வண்ணம் வேட்டையைப்பற்றி இராஜகுமாரி பேசிக்கொண்டிருக்கிற தருணத்தில் இருளப்பன் வருகிறான்.]

இருளப்பன் தான் கொண்டுவந்த கடிதத்தி லொன்றை இராஜகுமாரியின்கையிற்கொடுத்துச் சாலினியென்னும்பெருமாட்டிக்கு வீரன் என்னும் பிரபு எழுதிய கடிதம் இது என்றான். இராஜகுமாரி கடிதத்தை அபயனகையிற் கொடுத்தனள்; காஞ்சனையென மேல்விலாசமிடப்பட்டிருக்கின்றதெனினும் பிரித்துப் படித்தலாற் குற்றமில்லையென நிச்

கூறித்து, அபயன் கடிதத்தை அனைவர்க்கும் கேட்கும்படியாகப் படித்தனன். அக்கடிதத்தின் சாரம் வருமாறு:—

முன்னாளில் ஓர் அரசன் இரந்துண்ணும் ஒரு பிச்சைக்காரப்பெண் மேல் இச்சைவைத்தான்; யானும் உன்னை இச்சித்தேன். யான் சிங்கம்; நீ ஆட்டுக்குட்டி; என் காலடிக்கு வந்துவிடுவாயாயின் அன்புகாட்டி விளையாடுவேன்; மறுப்பாயேல் என் கோபத்துக்கிரையாவாய். உன் அன்புக்குழைக்கும்,

"அதிசூரன்."

[அனைவரும் நகைத்து இக்கடிதம் பிறர்க்குரியதென்றுசொல்லி இருளப்பனை அனுப்பிவிடுகின்றனர். யாவரும் போனபின் இருளப்பன் தன்னுள்ளே நகைத்து அதிசூரனுக்குத் தான் இடறுகட்டையாயினமையைப்பற்றிச் சந்தோஷித்துக்கொண்டு போகிறான்.]

இரண்டாங்காட்சி:—பூஞ்சோலையின் மற்றொருபக்கத்தில் ஒலிவானனென்னு மோர் சட்டாம்பிள்ளையும், நாதனென்னும் போதகரும், மட்டியென்னுஞ் சேவகனும் வருகின்றனர்.

[சட்டாம்பிள்ளை தமது கல்வியை விரித்துக்கூறும் தடபுடலான வாசகங்களெல்லாம் நகைக்கிடமாவன; விரிவஞ்சி யவற்றை மொழிபெயர்க்காது விடுகின்றாம். இராஜகுமாரி மானை யெய்துவிழுத்தினசெய்தியைப் பொருளாகக்கொண்டு தாம் எழுதிய செய்யுளைச் சட்டாம்பிள்ளை படித்துக்காட்டிக்கொண்டிருக்கிறதருணத்தில் இருளப்பனும் காஞ்சனையும் வருகின்றனர்.]

காஞ்சனை: ஐயா! போதகரே! இந்தக்கடிதத்தைத் தயைசெய்து அடியாளுக்குப் படித்துக்காட்டவேண்டும்.

நாதன்: (காஞ்சனைகொடுத்த நிருபத்தைப் படிக்கிறான்).

அன்புநிலைபுளங்கவராஆணையினைக்கடந்தேன்யான்அன்பாலன்புக்
கின்பமிகுமாணையிட்டேன்எழிலணங்கேநினதுவிழியிரண்டினுள்ளே
மன்பதையோர்தேடுகின்றஞானமுற்றும்யான்கண்டேன்மருட்கைகொண்டேன்
நின்படிவம்புகழ்ந்துரைக்கும்நாவேநாநினையறியும்நெஞ்சேநெஞ்சம்

வேலோன்கைப்படையேபோல்வணவிழிகளெனைவருத்தும்வெகுளின்மின்னே
மேலோங்குமிடியொலியாய்மென்மொழியுமிடர்விளைக்கும்விழுமியோய்நின்

பாலாயவனப்பனைத்தந்தேவகுருவநத்துரைத்தல்பான்மையாமென்
போலேயோரறிவில்லானுரைப்பதற்குத்துணிந்தமையைப்பொறுப்பாய்நீயே.

ஒலிவாணன்: (பிறர்பாற் குற்றங்காண்பதே தன்னைக் கல்விமானென உலகத்தார்மதிக்கும்படிசெய்வதற்குத் தகுந்தவழி யென்றெண்ணிச் சொல்லுகிறான்.)

அசையைச் சரியா யசைக்கவில்லை; ஆதலால் இசையைத் தவறவிட்டு விட்டார். அலகும் அடிக்கணக்கும் தவறில்லாமற்றான் இருக்கின்றன. என்றாலும், இக்காலத்துப்பாட்டும் ஒருபாட்டா? அடியழகும், தொடையழகும் பாவிகமென்னும் மலரின் நறிய வாசனையழகும் வேண்டுமாயின் காளிதாசனையன்றோ கற்கவேண்டும். குரங்காட்டிக்குப் பின்செல்லும் குரங்கைப்போலவும் எஜமானுக்குப் பின்செல்லும் கனைத்தகுதிரையைப் போலவும் பண்டைநாட்பெரியோரின் நடையையும் வாக்கியத்தொடையையும் பின்பற்றுவா ரொருசாரார். அவர்கவியும் ஒரு கவியா? அஃதொருபாலாக; ஹே! கன்னிகையே! இப்பத்திரத்தை உனக்கு அனுப்பியவன் யாவன்?

காஞ்சனை: வீரனென்னும் பிரபுவென்று கேள்வியுற்றேன், ஐயா!

ஒலிவாணன்: "வனப்புமிக்க சாலினியென்னுஞ் சீமாட்டியினது கரகமலங்களுக்கு, தாசனாகிய வீரன் எழுதியது."

ஐயா போதகரே! வீரனென்னும் பிரபு அரசருடைய தோழருள் ஒருவர். ஆதலால், இந்த நிருபம் இராஜகாரியமானது; தாமதமின்றி இராஜசமுகத்துக்கு இதனை அனுப்பிவிடுதல்வேண்டும். ஹே! கன்னிகையே! சீக்கிரம் ராஜசமுகத்துக்குப் போ.

(அனைவரும்போகின்றனர்).

மூன்றாங்காட்சி:—பூஞ்சோலையின் மற்றொருபக்கத்தில் வீரன்கையிலொரு பத்திரத்தோடு வந்து தன் காதலைக்குறித்துத் தன்னுள்ளத்தோடு சம்பாஷித்துக்கொண்டுநிற்கிறதருணத்தில், பிரியதத்தமன்னன் ஒரு பத்திரந்தோடு வருவதைக்கண்டு ஒருமாத்திரமேலேறி மறைந்து கொள்ளுகிறான்.

அரசன்: (தன் கைப்பத்திரத்தைப் படிக்கின்றான்).

அரவிந்தமெல்லிதழினருகணைந்தபனித்துளியையருக்கன்போக்கும்
மரபுன்றன்கண்ணொளியென்முகம்படிந்தகண்ணீரைமாற்றுங்கண்டாய்

வருமந்திவேளையினிற்கடலெழுந்தமதியமெனவயங்குஞ்சோதி
தருமுன்றன்முகமதியமெனதுகண்ணீராழியினுட்டங்குங்கண்டாய்
புன்கண்ணீர்த்துளியினுள்ளேநின்படிவந்தோற்றுதலாற் பொருவிலாய்நீ
என்கண்ணீர்த்துளியனைத்துந்தேராகவெல்போருக்கேகாநின்றாய்
வன்கண்மைநினதன்றாலென்கண்முன்வந்துநின்றோர்மாற்றஞ்செப்பாய்
மின்றுணையேவிளங்குகின்றமெல்லிடையாய்நின்னெழிலைவிளம்பற்பாற்றே.

என்மனத்தை வருத்துகின்ற இன்னலை யான் காதலித்த பெண்ணரசி எங்ஙனம் அறியப்போகின்றாள்; இப்பத்திரத்தை இவ்விடம் போடுகின்றேன்; இனிய தழைகளே என் பேதைமையை மறைப்பீராக. யாரோ வருகின்றார்கள்.

[அரசன் ஒரு செடிமறைவில் அகன்று நிற்கின்றான்]

இலாவணன் தன்கையி லொருபத்திரத்தோடுவந்து மாலினிபால் தனக்குண்டாகிய அடங்காக்காதலை யெடுத்தியம்பித் தானியற்றிய செய்யுளைப் படித்துக்கொண்டிருக்கும் எல்லையிற் சோமகன் ஒரு பத்திரத்தோடு சோலையினுள்ளேவர, இலாவணன் ஒருமரத்தின் பின்னே மறைந்துகொள்ளுகிறான். வீரன் மரத்தின்மேலிருந்து இவரனைவருடைய மனநிலையையும் நோக்கிப் பரிகசித்துக்கொண்டிருக்கிறான். சோமகன் தானியற்றிய காதற்செய்யுளைப் படித்தபின் நெடுமூச்செறிந்து அரசன், வீரன், இலாவணன் ஆகிய தோழர் மூவரும் தன்னைப்போல மன்மதபாணத்துக் கிலக்காகுவாரெனின், தன்பாலெய்திய குற்றம் தனிக் குற்றமாகாதெனச் சொல்லிக்கொண்டு நின்றான்.

இலாவணன்: (மரமறைவிலிருந்து வெளிப்பேவந்து) ஏது ? சோமகா! உனதுகாதல் வரம்புகடந்ததாகவிருக்கிறது. நீ செல்லும்வழியிற் பிறருஞ்செல்லவேண்டுமென்பது நினதுவிருப்பமாயினும் அதனைப் புறத்தே சொல்லுவது தகுதியாகுமா ?

அரசன்: (வெளிப்பட்டு) இலாவணா! சோமகன்மேல்மாத்திரங் குற்றமோ ? நீ மாலினியைக் காதலித்தெழுதியசெய்புள் பிறர்செவிக்கும் எட்டிவிட்டதென அறிவாயாக. நான் இச்செடிமறைவிலிருந்து உங்களிருவருடைய முகவேறுபாட்டையும் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தேன். உங்களது நெடுமூச்சும் காதற்செய்யுளும் எனசெவியிற்பட்டன. உங்கள்செய்கையை நமது தோழனாகிய வீரன் கேள்வியுற்றால் நகையாடுவானன்றோ ?

வீரன்: (மரத்திலிருந்து இறங்கிவந்து) அரசே! அடியேனை மன்னிக்க வேண்டும். நான் இந்த மரத்தின்மீது நெடுநேரமாக விருக்கின்றேன். எனது அரசர் இராஜகுமாரி ஒருத்திமீதுகொண்ட காதலினாற் பட்டபாட்டை நான் என் கண்ணாரக்கண்டேன். 'கண்ணீர்த்துளி தேராகக் காதன்மடந்தை போர்க்குச் சென்றாள்' எனக் கற்பித்துப் பாடியசெய்யுள் என் செவியிற்பட்டது. சோமக லாவணரைக் குற்றஞ்சொல்லுவதா லென்னபயன்?

[என் றிவ்வாறு வார்த்தையாடிக்கொண்டிருக்கிறசமயத்திற் காஞ்சனையும் இருளப்பனும் வருகின்றார்கள்.]

காஞ்சனை: அரசர்பெருமான் நீடுவாழ்க.

அரசன்: அதென்ன உன்கையிலிருப்பது?

இருளப்பன்: அரசே! அது இராஜத்துரோகம்.

காஞ்சனை: அரசே! இப்பத்திரத்தைப் படித்தருளவேண்டும். அது இராஜத்துரோகம் அடங்கியதெனப் போதககுரு கூறினர்.

அரசன்: இப்பத்திரத்தை உனக்குத் தந்தவன் யாவன்?

காஞ்சனை: இருளப்பன்.

இருளப்பன்: எனக்கு அதிசூரர் தந்தார்.

அரசன்: (பத்திரத்தை வீரன்கையிற்கொடுத்து) வீரா! இதனைப் படிப்பாயாக.

[வீரன் பத்திரத்தைப்பார்த்துவிட்டுக் கிழித்தெறிகிறான்].

அரசன்: ஏதேது? பத்திரத்தை யேன் கிழித்தாய்?

இலாவணன்: அரசே! வீரன் முகத்திற் கோபக்குறிப்பைக் கண்டேன்; ஆதலால், பத்திரத்தை நாம் அனைவரும் பார்க்கவேண்டும்.

சோமகன்: (பத்திரத்தின் துண்டுகளை நிலத்திலிருந்து கையிலெடுத்துக்கொண்டு) அரசே! இப்பத்திரம் நமது தோழனாகிய வீரனுடையகையினால் எழுதப்பட்டிருக்கிறது.

வீரன்: (இருளப்பனை நோக்கி) மூடப்பயலே எனக்கு வெட்கத்தைக் கூட்டிவைக்கவா நீ பிறந்தாய்? (அரசனை நோக்கி) அரசே யான் தவறிழைத்துவிட்டேன். அடியேனை மன்னிக்கவேண்டும்.

[இருளப்பனும் காஞ்சனையும் போய்விடுகின்றனர். நண்பர் கலந்து வார்த்தையாடி வீரன் சாலினிமேற் காதல்கொண்டிருப்பதை அறிந்து கொள்கின்றனர்.]

வீரனுடைய காதலியாகிய சாலினி நிறத்தில் அடுப்புக்கரியைப் போன்றவளெனக்கூறித் தோழர் மூவரும் வீரனைப் பரிகசிக்கின்றனர். வீரன் காதற்சிறப்பைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றான். நாககன்னியருடைய அன்பைப் பெறுவதற்குவேண்டிய சூழ்ச்சிசெய்யவேண்டுமென்று அனைவருங்கூடி ஆலோசிக்கின்றனர். இதனோடு நான்காஞ் சந்தியாகிய விளைவு முடிகின்றது.

V. துய்த்தல்.

முதற்காட்சி:—ஒலிவாணனும், நாதனும், மட்டியும், விட்டிலும், இருளப்பனும், அதிசூரனும் ஒன்றுசேர்ந்து வாணாசுரநாடகத்தை இராஜசமுகத்திலே நடிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்கின்றனர்.

இரண்டாங்காட்சி:—இராஜகுமாரி, சாலினி, மாலினி, கத்துருவாகிய நால்வரும் தமது காதலர் நால்வரைப்பற்றியும் அவரனுப்பிய முத்துமாலை முதலிய கையுறைகளைப்பற்றியுங் கலந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் அபயன் உட்புகுந்து அரசனும் தோழரும் ஆயர்வேஷம் அணிந்துகொண்டு இராஜகுமாரியிருக்கும் விடுதியை நோக்கிவருவதாகத் தெரிவிக்கிறான். உடனே நாககன்னியர் நால்வரும் முகமறைய வர்ணந்தீட்டி ஆய்ச்சியர்வேஷம் அணிந்துகொண்டுநின்றனர். அரசனும், தோழரும் யாழோன், குழலோன், தண்ணுமையோன் முதலிய வாத்தியக்காரரும் உட்புகுந்தனர். வந்த ஆயர்நால்வரும் குரவைக் கூத்தாடும்நோக்கமாக ஆய்ச்சியர் நால்வருடையகையையும் பற்றப் போக ஆய்ச்சியர் மறுதலித்துநின்றனர். பலவாறுகப் பரிந்துவேண்டக் குரவையாடுதற்கு உடம்படேமென்ற கன்னியர் ஆயர்வேடத்தோடுவந்த நால்வருக்கும் தமது கையைத்தொட்டு உடனிருந்து வார்த்தையாடுவதற்கு உத்தரவளித்தனர். யாழ் முதலிய வாத்தியங்கள் முழங்கின. முகம் மறைக்கப்பட்டிருந்தமையால் இன்னுளென்றறியாதகாரணத்தினல் அரசன் சாலினியினது கரத்தைப்பற்றி மருங்கிருந்து தனது காதன்மிகுதியை யுரைத்தான். வீரன் இராஜகுமாரியினது கரத்தை

யும், சோமகன் மாலினியநுகாரத்தையும், இலாவணன் கத்தரு வினநுகாரத்தையும்பற்றித் தமது காதன்மிகுதியைப் பெருகவுரைத் தனர். சிறிதுநேரத்தில் அரசனுந் தோழரும் அகன்றனர். நாககன்னி யர் வேடிக்கையாகத் தங் காதலர் நால்வருடைய காதன்மொழியைப்பற்றி யும் வார்த்தையாடிக்கொண்டிருந்து பின்பு சோலையைவிட்டு விடுதியி னுட்புகுந்தனர். அரசனும் தோழரும் சொந்த உடையணிந்து மீட்டும் சோலையினுள்வர, அவர்வந்து சற்றுநேரத்துக்குள் நாககன்னியர் நால் வரும் சொந்த உடையணிந்து சோலையினுள் வந்தனர். எண்மரும் கலந்து வார்த்தையாடுங்கால், கன்னியர்நால்வரும் தம்பாற் காதலுற்றோ ரைநோக்கி விரதபங்கஞ்செய்வது தகாதசெய்கையெனவும், காதற்கிடங் கொடுத்த நெஞ்சத்தை நிலைநிறுத்தவேண்டுமென்றும் பரிகசித்துக்கூறி வற்புறுத்தினர். இத்தருணத்தில் இருளப்பனும், ஒலிவ்வாணனும், மட்டி யும், விட்டினும், நாதனும், அதிசூரனும் ஒருவர்பின்னொருவராக வந்து அரசன் முதலிய எண்மருங் கூடியிருக்கின்ற சபையின்முன்னிலையில் வாணாசுரநாடகத்தை நடிக்கவாரம்பித்தனர்.

[இவ்வங்கத்தினுள்ளே பேதைமைபற்றியநகைச்சுவை நிரம்பத்தோற்றும்]

வாணாசுரநாடகம் ஒருபக்கம் நடந்துகொண்டிருக்க, அரசனும் தோழரும் காதல்கைம்மிக்க தமது நிலையை யெடுத்துக்கூறிக் கிருபை செய்யவேண்டுமென நாககன்னியரைக் குறையிரந்து வேண்டினர். இத் தருணத்தில் நாகநாட்டிலிருந்து மரகதனென்னும் மந்திரி வந்து நாகநாட் டரசன் இறந்துபோய்விட்டசெய்தியைத் தெரிவித்தான். கன்னியர் அர சனையும் தோழரையும் நோக்கி ஒருவருஷத்தில் மீள்வதாகச்சொல்லிப் போய்விடுகின்றனர். மணந்தார்க்கு இன்பினையளிக்கும் வேனிற்கால வருணனையாகவுந் தணந்தார்க்குத் துன்பினையளிக்குங் கூதிர்க்கால வருணனையாகவும் உள்ள இரண்டுபாடல்களை அரங்கினுள்ளோர் சிலர் பாடுவதோடு நாடகம் முடிகின்றது. இந்நாடகத்துக்கு ஆக்கியோனிட்ட பெயரை நேராக மொழிபெயர்த்துச் சொல்லுவதாயின் "காதன்முயற்சிக் கிடையீடு" என்று சொல்லலாம். மிகவும் எளிதான ஒரு பொருண்முடி பின்மேல் எழுந்த இந்த நாடகத்தினமைப்பை அவதானித்து அறிந்து கொள்ளுதல் ஏனைய நாடகங்களினமைப்பைக் கிரகித்துக்கொள்ளுவதற் குச் சிறந்த சாதனமாகும்.

இந் நாடகத்தினுள் இகழ்ச்சி, இளமை, பேதைமை, மடன் என்னும் நான்குபொருட்பகுதியும்பற்றிப் பிறந்த நகைச்சுவை தோற்றினமை காண்க. நகைச்சுவைக்கு நேர்விரோதமானது அவலச்சுவை (அழுகை). இது இளிவு, இழவு, அசைவு, வறுமையென்னும் நான்கு பொருட்பகுதியும்பற்றிப் பிறக்கும். மூப்பு, பிணி, வருத்தம், மென்மையென்னும் நான்கும்பற்றித் தோன்றுவது இளிவரற்சுவை. மூப்பு முதலியவற்றாற் றுன்புறுவோன் பிறரால் இகழப்பட்டு எளியனாகியவழி அவனிடத்து அவலந்தோன்றுமாதலால், அவலமும் இளிவரலும் ஒரே நாடகத்தினுட் பொருந்திவருதலியல்பாகும்.

உ. அவலச்சுவை இளிவரற்சுவைக்கு இலக்கியமாக யாம் எடுத்துக்கொண்ட ஆதுலராஜன்சரிதையினதுகதைச்சுருக்கம் வருமாறு:—

சிங்கபுரத்துமன்னனாகிய ஆதுலவர்ம்மன் தனதுபுதல்வியராகிய மாணிக்கமாலை, கனகமாலை, குணமாலை யென்னும் மூவரையும் அழைத்து, "மூப்புவந்துற்றமையினால் யான் அரசியற்கடமைகளினின்று இளைப்பாறப்போகின்றேன்; இராஜ்யம் இனி நுமக்குரியதாகும்; எனதுபுதல்வியராகிய நும்முள் எவள் என்மீது நிறைந்த அன்பு உடையவளாக இருக்கின்றாளோ அவளுக்கு நிறைந்தபாகத்தைக் கொடுப்பேன்" என்றான். மாணிக்கமாலையும், கனகமாலையும் வயோதிகனாகிய ஆதுலவர்ம்மனுடையசெவிக் கின்பம்பயக்கும் இச்சகமொழிகளையுரைத்துத் தாம் தம் உயிரினும்பார்க்கத் தந்தையை நேசிப்பதாகச் சொன்னார்கள். குணமாலை ஒன்றும்பேசாது மௌனமாயிருந்தாள். அரசன் வற்புறுத்திக்கேட்கக் குணமாலை சொல்லுவாள்; "அரசே! தேவரீர் என்னைப் பெற்று வளர்த்த பிதா. அங்ஙனமாயினும் எனது முழு அன்பும் தேவரீருக்குரியதென்றுசொல்ல அடியாளுக்கு உரிமையில்லை. நான் ஒருநாயகரை அடையப்போகின்றேன்; எனது அன்பிற் சரிபாதி அவருக்கு உரியதாகுமல்லவா? எனதுசகோதரிகள் விவாகம்முடித்தவர்களாயிருந்தும் தங்களது அன்பு முற்றும் தேவரீருக்கு என்றார்களே; தங்கள் நாயகருக்கு மிச்சம்வைத்திருக்கிறார்களோ, அறியேன்!" இவ்வாசகத்தைக்கேட்ட அரசன் சினந்து தனதுநாட்டை இரண்டுகூறு செய்து மாணிக்கமாலையினுடைநாயகனாகிய அரிவர்ம்மன்வசம் ஒரு பாகத்தையும் கனகமாலையின்கணவனாகிய வீரவர்ம்மன்வசம் மற்றொரு

பாகத்தையும் ஒப்புவித்துவிட்டான். இச்சகம்பேசாது உண்மைகூறப் புகுந்த குணமாலைக்கு ஒரு செப்புக்காசுங் கிடைக்கவில்லை. இக்கருணத்திற் கௌதமன் என்னும் அமைச்சன் முற்பட்டு அரசனுக்குப் பலவாறாகிய நீதிவாக்கியங்களையும் எடுத்தியம்பிக் "கைப்பொருளைக் கொடுத்துவிடுவது தவறு" எனக் கூறினன். அரசன் சினங்கொண்டு அந் நன்மதியமைச்சனை நாட்டிலிருந்து துரத்திவிட்டான். சீதனமில்லாத குணமாலையை அவளது குணநலத்துக்காக விரும்பி மணிபுரத்தரசன் மணமுடித்துத் தன்னூர்க்குக் கொண்டுசென்றனன். ஆதுலவர்ம்மன் தனது பொருளனைத்தையும் புதல்வியர்கையிற் கொடுத்துவிட்டமையினால், மாணிக்கமாலையுடையவீட்டில் ஆறுமாதமும் கனகமாலையுடைய வீட்டில் ஆறுமாதமுமாக ஒவ்வோர் ஆண்டினையுங் கழிப்பதற்கு ஏற்பாடு செய்தான். மூத்தபுதல்விவீட்டிற்போயிறங்கிச் சிலநாட்கள் ஆவதற்கு முன் அவள் வயோதிகனாகிய ஆதுலவர்ம்மனைப் பலவாறாக அவமதித்து நடத்தத்தொடங்கினள். கௌதமனென்னும் அமைச்சன் அரசனைப் பிரிந்திருத்தலாற்றாது மாறுவேடம்பூண்டு ஆதுலவர்ம்மனிடம்வந்து ஒருவேலைக்காரனாக அமர்ந்திருந்தான். மாணிக்கமாலையுடைய தலைமைச் சேவகனாகிய காசிபன் எஜமானியினுடைய கட்டளைப்படி வயோதிக அரசனை அவமதிக்க அதனைப் பொறுக்கமாட்டாது கௌதமன் காசிபனை யுதைத்தான்; மாணிக்கமாலை புறத்தேவந்து தனது தந்தையை யிகழ்ந்து வார்த்தையாட அதனைக் கேட்ட ஆதுலன் கைப்பொருளையிழந்த தனது மதியீனத்தை நினைத்து அவலித்துக் கனகமாலையினுடைய வீட்டை நோக்கி நடந்தான். வயோதிகராஜனை அடுத்து ஆதரிக்கவேண்டா மென்பதாக மாணிக்கமாலை தனது சகோதரிக்கு ஒரு நிருபமெழுதி அதனைக் காசிபன்கையிற் கொடுத்து அனுப்பினள். விரைந்துபோன காசிபனைக் கனகமாலையினது தலைவாயிற்கடையிற் கௌதமன் சந்தித்தான். இருவருக்கு மிடையிற் சில வேறுபாடுகள் நிகழக் கௌதமன் காசிபனை யுதைத்தான். கனகமாலை கௌதமனைத் தனது தந்தையினது சேவகனென்று சிறிதேனும் மதியாது அவனுக்குக் கால்விலங்கிட்டுக் கடைவாயிலில் இருத்தினள். ஆதுலன் கனகமாலையுடைய வாயிலைக் கிட்டிக் கௌதமன் கால்விலங்கோடிருப்பதைக் கண்டு கோபாவேசங் கொண்டு, அங்ஙனம்செய்தார் யாவரோவென்று விசாரித்துக்கொண்டிருக்கும்போது கனகமாலையும் வீரவர்ம்மனும் வந்துசேர்ந்தனர். கனகமாலை

தந்தையை நோக்கி, "அக்காள்வீட்டிற்குப்போய் இரண்டுவாரந்தான் ஆயிற்றே; இதற்கிடையில் இங்கு வந்துவிட்டீர்; உம்மை உபசரிப்பதற்கு இங்கு ஒரு ஏற்பாடுமில்லை;" என்றிவ்வாறாக வைதுகூறினள். இத்தருணத்தில் மாணிக்கமாலையும் தங்கைவீட்டுக்கு வந்துவிட்டாள். இருவருமாகத் தந்தையை வைதார்கள். ஆகுலன் மனம்பொறுக்காது நன்றிகெட்ட தனதுபுதல்வியரிருவரையுஞ் சபித்துவிட்டுக் கால்விலங்கு நீக்கப்பட்டுநின்ற கௌதமனோடும் தன்னை யகலாது என்றுமுடன்றிரிகின்ற விதூஷகனோடும் நகர்ப்புறத்தைநோக்கி நடந்தான். குணதரன் என்னும் பிரபு முற்பட்டுப் பலவாறாகிய சமாதானஞ்சொல்லியும் ஆகுலன் கேட்கவில்லை. இந்தக் குணதரனுக்கு இருவர்மக்களுளர். மூத்தவனாகிய மதனன் ஒரு விபசார புத்திரன்; இளையவனாகிய வரதன் சொந்த மனைவி வயிற்றிற் பிறந்தவன். மதனன் வஞ்சனையினாலே வரதனுக்குந் தந்தைக்கும் பகையுண்டாக்கிப் பிரித்துவிட்டுத் தானே அன்புள்ளபுத்திரன் என்று தந்தை நினைக்கும்படியாக நடந்துவருகிறான். வரதன் குற்றவாளியாகச் சாட்டப்பட்டமையால், அவனைப் பிடித்துவரும்படி இராஜகட்டளை பிறந்திருந்தது. மதனன் தந்தைக்குச் சூதுசெய்வான் என்பதை யறிந்த வரதன் பிச்சைக்காரன்போல வேஷம்பூண்டு நகரத்தெருவிலேயே மறைந்து திரிகிறான்.

இவ்வளவோடு முகமும் பிரதிமுகமும் முடிகின்றன. விரிவஞ்சித் தனித்தனி அங்கங்களுக்குச் சாரங்கூறாது அனைத்தினையும் ஒன்றாகத் தொகுத்துக் கூறினம். இனி, கருப்பம் விளைவு துய்த்தல் ஆகிய மூன்று சந்திகளினுடைய சாரத்தையுந் தருவாம்.

மின்னலும் பேரிடியும் பெருமழையும் நிறைந்த இராப்பொழுதிலே ஆகுலவர்மன் ஒதுங்கிநிற்பதற்கு இடமின்றி, வெட்டவெளியில் அலைகிறான். கௌதமன் ஒரு சிறு குடிசையைக்காட்டி அதனுள் நுழைந்து சற்று ஆறியிருக்கும்படி வேண்ட, "நன்றிகெட்ட புதல்வியருடைய நிந்தைமொழிகளினும்பார்க்க இவ்விடிமுழக்கம் கொடியதோ" என்று சொல்லிக்கொண்டு ஆகுலவர்மன் உட்புகுந்தான். அக்குடிசையினுள்ளே பிச்சைக்காரவேஷம்பூண்ட வரதன் படுத்திருந்தான். அவனைக்கண்ட ஆகுலன், "ஏதப்பா! கந்தைத்துணியுமின்றி இந்தக் குடிசையினுள் இருக்கிறாய்; நீயும் இரண்டுபுதல்வியருக்குக் கைட்பொருளைக்கொடுத்து

விட்டு இக்கதியை அடைந்தனையோ?" என்றான். மனக்கவலையினாலும், வாடைக்காற்றினாலும் அல்லலுற்ற ஆகுலன் தன் சுயபுத்தியிழந்து பைத்தியக்காரனானான். இஃதிவ்வாறிருக்கத் தேசத்துச் சனங்கள் தமது வயோதிக அரசனை மீட்டுஞ் சிங்காசனத்திலேற்றவேண்டுமென்று அதற்காகவேண்டிய சூழ்ச்சி செய்திருந்தார்கள். இதனையறிந்த புதல்வியரிருவரும் தந்தையைக் கொன்றுவிட்டாற்றான் தமக்கு அரசியல் நிலைக்குமென்று நினைத்துத் தமது வஞ்சக்கருத்தை நிறைவேற்றுவதற்கு வழி தேடிக்கொண்டிருந்தார்கள். ஜனங்களுடைய வேண்டுகோளின்படி மணிபுரத்தரசன் சிங்கபுரத்தின்மீது படையெடுத்துச்செல்வதற்கு ஏற்பாடுசெய்திருந்தான். இவற்றையெல்லா மறிந்த குணதரனென்னும் பிரபு அரசனைப் பாதுகாக்கநினைத்துப் புறத்தேபோதற்கெண்ணித் தன் மகன் மதனனைநோக்கி, "வாராய் மதனா! எனது அரசருடையகாரியமாக ஒரு நிருபம் வந்திருக்கிறது. நான் புறத்தே போய்வருகிறேன்; இவ்விஷயத்தை யார்க்குஞ் சொல்லாதே" என்று சொல்லிவிட்டு அப்பெருமழையிலே நகர்ப்புறத்துக்குப் போய்க் கௌதமனைக் கண்டு ஆகுலராஜனை மணிபுரத்தெல்லைக்கு அனுப்பிவைப்பதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டுவந்தான். வஞ்சகனாகிய மதனன தந்தை போயினபின்னர்க் குறிப்பிட்ட கடிதத்தைத் தேடியெடுத்துத் தந்தை கொலைக்களத்துக்கு ஆளானாலும் தான வாழவேண்டுமென்னும் நோக்கத்தோடு கடிதத்தைக் கொண்டுபோய் வீரவர்ம்மன்கையிற் கொடுத்துவிட்டான். குணதரன் திரும்பிவர வீரவர்ம்மனுடைய சேவகர்களுள் ஒருவன் அவனைப் பிடித்துத் தூணோடுகட்டினான். கனகமாலை நெருங்கி வந்து, "மூடா! உன் துரோகச் செயலையெல்லாம் அறிந்துகொண்டோம். வயோதிகராஜன் எங்கே?" என்று வினவினாள். ஆகுலராஜன் உயிர் தப்பியிருக்கும்வரையும் தங்களுக்கு இராஜ்யம் நிலையில்லையென்பதை யுணர்ந்தாளாதலினால், இந்தவிஷயத்தை மிகுந்த ஆத்திரத்தோடு வினவினாள். அரசனை மணிபுரத்துக்கு அனுப்பிவிட்டதாகக் குணதரன் கூறக் கனகமாலை கோபாவேசங்கொண்டு அவனது நரைத்ததாடிமயிரைப் பற்றிப் பிடுங்கியெறிந்தாள். வீரவர்ம்மன் நெருங்கித் "துரோகி உன்கண்ணை மிதிக்கிறேன் பார்" என்று குணதரனுடைய ஒருகண்ணைப் பிடுங்கி நிலத்திற்போட்டு மிதித்தான்; மற்றக்கண்ணையும் பிடுங்குகிற தருணத்தில் அருகில்நின்ற சேவகனொருவன் இக் கொடுஞ்செயலைக் கண்டு மனஞ்

சகிக்காது வாளையுருவி வீரவர்ம்மனைக் குத்தினான். கனகமாலை ஓடோடியும் வந்து அச் சேவகனைக் குத்திக் கொன்றுவிட்டாள். காயப்பட்ட வீரவர்ம்மனை உள்ளே தூக்கிச்சென்றார்கள். இரண்டுகண்ணுமிழந்த குணதரன், "ஐயோ! என்னன்புள்ள மகனே! மதனா! நீ எங்குற்றாய், என்று அழுதான்." கனகமாலை நகைத்து, "அடா! மூடா! உன்மகன் மதனன் உள்ளதையுரைத்து உனக்கு இத்தனை கேட்டையும் வரப்பண்ணினான். அவன் உனக்கு இரங்குவானென்று நினைக்கிறாயா?" என்று நடந்தகாரியத்தைக்கூறிச் சேவகரைநோக்கிக் குணதரனை வெளியே பிடித்துத்தள்ளிவிடும்படி கட்டளையிட்டாள்.

[இவ்வளவோடு மூன்றாஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது.]

கண்ணிரண்டுமிழந்து வழிதடுமாறி அலைவுற்றுவந்த தந்தையை வரதன் சந்தித்துத் தன்னை இன்னானென்றறிவியாது அன்பினோடு தந்தையினுடைய கரத்தைப்பற்றி ஆறுதல்வார்த்தைகூறி, மணிபுரத்தினெல்லையை நோக்கி அழைத்துச் சென்றான். இஃதிவ்வாறாக மணிபுரத்துச் சைனியங்கள் சிங்கபுரத்துச் சைனியங்களையெதிர்த்துக் கடுஞ்சமர்புரிந்தன. சேவகனாற் குத்துண்ட வீரவர்ம்மன் முன்னமேயுயிர்துறந்தானாதலினால், கனகமாலை மதனனையழைத்துத் தனது சேனைக்குச் சேனாபதியாகவும் தனக்கு நாயகனாகவும் இருக்கும்படி வேண்டினாள். தங்கையுடைய சேனைகளுக்கு மதனன் சேனைத்தலைவனாகச் செல்லுகிறான் என்பதைக் கேள்வியுற்ற மாணிக்கமாலை தனது கணவன் அரிவர்ம்மன் உயிரோடிருக்கவும் மதனன்மீது பொருந்தாக் காதல்கொண்டிருந்தாளாதலினால், தங்கையினின்றுபிரித்து மதனனைத் தான் கைப்பற்றவேண்டுமென்றெண்ணி மதனனுக்கு ஒரு நிருபமெழுதிக் காசிபன்கையிற் கொடுத்தனுப்பினாள். காசிபன் வழியிற்செல்லும்போது குணதரனைக் கண்டு அவனைக் கைதியாக்குவதற்கு நெருங்க, வரதன் எதிர்த்துவந்து தன் கைவாளினாற் காசிபனை வெட்டினான். காசிபனுடைய அங்கியினுள்ளிருந்த பொருள்களைச் சோதித்துப்பார்க்கும்போது, மாணிக்கமாலை மதனனுக்கு எழுதிய கடிதம் அகப்பட்டது. அதன் உள்ளுறை வருமாறு:—

"நாம் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட சத்தியத்தை நினைவுகூருவீராக. நமது பகைவனை முடித்துவிடுவதற்குப் பல வசதிகளேற்

படும்; மனமுண்டானுற் காலமு மிடமும் சௌகரியப்படாமற் போக மாட்டா. அவன் வெற்றிபெற்றுவந்தால் என்பாடு சிறைச்சாலைதான். அவனுடைய சயனமாகிய சிறைச்சாலையிலிருந்து என்னை விடுவித்து உம்முடைய கஷ்டத்துக்குக் கூலியாக உம்முடைய மாற்றுனது இடத்தை உமதிடமாக்கிக்கொள்ளும்."

இங்ஙனம்,

உம்மை நாயகனென்றழைக்கவிரும்பிய,

உமது அன்புள்ள அடியாள்

மாணிக்கமாலை.

இந்நிருபத்தை வீதன் கொண்டுசென்று மாணிக்கமாலையின் நாயகனுகிய அரிவர்ம்மன்கையிற் கொடுத்தான். இந்நிகழ்ச்சிக ளிவ்வாருக, மணிபுரத்தெல்லையையடைந்த குணதரன் ஆகுலராஜனைத் தழுவி விதியை நொந்து துன்புற்று அழுகிருன். தீயபுதல்வனுகிய மதனனுடைய சூழ்ச்சியினுற் குணதரன் கண்ணிரண்டு மிழந்தான்; தீயபுதல்வியரிருவருடைய வஞ்சனையினுல் ஆகுலன் அனைத்தையு மிழந்தான். நற்குணசீலையும் மணிபுரத்தரசன்மனைவியும் ஆகுலராஜனது மகளுமாகிய குணமாலை தந்தைக்கு நேர்ந்த இன்னலனைத்தினையுங் கேள்வியுற்று அரமனைவைத்தியனையும் அழைத்துக்கொண்டு விரைந்துவந்து தந்தையைச் சந்திக்கிருள். குணமாலை மனமுருகிக் கண்ணீர்சொரிவதும் தந்தை தன் குற்றத்தை மன்னிக்கும்படி மகளை வேண்டிக்கொள்வதும், இவற்றைக்கண்ட கௌதமன் முதலினேர் அவலக்கண்ணீர்சொரிவதும் நான்காஞ்சந்தியாகிய வினையின் ஈற்றுப்பாகங்களாவன.

மதனன் யுத்தத்தில் வெற்றிபெற்றுவருகிருன். சிங்கபுரத்துச் சேனைகள் மணிபுரத்துச்சேனைகளை வென்றமையால், ஆகுலராஜனும் குணமாலையும் யுத்தக்கைதிகளாகிச் சிறைச்சாலையி லடைபட்டார்கள்.

மதனன்மேல் அடங்காக்காதல்கொண்ட மாணிக்கமாலை தனது தங்கை கனகமாலையைத்தொலைத்துவிட்டால், மதனன் தனக்காவானென்றெண்ணித் தங்கைக்கு நஞ்சூட்டி விடுகிருள். அரிவர்ம்மன் மதனனையணுகி அவனது வஞ்சச்செயலையுணர்த்தி, "இப்படுபாவியோடு முனைந்து சண்டையிடுவதற்கு இவ்விராஜ்யத்தி லொரு வீரனில்லையோ" என அழைக்க, வரதன தோற்றி, மதனனேடு வாள்யுத்தஞ்செய்து, தன் கை

வாளினால் மதனனைக் குத்திவிழுத்துகிறான். மதனன் விழுந்ததையும், தனது பொருந்தாக்காமம் வெளியாயினதையும் அறிந்த மாணிக்கமாலை வாளையெடுத்து நெஞ்சிற்பாய்ச்சி உயிர்துறக்கிறாள். மதனன் உயிர்துறக்குந்தருணத்தில் தன்பக்கம்நின்றோரையழைத்துத் தான் மாணிக்கமாலையின் விருப்பப்படி குணமாலையைத் தூக்கிலிட்டுக்கொல்லும்படி கட்டளை பிறப்பித்ததாகவும், விரைந்துசென்றால் அக்கட்டளையை நீக்கிவிடலாமென்பதாகவுஞ் சொல்லுகிறான். அதற்குமுன் கட்டளை நிறைவேறிற்று. குணமாலையின் உயிர்துறந்தஉடலத்தைக் கையிலேந்திக்கொண்டுவந்த ஆதுலராஜன் அடங்காத்துயரினாலே மூர்ச்சித்து உயிர்துறக்கிறான். இச்செயலனைத்தையுங் கண்ணுற்ற அரிவர்மன் முதலிய அனைவரும் அவலக்கண்ணீர் சொரிகின்றனர். இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.

இந்நாடகம்முழுதும் அவலச்சுவையும், இளிவரற்சுவையும்பெற்று வருதலையும் பிறசுவை பெறாதுவருதலையும் நோக்குக. புறத்திணைப் பாலதாகிய இதனுள், பிறசுவை கலந்துவரின் மாறுபட்ட சுவைகள் ஒன்றினையொன்றழித்து நாடகத்தினியல்பையே வேறுபடுத்திவிடுவனவாதலால், இங்ஙனம் அமைத்தது சிறப்பாயிற்று. கதையினுள் ஒரு கிளைக்கதை தோற்றுவதையும், கதையும் கிளைக்கதையும் பொருளையும் பிரதிவிம்பத்தையும்போல ஒன்றினையொன்று நிகர்த்திருப்பதையும் நோக்குக. ஆதுலராஜனைப்போலவே குணதரனும் துன்புறுகின்றான். மாணிக்கமாலை கனகமாலையைப்போல, மதனன் தந்தைக்குத் தீங்கிழைக்கிறான். தந்தையரால் வெறுத்தொதுக்கப்பட்ட குணமாலையும் வரதனும் தந்தையர்க்கு நன்மைபுரிகின்றனர்.

ந. இனி, இரம்மியன் சுசீலை சரிதையை யாராயப்புகுவாம். இந்நாடகத்தினுள் அவலமும் உவகையும் நிரம்பிவருகின்றன. அன்புடையாரோடுகூடி யின்பநுகர்ச்சிபெய்தினோர் அவ்வன்புடையாரைப் பிரிந்தஞான்று துன்புற்றவலிப்பாராதலினால் ஒரே நாடகத்தினுள்ளே அவலமும் உவகையும் ஒருங்குதோற்றுவது மியல்பாயிற்று. கதைச்சுருக்கத்தையும் சுவைநிறைந்த சிற்சில பாகங்களின் மொழிபெயர்ப்பையுந் தருவாம். சோழன்கிள்ளிவளவன் நீதிநெறிதவறாது அரசுபுரிந்துவருகின்ற காலத்திலே, மன்னனால்மதிப்புப்பெற்ற பழங்குடிகளுட் டலைமையெய்தினோராகிய பண்ணைக்குடியாரும் மலைபன்குடியாரும் இராஜதானியாகிய

உறையூரிலே வசித்துவந்தார்கள். இவ்விருகுடியாருக்கு மிடையில் நெடு நாளாகப் பகைமை யேற்பட்டிருந்தது. பண்ணனைச் சேர்ந்தோரும் மலையனைச் சேர்ந்தோரும் ஒருவர் மற்றொருவரைக் கண்டாற் காரணமின்றி வாளையுருவிச் சண்டையிடுவர். அரசன் இவ்விருகுடியாருடைய பகைமையையுங் கண்டு அது தன்னரசியலுக்கே கேட்டை விளைவிப்பதென வெண்ணி அப்பகைமையை நீக்கிவிடுவதற்குத் தன்னா லியன்ற முயற்சி செய்தும் வாய்க்கவில்லை.

பண்ணனுக்குப் பலவகைவனப்புக்களும் நிறைந்த ஒரு புதல்வியிருந்தாள்; அவள்பெயர் சுசீலை. மலையனுக்கு ஒரேபுதல்வனிருந்தான்; அவன்பெயர் இரம்மியமலையன். இரம்மிய னொருநாள் தனது இனத்தானாகிய வண்மைமலையனோடும் நண்பனாகிய மார்த்தாண்டசோழனோடும் நகரவீதியிற் போகும்போது, ஏவலாளனொருவன் ஒரு பத்திரத்தைக் கொடுத்து அதனை வாசித்து விளக்கப்படுத்தும்படி கேட்டான். இரம்மியன் பத்திரத்தைப் படித்துப்பார்த்தபோது அன்றிரவு பண்ணன்மனையில் ஒரு விருந்து நடக்கப்போவதாகவும் அதற்குப் பண்ணனுடைய இனத்தார் பலர் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தான். யாதுவரினுந் தானு மவ்விருந்துக்குப் போகவேண்டுமென்று மனத்தில் நிச்சயித்த இரம்மியன் தன்கருத்தை உடன்வந்த இருவருக்குந் தெரிவித்தான்; அன்னாரும் போதற் குடன்பட்டனர். இரவுவருதலும் மூவர் நண்பரும் பண்ணன்வீட்டை யடைந்தனர். ஆங்கு இரம்மியனைக் கண்டமாத்திரத்தே பண்ணனது மைத்துனனாகிய தீவலமல்லனென்பான் வாளையுருவிக்கொண்டு எதிர்த்துச்சென்றான். 'விருந்தாக வந்தவரை எதிர்த்தலாகாது' என்று பண்ணன் தடுத்தனன். பண்ணனுடைய புதல்வியாகிய சுசீலையை இரம்மியன்கண்டு அவளழகி லீடுபட்டுக் காதல்கொண்டு யாருமில்லாதநேரம்பார்த்து அவளருகிற்சென்று இரண்டொரு வார்த்தை கூறுகிறான். அவளு மிவன்மேற் காதல்கொண்டு விருந்தினர் போகும்போது செவிலித்தாயை யணுகி இரம்மியனைச் சுட்டிக்காட்டி, "இவ்வாண்மகன் யாருடைய புதல்வன்" என விசாரித்தனள். "நமது குடியாருக்கு ஜன்மப்பகைவனான மலையன்மகன்; பெயர் இரம்மியமலையன்" எனச் செவிலி கூறினாள். இவ்வளவோடு முதற்சந்தியாகிய முகம் முடிகின்றது.

இரம்மியன் தன் நண்பரிருவருக்கும் பின்னாக நடந்துசென்றவன் அன்னார்கண்காணாது பண்ணனுடைய திருமனையின் அந்தப்புரத்துப் பூஞ்சோலையைச் சூழ்ந்திருந்த மதிற்சுவரொன்றின்மேலேறிச் சோலையினுள்ளே குதித்தான். வண்கைமலையனும் மார்த்தாண்டசோழனும் யாண்டுந் தேடிப்பார்த்துவிட்டுத் தம் மனையைநோக்கிப் போயினர். சோலையினுள் மறைந்திருந்த இரம்மியன் சாளரவாயிலிலேதோற்றிய சுசீலையின் முகத்தைக் கண்டு பரவசப்பட்டுநிற்கிறான். அவள் தன்னெஞ்சொடுகூறிய சிலவார்த்தைகள் இவன்செவியிற்பட, சுசீலை தன்மேற் காதலுற்றிருக்கிறாளென்பதை இரம்மியனறிந்து வெளிப்பட்டுத் தன்னையின்னானென்று தெரிவித்து அவளோடு வார்த்தையாடி மறுநாட்காலை ஏழரைநாழிகைக்குச் செவிலியைத் தன்னிடம் அனுப்பும்படிசொல்லி விடைபெற்றுக்கொண்டு வைகறைப்பொழுதிலே உலோகமாபாலனென்னும் புரோகிதனிடஞ் செல்லுகிறான்; புரோகிதனைக்கண்ட இரம்மியன் தனக்கும் சுசீலைக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அன்பினைத் தெரிவித்து மறுநாட் பிற்பகல் தனக்குச் சுசீலையை விதிப்படி மணமுடித்து வைக்கும்படியாகப் புரோகிதனை வேண்டுகிறான். புரோகிதன் அதற்கு இசைகிறான். மறுநாள் இரம்மியன் தனது நண்பரிருவரோடும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது சுசீலையின் செவிலித்தாய் வருகிறாள். நண்பரை யனுப்பிவிட்டு இரம்மியன் செவிலிக்குத் தன்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துப் பிற்பகலிற் சுசீலையையழைத்துக்கொண்டு உலோகமாபாலனுடையவீட்டுக்கு வரும்படி சொல்லுகிறான். ஆங்குக் காதலிருவஞ் சந்தித்து முறைப்படி மணமுடித்துக்கொள்ளுகிறார்கள். இவ்வளவோடு இரண்டாஞ்சந்தி முடிகிறது.

[சேக்சிற்பியாரது கவிநயத்தையும் இயன்றவரை விளக்கிக்காட்டுதல் இன்றியமையாததாதலின், இச்சந்தியினுள்ளேவந்த உவகைச்சுவை நிறைந்த ஒருபாகத்தினது மொழிபெயர்ப்பைத் தருகின்றோம்.]

காலம்: யாமப்பொழுது. களம்: பூஞ்சோலை.

இரம்மியன்: (நெஞ்சொடு மொழிகின்றான்)

வாட்புண் பட்ட வடுவறி கில்லார்
நாட்புண் கண்டு நகைப்பினு நகைப்பர்.
[வேனில்வே ளெய்கணை மேவுறு மனத்தர்
சோமனு ரிழைக்குந் துயரினை யறியார்.]

சுசீலை சாளரவாயிலில் தோற்றுகிறாள்.

நெஞ்சே! பொறுபொறு; நீள்குண திசையில்
அஞ்செஞ் சோதி யலர்கதிர் பரப்பிப்
பேரொளி யொன்றுநன் னீர்மையி னெழுந்தது;

அதுவே,
ஆரெழிற் பரிதி பேரோ சுசீலை
இகனிறை மதிதரு மின்னலை யொழிக்கப்
பகலவன் வந்த பான்மையை யுணர்ந்தேன்.
வாராய் நிறையெழில் வயங்கிய சுடரே!
நேரா ரியல்பினை னெஞ்சினை வாட்டிய
விண்மதி நின்னெழில் விளக்கங் கண்டு,
தன்னொளி மழுங்கித் தாழ்ந்துநின் றனனால்;

நீயே,
இந்துவை வென்ற சுந்தர வதனச்
செந்திரு வாயினை சிறைசெயுங் கன்னி
மாடத் திருத்தன் மரபோ வுரையாய்?
காதன் மடந்தாய்! ஆ! என் னன்பே!
சிறியே னுளநிறை கழிபெருங் காதலை
அறியாய் ஐயோ! பொறுபொறு மனனே!
அணியெழிற் பாவை மணியிதழ் விரித்து
மொழிசொல முன்னியும் மொழியா தமர்ந்தனள்
வாக்கெழு மாற்றம் வழங்கில ளெனினும்
நோக்கெழு மாற்றம் நோக்கா லுணர்ந்தனன்,
பேதையேற் கன்றம் மாதர்கண் ணோக்கம்
விண்மீ னொளியென மெல்லொளி பரப்பும்
நோக்கிணை மருவின ராக்கமெய் தினரே
செம்மலர் முகத்திற் சேர்ந்தன மெல்விரல்
மெல்விரன் மேலதோர் வியன்பூம் பட்டுடை
பட்டுடை செய்தவம் யான்செய் திலனே,

சுசீலை: ஆ! ஆ! ஐயோ!

இரம்மியன்: மாதோ? அணங்கோ?

அகல்வா னெழுந்த முகிலிடைப் படர்ந்து
கண்டோர் வியக்குங் காமரு காட்சிய

தணங்கே யாத விணங்குமெல் லணங்கே
விண்ணவ ரமிழ்தினை வென்றநி னின்மொழி
உண்ணுதற் கையோ வுருகுமென் னுள்ளம்.

சுசீலை: (இரம்மியன் சோலையுண்ணிற்பதை யறியாது தன் காதலை வெளியிட்டுச் சொல்லுகிருள்.)

இரம்மிய மலைய! இரம்மிய மலைய!
தந்தையை மறந்து தனிப்பெயர் துறந்திங்
கென்பால் வருதி யென்னுள நிறைந்த
காதலை யுணர்ந்தெனைக் கைப்பிடிப் பாயேற்
பண்ணன் மகளெனும் பண்டைத் தொடர்பினை
நீக்கிநின் னுடனுறை வாழ்க்கைமே வுவனே.

இரம்மியன்: (தன்னுள்ளே) இவ்வளவு அமிர்தம் என் செவிவழிநிறைந் தது போதுமோ? அன்றேல் இன்னுந் தாமதித்து நிற்றல் நன்ருே?

சுசீலை: மலையன் என்னும் பெயரன்ருே, எங்கோத்திரத்தாருக்கு வன் கண்விளைக்கின்ற பெயராயிற்று. என்னன்பனே! நீ நின்பெயரல்லை. நீ வேறு; நின்பெயர் வேறு. மலையனென்ருலென்ன? கையா ?காலா? புயமா? முகமா? பிற உடலுறுப்பா? சண்பகமலருக்கு வேறு பெயரிட்டழைத்தாலும் வாசனை வேருமா? இரம்மியமலையன் என் னும் பெயரை நீக்கிவிட்டு வேறு பெயரிட்டழைத்தால் என்னன்ப னுடைய புயவலியும் நிறையெழிலும் அணுவளவேனும் குறைவு படுமா? என் உள்ளத்துறைவோய்! நீ நின்பெயரை விட்டொழிதி. சொல்லளவாகிய பெயரைநீக்கிவிட்டு அதற்குப்பதிலாக அடியாளை முழுதும் எடுத்துக்கொள்வாயாக.

இரம்மியன்: இன்மொழிநங்காய்!. நின் எண்ணம் நிறைவேறுக. ஏழை யேனை அன்பனென்று இன்னொருமுறை யழைப்பாயேல் என் பெயரை நீக்கிவிட்டு நீ விரும்பும்பெயரைக் கொள்ளுகிறேன்,

சுசீலை: இந்த நடுநிசியில் என்வாக்குக்கு எதிர்வாக்குரைக்கின்ற ஆடவ னுகிய நீ யாரோ?

இரம்மியன்: என்கண்ணே! என்ன பெயரினுல் யான் இன்னுனென் றென்னை உணர்த்துவனே அறியேன். யான் கொண்டிருக்கும்பெயர்

நின் செவிக்கு அல்லல்விளைக்கும் பகைமைப்பெயர். அது எழுதப்பட்டிருக்குந் தாளைத்தானும் யான் கிழித்தெறிந்துவிடுவேன்.

சுசீலை: நின் இன்மொழிநாவிருரை என்செவியில் இதற்குமுன்னும் பட்டிருக்கிறது. நீ மலைபர்குலத்துதித்த இரம்மியகுமாரனல்லையோ?

இரம்மியன்: அணங்கே! இப்பெபரிரண்டும் நினக்கு இணக்காவாயின், நான் இரம்மியனுமல்லன்; மலையனுமல்லன் என்பேன்.

சுசீலை: நீ எவ்வாறு இச்சோலையினுள் வந்தனை? மதிற்சுவரோ மிக உயர்ந்துளது; என்னினத்தார் நின்னைக் காணிற் கழிபேரின்னல் விளைப்பார்; காவலைக் கடந்து எங்ஙனம் உட்புகுந்தனை?

இரம்மியன்: காதற்கு வரம்புமுண்டோ? கற்சுவ ரொருதடையாமோ? காதற்சிறகைக்கொண்டு மதிலைத்தாண்டிப் பறந்துவந்தேன்.

சுசீலை: என் சுற்றத்தார் நின்னைக் காணிற் கொன்றுவிடுவாரென் றஞ்சுகிறேன்.

இரம்மியன்: கோதாய்! நின் இணைவிழிகள் கூற்றத்தையும் வேலையும் ஒத்தன. நின் சுற்றத்தாரது வாட்படையினும்பார்க்க நான் நினது கண்ணாகிய வேற்படையை யஞ்சுகின்றேன்.

[என் றிவ்வாறு இவ் விரு காதலரும் தம் முள நிறையன்பு வெளிப்படுமாறு உரையாடுகின்றனர். இந்நாடகத்தின் முற்பாகம் உவகைச்சுவை ததும்புவது; பிற்பாகம் அவலச்சுவை நிறைந்தது. இனிக் கதைச்சுருக்கத்தைத் தொடர்ந்து சொல்லுவாம்.]

இரம்மியனும் நண்பரும் வீதியிற் போகும்போது வழியிற்கண்ட தீவலமல்லன் வாளையுருவிப் போருக்கழைக்கிறான். தனது நாயகியினது நல்லம்மானென்றெண்ணி இரம்மியன் அவனை எதிர்க்காது பின்வாங்குகிறான். இரம்மியனைத் தீவலமல்லன் தூஷிப்பதைக் கண்ட அவனது நண்பன் மார்த்தாண்டசோழன் மனம்பொறாது வாளையுருவித் தீவலனை யெதிர்க்கிறான். தீவலன் மார்த்தாண்டனைக் கொன்றுவிட அதுகண்டு மனம்பொறாத இரம்மியன் தீவலனையெதிர்த்து அவனைக்கொல்லுகிறான். சோழன் கிள்ளிவளவன் நடந்தகாரியங்களை விசாரித்து, இரம்மியன் உறையூர் எல்லையினுட் புகுதல்கூடாதென்று கட்டளை பிறப்பித்தான்.

இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற சுசீலை நல்லம்மா ளிறந்த துய ரொருபுற மும் மணநாளிலே கணவனைப்பிரிந்ததுய ரொருபுறமுமாகத் துன்புறு கிறாள். சுசீலை மணமுடித்துக்கொண்ட செய்தியைச் செவிலித்தாயும் புரோகிதனும் அறிவாரேயன்றிச் சுற்றத்தார் பிறரெவரும் அறிந்திலர்.

இராம்மியன் உறையூரைவிட்டு வெளிச்செல்ல மனமியையாதவனாய் உலோகமாபாலனையணுகிச் செய்வ தென்னவென்று விசாரித்தான். இராஜகட்டளையைத் தவறிநடத்தல் சரியல்லவென்றும், ஆமூருக்குப் போய் மறைந்திருந்தால், தான் ஆகவேண்டிய காரியங்களை முடித்துப் பின்பு தெரிவிப்பதாகவும் உலோகமாபாலன உரைத்தான். இராம்மியன் செவிலியைக் கண்டு அவள் வாயிலாகச் சுசீலையினது துன்பநிலையை யுணர்ந்து, சுசீலைக்கு ஆறுதல் உரைத்தபின்பன்றி உறையூரைவிடுத்து வெளியேபோவதில்லையென்று நிச்சயங்கொண்டு இராப்பொழுதாயினபின் னர்க் கயிற்றாலாகிய ஓர் ஏணியைச் சுசீலையினது சாளரத்திலிருந்து தொங்கவிடும்படி செவிலியைக் கேட்டான்; அவளும் அதற் கிசைந்தாள். இரவுவருதலும் இராம்மியன் சுவரைத் தாண்டிச் சோலையினுட்புகுந்து கயிற்றேணிவழியாகச் சாளரத்தினுட்புகுந்து சுசீலையின்சயனசாலையை யடைந்தான். அன்றிரவுமுழுவதையும் அவளோடுகழித்துச் சூரியோ தயத்துக்குமுன் பிரிவாற்றாது பிரிந்த இராம்மியன் துன்பம்நிறைந்த மனத்தினோடு ஆமூரைநோக்கி நடந்தான். இஃதிவ்வாறாகச் சோழன் கிள்ளிவளவன் தனது நண்பனாகிய பண்ணனையழைத்துத் தனதுதம்பி பாற்கரசோழனுக்கும் பண்ணனதுபுதல்வியாகிய சுசீலைக்கும் மண முடித்துவைக்கவேண்டுமென்னுங் கருத்துத் தனக்கு நெடுநாளாக உண்டு என்று தெரிவித்தான். பண்ணனும் அம்மணவினைக்கிசைந்து அரசனுடைய விருப்பத்தைத் தனதுமனைவிக்குத் தெரிவிக்க, அவளுஞ் செவிலியைவிளித்துச் சுசீலைக்கு இச்சந்தோஷகரமானசெய்தியைத் தெரி வித்து அவளுடைய விருப்பத்தை யறிந்துகொண்டுவரும்படி யனுப்பி னாள். சுசீலை யிவ்விஷயத்தைக் கேள்வியுற்றுச் செய்வ தென்னவென் றறியாது தியங்கி உலோகமாபாலனிடம் புத்திகேட்க நிச்சயிக்கிறாள். இவ்வளவோடு மூன்றாஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது.

பாற்கரசோழன் உலோகமாபாலனுடையமனைக்குவந்து தனக்கும் சுசீலைக்கும் எதிர்த்துவருகிற குருவாரத்தன்று திருமணம் நடக்கப்

போகின்றதெனச் சொல்லிக்கொண்டிருக்கிறதருணத்திற் புரோகிதன் மனைக்குச் சுசீலையும் வந்தனள். பாற்கானுக்குஞ் சுசீலைக்கு மிடையிற் சில கூற்றும் மாற்றமும் நிகழுகின்றன. பாற்கான் போயினபின்னர்ச் சுசீலை தன்னிலையைப் புரோகிதனுக்குரைத்து இனிமேல் நடந்துகொள்ள வேண்டியமுறை யென்னவென்று விசாரித்தாள். அவன் அவள்கையில் ஒரு திராவகத்தைக் கொடுத்து, "அம்மா! நீ நின்வீட்டுக்குப்போய்ப் பாற்கானை மணமுடிப்பதற்குச் சம்மதித்ததாகச் சொல்லிவிட்டுச் சந்தோஷமாயிரு; நாளை புதன்கிழமை; நாளையிரவைக்கு உன் சயனஅறையிற் செவிலியோ, பிறரோ இருத்தல் கூடாது; சயனத்திற் படுத்துக்கொண்டு இப்புட்டியிலுள்ளிருக்குந் திராவகத்தைக் குடித்துவிடு; உடனே உன்னுடல் இறந்தாருடலத்தைப்போல அசைவற்று விறைத்துப்போம்; நீ இறந்துவிட்டனையென்றெண்ணி உன்னை ஈமப்புறங்காட்டுக்குக் கொண்டுசென்று தாழியிற்புதைத்துவிடுவார்கள்; சரியாக நூற்றெட்டுநாழிகைசென்றபின்பு, நீ மீட்டும் உயிர்பெற்றெழுவாய்; அதற்குமுன் இரம்மியன் வந்து உன்னைத் தாழியினின்றெடுத்து ஆமூருக்குக் கொண்டுபோய்விடுவான்" என்றான். சிசீலை மகிழ்ந்து தன்மனைக்குச் சென்று, உலோகமாபாலனுரைத்தவண்ணமே அனைத்தினையுஞ் செய்து முடித்தாள். மறுநாள், பாற்கசோழனுடைய மணத்துக்குக் குறிக்கப்பட்டதினம். சுசீலையினுடைய சயனஅறைக்குட்சென்று செவிலி பார்த்தபோது மணமகள் சயனத்தின்மேலே யிறந்துகிடப்பதாகக் கண்டாள். நற்றாய், செவிலி, சுற்றத்தார் முதலிய அனைவரும் ஐயோ! முறையோவென் றழுது துன்புறுகின்றனர். இவ்வளவோடு நான்காஞ் சந்தி முடிகின்றது.

உலோகமாபாலன் இரம்மியனுக்கு ஒரு செய்தி யனுப்புகிறான்; அச்செய்தி இரம்மியனுக்குச் சென்றசேரவில்லை. சுசீலை யிறந்துவிட்டாளென்னுஞ்செய்தி இரம்மியனுக்கு எட்டுகிறது. அவன் துன்புற்று வருந்தி, அவளோடு உடனிறப்பதற்கு நிச்சயித்து, ஔஷதம்விற்போனொருவனிடம்போய்க் கொடியநஞ் சொன்று வாங்கிக்கொண்டு, கையில் ஒரு மண்வெட்டியோடு ஈமப்புறங்காட்டுக்குச் செல்லுகிறான். ஆங்குச் சுசீலையின் உடலம் புதைக்கப்பட்டிருந்த குழியைத் தோண்டித் தாழியைக் கண்டான். அத்தருணத்திற் பாற்கசோழன் முற்பட்டு

எதிரியாகிய இரம்மியமலேயன், சுசீலையின் உடலத்தை யெடுத்தலைக் கண்டு வாளையுருவிக்கொண்டு சண்டைக்குப்போய் இரம்மியனுடைய கைவாளா லிறக்கின்றான். இரம்மியன் தனது மனைவியாகிய சுசீலை யினுடைய உடலத்தைக் கண்டு ஆறாத்துயர்கொண்டு, அழுது பிரலாபித்துத் தான் கொண்டுவந்த நஞ்சை யுண்டு, கீழேவிழுந்து இறந்து விடுகிறான். உலோகமாபாலன் தானனுப்பிய செய்தி இரம்மியனுக்குச் சென்று சேரவில்லை யென்பதை யறிந்தவுடனே யாதுவிளைந்துவிடுமோ வென்றஞ்சி, விரைந்து ஈமப்புறங்காட்டுக்குச் சென்று பாற்கரசோழனும் இரம்மியனும் உயிர்துறந்துகிடப்பதைக் காணுகிறான். சிசீலை குறிப் பிட்டநேரம்வருமுன்னரே மருந்தினாலாகிய மயக்கந் தெளிந்தெழுந்து உலோகமாபாலனைக் கண்டு, "எங்கே யென்கணவன்" என்கின்றாள். புரோகிதன் பலவாறாகச் சமாதானஞ்சொல்லச் சுசீலை, "என்கண்முன் நில்லாதே, போ" என்று சொல்லிவிட்டுப் பலதிசையும் நோக்கித் தனது நாயகனுடைய உடலத்தைக் கண்டு அவன்முகத்தில் முத்தமிட்டு, அவன்கையில் எஞ்சியிருந்த நஞ்சினையுண்டு, அவனுடைய உடைவாளை உறையினின்று கழற்றி, "இதுவே உனக்கு உரிய உறை" யென்று தனது மார்பினுட் பாய்ச்சி விழுந்து இறக்கின்றாள். பாற்கரனுக்கும் இரம்மியனுக்குஞ் சண்டைநடக்கும்போதே அதனைக் கண்ட காவலாளர் ஓடோடியும்போய் அரசனுக்கும் நகரமாக்களுக்குந் தெரிவித்தனர். அரசன், பண்ணன், மலையன, பரிசனர் முதலினோர் பலரும் ஈமப்புறங் காட்டுக்கு வந்து ஆற்றொணாத்துன்புற்று, உலோகமாபாலன்வாயினால் நடந்த நிகழ்ச்சியனைத்தினையும் அறிகின்றனர். அரசன் பண்ணனையும் மலையனையும்விளித்துப் "பார்த்தீரா நுமது பகைமையா லெய்தியபயனை" எனக் காட்டினான். அன்றுமுதல் அவ்விருவரும் மாறாநட்புப்பூண் டனர். இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.

[தொடரும்]

விபுலாநந்தர்.

புரூரவசரிதை.

[ரு அஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

காந்திமதி மாலையிடுபடலம்.

ஏகும்வேலையிலேந்தெழில்வாய்ந்தபூந்
தோகையன்னவச்சுந்தரவல்லியைப்
பாகுசேர்மொழியன்னைபணித்தலால்
வாகைவேற்கணுர்மஞ்சனமாட்டியே. (க)

தூசுமாரமுஞ்சுண்ணமும்யோசனை
வீசுசாந்தும்விரைமலர்த்தார்களுங்
காசுநாறுங்கலனுங்கவினிய
மாசிலாதவடிவினிற்சேர்த்தியே. (உ)

மதித்தநான்மறையேடுரைவாய்மையால்
விதித்தமங்கலம்யாவையும்விரைவா
யுதித்தவான்மணித்தீபமுமொண்கதிர்
பதித்தமூடனம்யாவும்பரப்பியே. (ரு)

இந்துவின்கலசத்தமுதென்னவோர்
சந்திரக்கடத்தின்னமுதுந்தனி
மூந்துகின்றகருனைமுதலிய
வந்தமாக்கறியாவுமமைத்தரோ. (ச)

ப்ாளிதச்சுருளும்பழுக்காயும்வன்
ருளசைக்கும்விசிறியுஞ்சாந்தமு
மாளியொத்தவருந்திறன்மன்னவன்
ரேளசைக்குமோர்தொங்கலும்வைத்தரோ. (ரு)

கட்டமைந்தகடியொடேங்காவுமார்
பெட்டகத்தினிற்பெய்வளைதன்னைவைத்
திட்டமுற்றமருகனுக்கீகென
விட்டெடுத்தனள்தாதியர்சென்னிமேல். (சா)

சென்னிதாங்கியேதாதியர்சேறலு
மென்னையாளுடையானெதிர்ந்தாளிதில்
அன்னமாதியமர்ந்தனவாமென
உன்னியேயெடுத்தானும்பராயினன். (எ)

தன்றனைப்பெறுந்தாய்துயர்தள்ளுவான்
மின்றிளைத்தசிறகால்விசித்தெழுந்
தொன்றுபாதலத்துண்ணமுதத்தினை
யன்றெடுத்ததுவொத்துளனாயினன். (அ)

நிறையும்வாரியுநீள்வடகுன்றமுந்
துறையினின்றதுளைமதத்தூங்கலுந்
தறையும்வானும்சரமசரங்களும்
அறையும்வன்சிறைக்காற்றினனுங்கவே. (௯)

சிறைவிசைக்கொடுசென்றனன்வன்றிறற்
பறவைநாயகனக்கிரிப்பாங்கினி
லறனலாற்றுணையின்றியளுருறும்
பொறைமனத்தவன்முன்னம்பொறுக்கென. (௧௦)

தீயவெம்பசியாலுடல்தேம்பினை
தூயவின்னமுதீந்தனன்றுய்த்தியென்
றூயவன்பொடுமாசொடுஞ்சொல்லிமேற்
போயினனப்புரவலன்போற்றவே. (௧௧)

அரிந்தமன்பரியத்திறத்தேகலும்
இருந்தசோதியெழின்மணிப்பெட்டகம்
புரிந்துசுற்றுமிலச்சினைபோக்கியே
பரிந்துநோக்கலுங்கண்டனன்பற்றிலான். (௧௨)

வேறு.

உந்துதிரைவாரியினுமும்பருலகத்தும்
தந்தவமுதைப்பழிதரத்தரணிமீதே
கந்தமலரிற்கடவுள்கட்புலன்முதற்பே
ரைந்தினுநிரப்பிடவளித்தவமுதத்தை. (௧௩)

இவ்வடிவினிவ்வளிதையிவ்வயினினெய்தச்
செய்தவர்கள்யாவர்கொலெனத்தெளியகில்லேன்
பொய்வடிவமோவினைபுணர்த்திடுதரும்றே
மெய்வடிவமோவெனவுமையமுறும்வேலை, (௧௪)

ஆடகமலர்ப்பதியினன்னமெனவன்ன
வோடரிவிழிச்சிதிகழ்பெட்டியினுளத்தே
தோடலர்மலர்த்தொடைதொடிக்கைகொடுசூட்டித்
தாடொழுதெழுந்திறைதனைத்துயர்தவிர்த்தே. (கரு)

அண்டருலகத்தமுதமாமெனவமைத்த
வுண்டியினைநின்றறுவகைச்சுவையொடூட்டி
வெண்டிரைநுரைக்கலவைதூசணிகண்மேன்மேற்
கொண்டணிசெய்தன்பினொருகொம்பரெனநின்றாள். (கசு)

அன்னபொழுதின்னுலகளந்தவனொடாரு
முன்னவனிருந்தகயிலைக்கிரியின்மூன்னத்
தென்னாடுமிசைப்பெரியயாழ்முனிதெரித்தா
னென்னவினிகழ்ந்தமணமென்னெனநினைந்தே. (கஎ)

மென்றுளபமான்மலரின்மேலவனைமேலோய்
குன்றனையசெக்கடிகிடந்தகுறையோனை
மன்றல்கமழோதிமணமாலையிடுமென்ற
தென்றுபுகலென்றுநகைசெய்தனனிசைத்தான். (கஅ)

மையுறுநிறத்தவன்வழங்குமுரைகேளாச்
செய்யுறுமலர்க்கடவுள்புன்முறுவல்செய்தே
யையுறுவதன்றவனணிப்புயவரைக்கே
பெய்வளைபுனைந்தனள்பெருந்தொடையலென்றான். (கக)

காந்திமதி மாலையிடுபடல முற்றும்.

மூவர்காட்சிப்படலம்.

என்றுநான்முகனியம்பலுங்கமலைசேரிறைவன்
நன்றுநன்றுநாங்காணுதுஞ்சென்றெனநவில
நின்றவானவர்தொழுதெழநிருமலச்சோதிக்
கொன்றைவேணியுமெழுந்தனரதிசயங்குறித்தே. (க)

விடைப்புறத்தினும்விரிசிறைக்கலுழன்வாகுவினுந்
தடத்தினிற்பயிலனத்தினும்வெண்மதாசலத்து
நடைப்பெருந்திறற்கடவுளர்சென்றனர்நறவத்
தொடைத்தனிச்சுரர்முனிவரர்முதலினோர்தொடர. (உ)

சென்றுகண்டனர்திரிகர்த்தனுயிர்த்தபூந்தெரிவை
நின்றகோலமுமன்னவனிருக்கின்றநெறியு

மன்றலார்தொடைவேய்ந்தனமுறைமையுமதியா
வொன்றும்விண்டிலர்வி திவலிப்பெருமையையுன்னி. (௩)

மாட்டடைந்திவர்க்குதவுதும்வரமெனமழுவாட்
டோட்டலங்களெட்டுடையவனுரைத்திடச்சுரிவாய்க்
கோட்டலங்கலங்கொண்டலுமறைமுதற்கொழுந்து
மீட்டமுற்றமற்றமருமிருநிலத்திறுத்தார். (௪)

கூன்றரும்பிறைவேணியுமகரவாய்க்குழையு
மூன்றுகண்களுமான்மழுக்காமுமைம்முகமுந்
தேன்றருங்குழலுமையொடுமருவிரிசெவ்வான்
றோன்றுமேனியுமாய்நின்றதொருபெருஞ்சோதி. (௫)

வளையுமாழியுமறைகளுங்கருணையுமலர்ந்த
தளைசெய்தாமரைதாங்கிமைம்முகினிறந்தயங்கப்
புளகமாமுலைப்பொறிதிகழ்மருமமும்பொலியத்
துளபமாலையுமாய்நின்றதொருபெருஞ்சுடரே. (௬)

வேதவாசமுமென்மலர்ப்பொகுட்டுமெல்லியலுஞ்
சோதிவாண்முகநான்குமெண்புயங்களுந்துலங்கச்
சீதநீர்ப்பெருங்குண்டிகைமணிவடந்திகழப்
பீதமேனியுமாய்நின்றதொருதழற்பிழம்பே. (௭)

பேதமாகியகுணங்களாற்பேதமொன்றில்லாப்
போதமாகியவொருபொருள்வேற்றுருப்புணர்ந்தே
வேதனாதியமூவராய்முத்தொழில்விரிக்கும்
ஆதிதேவர்தந்தேவரைக்கண்டனனரசன். (௮)

பொய்யிலாமறைப்பொருண்முடிவானமெய்ப்பொருளுந்
தைவராப்பெரும்பொருளொருமுப்பொருடானாய்
வையமேலெளிதாய்வெளிவரக்கண்டமன்னன்
செய்தமாதவப்பெருமையையாவரேதெரிப்பார். (௯)

கண்டமன்னவன்கரதலஞ்சிரதலங்குவிய
விண்டவாய்மொழிகுழறிடவிழிகணீர்வார
வுண்டவன்பினாலுடனடித்திடவந்தவுடையோர்
புண்டரீகமென்பதமிசைதொழுதிவைபுகல்வான். (௧௦)

வேறு.

களியானபேதவழியாறொடாறுகடையொன்றிநின்றகடலிற்
குளியாதபோதமுடையாரெதிர்ந்துகுறுகின்றதன்மையலவே
வொளியாகிநாதவெளியாகிஞானவுருவாய்நிறைந்தபரமே
தெளியாதசிந்தையெளியேனையாளவெளிவந்துநின்றசெயலே. (௧௧)

சத்தங்கலந்துசகலங்கலந்துதுரியங்கலந்தசொருபத்
தத்தங்கலந்தமுதியோர்கடன்மையறியேனையஞ்சலெனவே
சத்தங்கலந்தபொருளாய்மறப்புநினைவுந்தவிர்ந்ததலையோர்
சித்தங்கலந்ததிருவங்கலந்துவெளிவந்துநின்றசெயலே. (கஉ)

மும்மேனியானபொறியொன்றிடாதுபொறியைந்தினூடுமுயல்வுற்
றம்மேனிகழ்ந்தமனனங்கொடாததமியேனையஞ்சலெனவோ
விம்மேனிநாமமிதுவென்பதொன்றுமில்லாதசோதியிடையே
செம்மேனிகொண்டுகருமேனிகொண்டுவெளிவந்துநின்றசெயலே. (கஙு)

மயல்கொண்டகாமமுதலானமாயைவலையூடுநின்றுமறுகுந்
துயர்கொண்டுபோதவடிவானதன்னையளியேனெதிர்ந்துதொழவோ
வயலொன்றுமின்றியகிலங்கள்யாவுமருளாலியற்றியருளுஞ்
செயலின்றிநின்றதிருவங்கலந்துவெளிவந்துநின்றசெயலே. (கச)

ஒருவிக்கலந்தபுவனுதிபூதவுருவாயதற்குளுருவாய்
மருவிக்கலந்தகுணகாரணத்தின்வகையாய்நினைக்கும்வகையோ
கருவிற்கலந்துகரணத்தினின்றுகழியாமல்மூத்தியெனுமத்
திருவிற்கலந்துமனமாரவிங்ஙன்வெளிவந்துநின்றசெயலே. (கரு)

என்னுமொழிந்துபலகால்விழுந்துதொழுவோனைவேலையெறிநீர்
மைந்நாறுகண்டனுமையாளையாதுவரமீதுமென்னமகிழ்வாற்
பின்னுமளிப்பதொருபாதமின்றுபிரிவித்தபாதமொடுசெங்
கைந்நாமளித்துமெனவங்குதித்தகரமோடுபாதகமலம். (கசு)

வேறு.

பக்கநின்றவக்கருநிறமணித்திருப்பரமன்
சக்கரப்படையொன்றளித்தனன்புவிதழைப்ப
விக்கணத்தினிலிவ்விடைசெல்கெனிலாங்குப்
புக்குநின்றதோர்விமானமற்றயனருள்புரிந்தான். (கஎ)

வங்கவாரிதிமகிதலத்தியாவரேயெனினுந்
திங்கள்வெண்குடைப்புரூரவாவெனும்பெயர்செப்பிற்
பங்குவானவனுறுகுருப்பெருவரம்பகர்ந்தார்
கொங்குவிம்மியகொழுமலர்த்தருநிழற்குழுவோர். (கஅ)

ஆயநல்வரமளித்தவர்பின்னருமவனை
நேயமோடுநீநினைத்தவையாவையும்பெற்றுப்
போயமாதொடுமைந்தரைப்பெறுகனப்புகன்று
தூயவெள்ளியங்கிரிமுதற்ஞெடரவுன்னுதலும். (கக)

மூவர்காட்சிப்படல முற்றும்.

இளங்கீரனார்.

இப் புலவர் புறத்தில் பொருந்தில் இளங்கீரனார் எனவும் கூறப் படுவர். 'சோழரது உறந்தைப் பெருந்துறை'யினைப் பாராட்டிக்கூறிய வருள் இப் புலவரும் ஒருவர். இவரது குறுந்தொகைச்செய்யுள் (116) நாலடியுடையதாய்ப் பூரிக்கோ [குறுந்தொகைதொகுத்தோர்] என்பவர் சிற்றெல்லை யாகக் கொண்ட தந்நூல் அளவுக்கு ஓர் காட்டாக இருக் கின்றது.

இவர் கபிலர்காலத்துக்குச் சிறிது பிற்பட்டவர் எனினும் அப் புலவர் இயலை மேம்பட உணர்ந்து அவரை, "செறுத்த செய்யுட் செய் செந் நாவின்–வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" என ஏத்தி யுரைப்பர் [புறம்–53].

இவர் சேரநாடு சென்று 'சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை||யின் அளிமைபெற்று அவன் விளங்கில் என்ற நாட்டுக்கு நேர்ந்த இடுக் கணைத் தீர்த்துப் பகைவரைவென்றதை அறிந்து அரசவாகை பாடினர். [புறம். 53] அச்சேரன் சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி யொடு பிறிதோர்முறை போர்தொடுத்தான. அக்காலை சோழனை வெற்றி பெற்றான். அதற்குக் காரணம் தேர்வண்மலையன் என்ற சிற்றரசன் துணைவலியாகச் சோழன்படையுடன் இணைந்து போர்புரிந்தமையே யாகும். [புறம். 125].

இப்புலவர் மேற்கூறிய சேரன் யுத்தகளத்து வாச்சியம் வாசிப்போர் ஆம்பற்பண்ணொடு பாடுவதைச் சுட்டியுள்ளார். [நற்றி - 113] † கல் லாச்சிறார் நெல்லிமரநிழலருகே வட்டாடுவது கூறுகின்றார். நற்றி. 3] †

அகத்தில் இவர் "மகளிர் கணவரைப்பிரிந்தநாளைச் சுவரிற் கோ டிட்டு எண்ணுவர் என்னும் வழக்கத்தினைக் குறிப்பதுடன் [அகம்-351] பேராந்தை "குத்திப்புதை–சுட்டுக்குவி" என ஒலிக்குமென்றும் உரைப்பர். [அகம்-19]. பாலைத்திணைச்செய்யுட்களே இவர் வாக்கில் பெரிதும் பயில்கின்றன.

இவர் பாடியனவாக அகத்தில் மேற்காட்டியபாடல் [19. 351] இரண்டும் புறத்தில் [53] ஒன்றும் குறுந்தொகையில் [116] ஒன்றும் நற்றிணையுள் [3. 62. 113] மூன்றும் ஆக ஏழுபாடல்கள் கிடைத் துள்ளன.

|| இம்மாந்தரஞ்சேரல்இரும்பொறையே ஐங்குறுநூறு என்னும் நூலைத் தொகுப்பித்தோன். அந்நூலைத் தொகுத்தோர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

† இச்செய்யுட்களை எயினந்தைமகனார் இளங்கீரனாரொடு இணைத்து உரைப் பர் நற்றிணைப் புத்துரைகாரர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௩அ௬௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

199. ஊடு பேர்விடம் இன்றி, ஒன் றும் வகை
நீடும் மா கடற் றனை நெருங்கலால்,
ஆடல் மா மத ஆனைச் சனகர் கோன்
நாடெ லாம் ஒரு நன்னகர் ஆயதே!

இ - ள். (ஒரு சேனைக்கும் மற்றொரு சேனைக்கும்) இடையே நிலை பெயரும் இடமில்லாமல் எல்லாச்சேனைகளும்) ஒரே சேனையாம் என்று சொல்லும்) படி, பெரிய கடல்போலும் சேனைகள் நெருங்குதலினால் சனகரது (விதேக) நாடு முழுதும் (அதன் நகர்களுக்கிடையே வெற்றிட மில்லாமற் சனநெருக்கமுற்று) ஒரு நகரம் போன்றது.

ஊடு - ஊடே - இடையே. பேர்வு இடம்- நிலைபெயர்தற்குப்போதிய இடம். ஆடல் - வெற்றி.

[சனகர் முழுஅன்புடன் இழிந்தோர் உயர்ந்தோர் எல்லாருக்கும் உயர்ந்த சம்மானம் செய்தார்: அதற்குமேற் செய்தல் அசாத்தியமாதலால் அவர் அன்பு இழிந்தார்க்கும் இராமனுக்கும் ஒத்தது.]

கோலங்காண்படலம்.

சீதாதேவியை அலங்காரம் செய்ததைக் கூறுவது.

(கோலம்—அலங்காரம். காணல்—செய்தல்.

[தசரதர், தேவியரோடு, சிங்காதனத்தில் இருந்தபோது, வசிட்டர் சனகரை நோக்கிச் "சீதாதேவியைத் தருவிக்க" வென, அவர் அயல் நின்ற மாதரை ஏவ, அவர் சென்று தாதியர்பாற் சொல்ல, அவர்கள் சீதாதேவியை அலங்கரிக்கலானார்கள்.]

200. அமிழ்இமைத்துணைகள்கண்ணுக்கணியென அமைக்குமாபோல்
உமிழ்சுடர்க்கலன்கள்நங்கையுருவினைமறைப்பதோரார்

அமிழ்தினைச்சுவைசெய்தென்ன, அழகினுக்கழகுசெய்தார்:
இமிழ்திரைப்பரவைஞாலம்ஏழைமையுடைத்துமாதோ !

இ - ள். (கண்களை மூடி அவற்றின் அழகை மறைக்கும்) இமைகளை (ப்பிரமதேவர்,) கண்களுக்கு அழகென (உடம்புகளைச் சிருட்டிக்குங் காலத்தில்) அமைக்குமாறுபோல, (த் தாதியர்,) ஆபரணங்கள் சீதாபிராட்டியின் திருமேனி (யை மூடி அம் மேனி) அழகை மறைப்பதை அறியாராய், (இன் சுவை அனைத்தும் குறைவின்றி நிரம்பிய) அமிழ்தத்தை அதிகச் சுவை பெறுத்த முயலலால், அதன்சுவை கெடுமென்றறியாமல், அதிக) ச் சுவையுறச் (செய்ய முயன்று சுவை கெடச்) செய்தாற்போல, (பிராட்டியின் பரிபூரண சௌந்தரியத்தை அதிகப்படுத்த முயலலால் அது கெடுமென்புறறியாமல், அவருடைய) அழகுக்கு (அணிகலங்களால் அதிக) அழகு (செய்ய முயன்று அவ் அழகைக் கெடுத்தல்) செய்தார்கள்: (இவ்வாறு செய்த தாதியரும் அவர் செயல் தக்கதெனக் கருதிய மற்ற மக்களும் அடங்கிய) உலகத்தார் அறியாமையை உடையார் ! (இவர் அறியாமை இருந்தவாறு என்னே !).

அமிழ்தல் - ஆழ்தல் - தாழ்தல். அமிழ் இமை - (கண்ணை மூடி அதன் அழகை வெளிப்படாமற் செய்யும்படி) தாழ்கின்ற கண்மடல். துணை - இரண்டு. 'துணைகள்' என்பதிற் 'கள்' அசை (சிந்தாமணி). அணி - அழகு. அமைக்குமாபோல் - அமைக்குமாறுபோல. உமிழ் சுடர்க்கலன் - வீசுகின்ற ஒளியையுடைய ஆபரணம். உரு - உடம்பு; அழகு. சுவைசெய்தல் - சுவையுறச்செய்தல். இமிழ் திரைப் பரவை ஞாலம் - ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் (சூழ்ந்த) உலகம். உலகம் உலகத்தாரைக் குறித்தது. ஏழைமை - அறியாமை. உடைத்து - உடையது.

இமை தாழுங்காலத்துக் கண்ணை மூடிக் கண்ணின் அழகு புலப்படாமற் செய்தல் குறிக்கச், சும்மா 'இமை' என்னாது. 'அமிழ் இமை' யென்றார்.

அமிழ்தினும் அதிகச் சுவையுடைய பொருள் யாதேனுமொன்று இருந்தாலன்றே, அப் பொருளைக்கொண்டு அமிழ்தத்தை அதிகச்சுவையுறச் செய்தல் கூடும்; அப்படிப்பட்ட பொருள் ஒன்றும் இல்லாமையால், அமிழ்தினைச் சுவையூட்ட முயல்வாருளரேல், அவர் அறிவில்

லாரே: அவ்வாறே சீதாதேவியின் அழகுக்குக் குறைந்த அழகுடைய அணிகளைக்கொண்டு அவர் 'அழகினுக்கு அழகு செய்தார்' அறிவில்லாதாரே.

'அழகினுக்கு' என்பதற்கு, 'அழகு வேறு தான் வேறென்றில்லாமல், அழகே தானாக வுள்ள சீதைக்கு' என்றும் பொருள் கொள்ளலாம். இப் பொருளை, இலக்குமி தேவியே சீதாதேவியாவ ளென்பதும் 'இலக்குமி' என்ற பதத்துக்கு 'அழகு' என்ற பொருளுண்மையும் வலியுறுத்தும்.

இக் கவி, கழிபேருவகை விளைக்கும் கவிகளுள்ளே சிறந்தவற்றுள் ஒன்று. இதனில் எடுத்தாளப்பட்டுள்ள உவமான உவமேயங்கள் ஒன்றுக்கொன்று மிகச் சிறந்த பொருத்த முடையனவாய் நினைக்குந்தோறும் நிரம்ப இன்பம் பயப்பனவா யுள்ளன.

201. கண்ணன் தன் நிறம், தன் உள்ளக்கருத்தினை நிறைத்து, மீதிட்
டுண்ணின்றுங்கொடிகள் ஓடி உலகெங்கும்பரந்ததென்ன,
வண்ணம்செய்கூந்தற்பாரவலயத்து, மழையுட்டோன்றும்
விண்ணின்றமதியின்மென்பூஞ்சிகழிகைக்கோதைவேய்ந்தார்.

இ - ள். இராமபிரானது (கரிய) நிறம், சீதாதேவியின் மனத்தை (இடமாகக்கொண்டு, தன்னால் அதனை) நிறையச் செய்து, (அதனுள் அடங்காமல்) மேலிட்டு, (எழுந்து, வளர்ந்து, எண்ணிறந்த உரோமக்) கொடிகளாக ஓடி எங்கும் பரவியதென்று சொல்லும்படி, (அந்த) நிறத்தை ஒத்த (நிறத்தையுடைய) கூந்தலிலே, மேகத்தில் (இடைவெளியில்) தோன்றும் ஆகாயத்தில் (நிலையாக) நின்ற சந்திரன் போலப், பூமாலையை (த் தாதியர் வட்டமாக)ச் சூட்டினார்கள்.

கண்ணன் - கிருட்டிணன்; அந்த அவதாரமெடுத்த திருமாலின் மற்றோரவதாரமான இராமனைக்குறித்தது. உள்ளக் கருத்து—மனம். உள்ளம் என்பதில் 'அம்' பகுதிப்பொருள் விகுதி. உள்ளமும் கருத்தும் ஒருபொருட் பன்மொழிகள். மிகுந்து பரந்ததென்பது குறிக்க, உலகெங்கும் பரந்த தெனப்பட்டது. செய் உவமச்சொல் (சிந்தாமணி). கூந்தற்பாரம் - அளகபாரம். பாரம் - சுமை. வலயம் - வட்டம். கூந்தற் பாரவலயம், சுமையும் வட்டமுமான கூந்தலென்பதைக் குறித்தது. மழை - மேகம். சிகழிகை - ஒருவகைப் பூமாலை.

'கண்ணன்தன் நிறம்நன் உள்ளக் கருத்தினை நிறைத்து மீகிட் - டுள்நின்றும் கொடிகள் ஓடி உலகெங்கும் பாந்ததென்ன - வண்ணம் செய் கூந்தல்' என்றது பாரதத்தில், அருச்சுன சந்நியாசியின் காவிவேட்டியை "உள்ளடங்கிய காமவெங் கனல்புறத் தோடிக் - கொள்ளை கொண்டன கூறை" என்றது போல்வது காண்க. [கூறை - ஆடை - காவிவஸ்திரம்]

[வில்லை முறித்த வீரர், தாம் காதலித்தவரோ, அல்லரோ வென்ற சந்தேகத்தால் அலைப்புண்ட சீதாதேவியின் மனம் ஊசலாடல் போல அசையும் குழைகளைத் தாதியர்கள் அவர் காதுகளிலே அணிந்தார்கள்.]

202. கோன் அணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனம் இல் கலன்கள் தம்மில் இயைவன அணிதல் செய்தார்:
மான் அணி நோக்கி னார் தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தான் அணி ஆன போது, தனக் கணி யாது மாதோ?

இ - ள். திருமால் (கையில்) அணிந்த சங்கு (தேடி) வந்து குடியிருந்தாற் போன்ற (சீதாதேவியின் அழகுடைய) கழுத்திலே (வேலைப் பாடு) குறைபா டில்லாத அணி (வகை) களில் பொருத்தமானவைகளை (த் தாதியர்) அணிந்தார்கள்: (மங்கிலியப்) பெண்கள் கழுத்துக்கெல் லாம் சீதாதேவி (அணிகல அரசாம் தாலி) அணியாயிருக்கும்போது, அவருக்கு அணி (யாகத்தக்கது) யாது ? (ஒன்றுமில்லையென்றபடி)

கோன் - எப்பொருட்கும் இறைவன்; இங்கே விட்டுணுவைக்குறித் தது. ஈனம் - குறைபாடு. ஈனம் இல் அணிகள் - பொற்கொல்லர் தொழிற் றிறமைக் குறைவின்றி அமைத்த ஆபரணங்கள். மான் அணி நோக்கினார் - மான் கண்கள் போலும் கண்களை உடையார். அணி எது கையில் நிற்றல்பற்றிப் போலும் எனப் பொருள் பட்டது. 'அணி' 'அழகு' எனக்கொண்டு, 'மான் கண்ணின் அழகையுடைய கண்ணுடை யார்' என்றும் பொருள்கொள்ளலாம்.

சங்கு, திரண்டு உருண்ட வடிவம், வரிகள், ஓசை இவைகளை உடைத்தாயிருத்தலால், மாதர் கழுத்துக்கு ஒப்பென்பர்.

சீதாதேவி இலக்குமியின் அவதாரமாதலாலும், மங்கிலியம் இலக் குமியின் அம்சமாய் இலக்குமியின் பெயராகிய 'திரு'வைத் தனக்கும் பெயராகக் கொண்டிருத்தலாலும் "மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத் துக் கெல்லாம்-தானணி யான போது தனக்கணி யாது மாதோ?" என நயம்பட உரைத்தார்,

[சீதாதேவி தனங்களின்மீது அணிந்த முத்துமாலையை விண்மீன்களைக் கொண்டு கோத்த மாலை யென்னலாமோ? இளம்பிறை யென்னலாமோ? பற்களின் ஒளி பாய்ந்த தென்னலாமோ? யாதென்னலாம்? (விண்மீன் - நட்சத்திரம்)

உண்டென்று ஆத்திகரும் இல்லையென்று நாத்திகரும் கூறும் பரம்பொருள்போல, 'உண்டு' 'இல்லை' யென்னும்படி உள்ள இடை வருந்தும்படி சீதாதேவிக்குத் தாதியர் அணிகள் அணிந்தார்கள்.

இரண்டு நீலமலர்கள் ஒரு தாமரைமலர்மேல் மலருமானால், அதனில் மூன்றாம்நாட்பிறை தோன்றுமானால், அந்தப் பிறை நிலவில் ஒரு விண்மீன் உளதாமானால், அவ் விண்மீனைப்போல, இரண்டு கண்கள் விளங்கும் முகத்தின்மேல் ஒளிரும் நெற்றியிலே, திலகத்தை, மானுட மடந்தையர் நாககன்னியர் தேவமாத ரெல்லாருக்கும் திலகம் போன்ற சீதாதேவிக்குத் தாதியர் தரித்தார்கள்.

சீதாதேவிக்கு அலங்காரஞ் செய்த சேடியர், மலரினது கள்ளுண்டு வண்டுகள் மயங்குதல்போல, அத்தேவியாரது அழகுக் கள்ளைக் கண்வாயால் மனவயிறு தேக்கிட உண்டு, ஆசை வெறி கொண்டு, சொற்குழறித், தடுமாற்ற முற்று (அவரைக் கண்ட ஆடவர் படும் பாடு பட்டு) நின்றார்கள்; இஃது ஆச்சரியமன்று: ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் உடல்கள் இருவேறு தன்மையினவே யன்றி, மனங்கள் ஒரேதன்மையின வன்றோ?

ஒவ்வொரு பெண்ணிடத்தும் ஒவ்வோரழகு, சிறப்பாக விரும்பத்தக்கதாகக் காணப்படும்; அவ் அழகுகளெல்லாவற்றையும் ஒருசேர ஒரு பெண்ணிடத்துக் கண்டால், அவ்வாறு கண்டதனாலாய ஆசையை ஆற்றும் ஆற்றலுடையார் ஆர் உளர்? ஒருவருமில்லை: ஆதலால், மற்றைத் திதிச் சந்திரன்கள்போலன்றி, ஒரு கலைக் குறைவுமில்லாமல் எல்லாக் கலைகளும் பூரணமாக நிரம்பிய பௌர்ணமிச் சந்திரனைப் பார்த்தல் போலப், பிறபெண்கள்போலன்றி, ஓரழகுக் குறைவு மில்லாமல் எல்லா அழகுகளும் சேர நிறைந்த சீதாதேவியை மாதர்கள் பார்த்து அடங்காப் பெருங்களி கொண்டார்கள்.]

203. வல்லியை உயிர்த்த நில மங்கை, ‘இவள் பாதம்
மெல்லிய, உறைக்கும்’ என அஞ்சி வெளி எங்கும்
பல்லவ மலர்த் தொகை பரப்பினளெனத், தன்
நல் அணி மணிச் சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

இ - ள். சீதாதேவியைப் பெற்ற பூமிதேவி, ‘இவள் பாதங்கள் மென்மையானவை, (தரையால்) உறுத்தப்படும்’ என்று அஞ்சி (ச் சீதாதேவி செல்லும் தரை) வெளியெங்கும் (பலநிறமுடைய) தளிர்கள் மலர்களைப் பரப்பினளென்று சொல்லும்படி, அவருடைய ஆபரணங்களின் (பலவருண) மணிகளின் (பன்னிற) ஒளிகள் பரவ (அவர், தசரதாதியர் இருந்த மண்டபத்துக்குப்போக,) நடக்கலுற்றார்.

வல்லி—கொடி. கொடி போல்வாள்—சீதை. உறைக்கும்—உறுத்தும்; உறுத்தப்படும் என்று பொருள் கொள்ளநின்றது. பல்லவம்—தளிர். தொகை—கூட்டம்—திரள். தவழ்ந்திட—பரவ.

[தம் நடைக்குத் தோற்று, அன்னங்கள் ஓடிப்போகக்கருதிப் பறந்து எழுந்து பின்பு பயத்தால் ஓடமாட்டாமல் விழுதல்போலச், சாமரைகள் விரிந்து எழும்பித் தாழும்படி இரட்டப்படாநிற்கக், கலாபம் அணிந்த சீதாதேவி கலாப மயில் போலச் சென்றார். (கலாபம்—மாதர் அரையில் அணியும் பதினாறுமணிக்கோவை; மயிற்றோகை.)

மண்ணுலகத்தும் மற்றைய உலகங்களினும் உள்ள மாதர்களுக்கெல்லாம் கண்மணியென்று சொல்லத்தக்க சிறந்த அழகுடைய சீதாபிராட்டியைப் பார்க்க ஆசைகொண்டு இராமபிரானது குலமுதல்வனான சூரியன் விண்ணினின்றிறங்கினாற்போன்றஒளிமிகுந்தவிதான நிழலின் கீழாகச் சென்று சீதாதேவி, தசரதாதி அரசர் கூடியிருந்த மண்டபத்தை அடைந்தார்.

சிருட்டிகர்த்தாவாற் செய்யப்பட்ட பிற மாதருக்குக் கிரந்தகர்த்தாக்களாற் செய்யப்பட்ட பிற கிரந்தங்கள் சமானமாகத், தம்மைச் சிருட்டிப்பாரின்றிச் சுயம்புவாகப் பூமியினுள்ளிருந்து புறப்பட்டுத் தோன்றிய சீதாபிராட்டிக்குச் ‘செய்யாமொழி’ யாய்ச் சுயம்புவான வேதமே சமானமாகச் சொல்லலாம்.

அப்படிப்பட்ட சீதாதேவி வந்துசேர்ந்த மண்டபத்திலே, அவர் திருமேனியின் சௌந்தரியத்தைக் கண்ட ஆடவர் பெண்டி ரனைவரும், அந்தக் காட்சி யானந்தத்தில் ஆழ்ந்து, அம் மண்டபத்தில் எழுதப்பட்டிருந்த சித்திரப் பாவைகள் போல, இமைகொட்டாமலும் மூச்சுவிடாமலும் இருந்தனர்.]

201. அன்னவளை, அல்லளென, ஆமென, அயிர்ப்பான்,
கன்னி அமிர் தத்தை எதிர் கண்ட கடல் வண்ணன்,
உன் உயிர் நிலைப்பதொர் அருத்தியொ டுழைத்தாண்
டின் அமிர் தெழக் களி கொள் இந்திரனை ஒத்தான்.

இ - ள். அப்படிப்பட்ட சீதாபிராட்டியை (அவர் மண்டபத்துக்கு வருமுன், தாம் கன்னிமாடத்திற் கண்டு காதலித்தவள்) அல்லளென்றும் (காதலித்தவள்) ஆமென்றும் ஐயப்பட்டுக்கொண்டிருந்த இராமர், கன்னி (யர் சமூகமான பாற்கடலிலே தோன்றிய) அமிர்தமான அவரை எதிரே காணப் பெற்றவர் (ஆனபோது), உயிர் (இறந்துவிடாது) நிலைக்கச்செய்ய வேண்டுமென்ற ஆசையாற் (பாற்கடலை வருந்திக் கடைந்து) உழைத்து, அந்தப் பாற்கடலிலே அமுதம் உண்டாகக் (கண்டு) களிப்படைந்த இந்திரனை ஒத்தார்.

அயிர்த்தல் - சந்தேகித்தல். உன்னுதல் - கருதுதல். உன்உயிர் - (அருமையான பொருள்கள் யாவற்றினும் அருமையானதாகக்) கருதப்பட்ட உயிர். நிலைப்பது என்ற தன்வினை நிலைப்பிப்பது என்ற பிறவினைப் பொருள்தந்து நின்றது. ஓர் - ஒப்பற்ற அருத்தி-விருப்பம். உழைத்து-வருந்திவேலைசெய்து. ஆண்டு - அவ்விடத்தில்; முன்பின் தொடர்ச்சியாற் பாற்கடலை உணர்த்தியது.

இந்திரன் அமிர்தம் பெற்று உயிர் நிலைக்கப்பெற்றான்; அவ்வாறே இராமர் சீதாதேவியைப் பெற்று உயிர் நிலைப்புற்றாரென்பது கருத்து.

[மேற்கூறியவாறு சீதாதேவி எதிரே வரக் கண்ட இராமர், 'கன்னிமாடத்தை விட்டு என் அகத்துள்ளே குடி புகுந்திருக்கின்றவள் என் அகத்தேயன்றிப் புறத்தேயும் உள்ளாளோ' என்று எண்ணினார்.

'நாம் செய்த தவத்தால் திருமால் இராமராகவந்தார்; ஆதலால் இலக்குமியே சீதாபிராட்டியானார்' என்று வசிட்டர் எண்ணி மகிழ்வுற்றார்.

'நான் எத்தனையோ காலம் உலகமுழுதும் அரசாளும் செல்வத்தை அடைந்திருந்தேனென்றாலும், அச்செல்வத்தின் அதிதேவதையாகிய) இலக்குமியை என் மருமகளாகப் பெற்றதனால், இன்றுதான் அடைந்தேன்' என்று தசாதர் எண்ணினார்.

தாம் குடியிருந்த தாமரைக் கோயிலை வெறுத்துச் சனக மன்னரது கோயிலிற் குடிபுகுந்த சீதாதேவி, முனிவரைத் தொழுது, பின்பு தசரதரைத் தொழுது சனகருக்கு அருகே யிடப்பட்டிருந்த ஆசனத்திலே அமர்ந்தார். (கோயில் - தேவாலயம்; இராசமனை.)]

205. அச்சென நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்,
பச்சை மலை ஒத்த படி வத்தடல் இராமன்,
நச்சுடை வடிக் கண் மலர் நங்கை இவ ளென்றால்,
இச் சிலை கிடக்க, மலை ஏழையும் இறானோ!

இ - ள். (ஆதனத்தில் அமர்ந்த சீதாதேவியை அழகிற் சிறந்த மாதரனைவருக்கும்) அச்சுப் போல்வாரென் றெண்ணிய விசுவாமித்திரர் (ஒன்று) நினைந்தார்: (அது யாதெனில், வில்லை வளைப்பதற்குப் பரிசாகவுள்ள) இவர் இலக்குமிதேவியென்று தெரிந்திருந்தால், இராமர், இந்தவில் (ஒன்றை மட்டுமோ ஒடித்திருப்பார்! இது - சிவன் வில்லாகிய மேருமலை - ஒன்று) கிடக்கட்டும், (சத்த குல பருவதங்களென்ற) மலைகள் ஏழையுமே ஒடியாது விட்டிருப்பாரோ! (என்பது.)

அச்சு - உயிர்; மூலரூபம்; ஆதாரம் (சங்க அகராதி). அச்சென - (மற்ற அழகிற் சிறந்த மாதர், உடல்போல, அவ் வுடலுக்கு) உயிர் போல்வாளென்று; (எந்த மூல ரூபத்தினின்று மற்றெல்லா அழகிய மாதருடைய ரூபங்களும் பெறப்பட்டனவோ அந்த) மூல ரூப மானவளென்று; பிறமாதருடைய அழகுக்கெல்லாம்) ஆதாரமான (அழகுடைய) வளென்று: கம்பர்காலத்து அச்சியந்திரம் இருந்திருந்தால், 'அச்சென' என்பதற்குப் 'பிறமாதரெல்லாம் கையெழுத்துப் போல, இவள் அச்செழுத்துப் போன்றாளென்று' என்றும் பொருள் கூறலாம். முதல் அந்தணன் - முதன்மையுடைய முனி, விசுவாமித்திரன். படிவம் - வடிவம். அடல் - வலி. நச்சு - விருப்பு. உடை - உடைய; உடைய என்பதன் யகரம் கெட்டு நின்றது. நச்சு உடை - (கண்டார்) விரும்புந்

தன்மையுடைய. வடி - மாவடு. வடிக்கண் - மாவடுவை யொத்த கண்களை யுடைய. மலர் நங்கை - மலர் மகள் - இலக்குமி. 'இவள் மலர் நங்கை என்றால்' என இயைக்க.

"அச்சு என நினைத்த - (உலகத்துக்கு அச்சாணி போன்றவ ளென்று மதிக்கப்பட்ட. அச்சு ஆகுபெயர்" என்றும், "இருனே (என) நினைந்தான் என்று முடிக்க." என்றும், "கண் மலர் நங்கை இவள் - கண் மலர்களையுடைய பெண் இத்தன்மையள்" என்றும் உரைகள் உள.

வசிட்டர் 'மலர் புல்லும் மங்கை யிவளாம்' என்றும், தசரதர் 'இன்று திரு எய்தியது எனக்கு' என்றும், விசுவாமித்திரர் 'மலர் நங்கை இவள்' என்றும் மூவரும் ஒருவர்போலச் சீதாதேவியை இலக்குமிதேவியாகக் கருதியதாகக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

[வில்லை ஒடித்தவர், "இளைய கோவொடும் - பராவரும் முனியொடும் பதிவந் தெய்தினன்" என்று நீலமாலை என்ற தாதி, முன்பு சொல்லக் காதாற் கேட்டு, அநுமானப் பிரமாணத்தால், தாம் காதலித்தவரோ அல்லரோ வென்ற சந்தேகம் பெரும்பாலும் நீங்கலுற்றிருந்த சீதாதேவி, பிரத்தியட்சப் பிரமாணத்தால் அச் சந்தேகம் முழுதும் நீங்குதற் பொருட்டு, அவரை அகத்தேயன்றிப் புறத்தேயும் காண விரும்பித் தம் கைவளையல்களைத் திருத்தும் பாவனை செய்து, அந்த வளையல் களைப் பார்த்தல் போல, இராமரைக் கடைக்கண்ணால் நோக்கினர்: நோக்க வே பலகோடி தேவர்கள் பங்கிட் டுண்ட அமிழ்தத்தை வேறொருவ ரோடும் பகிராமல் ஒருவர் தாமே முழுதும் உண்டாற்போல, உடம்பு பூரித்தார்.

சீதாதேவி, தம் கருத்திற் குடிகொண்ட கள்வரே வில்லை முறித்தவ ரென்று அகக் கண்ணாலன்றி முகக்கண்ணாலும் அறிந்தபோது, அஞ் ஞானம் நீங்க மெய்ஞ்ஞானம் ஓங்கப் பெற்றவர்கள் அடையும் முத்தி யின்பத்தை ஒத்த இன்பத்தை உற்றனர்.

தசரதர் விசுவாமித்திரரை நோக்கிக் "கல்யாணத்துக்கு நன்னாள் எந்நாள்?" எனக் கேட்க, அவர் "நாளைத்தினம் நல்லதினம்" என்றார்.

அப்போது எல்லாரும் எழுந்து அவரவரிருப்பிடம் அடைந்தார் கள். சூரியனும் அத்தமன மடைந்தான்.]

கடிமணப்படலம்.

கல்யாணத்தைக் கூறுவது.

[சனகரால் இனிமையாக உபசரிக்கப்பெற்றுத் தேவபோகங்கள் போன்ற போகங்களை நுகர்ந்து, தசரதர் முதலாகத் தாழ்ந்தோர் இறுதியாக வுள்ள எல்லாரும், உடம்போடு தேவ லோகத்தை அடைந்தவர்கள் போன்றார்கள்.]

206. தேடரும் நலத்த புனல் ஆசை தெற லுற்றார்,
மாடொர் தடம் உற்றதனை எய்தும் வழி காணார்,
ஈடழி வுறத் தளர்வொ டேமுறுவ ரன்றே:
ஆடக வளைக் குயிலும் அந்நிலையள் ஆனாள்.

இ - ள். நீர்வேட்கையால் வருத்தப்படலுற்றவர்கள் ஒரு தடாகத்தின் பக்கத்திலே சேர்ந்தும் அதனை அடையும் வழியைக் காணாதவர்கள் (ஆனபோது) வலியழிந்து தளர்வடைந்து ஏக்கமுற்று மயங்குவார்களன்றோ. (அவ்வாறே, இராமர் அருகே உறப்பெற்றும், அவரை அடையப்பெறாமையால்) சீதாதேவியும் அவர்கள்தன்மையினரானாள்.

தேடரும் - தேடிக்கிடையாத. நலத்த—நன்மையுடைய. புனல் - நீர். தெறல்—வருத்துதல். மாடு—பக்கம். தடம்—தடாகம். 'ஓர்தடமாடு' எனக் கூட்டுக. ஈடு—வலி (புறப்பொருள்வெண்பாமாலை). ஏமுறுதல்—ஏக்கமுற்று மயங்குதல் (ஷை). ஆடகம்—தங்கம். வளை—வளையல். வளைக்குயில்—வளையல் அணிந்த, குயில்ஓசைபோல் இனிய மொழியுடையாளாகிய சீதை.

[சீதாதேவி, 'இராமரைக் கண்டவுடனே, அவர் அடியைச் சார்ந்து, பின்னே சென்று, அவரைவிட்டுப் பிரியாதிருந்து, அவர் திரும்ப வந்தபோது கூடவந்து, மீண்டும் அவருடன் போய்விட்டது என்மனம், நெடுநாள் அவரோடிருப்பது, என்னோடு ஒருபோது தங்கலாகாதோ' என்றும், 'இரவோ விடிகின்றதில்லை, கண்ணோ துயில்கின்றதில்லை, பகலோ வருகின்றதில்லை, மயலோ அகல்கின்றதில்லை. உயிரோ ஒழிகின்றதில்லை' என்றும், 'கடலே! துறையிலே வளைகளைச் (-சங்குகளை,

வளையல்களைச்) சிந்துகின்றாய்! எழுகின்றாய்! விழுகின்றாய்! புரள்கின்றாய்! அலறுகின்றாய்! உறங்காய்! நீயும் என்னைப்போல மன்மதபாணத்துக்கு அஞ்சியகன்னிகையோ!' என்றும் பலவாறு புலம்பி இராவெல்லாம் வருந்திக்கொண்டிருந்தார்.

இராமர், 'யான் கன்னிமாடத்தே கண்டு, முடிவில்லாத காதல் கொண்டு, கண்ட கண்கள் துணையாக மனத்தின்கண்ணே சித்திரித்து வைத்துப் பின்பு சனகர் கொலுமண்டபத்திற் கண்டும் ஒரு பெண்ணின் ஆகம் எங்கும் விளங்கும் அழகை முழுதும் காணமுடியவில்லை: ஆகாய மெங்கும் பரவும் மின்னலைக் காண்போர் அதன் ஒரு பகுதியையே காண்பர்; அவர் அதனை எத்தனைமுறை காணினும் முழுதும் காண்பதெங்ஙனம்?' என்றும், 'என்மனமே! என்னை ஒருபோதும் நினையாய்! நீ என்பால் வருதற்கு வழி நீண்டதா யிருக்கின்றதோ! நீ யார்? ஏன் வந்தாய்? என்று உன்னை வினவாதவர்பால் விடைபெற்றாயில்லையோ! அவரோடு போன நீயும், அவரைப்போல, என்னை மறந்தாயோ!' என்றும், 'விடம், பாம்பின் பல்லை யிடமாகக்கொண்டிருந்தது முன்நாளிற் போலும்; இந்நாளில், அது என் கண்ணையும் கருத்தையும் கணப்பொழுதும் நீங்காதவராது கண்ணையே இடமாகக்கொண்டிருக்கிறது' என்றும் பின்னும் பலபலவும் நினைந்துகொண்டு அன்றை இரவைக் கழித்தார்.

இரவு விடியத் தன்குலத்துதித்த இராமரது திருமணங்காணவந்தான்போலச் சூரியன் தோன்றினன். அப்போது வீடுகளிற் பூமாலைகள் தொங்கவிட்டும், வாசல்களில் வாழை கமுகுகள் நட்டும், திண்ணைகளில் முளைப்பாலிகை வைத்தும், வீதிகளில் தோரணங்கள் கட்டியும், மதில்களின்மேல் ஆகாய மளாவக் கொடிகள் நட்டும், தேர்கள் யானைகள் குதிரைகளை அலங்கரித்தும், மற்றும் பலவாறும் மிதிலைநகரம் திருக்கலியாணத்துக்காகச் சிங்காரிக்கப்பட்டது.

மாதர்களும் மைந்தர்களும், சிறந்த உடைகள் உடுத்தும், உயர்ந்த அணிகள் அணிந்தும், நறிய பூமாலை புனைந்தும், பரிமள தயில சந்தன களபங்கள் பூசியும், அலங்காரம் செய்துகொண்டார்கள்.

அந்தணர் அரசர்கள் பாவாணர் யாழ்ப்பாணர்கள் பாடகர் பாடகிகள் நாடகர் நாடகிகள் நெருங்கிக்கூடினார்கள்,

திருமணங் காணவந்த தேவர்களும் தேவமாதர்களும், தேவலோகத்தி லிருக்கின்றேமோ, பூலோகத்திலிருக்கின்றேமோ, என்று நினைக்கும்படி, மிதிலாநகரம் அமராவதியை ஒத்திருந்தது. (அமராவதி-தேவேந்திர நகரம்)

இராமர் கலியாணநாள், இந்திரன் முடிசூடுநாள் போன்றது.

பொன்னாலும் மணிகளாலும் புனைந்த கல்யாணமண்டபத்துக்குத் தசரதர் தேவியருடன் வந்து ஆதனத்தில் அமர்ந்தார். முனிவரும் அரசரும் சனகரும் கிளைஞரும் அவரவர் மனைவியர் சகிதராய் வந்திருந்தார்கள்.

எல்லாரும் எல்லாப் பொருள்களும் இருக்கப்பெற்றதனால், அம் மண்டபம், பிரமாவின் அண்டத்தையும் திருமாலின் வயிற்றையும் ஒத்தது.

இராமர், கடல்நீர் கங்கைநீர் முதலிய தீர்த்தங்கள் கலந்த நீராடிப் பாற்கடல் கருங்கடலைச் சூழ்ந்ததுபோல வெண்பட்டுவேட்டி கட்டிக் கருமேகத்தின்மேல் வெண்ணிலாப் பரவியது நேரச் சந்தனம் பூசிக் கருங்கடலில் வெண்மதி தோன்றுதல் நிகர மயிர்முடியில் மலர்மாலை சூடினார்.]

207. ஏதம் இல் இரு குழை இரவு நண்பகல்
காதல் கண் டுணர்ந்தன கதிரும் திங்களும்
சீதை தன் கருத்தினைச் செவியின் உள் உறத்
தூது சென் றுரைப்பன போன்று தோன்றவே.

இ-ள். குற்றமற்ற குண்டலங்கள்,—(முறையே) பகலிலும் இரவிலும் சீதாதேவியின் காதலைக் கண்டறிந்தவைகளான சூரியனும் சந்திரனும் அத்தேவியாரது கருத்தைக் காதிலே உள்ளே உறும்படி தூது சென்று சொல்வன போன்று தோன்ற இராமர் காதுகளிற் குண்டலங்கள் பூண்டார்).

[அவர், 'நவக்கிரகங்களுள் ஒன்றாகிய சந்திரனைச் சிவன் சூடினார், நாம் மற்றெல்லாச் சுடர்களையும் ஒருசேர அணிவோம்' என்று அணிந்தாற்போல, வீரபட்டத்தை நெற்றியிலணிந்து திலகம் தீட்டினார்.

சீதாதேவியின் பல்வரிசை தம் மனத்துள் நிறைந்து மார்பில் வெளிப்பட விளங்கினாற்போல முத்துமாலை புனைந்தார்.

தன்னில் இழைக்கப்பட்ட வயிரவெண்மணிகளும் பதுமராகச்செம் மணிகளும் முறையே படப் பொறிகளும் கோபத்தினாற் சிவந்தகண்க ளும்போலத், தான் பாம்புபோல, விளங்கிய வாகுவலயத்தை மலைபோலும் தோளிலே மந்தரமலையைச் சுற்றிய வாசுகியைப் போல அணிந்தார்.

கருமேகத்திலே பலநிறங்கள்படைத்த வானவில்விளங்குதல்போலக் கரிய திருமார்பிலே பலவருண மணிமாலையை வனைந்தார்.

மார்பில் தரித்திருந்த முத்துமாலையின் வெள்ளொளி பரவியது போல, வெண் பட்டுத்தரீயம் மிலைந்தார்.

இனி உலகை அளப்பதெப்படி யென்று தடுக்கும் தடைகள் போன்ற சிலம்புகளை அணிந்தார்.

இவ்வாறாக, இராமர், அலங்காரபூரிதராய்ச், சூரியனது தேர் போலும் தேரிலே சூரியன்போல ஏறி, அருணன்போலப் பாதர் தேர் செலுத்த, இலக்குமணனும் சத்துருக்கனும் இருபக்கமும் நின்று சாமரை யிரட்டச் சென்றார். செல்லும்போது, எல்லோரும் பூமழை பொழிந்தார்கள்; சுண்ணப்பொடி தூவினார்கள்; காசுகளும் தூசுகளும் வீசினார்கள். தூசு - வஸ்திரம்]

208. வள்ளலை நோக்கிய மகளிர், மேனியின்
எள்ளரும் பூணெலாம் இரிய நிற்கின்றார்,
உள்ளன யாவையும் உதவிப் பூண்டவும்
கொள்ளையிற் கொள்கெனக் கொடுக்கின் றாரினே.

இ-ள். உள்ளபொருள்களெல்லாவற்றையும் கொடுத்து (ப் பின்பும் கொடுக்கும் ஆசைதூண்டக் கொள்வாரைநோக்கி, இன்னும் அதிகமாகக் கொள்வீராகஎன்று(குதூகலித்துக்)கூறிக்கொடுக்கும்கொடையாளர்போல, இராமரைக்கண்ட மாதர்கள்(காம பரவசராகி மெலிவுற்றதனால் தம் உடலி லணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் கழன்று நீங்க நின்றார்கள்.

எள் அரும் பூண் — பழிப்பில்லாத ஆபரணங்கள் — குற்றமற்ற ஆபரணங்கள். இரிய — நீங்க. பூண்ட — பூண்டவை — ஆபரணங்கள். கொள்ளை - மிகுதி. 'கொள்ளையில் கொள்க' என்பதற்குக் கொள்ளை யடித்தலிற்(பறிக்கப்படுபவர் பூண்டிருக்கும்பூண்களையும் கைக்கொள்ளல்) போலக் கொள்க' என்றும் பொருள் கொள்ளலாம்.

[தேரிலே செல்லும் சூரியன் மேருமலையை அடைதல்போலத் தேரிற் சென்ற இராமர் கல்யாண மண்டபத்தை அடைந்து, அங்கிருந்த முனிவரைத் தொழுது, தசரதரைப் பணிந்து, அவர் பக்கத்தில் இட்டிருந்த ஆதனத்தில் அமர்ந்தனர்] (தொடரும்.)

வெ. பு. சுப்பிரமணிய முதலியார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டு விழா.

சங்கத்து நிகழ்ச்சியுரைப்போர் எழுதுகிறார் :—

இச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டுத் திருவிழா, நிகழும் ரக்தாக்ஷி வருஷம் புரட்டாசி ரு. ௬ (செப்டம்பர் 20, 21)ஆம் நாட்களில், சங்கக்கொட்டகையில், சென்னை வளர்ச்சிநெறி அமைச்சர் திரு. திவான்பகதூர், கனம் T. N. சிவஞானம்பிள்ளையவர்கள்தலைமையில் மிகுசிறப்பாக நிகழ்ந்தது. அதன் சுருக்கம் வருமாறு :—20உ சனி மாலை ஒருமணி முதலே விழாவிற்கென்றே அமைக்கப்பெற்றுப் பல்வகை அணிகளுடன் விளங்கிய கொட்டகையில், சங்கஉறுப்பினர்களும், சங்கஅன்பர்களும் ஆகிய புலவர்கள், செல்வர்கள், மாணவர்கள், அரசியல் முதன்மையர்கள், நாட்டாண்மை நகராண்மைக்கழகத்தினர்கள் முதலிய ஆயிரக்கணக்கினர் கூடி நிறைந்திருந்தனர். இரண்டுமணிக்குச் சங்க உறுப்பினர், அன்பர், மாணவத்தொண்டர் முதலிய நூற்றுக்கணக்காயினர் இன்னிசைக் கருவியும், மாணவர்கள் வாழ்த்தொலியும் இனிதொலிக்க, அவைத்தலைவரவர்களை, அவர்கள் தங்கியிருந்த பெருந்திருவர் V. A. வாண்டையாரவர்கள்மாளிகையிலிருந்து அழைத்து வந்தனர். வழிநெடுகப் பல்வகை வளைவுகளில் அமைச்சரைப்பற்றிய புகழுரைகளும், வாழ்த்துரைகளும் சிறக்க அமைந்து திகழ்ந்தன. அவைத்தலைவர் அவையை நெருங்கியபோது கடலென வாழ்த்தொலி மல்கியது. தலைவர் உயரிய இடத்து அமரவே, விழாநிகழ்ச்சி செவ்வி தின் நிகழத்தொடங்கியது. கடவுள்வாழ்த்து, தமிழ்த்தாய்வாழ்த்துகள் இனிது பாடப்பெற்றன. தெள்ளிய இனிய செந்தமிழ்ப் பாக்களால் ஆய சங்க வரவேற்பினை, சங்கத்தலைவர்க்காகச் சங்க அன்பர், திரு. இராமசாமிவன்னியர் அவர்கள் மிக இனிமையாகப்படிக்க, அதனைச் சங்கத்தலைவர் அவைத்தலைவருக்கு அளித்தனர். சங்கமாணவச்சிறுவர்களும் ஓர் இனிய வரவேற்புப் பாடி அளித்தனர். இவையிரண்டும் மற்றோர்பகுதியில் வெளிவரும். சங்கஅமைச்சர், பெத்தாச்சிவள்ளல்

திருவுருவப்படம், ஓர் இனிய செந்தமிழ்வாழ்த்து முதலிய அடங்கித் திகழும் சங்க அறிக்கையைச் சுருக்கிப் படித்துமுடித்தனர். வரவேற்புக்கள், அறிக்கைகள் எல்லாம் அவையோர்க்கு வழங்கப்பெற்றன. சங்கத்துத் தேர்ச்சி (பரீட்சை) யில் முதன்மையில்நின்ற மாணவர் இருபதின்மருக்குமேலாயவர்க்குப் பலநூல்கள் பரிசில் அளிக்கப் பெற்றன. நளவெண்பாவியாசப்பரிசாக ஓர் வெள்ளிப்பதக்கம் உரத்தநாடு போர்டு (ஐஸ்கூல்) உயர்தரப்பள்ளிக்கூடமாணவர் நவநீதம் என்பார்க்கு அளிக்கப்பெற்றது. பின்னர் அவைத்தலைவரவர்கள் மிகவும் ஆராய்ச்சியிலும் பழக்கத்திலும் கண்ட பலபொருள்களைத் தொகுத்தெழுதி வந்திருந்ததாய அரிய மூன்னுரையைத் தெளிவாகப் படித்தனர். அதன் பின்னர் விரிவுரைகள் தொடங்கின. சங்கம் பள்ளிக்கூடத்தைச் சார்ந்த இருமூன்றாண்டுச் சிறுவன் பாலறுவாயன், பாலறாவாயர் ஆகிய ஞான சம்பந்தர் ஞானப்பாலுண்டது என்பதுபற்றி ஓர் மெல்லுரையாய விரிவுரை மிழற்றினன். அதன்பின், தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பலவழியாலும் முயன்றுவருபவராகிய திரு. S. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் B.A., L.T., தமிழ்நாட்டின் முன்னேற்றம் என்பதுபற்றி, தமிழ் நாட்டின் முற்கால பிற்கால நிலைகளை அவையோர் எண்வகை மெய்ப்பாடுகளும் அடுத்தடுத்தடைய இனிது எடுத்துரைத்தார்கள். அதன்பின்னர், தென்னாட்டுப் பெரும்புலவர்களுள் ஒருவராய பண்டித மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள், சுந்தரர் என்னும் பொருள்பற்றி, அப்பெரியாரின் பெருமையையும் அவர்தம் தெய்வத்திருப்பாடற் பெருமையினையும் தமிழ்நூல் பலவற்றினும் துருவிஎடுத்துள்ள தமது புலமையும் அவையோர்மகிழ்வும் வெளிப்பட நன்கினிது மொழிந்தார்கள். முடிவில், அடுத்தநாள் காலை எட்டு மணிக்கு மீண்டும் அவை கூடும். பெத்தாச்சி வள்ளல் புகழ்நிலயம் (நூல்நிலயம்) திறக்கப்படுவதோடு, முடிபுகள் (தீர்மானங்கள்) சிலவும் நிகழுமென அவைத்தலைவரவர்கள்கூறத் தமிழ்த் தாய்வாழ்த்து கடவுள்வாழ்த்துக்கள் நிகழ ஆண்டுவிழாவின் முதல்நாள் இனிது நிறைவுற்றது.

இனி, விழாவின் இரண்டாநாள் ஞாயிறு (21-9-24 புரட்டாசி ரு) காலை ஐந்து நாழிகைக்கு ஒரு பெருங்கூட்டம் கூட, அன்பர் பல்லோர் வழக்கம்போல் இசைக்கருவிகள் மாணவத்தொண்டர் வாழ்த்துப்பாடல்கள் ஆய ஒலிமுழக்கத்தோடு அவைத்தலைவரவர்களையும், நூல்நிலயம்

திறந்துவைக்கும் Sir. மு. சித. முத்தையச்செட்டியாரவர்களையும் திரு. V. A. வாண்டையாரவர்கள் மாளிகையிலிருந்து அழைத்துவந்தனர். இவ்விரு தலைவர்களும் அவையோர் மகிழ்வொலியொடு அவைத்தலைமை யிடத்தமர்ந்தபின், ஓர் இனிய வரவேற்புச்செய்யுளைச் சங்கத்தலைவர்க்காக திரு. இராமசாமிவன்னியரவர்கள் இனிது படிக்க, அதனைச் சங்கத் தலைவர், திரு. Sir. முத்தையச்செட்டியாரவர்கள்பாற் சேர்ப்பித்தனர். உடனே எல்லோரும், பெத்தாச்சி புகழ்நிலயம் இருக்கும் இடத்திற்குச் செல்ல, அங்கே திரு. முத்தையச்செட்டியாரவர்கள் தமது அருமைத் தம்பியாரது பெரிய திருவுருவப்படத்தைக் கண்டு சிறிது கலங்கித் தெளிந்து நூல்நிலயத்தைத் திறந்தனர். அப்போது பெத்தாச்சி வள்ளலாரின் நண்பர்களில் ஒருவரும் சங்க உறுப்பினருமாகிய திரு. குருமூர்த்திப்பிள்ளையவர்கள் அவ்வள்ளலார் தம்பாற் கூறியிருந்த சில உண்மையுரைகளை அமைத்தெழுதிய பாட்டொன்றைப்படித்துத் தந்தனர். முடிவில், திருவாளர் செட்டியாரவர்கள் உருக்கமும் சங்கத்தின் அன்பும் ததும்பி வெளிப்படச் சின்மெல்லுரைகள் கூறினார்கள். பின்னர் விழா நிகழும் கொட்டகைக்கு யாவரும் வந்தமர்ந்தனர். இவ்வளவில் பின்னர்க் குறிக்கும் சில முடிபுகள் நிறைவேறிய பின் அவைத்தலைவரவர்களும், செட்டியாரவர்களும் வேறுசில அலுவல்கள் குறித்து வெளியே ஏகிவர நேரிட, அவைத்தலைவரவர்கள், தெனனாட்டு இருமொழிப் பெரும்புலவராகிய மு. கதிரேசச்செட்டியாரவர்களைத் தலைமைதாங்கி விழாவை நடாத்தச்செய்து, திரு. முத்தையச்செட்டியாரவர்களுடன் விடைகொண்டனர். அதன்பின் சங்கத்து மற்றோர்மாணவன் 'குமணன்' வரலாற்றினை உருக்கந்தோன்ற எடுத்துரைத்தனன். இப்பால், பண்டிதர். தண்டாயுதபாணிக்காடவராயரவர்கள் உயிர்வருக்கமாலையென்னும் ஓர் செய்யுள் நூலைப் பாடிமுடித்தனர். அதன்பின் சங்கநூல்நிலயப் பார்வையாளர், பண்டிதர் சா. சிதம்பரஉடையாரவர்கள் தமிழ்வளர்ச்சி என்பதுபற்றிச் சிறியஉரை ஒன்று நிகழ்த்தினர். திருவாளர் கதிரேசச்செட்டியாரவர்கள் முன்னுரையாலும் இடையுரைகளாலும், முடிவுரையாலும் பல அரிய பொருள்கள்வெளிப்பட இனிதுகூறி, அவையை மகிழ்ச்சிக்கடலில்நின்று இன்பவமிழ்துணணச்செய்தனர். இக்காலையில் முடிந்தமுடிபுகள், 1. அரச நன்றியறிவித்தல், 2. பெத்தாச்சிவள்ளலார் காலஞ்சென்றமைக்கு அவையோர் எய்திய துயரினை அன்னார்சுற்றத்தார்க்கறிவித்தல்; 3. சங்கத்தே,

சென்றஆண்டுகளிற்செய்துள்ளமுடிபுகள் பயன்பெறுமாறு தமிழ்நாட்டுச் சில்லாக்கள்தோறும் தக்காரைக் குறித்து ஓர் கழகம் நாட்டி வேலை செய்யத் தொடங்கல்; 4. சித்தர்மருத்துவத்தினை ஆயுர்வேத முதலிய வற்றினும் முதன்மையளித்துப் புரக்கவேண்டுமென அரசியலார் முதலி யோரை வேண்டுவதோடு, சித்தர்வைத்தியமுறையினைப் போற்றிவரும் பெரியோர்க்கு நன்றியறிவித்தல்; 5. தமிழிற் சிறந்த பாடநூல்களை எழுதுவோர்க்குப் பொருளுதவிசெய்ய, நாட்டாண்மை, நகராண்மை, அர சியற் கழகங்களைவேண்டல் என்பனவாம். பின்னர், வழக்கம்போல் தமிழ்த்தாய்வாழ்த்து, கடவுள்வாழ்த்துக்களோடு காலைவிழா இனிது நிறைவுற்றது.

பிற்பகல் 2-மணிக்குப் பெருங்கூட்டம் கூடியது. அவைத் தலைவ ரவர்கள் விழாவிடம் எய்தி மகிழ்ச்சிபொலி ஆர்ப்ப, உயர் இடத்தமர்ந் தனர். கடவுள்வாழ்த்து, தமிழ்த்தெய்வவாழ்த்துக்கள் இனிது நிகழ்ந்தன. சங்கம் நிறுவிய துங்கன் ஆகிய திரு. இராதாகிருட்டினனார் சேய் மெய்ப்பொருள்நாயனார்வரலாற்றை எடுத்தியம்பியது வியக்கத் தக்கதாகவிருந்தது. சங்க மாணவனாகிய தங்கவேலு என்னும் இன் னிசைவல்லான், குலசேகராழ்வார்வரலாற்றினை, இடையிடையே இன் னிசைப் பாடல்கள் விரவ எடுத்தியம்பியது யாவரும் மெச்சத்தக்கதா யிருந்தது. கோனார்பட்டியிலிருந்து வந்திருந்த (இளைஞராகிய) பி. மு. பி. சுப்பிரமணியஞ் செட்டியார் என்பார், அறம் என்னும் ஓர் அரிய விரிவுரைசெய்தனர். இப்பால் திருச்சிராப்பள்ளி, P. T. ஸ்ரீநி வாச ஐயங்கார் அவர்கள் (M.A., L.T.,), தமிழகமும் நாட்டுவரலாறும் என்பதுபற்றித் தமிழ்நாட்டின் தொன்மை உயர்வை, வரலாற்று ஆராய்ச்சி வழியான், எடுத்தியம்பி அவையை மகிழ்வித்தார்கள். பின் னர், திருநெல்வேலி, R. P. சேதுப்பிள்ளையவர்கள் தேனொழுக்கென இயன்ற செந்தமிழ்நடையில், சிலப்பதிகாரக்கதைநிகழ்ச்சியை இடை யிடையே செய்யுளைக்காட்டி அரிய விரிவுரையொன் றியற்றினார்கள். அதன்பின்னர் இருமொழிப்புலவராய கதிரேசச்செட்டியார் அவர்கள், ஆளுடையபிள்ளையார் என்பதுபற்றித் தமிழுலகம் யாங்கணும் அறிந் துள்ள தமது விரிவுரைச்சிறப்பு வெளிப்பட ஓர் அமிழ்தமழையன்ன விரிவுரை நிகழ்த்தினர். முடிவில், அவைத்தலைவரவர்கள் விழாநாட்களில் நிகழ்ந்த விரிவுரைகளின் சிறப்பினை உரியவாறு பாராட்டித் தமது

தமிழ்த்தாய் அன்புபற்றித் தாம் செயத்தகும் கடமைகளையெல்லாம் செய்வதாகக்கூறியதோடு, தமிழின் மேம்பாடுகுறித்து ஒவ்வொருவரும் தம்தம்கடமையை ஆற்றிவரவேண்டித் திருவருளைச் சிந்தித்து அமர்ந்தனர். பின்னர், சங்கஅமைச்சர், அவைத்தலைவர்கள் விரிவுரையாளர்கள் இன்னிசைப்பாடல்வல்லார்கள் விழாநிகழ்ச்சிக்கு உரிய உதவியாளர்கள் அவையோர் முதலியோர்க்குச் சங்கநன்றியையும் வாழ்த்தையும் இனிது எடுத்துக்கூறி, மாலைசூட்டல், பூங்கொத்து அடகு கொடுத்தல் முதலியவற்றினொடும், தமிழ்த்தாய்வாழ்த்து, கடவுள்வாழ்த்துக்களோடும் விழா இனிது நிறைவுற்றது. நலம்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்துப்
பதின்மூன்றும் ஆண்டுத் திருவிழாவில் தலைமைதாங்கிய
சென்னைமாகாண வளர்ச்சிநெறிஅமைச்சர் திருவாளர், திவான்பகதூர்
க்னம், T. N. சிவஞானம்பிள்ளை, B A., M.L.C., அவர்களுக்கு
ஷை சங்கத்தார் கூறிய நல்வரவு.

பொன்மேவு நெல்வேலி புரிதவத்தின் பயனைப்
மண்மீது தமிழன்னையார் மாண்புறுநன மகனைப்
எந்நாளு முயர்சைவத் திருந்துறையின் எழிலாய்
கண்ணாகுங் கலைத்துறைசேர் சிவஞானக் கன்றே!
கவினியஇவ் வவைவருக! சிவஞானக் களிறே! (க)

பொறைபாலும் நிறைபாலும் பொங்கரவை யணிந்த
இறைபாவான் திருவடியை பேத்திபுளம் போற்றும்
முறையாலும் நினைநேர்வர் முழுதுலகும் இலராக்
குறையாமை வளர்செல்வச் சிவஞானக் குன்றே!
குலவியஇவ் வவைவருக! சிவஞானக் கோவே! (உ)

அரசாள்வார் நெறிதன்னை அன்னவரோ டுலகோர்
பரவுறுமா உளபடிகள் பற்பலவும் ஏறித்
தெருளுறுதி வான்பகதூர் செப்புகன மாண்பும்
பெறலருஞ்சீர் பிறவுங்கொள் சிவஞானப் பேராய்!
பெறுபுகழிவ் வவைவருக! சிவஞானப் பேறே! (௩)

வேறு.

மன்னன் செங்கோ லதுவோச்சும் மாண்பார் அவையின் அமைச்சாய
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாரே;
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாமை
அண்ணல்! எங்கள் சிவஞான அன்பே! நின்பால் அறிந்தாமே! (௪)

பொங்கும் சான்றோர் அரசவையோர் போற்றும் அமைச்சாம் பேறுற்றுத்
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிளையாரே;
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிளையாமை
எங்கள் தலைவ! சிவஞான எந்தாய்! நின்பால் ஓர்ந்தாமே! (௫)

மங்காச் சீர்த்திச் சான்றோர்கள் மாணும் ஆட்சி நிலைதன்னால்
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவரே;
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவது
துங்கன் எங்கள் சிவஞானத் தோன்றல்! நின்பாற் றோன்றுவதே! (௬)

வளமலியும் பொருணிலையில் மாணமை மயங்கிடினும்
உளநிறையன் பர்மிகுவ தொருகரந்தை யுறுசங்கம்;
உறுசங்கம் இதுவென்றே உற்றனையிவ் வோங்கவையம்
வருமெங்கள் சிவஞான வள்ளால்! நீ வாழியவே! (௭)

புலமையினர் சிலரேனும் பொருளர்பலர் இலரேனும்
வளமையெனும் உளமுடையார் வாய்கரந்தை வளர்சங்கம்;
வளர்சங்கம் இதுவென்றே வந்தனையிம் மாவவையம்
உளமகிழும் சிவஞான உயர்வோய்! நீ வாழியவே! (௮)

வருதேவர் பலராக, மலிபுகழார் தமிழ்த்தேவெம்
ஒருதேவென் பார்மலியும் ஓர்கரந்தை ஒளிர்சங்கம்;
ஒளிர்சங்கம் இதுவென்றே ஓர்ந்தவையம் நேர்ந்தனையால்
எழிலன்பிற் சிவஞான எந்தாய்! நீ வாழியவே! (௯)

ஷை சங்கத்து மாணவர் கூறிய வாழ்த்துப்பா.

மன்னுநெல் வேலிசெய் யுந்தவன்—ஒரு
மாணுருக் கொண்டுபி றந்தவன்—அந்தத்
தன்னிக ரில்லா உமைபங்க னூர்திருத்
தாளிணைக் கன்புமி குந்தவன்

மாசில்வே ளாண்குல மேபினன்—சென்னை
மாகாண மந்திரி யாயினன்—இந்தக்
காசினி தன்னிலே வாழ்பவர்க் கென்றும்
கருணை புரிந்திடுந் தாயனன்

சீர்கொள் சிவஞானப் பேரினன்—செம்மை
சேர்புகழ் மல்கிய வரினன்—மிகும்
பேர்கொள்தி வான்பக தூர்ப்பட்ட மேவிப்
பெருமைகொ ளும்மலர்த் தாரினன்

எங்கரந் தைத்தமிழ்ச் சங்கமே—தலை
யேற்றத மிழ்க்கலைச் சிங்கமே—இவன்
மங்கள மோங்கிப்பல் லாண்டுகள் வாழ்கஇம்
மாநிலத் தில்மிகத் துங்கமே!

605. வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கும்
நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வவ்வுத லாமோ வவர்தாய்மார்
செங்கோல னல்ல னென.

606. வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

607. நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
ஊரிரே யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

608. கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா ளணிக்கதவ மன்னை—யடைக்குமேல்
ஆயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

609. புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னாக நின்றலரு நன்னாடன்—என்னாகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தான்
என்கொ லிவரறிந்த வாறு.

610. ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—னாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

611. கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ றோழி—நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

612. வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல செல்லா மறிய—வொருகலாம்
உண்டா யிருக்கவவ் வொண்டொடியாண் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

(605—612) முத்தொள்ளாயிரம்.

613. இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெல்லாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

614. காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்ற னீங்குமோ—போராட்டி
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

615. மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டு நமகுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதால்
உலகங் கிடந்த வியல்பு.

616. மாலை யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை யமரர் கடைவேலை—வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையா ளிவளை வளை.

சோழன்.

617. அன்னா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்;
வடீஇ யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
வீடான் றுறந்து விடல்;
பாவா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
தாவான் றுறந்து விடல்.

618. திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

619. நீணிலத் தார்வளவ னின்மேலா னூர்கவும்
நாணின்மை யின்றி நடத்தியால்—நீணிலங்

(613—615) முத்தொள்ளாயிரம். (616) தண்டி 93 மேற். (617) யாப். வி. 66; வீரசோ. யாப். 15 மேற். (618, 619) முத்தொள்ளாயிரம்.

கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

620. சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிற்றுங் கண்.

621. கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி னுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

622. என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனலுடன் வவ்வினான்—என்னே
அரவக லல்குலா யாறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

623. கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணும்—இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

624. தானைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ—யானை
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

625. தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரால்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

626. அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பராற் றோழி—பிறையிறந்த
அங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு.

627. அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாநம்
என்னை யழியுஞ்சொற் சொல்லுவர்—நுண்ணிலைய

(620—622) முத்தொள்ளாயிரம். (623) ஷை; தொல். பொரு. 472 மேற். (624—627) முத்தொள்ளாயிரம்.

தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

628. புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணேன்—நிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோல் வளவனை யானிதன்றோ
கண்ணாரக் கண்டறியா வாறு.

629. செங்கான் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

630. குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்று ளன்னை—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்
துளங்குநீர் மாமருட்டி யற்று.

631. அலங்குதார்ச் செம்பிய னூடெழிற்றோ ணோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மே லெழுந்த நெருப்பு.

632. ஊட லெனவொன்று தோன்றி யலருறாஉங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

633. நாணொருபால் வாங்க நலனொருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பே போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

634. வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே
மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
றோளழுவந் தோன்றத் தொழுது.

635. பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிகள்—நீயோ
களிபடுமால் யானைக் கமொன்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

(628—635) முத்தொள்ளாயிரம்.

636. நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

637. சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்புந்—திருமான
ஆரந் தழுவு தடந்தோ ளகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு.

638. நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—துறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ.

639. இகன்மதமால் யானை யனபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவால்—நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.

640. கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவராற்
பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்போர்த்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.

641. நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு [1]நிலைதளரா நீர்மை—யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

642. மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத்—தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலுங்
கழியா கழியா தரவு.

643. முற்பற்றி னாரை முறைசெயிற் றானென்னைக்
கைப்பற்றக் கண்டேன் கனவினுள்—இப்பெற்றி

---

(636) முத்தொள்ளாயிரம். (637) தண்டி. 38; (638) ஷை. 74; வீரசோ. அலங். 29 மேற். (639) ஷை. 62; வீரசோ. அலங். 26. (640) ஷை; ஷை. 27. (641) வீரசோ. அலங். 29; தண்டி. 73. [1]நிறைதளரு. (642) தண்டி. 93. (643) தொல். புறத். 86.

தன்னைத் தனக்கே முறைப்படி னென்செய்யும்
பொன்னம் புனனாட்டார் கோ.

644. அங்க மிலாத வனங்கன் [1]றலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தர்—தங்கோன்
நிலையார்த் தொடையதுல னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடந்தான் மால்.

(கூத்தன்மாணுக்கனும் அம்பிகாபதியும் பாடியது.)

645. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்னமென்மகள் கண்ணுறங்கிலள் கையணைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டுநின்
ருவுறங்கு புகாரசஞ்சல வஞ்சமென்ன வடுக்குமே.

(அம்பிகாபதி பாடியது.)

646. ஏகா வடமென் னிருகொங் கையின்மேல்
ஆகா வடமா னதறிந் திலையே
த்யாகா பரணு திசையா னைகளின்
பாகா பராச பயங்கரனே.

(கூத்தர்பாடியது.)

647. வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டென்பேதை பெரிய மதியு மிழந்தாளே.

(புகழேந்திபாடியது.)

648. பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததெனச்
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே ராச குலதிலகா [லே.
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் விழிவே

649. என்று பெறுவேன்யா னீசன் திருமுடிமேற்
சென்று விளையாடுந் தீபமே—என்றுஞ்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னியக ளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

பாண்டியன்.

650. பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்று ரிருவ ரவருள்ளும்

(644) தண்டி. 102. இலக். வி. 695. [1]ளமர்புரியும். (645, 646) தமிழ்நா. 132, 133. (647-649) தனிப்பா. (650) தொல். பொரு. 471; யாப். வி. 62.

பொன்னோடை நன்றென்றா ணல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.

651. வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே;
எனவாங்கு—
துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் [1]துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே.
அதனால்—
செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே.

652. வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
ஊர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப்போந்தான்
கூர்பணிய வேற்றானைக் கொற்கையார் கோமானே.
அவற்கண்டு,
பூமலர் நறுங்கோதை புலம்பலைப்ப நறுங்கொண்டைத்
தாமலர்க்கண் மடவார்க்குத் தொல்பகையே யன்றியுங்
காவலர்க்குப் பெரியதோர் கடனாகிக் கிடவாதே.

653. செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு.

654. எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாறன்—உலாஅங்காற்
பைய நடக்கவுந் தேற்றாயா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து.

655. போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
வூரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

(651) யாப். வி. 86; வீரசோ. யாப். 12. இலக். வி. 735; [1]தொலைப் புண்டாங். (652) யாப். வி. 86. (653—655) முத்தொள்ளாயிரம்.

656. ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்துகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

657. குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்
ஆபுகு மாலை யணிமலையிற் றீயேபோல்
நாடறி கவ்வை தரும்.

658. வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

659. மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிருள்
என்னுயிரு மெண்ணப் படுமாயின்—என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு.

660. தானேற் றனிக்குடைக் காவலனுற் காப்பதுவும்;
வானேற்ற வையக மெல்லாமால்—யானோ
எளியனோர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாறன்
அளியானே லன்றென்பா ரார்.

661. களியானைத் தென்னன் கனவில்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தேன்
என்காண்பே னென்னலால் யான்.

662. கார்நறு நீலங் கடியகத்து வைகலும்
நீர்நிலை நின்ற [1]தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

663. அறிவாரார்.........பெண்டிரே மாகச்
செறிவார் தலைமே னடந்து—மறிதிரை
மாட முரிஞ்சு மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

(656-661) முத்தொள்ளாயிரம். (662) ஷை; யாப். வி. 512 [1]பயன் கொல்லோ. (663) முத்தொள்ளாயிரம்.

உ திருமயம்
மு. நா. மு.
4-1-26

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி ஆடு ஐப்பசிமீ [பகுதி கஉ.
Vol. XXII. October-November-1924. No. 12.

சென்னை வித்யாஇலாகா மந்திரியும்,

சென்னைச் சருவகலாசங்கத்துப் புரோசான்ஸலருமான

கனம்பொருந்திய ஸ்ரீமான்

ஸர். பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருஷக்கூட்டத்து

வித்வன்மகாஸபையில் அக்கிராசனபீடத்திருந்து

செய்த பிரசங்கம்*.

(:0:)

நான் முக்கியமாய் யோசிக்கும் விஷயம், எந்தவிதத்தில் இது போன்ற வித்வ சங்கங்களைச் சருவகலாசாலையோடு ஒத்துழைக்கச் செய்யலாமென்பதே. இந்தச் சங்கங்கள் சாஸ்திரமுறைப்படி ஆராய்ச்சி செய்கின்றனவாயிருக்க, சருவகலாசாலையோ தன் நோக்கத்திற்கமைந்த சில கிரமங்களைவிதித்து, வித்வஸபை (Academic Council) வித்யாஸபை (Board of Studies) முதலிய சபைகளின் ஆலோசனைப்படி கேட்டு நடப்பதாக இருக்கிறது. சர்வகலாசாலைக்கும் இதுபோன்ற சங்கங்களுக்கும் நெருங்கியசம்பந்தம் ஏற்பட்டாலொழிய ஜனங்களுக்

* இது, ஆங்கிலத்திற்பேசிய பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பாக வெளியிடப் படுகிறது.

ருக் கிளர்ச்சிஉண்டாக்கக்கூடிய உயர்ந்தமுறையில் நம் தாய்ப்பாஷையை வளர்க்கமுடியாது. உதாரணமாக ஆங்கிலநூலாசிரியராகிய இந்தியர் ஒருவர் மேற்றேசப் படிப்பாலுண்டான தம் அபிப்பிராயங்களைத் தேச பாஷையிற்சொல்ல முயலும்போது அவர் நவீனமுறைப்படி தம் எண் ணங்களைச் சொல்லக்கூடியவராயிருந்தும் பாஷையில் பரிசயம் இல்லாத தால், வித்வான்கள் அவர் சொல்லும் விஷயங்களின் ரஸத்தை அநுப விக்கக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஒரு வித்வான் ஒரு சாஸ்திரவிஷயத்தைப்பற்றித் தன் ஞானமெல்லாம் தெரியும்படி தற்கால மேற்றேச சாஸ்திரபரிபாஷைகள் தெரியாவிட்டாலும் பிரசங்கிக்கக்கூடிய வராயிருந்தும், அவர்முறை கர்நாடகமுறையாயிருப்பதால் ருசிக்காத தாக இருக்கிறது.

ஆகவே, இந்த இரண்டுவிதமான குற்றங்களும் தீரக்கூடியதான ஐக்கியம் ஏற்படவேண்டும். சர்வகலாசாலையார் செய்யவேண்டியது என்ன? இதுபோன்ற சங்கங்களின் வித்வான்களையும் தங்கள் ஆலோ சனைக்குச் சேர்த்துக்கொண்டு, அவர்கள்மூலம் ஜனங்கள் எளிதில் அறி யும்படியான சொல், பொருள் செறிவுள்ள உயர்ந்தநடைப்போக்கை உண் டாக்க வழிசெய்யவேண்டுமென்பதே. அவ்விதம் ஊக்கம் கொடுப்பதால் மேற்றேசபாஷையிலுள்ள சாஸ்திரசம்பந்தமான உயர்ந்தநூல்கள் மிகச் சிறந்தநடையில் வெளிவருவனவாகும்.

மற்றொரு முக்கியமான விஷயம், ஒவ்வொருபாஷைக்கும் சர்வகலா சாலையார் வித்யாபீடம் ஸ்தாபனஞ்செய்யவேண்டுமென்பது. அது தற் கால புது எண்ணங்களை (தேசத்தில் விதைக்க) இலக்கியத்திற் புது முறைகளை ஆராய்ச்சிசெய்ய ஏற்படவேண்டும். உதாரணமாகப் பௌத் தர்களும் ஜைனர்களும் ஜனங்களுக்குத் தங்கள் புதுமதக்கொள்கைகளை எப்படி அறிவுறுத்தினார்கள். தமிழ்ப்பாஷையை நன்கு ஆராய்ந்து, அழகானமுறைகளில் தம் புதுக்கொள்கைகள் ஸம்ஸ்கிருதம்போன்ற இதரபாஷைகளில் இருந்தவற்றைத் தமிழுக்கே உரியதாகச் செய்துவிட் டார்கள். இது, சுலபமான மார்க்கமல்ல. ஆனால், இதுதான் உயர்ந்தமார்க்கம். இவ்விதமே தமிழ்ப்பாஷை முன்னேற்றம் அடைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். என் நண் பரும், தமிழ்ப்பாஷை வளர்ச்சியில் அதிக ஊக்கமுள்ளவருமான

மகா-ா-ா-ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்மூலம் நான், இந்த முறையையே கிறிஸ்தவர்களும் மஹம்மதியர்களும் கையாண்டிருப்ப தாக அறிகிறேன். உதாரணமாக, வீரமாமுனிவர் என்பவர், (பதி னேழா நூற்றாண்டினர்) தம் புது மதக்கொள்கைகளை உயர்ந்தவகுப்பா ரும் அறிந்துகொள்ளவேண்டித் தமிழ்ப்பாஷையை நன்குகற்று அதன் அழகுகள் பலவற்றையும் சந்தங்களையும் அணிகளையும் அமைத்து நூ லியற்றியிருப்பதாகத் தெரிகிறது. அவ்விதமே மஹம்மதியர்களும், தமிழ்ப்பாஷையில் தங்கள் மதநூல்கள் என்று போற்றும்படியான அருமையான நூல்கள் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, (இலக்கியம், சாஸ்திரம், தத்துவம் முதலியன சம்பந்தமான) மேற்றேசக்கல்வியை நாம் ஜனங்களுக்கு அறிவுறுத்தவேண்டுமானால், தேசபாஷையின் இலக்கியஞானம் அவசியமாகையால், தேசபாஷையைக் கட்டாயம் படிக்கச்செய்யவேண்டியது முக்கியமாகிறது. இது விஷய மாக நாம் தேசபாஷையிற் பாண்டித்தியமடையும் கலாசாலை ஆங்கில உபாத்தியாயர்களைச் சரியானபடி ஆதரிக்கவேண்டும். வித்யார்த்திகளைத் தவிர வித்வான்களும் அவர்களுடன் சல்லாபம் செய்வதால் புது உணர்ச்சியுடையவர்களாய் ஏற்படுவதால் அவர்கள்மூலம் சிறந்த நூல்கள் எழுதப்படுவனவாகின்றன. இதுபோன்ற வழிகளில்தான் வித்வான் களின் முதிர்ந்த ஞானத்தையும் அனுபவத்தையும் சர்வகலாசாலையார் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய மார்க்கத்தைத் தேடவேண்டும்.

தேசபாஷைசம்பந்தமாக அதிகக்கவனம் செலுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது. அதுவிஷயமாக இந்த மாகாணத்திலுள்ளபாஷைகள் செய்யவேண்டியதொன்றிருக்கிறது. அதாவது: இந்தப்பாஷைகளின் வித்வான்கள் ஒன்றுசேர்ந்து, மேற்றேசசாஸ்திரங்கள் தேசபாஷையில் எழுதப்படுவதற்கு ஒரேமாதிரியான பரிபாஷைத்தொடர் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு பாஷையின்விஷயம் மற்றொருபாஷையில் எழுதப்பட ஒரே பரிபாஷைத்தொடர் மிகவும் வசதியுள்ளதாக இருக்கிறது.

இது சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய மற்றொருவிஷயமும் உண்டு. அதாவது ஒரு பாஷையில் உள்ள விஷயம் மற்றொருபாஷையில் நயம் குறையாது மொழிபெயர்க்கக்கூடியமாதிரி எழுதப்படவேண்டுமென்பதே.

தமிழில் ஒருநூல் இருப்பதில் அதை மற்றொருபாஷையில் மொழி பெயர்ப்பது அசாத்தியமாக இருக்கக்கூடாது. ஐரோப்பிய பாஷைகளைப்போலல்லாமல் நம்மாகாணத்தில்நான்குபாஷைகளே இருக்கின்றன. ஆகவே இந்தப் பாஷைகளுக்குள் ஒற்றுமை உண்டாக்குவது கஷ்டமல்ல. இந்தத் தமிழ்ச்சங்கம் சென்ற இருபத்துமூன்றுவருஷகாலம் நடத்திவந்திருக்கும் ஆராய்ச்சிமுறையில் முப்பன்றால் நம் தேசபாஷைகளிற் சரியான பரிபாஷைத்தொடர் ஏற்படுத்தமுடியாது என்ற கவலை நீங்கி, இலக்கியம் சாஸ்திரம் சிற்பம் தத்துவம் முதலிய விஷயங்களின் பரிபாஷைக்கெல்லாம் தகுந்த தொடர்கள் ஏற்பட்டுவிடு மென்பதிற் சந்தேகமில்லை.

பழையகாலத்தில் வித்வான்களை ஆதரித்துப் பாஷையை வளர்த்து வந்தவர்கள் வையம் தாங்கும் மன்னரும் பிரபுக்களும் ஆவர். அவ்வாறு ஆதரிப்பவர்களைத் தற்காலம் காண்பது அரிது. ஆனல் நம் சேது நாட்டரசராகிய மாட்சிமைதங்கிய இராஜராஜேஸ்வரசேதுபதியவர்களோ தாய்ப்பாஷையின் முன்னேற்றத்தில் இயற்கையான உற்சாகமுடையவராயிருப்பதுடன், தாமும் தமிழில் அதிக பாண்டித்தியமுடையவராய் வித்வான்களின் ஞானத்தைச் சரியானபடி அளக்கக்கூடியவராகவும் இருக்கிறார்.

நமக்குள், ஆங்கிலம்கற்றவகுப்பரிற் பெரும்பாலார் தங்கள் அலுவல்களிலும் தொழில்களிலும் அதிக கவனத்தைச் செலுத்தி வருகிறார்களேயொழிய நம் தேசமுன்னேற்றத்திற்கு அவசியமான அம்சங்களான தேசபாஷையின் விருத்தியைப்பற்றியும், அதனால் ஜனங்களுக்கேற்படும் புது உணர்ச்சியைப்பற்றியும் நன்குதெரிந்துகொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். ஆனல், தேசபாஷையில் நடக்காத நம் மாகாணத்துக் கல்வி சரியான நிலையில் நடக்கிறதென்று திருப்திப்படுகிறோமோ! கலாசாலைகள் சரியானபடி தங்கள் கடமைகளைச் செய்கின்றனவென்று திருப்திப்படுகிறோமோ! இல்லை. இப்படியிருக்கும் காலத்

தில் இந்தச்சங்கமானது பிரான்ஸ் ஜெர்மனி தேசத்துச்சங்கங்களைப் போல் பாஷையைப் பாதுகாப்பதுடன், அதை வளர்த்து வித்யார்த்திகளை வித்வான்களாக்கி அவர்கள்மூலம் தேசபாஷையை எங்கும் கற்பிக்கும்படிசெய்வதை நோக்க எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

நீங்கள் என்னைத் தெலுங்கர்களின் சங்கத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்றுகேட்பது சகஜமே. ஆனால், அதுவிஷயமாக என் அபிப்பிராயங்களைப் பின் ஒரு சமயம் பேசவேண்டுமென்று நினைப்பதால், நான் தங்கள் இஷ்டப்படி நடக்காததற்குத் தங்கள் மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, நான் தங்களுக்கு முக்கியமாக வற்புறுத்தவிரும்புவது இவைதான். நம் தேசபாஷைகளைக் கட்டாயம் கலாசாலைகளிற் படிக்கச் செய்யவேண்டுமானால், அதன்மூலம் தற்கால மேற்றேசக் கல்வியைப் புகட்டவேண்டுமானால், நம் தேசபாஷையை விருத்திசெய்ய இதுபோன்ற சங்கங்கள் சர்வகலாசாலையாருடனும் காலேஜ்களுடனும் ஒத்துழைக்கவேண்டும். இந்த மாகாணத்திலுள்ள இதரபாஷாவித்வான்களும் தமிழ்வித்வான்களும் ஒன்றுசேர்ந்து, இந்தப்பாஷைகளுக்குள் ஒற்றுமையான பரிபாஷைமுதலியவற்றை ஏற்படுத்தவேண்டும். இந்த அம்சங்கள் நன்கு அறிந்துகொள்ளப்பட்டாலொழியத் தற்காலப் படிப்பைத் தேசபாஷையிற் புகட்டவேண்டுமென்பது அசாத்தியமான காரியமாகும். வேறு எந்தவிதத்திலும் இந்தச்சங்கம் வித்யா இலாகாவுடன் ஒத்துழைக்கக்கூடுமானாலும் அந்தவிதமாக இந்தச்சங்கம் செய்யும் உதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். இந்தச் சங்கத்தின் சிறந்தநோக்கங்கள் ஈடேற எந்தவித ஒழுங்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமோ அந்த ஒழுங்கை நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

செய்யுட்பொருத்த இலக்கணம்.

(உசுஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

வருணப்பொருத்தம்.

8. வருணப் பொருத்தமே வருமுயி ரடங்கலுங்
கம்முத லாறுங் கைசிகர்க் காகுந்
தம்முத லாறுந் தருமன் னவர்க்கே
லவறன வணிகர்க் காம்ழளச் சூத்திரர்க்
கிம்முறை நஞ்செழுத் தியலினு மிழுக்கா.

எ-து, வருணப்பொருத்தமாமா றுணர்த்துகிறது. பன்னீருயிரும், க், ங், ச், ஞ், ட், ண் என்னும் ஆறொற்றும் அந்தணர்க்கெனவும், த், ந், ப், ம், ய், ர் என்னும் ஆறொற்றும் அரசர்க்கெனவும், ல், வ், ற், ன் என்னும் நான்கொற்றும் வணிகர்க்கெனவும், ழ், ள் என்னும் இரண்டொற்றும் சூத்திரர்க்கெனவும் உரைத்தனர் புலவர்; இந்த முறையினொடு நஞ்சென விலக்கப்பட்டஎழுத்துக்கள் வரினும் வழுவன்றெனக் கொள்க.

மேற்கோள் :—

நீதிலுயி ரீராறு முதலொற் றாறுந்
திருமறையோர்க் கடைவேயோ ராறும் வேந்தர்க்
கேதிலவ றனக்கள்வணி கர்க்கு மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
யோதிமன்றன் படைப்புயிரே யான்மால் செவ்வே
ளும்பர்கோன் பரிதிமதி மறலி நீர்க்கோன்
காதிலன கேசனிவ ரிவ்வி ரண்டாக்
கம்முதன்மூ வாறொற்றுங் கருதிச் செய்தார்.

என்பது பாட்டியல்.

நாட்பொருத்தம்.

9\. நாளின் பொருத்த நவிலுங் காலை
நான்கு மைந்து மூன்றுமாய்ப் பிரியுயிர்
கார்த்திகை பூராட முத்திரா டம்மே
கவ்வரி நான்கிரண் டிருமுறை மூன்றிவை
யோண மாதிரை யுரை யிரு பூசம்
சவ்வரி நான்குமைந் துங்கடை மூன்றுமாம்
அவ்வவை யிரேவதி யசுவதி பரணி
ஞவ்வரி ஞ ஞாஞெ ஞொவ்வா மவிட்டம்
தவ்வரி யிரண்டே ழொடுகடை மூன்றும்
சோதி விசாகந் தூயநற் சதயம்
நவ்வரி யாறு நண்ணிரு மூன்றும்
பொற்பனை கேட்டை பூரட் டாதி
பவ்வரி நான்கும் பகரிரண் டாறும்
உத்திர மத்த மொளிர்சித் திரையே
மவ்வரி யாறு மற்றிரு மூன்று
மகமா யிலிய மகந்தொடர் பூரம்
யயாஉத் திரட்டா தியூயோ மூலம்
வவ்வரி நந்நான் குரோகணி யிந்திரன்
அவ்வவ் வெழுத்திற் கவையவை குறித்தபி
ஞண்மூ வொன்பதா நாயக னியற்பெயர்
நாண்முதன் மங்கல நவில்சொல் லீரு
வெண்ணி யிரண்டுநான் காறெட் டொன்பதா
மன்றி யொன்று மூன் றைந்தே ழாகா.

எ-து, நாட்பொருத்த மாமா றுணர்த்துகிறது. மொழிமுதற் கண்வரு மெழுத்திற்கு அச்சுவினிமுத லிருபத்தேழுநக்ஷத்திரங்களைப் பகுத்தார் புலவர். அவற்றுள்,—

அ, ஆ, இ, ஈ—கார்த்திகையன. உ, ஊ, எ, ஏ, ஐ—பூராடத்தன. ஒ, ஓ, ஔ—உத்திராடத்தன. க, கா, கி, கீ—திருவோணத்தன. கு, கூ—திருவாதிரையன. கெ, கே, கை—புனர்பூசத்தன. கொ, கோ, கௌ—பூசத்தன. ச, சா, சி, சீ—இரேவதியன. சு, சூ, செ, சே, சை—அச்சுவினியன. சொ, சோ, சௌ—பரணியன. ஞ, ஞா, ஞெ, ஞொ—அவிட்டத்தன. த, தா—சோதியன. தி, தீ, து, தூ, தெ, தே, தை—விசாகத்தன. தொ தோ, தௌ—

சதயத்தன. ந, நா, நி, நீ, நு, நூ—அநுஷத்தன. நெ, நே, நை—கேட்டையன. நொ, நோ, நௌ—பூராட்டாதியன. ப, பா, பி, பீ—உத்திரத்தன. பு, பூ—அத்தத்தன. பெ, பே, பை, பொ, போ, பௌ—சித்திரையன. ம, மா, மி, மீ, மு, மூ—மகத்தன. மெ, மே, மை—ஆயிலியத்தன. மொ, மோ, மௌ--பூரத்தன. ய, யா—உத்திரட்டாதியன. யு, யோ—மூலத்தன. வ, வா, வி, வீ—உரோகணியன. வெ, வே, வை, வௌ—மிருகசீரிடத்தன.

இங்ஙனம் பகுத்தவற்றைக் கொள்ளுமாறு:—பாட்டுநாயக னியற்பெயராதி யெழுத்தினுளே முதற்கொண்டு ஒன்பதொன்பதாக வெடுத்த மங்கலச்சொன்முதலெழுத்து நாளளவு மெண்ணி இரண்டு நான்கு மாறு மெட்டு மொன்பதுங் கண்டா னல்லனவெனவும், ஒன்று மூன்று மைந்து மேழுங் கண்டாற் றீயன வெனவுங் கூறினர் புலவர்.

மேற்கோள் :—

கருது முயிரடைவே நான்கைந்து மூன்று
கார்த்திகையே பூராட முத்தி ராட
மூராறு கவ்வரியி னன்கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புணர்தம் பூசம்

இருமைகொள் சவ்வரியி னன்கைந்து மூன்றி
ரேவதிவாம் பரிபரணி ஞகர நான்கும்
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்றும்
வளர்சோதி விசாகமே சதய மன்னும்.

சதிர்திகழ்நவ் வினிலாறு மூன்று மூன்றந்
தருமநுடங் கேட்டையே பூரட் டாதி
திதமிகு பவ்வரியி னன்கிரண்டோ டாறுத்
திரமுதன்மூன் றுமவ்வி லாறு மூன்று

மிதமுடன்மூன் றும்மகமா யிலியம் பூர
மியயாவுத் திரட்டாதி யூயோ மூலம்
உதவியவம் முதனான்கு மொழிந்த நான்கு
முரோகணியா மிருகசீ ரிடமாம் பேர்நாள்.

ஏன்பண பாட்டியல்.

கதிப்பொருத்தம்.

10. கதியின் பொருத்த விதியைக் கூறி
லொவ்வொழி குறிலே றவ்வொழி வலியே
செவ்வி தாகுந் தேவர் கதியே
னவ்வொழி மெலியே நெடின்முத லொன்கும்
வவ்வில தாகு மக்கட் கதியே
ஒஓய ரலழற விலங்கின் கதியே
னவளஐ ஔவு நாகர் கதியே.

எ-து, கதிப்பொருத்தமாமா றுணர்த்துகின்றது. அ, இ, உ, எ, க, ச, ட, த, ப என்னும் ஒன்பதெழுத்தும் தேவர்கதியெனவும், ஆ, ஈ, ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம என்னு மொன்பதெழுத்தும் மக்கட்கதியெனவும், ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற என ஏழும் விலங்கின்கதியெனவும், ஐ, ஔ, வ, ள, ன என்னு மைந்தும் நரகர்கதியெனவும் வழங்கும். இவற்றுட் டேவர்கதியும் மக்கட்கதியும் நல்லனவெனவும், மற்ற இருகதியும் தீயன வெனவும் கொள்க.

மேற்கோள் :—

வேண்டுங் குறில்வன்மை யீறொழித்தால் விண்ணோர்க்காம்
ஆண்டு நெடின்முதலைன் கந்தமொழித்—தீண்டிய
மென்மையா மக்கட் கிவையிரண்டு மெய்க்கதிக்கு
நன்மையா முன்மொழிக்கு நாட்டு.

நாட்டிய ஒ ஓ யரலள நல்வன்மைக்
கேட்டிய வந்த மிவைவிலங்காங்—காட்டா
தொழித்த நரகர்க்கென் றோதினா ரின்ன
வெழுத்தாகா வாதி யிடத்து.

என்பன பாட்டியல்.

கணப்பொருத்தம்.

11. கணமியல் பொருத்தமே கணமெனுஞ் சீரினுண்
மூன்றே ரிந்திரன் முன்னிரை நிலனே
நிரைநேர் நேர்மதி நேர்நிரை நிரைநீ
ரிந்நாற் கணமுநன் றுமியை முதற்சீர்
இருவிளங் காய்முறை யந்தரஞ் சூரிய
னிருமாங் கனிமுறை வாயு தீயிவை
வருமுதற் சீர்க்கு வழுக்கண மென்ப.

எ-து, கணப்பொருத்தமாமா றுணர்த்துகிறது. வடமொழியாற் கணமெனினும் தென்மொழியாற் சீரேனினும் ஒக்கும். இவற்றுள், முதற்கண்வருஞ்சீர் தேமாங்காயாயின் இந்திரகண மெனவும், கருவிளங் கனியாயின் நிலக்கணமெனவும், புளிமாங்காயாயிற் சந்திரகணமெனவும், கூவிளங்கனியாயின் நீர்க்கணமெனவும் வழங்குவர். இந்நாற்கணமும் நல்லனவென்ப.

அன்றியும் முதற்கண் வருஞ்சீர் கருவிளங்காயாயின் அந்தரகண மெனவும், கூவிளங்காயாயிற் சூரியகணமெனவும், தேமாங்கனியாயின் வாயுகணமெனவும், புளிமாங்கனியாயின் தீக்கணமெனவும் வழங்கப்படும். இவை முதற்சீராக வரிற் றீதென்பர். என்னை?

"அந்தர கணமே வாண ளகற்றும்
சூரிய கணமே வீரியம் போக்கும்
வாயு கணமே செல்வ மழிக்கும்
தீயின் கணமே நோயை விளைக்கும்"

என்றாராகலின். ஆயினும் இவற்றை இருள்வழி மதமென விறித்தார் வேதவழி தெளியாதாரெனக் கண்டுணர்க. அன்றியும் இலக்கண முறையே வடமொழிநூலில் வழங்குநடையாமொழியத் தென்மொழி நூலார் முதற்சீரா வியற்சீர் மிகவே வழங்குவாரெனவுங் கொள்க.

செய்யுட்பொருத்த இலக்கணம்

முற்றிற்று.

ந. பத்மாசனிஅம்மாள்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௬௬௪-ம்பக்கத் தொடர்ச்சி.)

209. சிலையொடு கயல்வாட் டிங்கள் ஏந்தி ஓர் செம்பொற் கொம்பர்
முலைஇடைமுகிழ்ப்பத்தேர்மேல் முன்திசைமுளைத்ததன்னாள்,
அலைகடற் பிறந்து, பின்னை அவனியில் தோன்றி, மீள
மலையிடை உதிக்கின்றாள்போல், மண்டப மதனில் வந்தாள்.

இ-ள். (இராமர் ஆதனத்தில் அமர்ந்த தற்சமயத்தில்,) வில்லோடு (இரண்டு) மீன்களையும் சந்திரனையும் தாங்கி, (ஒளிமிக்க) ஒரு செம்பொற் கொம்பு (ஆகிய சோதி), முல்லை யரும்புகள் தன்னிடத்தில் அரும்பாநிற்கத் தேரின்மீது கீழ்த்திசையில் முளைத்ததை ஒத்தாள் (ஆன சீதா தேவி,) கடலிலே (முதலில்) பிறந்து, பின்பு பூமியிலே தோன்றி, மீண்டும் மலையிலே உதிக்கின்றாள் போல, (க் கல்யாண) மண்டபத்திலே வந்தாள்.

சிலை - வில் (நெற்றி). கயல் - மீன் (கண்). வாள் திங்கள் - ஒளியையுடைய சந்திரன் (முகம்). முலை - முல்லை - முல்லை அரும்பு (பல்). செய்யுளாதலால் 'முல்லை' முலையென நின்றது. முகிழ்த்தல் - அரும்பல். முன்திசை - பூர்வதிசை - கிழக்கு. அலைகடல் - (அலைகளோடுகூடி) அலைகின்ற கடல். அவனி - பூமி.

'முலை' என்பதற்கு முந்திய உரைகாரர்கள் 'கொங்கை' யென்று பொருள் கூறிப் போயினார்கள். நெற்றி முதலிய பிற உறுப்புக்களை அவற்றின் உவமானப் பொருள்களாற் கூறிய கவி இவ் ஓர் உறுப்பை மட்டும் அவ்வாறு கூறாதுபோனாரெனக் கொள்வது தகுதியாகத் தோன்றவில்லை.

'முல்லை முகிழ்ப்ப' என்றது புன்னகை அரும்புதலாற் பல்வரிசை சிறிது வெளிப்பட்டு இனிது விளங்க' என்பதைக் குறித்தது. இயல்பாக இனிதாக உள்ள முகப் பொலிவு குறுஞ் சிரிப்பால் அதிக இனிமையுடையதா மென்பது கூறவேண்டுவதில்லை.

இராமர் ஆதனத்தில் அமர்ந்த தற்சமயத்தில் சீதாதேவி வந்தா ரென்று நாடக நிகழ்ச்சி போலக் கூறிய நயம் கவனிக்கத்தக்கது.

'தேர்மேல் முன்திசை முளைத்த தன்னுள்' என்றதனால், தேரிலே கீழ்த்திசையிலே சூரிய சோதி உதயமாதல்போற் (சீதாதேவியாகிய) பெண்சோதி தோன்றிய தாகவும், கல்யாண மண்டபத்தின் கிழக்கு வாயிலை நோக்கிச் சீதாதேவி கிழக்கினின்றும் தேரிலே வந்தாராகவும் கம்பர் குறிப்பித்தா ரென்று கொள்ளலாம். அவ்வாறு வருவதைப் பார்க்கும் நிலையில் இராமர் கிழக்கு முகமாக வீற்றிருந்தாரென்று பாவித் தல், அவர் ஆதனத்தில் அமர்தலும் சீதாதேவி வந்தாரென்றதனால், பொருத்தமாம்.

பெண்களைக் கொம்புக்கு உவமிப்பது கவிமரபு. அவ்வுவமையை அதிகப் பொருத்தமானதாக்கச் செம் பொற்கொம்பு என்று கூறிப் பெண்ணாகிய உவமேயத்தில் உள்ள சில சிறந்த உறுப்புக்களின் உவ மானப் பொருள்களை அந்தக் கொம்பாகிய உவமானத்தோடு அழகாகப் பொருத்தி ஓர் இனிய மனக் காட்சி தோன்றக் கூறிய நயம் பாராட்டற் பாலது. அதனோடு நில்லாமல், உயிருள்ள மரத்தில் முளைக்கும் கொம்பு உயிரில்லா மரத்தாலாகிய தேரில் முளைத்ததாக வியப்பும் நயப் பும் உதிக்க உரைத்த விநோதம் மெச்சத்தக்கது. அம்மட்டில் அமை யாமல், உள்ளுறையாக, ஒளிமிக்க அக்கொம்பு ஒரு சோதியாகவும், அச் சோதி, கீழ்த் திசையிலே தேரிலே உதிக்கும் பால சூரிய சோதி போலத் தேரிலே கிழக்குத் திக்கிலே தோன்றியதாகவும் கூறிய சாதுரியம் ஊன்றி உணர்ந்து உவத்தற் குரியது. கொம்புக்கும் சோதிக்கும் பொதுவாகப் பொருந்தும்படி, 'அங்குரித்தல்' 'உதித்தல்' என்ற இரு பொருள் உள்ள 'முளைத்தல்' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருத்தலை நோக்குக.

சூரிய சோதி, முதலிற் கடலில் உதித்துப் பின்பு அக் கடலுக்கு அடுத்த பூமிக்கு மேல் விளங்கி, அதன்பின் அப்பால் உள்ள மலைமேற் பிரகாசித்தல்போலச் சீதா சோதியும் முதலிற் கடலிலும் பின்பு பூமி யிலும் அதன்பின் மலையிலும் தோன்றியதாகக் கூறிய கவிநுட்பம் ஆச் சரியமும் ஆனந்தமும் அளிப்பது.

முன்னிரண்டடியிற் குறிப்பாக அமைத்த 'சோதி' என்ற பொருளை விடாது பின்னிரண்டடியிலும் குறிப்பாகப் பொருந்தச் செய்த கவி வன்மை, கண்டு களிக்கத்தக்கது.

இவ்வாறாக, இன்பமயமான இந்தப் பாட்டு ஓர் ஆனந்த சாகரம் போலவும், இப்பாட்டை ஆராயுந்தோறும் புதியன புதியனவாக மேலு மேலும் புலப்படும் கருத்துக்கினிய கருத்துக்கள், நோக்க நோக்க, அச் சாகரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக முடிவின்றித் தோன்றுகின்ற கண்ணுக் கினிய அலைகள் போலவும் இருக்கின்றன.

[இலக்குமிதேவியாகச் சீதாதேவி, முன் பாற்கடலிற் றோன்றிய காலத்தில், அவரைத் திருமாலாக இருந்த இராமர் விவாகம் செய்த அன்றைத் திருக்கலியாணத்திலும் இன்றைத் திருக்கலியாணம் அதிக அழகுடையதென்று இரு திருமணங்களையும் காணப்பெற்ற இமையவர் கள் கூறினார்கள்.

தேவலோகம் பூலோகம் நாகலோகமென்ற மூன்று லோகங்களி லும் உள்ள அழகுவாய்ந்த பொருள்கள் யாவற்றின் அழகுகளும், எந்த இலக்குமிதேவியின் அமிசங்களோ, அந்த இலக்குமிதேவியே ஆன சீதாதேவியின் திருக்கலியாணத்தின் அழகைச் செப்ப முடியுமோ!

அப்படிப்பட்ட அழகைக் கண்டு களிக்கப் பிரமதேவர் முதலியோர், தேவியருடன் வந்தார்கள். விவாக வேள்வி செய்தற்கு மறையவர் சூழ, வசிட்டர் வந்து மங்கல அங்கியை வளர்த்தார். (அங்கி - தீ.)

இராமரும் சீதாதேவியும் மணவறையை அடைந்து மணவேதி கையில் இருந்தார்கள். சனகர், இராமரெதிர் நின்று "நீரும் என்மகளும் திருமாலும் திருமகளும்போல நீடு வாழ்வீராக!" என்று இராமர் கையில் தாரைவார்த்தார்.

அப்போது, அந்தணர் ஆசீர்வாத ஓசையும் மாதர் பல்லாண்டிசை யும் தேவர் வாழ்த்தொலியும் சங்கநாதமும் முழங்கின: வானவர் மலர் மழை வருஷித்தார்கள்; புரவலர் பொன்மழை பொழிந்தார்கள்; மற்ற வர்கள் மலர்கள் முத்துகள் முதலியவற்றை வாரிச் சொரிந்தார்கள்.

இராமர், மங்கல வேள்வித்தீயில் மந்திரம் ஓதி ஆகுதி பெய்து, சீதாதேவி கையைப் பிடித்துக் கொண்டு, அந்த மங்கலத்தீயை வலம் வந்தார்: அப்போது இராமரோடு சென்ற சீதாதேவி, பிறப்புத்தோறும் உயிர் பற்றப்பெற்ற உடம்பொத்தார்.

மங்கலத்தீயை வலம் வந்தவர்கள் அதனை வணங்கியபின், அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் கிரியை நிகழ்த்தப்பெற்றது. பின்பு தம்பதிகள் முனிவரையும் தசரதரையும் வணங்கி, அரண்மனைக்குச் சென்று, தாயர் மூவரையும் பணிந்தார்கள்.

சனகர், தமது தம்பி குசத்துவசரது குமாரிகள் மூவரையும் இராமருக் கிளையார் மூவருக்கும் கொடுக்க, வசிட்டர், இராமருக்குச் செய்ததுபோல, மணவேள்வி செய்து, அம் மூன்று தம்பதிகளுக்கும் மணவினை முடிப்பித்தார்.

மூன்று விவாகங்களும் முற்றுப்பெற்றபோது, சனகர், தாம் கொடுக்கவும் பிறர் பெறவும் முடியாத தமது புகழ் நீங்கலாக, வேண்டியவர்கள் வேண்டியவைகளை வேண்டிய அளவாகப் பெற்றுக்கொள்ளும்படி, தம்மிடத்துள்ள பொருள்களெல்லாவற்றையும் கொடுத்தார். தசரதரும் அவ்வாறு கொடுத்து மகிழ்ந்து மிதிலாநகரத்திலே சில நாள் இனிது தங்கி யிருந்தார்.]

பரசுராமப்படலம்.

பரசுராமரை இராமர் வென்றதைக் கூறுவது.

[மிதிலையிலே, இராமரும் சீதாதேவியும் நானாவித போகங்களையும் அனுபவித்து இன்புற்று வாழும் நாளிலே, விசுவாமித்திரர், அவர்களை ஆசீர்வதித்து, விடைபெற்று, வடதிசை நோக்கிச் சென்று இமயமலையை அடைந்தார்.

அவர் போனபின், தசரதர், மிதிலாநகரமாந்தர் பிரிவென்னும் துன்பக்கடலில் மூழ்கத் தம் மக்கள் மருமக்கள் முதலியோருடன் அயோத்திக்குப் புறப்பட்டார்.

தசரதர் முன்னே படர, மிதிலைவாசிகள்மனம் பின்னே தொடரத் தம்பியர் அருகேவர, இராமர் சீதாதேவியுடன் இனிதாக வழிச்சென்றார். செல்லும்போது, சில சகுனங்கள் எதிர்ப்பட, "அவற்றின் பலன் நன்றோ? தீதோ? எனத் தசரதர் வினவ, நிமித்திகன் "தீது நேரும், நன்றாய் முடியும்" என்றான். (படர-செல்ல நிமித்திகன்—சகுனபலம் சொல்வோன்.)

அப்போது, தமது தாய் தந்தையர்க்குக் கேடுசெய்த கார்த்தவீரியார்ச்சுனராசனது ஆயிரம் தோள்களையும் அறுத்து, அவனைக் கொன்று, அவ்வளவிலே கோபம் தணியாமல், இருபத்தொரு தலைமுறை அரசரைக்கொன்ற பரசுராமர், சடைமுடி விண்ணை எட்டத் தோள்கள் திக்கை முட்ட, மழுவாயுதமும் விற்படையும் தாங்கி, மேருமலை நடந்து வந்தாற்போல வந்தார்.

அவரைக் கண்டோர், வானைக் கீழே கவிழ்க்கவோ! மண்ணை ஆகாயத்திலோ பாதாளத்திலோ எறியவோ! எல்லா உயிர்களையும் எமனுக்கு இரையாக்கவோ! கண்கள் இரத்தங் கொப்புளிப்பனபோல அக்கினிகக்குகின்ற இவரது கோபகாரணம் யாதோ? எனக் கருதினார்கள்.

அவ்வாறு வந்தவரைத் தசரதர் கண்டு எதற்காக இவர் வந்தாரென்று அஞ்சுகின்றபோது, அவர், படைகள் பயங்தோடப் பேரிடி போல ஆரவாரித்துக்கொண்டு இராமரெதிரே சென்றார். இராமர் இவர் ஆரோ என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில், தசரதர் இருவருக்கும் இடையே சென்று, வந்தவரை வந்தனைசெய்வாராய்த் தரையில் முடிபடிய அடியில் விழுந்தார். அதனாற் கோபமாறாமல், அவர், இராமரை நோக்கி, "நீ ஒடித்த வில்வலி அறிவேன். உன் தோள்வலியைச் சோதிக்கும் விருப்புடையேன். அரசரை அதஞ்செய்த தோள்களிலே போர்செய்யும் தினவும் சிறிதுள்ளேன். இதுவே யான் வந்த காரணம்" என்றார்.

அப்போது தசரதர், "உலகமுழுவதையும் வென்று உமக்கென ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் ஒரு முனிவர்க்கு உதவிய உதாரசிலரே! திரிமூர்த்தியரே உமக்கு எதிரல்லர்! சிறு மனிதர் ஒரு பொருளோ!

யாங்கள் உமக்குச் செய்தற்குரிய வழிபாடுகளை இறுமாப்பினாற் செய்ய மறந்ததுண்டோ? எங்களைக் கோபித்தலை ஒழிவீராக. அரசரைச் சிறு தலை அருளால் நெடுங்காலமாக அகற்றியிருந்தீர். இப்போது எங்களை முனிதல் முறையோ! என்மகன் உயிர்நீங்குமேல், யான் என் சுற்றத்தா ரனைவரோடும் இறப்பேன்! என் குலத்தை முற்றும் அற முடித்து விடாதீர்! இதுவே, உம்பால், யான் இரப்பது" என்று காலில் வீழ்ந்தார்.

தம் காலில் விழுந்த தசரதரை இகழ்ந்து, பரசுராமர் இராமர்பாற் செல்லச் செல்லும் நோக்கம் கொல்லும் நோக்கமேயென்று தெரிந்து, தம்மாற் செய்யக்கூடியதொன்று மின்மையை நினைந்து, தசரதர் தளர்ந்து அச்சமிக்கூர்ந்து அறிவுசோர்ந்தார்.

பரசுராமர், மானமுடைய இராசாதிராசன் மானம் விடுத்துக் காலில் விழுந்து மதிமயங்கிக் கிடத்தலைத் தாம் மதியாமையானது, பின்பு அவர்நிலையைத் தாம் அடையும் விதியை விலக்காமையாமென்று உணரும் அறிவில்லாராய், இராமரை நோக்கி, "நீ ஒடித்தவில் ஊனமுற்ற வில். அதன் வரலாற்றைக் கேள். சூரியனைப்போல் ஒளியும் மேருவைப் போல் வலியும் உடைய இரண்டு விற்களை விசுவகர்மன் நிருமித்தான். ஒன்றைச் சிவனும் மற்றொன்றை விட்டுணுவும் கைக்கொண்டார்கள். இரண்டில் எது அதிக வலியதென்று இமையவர் பிரமாவை வினவினர். அவர், எவ்வில் வல்வில்லென்று தெரிவது விபாசமாக, இருவரையும் போர்மூட்டிவிட்டார். போர்மத்தியில் சிவன்வில் முறிந்தது. அந்த ஊனவில் நீ ஒடித்தவில். விட்டுணு தம் வெற்றிபெற்ற வில்லை இருசிக இருடிக்குக் கொடுக்க, அவர் என் பிதாவுக்குக் கொடுக்க, அவர் எனக்குக் கொடுத்தார். இதைநீவளைத்தால், உன்னை ஒப்பார் இல்லை: நானும் குறித்த போரை நிறுத்துவேன். இன்னும் கேள். நான் இருபத்தொரு தலை முறை யரசரைக் கொன்று, அவர்கள் இரத்த நீரில் என் பிதாவுக்குப் பிதிரர்கடன் கழித்து, என் கோபத்தை அடக்கினேன். யான் செயித்த உலகனைத்தையும் ஒரு முனிவருக்குக் கொடுத்துவிட்டுத் துறவியாய், ஒரு மலையில் தவஞ்செய்துகொண்டிருந்தேன். நீ வில் லொடித்த ஓசைகேட்டுச் சீறிவந்தேன். இந்த வில்லை வளைக்க வல்லா யானால், வளைப்பாயாக" என்றார்.

இராமர் அவர் கூறியதைக்கேட்டுக் குறுஞ்சிரிப்புக்கொண்டு, வில்லை வாங்கி வளைத்து "நீர், அரசரையெல்லாம் கொன்ற கொலைஞரானாலும்,

இருடிபுத்திரராயும் தவசியாயு மிருத்தலால், கொல்லற் குரியீரல்லீர். இந்த வில்லில் தொடுத்த அம்பும் வீண்போவதன்று. இதற்கு இலக்கு யாது? விரைவாய் உரையீர்" என்றார்.

பரசுராமர் "கோபியாதீர்! நீர் விட்டுணுவே! உமது அம்பு பழுதுருமல் அதற்கு என் தவத்தையெல்லாம் இலக்காக்குதிர்" என்றார். உடனே இராமர் அம்பைக் கைந்நெகிழவிட, அது பரசுராமர் தவமுழுவதையும் வாரி மீண்டது.

பரசுராமர் "புண்ணியரே! நீர் எண்ணும்காரியங்கள் இனிது நிறைவேறுக. விடை தருக" என்று தொழுது போயினர்.

அவர் தருக்கும் தவமும் அழிந்து போனபின், இராமர், உணர்வு ஒடுங்கி உயிர் உலைந்து உள்ளம் உருகிக்கொண்டிருந்த தசரதரைச் சமீபித்துத் தொழுதார்.]

210. வெளிப்படும் உணர்வினன், விழுமம் நீங்கியே
தளிர்ப்புறும் மத கரித் தானை யான், இடைக்
குளிப்புறும் துயர்க் கடற் கோடு கண்டவன்,
களிப்பெனும் கரை இலாக் கடலுள் ஆழ்ந்தனன்.

இ - ள். உணர்வு வெளிப்பட்டவராகித் துன்பம் நீங்கி (இன்பம்) தளிர்த்த தசரதர், (பரசுராமர் வந்ததற்கும் போனதற்கும்) இடையே (தாம்) முழுகிக்கிடந்த துன்பக்கடலின் கரையைக் கண்டவர் (அதில் ஏறின உடனே) கரையற்ற களிப்புக் கடலுள் (வீழ்ந்து) ஆழ்ந்தனர்.

விழுமம் - துன்பம். மதகரித்தானையான் - மதயானைச் சேனையையுடைய தசரதன். இடை - நடுநேரம் (சங்க அகராதி)-இடையே உள்ள காலத்தில். குளிப்பு - மூழ்குதல். கோடு - கரை.

பரசுராமரால் நேர்ந்த துன்பத்தால் தசரதருக்கு உள்ளடங்கியிருந்த உணர்வு இராமர் தொழுதலைக் காண வெளிப்பட்டது. உணர்வு வெளிவரப்பெற்ற தசரதர் பரசுராமர் இல்லாததையும் இராமர் சேமமாயிருப்பதையும் கண்டு துன்பம் நீங்கினர்; பின்பு பரசுராமர் தோற்றதைக் கேட்டு அளவற்ற இன்பம் அடைந்தார். இந்நிகழ்ச்சிகளை மிக இனிமையாகவும் சுருக்கமாகவும் முன்னிரண்டடிகளிற் கூறினர். கூறினவர்,

கூறினதையே, பின்னிரண்டடிகளில், வேறொருவிதமாக, விசேட இன்பத்துடன் வியப்பும் விளையக் கூறுவாராய்த் 'தசரதர், பரசுராமர் வரவே, துன்பக்கடலில் வீழ்ந்து, அவர் போனது தெரியுமளவும் அதில் முழுகிக்கிடந்து, அவர் போனது தெரியவே, அத் துன்பக் கடலினின்று கரையேறி, அவர் இராமரால் வெல்லப்பட்டதை அறிந்து இன்பக்கடலில் முழுகினர்' என்றார். என்றவர், தசரதர் பட்ட துன்பம் முடிவுற்றதுபோலன்றி அவர் உற்ற இன்பம் முடிவற்றதென்பதைக் குறிக்கத் துயர்க்கடற்குக் கரையுண்மையும் களிப்புக்கடற்குக் கரை யின்மையும் கூறிய அதிமதிநுட்பம் அதிசயமானது.

[பரசுராமர்வில்லை வளைத்து அவருக்குப் பழியை விளைத்த இராமரைத் தசரதர் ஆலிங்கனம் செய்து உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீராட்டினர்: "இவன் விரகறியாத இளம்பிராயத்திற் செய்த இந்த ஆண்மைத்தொழில், மூன்றுலகத்தோரும் ஒருங்கு சேர்ந்தும் முடிக்க முடியாதது. நல்வினைசெய்த எனக்கு இன்பமும் தீவினைசெய்த பரசு ராமருக்குத் துன்பமும் தந்த இந்த இளங்குமரன் இருவினைசெய் தோர்க்கு அவரவர் செய்த வினைக்குத்தக்க பயன்களை இம்மை மறுமை யிரண்டிலும் ஈயும் இறைவன். இஃது உண்மை" என்றார்.

அப்போது தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். அவர்களுள் வருணனிடத்து இராமர் வில்லைக் காப்பாற்றிவைக்கும்படி சொல்லிக் கொடுத்து, தசரதர் பிறருடன் அயோத்தியை அடைந்தார்.

பின்பு சிலநாள் சென்றபின், தசரதர் பரதரை நோக்கி "உன் பாட்டனர் உன்னைக் காணும் விருப்புடையார். நீ கேகயநாட்டுக்கு ஏகுவாயாக" என்றார். பரதர், பிதாவைத் தொழுது சென்று இராமரை வணங்கி, அவரை அன்றி ஆவி வேறில்லாதவராதலால், உயிரைப் பிரிந்து உடல் சென்றாற்போலச் சென்று சத்துருக்கருடன் கேகய தேயத்தை அடைந்தார்.]

பாலகாண்டம் முற்றிற்று.

(தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

மதங்கசூளாமணி.

எடுத்துக்காட்டியல்.

[௪௨௨-ம் பக்கத் தொடர்ச்சி.]

௪. அவலச் சுவையை "ஆதுலராஜன் சரிதை"யி னுள்ளும் "இரம்மியன் சுசீலை சரிதை"யினுள்ளுங் காட்டினும்; வெருளிச்சுவையை மேல்வரும் "சேனாதிபதிசரிதை"யினுட் காட்டுவாமாதலினால் அவலமும் வெருளியுமுணர்த்துவதென யாம் எடுத்துக்கொண்ட "தீநட்பஞ்சியதீமோன்சரிதை"யைச் சுவைபற்றி யாராயும் அவசியமில்லை. இதனது வித்து, முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்னுஞ் சந்தியுறுப்புக்களை உறுப்பியலினுட் டொகுத்துக் கூறினும். நாடகபாத்திரருக்குப் பெயர்கொள்ளாது சந்தியுறுப்புக்களினமைப்பை வகுத்துக்காட்டி யப்பாற்செல்வாம். கதாநாயகனாகிய செல்வப்பிரபு பலருக்கு விருந்தளித்தலும், அன்னார் உண்டு களியாடலும், புலவர் ஓவியர் மணிகுயிற்றுநர் சூதர் மாகதர் என் றின்னோர் அவனிடம் பரிசில்பெற்று அவனைப் போற்றிநிற்றலும் முகத்தினுள் வருவன. பிரபு கடன்பட்டுக் கலங்குதலும், தனது பழையநண்பர் தனக்கு உதவுவார் என்னும் முழுநம்பிக்கையோடிருத்தலும், அவர் உதவார் என்றுகூறிய அறிஞனை வெகுண்டு நோக்குதலும் பிரதிமுகமாவன. பிரபுவினுடைய கருமகாரன் அவரது நண்பர்பலரிடம் போய் அவர் கடனால் வருந்துவதைத்தெரிவித்து உதவிபெற முயலுதலும், அன்னார் மறுத்தலும், பிரபு ஒரு சூழ்ச்சியினால், பழையநண்பரனைவரையும் விருந்துக் கழைப்பதுபோ லழைத்து அவர்முன் அழுக்குநீர்நிரம்பிய கலங்களை வைத்து, "நன்றிகெட்டநாய்களே! இதுதான் நான் இன்று உங்களுக்குத் தருகின்றவிருந்து" என்று அவர்கள்மேற் கலங்களை யெறிவதும் அன்னார் அல்லோலகல்லோலப்பட்டோடுதலும் கருப்பத்தினுள் வருவன. கதாநாயகன் காட்டிற்சென்று வசிப்பதும், கிழங்குபெறுவதற்காக நிலத்தினைத் தோண்டும்போது ஒரு பொற்குவையைக் கண்டு அதனை இழித்துக்கூறுவதும் அவ்வழிச்சென்ற ஒரு சேனைத்தலைவனும் அவனது

காதற்கிழத்தியிருவருங் கதாநாயகனை யணுகுதலும், அவன் அன்னோர் முகத்திற் பொற்காசுகளையெறிதலும், அவர்கள் காசுகளையெடுத்துக் கொண்டு நன்றிகூறிச்செல்வதும் கள்வர்சிலர் வருதலும் விளைவினுள் வருவன. கதாநாயகனாகிய தீமோனிடம் பொற்குவை யகப்பட்டிருக்கிற தெனக் கேள்வியுற்றுப் புலவர் ஓவியரென் றின்னோர் அவனை நாடிச் செல்வதும், அன்னோரையும் மனிதவர்க்கத்தையுந் தீமோன் இழித்துக் கூறுவதும், சேனைத்தலைவன் தீமோனுடையபகைவரை யெதிர்த்து வெற்றிபெற்றுத் தீமோனை நகருக் கழைத்துச்செல்வதற்குக் காட்டினுட் சென்று தேடுவதும் தீமோன் இறந்துகிடக்கக் காண்பதும் ஐந்தாஞ் சந்தியாகிய துய்த்தலினுள் வருவன. இனி மருட்கையு மூவகையு முணர்த்தும் பெரும்டுயற்சரிதையை யாராயப்புகுந்து முதலிற் கதைச் சுருக்கத்தைத் தருகின்றாம்.

பலவளம்நிறைந்த சீயதேசத்தை அலாயுதனென்னுமன்னன் அரசு புரிந்துவருகின்றகாலத்தில், பிரபாகரன் என்னும் பெயரினையுடைய சிற்றரசன் சீயநாட்டின் ஒருபாகமாகிய மைலம் என்னுந் தேயத்தை யாண்டு வந்தான். அவன் தம்பி அநாகுலன் வஞ்சனையினால் தனது தமையனையும் அவனது மூன்றுவயதுக்குழந்தையாகிய மாலதியையும் சுக்கானில்லாத ஒரு படவிலேற்றிக் கடலிற் றள்ளிவிட்டுத் தமையனாண்டுவந்த தேயத்தைத் தானாண்டுவந்தனன். அநாகுலனுடைய வஞ்சனையை ஒருசிறிதறிந்திருந்த கௌசிகனென்னும் பிரபு படவினுள்ளே உணவுப் பொருள்கள் சிலவற்றையும், புத்தகங்கள் சிலவற்றையும் அநாகுலன் அறியாவண்ணம் மறைத்துவைத்தனன். படவு கடலலையால் மொத்துண்டு, அலைவுற்றுச் சிலநாட்களுக்குப்பின் மணிபல்லவம் என்னுந் தீவை வந்தணுகியது. கௌசிகன் மறைத்துவைத்த உணவுப்பொருள்கள் பிரபாகரனுக்குப் பேருதவிபுரிந்தன. மணிபல்லவத்துக் கரையை யடைந்த பிரபாகரன், மானிடசஞ்சாரமில்லாத அத்தீவிற் குடிசையொன்றமைத்துக்கொண்டு காலங்கழித்துவருகின்றநாளிற் புதல்வியாகிய மாலதி நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ச்சியெய்தினாள். பிரபாகரன் படவினுள்ளிருந்த புத்தகங்களையெடுத்தாராயும்போது அவற்றினுள் ஒரு மாந்திரீகநூல் இருந்தது. அதனை யெடுத்துக் கற்ற பிரபாகரன் மந்திரசக்தியின் வலிமையினாலே பவனவேகன் என்னும் வித்தியாதரனையும், வலிமுகன் என்னும் இயக்கனையுந் தனக்கு

அடிமைகளாக்கிக்கொண்டான். பவனவேகன் ஆகாயமார்க்கமாகச் சஞ்சரிப்பவன்; வேண்டும்போது வேண்டியஉருக்கொள்ளவும், தனது எஜமானாகிய பிரபாகரனுக்கன்றிப் பிறருக்குத் தோற்றாத மாயவுருக்கொள்ளவும், செயற்கருஞ்செயல்கள் பலவற்றைச் செய்யவும் வல்லவன். வலிமுகன் முசுமுகி யென்னும் இயக்கியின்புதல்வன்; தாய் பிறந்துவிட ஆதரிப்பாரின்றி மணிபல்லவத்தில் அலறித் திரிந்தான். மேல்முழுதும் நிறைந்த செம்பட்டைமயிருங் கோரரூபமுமுடைய இவனைப் பிரபாகரன் பிடித்துக்கட்டிக்கொண்டுவந்து மக்கள்மொழியை இயன்றவரைகற்பித்து விறகுபிளத்தல் முதலிய முரட்டுவேலைகள்செய்வதற்கு ஆளாக வைத்திருந்தான். அடிமைகள் இருவரையும் பெற்றபின்பு பிரபாகரனுக்குச் சிறிது ஆறுதலுண்டு; ஓய்வுநேரம்முழுவதிலும் தனது புதல்விக்குப் பாடஞ்சொல்லிவைத்து அவளைப் பலகலையுங்கற்ற பண்டிதையாக்கினான். மாலதிக்கு வயது பதினைந்தாயிற்று; அதாவது பிரபாகரனும் புதல்வியும் மணிபல்லவத்துக்குவந்து பன்னிரண்டு ஆண்டுகளாயின. இவ்வெல்லையில், காத்திராப்பிரகாரமாகப் பிரபாகரன் தனது இராஜ்யத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளுவதும் மாலதி பல சுகுணங்களும் நிறைந்த பிரியவிரதன் என்னும் அரசிளங்குமாரனை நாயகனாகப் பெறுவதுமே நாம் எடுத்துக்கொண்டசரிதையின் உள்ளுறையாவன.

கப்பலொன்று பெரியதொரு புயலிற்பட்டு அக்கப்பாடுறுவதோடு நாடகம் ஆரம்பிக்கின்றது. மணிபல்லவத்துக் கடலருகில் நின்ற மாலதி கப்பல் அலைவுறுவதைக் கண்டு அதனுள்ளிருக்கும் மானிடருயிருக்கு இன்னல் வந்துவிடுமோவென்றஞ்சித் தனதுதந்தையை நோக்கி அவனது மந்திரசக்தியினாலே புயலை நிறுத்திவிடும்படி, அவனைக் குறையிரந்து வேண்டிக்கொள்ளுகிறாள். பிரபாகரன் கப்பலில் உள்ளோரது உயிருக்குச் சேதம்வாராதென்று கூறியதோடு தனது மந்திரவலிமையினால் தானே புயலை உண்டுபண்ணியதாகவும் அதனாற் பெருநன்மை விளையப்போகிறதென்றுங் கூறித் தனது வரலாற்றையுந் தெரிவித்துத் தனது மந்திரவலிமையினாலே மகளை அயர்ந்து நித்திரையாகும்படி பண்ணுகிறான். இங்ஙனஞ் செய்தபின் பிரபாகரன் பவனவேகனை அழைத்துத் தனது கட்டளைப்படி எல்லாம் ஆயிற்றா என்று விசாரித்தான். புயலையுண்டாக்கியபின்னர்க் கப்பலிலிருந்தோரைவரை

யும் உயிர்ச்சேதமின்றிக் கரைசேர்த்திருப்பதாகவும், கப்பலைச் சிறிதேனும் பழுதுபடாமல் ஒரு துறை சேர்த்திருப்பதாகவும் பவனவேகன் தெரிவித்தான். பிரபாகரனும், "நன்று; கப்பலிலிருந்தோருள் இராஜகுமாரனை இவ்விடம் அழைத்துவா" என்றனன். இவ்விராஜகுமாரன் சீயதேசத்தரசன் அலாயுதனதுபுத்திரன் பிரியவிரதன். அலாயுதனும் அவனது தம்பி சங்கவர்ணனும், புதல்வன் பிரியவிரதனும், அநாகுலனும், கௌசிகனும் பிற பிரபுக்களும் சமுத்திரயாத்திரைசெய்யும்போது அன்னோர் ஏறிச்சென்ற கப்பல் மணிபல்லவத்துக் கரையோரமாகச் சென்றது. இதனைத் தனது மந்திரக்காட்சியினாற் கண்ட பிரபாகரன் புயலையுண்டாக்கிக் கப்பலிலிருந்தோரனைவரையும் கப்பலையும் சேதமின்றிக் கரைசேரும்படி செய்தனன். அங்ஙனமாயினும் அரசன் தன் புதல்வன் கடலிலமிழ்ந்துவிட்டானெனவும், இராஜகுமாரன் தன் தந்தை யுயிர் துறந்துவிட்டானெனவும், அனைவரும் கப்பல் மூழ்கிவிட்டதெனவும், தம்முள்ளேயெண்ணித் துன்புற்றுத் தீவகத்தின் பற்பலபாகங்களினும் ஒருவரையொருவர் தேடி அலைந்து திரிகின்றனர். இவ்வெல்லையிற் பவனவேகன் உருத்தோற்றுவண்ணம் இராஜகுமாரனது முன்னிலையிற்போய் நின்று,

"மஞ்சட் பரந்தவிந்த மணன்மீதி லென்னுடனே
கொஞ்சிக் குலாவிவிளை யாடுதற்கு வாரீரோ
வாரீரோ நடமிடுவோம் வௌவௌவென நாய்குரைக்கச்
சீராகக் குக்கூ வென்னுஞ் சேவலொலி கேட்குதையோ"

என்று பாடினான்.

பிரியவிரதன்: (அதிசயமுற்று)

"வானகத்ததோமண்ணகத்ததோமனநிறைக்குமிவ்வினியநல்லிசை
கோனையெண்ணியேசிந்தைநைந்தியான்குரைகடற்கரைப்புறமிருக்கையிற்
றேனையொத்தவிவ்விசைதொடர்ந்தெனைச்சிறைசெய்கின்றதாலுறுவதோர்கிலே
யானகத்துளோரெண்ணமின்றியேயிசைவருந்திசைக்கேகுவேனரோ" [ன்

[புதுமைபற்றிய மருட்கைச்சுவை]

என்று இசைவருந் திசையைநோக்கிச் சென்றான். நித்திரைநீங்கியெழுந்திருந்த மாலதி பிரியவிரதனைக் கண்டமாத்திரத்தே (அதுவரையும் அழகுநிறைந்த ஆடவரைக் காணாதவளாதலினாலே புதுமைபற்றிய மருட்கையுற்று) தன் தந்தையைநோக்கி, "ஐய! அதோ தோற்றுகின்ற எழிலுருவத்தையுடையோன் தேவனோ? மனிதனோ?" என்றனள்.

பிரபாகரன்: நம்மைப்போலவே அவனும் பசிவரும்வேளையில் உணவுட் கொண்டு துயில்வருநேரத்திற் றுயிலுகின்ற மனிதவகுப்புக்கு உரி யோன்தான். கப்பலிலிருந்து பிரிந்த தனது நண்பரைத் தேடி யலைகின்றான். கவலையினால் அவன்முகம் வாடியிருக்கின்றது.

மாலதி: இத்தனையழகனை நா னொருபோதுங் கண்டதில்லை; இவன் தெய் வத்தன்மையுடையவனென்றே சொல்லவேண்டும்.

பிரியவிரதன்: (அணுகிவந்து)

இன்னிசைக்குத் தலைவியே யிமையவரும் பணிந்தேத்து மெழி லணங்கே
பொன்னுலகத் திருந்திவணீ புகுந்தனையென் றென்னிதயம் புகலா நிற்கும்
மன்னுமிந்தத் தீவகத்தி லுறைதியோ வழியெனக்கு வழுத்து வாயோ
கன்னிகையோ பிறன்மனையாங் காரிகையோ வெனவிரைவிற் கழறு வாயே.

மாலதி: ஐய! அதிசயம்வேண்டாம். நான் கன்னிகையே!

பிரியவிரதன்: ஆ! ஆ! இம் மடமொழி என்மொழியில் உரையாடுகின் றாள். இச் செம்மொழியைப் பேசுவோருள் யானே தலைவன். இம் மொழிவழங்கும்நாட்டில் யான் இருந்தாலோ!

பிரபாகரன்: சீயதேசத்துமன்னன் இருக்கும்போது நீ தலைவனாவ தெப்படி?

[தன் மகளுக்கும் பிரியவிரதனுக்கு மிடையி லுள்ள காதலின் அள வைச் சோதிக்கவிரும்பிய பிரபாகரன் பிரியவிரதனைநோக்கிப் பின்வரும் கடுமொழிகளையுங் கூறுகின்றான்.]

இராஜத்துரோகம் பேசுகின்ற தூர்த்தா! இங்கு வா; உன்கையை யுங் காலையும் விலங்கிடுகிறேன்; உலர்ந்தகிழங்கும் உப்புத்தண்ணீரு மன்றிப் பிறவுணவு தராது உன்னைச் சிறையில் வைக்கிறேன்.

பிரியவிரதன்: "இதற்கு நான் ஒருப்படேன்" என்று வாளையுருவுகிறான்.

[பிரபாகரனுடைய மந்திரவலிமையினாலே பிரியவிரதனுடைய வா ளேந்திய கை ஸ்தம்பித்து நின்றுவிட்டது.]

மாலதி: பலவாறாகப் பரிந்துபேசியுங் கேளாது பிரபாகரன் பிரியவிரதனை அழைத்துச்செல்லுகிறான்.

[இவ்வளவோடு முகம் முடிகின்றது.]

தீவின் ஒருபக்கத்தில் அலாயுதனும் அவன்தம்பி சங்கவருணனும் அநாகுலனும் கௌசிகனும் பிறரும் வருகின்றனர். பவனவேகன் உருவெளிப்படாது நின்று இன்னிசைக்கீதங்களைப் பாட அநாகுலனும் சங்கவருணனும் ஒழிந்த அனைவரும் துயில்கின்றனர். சகோதரத்துரோகியாகிய அநாகுலன் சங்கவருணனை நோக்கி அலாயுத மன்னனைக் கொன்றுவிட்டுச் சீயதேசத்து மன்னவனாகும்படி சொல்லி அவனைத் தன் துர்ப்புத்திக்கு ஆளாக்குகிறான். துயின்றுகொண்டிருக்கிற கௌசிகனையும் அலாயுதமன்னனையும் கொல்லும்படி அநாகுலனும் சங்கவர்ணனும் கையில் வாளெடுத்துக்கொண்டுவரப் பவனவேகன் கௌசிகனுடையகாதில் ஒரு பாடலைப் பாடி யவனைத் துயிலினின்று எழுப்ப அவன் அலாயுதமன்னனை யெழுப்புகிறான். துயிலினின்றெழுந்த இருவரும் அநாகுல சங்கவர்ணருடைய துர்நினைவைக் குறிப்பினாலுணர்ந்து கொண்டு பிரியவிரதனைத் தேடிச் செல்கின்றனர். தீவின் மற்றொருபக்கத்தில் இடிமுழக்கத்தினிடையே வலிமுகன் ஒரு விறகுக்கட்டோடு வருகிறான். அவனைத் திரிகூடன் என்னுங் கப்பற்சேவகன் கண்டு மற்சமோ மனிதனோவென ஐயுற்று மறைந்திருக்கின்றதருணத்திற் சுரைநாவன் என்னும் மற்றொருசேவகன் கள் நிறைந்த ஒரு புட்டியோடு வருகின்றான். இருவரும் வலிமுகனை யணுகி யவனது வரலாற்றை வினவினார்கள். வலிமுகன் தன் அன்னை முசுமுகி அத்தீவுக்கு அரசியாயிருந்ததாகவும், தான் பிரபாகரனுடைய மந்திரவலிமையினாலவனுக்கு அடிமைப்பட்டுத் துன்புறுவதாகவும், திரிகூடனும் சுரைநாவனும் ஏதாவது ஒரு சூழ்ச்சியினாற் பிரபாகரனைக் கொன்றுவிட்டாற் றான் அவர்களுக்குப் பணிவிடைசெய்துகொண்டு வாழ்தற் கொருப்படுவதாகவும் கூறினான். இதனைக் கேட்ட சேவகரிருவரும் அவ்வண்ணமே செய்வதாக வாக்களித்து வலிமுகனை யழைத்துக்கொண்டு செல்கின்றனர்.

[இவ்வளவோடு பிரதிமுகம் முடிகின்றது].

பிரபாகரனுடைய கட்டளைப்படி பிரியவிரதன் மாக்கட்டைகளை நிரையாக அடுக்கிக்கொண்டு நிற்கிறான். மாலதி யவன்பக்கத்திற் பலவாறாகிய இன்பமொழிகளைக் கூறிக்கொண்டு நிற்கிறாள். இவரிருவரையும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிரபாகரன் உள்ளம் மகிழ்ந்து இவரது நன்மைக்காகச் செய்யவேண்டிய செயல்கள் இன்னுஞ்

சிலவுள என்று தனக்குள்ளேசொல்லிக்கொண்டு புறத்தேபோய்த் தனது மந்திரவலிமையினாலே ஆகாயமார்க்கமாகச் சென்று அலாயுதமன்னனும் பிறரும் நிற்கின்ற இடத்தை யடைகிறான். பிரபாகரனுடைய கட்டளைப் படி பவனவேகன் பல மாயருபங்களைப் படைத்துவிட அவை சென்று அலாயுதமன்னன் முதலியோரைச் சூழ்ந்து நின்று நடிக்கின்றன. இவற்றைக் கண்டு அதிசயமுற்றிருந்த மன்னனாதியோர் முன்னிலையில் அம் மாயாரூபங்கள் பல தட்டுக்களிற் பழம் பலகாரம் முதலியவைகளைவைக்கப் பசியினால் வருந்தியிருந்த மன்னனும் பிறரும் அவ்வுணவினை யுண்ணப்புகுந்தனர். அத்தருணத்திற் பவனவேகன் மாயத்தினாற் பழம் பலகாரம் முதலியவற்றை மறையும்படிசெய்துவிட்டு ஒரு பெரிய பருந்துருபமாகத் தோற்றிக் குழுமியிருந்த அலாயுதமன்னனாதியோரைப் பார்த்து, "நீவிர் கொடுந்தொழிலாளர்; மக்களிடையே வசித்தற்கு அருகரல்லாதவரானபடியாற் கடல் நும்மை மனிதசஞ்சாரமில்லாத இத்தீவில் உமிழ்ந்துவிட்டது ; நான் நுமது அறிவினைமயக்கி நும்மை உன்மத்தராக்கியிருக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட மன்னனாதியோர் உடைவாளையுருவிப் பருந்தாகவந்த பவனவேகனை வெட்டுதற்கு முயன்றனர். அன்னார் கைகள் ஸ்தம்பித்து நின்றுவிட்டன. பவனவேகன் நகைத்து "மூடர்களே! நானும் என் பரிசனரும் விதியின்செயலை முற்றுவிக்குங் கருவிகள் ; நுமது ஆயுதங்கள் எம்மைத் தீண்டா. மைலத்து மன்னனாகிய பிரபாகரனையும் அவனது மூன்றுவயதுக் குழந்தையையும் ஆதரவின்றி யலைகடலில்விட்ட துஷ்டராகிய நுமக்கு இரங்குவாருமுளரோ" என்றனன். மாயாரூபங்கள் மீட்டுந் தோற்றி மன்னனாதியோரைப் பரிகசித்து நடித்தன. அன்னார் பிரபாகரனுக்குத் தாம் விளைத்த தீமையை நினைந்து துன்புற்றிருப்பதோடு கருப்பம் முடிகின்றது.

பிரபாகரன் தனது மந்திரசக்தியினால் தேவமாதர்பலரைப் படைத்துப் பிரியவிரதனும் மாலதியுங் கண்டு களிகூரும்படி தான் படைத்த தேவமாதரைக்கொண்டு நடனஞ்செய்விப்பதும், வேட்டைநாய்களைப் படைத்து வலிமுகன், திரிகூடன், சுரைராவண் என்னும் மூவரையுந் துன்புறுத்துவதும் வினைவினுள் வருவன,

பவனவேகன் பிரபாகரனுடைய கட்டளைப்படி அலாயுதன் சங்கவருணன் அநாகுலன் கௌசிகன் முதலியோரைக் கொண்டுவந்து நிறுத்த

லும், அலாயுதன் தன்மைந்தன் பிரியவிரதன் மாலதியோடு விளையாட்டயர்ந்துகொண்டிருப்பதைக் காண்பதும், இளையாரிருவருடைய மணவினைக்கு இயைவதும், பிரபாகரனை அழைத்துச்சென்று மைலத்துக்கு மன்னனுக்க ஒருப்படுவதும், பிரபாகரன் பவனவேகனை விடுதலையாக்கிவிட்டுத் தனது மந்திர நூல்களைக் கடலினுள் எறிந்துவிடுவதும், அனைவரும் சீயதேசத்துக்குப்போகக் கப்பலேறுவதும் துய்த்தல் என்னும் ஐந்தாஞ்சந்தியினுள் வருவன.

வலிமுகன், சங்கவருணன், அநாகுலன் என்போரது சிறுமை வெளிப்படுமிடத்துச் சிறுமைபற்றிய மருட்கைச்சுவையும், பிரப்பாகரனது பெருந்தன்மை வெளிப்படுமிடத்துப் பெருமைபற்றிய மருட்கைச்சுவையும், பிரபாகரனது மந்திரவலிமையினாலே பழம் முதலியவை தோற்றி மறைவதைக்கண் டதிசயிக்கும்போது ஆக்கம்பற்றிய மருட்கைச்சுவையுந் தோற்றுவன. பெருமை சிறுமையென்புழி அளவுமாத்திரமல்ல, அத்தன்மையுங் கொள்ளப்படும். “புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே” எனத் தொல்லாசிரியர் வகுத்துக்கூறிய மருட்கைச்சுவைக்கு இந்நாடகம் இலக்கியமாயினமை காண்க.

ரு. அச்சமுணர்த்தும் மகபதிசரிதையை யாராயப்புகுவாம்.

சுடுகாட்டிலே காரிருளிலே இடிமுழக்கமும் மின்னலுந் தோற்ற அவற்றிடையே சவந்தின்பெண்டிராகிய மூன்று இடாகினிமாதர் தோற்றிச் சிறிதுநேரம் வார்த்தையாடி மறைகின்றனர்.

[இது முதலங்கத்தின் முதற்காட்சியாகும்].

அங்கதேயத்து மன்னனாகிய இடங்காராஜன் தனது புதல்வராகிய மங்கலவர்ம்மன் அனலவர்ம்மனோடும் பரிசனரோடும் தோற்றி மகபதியென்னுஞ் சேனைத்தலைவனுடைய இராஜபத்தியையும் வீரச்செயலையுங் கேள்வியுற்று அவனைத் தனது அரசியலின்கீழுள்ள கூடாநாட்டுக்கு அதிபதியாக்கும்படி மந்திரிமாருக்குக் கட்டளையிடுகிறான்.

[இது முதலங்கத்தின் இரண்டாங் காட்சி].

சுடுகாட்டிலே முன்போலக் காரிருளிலே இடாகினிமாதர்மூவருந் தோற்றித் தாம்விளைத்த தீச்செயல்களைக் கணக்கிட்டுக்கொண்டிருக்கும்

சமயத்தில் அவ்வழியே சேனைத்தலைவராகிய மகபதியும் தனபதியும் வருகின்றனர்.

தனபதி: (இடாகினிமாதரைக் கண்டு) ஈதென்ன? வற்றிக்காய்ந்த உடலும்கோரரூபமுமாகத்தோற்றுகிற இவை இவ்வுலகில் வாழ்வனவா? நீவிர் உயிருள்ள தோற்றங்களா? மனிதர்வினவுக்கு விடையளிப்பீரா? வற்றிக் காய்ந்த உதட்டிலே நீவிர் விரலைவைத்திருப்பதைப் பார்க்கும்போது எனது வார்த்தை நுமக்குப் புலப்படுகிறதென்றெண்ணவேண்டியிருக்கிறது. நீவிர் பெண்பாலாராகத் தோற்றுகிறீர்; நுமக்குத் தாடிமயிரிருக்கின்றபடியாற் பெண்பாலரென்று சொல்லவும் இடமில்லை.

மகபதி: நீவிர் யாவர்? வார்த்தைபேச இயலுமானால் என் கேள்விக்கு மறுமொழி கூறுவீர்.

முதல் இடாகினி: மகபதியே வாழ்க! கலாபநாட்டுக்கு அதிபதியே வாழ்க!

இரண்டாம் இடாகினி: மகபதி வாழ்க! கூடாரநாட்டுக்கு அதிபதியே வாழ்க!

மூன்றும் இடாகினி: மகபதியே வாழ்க! முடிமன்னனுவோனே வாழ்க!

தனபதி: (இடாகினிகளை நோக்கி) காலத்தின் விளைவினைக் கருதி யுரைக்கக்கூடிய வன்மை நுமக்கு உளதாயின் எந்தத்தானியம் வளருமென்பதை யாராய்ந்து சொல்லுவீராக. நான் அஞ்சவும் மாட்டேன்; நும்மை யிரந்துநிற்கவும் மாட்டேன்; நுமது தயவையோ வெறுப்பையோ நான் பொருட்படுத்தவில்லை.

முதல் இடாகினி: வாழ்க!

இரண்டாம் இடாகினி: வாழ்க!

மூன்றும் இடாகினி: வாழ்க!

முதல் இடாகினி: மகபதியிற் றாழ்ந்தாய், மகபதியி லுயர்ந்தாய்.

இரண்டாம் இடாகினி: அத்தனை பாக்கிய மில்லை, என்றாலும் பாக்கியவானே.

மூன்றும் இடாகினி: நீ மன்னனாகமாட்டாய், மன்னர்க்குத் தந்தை யாவாய். மகபதியே தனபதியே நீவிர் வாழ்க.

மகபதி: நீவிர் சொன்னதை விளக்கமாகச் சொல்லுவீர். நான் கலாப நாட்டுக்கு அதிபன் என்பதை யறிவேன்; கூடாநாட்டதிபன் உயிரோடிருக்கும்போது நீவிர் என்னைக் கூடாநாட்டதிபனென்று வாழ்த்திய தென்னை? நான் மன்னனாவதும் ஆகாதகாரியமே.

[இடாகினிகள் மறைந்துவிடுகிறார்கள்.]

இடங்காராஜனது மந்திரிமார் வந்து மன்னன் மகபதியைக் கூடா நாட்டுக்கு அதிபனாக்கியிருப்பதாகக் கூறுகின்றார்கள். அவர் வார்த்தையைக் கேட்ட மகபதி இரண்டாம் இடாகினியுடையவார்த்தை நிறைவேறியதைக் கண்டு அகமகிழ்ந்து தான் மன்னனாவதும் நிச்சயமென்று தன்னுள்ளே நினைத்து மகிழுகிறான்.

[இந்நிகழ்ச்சிகள் முதலங்கம் மூன்றுங் காட்சி.]

மகபதி தனபதியாகிய சேனைத்தலைவ ரிருவரும் அரமனைக்குப்போய் இடங்காராஜனைப் பணிந்து நின்றனர். மன்னன் அவரோடு கலந்துரையாடியதறபின் தானுந் தலைபுதல்வ ரிருவரும் சிறிதுதூரத்திலுள்ள ஒரு நகரிக்குப் போக எண்ணியிருப்பதாகச் சொல்லுகிறான். வழியிற் றன் மனையிற் றங்கியிருந்துபோகவேண்டு மென்று மகபதி குறையிரந்து கேட்க மன்ன னொருப்படுகிறான்.

[இவை முதலங்கம் நான்காங்காட்சி.]

மகபதியின் மனைவியாகிய மகபதிப்பிரியை தனது நாயக னெழுதிய கடிதத்தைப் படித்து இடாகினிக ளுரைத்த வாழ்த்துரையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு சேவகன் வந்து இடங்காராஜனும் பரிசனரும மகபதியினுடையமனையில் இராத்தங்கிப்போவதற்கு வருவதாக உரைக்கின்றான். சிறிதுநேரத்தில் மகபதியும் வந்து அந்தச்செய்தியையே தெரிவிக்கின்றான்.

மகபதி: என் பிரியநாயகியே! இடங்காராஜன் இன்றிரவு இங்கு வருகின்றார்.

மகபதிப்பிரியை: அவர் இங்கிருந்து என்று போகின்றார்.

மகபதி: ஒருவேளை நாளை யிவ்விடமிருந்து புறப்படலாம்.

மகபதிப்பிரியை: அந்த நாளை ஒருநாளும் வரப்போவதில்லை. என் கணவா! நினது முகக்குறி திறந்தபுத்தகம்போல அகத்தேயுள்ள எண்ணங்களையெல்லாம் எனக்குப் புலப்படுத்துகின்றது. தீங்கற்ற புஷ்பம்போல நின்முகங் காணப்படினும் பூவினுள்ளிருக்கின்ற புழு என் கண்ணுக்கு நன்கு தோற்றுகிறது. வருகிற அதிதியை நான் உபசரிக்கிறேன்: இன்றிரவைக்கு நீர் செய்யவேண்டிய பெருங்காரியத்தைச் செய்துமுடிப்பீராயின் இனி வருகின்ற இரவு பகலெல்லாம் நாம் முதன்மையுற்றிருப்போம்.

மகபதி: இவ்விஷயத்தை இன்னும் ஆலோசிக்கவேண்டும்.

மகபதிப்பிரியை: எடுத்தகாரியம் முடியுமுன் கலக்கமுற்றோன் அஞ்சினவனுவான்; ஆகவேண்டியவற்றை யான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[இவை முதலங்கம் ஐந்தாங்காட்சி.]

அரசனும் மங்கலவர்ம்மனும் அனலவர்ம்மனும் தனபதியும் மாதவனென்னும் மந்திரியும் பிற பரிசனரும் தீவட்டிவெளிச்சங்களோடு மகபதியின்வீட்டுக்கு வருகிறார்கள். அரசன் மகபதியின்மனை யழகானது என்று சொல்லிக்கொண்டிருக்கிறவெல்லையில் மகபதிப்பிரியை வந்து இனிய மொழிகள் கூறி மனையினுள் ளழைத்துச் செல்லுகிறாள்.

[இவை முதலங்கம் ஆறுங்காட்சி.]

மகபதி தனியிடத்தில் நின்று பலவாறுகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அவன்மனைவி வந்து ஆசைவார்த்தைகூறி இடங்கராஜனைக் கொன்றுவிடும்படி தூண்டுகிறாள்.

[இது முதலங்கம் ஏழாங்காட்சி. இவ்வளவோடு முகம் முடிகின்றது.]

துயிலுகின்ற இடங்கராஜனைக் கொல்லநினைத்து இராஜனுடைய படுக்கையறையைநோக்கிப் போகும்போது மகபதியின் கண்முன்னே இரத்தந்தோய்ந்த ஈட்டி யொன்று உருவெளித்தோற்றமாகக் காணப்படுவதும், அவன் அஞ்சிப் பின்வாங்குவதும், மகபதிப்பிரியை வந்து ஆசைவார்த்தை கூறி ஊக்கப்படுத்துவதும், அவன் முற்பட்டுச்செல்வதும், இரத்தந்தோய்ந்தகையோடு வருவதும், மறுநாட்காலையில் மாதவனும் பிறரும்வந்து இடங்கராஜனுடைய உடலத்தைக் காண்பதும், மகபதியும் மகபதிப்பிரியையுந் துன்புற்றார்

மூன்றும் இடாகினி : நீ மன்னனாகமாட்டாய், மன்னர்க்குத் தந்தையாவாய். மகபதியே தனபதியே நீவிர் வாழ்க.

மகபதி : நீவிர் சொன்னதை விளக்கமாகச் சொல்லுவீர். நான் கலாப நாட்டுக்கு அதிபன் என்பதை யறிவேன்; கூடாநாட்டதிபன் உயிரோடிருக்கும்போது நீவிர் என்னைக் கூடாநாட்டதிபனென்று வாழ்த்திய தென்னை? நான் மன்னனாவதும் ஆகாதகாரியமே.

[இடாகினிகள் மறைந்துவிடுகிறார்கள்.]

இடங்காராஜனது மந்திரிமார் வந்து மன்னன் மகபதியைக் கூடா நாட்டுக்கு அதிபனாக்கியிருப்பதாகக் கூறுகின்றார்கள். அவர் வார்த்தையைக் கேட்ட மகபதி இரண்டாம் இடாகினியுடையவார்த்தை நிறைவேறியதைக்கண்டு அகமகிழ்ந்து தான் மன்னனாவதும் நிச்சயமென்று தன்னுள்ளே நினைத்து மகிழுகிறான்.

[இந்நிகழ்ச்சிகள் முதலங்கம் மூன்றுங் காட்சி.]

மகபதி தனபதியாகிய சேனைத்தலைவ ரிருவரும் அரமனைக்குப்போய் இடங்காராஜனை பணிந்துநின்றனர். மன்னன் அவரோடு கலந்துரையாடியதறபின் தானுந் தனபுதல்வ ரிருவரும் சிறிதுதூரத்திலுள்ள ஒரு நகரிக்குப் போக எண்ணியிருப்பதாகச் சொல்லுகிறான். வழியிற தன் மனையிற் றங்கியிருந்துபோகவேண்டு மென்று மகபதி குறையிரந்து கேட்க மன்ன னொருப்படுகிறான்.

[இவை முதலங்கம் நான்காங்காட்சி.]

மகபதியி மனைவியாகிய மகபதிப்பிரியை தனது நாயக னெழுதிய கடிதத்தைப் படித்து இடாகினிக ளுரைத்த வாழ்த்துரையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு சேவகன் வந்து இடங்காராஜனும் பரிசனரும மகபதியினுடையமனையில் இராத்தங்கிப்போவதற்கு வருவதாக உரைக்கின்றான். சிறிதுநேரத்தில் மகபதியும் வந்து அந்தச்செய்தியையே தெரிவிக்கின்றான்.

மகபதி : என் பிரியநாயகியே! இடங்காராஜன் இன்றிரவு இங்கு வருகின்றார்.

மகபதிப்பிரியை : அவர் இங்கிருந்து என்று போகின்றார்.

மகபதி : ஒருவேளை நாளை யிவ்விடமிருந்து புறப்படலாம்.

மகபதிப்பிரியை: அந்த நாளை ஒருநாளும் வரப்போவதில்லை. என் கணவா! நினது முகக்குறி திறந்தபுத்தகம்போல அகத்தேயுள்ள எண்ணங்களையெல்லாம் எனக்குப் புலப்படுத்துகின்றது. தீங்கற்ற புஷ்பம்போல நின்முகங் காணப்படினும் பூவினுள்ளிருக்கின்ற புழு என் கண்ணுக்கு நன்கு தோற்றுகிறது. வருகிற அதிதியை நான் உபசரிக்கிறேன்: இன்றிரவைக்கு நீர் செய்யவேண்டிய பெருங்காரியத்தைச் செய்துமுடிப்பீராயின் இனி வருகின்ற இரவு பகலெல்லாம் நாம் முதன்மையுற்றிருப்போம்.

மகபதி: இவ்விஷயத்தை இன்னும் ஆலோசிக்கவேண்டும்.

மகபதிப்பிரியை: எடுத்தகாரியம் முடியுமுன் கலக்கமுற்றோன் அஞ்சினவனுவான்; ஆகவேண்டியவற்றை யான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[இவை முதலங்கம் ஐந்தாங்காட்சி.]

அரசனும் மங்கலவர்மனும் அனலவர்மனும் தனபதியும் மாதவனென்னும் மந்திரியும் பிற பரிசனரும் தீவட்டிவெளிச்சங்களோடு மகபதியின்வீட்டுக்கு வருகிறார்கள். அரசன் மகபதியின்மனை யழகானது என்று சொல்லிக்கொண்டிருக்கிறவெல்லையில் மகபதிப்பிரியை வந்து இனிய மொழிகள் கூறி மனையினுள் ளழைத்துச் செல்லுகிறாள்.

[இவை முதலங்கம் ஆறாங்காட்சி.]

மகபதி தனியிடத்தில் நின்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அவன்மனைவி வந்து ஆசைவார்த்தைகூறி இடங்காராஜனைக் கொன்றுவிடும்படி தூண்டுகிறாள்.

[இது முதலங்கம் ஏழாங்காட்சி. இவ்வளவோடு முகம் முடிகின்றது.]

துயிலுகின்ற இடங்காராஜனைக் கொல்லநினைத்து இராஜனுடைய படுக்கையறையைநோக்கிப் போகும்போது மகபதியின் கண்முன்னே இரத்தந்தோய்ந்த ஈட்டி யொன்று உருவெளித்தோற்றமாகக் காணப்படுவதும், அவன் அஞ்சிப் பின்வாங்குவதும், மகபதிப்பிரியை வந்து ஆசைவார்த்தை கூறி ஊக்கப்படுத்துவதும், அவன் முற்பட்டுச்செல்வதும், இரத்தந்தோய்ந்தகையோடு வருவதும், மறுநாட்காலையில் மாதவனும் பிறரும்வந்து இடங்காராஜனுடைய உடலத்தைக் காண்பதும், மகபதியும் மகபதிப்பிரியையுந் துன்புற்றார்

போலப் பிரலாபிப்பதும், அரசனுடைய சயனக்கிருஹத்தைக் காத்திருந்த காவலாளர் கள்ளினை நிறையவுண்டமையினாலே மயக்கமேலிட்டு அரசனைக் கொன்றுவிட்டாரென்று அவர்மேற் குற்றஞ்சாட்டுவதும், அதற்குச் சான்றாக அன்னாருடைய முகத்தினுங் கத்தியினும் இரத்தக் கறை படிந்திருப்பதைக் காட்டுவதும், காவலாளரிருவரையும் மகபதி கொன்றுவிடுவதும், மகபதியினுடையகுறிப்பினை யறிந்த மங்கலவர்மனும் அனலவர்மனும் தம்முயிர்க்குச் சேதம் வந்துவிடுமோ வென்றஞ்சிக் கலிங்கநாட்டுக்கு ஓடிவிடுவதும், நாட்டைவிட்டோடிய மங்கலவர்ம அனலவர்மரே தந்தையைக் கொன்றாரென்று மந்திரி பிரதானியர் நிச்சயிப்பதும், காலஞ்சென்ற அரசனுக்கு நெருங்கியசுற்றத்தாலும் வலிமை பொருந்திய சேனைத்தலைவனுமாகிய மகபதியே மன்னனாதற்குத்தக்கவனென்று அனைவரும் நிச்சயித்து மகபதிக்கு மணிமுடிசூட்டுதலும் பிரதிமுகமாவன.

இடாகினிகள் தனபதியை, "மன்னர்க்குத் தந்தையாவாய்" என்று வாழ்த்திய வாழ்த்துரையை நினைத்து மகபதி துன்புறுவதும், கொடிய பாவச்செயலினாலே தான் பெற்றுக்கொண்ட இராஜ்யந் தனக்குப்பின் தன் சந்ததியாருக்குப் போகாது மாற்றானாகிய தனபதி சந்ததியாருக்குப் போகப்போகின்றதே யென்று ஏக்கமுற்ற மகபதி கொலைத் தொழின்மாக்களை யழைத்துத் தனபதியையும் அவனதுபுதல்வன் வளைவணனையும் கொன்றுவிடும்படி கட்டளையிடுவதும், அன்னார் நள்ளிருளில், தனபதியைக் கொன்றுவிடுவதும், வளைவணன் தப்பியோடுவதும், மகபதி மந்திரி பிரதானியருக்கும் பிறருக்கும் பெரியதொரு விருந்தளிப்பதும், அரசனாகிய மகபதிக்கென் றிடப்பட்ட ஆசனத்தில் தனபதியின் பிரேதரூபந்தோற்றி யுட்கார்ந்திருப்பதும், அதனைப் பிறர் காணாதிருக்க மகபதிமாத்திரங் கண்டு அஞ்சுவதும், ஜனங்கள் மகபதியினுடையசெயலைக் கண்டு ஐயுறுவதும், மாதவனென்னும் மந்திரி கலிங்கநாட்டுக்கு ஓடிவிடுவதும் கருப்பம் ஆவன.

இடாகினிமாதர் தோற்றி நாய்நாக்கு, பல்லியின்கால், ஆந்தைச் சிறகு, வெளவாற்றோல், குழந்தை கைவிரல் என்றின்னனவற்றை யிட்டு உதிரநிணத்தைப் பெய்து கூழடுவதும், மகபதி வந்து மேல் நடக்கப் போவனவற்றைத் தெரிவிக்கும்படி இடாகினிகளை வினவுவதும், கூழடு

கின்ற பானையினின்று ஆயுதமணிந்த ஒரு தலை தோற்றி, "மகபதியே மாதவனைப்பற்றிக் கவனமாயிரு" என்று சொல்லி மறையச் சிறிது நேரத்துக்குள் இரத்தம்போல் மேனியையுடைய ஒரு சிறுகுழந்தை தோற்றி "மகபதியே யஞ்சாதிரு, ஸ்த்ரீ பெற்ற மைந்தனால் உனக்குத் தீங்கு விளையாது" என்ன அதன்பின்னர் முடிசூடிய ஒரு பாலன்வடிவம் கையி லொரு சிறு மரத்தைத் தாங்கி யெழுந்து "மகபதியே சிங்கம்போல் அச்சமற்றிரு, வர்ணாணியம் நின் நகரிக்குவந்தாலன்றி நீ தோல்வி யடையப்போவதில்லை" யென்று சொல்லுவதும், மகபதியின்கண்முன்னே தனபதியும் அரசர் எண்மரூந் தோற்றுவதும், இடாகினிகள் மறைந்து விடுவதும், மகபதி மாதவன்மனைக்குக் கொலைத்தொழின்மாக்களை யனுப்பி மாதவனது மனைவியையும் புதல்வனையும் கொல்விப்பதும், மாதவனும் மங்கலவர்ம்மனும் இவற்றையெல்லாங் கேள்வியுற்றுக் கலிங்க நாட்டுச் சேனைகளோடு அங்கநாட்டை யெதிர்க்க நிச்சயிப்பதும் விளைவு ஆவன.

மகபதிப்பிரியை வியாதியினால் துன்புறும்போது தன்னை மறந்து தன் மனத்திற் கிடந்த இரகசியங்களை வெளியிடுவதும், அதனைக் கேட்டு நின்றவைத்தியன் முதலியோர் இடங்கராஜனைக் கொன்றவர் யாரென அறிந்துகொள்வதும், மங்கலவர்ம்மனுஞ் சேனைகளும் வர்ணாணியத் துக் கூடாக வரும்போது ஒவ்வொரு மரக்கிளையைவெட்டிக் கையி லேந் திக்கொண்டுவருவதும், காவலாள னொருவன் வர்ணாணியம் நகரியை நோக்கி வருகின்றதென மகபதிக்கு உரைப்பதும், மகபதி யச்சமுற்றுப் பின்பு போர்க்கோலங்கொண்டு வெளிச்செல்வதும், மாதவனும் மகபதி யுந் தனியமர்புரிவதும், ஸ்த்ரீபெற்ற மைந்தனாற் றனக்கு அழிவில்லை யென்று மகபதி யுரைப்பதும், அன்னை யிறந்தபின் அவள் வயிற்றைக் கிறி மருத்துவர் தன்னை யெடுத்தமையினால் தான் ஸ்த்ரீபெற்ற மைந்த னில்லை யென்று மாதவ னுரைப்பதும், மாதவன் கைவாளால் மகபதி யிறப்பதும் மங்கலவர்ம்மன் அரசனாவதும் துய்த்தல் என்னும் ஐந்தாஞ் சந்தியாவன.

"அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப், பிணங்கல் சாலா வச்ச நான்கே" யென்புழிக் கூறிய நால்வகை யச்சத்தினுள் அணங்கினாலும், அரசனாலும் எய்திய அச்சச்சுவை இந்நாடகத்தினுள் நிரம்ப வந்தமை

காண்க. "அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறுகிய பதினெண் கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற் றொழிலராகிய சவந் தின்பெண்டிர்முதலாயினாரும் உருமிசைத்தொடக்கத்தனவு" மென உறுப்பியலுட் கூறினும். பெரும்புயற்சரிதையினுட் டோற்றுகின்ற மாயரூபங்கள் அச்சத்தை விளைக்காது மருட்கையை விளைப்பதும், இந் நாடகத்தினுட் டோற்றுகின்ற இடாகினிகள் மருட்கையொழித்து அச் சத்தை விளைப்பதும் நுணுகி ஆராயற்பாலன. தலைவனது மரணத்தை யரங்கத்திற் காட்டுதல் கூடாதென வடமொழி நூல்கள் கூறுவன. இடங்க ராஜனதுமரணம் வெளிப்படையாகக் காட்டப்படாது குறிப்பினு லுணர்த்தப்பட்டதை நோக்குக.

சு. பெருமிதமும் பிறசுவையு முணர்த்தும் வணிகதேயவர்த்த கன்சரிதையை யாராயப்புகுவாம்.

மணலிநகரத்தில் வசித்த ஒரு செல்வப்பிரபு ஆண்மக்களில்லாமையி னாலே தனது பொருள்முழுவதையும் தன் மகள் விஜயைக்கு உரிமை யாக்கிப் பொன்னினாலும், வெள்ளியினாலும், ஈயத்தினாலும் மூன்று பேழைகளைச்செய்து, அவற்றினுள் ஒன்றினுள்ளே விஜயையினுடைய சாயலெழுதிய சித்திரத்தை வைத்து, யாவனொருவன் சித்திரம்வைக்கப் பட்டிருக்கின்ற பேழை யிதுவென்று நிச்சயித்துச் சொல்லுகிறானோ அவனுக்கே விஜயை மனைவியாகவேண்டுமென்று ஏற்பாடுசெய்து இவ் வுலகவாழ்வை நீத்தனன்.

[நாடகத்துக்குப் புறம்பாகிய இவ்விஷயத்தைக் கதைத்தொடர்பை யறிந்துகொள்வதற்காக ஈண்டுத் தந்தனம்.]

விஜயையைப் பெறவிரும்பிய வாசவனென்னும் வணிகதேயத்து வணிகன் தனது நண்பனாகிய அநந்தனென்னும் வணிகனையடைந்து தான் மணலிநகருக்குச் சிறப்பாகப் போவதற்கு மூவாயிரம்பொன் கடன் கொடுக்கும்படி கேட்டனன். அநந்தன் தன்னிடங் கைக்காசில்லாதிருந் தமையினால், சாபலனென்னுங் கோமுட்டிச்செட்டியிடம் மூவாயிரம் பொன் கடன்வாங்கிக் கொடுத்தனன். சாபலன் கடுவட்டி வாங்குகிற கொடியவனானமையினால், வட்டியின்றிப் பணங்கொடுத்துதவும் அநந் தன்மீது நிறைந்த அழுக்காறுடையவனா யிருந்தான், அநந்தன் மூவா

யிரம்பொன் கடன்கேட்டதும், தருணம்வாய்த்ததென்று தன்னுள்ளே நினைத்து மகிழ்ந்த சாபலன் புறத்தே நகைமுகங் காட்டிப் பொன்னைக் கொடுத்துவிட்டு, மூன்றுமாதத்துக்குள் திருப்பிக்கொடுக்காவிட்டால் அநந்தனுடைய உடலிலிருந்து நாற்பதுரூபா எடையளவாகிய இறைச்சியை வெட்டிக்கொள்வதற்குத் தனக்கு உரிமையுண்டென்று ஒரு சீட்டெழுதுவித்துக்கொண்டான். மூன்றுமாதத்திற்குள் தன்னுடைய கப்பல்கள் வந்துவிடுவன வென் றெண்ணிய அநந்தன் சீட்டுக்குக் கைச்சாத்திட்டான். கப்பல்கள் வரவில்லை. சாபலன் நீதிமன்றுக்குப் போய் வழக்குத் தொடுத்தான்; வாசவன் ஆறாயிரம்பொன் கொடுப்பதாகக் கூறியும் சாபலன் ஒருப்படாது சீட்டில் விதித்தபடி இறைச்சியே வேண்டுமென்றுநின்றான். வாசவனுக்கு மனைவியாகிய விஜயைநாயகனும் பிறரு மறியாதவண்ணம் நியாயதுரந்தரவேடத்தோடு வந்து மன்றிலிருந்தோருக்குச் சட்டத்தை யெடுத்துக்காட்டி அநந்தனைக் காப்பாற்றிச் சாபலனைத் தோல்வியடையப்பண்ணுகிறாள். இதுவே கதையின் சுருக்கம். மேற் குறிப்பிட்ட நாடகபாத்திரரோடு வணிபதேயத்து மன்னன், விஜயையைப்பெறவிரும்பியகுறும்பொறைநாடன்,கானகநாடன்என்னும் குறுநிலமன்ன ரிருவர், அநந்த வாசவருக்கு நண்பராகிய கருணாகரன் சலசலோசனன் சாரகுமார னென்னும் மூவர், சாபலனது நண்பனாகிய தூவல னென்னுங் கோமுட்டிச்செட்டி, சாபலனது வேலைக்காரனாகிய அகிஞ்சன னென்னும் விதூஷகன், அகிஞ்சனன் தந்தையாகிய விருத்தன், விஜயையினது தோழியாகிய அங்கனை, சாபலன் புதல்வியாகிய பதுமை, பதுமைமேற் காதல்கொண்ட புட்கலன், வேலைக்காரர் என் றின்னோர் இந்நாடகத்தினுட் டோற்றுவர். இனி, நாடகத்தி னமைப்பைக் காட்டுவாம்.

[அங்கங்களை I, II, III, IV, V என்னும் இலக்கங்களாலும், அங்கத்தின் உட்பிரிவுகளாகிய காட்சிகளை 1, 2, என் றித்தகைய இலக்கங்களாலும் குறியீடுசெய்வாம். உதாரணமாக, "II 3". இரண்டாம் அங்கத்தின் மூன்றாவது காட்சி என்பதைக் குறிக்கும்].

I 1. நாடகபாத்திரர்: அநந்தன், சலசலோசனன், சாரகுமாரன், வாசவன், புட்கலன், கருணாகரன்.

நிகழ்ச்சி: அநந்தன் மனச்சோர்வுற்றுத் தனது சோகத்துக்குக் காரண மெதுவென நண்பரை விசாரித்துக்கொண்டிருப்பதும் வாசவன்

வந்து தான் மனைவிக்குப் போக நினைத்திருக்கும் எண்ணத்தைக் கூறி மூவாயிரம்பொன் கடன் கேட்பதும்.

I. 2. நா. பா. விஜயை, அங்கனை.

நி. விஜயை தன்னை நாடிவந்து தன்புற்றுப்போன அரசிளங்குமரரையும் பிறரையும்பற்றித் தோழியோடு வார்த்தையாடுதல்.

I. 3. நா. பா. அநந்தன், வாசவன், சாபலன்:

நி: சீட்டுக் கொடுத்து மூவாயிரம்பொன் கடன்வாங்குதல்.

II. 1. நா. பா.: குறும்பொறைநாடன், விஜயை, அங்கனை, பரிசனர்.

நி.: விஜயை தன்னைவிரும்பிவந்த குறும்பொறைநாடனைநோக்கி, "மன்ன! இப்பேழைகளுள் ஒன்றி லென் னுருவ முண்டு அதனை நீர் தெரிந்தெடுப்பீராயின் நான் உமக்கு மனைவியாகவேண்டும், தெரிந்தெடுக்கத் தவறுவீராயின் பேழையின் மர்ம்மத்தைப் பிறருக்குத் தெரிவியாதிருப்பதோடு நீர் சீவியகாலம் முழுதும் பிரமசாரியா யிருக்க வேண்டும்; இது என் தந்தையின்கட்டளை; இதற்கு உடம்படுவீராயின் கோயிலிற் சென்று சத்தியஞ்செய்து வருவீர்; பேழையிருக்குமிடத்துக்கு நும்மை யழைத்துச்செல்வேன்" என்று கூறுதல்; குறும்பொறைநாடன் உடன்பட்டுச் சத்தியஞ்செய்யப்போதல்.

II. 2. நா. பா.: அகிஞ்சனன், விருத்தன், வாசவன், கருணுகரன்.

நி.: அகிஞ்சனன் சாபலனுடைய சேவகத்தை விட்டு ஓட நினைத்து வீதியிற் செல்லும்போது தனது தந்தையாகிய விருத்தனைக் கண்டு அவனையும் அழைத்துச் சென்று வாசவனிடத்துச் சேவகனுக அமர்தல்.

[விருத்தனுகிய தந்தை கண்ணெளி யிழந்திருந்தமையினுல் ஒன்றினையொன்ருக மாற்றிச்சொல்லி அவனேடு பலவாருக வார்த்தையாடும் அகிஞ்சனனுடைய கூற்றுக்கள் நகைச்சுவை நிரம்பியன.]

II. 3, நா. பா.: பதுமை, அகிஞ்சனன்.

நி.: அகிஞ்சனன் பதுமையிடம் விடைபெறச் செல்லுதல்; அவள் புட்கலனிடங் கொடுத்துவிடும்படி அகிஞ்சனன்கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தல்.

II. 4. நா. பா.: கருணாகரன், புட்கலன், சலசலோசனன், சாரகுமாரன், அகிஞ்சனன்.

நி.: அகிஞ்சனன் பதுமையினது நிருபத்தைப் புட்கலனிடங் கொடுத்தல். பதுமை ஆண்பிள்ளைவேடத்தோடு தந்தைவீட்டைவிட்டுத் தன்னோடு உடன்வருவதற் கிசைந்திருப்பதைப் புட்கலன் தனது நண்பருக்குத் தெரிவித்தல்.

II. 5. நா. பா.: சாபலன், அகிஞ்சனன், பதுமை.

நி.: சாபலன் தான் புறத்தே விருந்துண்ணப் போவதாகவும் வீட்டினைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படியும் பதுமைக்குச் சொல்லுதல்.

II. 6. நா. பா.: கருணாகரன், சாரகுமாரன், புட்கலன், பதுமை.

நி.: புட்கலன் பதுமையை யுடன்கொண்டேகல்.

[பின் அநந்தன் வந்து கருணாகரனைக் கண்டு வாசவனோடு மணவிக்குப் போகும்படி அனுப்புதல்.]

II. 7. நா. பா.: விஜயை, குறும்பொறைநாடன், பரிசனர்.

நி.: குறும்பொறைநாடன் பொற்பேழையைத் திறந்து அதனுள் ஒரு தலையோடும் ஒரு பத்திரமு மிருக்கக்கண்டு பத்திரத்தைப் படித்தல்.

அப் பத்திரத்தில்,

"மின்னுவ வெல்லாம் பொன்னா காவெனு
நன்மொழி பன்முறை நவிலக் கேட்டனை
யென்மேற் புறத்தி னெழிலினை நோக்கி
யின்னுயி ரீந்தோ ரியம்பிடிற் பலரே
பிணம்பொதி தாழி யரும்பொன தெனினு
நிணங்கொளும் புழுவுண் ணிறைதலு மியல்பே

ஆண்மையொ டறிவு கேண்மையுற் றிருப்பின்
விடைபெறு திவணீ மேவுதல் சாலும்
இளையோய் மதியின் முதியையு மல்லை
களைக ணுற்றநின் காதலும் வறிதே
போதி யென்னப் புகல்வதென் கடனே.”

என் றெழுதியிருப்பதைக் கண்டு குறும்பொறைநாடன் மனத்துயருற்றுப் போய்விடுதல்.

II. 8. நா. பா.: சலசலோசனன், சாரகுமாரன்.

நி.: பதுமை வீட்டைவிட்டோடியபின்பு சாபலன் வந்து தன் மகள் பொன் முடிப்புகள் பலவற்றைக் கொண்டு புட்கலனோடு ஓடிவிட்டாள் என்பதை யறிந்து துயருற்றசெய்தியைச் சலசலோசனன் சாரகுமாரனுக்கு அறிவித்தல்.

II. 9. நா. பா.: விஜயை, அங்கனை, கானகநாடன், ஒரு தூதுவன்.

நி.: கானகநாடன் பேழைகள் மூன்றினையும் பார்வையிடல். பொற்பேழையின்மேல், “என்னைத் தெரிந்தோர் பலரும் விரும்புவதைப் பெறுவார்” எனவும், வெள்ளிப் பேழையின்மேல், “என்னைத்தெரிந்தோர் தமது தகுதிக்கேற்றதைப் பெறுவார்,” எனவும், ஈயப்பேழையின்மேல், “என்னைத் தெரிந்தோர் தமக்கென்றிருக்கும் பொருளனைத்தினையும் ஈந்திழப்பார்” எனவும் எழுதப்பட்டிருப்பதைக் கண்ட கானகநாடன் வெள்ளிப்பேழையைத் திறக்கிறான். அதனுள்ளே மூடன்தலை யெழுதப்பட்ட ஒரு சித்திரம் இருக்கக்கண்ட கானகநாடன் இதுதானோ என் தகுதிக் கேற்றதெனக் கூறி யவலித்து ஆங்கிருந்த ஒரு பத்திரத்தை யெடுத்துப் படிக்கிறான்.

ஆங்கு,

“எழுமுறை யெரியிதன் றிண்மை சோதித்த
தெழுமுறை யாய்ந்தோர் பிழைபட விலரே
விழைபொருள் நிழலெனி னுவகையு மதுவே
நிழலினை யணையு நீர்மைய ருளரே
வெள்ளிப் பூச்சொடு விளங்கிய மூடர்
உள்ளார் காணிங் குள்ளது மதுவே

மெல்லணை மேலெம் மெல்லிய லுறினும்
நல்லோய் நானின் றலையா குவனே
ஆதலின் விரைந்து போதனின் கடனே."

என எழுதப்பட்டிருப்பதைப் படித்துக் கானகரடன் போய்விடுகிறான்.

III. 1. நா. பா.: சலசலோசனன், சாரகுமாரன், சாபலன், தூவலன்.

நி.: அநந்தனுடைய கப்பல் வந்துசேரவில்லை யென்னும் செய்தி யெங்கும் பரவுகின்றது. அநந்தன்மேற் பழிவாங்கலா மென்னு மெண்ணத்தினாற் சந்தோஷமும் மகள் பொன்முடிப்போடு ஓடிவிட்டாளென்னு மெண்ணத்தினாற் றுன்பமு முற்ற சாபலன் ஈற்றிற் சந்தோஷத்தோடு அகலுகிறான்.

III. 2. நா. பா.: வாசவன், கருணாகரன், விஜயை, அங்கனை, புட்கலன், பதுமை, சலசலோசனன், பரிசனர்.

நி.: வாசவன் பலமுறை ஆராய்ந்து நோக்கி ஈயப்பேழையைத் திறந்து, அதனுள்ளே விஜயையின் சாய லெழுதிய சித்திர மிருக்கக் கண்டு,

"யாதிங் குள்ளதென் னிறைகவ ரணங்கனுள் விஜயை
மாதின் சாயலோ வாள்விழி யசைந்தன மலர்ந்த
போது போன்றன மெல்லித ழுளம்பிணித் திடுமோர்
சூதின் சூழ்ச்சியே சுரிகுழல் சொல்லவே றுளதோ"

எனக் கூறிப் பேழையினுள் மீட்டும் பார்க்கும்போது ஒரு பத்திர மிருக்கக்கண் டெடுத்து அதனைப் படிக்கிறான்.

அப்பத்திரத்தில்,

"மையல்தீர் காட்சியை யாதலி னைய
பொய்யா நீர்மை பொருந்தப் பெற்றனை
பிறிதுவிழை யாதிப் பெரும்பொருள் பேணும்
உறுதியை யாயினிற் குரியா டன்னைக்
கைப்பிடித் தென்றுங் காத்தனின் கடனே"

என எழுதியிருப்பதைப் படித்து விஜயையினுடைய கையைப் பற்றி மகிழ்ச்சியடைகிறான். கருணாகரன் அங்கனையை மனைவியாகப் பெறுகி

ருன். இத்தருணத்திற் சலசலோசனன் அநந்தன் கொடுத்த ஒரு நிருபத்தை வாசவன்கையிற் கொடுக்க அதன்மூலமாக வாசவன் தன் நண்பன் அநந்தனுக்கு விளைந்திருக்கிற துன்பத்தை யுணர்ந்து விரைந்து புறப்பட்டு வணிகதேயத்துக்குப் போகிருன்.

III. 3. நா. பா. சாபலன், சாரகுமாரன், அநந்தன், சிறைச்சாலைத்தலைவன்.

நி.: சாபலன் சிறைச்சாலைத்தலைவனிடம் அநந்தனை யொப்புவித்தல்.

III. 4. நா. பா.: விஜயை, அங்கனை, புட்கலன், பதுமை, வேலைக்காரன்.

நி.: விஜயை புட்கலனையும் பதுமையையும் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தனது அத்தை மகனுகிய ஒரு நியாயதுரந்தரனுடைய ஆலோசனைப்படி அந்த நியாயதுரந்தரனுடைய உடைகளை யணிந்துகொண்டு, தோழியாகிய அங்கனை எழுத்தாளனுடை யணிந்துகொண்டு உடன்வர வணிகதேயத்துக்குப் போதல்.

III. 5. நா. பா.: அகிஞ்சனன், பதுமை, புட்கலன்.

நி.: உவகைக்குறிப்பு நகைக்குறிப்புத் தோன்ற உரையாடுதல்.

IV. 1. வணிகதேயத்து நீதிமன்றம்.

நா. பா.: வணிகதேயத்து மன்னன், சாபலன், அநந்தன், வாசவன், கருணுகரன், சலசலோசனன், சாரகுமாரன், நியாயதுரந்தரவேடம் பூண்ட விஜயை, அங்கனை, மன்றத்திருந்த பிறர்.

நி.: சீட்டினின்று அசையமாட்டேன் என்ற கோமுட்டிச்செட்டியாகிய சாபலனை நோக்கி விஜயை அன்பின்பாலதாகிய இரக்கத்தின் உயர்வை யெடுத்துக் கூறுதல்,—

"வன்பொறை மருவா மரபின தாகி
வானின் றிழியும் மழைத்துளி போலக்
கொடுப்போ ரெடுப்போ ரெனுமிரு வோரையும்
அடுத்துக் காப்ப தன்புசா ரிரக்கம்
வலிதினும் வலிதிது மணிமுடி சூடி

யுலகு புரக்கு முரவோற் குரைப்பின்
இலகொளி முடியினு மிரக்கம் பெரிதே
அங்கையிற் பொருந்தி யச்சம் விளைக்குஞ்
செங்கோல் புறத்தது சிந்தைய திரக்கம்
மன்னவர் மனமெனு மணியணி பீடத்
தரசுவீற் றிருக்கு முரைசா லன்பு
தேவ தேவன் றிருக்குணத் தொன்றே
நீதியொ டன்பு நிலைபெறி னீதி
ஆதியங் கடவு ளருளென நிலவும்
இறைபே ரருளிங் கெமக்கிலை யாயின்
நெறிநின் றியாரோ நீடுவாழ் வெய்துநர்
அருளினை விழைந்தே மருட்செயல் புரிதன்
மரபே யாக மதித்தலுங் கடனே"

எனப் பலவாறுகக் கூறியும் சாபலன் சீட்டினின்று அணுவளவேனும் விலகமாட்டேனெனச் சாதித்துநின்றனன்.

விஜயை : சாபலா! சீட்டின்படி அதோ நிற்கும் வணிகனுடைய இறைச்சியில் நாற்பதுரூபா எடை யுனக்குரியது. சட்டம் உனக்கு அதை யளிக்கிறது : நீதியும் அதுவேயாகும்.

சாபலன் : ஆ! நேர்மையுள்ள நீதிபதியே!

விஜயை : சொல்லப்பட்ட நாற்பதுரூபா எடை இறைச்சியை நீ இவ் வணிகனுடைய மார்பிலிருந்து வெட்டிக்கொள்ளலாம்; இதற்குச் சட்டம் இடங்கொடுக்கிறது; மன்றத்தாரும் இதனை நீதி யெனக் கொள்கின்றனர்.

சாபலன் : கல்வியில்வல்ல நீதிபதியே! தீர்ப்புச்சொல்லிவிடுக.

விஜயை : பொறு, பொறு, சாபலா! அவசரப்படாதே; இறைச்சி யுனக் குரியதென்று இச்சீட்டுச் சொல்லுகிறது. அவ்விறைச்சியை வெட்டும்போது ஒரு துளி யிரத்தஞ் சிந்தினும் அல்லது குறிக் கப்பட்ட எடையினின்று ஒரு அணுவளவேனும் ஏறக்குறைய வெட்டினாலும், நீ நின் உயிரையும் பொருள்முழுவதையும் இழந்து விடவேண்டும், இதுவே இந்நாட்டுச் சட்டம்.

சாபலன்: நான் வழக்கை விட்டுவிடுகிறேன்; என் முதலைத் தந்து என்னைப் போகவிடுங்கள்.

வாசவன்: இதோ எடுத்துக்கொள்.

விஜயை: மன்றத்தின்முன்னிலையிற் பொன் வேண்டாமென்றனை; சட்டப்படியுள்ள நீதியே யுனக்குரியது. ஒரு மனிதனுடைய உயிரைக் கவரநினைந்தாயாதலினால் உன்னைக் கொலைக்களத்துக்கு அனுப்புவதற்கு இந்நாட்டு மன்னருக் குரிமையுண்டு. உனது பொருளிற் பாதி யரசபொக்கிஷத்துக்குப்போகும். மற்றொருபாதி நீ யெவனது உயிரைக் கவரநினைத்தாயோ அவனுக்குரியது.

[அரசன் சாபலனுயிரை மன்னித்து ஒருதொகைப் பணத்தை இராஜபொக்கிஷத்துக்குக் கொடுக்கும்படி தண்டனை விதிக்கிறான். அநந்தன் தனக்கென்று மன்றத்தார் விதித்த பாகத்தைப் புட்கலனுக்கும் பதுமைக்கும் கொடுக்கும்படி சொல்லுகிறான். அரசன் வாசவனையும் அநந்தனையும்நோக்கிச் சட்டமுறையை எடுத்துக்காட்டி அநந்தனுயிரைத் தப்புவித்த நியாயதுரந்தரனுக்குத் தக்க பரிசில்கொடுக்கும்படி சொல்லுகிறான். நியாயதுரந்தரனாகிய விஜயை வாசவன் கைக்கணையாழியைத் தரும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறாள்.]

IV. 2. நா. பா.: விஜயை, அங்கனை, கருணாகரன்.

நி.: எழுத்தாளன் வேடத்தோடுநின்ற அங்கனை, கருணாகரனுடைய கைவிரலி லணிந்திருந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறாள்.

V. 1. நா. பா. பதுமை, புட்கலன், அகிஞ்சனன், அங்கனை, கருணாகரன், வாசவன், அநந்தன், விஜயை.

நி.: பதுமையும் புட்கலனும் சந்திரனுடைய தண்ணிய கிரணங்கள் பரம்பிய உய்யானத்தினுள்ளிருந்து வார்த்தையாடிக்கொண்டிருக்

கும்போது அகிஞ்சனன்வந்து விஜயையும் அங்கனையும் வருவதாகக் கூறுகிறான். அன்னாரிருவரும் வந்து சிறிதுநேரத்துக்குள் அநந்தனும் வாசவனும் கருணாகரனும் வருகின்றனர். அங்கனை, கருணாகரனை நோக்கி மணநாளிலே தான் கொடுத்த மோதிரமெங்கேயென்று விசாரித்தாள்; அவன் எழுத்தாளனுக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிறான்; அவள் புலவியால் வாடியதுபோலபிநயித்து இதோ இந்த மோதிரத்தை வைத்திரும் என்று கொடுக்கிறாள். விஜயையும் தான் கொடுத்த கணையாழியை விசாரித்துப் பின்பு கொடுக்க நியாயதுரந்தரனாக வந்தது விஜயையேயென்பதை அவளது நாயகனும் நண்பரும் அறிகின்றனர். இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.

இந்நாடகத்தினுள், "அநந்த சாபல சரிதம்," "விஜயை வாசவ சரிதம்," "பதுமை புட்கல சரிதம்," என ஒன்றினோடொன்று தொடர்புடைய மூன்று சரிதங்கள் ஒருங்கு பிணைந்திருக்கின்ற தன்மையை நோக்குக.

அநந்த சாபல சரிதம் I 1, 3, II, 2, 8, III, 1, 2, 3, 4, IV 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது; விஜயை வாசவ சரிதம் I 2, II 1, 2, 7, 9, III 2, 4, IV 1, 2, V 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது; பதுமை புட்கலசரிதம் II 3, 4, 5, 6, 8, III 1, 4, 5, IV 1, V 1, ஆகிய உட்பிரிவுகளினுட் கூறப்பட்டது. பெருமிதச் சுவையின்பாலதாகிய யூலியசீசர்சரிதையின் கதைச்சுருக்கத்தைத் தந்த பின்பு பெருமிதச் சுவையினியல்பை விளக்குவாம்.

[தொடரும்]

விபுலாநந்தர்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(சஉஎ-ம் பக்கத் தொடர்ச்சி.)

காந்திமதி கலியாணப்படலம்.

மருக்கண்டேழிசைவரியளியுழுமுழுமலரோன்
முருக்குஞ்செந்தழற்கண்ணுதற்கடவுளைமுன்னி
யிருக்குந்தேடருமெம்பிரானினிருகருணைத்
திருக்கண்கண்டவர்தீவினைகாண்பதுமுண்டோ. (க)

ஆகையாற்றிரையாழியோரைந்தையுங்கடத்தி
மாகமீதுயர்மணிமதிற்றிரிகர்த்தனளித்த
தோகைதன்னையத்தாதைகைந்நீரொடுந்தூய
வாகைவேலினன்பெறவருள்புரியெனவழங்க. (உ)

வேண்டுகின்றதேயிதுவெனவிண்ணவர்விளம்பப்
பாண்டரங்கனுநன்றெனமகிழ்ந்துமுன்பணிந்த
வாண்டகைத்திறன்மன்னையுமன்னவடனையு
நீண்டசெம்மணிமானமேவுதிரெனநிகழ்த்த. (ங)

விடையுமன்னமுங்கலுழனும்வேழமும்விரைவி
னடவுகின்றனர்நாகநாட்டவர்புடைநண்ண
மடலவிழ்ந்தபூங்குழலியுமத்திரகோவு
மிடையினின்றவரிடையினில்மகிழ்வொடேகினரால். (ச)

ஒருபெரும்பொருளாகியமூவர்களுடனே
தருநிரந்தநாட்டவரெலாம்போதுறுந்தன்மை
பொருவருந்திறற்றிரிகர்த்தமன்னெடும்புகல
வருமையுற்றிடுமேழிசையாழ்முனியடைந்தான். (ரு)

அடைந்தமாமுனிதன்னெதிர்மன்னவனடைந்து
நடந்தபாதகமலர்மிசைநறுமலர்சூட்டிப்
படர்ந்தவன்பொடுபணிந்துநீயென்னுழைப்படரக்
கிடந்தமாதவமுண்டுகொல்பண்டெனக்கிளக்க. (சா)

அவ்வியத்தொடுநின்றனையுடலமுமல்கி
நொவ்வுயிர்த்தனையென்னைகொல்புகலெனநுவலச்
செவ்வியற்றதன்மகண்மணந்திறம்பியசெயலைத்
துவ்வயிற்கதிரவேலினன்சொலமுனிசொல்லும், (எ)

மன்னகேட்டியான்வானவரவையினின்மன்ன
முன்னவன்புவியற்புதமென்னெனமொழிய
நின்னதாகியபுதல்விதன்மணவினைநினைவை
யுன்னியோதிடப்பிரமனைப்பரன்வினவுதலும். (அ)

விதிவலத்தினைத்தெரிதுமோவென்றனன்விரிஞ்சன்
மதியினும்பெரியதுகொலோவிதியெனமாயோன்
எதிர்மறுத்தனனவ்வயின்யானந்தவேழை
கதிர்முலைப்பயன்பெறுபவனெவனெனக்கழற. (௯)

மருகரென்பவரிருவருமலவிதிவலத்தா
லொருகரம்பதமொருங்குநீத்தவன்றுயருழந்து
பெரியசெக்கடிகிடக்குமப்பங்குவிப்பேதைக்
குரியநன்மணம்பெறுபவனெனவுலகளந்தோன். (௧0)

பறவைவேந்தனுற்கிரவுஞ்சப்பருப்பதத்துய்ப்பக்
குறையுடற்பொறைகொண்டவனவன்முகநோக்கி
யிறவுகண்டிலைபசிப்பிணிதீர்ப்பதாரென்ன
வறவுநொந்திடேலமுதருந்துவனெனவகல. (௧௧)

மருங்குகண்டனனுன்றிருமனைவியுன்மகளை
யருங்கலன்களோடொருமணிப்பெட்டகத்தாக்கித்
தெரிந்திடாததன்மருகனுக்கனுப்பலுஞ்சிறையால்
விரிந்தவான்செல்வோனெடுத்தனன்வெற்பகத்துய்ப்ப. (௧௨)

பங்கமுற்றவன்பெட்டகந்திறத்தலும்பதும
மங்கைபோன்றவம்மங்கையுமவன்மணிப்புயத்திற்
செங்கையான்மலர்மாலிகைசூட்டியேசிறந்தா
ளங்கணெய்தினரரன்முதலமரர்யாவர்களும். (௧௩)

குறைந்தசெங்கையும்பாதமும்வரங்களுங்கொடுத்துச்
சிறந்தமானமேலேற்றினரவர்களுந்திரிந்தார்
அறிந்துநீயெதிர்போய்க்கொணர்ந்தணிமணவினையை
நிறைந்தவன்பொடுசெய்கென்றுபின்னருநிகழ்த்தும். (௧௪)

மன்றுளாடியுமறைமுதற்கிழவனுமாலு
மின்றுநின்னுழையெய்திடப்பெற்றனைபென்னில்
நின்றுணைத்தவர்யாரெனநிகழ்த்தியவ்வேந்தன்
பொன்றழைத்ததார்ப்புரூரவாவென்றனன்போனான். (௧௫)

அனையவாய்மொழிகேட்டலுமகிழ்ச்சியோடகன்ற
மனநடுங்கினன்மெய்யெலாநோக்கிவாய்புலர்ந்தான்

வினயமென்னினிவிண்ணவர்க்காகவேண்டுதமென்
றினையலின்றியேயெதிர்கொடுசெல்லவாங்கெழுந்தான். (௧௬)

எழுந்தகாலையிற்கண்டனனண்டர்கள்யாருஞ்
செழுந்துழாய்முகின்முதலியமூவராந்தேவுங்
கொழுந்துவாமதிநுதலியுமத்திரகோவும்
விழுந்தவன்பொடுவிண்ணிடைதோற்றியவியப்பை. (௧௭)

கண்டுகண்டெழுந்தாடினன்பாடினன்களித்தான்
மண்டலந்தனில்வீழ்ந்தனன்றாழ்ந்தனன்வணங்கித்
தொண்டனேன்புரிதவப்பயனீதெனத்தொழுதான்
கண்டலங்களாலாநந்தவாரிதிகால. (௧௮)

புவனமீதுறவணங்கியமன்னனைப்புலவோர்
இவனைநேர்பவனெவனெனத்தத்தமிலிசைத்தே
தவனனுமெனவிளங்கியபுரூரவாதனையு
மவனன்மாதையுமானமோடவனியிலாக்கி. (௧௯)

அந்தரத்திடைநின்றனர்மன்னனீயளித்த
சந்திரத்திருநுதலியைமறைமுறைச்சடங்கா
லிந்தவேந்தனுக்கீந்தருள்புரிதியென்றென்னச்
சிந்தைகூர்ந்துரைசெய்தனர்காணருஞ்செயலோர். (௨௦)

வேறு.

விண்மானநின்றுமிழிகின்றமன்னன்விரைமேவுபாதமலரிற்
கண்மாரிசிந்தவிழுவானெழுந்துதொழுவானினைந்தகலுழ்வான்
எண்ணாதிழைத்தபிழைநீபொறுத்தியெனநொந்துசிந்தையினைவான்
மண்ணாள்சிறப்பின்வினையென்னையென்னைமதிகேடுசெய்ததெனவே. (௨௧)

ஓராழிமன்னவுலகேழினுக்குமொருகோனடத்துமுரவோய்
பாராளுமன்னர்முடிமேலிருந்தபதபங்கயங்களுடையாய்
ஆராய்வதின்றியுனையின்னல்கண்டதமியேனிருப்பதறனோ
தீராவுடம்பினுயிர்தீர்வனென்றுசெயலொன்றுமின்றியயர்வான். (௨௨)

நையாதவுள்ளநலிவெய்தவெய்தினலிவித்தபாவிகுறையை
யையாபொறுத்தியரசேபொறுத்தியெனநொந்துதாழுமவனைக்
கையாலெடுத்துளருள்கூரமார்பினிடைபுல்லிநின்றுகமலச்
செய்யாண்மணந்தபுயனஞ்சலென்றுதிருவாய்மலர்ந்தபொழுதே. (௨௩)

தன்மாதெழுந்துதனையேவணங்கமகிழ்வெய்திநின்றுதழுவிப்
பின்மாதர்வெள்ளமொடுசேனைவெள்ளமளவின்றிவந்துபெருகத்
தொன்மாதருக்களுறைவோர்கண்மேனிபுளகங்களோடுதுடரப்
பொன்மானமானமணமண்டபத்தினிடைவந்திருந்தபொழுதே. (௨௪)

வேறு.

அற்றைமுற்பகலம்பொன்னகரென
வுற்றமைத்தவுறைவிடமேவிய
கொற்றமன்னவர்யாருங்குழுமினர்
சுற்றுமாக்கடறெக்கனவென்னவே. (உ௫)

குந்தளங்குருதம்மகதங்குருச்
சிந்துமாகதங்கேகயஞ்சேகுண
மூந்துதெண்டிரைச்சீனமொடேயசு
மந்தம்வாரணஞ்சோழமராடமே. (உ௬)

குச்சரம்பப்பரங்குசராட்டமோ
டச்சைகாம்பிலியைகையவந்திநீள்
மச்சமத்திரம்வத்தவங்கோசலம்
விச்சைவஞ்சிமிதிலைவிராடமே. (உ௭)

கடகம்வங்கம்வங்காளந்தெலுங்கமேற்
குடகமாளவஞ்சோனகங்கொங்கணம்
வடகலிங்கங்குலிங்கமகதம்வாய்ந்
திடமியன்றகாம்போசமியாதவம். (உ௮)

சூரசேனந்துருக்கங்கவுடஞ்சை
வீரஞ்சிங்களம்வங்கமிலேச்சங்காந்
தாரம்பல்லவமாளவமங்கமொண்
கீரஞ்சேர்தமிழ்ப்பாண்டிதென்கேரளம். (உ௯)

ஓலவால்வளையூர்புனன்மல்குபாஞ்
சாலமோடுகல்யாணிமுதற்றனி
ஞாலமீதிலெண்ணேழெனுநாட்டின்வாழ்
மேலதாந்திறல்வேந்தர்தம்வேந்தரே. (௩௦)

வேழமேவினர்வெம்பரிமேவினர்
ஈழமேவுமிரதமுமேவினர்
ஆழமேவுமகன்புனனாட்டவர்
சூழமேவினர்தொன்னெறிமேவினர். (௩௧)

முன்பிலக்கமுதலெழுதீவினோ
ரன்பிலக்கமனையவர்தம்மொடு
பின்பிலக்கமில்லாதபெருந்திறல்
வன்பிலக்கவைநாவருமன்னினர். (௩௨)

சித்தர்சாரணர்தேனிசைக்கின்னரர்
முத்தரானமுனிவரியக்கர்கள்
வித்தகக்கிம்புருடர்கள்விஞ்சையர்
பத்திரக்கருடேசரும்பாங்குற்ருர். (௫௩)

பேதையேமுதற்பேரிளம்பெண்வரை
யோதுமாதருமொண்டிறன்மைந்தரும்
வீதிதோறுமிடைந்தனர்வேதிய
ராதியானவருணத்தவருமே. (௫௪)

விண்ணிறைந்தனர்விண்ணகவேந்தர்கள்
மண்ணிறைந்தனர்மண்ணகமன்னவ
ரெண்ணிறைந்தவுவகையினீர்ங்கையி
லெண்ணிறைந்தனவென்னநிறைந்தனர். (௫௫)

சுற்றுசீரையர்சூழ்சடைவேணியர்
பெற்றகுண்டிகைதண்டுபிடித்துளார்
முற்றுணர்ந்தமுனிவர்குழாத்தொடு
முற்றகோதமனெய்யெனவெய்தினன். (௫௬)

வந்தமாமுனிபாதம்வணங்கிய
வந்தமன்னனையம்முனிநோக்கியே
யிந்துவாணுதற்கேன்றனவாகிய
முந்துமோரைமுடுகியதென்றலும். (௫௭)

என்னும்வேலையில்வேந்தனுமேந்துபூப்
பின்னும்வார்குழற்பேதையர்தம்மொடு
முன்னியோதிடவொண்ணுதலாரெழிற்
கன்னிமேனியைப்பின்னுங்கவின்செய்தார். (௫௮)

அவ்வணங்கையமாரணங்கினே
டெவ்வணங்குமணங்கினேடேமுறக்
கைவணங்கவின்செய்துகணெச்சில்தீர்த்
திவ்வணந்திறல்வேந்தற்கியற்றினர். (௫௯)

பாவுதெய்வப்பகீரதியாதியாம்
விரவுநீரில்விரைவொடுவேதமந்
திரமும்பூரித்தசெம்பொற்றசும்புனீர்
வரைசெய்மார்பற்குமஞ்சனமாட்டினர். (௬0)

பாரைநீங்கியும்பாலரைநீங்கியுந்
தாரநீங்கியுஞ்சார்பிடநீங்கியும்
வாரநீங்கியமன்னுயிர்கட்கெலா
மீரநீங்கலாற்கிரமுனிக்கியே. (சக)

நாத்தழும்புறநாற்கவிநாவல
ரேத்தெடுத்தவிசைப்பொருளென்னவும்
வாய்த்தநல்லறம்வந்துகவசமாய்க்
காத்தபோன்றுங்கலவைமெய்சேர்த்தியே. (சஉ)

பார்த்தகண்களின்பாயொளியாய்நிறம்
பேர்த்திலங்குபெருவிலைவெண்டுகில்
மீத்தசந்திரன்பேரன்மெலிவறக்
காத்தபோன்றுங்கலவைமெய்சேர்த்தியே. (சங)

வேறு.

குற்றநீங்கருச்சுனக்கோடிமீதினிற்
பொற்றவான்கச்சணிபொருந்தவீக்கினர்
மற்றிமஞ்சுற்றியமேருமாதிரத்
துற்றசாம்பூநதமொழுகிச்சூழ்ந்தபோல். (சச)

விற்றவழ்வயிரமும்விரிந்தசெம்மணி
யற்றமில்லனவுமோடாணியோடறத்
தெற்றுறூற்பட்டிகைதெவ்வராருயிர்
பற்றுறுகண்ணிபோன்மருங்கிற்பற்றவே. (சரு)

வாளமைத்திறனுயர்மன்னர்மாமுடித்
தாளமைத்திடமிளிர்தொய்படாக்களங்
காளம்வைத்தவன்றருங்கமலதாட்கடை
யாளம்வைத்தெனக்கழலாலவீக்கியே. (சசு)

பத்திசெய்நவமணிபதித்தவாரமு
மூத்தணியாரமும்மொய்ம்பிற்சேர்த்தினர்
கொத்துறுநாளொடுகோளுமோர்பகற்
றொத்தியகனகமால்வரையிற்றோன்றவே. (சஎ)

பைந்தளிர்மரகதம்பதித்ததோள்வலை
யந்தடப்புயங்களுக்கமையச்சேர்த்தினர்
மைந்தனேவந்தனைபோலுமாலெனத்
தந்தையார்தோளுறத்தழீக்கொண்டென்னவே. (சஅ)

பலமணியாரமார்பரிதிமார்பினிற்
புலனிறமுப்புரிநூல்புணர்த்தனர்
நிலமகள்பங்கிதுநின்றபாதியு
மலர்மகள்பங்கெனவரம்புவைத்தபோல். (௪௯)

வாகைவேல்தாங்குசெம்மலர்க்கைமீதினிற்
சேகறுமாழியுந்தொடியுஞ்சேர்த்தின
ரோகையாயாவர்க்குமுதவுவோன்கரம்
மேகமென்குறியினன்மின்னுஞ்சூழ்ந்தென. (௫0)

மின்னெறிவயிரவாள்வேந்தன்காதினிற்
பொன்னெறிமணிக்குழைபொலியப்பூட்டினர்
செந்நெறியாவையுந்திரண்டுசேக்கைக்கோர்
நன்னெறியிதுவெனநணுகுற்றென்னவே. (௫௧)

குதைவரிச்சிலைநுதற்கொவ்வைவாய்ச்சியர்
மதர்விழிவண்டெலாம்வந்துமொய்த்திடப்
புதுமணிக்குவடெனும்புயத்திற்பூந்துகட்
டதையிதழ்ச்செழுமலர்த்தாமஞ்சூட்டியே. (௫௨)

வென்னுடைவாளுறவேளைவென்றகட்
கொன்னுடைவாளினரவாவிற்கூர்மைய
தென்னுடைவாளெனவிரவியேமுறத்
தன்னுடைவாளொருமருங்கிற்சாத்தியே. (௫௩)

கதந்தருங்குணமெலாங்கடிந்துஞானமா
னதந்தருங்குரவர்தாள்பணிந்துநால்வகை
விதந்தரும்பிறவிகள்வீடவீடெனும்
பதந்தரும்பண்ணவன்பதம்பராவியே. (௫௪)

பொறிப்பகைதவிர்த்துடல்பொய்யென்றேவினை
யறுத்தநல்லந்தணர்க்காவும்பூமியு
மறிக்கருங்கண்ணுடைமகளிர்வெள்ளமும்
வெறுக்கையும்புனலொடுவெறுக்கநல்கியே. (௫௫)

நகநுதிக்கூற்றினனண்ணலாருயிர்த்
தொகைவிறற்கூற்றினுக்கருத்திச்சூறைபோன்
றுகமுடித்திடவெழுமுதையூதுகைப்
புகர்முகத்தழல்விழிப்பொருப்பொன்றேறினன். (௫௬)

சாமரையுலவிடத்தாளவெண்குடை
மீமிசைநிலவிடவியங்கள்விம்மிட
மாமுரசியம்பிடவளைகலித்திடக்
கோமறுகிடையுலாக்குறுகன்மேயினன். (ருஎ)

வீதிவாய்மன்னவன்வேழமீமிசை
போதுலாக்கருதியேயிருந்தபூங்குழல்
மாதரார்பொம்மெனவந்துமொய்த்தனர்
சீதநீர்வேட்டமானன்னசிந்தையார். (ருஅ)

நஞ்செனும்விழியினிலலத்தக.........
பஞ்சணிபதத்தினிற்சாந்தம்பான்மதிப்
பிஞ்செனுநுதலிலஞ்சனமும்பெய்வளை
வஞ்சியர்வல்லையின்வனையுற்றெய்தினர். (ருகூ)

சேலையுங்காஞ்சியுஞ்செறிந்தகூந்தலும்
ஓலையுங்குழையுமின்னொளிசெய்யாரமும்
பாலையும்வென்றசொற்பவளவாய்ச்சியர்
மாலையுந்தாங்கியேமறுகுற்றார்சிலர். (சுo)

ஓர்விழிக்கஞ்சனமெழுதியோர்விழிக்
கேர்பெறத்திருத்துமுனீண்டினர்சிலர்
வார்முலைக்கெழுதியவல்லியோர்முலைச்
சீர்பெறத்திருத்துமுன்செல்கின்றார்பலர். (சுக)

முருகவிழ்தாமரைமுதல்வனெண்கணாற்
பரிவுறநோக்கியேபழுதறச்செயத்
திருவுருப்பெற்றவிச்செம்மல்பேரெழி
லிருவிழிக்கடங்குமோவென்கின்றார்பலர். (சுஉ)

முன்னிவனந்தணன்முளரிக்கண்ணனை
யின்னெழில்மிக்கதொ......னறவளுகவென
மன்னினனென்பதுமறைவலோர்கள்தாம்
பன்னினரென்னவேபகர்கின்றார்பலர். (சுங)

தெள்ளமுதொடுவருந்தேவர்நாட்டினி
லுள்ளவர்காமுறுமுருப்பசிப்பெயர்க்
கள்ளவிழ்கூந்தலுங்காமுற்றாளெனில்
விள்ளுவதேயிவனழகைமேலென்பார். (சுச)

வண்ணமார்சந்தனவல்லிசூழ்முலைக்
கண்ணெலாம்பொன்னெனக்காமுற்றார்சிலர்

எண்ணமுங்கலையும்வேறேகவேகியே
சுண்ணமும்வளைகளுந்தூவுவார்சிலர். (கூ௫)

வனைதருதாமநீண்மருமநோக்கியே
யினைவருநெஞ்சொடுமேமுற்றார்சிலர்
சினமதன்சிலையினைச்செயித்தவேந்தன்பேர்
புனைதருவில்லினுற்பொருகின்றார்சிலர்.? (கூகூ)

மருப்பொசித்திடவளிமலர்ந்தகூந்தன்மா
மருப்பொசித்திடுமுலைமாதர்வாயினு
லுருப்பசிக்குதவுதேனுள்ளத்தூறுமா
லுருப்பசிக்குதவெனவுரைக்கின்றார்சிலர். (கூஎ)

காய்சினக்காமனைக்கவலைதீர்த்தவா
காய்சினக்காமனைக்கவலைதீரென்பார்
கேசியையெதிர்ந்தவாட்கிழவவென்மலர்க்
கேசியையெதிரெனக்கிளக்கின்றார்பலர். (கூஅ)

இரவியைமதியொடுந்தொடர்ந்தவேந்தலே
யிரவியைமதியொடுமென்செய்வோமென்பார்
அருகுறுகொடியணங்காக்குமையனே
யருகுறுகொடியணங்காக்கினுயென்பார். (கூக)

தென்மலைத்தென்றலைத்தீக்கொழுந்தென்பார்
நன்மணித்திரையொலிநமன்முழக்கென்பார்
இன்னிசைவேயினையீருநஞ்சென்பார்
அன்னைமார்வசைக்கினியாற்றலேமென்பார். (எ0)

செக்கர்மேல்வரிலுளஞ்செகுக்குமேயென்பார்
தொக்கபேரிருள்வரிற்றுணையிங்கேதென்பார்
வைக்குமோவுயிரெனவன்றில்வாயென்பார்
பக்கமுண்டோகுயிற்பாவிக்கின்றென்பார். (எக)

தாமணிதரளமுந்தண்ணன்சாந்தமும்
பூமணியமளியும்பொரியுமேயென்பார்
சேமணிதென்றிசைத்தேவனூர்தியின்
மாமணியேயெனவருமந்தோவென்பார் (எஉ)

இவ்வகையேழையரெவருமேமுறக்
கைவளர்கன்னலான்களிப்புக்கைம்மிக
வெவ்வயில்வேந்தர்கோன்வீதிபோந்துபோர்
தவ்வயின்மண்டபமணுகினனரோ, (எஙு)

பள்ளநீருலகெலாம்படைத்தகம்மிய
னுள்ளமுமடங்கிடவுஞற்றுமண்டப
மள்ளிலைப்பூணிஞனுசியோடும்போய்த்
தள்ளருமணவினைத்தவிசினேறினன். (௭௪)

வேறு.

ஏந்துமதிவெண்குடைநிழற்றவேண்ணேழ்தேயத்திறையவர்தோள்
வாய்ந்தமதிதன்றிருமருமான்மணப்பூந்தவிசினிடைவைகச்
சேர்ந்தமதிவாணுதற்கருங்கட்சிறுநூன்மருங்குற்பருவமுலைக்
காந்திமதியைத்தருதிரெனக்கதிர்வேல்விழிக்கன்னியரெழுந்தார். (௭௫)

வேறு.

எழுந்தமங்கையரேந்தெழில்வாய்ந்தபூங்
கொழுந்தையீன்றகுலக்கொடிக்கோதலுந்
தழைந்தபேரெழிற்றாமரைப்பூவையும்
விழைந்தபின்னிளைமெல்லக்கொணர்கின்றார். (௭௬)

வேறு.

காமனுயிராமிரதியுங்கமலமாதும்
பூமகளும்வானவர்புலக்கொடிகடாமு
நாமழகின்மேன்மையெனிஞணமிலராமென்
றேமுறவிசும்பிலமுதின்றெனவெழுந்தாள். (௭௭)

நானமுநறுங்கலவையுங்கமழுநாவி
யேனையவும்யோசனையெழுந்துமணம்வீச
மேனிதிமிரும்பொடியுமென்குழலுமாலைத்
தேனினமுமண்ணுலகுபொன்னுலகுசெய்ய. (௭௮)

எண்ணரியசெங்கதிரிளங்கதிர்களென்னப்
பண்ணியகலன்களின்மணிச்சுடர்பரப்ப
நண்ணரியகற்புடையநங்கையெழில்காண்போர்
கண்ணிணைகளைக்கவரமெய்யுயிர்கவற்ற. (௭௯)

அனிச்சமொடனச்சிறைபரப்பியதினம்பொற்
பனிப்பதமலர்த்துணைபதைப்புறமிதித்தே
தனித்திருவினுக்கொருதுணைத்தலைவிவந்தா
ளெனப்பரிபுரத்தரியியம்பிடநடந்தாள். (௮௰)

பிணைத்தமுலைநெய்த்தகுழற்பஞ்சியடியஞ்சொற்
றுணர்த்தகொடியென்னவளர்தோகையர்கள்சூழ்போந்
திணைத்தகமலக்கையினணங்கினையெடுத்தே
மணத்தவிசின்மீமிசைவதிந்திடவிதித்தார். (௮௧)

வேறு.

சிங்கலிலருந்தவந்திருத்தினோர்வயி
னங்கதன்பயன்றிரண்டடைந்ததாமென
மங்கையைமன்னவன்மருங்கின்வைத்தனர்
புங்கவர்மறைநெறிச்சடங்குபோக்கியே. (அ௨)

மறையவராசியுமங்கலப்பெரும்
பறைமுதலியங்களும்பலாண்டும்பண்களு
நறைமலரளிமுரானரலையுங்குளி
ருறைபடுமுகிலினின்றொலித்துவிம்மவே. (அ௩)

தாதுறுபங்கயந்தளிருற்றதெலன
மாதுகைபுநூரவாமலர்க்கைசேர்த்தியே
நீதியிற்பொழிபெருநீரினல்கினன்
ஏதமில்திரிகத்தம்புரக்குமேந்தலே. (அ௪)

அந்தணர்க்கரும்பொருளாதியாகவே
வந்தனைநீரொடும்வழாதுநல்கியே
சிந்துரத்திருநுதற்றிருவன்னாளெழிற்
சுந்தரப்பைந்தளிர்த்தொடிக்கைபற்றினன். (அ

எரியினைவணங்கிமற்றிறைவர்தாமொடு
தரியபொன்னம்மிமீதம்பொற்பாதம்வைத்
துரியவன்கொழுநனென்றுன்னுவோர்க்கெலாந்
தரணிபோல்விளங்கருந்ததியைக்காட்டினர். (அ௬)

பின்னருமுடிப்பனமுடித்துப்போழல்
தன்னைமும்முறைவலஞ்சூழ்ந்துசங்கொடு
மின்னியங்காகளம்பேரியேங்கவே
பொன்னகர்பொருமணிக்கோயில்புக்கனன். (அ௭)

மணத்திறங்கண்டவவ்வானவேந்தர்க
ளிணர்த்தருநிழன்முதலிடங்கள்துன்னினர்
பணத்தபாந்தட்பரம்பரிக்குமன்னருந்
தணத்ததம்மிடந்தொறுஞ்சார்புற்றாரோ. (அ௮)

வட்டமண்டலந்தனிபுரக்குமன்னரு
மெட்டருமமரருமினிதுபோயபின்
னெட்டிலைக்கதிர்நுதிகிணங்கொள்வேலினு
னுட்டருமின்பமீதூரவைகினன். (அக)

காந்திமதி கலியாணப்படலம் முற்றிற்று.

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்.